வால்மீகி ராமாயணச் சுருக்கம்

பண்டித: நடேச சாஸ்திரி முகவுரை

(சுருக்கம்)

இப்பூதலத்தின்கண் பண்டித பாமர ரஞ்சகமாய், கற்பனைக் களஞ்சியமாய், நவரசம் நிறைந்ததாய், சொல்லினிமை பொருளினிமை யுள்ளதாய், கேட்போர்க்குத் தெவிட்டாத தேன்போன்றதாய், படிப்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதாய், ஷண்மதஸ்தர்களும் ஏத்திப் போற்றத் தக்கதாய், பிறமதஸ்தர்களும் கொண்டாடுதற் குரியதாய், உலக வியல்புகளை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுவதாய், கம்பீரமான நடையுடையதாய், நம்முன்ஞேரின் நாகரிகச் சிறப்புக்குப் பெரிய திருஷ்டாந்தமாய் ஸம்ஸ்கிருதபாஷையில் விளங்கும் கிரந்தம் யாதென்ருல், அது வால்மீகி மகாரிஷி அருளிச்செய்த ஸ்ரீமத் ராமாயணமேயாகும். பரமாத்ம ஸ்வரூபியாகிய ஸ்ரீ ராமபிரானது சரித்திரம் இராமாயணம். அது இதிகாசங்களிரண்டில் ஒன்று. மற்ருேர் இதிகாசம் ஸ்ரீ மகாபாரதம். மகாபாரதம் உண்டாவதற்கு வெகு காலங்களுக்கு முன் இராமாயணம் தோன்றி எழுத்தில் ஏற்படுத்தப்படாமல் வேதம்போல் ஜனங்களுக்குள் அத்தியயன ரூபமாய் விளங்கிவந்ததென்றும், இராமாயணத்தில் கூறப்பட்டிருக்கும் விஷயங்கள் மகாபாரதத்திலிருக்கும் விஷயங்களைக் காட்டிலும் பழமையான விஷயங்களென்றும் தெரிகிறது.

இராமாயணம் வேதத்தைப்போலவே சிறப்புற்ற வைதிக நூல். வேதப்பொருள் அநேகம் அதில் அடங்கியிருக்கின்றன. இது காரணங்கொண்டே அதைப் பாராயணத்துக்கு யோக்கியமானதென்று எல்லோரும் கொண்டாடுகிருர்கள்.

இராமாயணத்தை லௌகிகமாய் ஆராயுங்கால் நம் நாட்டார் தினந்தோறும் அதைப்பற்றிப் பேசாத நேரமுமுண்டோ? அக்கதை தெரியாத மனிதரும் உளரோ? அதை வாசியாத குடும்பந்தானுண்டோ? "இராமர் என்றால் பாவம்போம், சீதை என்றால் துக்கம்போம்" என்று ஒவ்வொரு தாய்மாரும் தாலாட்டுகிறதை நாம் பிரதிதினமும் கேட்கவில்லையா? "இராமாயண கதை இன்பம்; அதைக் கேட்டிடில் அகன்றிடும் துன்பம்" என்று வழங்குவதை அறியாதவரெவர்? இவைகளால் ஜனங்களுக்கு அதனிடத்தில் எவ்வளவு மதிப்பு ஏற்பட்டிருக்கிறதென்பதை ஊகித்துக்கொள்ளலாம்.

இராமாயணத்தின் முக்கிய கருத்து என்னவெனில், உத்தம புருஷர்கள் உத்தம ஸ்திரீகள் இவர்களுடைய சரித்திரத்தை எடுத்தெழுதி உலகத்தாருக்கு நற்போதனை செய்ய வேண்டுமென்பதே. இதனை ஸ்ரீ வால்மீகி மகரிஷி ஸ்ரீ நாரதமுனிவரிடம் கேட்ட கேள்வியாலேயே அறிந்துகொள்ளலாம். அதன் நடைக்காகவும் கம்பீர அபிப்பிராயத்துக்காகவுமே அதைப் பிறதேசத்தவரும் மிகவும் மேலாக மதித்துக் கொண்டாடுகிறார்கள். தரும சாஸ்திரங்களிற் சொல்லப்பட்ட நீதிகளெல்லாம் அதன் கதையில் விளங்குகின்றன. தெய்வபக்தி, மாதிருபக்தி, பிதிருபக்தி, ஆசாரிய பக்தி, சத்தியம், பொறுமை, ஜீவகாருண்ணியம், வர்ணாசிரம தருமம், மாதர் ஆடவர் தருமம், பதிவிரதா தருமம், சகோதர வாஞ்சை, நட்பு, பெரியோரிடத்தில் மரியாதை, விருந்தோம்பல், செய்ந் நன்றி யறிதல், செங்கோல், இராஜ தந்திரங்கள், அன்பு, தயை, நடுநிலைமை, நன்மை தீமையின் பயன், சரணமடைந்தோரைக் காப்பாற்றும் உத்தம குணம் முதலிய மேலான நீதிகள் அதில் வெகு அழகாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

இவ்வளவு மாண்புள்ள இச்சிரேஷ்ட காவியம் சில வருஷங்களுக்கு முன்வரை வெகு பக்தி சிரத்தையுடன் பலராலும் படனம் செய்யப்பட்டு வந்தது. ஒருமுறை ஆதியோடந்தமாய் அர்த்தத்துடன் வாசித்து முடிக்க அவரவர் சக்திக்குத் தக்கபடி ஆறு மாதம் முதல் ஒரு வருஷம் வரை செல்லும். நான்கு மாதங்களிலும் சிலர் முடித்திருக்கிறார்கள். எந்த இடத்தில் எப்படிப்பட்டவர் படித்தாலும் எட்டு மிரண்டும் அறியாத இளம்பிள்ளைகள் ஸ்திரீகள் முதல் மகாபண்டித சிரோமணிகள் ஈருகச் சகல ஜனங்களும் இக்கதையை வெகு நேரம் விழித்திருந்து மிக்க பக்தி சிரத்தையுடன் கேட்பது வழக்கம். அதனால் தான் நம் தேசத்தில் பலர் கையெழுத்தும் வைக்கத்தெரியாத நிரக்ஷரகுக்ஷிகளாயிருப்பினும் விவேக சூனியராயிரார்கள். நம் தாய்மாரும் பாட்டிமாரும் எத்தனை சமயங்களில் இராமாயண திருஷ்டாந்தங்கள் கூறி யுக்தி புத்தியாய் நாம் அதிசயிக்கும் வண்ணம் ஆலோசனை சொல்லக் கேட்டிருக்கிறோம். நம் நாட்டு அறிவு விருத்திக்கும் சன்மார்க்கத்துக்கும் இராமாயண பாரத இதிகாசங்களே முக்கிய காரணம். அறிவின் பயனெல்லாம் ஜனங்களின் மன இருளைப் போக்கித்தருமமும் சத்தியமுமான வழியிலே நடத்துவதில் அடங்கும். இந்த நுட்பம் அறிந்தே திரிகாலஞானிகளாகிய நம் பெரியோர்கள் இவ்விதிகாசத்துக்கு இவ்வளவு கௌரவம் கொடுத்துவந்தார்கள்.

இவ்வினிய கிரந்தத்தை எல்லோரும் அறியவேண்டியது அவசியம். ஸம்ஸ்கிருத அப்பியாசமில்லாதவர்கள் பிறர் உதவியைக்கொண்டே அறியவேண்டியிருக்கிறது. ஆகையால் இதனை மொழிபெயர்த்தால் பலருக்கும் உபயோகமாயிருக்குமென்று கருதிப்பரோபகார சிந்தையுடன் மொழிபெயர்க்கத் தொடங்கினோம். நம் தேச அபிவிருத்தியையும் சன்மார்க்க அபிவிருத்தியையும் கருதிய ஸ்திரீ

புருஷாகள் அனைவரும் இளையோராயினும் முதியோரா யினும் இப்புத்தகத்தை ஒரு பூஷணமாக எண்ணி படித்து இம்மகா கிரந்தத்தின் அருமை பெருமையைப் பாராட்டி ஆனந்திப்பார்களே யானால் நாமும் நம் பெருமுயற்சி பய னடைந்ததாகக் கருதுவோம். அவர்களும் சகல போகங் களும் அனுபவித்து இராமகிருபையால் சுகமுறுவர்கள் என்பது திண்ணம். "ஸர்வேஜநாஸ் ஸுகிநோ பவந்து" "ததாஸ்து."

திருவல்லிக்கேணி
1900ஞு டிசம்பர்மீ 1வ. } ச. ம. நடேச சாஸ்திரி.

பிரசுரகர்த்தர் குறிப்பு

சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன் வால்மீகி ராமாயணத்தின் பாலகாண்டம் பண்டித S. M. நடேச சாஸ்திரியாரால் வசன நடையில் மொழி பெயர்க்கப்பட்டு, மஹாமஹோபாத்யாய உ.வே. சாமிநாதய்யரால் பார்வையிடப்பட்டு, எனது தந்தையார் வே. கல்யாணராம ஐயரால் பிரசுரிக்கப்பட்டது. பின்னர் யுத்தகாண்டம் முடிய மற்ற ஐந்து காண்டங்களும் சாஸ்திரியாராலும் தி. த. கனக சுந்தரம் பிள்ளையாலும் மொழி பெயர்க்கப் பட்டு, ஸ்ரீமான் ஐயராலும், வை. மு. சடகோபராமானுஜாசாரியாராலும், வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியாராலும் முறையே பார்வையிடப்பட்டு வெளியாயின. சில காண்டங்கள் மற்றும் ஒரு முறையும், சில பன்முறையும் அச்சிடப்பட்டு இதுகாறும் சுமார் 25,000 பிரதிகள் வெளி வந்துள்ளன.

இக்காலத்தில் இப்பெருங் காவியத்தை முன்போல் அச்சிடுவது சிரமசாத்தியமானது. அதற்குக் காரணங்களில் காகிதத்தின் விலை யேற்றமும் அச்சுக்கூலியில் உயர்வும் முக்கியமானவை. மேலும் வாரப் பத்திரிகைகளும் மற்றப் பத்திரிகைகளும் மேலிட்டதனுலும் Novel எனப் பட்ட நவீன கதைகள் அதிகமானதினுலும், ராமாயணக் கதையை சாவதானமாக ஆதியோடந்தம் வரை வாசிப் பவர்கள் குறைவு.

ஆனல், ஸ்ரீ நடேச சாஸ்திரியார் தமது முகவுரையில் சொல்லியதுபோல நம் நாட்டார் பாலர் விருத்தர் யாவரும் ராமாயணக் கதையைப் படித்து அதனுள்ள கருத்துக் களை யறிந்து நல்வழியில் ஒழுகவேண்டியது என்பது அத் யாவச்யம். இவ்வுத்தேசத்திற்கிணங்க இச்சுருக்கத்தை வெளியிடலானேன். இச்சுருக்கம் எல்லாருக்கும் திருப்தி

யளிக்குமென்று எண்ண முடியாது. வேறு சில பகுதிகளை சேர்க்கலாமென்று எண்ணுபவர் பலர் இருக்கலாம். சில பாகங்களை ஒதுக்கியிருக்கலாமென்பவரும் சிலர் இருக்கலாம். வால்மீகியின் காவ்யத்தின் காம்பீர்யத்தை அனுபவிக்க வேண்டுமானல் வடமொழியில்தான் வாசிக்க வேண்டும். அதற்கு அடுத்தபடியாக வடமொழியின் விசேஷ பகுதிகளை யனுசரித்து இச்சுருக்கம் அநேகருக்கு உபயோகமுள்ளதாய் இருக்குமென்றும், திருப்தியளிக்குமென்றும், பள்ளிக்கூடங்களில் பாடபுத்தகமாக உபயோகப்படக் கூடுமென்றும் பிரசுரிக்கலானேன்.

இச்சுருக்கத்தை பூரணமாய் செய்யுமாறு உத்திர காண்டத்தின் சுருக்கமும் செய்வித்து சேர்த்திருக்கின்றேன்.

விஜயதசமி
17—10—1953.

K. Mahadevan.
பிரசுரகர்த்தர்.

விஷய சூசிகை

பால காண்டம்

அயோத்தியா காண்டம்

ஆரணிய காண்டம்

கிஷ்கிந்தா காண்டம்

சுந்தர காண்டம்

யுத்த காண்டம்

உத்தர காண்டம்

ஸ்துதிகள்

ஸ்ரீராமர் ஸ்துதி

ஆபதாம் அபஹர்த்தாரம்
தாதாரம் சர்வஸம்பதாம் |
லோகாபிராமம் ஸ்ரீராமம்
பூயோ பூயோ நமாம்யஹம். ||

ஆபத்துக்களை நீக்குபவரும், எல்லா சம்பத்துகளைக் கொடுப்பவரும் லோகத்தைச் சந்தோஷிப்புவருமான ஸ்ரீராமரை அடிக்கடி வணங்குகின்றேன்.

அநுமான் ஸ்துதி

மனோஜவம் மாருததுல்ய வேகம்
ஜிதேந்திரியம் புத்திமதாம் வரிஷ்டம் |
வாதாத்மஜம் வானரயூதமஸ்கம்
ஸ்ரீராமதூதம் சிரஸா நமாமி. ||

வாயுவேகமுடையவரும், ஜிதேந்திரியரும், மகா புத்திமானும், வானரப்படைத் தலைவருமான இராம தூதரை முடிமேற் கொண்டு வணங்குகின்றேன்.

வால்மீகி ஸ்துதி

கூஜந்தம் ராம ராமேதி
மதுரம் மதுராக்ஷரம் |
ஆருஹ்ய கவிதாசாகாம்
வந்தே வால்மீகி கோகிலம். ||

கவனசக்தியாகிய ஓங்கி உயர்ந்து வளர்ந்த விருக்ஷத்தின் உச்சியில் உட்கார்ந்து "ராம, ராம," என்று இடைவிடாது இனிமையாய்க் கூவும் குயில்போல் விளங்கும் வால்மீகியை வணங்குகிறேன்.

உ

ஸ்ரீரஸ்து

வால்மீகி ராமாயணச் சுருக்கம்

பாலகாண்டம்

1. கதைச் சுருக்கம்

உலகமும் பல்லுயிருமொன்றினிரைந்தோங்கி யிலகும் பகவன திணையடி மறவா வால்மீகி முனிவர், தவம் வேதாத்தியயனம் இவைகளை எப்பொழுதும் செய்கின்றவரும், கற்றறிந்தவர்களுள் உத்தமரும், முனிவர்களிற் சிறந்தவருமாகிய நாரதரைப் பார்த்துக் கேட்கலானார்:— "ஐயா முனிவரே, இக்காலத்தில் இவ்வுலகத்தில் எல்லா விதமான சிறந்த குணங்களும் பொருந்தியிருக்கும் உத்தம புருஷன் ஒருவன் இருக்கின்றானா? பராக்கிரமசாலியும், தருமங்களை அறிந்தவனும், நன்றி மறவாதவனும், உண்மையையே பேசுகிறவனும், விரதங்களை அனுஷ்டிக்கத் தவறாதவனும், குலாசாரத்தை விடாமல் நடக்கின்றவனும், எல்லாப் பிராணிகளுக்கும் நன்மை செய்கிறவனும், கற்றுணர்ந்தவனும், சாமர்த்தியமுள்ளவனும் எல்லாராலும் விரும்பத்தக்க அழகுள்ளவனுமாகிய உத்தமன் ஒருவனை நீர் கண்டதுண்டா? தைரியமுள்ளவனாகித் தன் கோபத்தைத் தன்வசப்படுத்தியுள்ள புருஷன் யார்? மிகுந்த காந்தியுள்ளவனும், அசூயை யில்லாதவனும் யாவன்? போரில் எவன் கோபங்கொண்டால் தேவர்களும் நடுங்குவார்களோ அவன் யாவன்? இப்படிப்பட்ட நற்குண நற்செய்கைகளுடன் கூடிய ஒருவனைப்பற்றி நான்

உங்களிடம் கேட்க மிகவும் விரும்புகிறேன். மகா முனிவரே, இவ்வாறுள்ள ஓர் மனிதனை நீர்தாம் அறிய வல்லவர்" என்று கூற, மூன்று உலகங்களையும் அறிந்த நாரத மகாமுனிவர் வெகு சந்தோஷமடைந்து பின்வருமாறு சொல்லத் தொடங்கினர் :—

"முனிவரே, கேளும். நீர் எடுத்துக்கூறிய நற்குணங்கள் எல்லாவற்றையும் ஒருவனிடத்தில் காண்பது அரிது. ஆயினும் நான் அறிந்து சொல்லுகிறேன். இத்தனை நற்குணங்களும் பொருந்திய புருஷர் ஒருவர் இருக்கிறார்; அவர் இக்ஷ்வாகு வமிசத்தில் பிறந்து இராமர் என்னும் பெயருடன் விளங்குகிறவர்; கௌஸல்யை என்னும் மாது சிரோமணியின் குமாரர்; நீர் குறித்த நற்குணங்கள் எல்லாம் அவரிடம் குடிகொண்டிருக்கின்றன; மிக்க அடக்கமுடையவர்; வெகு பராக்கிரமசாலி; மிகுந்த காந்தியுள்ளவர்; உறுதியுள்ளவர்; எல்லாரையும் தம் வசத்தில் அடக்கியாளுகிறவர்; புத்திமான்; நீதி தவறாது நடப்பவர்; வாக்குஸாமர்த்திய முள்ளவர்; சம்பத்து நிறைந்தவர்; சத்துருக்களை அழிப்பவர்; உயர்ந்த தோள்கள், திரண்டுருண்ட கைகள், சங்குபோன்ற கழுத்து, தசைப்பற்றுள்ள கன்னங்கள், விசாலமான மார்பு, பெரிய தநுசு, தசைப்பற்றால் மறைந்த தோளெலும்பு இவைகளையுடையவர்; பகைவர்களை அடக்கியாளுகிறவர்; முழங்கால் வரையில் தொங்குகிற கைகள், அழகான தலை, அழகான நெற்றி, அழகான நடை இவைகள் அமைந்தவர்; சரியான உயரம், சரியாயமைந்த உறுப்புகள், எல்லாரும் நேசிக்கும்படியான நிறம் இவைகள் பொருந்தியவர்; வெகு பிரதாபமுள்ளவர்; உயர்ந்தமார்பு, விசாலமான கண்கள் முதலிய சகல சாமுத்திரிகா லக்ஷணங்களும் நிறைந்தவர்; அவருடைய தேகத்தில் சுபலக்ஷணங்கள் யாவும் தவறாது விளங்குகின்றன. தருமத்தை அறிந்தவர்; சத்திய சந்தர்; பிரஜைகளுடைய நன்மையில் எப்பொழுதும்

நோக்கமுடையுவர் ; நல்லோரை வளர்ப்பவர் ; தீயோரை யழிப்பவர் ; மிக்க கீர்த்தி பெற்றவர் ; நல்லறிவுடையவர் ; நல்லொழுக்கமுள்ளவர் ; தம்மை அடைந்தவர்களுக்கு வசப்பட்டு நடப்பவர் ; அவர்களைப் பாதுகாப்பதிலே கவலை கொண்டவர் ; பிரமதேவருக்கொப்பானவர் ; சகல பாக்கியமும் நிரம்பியவர் ; சகல சனங்களுக்கும் இஷ்டரா யிருப்பவர் ; இவ்வுலகத்திலுள்ள பிராணி சமூகங்களையும் வருணாச்சிரம தருமங்களையும் தமது குலாசாரத்தையும் தமது சனங்களையும் பாதுகாப்பவர் ; வேதங்கள் வேதாங் கங்கள் இவைகளின் தத்துவங்களை அறிந்தவர் ; தநுர் வேதத்திலும் தேர்ச்சியடைந்தவர் ; ஒவ்வொரு சாஸ்திரத் தின் உண்மையையும் உள்ளபடி கண்டறிந்தவர் ; ஞாபக சக்தி யுடையவர் ; மேல் மேல் விஷயங்கள் விளங்கப் பெற்ற ஞான விசேஷமுடையவர் ; வெகு யோக்கியர் ; பெருந்தன்மையுடையவர் ; வெகு சமர்த்தர் ; நதிகளெல் லாம் சமுத்திரத்தை நாடிச் செல்வதுபோல நல்லவர்கள் எப்பொழுதும் தம்மை நாடித் தொடரப்பெற்றவர் ; எல் லாராலும் மரியாதை பண்ணத்தக்கவர் ; எல்லாரிடத்தும் சமமாக நடப்பவர் ; எப்பொழுதும் அன்புள்ள பார்வை யுடையவர் ; பராக்கிரமத்தில் விஷ்ணுவுக்கும், சந்தோஷ முண்டாக்குவதில் சந்திரனுக்கும் ஒப்பானவர் ; கோபத் தில் பிரளய காலத்து அக்கினியையும், பொறுமையில் பூமி தேவியையும், கொடையில் குபேரனையும் நிகர்த்தவர்; உண்மைக்கு அவரைத் தருமதேவதையின் அவதார மாகவே சொல்லலாம்.

" இவ்விதமான குணங்களையுடையவராய், தவறுத பராக்கிரமமுள்ளவராய், எல்லாவித உத்தம குணங்களும் அமைந்தவராய், குடிகளுக்கு நன்மையைச் செய்பவராய் விளங்கிய இராமரை அவருடைய தந்தையாராகிய தசரதர் கண்டு களித்து, குடிகளுக்கு நன்மை செய்யும் பொருட்டு, மூத்த குமாரராகிய அவருக்கு அன்போடு

யுவராஜ பட்டாபிஷேகம் செய்து வைக்க இச்சித்தார். இராமருடைய பட்டாபிஷேகத்துக்காக எல்லா உபகரணங்களும் சித்தமாகவிருந்ததை தசரதருடைய மனைவியாகிய கைகேயி பார்த்து, முன்னமே தனக்குக் கொடுப்பதாகத் தனது புருஷன் சொல்லியிருந்த வரங்களைக் கேட்கலானாள். அவை யாவையெனில், "இராமன் காட்டுக்குப் போகவேண்டும்; அவனுக்குப் பிரதியாகப் பரதன் இளவரசாகவேண்டும்" என்பனவாம். சத்தியத்தால் கட்டுண்ட தசரதர் மறுக்க வழியில்லாமல் கைகேயி கேட்ட வரத்தின்படி தமது அன்புள்ள புத்திரரான இராமரைக் காட்டுக்கனுப்பும்படி நேர்ந்தது. அவருடைய மிக்க அன்புள்ள தம்பி லக்ஷ்மணர் அவரைப் பின்தொடர்ந்தனர். அவருடைய பிராணநாயகியும், எப்பொழுதும் நன்மையையே செய்பவளுமான சீதை, சந்திரனை உரோகிணி பின்தொடர்வதுபோல அவரைத் தொடர்ந்து காடு சென்றாள்.

"தேவர்களையும் கந்தர்வர்களையும்போன்ற இராமர் முதலிய அந்த மூவரும் ஒரு வனத்திலிருந்து மற்றொரு வனமாக அநேக வனங்களைக் கடந்து அநேக நதிகளையும் தாண்டிப் பரத்துவாஜ மகாரிஷியின் சொற்படி சித்திரகூடம் என்னும் மலையை அடைந்து அவ்விடத்தில் அழகான ஒரு பர்ணசாலை அமைத்துக்கொண்டு சுகமாக வசித்திருந்தார்கள்.

" இங்ஙனம் இராமர் சித்திரகூடஞ்சேர, தசரதர் புத்திரசோகத்தால் வருந்தி " இராமா! இராமா!" என்று புலம்பிக் கொண்டு சுவர்க்கமடைந்தார். அவர் மரித்தபின் மகாபலசாலியான பரதர், வசிஷ்டர் முதலிய பெரியவர்களால் ஏவப்பட்டும் தாம் பட்டத்தை ஒப்புக்கொண்டு அரசாளக் கொஞ்சமேனும் இஷ்டமில்லாதவராயிருந்தார். அவ்வீரர் இராமரைத் தேடி வனத்திற்குச்சென்று அவருடைய பாதத்தில் விழுந்து அவரருள் பெறக்கருதினார்.

இராமர் தமது தந்தையின் கட்டளையை நிறைவேற்றக் கருதி இராச்சியத்தின்மேல் ஆசை வைக்கவில்லை. ஆனால். தமக்குப் பிரதிநிதியாகத் தமது பாதுகைகளை பரதருக்குக் கொடுத்து அவரை அரிதில் திரும்பிப்போகச் செய்தார். பரதர் தமது எண்ணம் நிறைவேறப் பெருமலே திரும்பி வந்து இராமருடைய பாதுகைகளைத் தினந்தோறும் நமஸ்கரித்துக்கொண்டு இராமர் திரும்பிவருவதை எதிர் பார்த்தவராய் நந்திக்கிராமத்திலிருந்து இராச்சிய பரிபாலனம் செய்யலானார்.

"இராமர் தண்டகாரணியத்திலே அவ்விடத்துள்ள அரணிய வாசிகளுடன் வசித்துக் கொண்டிருக்கும்போது அசுரர்களையும் ராக்ஷஸர்களையும் வதைப்பதற்காக வழி தேடிக் கொண்டிருந்த அநேக முனிவர்கள் அவரிடம் வந்து சேர்ந்தார்கள். இராமர் அவர்களைக் கொல்லக்கருதிய முனிவர்களுடைய வேண்டுகோளை அங்கீகரித்தார்.

"அவர் அங்கு வாசஞ்செய்து கொண்டிருக்கும் பொழுதுஜனஸ்தானமென்னும் இடத்திலேவசித்துக்கொண்டிருந்தவளும் தான் வேண்டியபடி வடிவங்கொள்ள வல்லவளுமான சூர்ப்பணகையென்பவள் அங்கபங்கம் பண்ணப்பட்டாள். உடனே, சூர்ப்பநகையின் சொற்களால் ஏவப்பட்டுப் போருக்கு வந்த கரன், தூஷணன், திரிசிரன் முதலிய ராக்ஷஸர்களையும், அவர்களுடன் வந்த பதினாலாயிரம் வீரர்களடங்கிய அவர்களுடைய பெரிய சேனையையும் இராமர் யுத்தஞ்செய்துக் கொன்றார்.

"இவ்விதமாய் அங்கு நடந்த தனது பந்துக்கள் வதையைக் கேட்டு இராவணன் கோபத்தால் கண் மூடப்பட்டவனாய் மாரீசன் என்ற அரக்கனை அழைத்துக் கொண்டு இராமருடைய ஆச்சிரமத்துக்குச் சென்றான். இராவணன் மாரீசனுடைய மாயையால் ராமலக்ஷ்மணர்களை அவர்கள் வசித்துக்கொண்டிருந்த இடத்தை விட்டு வெகுதூரம் போகச்செய்து ஜடாயு என்ற கழுகுகளினரசனைக்

கொன்று சீதையைக் கவர்ந்தோடினன். ஜடாயு மாண்டு கிடப்பதைப் பார்த்தும் சீதையை இராவணன் எடுத்தோடியதைக்கேட்டும் இராமர் சோகத்தால் பரிதபித்துக் கொண்டு தமது ஐம்புலன்களும் கலங்கியவராய்ப் புலம்பினர்.

“பின்பு அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் பம்பை என்னும் ஓடையின் கரையை அடைந்து அங்கு அநுமான் என்ற வானர சிரேஷ்டனுடைய சிநேகத்தைப் பெற்ருர். அநுமானுடைய வார்த்தையின் மூலமாய் இராமர் சுக்கிரீவனிடன் சேர்ந்தார். சுக்கிரீவன் அன்போடு அக்கினி சாட்சியாக இராமருடன் சிநேகஞ்செய்தான். அந்த வானர ராஜனும் தன் மனக்குறை நீங்கும் என்ற நம்பிக்கையால் தன் துக்கங்கள் எல்லாவற்றையும் இராமரிடம் கூறினன். இராமர் வாலியை வதைசெய்வதாக ஒப்புக் கொண்டார். பிறகு சுக்கிரீவன் கிஷ்கிந்தைக்குள் பிரவேசித்து வாலியிருந்த குகையை நாடிச்சென்று தைரியமாய்க் கர்ச்சிக்க, அதைக்கேட்டு வாலி வெளியில்வந்து சுக்ரீவனுடன் கைகலந்தான். அவ்விடத்தில் வாலியை இராமர் ஒரே பாணத்தால் கொன்றிட்டார்.

“இராமர் கிஷ்கிந்தை ராச்சியத்திற்குச் சுக்கிரீவனே அரசனுக முடி சூட்டினுர். அவன் உடனே வானர சைநியங்களை யெல்லாம் வரவழைத்துத் திக்குகள் தோறுஞ் சென்று சீதையிருக்கு மிடத்தைத் தேடிவரக் கட்டளையிட்டான். இவ்விதமாய் உத்தரவு பெற்றுப் போனவர்களில் அதி பலசாலியான அநுமான் சம்பாதியின் சொற்படி நூறுயோஜனை அகலமுள்ள தக்ஷிண சமுத்திரத்தை ஒரே பாய்ச்சலில் கடந்து இராவணனல் அரசாளப்பட்ட இலங்காபுரியை அடைந்து அங்கு அசோக வனத்தில் இராமரையே தியானித்துக் கொண்டிருந்த சீதையைக் கண்டான். அவளிடம் அநுமான் தான் இராமரிடமிருந்து வந்தவன் என்பதற்குரிய அடையாளத்தைக்

காட்டி, இராமர் செய்துகொண்டிருக்கும் முயற்சிகளைத் தெரிவித்துச் சீதாதேவியைத் தேறுதல் செய்து அவ் வசோக வனத்தின் வெளிவாயிலைச் சிதைக்கலானான். பின்பு சீதாதேவி நீங்கலாக இலங்கை முழுவதையும் தீயிட்டுக் கொளுத்தி, இராமரிடம் சந்தோஷ சமாசாரத்தைச் சொல் லும் பொருட்டு திரும்பினான்.

"பின்பு இராமர் சுக்கிரீவனுடன் கடற்கரை சேர்ந்து சேது என்னும் அணையை நளனுடைய உதவியால் கட்டி அதன் வழியாய் இலங்கையை அடைந்தார். அங்கு யுத்தத்தில் இராவணனை வதை செய்து அரக்கர் மன்ன வனாக விபீஷணருக்கு முடிசூட்டி இராமர் அயோத்தி மாநகர் சேர்ந்து இராச்சியத்தைச் சீதையோடு பெற்றுக் கொண்டார்.

"அவர் இவ்வாறு திரும்பி வந்ததுமுதல் ஜனங்கள் சுகத்தையும், சந்தோஷத்தையும் அடைந்து தனிகர்களும், தர்மிஷ்டர்களும், நோயற்றவர்களும், கவலை இல்லாதவர் களுமாய், துற்பிக்ஷபயமில்லாமல் வாழ்ந்து வந்தார்கள். இராமர் பதினோராயிரம் ஆண்டு இராச்சிய பரிபாலனம் பண்ணிவிட்டுப் பின்பு பிரமலோகம் சேர்வர்."

சொல்வன்மையுள்ள வால்மீகிமகாமுனிவர் நாரதர் சொன்ன வாக்கியத்தைக் கேட்டு வியப்புற்று இந்தச் சரித் திரத்தைத் தமக்குச் சொன்னதற்காக மாணாக்கர்களோடு நாரதரைப் பூஜித்தார். அந்த சமயத்தில், பிரமதேவர் வால்மீகி மகாரிஷியை பார்ப்பதற்கு அவ்விடம் வந்தார். அவரைக் கண்டதும், வால்மீகிமுனிவர் எழுந்து மிக்க வியப்புற்று மனமொழிகளை அடக்கிக் கொண்டு கைகளைக் கூப்பிநின்றார். பிரமதேவர் ஓர் ஆசனத்தில் வீற்றிருந்து கொண்டு வால்மீகி முனிவரைப் பார்த்து சிரித்துக் கொண்டே "ஐயா, இராமருடைய சரித்திரம் முழுவதை யும் நாரத முனிவரிடம் கேட்டபடி சுலோக ரூபமாக இயற்றி உலகத்தில் பிரசித்தஞ் செய்யவேண்டும். இது

வரையில் உமக்குத் தெரியாமலிருந்தது இனி உள்ளது உள்ளபடி உமக்குத் தெரிந்துவிடும். என்னுடைய அநுக்கிரகத்தால் நீர் செய்யப்புகும் காவியத்தில் சொல்லப்படும் சொற்களில் ஒன்ருவது பொய்க்காது. மனத்தைக் களிப்பிக்கும் புண்ணிய கதையான இராமாயணத்தைச் செய்யுள் ரூபமாக நீர் செய்யக் கடவீர். உலகத்தில் மலைகளும் நதிகளும் உள்ளவரையில் நீர் செய்யப்புகும் இராமாயணக் கதை விளங்கி நிற்கக்கடவது'' என்று சொல்லி அநுக்கிரகித்துத் தாம் வீற்றிருந்த ஆசனத்தி லிருந்தபடியே மறைந்தார்.

யோக நிஷ்டையில் வால்மீகி முனிவர் இவ்வாறு முன்பு நடந்த விஷயங்களை உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெளிவாகக் கண்டார். இவ்விதமாய்த் தம்முடைய யோகபலத்தால் எல்லா விஷயங்களையும் அறிந்த பின் அந்த மகா முனிவர் இராமருடைய சரித்திரத்தை இயற்றத்தொடங்கினுர்.

இராமர் இராச்சியத்தை அடைந்ததன் பின்னரே இந்தச் சொற்சுவையும் பொருட்சுவையு முள்ள இராமாயண காவியத்தை வால்மீகிமாமுனிவர் ஏழு காண்டங்களாக இருபத்துநாலாயிரம் சுலோகங்கள் அடங்கியதும் ஐந்நூறு சருக்கங்களை யுடையதுமான ஒரு கிரந்தமாக இயற்றினுர்.

2. கோசலராஜ்யச் சிறப்பு

சரயூ என்னும் நதியின் கரையில் கோசலம் என்ற ஒரு பெரிய தேசமுண்டு. அது தனதானியங்களால் எப்பொழுதும் செழித்திருக்கும். அதிலுள்ள ஜனங்கள் எப்பொழுதும் சந்தோஷத்தோடு செழித்திருப்பார்கள். அந்தத் தேசத்தின் பிரதான நகரம் அயோத்தி என்பது. அது உலகமெல்லாம் கீர்த்திபெற்ற நகரம். தேவலோகத்தை இந்திரன் ஆளுவதுபோல் அந்த அயோத்

தியை மகாத்துமாவும் இராச்சியத்தை விருத்திபண்ணு கிறவருமான தசரதமகாராஜா ஆண்டு வந்தார்.

அவர் காலத்தில் அந்நகரத்திலுள்ள குடிளெல்லாம் வெகு சந்தோஷமுடையவர்களாயும், தரும சிந்தையுள்ள வர்களாயும், அநேக சாஸ்திரங்களை யுணர்ந்தவர்களாயு மிருந்தார்கள். ஒவ்வொருவரும் தமக்கிருக்கும் பொருளைக் கொண்டு மனத் திருப்தியடைந்து பிறர் பொருளின்மேல் சிறிதேனும் ஆசையென்பதில்லாமல், சத்தியம் தவறாதவ ராயிருந்தனர். அந்நகரத்தில் இல்லை என்ற சொல்லே யில்லாமல் ஒவ்வொருவரும் எல்லாப்பொருள்களையும் அடைந்தவராயிருந்தார்கள். ஒவ்வொரு வீட்டிலும் பசுக் கள், குதிரைகள், தனம் தானியம் ஆகிய இவைகள் நிறைந்திருந்தன. நெறி நீங்கிய நடத்தையுள்ளவர்கள் அவ்விடத்தில் ஒருவருமில்லை. தேடிப் பார்த்தாலும், கண் களுக்கு அருவருப்பான தோற்றமுள்ள உருவம் அவ்வூரில் அகப்படாது. அற்ப குணமுள்ளவர்களும், படியாத பாமரர்களும், ஈசுவரனில்லை என்று நாஸ்திகவாதம் பண்ணுபவர்களும் அங்கு மருந்துக்குங் கிடைக்கமாட் டார்கள். அப்பட்டணத்தில் வசித்த ஒவ்வொரு புரு ஷரும் ஒவ்வொரு மாதரும் உத்தமரும் உத்தமியுமாய்த் தருமங்களை நடத்திக்கொண்டும் நல்வழியில் நடந்துகொண் டும் இருந்தனர். அவ்வூரில் ஒவ்வொரு வீட்டிலுமிருந்த அந்தணர்கள் தங்கள் ஐம்புலன்களையும் வென்றவர் களாய், தங்கள் காரியங்களைச் சரிவர நடத்திக்கொண்டு, தானம் அத்தியயனம் முதலிய ஒழுக்கங்கள் தவறாதவர் களா யிருந்தார்கள். நான்கு வருணத்தார்களும் தங்கள் தங்கள் தொழிலை தைரியத்துடனும் சந்தோஷத் டனும் செய்துகொண்டு நெடுங்காலம் வாழ்ந்திருந்தார்கள்; பிள்ளை பேரன் முதலிய சந்ததிகளுக்கு ஒரு விதமான குறைவுமின்றி தமது மனைவிகளோடு என்றும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

தசரத மகாராஜருக்கு எட்டு முக்கிய மந்திரிகளிருந்தார்கள். அவர்கள் பெயர் திருஷ்டி, ஜயந்தர், விஜயர், சித்தார்த்தர், அர்த்தசாதகர், அசோகர், மந்திரபாலர், சுமந்திரர் என்பனவாம். இவர்களன்றி மிகுந்த நம்பிக்கையுள்ள இரண்டு முக்கிய புரோகிதர்களும் உண்டு. அவர்கள் குலகுருவாகிய வசிஷ்ட மகரிஷியும், வாமதேவ மகரிஷியும்.

3. இராமாவதாரம்

இவ்வளவு நீதியோடும் பராக்கிரமத்தோடும் அரசாண்டிருந்த தசரதமகாராஜர் அநேகவித தருமங்கள் செய்தும் புத்திரபாக்கியம் இல்லாமலிருந்தார். பலவாறு ஆலோசனை செய்து முடிவில் அவர் "புத்திர சம்பத்தையடையும் பொருட்டு நாம் ஏன் அசுவமேதயாகம் பண்ணக்கூடாது" என்று கருதினார். புத்திரகாமேஷ்டி சம்பந்தமாய் நடந்த பிரஸ்தாபங்களையெல்லாம் கேட்டு சுமந்திரர், தசரதர் ஏகாந்தத்தில் இருந்தபொழுது அவரைப் பார்த்து "விபண்டகர் குமாரரான ரிசியசிருங்கர் உமக்கு புத்திரர்கள் உண்டாகும் யாகத்தைச் செய்து வைப்பார்" என்று சனத்குமாரர் சொல்லியதை நானிப்பொழுதுஉமக்குச் சொன்னேன்" என்றார்.

சுமந்திரர் வாக்கியத்தைக் கேட்டு தசரதர் வெகு சந்தோஷமடைந்து வசிஷ்டராகிய தமது குருவினிடம் எல்லா விஷயங்களையுஞ் சொல்லி விடைபெற்றுக் கொண்டு அங்கநாடடைந்தார். அங்கு உரோமபாதருக்கருகில் தமது தபோமகிமையால் பிரகாசித்துக்கொண்டு தழல்போல் விளங்குகிற ரிசியசிருங்கரை தரிசித்தார். உரோமபாதர் தசரதரைக் கண்டதும் ஆநந்தமடைந்து வெகுவித மரியாதை செய்தார். தசரதர் ஏழு எட்டு நாள் அங்கநாட்டில் வாசம்பண்ணி ஒருநாள் உரோமபாதரை நோக்கி "என் மித்திர ரத்தினமே! உமது புத்திரி

சாந்தை தன் கணவருடன் என்னுடைய நகரத்துக்கு வர வேண்டும். நான் யாகம் ஒன்று நடத்தப்போகிறேன். அதை நடத்திவைக்கும்படி நீர் ரிசியசிருங்கரிடம் சொல்ல வேண்டும்'' என்று கேட்டுக்கொள்ள, உரோமபாதர் ரிசிய சிருங்கரைப் பார்த்து "நீர் பத்தினி சகிதராய் அயோத்தி போய் யாகத்தைச் செய்விக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்'' என்று சொன்னார். அவ்வாறு செய் வதில் தமக்குச் சந்தோஷமே யல்லது வேறில்லை என்று அம்முனிவரும் ஏற்றுக்கொண்டார். பின்பு தமது மனை வியை கூட அழைத்துக்கொண்டு ரிசியசிருங்கர் பிரயாண மானார். ரிசியசிருங்க மகாமுனிவர் முன்செல்ல, நான்கு பக்கங்களிலேயும் சங்கம் துந்துபி என்ற மங்கள வாத்தி யங்கள் கோஷிக்க, தசரதர் அயோத்தியில் பிரவே சித்தார்.

ஓர் அரசனாலாவது சுலபமாகச் செய்துமுடிக்கக் கூடா ததும், பாவத்தைப் போக்குவதும், சுவர்க்கத்தை பெறு விப்பதுமான மிகச் சிறந்த அசுவமேத்தை தசரதர் சரி யாகச் செய்து முடித்தவுடன் ரிசியசிருங்கரை நோக்கி "என் வம்சத்தை விருத்தி செய்விக்கும்படியான சடங்கை செய்தற்கு உரியவர் நீரே'' என்றார். அதற்கு அவர், "அப்படியே ஆகட்டும்; உமது குலத்தை நிலைநிற்கச்செய்ய நான்கு சத் புத்திரர்கள் உமக்கு உண்டாவார்கள். உம் முடைய மனோரதமாகிய புத்திர லாபத்திற்காக, அதர் வண வேதத்தில் சொல்லியிருக்கும் மந்திரங்களுடைய பலத்தால் இன்னமொரு யாகம் பண்ணிவைக்கிறேன்'' என்று சொல்லி, உடனே அந்த யாகத்தையும் செய்யத் தொடங்கி மந்திர சாஸ்திர விதிப்படி அக்கினியில் ஓமம் செய்யலானார். அப்பொழுது நேரில் நின்று அவிர்ப்பாகங் களைப் பெற்றுக்கொள்ளும்பொருட்டு தேவர்களும், கந்தர் வர்களும், சித்தர்களும் மகரிஷிகளும் அங்கு வந்து கூடி னார்கள். அவர்கள் எல்லாரும் அவ்விடத்தில் ஒரு சபையா

கச் சேர்ந்து, உலகத்தை சிருஷ்டித்தவரான பிரமதேவரைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னார்கள்:—"பிரமதேவரே, உம்மிடமிருந்து வரம் பெற்றதனால் அதிக பராக்கிரமசாலியான இராவணன் என்னும் அரக்கன் எங்களையெல்லாம் வருத்துகிறான். அவனையடக்க எங்களில் ஒருவராலும் முடியவில்லை. அப்பாவியரக்கனால் எங்கள் எல்லாருக்கும் உண்டாகும் பயத்துக்கு அளவேயில்லை. ஆகையால் அவனைக்கொல்ல எப்படியாவது நீர் ஓர் உபாயந் தேடவேண்டும்-" இப்படி எல்லாத் தேவர்களும் சொன்னதைக்கேட்டு பிரமதேவர் சிறிது நேரம் ஆலோசித்து பின்வருமாறு சொல்லலானார்." அந்த துராத்துமாவை வதைப்பதற்கு உபாயம் ஒன்று முன்னமே தானாய் அமைந்திருக்கின்றது. அவன் வரங்கேட்ட காலத்தில் கந்தர்வர்களாலும், யக்ஷர்களாலும், தேவர்களாலும், அசுரர்களாலும், ராக்ஷஸர்களாலும் தனக்கு மரணம் சம்பவிக்கக்கூடாவண்ணம் வரமளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டான். அப்படியே ஆகட்டும் என்று நானும் வரமளித்தேன். மனிதரால் தனக்கு மரணம் உண்டாகாமலிருக்க வேண்டும் என்று அவன் அலக்ஷ்யத்தால் கேட்கவில்லை. அதுதான் இப்பொழுது நமக்கு உபாயம். மனிதரால் இராவணன் மாய உபாயந் தேடவேண்டும் இதைத்தவிர நமக்கு வேறு மார்க்கமில்லை" என்றார்.

இவ்வண்ணம் ஒருவித நம்பிக்கையைச் சுட்டி பிரமதேவர் சொன்னதைக் கேட்டு அங்கிருந்த தேவர்களும், முனிவர்களும் மிக்க சந்தோஷத்தை அடைந்தார்கள். அத்தருணத்தில், அங்கே, மிகவும் விளங்குகின்ற திருமேனியுடன் விஷ்ணுபகவான் வந்தனர். தேவர்களெல்லாரும் அவருக்கு சாஷ்டாங்க தண்டன் சமர்ப்பித்து எழுந்து ஸ்தோத்திரம் பண்ணி, "ஐயா, விஷ்ணு பகவானே, உலகங்களினுடைய க்ஷேமத்தின் பொருட்டே நாங்கள் இப்போது உம்மை ஒரு காரியத்துக்காகத் தாண்

டுகிறோம்; தருமங்களை அறிந்தவராயும், உதாரகுண முடையவராயும், மகாமுனிவர்க் கொப்பான தேஜோமய ராயும் தசரதர் என்னும் அரசர் ஒருவர் அயோத்திமா நக ரத்தில் அரசாட்சி செய்துகொண்டிருக்கிறார். நாணம், செல்வம், புகழ் என்பவைகளே உருக்கொண்டு வந்தாற் போல மூன்று மனைவிகள் அவருக்கிருக்கிறார்கள். நீர் அந்த மூன்று பெண்மணிகளுடைய வயிற்றில் உம்மை நான்கு பாகமாகப் பண்ணிக்கொண்டு மனிதரூபமாக பூலோகத்தில் அவதாரம்பண்ணி, உலக கண்டகனும் தேவர்களால் வெல்ல முடியாதவனுமான இராவணனைப் போர்செய்து கொல்லவேண்டும். தேவசத்துருக்களா யிருக்கிற இராவணாதியரைச் சங்கரிக்க நீர் மநுஷ்யாவ தாரம் செய்யவேண்டும்'' என்று பலவிதமாகப் புகழ்ந்து பிரார்த்தித்தார்கள்.

இவ்வாறு தேவர்கள் பிரார்த்தித்தவுடனே, தேவ தேவரும் ஸர்வலோக சரண்யருமான திருமால் "தேவர் களே, உங்கள் பயத்தை விட்டுவிடுங்கள். இன்று முதல் உலகத்துக்கு க்ஷேமம் வந்துவிட்டது என்று நிச்சயமாய் எண்ணுங்கள். உங்களுடைய நன்மைக்காக இராவணனை அவனுடைய பிள்ளைகள், பேரன்மார்கள், மற்றைத் தாயாதிகள், பந்துக்கள், சிநேகிதர்கள், மந்திரிகள் முத லான எல்லாருடனும் நான் வதைசெய்கிறேன். அவன் வெகு குரூரனாய்த் தேவர்களையும் ரிஷிகளையும் உபத்திர வம் பண்ணிக்கொண்டிருக்கிறான். நான் ஒரு மானிடனாய் அவதாரம் பண்ணி பூலோகத்தைப் பரிபாலித்துக் கொண்டு பதினோராயிரம் வருஷகாலம் வாசம்பண்ணப் போகிறேன்'' என்றார்.

இவ்விதம் தேவர்களுக்கு வரங் கொடுத்துவிட்டு திருமால் தாம் மநுஷ்யராக அவதரிப்பதைப்பற்றிச் சற்று ஆலோசித்து உடனே தாம் நான்கு அம்சமாய் தசரதரைத் தந்தையாகக்கொண்டு தோன்றுவதாக நிச்சயித்தார்.

திருமால் மறைந்தவுடனே, தசரதர் ஓமம் பண்ணி முடித்த யாககுண்டத்திலிருந்து மிக்க காந்தியுடன் ஒரு பெரிய உருவம் வெளிப்பட்டது. உலகத்தில் எக்காலத்திலும் பார்த்திராத மிக்க பலமும் வீரியமும் அதனிடங் காணப்பட்டன. வெள்ளிமூடி மூடப்பட்டதும் தேவலோகத்துப் பாயசம் நிரம்பினதுமான பெரிய தங்கக் கிண்ணம் ஒன்றை, தனது அன்புள்ள மனைவியையே மாய்யையால் அவ்வுருவாக்கிக்கையிற் பிடித்ததற்கொப்பாய்ப் பிடித்துக்கொண்டு வந்தது. அவ்வண்ணம் தோன்றிய அவ்வுருவம் தசரதமகாராஜாவைப்பார்த்து "ஓ வேந்தே, பிரமதேவரிடமிருந்து உமது சந்நிதிக்கு வந்த புருஷன் நான்" என்றது. அதைக்கேட்டு அரசர் தமது இரு கைகளையும் கூப்பி அதற்கு நமஸ்காரஞ்செய்து, "ஸ்வாமி, உமது வரவு நல்வரவாகுக. நான் உமக்கு என்ன செய்ய வேண்டும்? கட்டளையிட்டபடி நடந்துகொள்ளக் காத்திருக்கிறேன்" என்றார். அவ்வாறு அவர் சொன்னதைக் கேட்ட அவ்வுருவம் தசரதரைப் பார்த்து "மன்னவரே, தேவர்களை நன்றாய் ஆராதித்த பாக்கியத்தால் நீர் இப்பொழுது இந்தப் பொருளைப் பெற்றீர். இந்த தேவலோக பாயசத்தைக் கைப்பற்றும். இதன் மூலமாகவே நீர் புத்திரப்பேறும், மற்றைப் பாக்கியமும், ஆரோக்கியமும் ஆகிய இவைகளை அடையப்போகிறீர். இதை உமக்கு உரிய மனைவிகளிடங் கொடுத்து உண்ணச் சொல்லும். அவர்கள் வயிற்றினின்றும் உமக்குப் புத்திரர்கள் பிறப்பார்கள். எந்தக் குறையை நீக்குதற்கு நீர் இவ்வளவு சிரமப்பட்டு யாகம் பண்ணினீரோ அந்தக்குறை உமக்கு நீங்கிவிடும்" என்றது. உடனே தசரதர் "உமது உத்திரவின்படியே செய்கிறேன்" என்று சொல்லி, தேவர்களால் நிருமிக்கப்பட்ட அந்தப் பாயசம் அடங்கிய பொற் கிண்ணத்தை அன்போடு கைபற்றித் தமது சிரத்தின்மேல் வைத்துக்கொண்டார்; வெகு ஆச்சரியமாய்த் தோன்றித்

தமக்கு ஆனந்தத்தை அளித்த அவ்வுருவை வணங்கி, மிக்க களிப்புடன் அதனை அடிக்கடி பிரதக்ஷிணஞ்செய்தார்.

பிறகு பாயசத்தை எடுத்துக்கொண்டு அந்தப்புரத்துள் புகுந்து கௌஸல்யையைப் பார்த்து "உனக்குப் புத்திரபாக்கியம் உண்டாகும்; இப்பாயசத்தை நீ கைப்பற்று" என்றார். அப்படிச் சொல்லி, தாம் கொண்டுவந்த பாயசத்தில் பாதியை அவளுக்கு கொடுத்தார்; எஞ்சிய பாயசத்தில் பாதியைச் சுமத்திரைக்குக் கொடுத்தார்; நின்ற பாயசத்தில் பாதியைக் கைகேயிக்குக் கொடுத்தார்; அதன் பின் மிகுந்து நின்ற பாயசத்தைக் கொஞ்சநேரம் ஆலோசனை செய்து சுமித்திரைக்குக் கொடுத்தார். அந்தத் தேவ பாயசத்தைப் புசித்த சிறுகாலத்துக்குள் அவர்கள் கர்ப்பவதிகளானார்கள். அவர்களுடைய தேஜசு அக்கினிபோலவும் சூரியன்போலவும் விளங்கிற்று.

நாராயணமூர்த்தி அந்த மகாத்துமாவான தசரத மன்னவரிடம் புத்திரராய் அவதாரம் பண்ணச் சென்றவுடன் பிரமதேவர் தேவர்களெல்லாரையும் பார்த்து "சொன்ன சொல்தவருத வீரரான விஷ்ணுபகவான் நமக்கெல்லாம் நன்மை செய்யும் பொருட்டு பூலோகத்தில் அவதாரஞ் செய்கின்றாரன்றோ. அவருக்கு நாம் சகாயம் பண்ண வேண்டுமே. அதன் பொட்டு நீங்கள் எல்லாரும் பல பராக்கிரமசாலிகளான அநேகரை உண்டாக்கவேண்டும். மாயைகளை அறிந்தவர்களாகவும், சூரர்களாகவும், காற்றுக்கொப்பான வேகமுள்ளவர்களாகவும், நீதிகளையுணர்ந்தவர்களாகவும், புத்திமான்களாகவும் விஷ்ணுவுக்கு ஒப்பான சக்தியுள்ளவர்களாகவும், எவராலும் வதஞ் செய்யக் கூடாதவர்களாகவும்; சகல உபாயங்களையும் அறிந்தவர்களாகவும், சிங்கங்கள்போலப் பலமுள்ளவர்களாகவும், அழகான மேனியுள்ளவர்களாகவும், எவ்வித அஸ்திரங்களையும் தெரிந்தவர்களாகவும், அமிருத முண்டவர்போல் அழியாத ஆயுள்

பொருந்தினவர்களாகவும், வாநரவுருவங் கொண்ட புத்திரர்களை உலகத்தில் உண்டாக்கக் கடவீர்கள். நானும் அவ்வாறே முன்னொரு காலத்தில் ஜாம்பவான் என்ற கரடிவேந்தனை உண்டாக்கியிருக்கின்றேன்'' என்றனர்.

பிரமதேவர் அவ்வாறு கட்டளையிடலும் தேவர்கள் எல்லாரும் அவருத்தரவின்படியே வாநரரூபமாக அநேக வம்சங்களை உண்டாக்கினார்கள். இந்திரனுக்குப் பிள்ளையாய் மகேந்திர மலைக்கொப்பான வாலி யென்ற சிறந்த வாநரவீரன் இவ்வுலகத்தில் பிறந்தான். சூரியன் மைந்தனாய்ச் சுக்கிரீவன் ஜனித்தான். பிருகஸ்பதியின் பிள்ளையாய், எல்லா வாநரர்களிலும் அதிக புத்தி நுண்மையுள்ள தாரன் என்ற வீரன் தோன்றினான். குபேரனுடைய புதல்வனாய்க் கந்தமாதனன் என்பவன் பிறந்தான். விசுவகர்மாவினிடமிருந்து நளன் என்னும் வாநரன் தோன்றினான். அக்கினி பகவானிடமிருந்து, அனலைப்போல் விளங்குகிற அழகான நீலன் உண்டானான்; வாயுதேவனிடம், வச்சிரத்துக் கொப்பான சரீரமுள்ளவனாகவும் கருடனுக் கொப்பான வேகமுள்ளவனாகவும் அநுமான் தோன்றினான். அவர்கள்தாம் வாநரசேனைத் தலைவர்களாயும், தங்களுக்கு இஷ்டமான உருவங்கொள்ளவல்லவர்களான வெகுகீர்த்தி பெற்ற வாநரப் போர்வீரர்களாயும் உலகத்தில் பல நூறுயிரக் கணக்காக வந்து தோன்றி தாங்களும் வாநர சேனைத் தலைவர்களை உண்டாக்கினார்கள். மேகக்கூட்டங்களுக்கும் மலைச்சிகரங்களுக்கும் ஒப்பானவர்களாய், பயங்கரமான சரீரமுள்ளவர்களாய், மகாபலசாலிகளாய், வாநரவீரர்கள் இராமருக்கு உதவிசெய்ய உண்டானார்கள்.

யாகம் முடிந்து ஆறுருதுக்கள் கழிந்தபின் பன்னிரண்டாம் மாதத்தில் கௌஸல்யை சித்திரை மாதத்து சுக்கில பக்ஷ நவமி திதியில், புனர்வசு நக்ஷத்திரத்தில், கர்க்கடக லக்கினத்தில், ஐந்து கிரகங்கள் உச்சமாய் நிற்க, லக்கி

னத்தில் சந்திரனும் குருவும் சேர்ந்திருக்க, எல்லாராலும் வணங்கப்படுகிறவரும் ஜகந்நாதரும் ஸர்வ லக்ஷணங்களும் பொருந்தியவருமான விஷ்ணு பகவானுடைய பாதி அம்சமாய் இக்ஷ்வாகு வமிசம் விளங்கத் தோன்றிய இராமர் என்ற குழந்தையைப் பெற்றாள். வெகு சத்தியசந்தனும், எல்லா நற்குணங்களையு முடையவனும் விஷ்ணுவின் அம்சத்தில் நான்கில் ஒரு பங்கு அம்சமுள்ளவனுமான பரதனைக் கைகேயி பெற்றாள். வீரர்களாயும் எல்லா அஸ்திர வித்தைகளிலும் வல்லவர்களாயும் விஷ்ணு பகவானுடைய அம்சமாயும் விளங்கும் லக்ஷ்மணன், சத்துருக்கினன் என்பவர்களைச் சுமித்திரை பெற்றாள். களங்கமற்ற புத்தியையுடைய பரதன் புஷ்யநக்ஷத்திரத்தில் மீனலக்கினத்திலே ஜனித்தான். லக்ஷ்மணனும், சத்துருக்கினனும் ஆயிலிய நக்ஷத்திரத்தில் கர்கடலக்கினத்தில் பிறந்தார்கள்.

இவ்வண்ணம், மகாத்துமாக்களாயும், நற்குணமுள்ளவர்களாயும், ஒருவருக்கொருவர் சமமான அழகுள்ளவர்களாயும் நான்கு குமாரர்கள் பூரட்டாதி நக்ஷத்திரங்கள் போல் அதிககாந்தி பொருந்தியவர்களாகத் தசரதருக்குப் பிறந்தார்கள். அவர்களுடைய ஜன்மதினத்தில் கந்தருவர்கள் மதுரமாகப் பாடினார்கள்; அப்ஸரக்ணங்கள் கூத்தாடினார்கள். எங்கே பார்த்தாலும் அந்தத் தினம் ஒரு பெரிய உத்ஸவ தினமாயிருந்தது. தசரதர் அன்றைத்தினம் பிராமணர்களுக்குக் கோதானமும், சுவர்ணதானமும், ஆயிரக்கணக்காகச் செய்தார்.

குழந்தைகள் பிறந்து பதினொருநாள் சென்றபின்பு மகாராஜா தமது குழந்தைகளுக்கு வெகு சிறப்பாக நாமகரணம் செய்யலானார். மூத்த குமாரனுக்கு இராமன் என்றும், கைகேயினிடம் பிறந்தவனுக்குப் பரதன் என்றும், சுமித்திரையின் குழந்தைகளிவருக்கும் லக்ஷ்மணன் சத்துருக்கினன் என்றும் வசிஷ்ட முனிவர் வெகு அன்புடன் பெயரிட்டார்.

அப்புதல்வர்களுள் மூத்தவரான இராமர், த்வஜம் போல விளங்குபவராய் தமது தந்தையின் சந்தோஷத்தைப் பெருகச் செய்துகொண்டு பிரமதேவர்போல எல்லாருக்கும் வேண்டியவராயிருந்தார். அவர் வில்வித்தையிலும் தந்தை சொற்படி நடப்பதிலும் கீர்த்திபெற்றவர். எல்லா அழகும் நிரம்பப்பெற்ற லக்ஷ்மணர் இளமைமுதல் தமது தமையனாராகிய இராமரிடம் அதிக அன்பும், எப்பொழுதும் அவருக்குப் பணிசெய்யுங் கருத்தும் உள்ளவராய் அது விஷயமாய்த் தமக்கு உண்டாகும் சிரமத்தைச் சிறிதும் நினையாதவராயிருந்தார். இராமருடைய பிராணனே வெளியில் உருவெடுத்து வந்ததுபோல் லக்ஷ்மணர் விளங்கினார். இராமரில்லாமல் அவருக்கு நித்திரையும் வராது. லக்ஷ்மணருக்கு இளையவரான சத்துருக்கினரும் இவ்வாறே பரதரிடம் அதிக அன்பும் விசுவாசமும் வைத்து, தமது பிராணனுக்கு மேலாகப் பரதர் தம்மை எண்ணும்படி செய்து கொண்டார். திக்பாலகர்களான தேவர்களைப் பிரமதேவர் படைத்து அதனால் எவ்வண்ணம் ஆனந்தக் கடலில் முழுகினாரோ அவ்வண்ணம், இவ்வருமைப் புத்திரர்களைத் தாம் பெற்றதனால் தசரத மகாராஜாவும் வெகு சந்தோஷமடைந்தார்.

4. தாடகையின் வதை

இவ்விதமான புத்திரர்களைத் தாம் அடைந்த சந்தோஷத்தை முற்றும் அனுபவிக்க, அவர்களுக்கு தகுந்த பெண்களைப் பார்த்து விவாகம் பண்ணிவைக்க வேண்டுமென்று, தசரத மகாராஜர் தமது புரோகிதர்களோடும் பந்துக்களோடும் ஆலோசித்தனர். அவ்வாறு அவர் மந்திரிகள்சூழ ஆலோசித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் மிக்க தேஜசுள்ள விசுவாமித்திரமகாமுனிவர் வந்து சேர்ந்தார். அரசர் அம் முனிவரை வணங்கி வெகுமரியாதையுடனும், விசுவாசத்துடனும் வசிஷ்டர்மூலமாக அவருக்கு

அர்க்கியங்கொடுத்தார். அவ்வாறு விதிப்படி கொடுக்கப் பட்ட அர்க்கியத்தை முனிவர் பெற்றுக்கொண்டு இராஜா வைப்பார்த்து அவருடைய க்ஷேமலாபங்களைக் குறித்து விசாரித்தார். அதன்பின் அம்முனிவர் வசிஷ்டர் முதலான ரிஷிகளைப்பார்த்து அவர்களுடைய யோகக்ஷேமத்தை விசாரித்தார். அவருக்கு வேண்டிய உபசாரஞ்செய்து முடித்து அரசர் அவரைப்பார்த்து வெகு ஆனந்தத்துடன் வணக்கமாய் "முனிபுங்கவரே, இன்று நீர் இங்குவர நான்பெற்ற பாக்கியமானது அமிருதங் கிடைக்கப் பெற்றால் எவ்வண்ணமிருக்குமோ அவ்வண்ணமிருக் கின்றது; மழையில்லாமல்தவிக்கும் தேசத்தில் மிகுதி யாக மழை பெய்தால் எவ்வித சந்தோஷ முண்டாகுமோ அவ்வித சந்தோஷம் எனக்கு உண்டாயிருக்கின்றது புத்திரபாக்கியமில்லாதவனுக்கு தனக்குச் சரியான மனையிடம் புத்திரோற்பத்தியானால் அவனுள்ளம் எப்ப டிக் களிக்குமோ அப்படி என் மனம்ஆனந்தமடைகிறது; பெரிய உத்ஸவத்தால் எவ்விதமான சந்தோஷமுண்டா குமோ அவ்விதமான சந்தோஷத்தை நான் அடைகிறேன்; உமக்கு எந்தக் காரியம் எந்த விதமாய் முடியவேண் டுமோ, அந்தக்காரியத்தை அந்த விதமாகவோ நான் மகிழ்ச்சியோடு செய்து முடிக்கக் காத்திருக்கிறேன்" என்றார்.

இவ்வாறு அரசர் அன்புடன் எல்லாரும் ஆச்சரியப் படும்படி தம்மைப் பார்த்துச் சொன்னதை விசுவா மித்திரர் கேட்டு மகிழ்ந்து, பின்வருமாறு அரசரை நோக்கிச் சொல்லுகின்றார் :—"இராஜ சிங்கமே, உயர்ந்த குலத்தில் உதித்து வசிஷ்டரைக் குருவாக அடைந்து விளங்கும் உமக்கேயல்லது உலகத்தில் வேறு மன்னவர்க்கு இவ்வகை உபசார வார்த்தைகள் சொல்லத்தெரியுமோ? நல்ல பேறுபெரும்பொருட்டு நான் ஒரு யாகம் ஆரம்பித் திருக்கிறேன்; அதற்கு விகாதஞ்செய்ய, மாயாரூபங்

கொள்ள வல்ல மாரீசன், சுபாகு என்னும் இரண்டு ராக்ஷஸர்கள் தலைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வெகு பலபராக்கிரம முள்ளவர்கள். யாகமோ பெரும்பாலும் முடிவுபெறும்படியான நிலைமையிலிருக்கிறது. அவ்விருவரும் அதைக்கெடுக்க யாகபூமியில் கூடைகூடையாக மாம்சங்களையும், குடங்குடமாக இரத்தத்தையும் கொண்டுவந்து சொரிகிறார்கள். கோபங்கொண்டு அவர்களைச்சபிக்க எனக்கு புத்திவரவில்லை. இந்த விஷயத்தில் என்னைக்காக்க உமது மூத்த குமாரரான இராமரை உம்மைக்கேட்டு அழைத்துக் கொண்டுபோக வந்திருக்கிறேன். அவர் பக்கக் குடுமி வைத்துக்கொண்டிருக்கிற சிறு குழந்தை என்றாலும் ஒப்பற்ற சாமர்த்தியம் உடையவர். அவர் என்னால் பாதுகாக்கப்பட்டு என்னுடைய ஆச்சிரமம் சேர்ந்ததும், அந்த ராக்ஷஸர்களால் உண்டாகும் இடையூற்றைத் தமது திவ்விய தேஜோமகிமையால் நீக்குவார் என்பது திண்ணம். இராமரையல்லது வேறு யாரும் அவர்களை வதைசெய்ய முடியாது. மகாத்துமாவும் சத்திய பராக்கிரமருமான இராமரை உண்மையாய் அறிந்தவன் நான் ஒருவன்; வசிஷ்டரொருவர்; மற்றும் தவம் புரிந்தவர்களும் இராமரை உள்ளபடி கண்டறிந்திருக்கிறார்கள். அரசரே, இது விஷயமாய் வேண்டுமானால் நீர் வசிஷ்டர் முதலான பெரியவர்களுடைய அபிப்பிராயத்தையும் கேட்கலாம்'' என்றார்.

விசுவாமித்திரர் வாக்கியத்தைக் கேட்டு தசரதர் சிறிது நேரம் ஒன்றுந் தெரியாதவராயிருந்து, பின்பு மூர்ச்சை தெளிந்தவுடன் முனிவரைப் பார்த்து "முனிபுங்கவரே, செந்தாமரைக் கண்ணனை என் குழந்தை இராமனுக்கு இன்னும் பதினாறு பிராயங்கூட ஆகவில்லையே. அவனை ராக்ஷஸர்கள் முன் நின்று போர் புரிய வல்லன் என்று நான் எவ்வாறு நினைக்கக்கூடும்? நானே அக்ஷௌகிணிக் கணக்காயுள்ள சேனைக்குத் தலைவனாயிருக்கின்

றேன். அப்படி நிறைந்த சேனையோடு நானேநேராக வந்து அவ்வரக்கர்களுடன் போரிடுகிறேன். இராமனைப் பிரிந்து நான் ஒரு நிமிஷங்கூட என் பிராணனை வைத்திருக்கமாட்டேனே ; ஆதலால், ஒ முனி ரத்தினமே, என் குழந்தையை அழைத்துப் போகவேண்டாம். அவ்வரக்கர்கள் யாவர்? விஷயங்களெல்லாவற்றையும் விவரமாகச் சொல்லவேண்டும்" என்று தசரதர் கேட்டார்.

அதற்கு விசுவாமித்திர முனிவர் "புலஸ்தியர் வமிசத்தில் பிறந்த இராவணன் என்னும் பெயருடைய ஒரு ராக்ஷஸனிருக்கின்ருன். அவன் பிரமதேவரிடம் பல வரங்கள்பெற்று மூன்று உலகங்களையும் எப்பொழுதும் தைரியமாய் எதிர்த்து மிகவும் உபத்திரவம் செய்து கொண்டு வருகின்ருன். அவனுடைய ஏவுதலால் சுபாகு, மாரீசன் என்ற கொடிய பராக்கிரமமுள்ள இரண்டு ராக்ஷஸர்கள் எப்பொழுதும் யாகத்தைக் கெடுப்பதிலேயே நோக்கமுள்ளவர்களாக இருக்கின்ருர்கள்" என்ருர். அதைக் கேட்ட தசரதர் திகைத்து "ஐயோ, அந்த இராவணனுக்கு எதிரில் நின்று நான் போர் செய்ய வல்லனல்லேன். அவனுடனுவது, அவன் சைநியத்துடனுவது, போர் செய்ய என்னுல் முடியாது. மாமுனிவரே, என் குழந்தைகளையோ அல்லது என் சைநியங்களையோ அழைத்துக் கொண்டு சென்ருலும் என்ன செய்யமுடியும்? தேவர்களுக் கொப்பானவனும், போர் என்பதை இன்னு மறியாதவனுமான என் குழந்தையைக் கொடேன்" என்ருர்.

புத்திரவாஞ்சையால் தசரதர் இவ்விதமாய் வெகு மனோவியாகுலத்துடன் குழறிக்கொண்டு சொன்ன சொல்லை விசுவாமித்திரர் கேட்டு கோபாவேசங் கொண்டு வேந்தரைப் பார்த்து "நான் கேட்டதைத் தப்பாமல் கொடுப்பதாய் முதலில் சொல்லிவிட்டு இப்பொழுது இப்படித் தவறிச் சொல்லுகிறது உமக்குத் தருமமன்று. இது இரகுவம்சத்தரசர்கள் கொண்ட நோன்

புக்கே விரோதமான காரியம். இப்படிச் சொல்வது உமக்குத் தகுதியாகுமானால் நான் வந்தவழியே திரும்பிச்செல்லுகிறேன்." என்று கூறினர். அப்பொழுது தைரியசாலியான வசிஷ்டமாமுனிவர் தசரதரைநோக்கி "மகாராஜாவே, நீரோ இக்ஷ்வாகு வமிசத்தில் பிறந்து இரண்டாவது தருமதேவதை போல விளக்குகின்றீர்; மனோதைரியத்தையும், நல்ல நோன்பையும் கைப்பற்றியிருக்கும் நீர் உமது குலாசாரத்தை இப்பொழுது விட்டுவிடுவது நியாயமன்று. "இன்னபடி நடக்கிறேன்" என்று வாக்குக் கொடுத்தால் அதற்கேற்றபடி நடக்கவே வேண்டும். அப்படி நடவாத பக்ஷத்தில், செய்த தருமங்களெல்லாம் பலனில்லாதனவாம். ஆதலால் இராமனை அனுப்பும். அஸ்திரசாஸ்திர வித்தைகளில் இராமன் தேர்ந்தவனானாலும் இல்லை என்றாலும் விசுவாமித்திரருடைய பாதுகாப்பிலிருக்கிறவரையில் அவனை ஒருவராலும் ஒன்றுஞ் செய்யமுடியாது: அக்கினி சக்கரம் அமிருதத்தைக் காப்பதுபோல விசுவாமித்திரர் இராமனைக் காக்கும்பொழுது அரக்கர் அவனை என்ன செய்ய முடியும்? இராமன் அவருடன் புறப்பட்டுப் போவதில் கொஞ்சமேனும் உமக்கு அச்சம் வேண்டாம்" என்றார்.

இவ்வாறு வசிஷ்டர் சொல்லியதைக் கேட்டு தசரதர் இராம லக்ஷ்மணர்களை ஒருவிதமான கவலையுமில்லாமல் மனப்பூர்வமாய் விசுவாமித்திரரிடம் ஒப்பித்தார். முதலில் விசுவாமித்திரர் நடந்தார். அவருக்குப்பின் கையில் வில்லைப் பிடித்துக்கொண்டு இராமர் சென்றார். அவருக்குப் பின் விற்பிடித்த கையராய் லக்ஷ்மணர் போயினர்.

அரையோஜனை தூரம் வழி நடந்து அவர்கள் சரயு நதியின் தென்கரை சேர்ந்தார்கள். அப்பொழுது விசுவாமித்திரர் அன்புடன் இராமரை அழைத்துப் பின் வருமாறு சொல்லலானார்:—"குழந்தாய், சீக்கிரம் ஆசமனம் பண்ணு. கால விளம்பஞ் செய்யவேண்டாம். எல்லா

மந்திரங்களும் அடங்கிய பலை அதிபலை என்னும் இரண்டு வித்தைகளை நான் உனக்கு உபதேசிக்கிறேன். அவைகளை நீ பெற்றுக்கொள். உனக்கு அவைகளின் மகிமையால் களைப்புத்தோன்றாது; பிணி அணுகாது; உடம்பு வாடாது; நீ தூங்கினாலும் சோர்ந்திருந்தாலும் அரக்கர்களால் உனக்கு ஒருவித அபாயமும் உண்டாகாது; இவ்வுலகத்திலும் மற்றவுலகங்களிலும் உன் புஜபலத்துக்கு ஒப்பான வீரன் ஒருவனும் இருக்கமாட்டான்". 'இவ்வாறு விசுவாமித்திரர் சொல்லலும், இராமர் விதிப்படி ஆசமனம் பண்ணி வெகு ஆசாரத்துடனும் சந்தோஷத்துடனும் அம்முனிவரிடமிருந்து அந்த வித்தைகளை உபதேசம் பெற்றுக் கொண்டார்.

பொழுது விடிந்தவுடன் தானு ஆச்சிரமத்தை விட்டு விட்டு இராமலக்ஷ்மணர்களும், விசுவாமித்திர மகரிஷியும் தங்கள் தங்கள் நித்திய கருமங்களை முடித்துக் கொண்டு கங்கை நதிக் கரைக்குவந்து அதைக் கடந்து தென்கரை சேர்ந்து அப்பால் நடக்க ஆரம்பித்தார்கள். அவர்களெதிரில் வெகு விசாலமாயும் பயங்கரமாயும் ஜன ஸஞ்சாரமுமில்லாத ஓர் அரணியம் காணப்பட்டது. அதைப்பார்த்தவுடன் இராமர், முனிவரை நோக்கி "இவ் வனத்தின் பெயர் என்ன? எங்கே திரும்பினாலும் அரசும், புரசும், வில்வமும், தேக்கும், பாதிரியும், இலந்தையும், ஆகாயத்தை அளாவி நிற்கின்றனவே!" என்றார். உடனே விசுவாமித்திர முனிவர் இராமரை நோக்கி "கேள் குழந்தாய், இக்கொடியவனம் இன்னாருடையது என்பதைச் சொல்லுகிறேன். முற்காலத்தில் தேவர்களால் உண்டாக்கப்பட்ட வெகு சுபிக்ஷமான மலதம், கரூசம் என்ற இரண்டு நாடுகள் இவ்விடத்திலிருந்தன. பின்பு ஒரு காலத்தில் இவ்விடத்தில் ஒரு யக்ஷிணி பிறந்தாள். அவள் ஆயிரம் யானை பலமுள்ளவள். நினைத்த உருவங்கொள்ள அவளுக்கு வல்லமையுண்டு. அவள் பெயர் தாடகை.

அவள் சுந்தன் என்ற அரக்கனை மணந்தாள். பலத்தில் இந்திரனுக்கு ஒப்பான மாரீசன் என்னும் அரக்கன் அவ்விருவருடைய குமாரன். தாடகை இந்தப் பிரதேசத்தை நாடோறும் நாசஞ் செய்துகொண்டே யிருக்கின்றாள். அவளிப்பொழுது நமக்கு அரையோஜனை தூரத்தில் நமது வழியை மறைக்கப்போகிறாள். நாமும் அவளிருக்கும் காட்டு வழியாகத்தான் அவசியம் போகவேண்டும். அந்தத் தீய செய்கையுள்ள ராக்ஷசியை உன் புஜபலத்தால் நீதான் வதைக்கவேண்டும். நீ தாடகையைப் பெண்பால் என்று கருதி அவளை வதைப்பதில் அருவருப்பு வைக்கக் கூடாது. பெண்பாலைக் கொல்லுவது வீரர்களுக்கு அநீதி என்றாலும், நீ இராஜகுமாரனாகையால் நான்கு சாதியார்களுடைய க்ஷேமத்துக்காக இக்காரியத்தைச் செய்தே தீரவேண்டும். ஏதாவது ஒரு காரியஞ்செய்வதனால் ஜனங்களுக்கு நன்மை உண்டாகுமானால் அக்காரியம் கொஞ்சம் கெடுதலாயிருந்தாலும், சிறிது நியாயமும் தருமமும் இல்லாமலிருந்தாலும் அதை அரசன் அவசியம் செய்ய வேண்டும் என்பது முறை. உலகத்தைப் பாதுகாத்தலையே நோன்பாகக்கொண்ட அரசர்களுக்கு இதுதான் குலாசாரம்" என்றார்.

இவ்விதமாக விசுவாமித்திரர் தைரியமாய்ச் சொன்னதைக் கேட்டு இராமர் தமது இருகரங்களையுங் கூப்பிக் கொண்டு முனிவரைப் பார்த்து "எனது தந்தையார் இட்ட கட்டளையின்மேல் நான் வைத்திருக்கிற விசுவாசத்தாலும், கௌரவத்தாலும், இக்கட்டளை கௌசிகரிடும் கட்டளை என்பதாலும், நீங்கள் என்ன சொன்னாலும் விசாரியாமலே செய்யக் காத்திருக்கிறேன். அயோத்தியில் நாம் புறப்படும்பொழுது பல பெரியோர்கள் முன்னிலையில் என்னிடம் என் தந்தையாராகிய தசரத மகாராஜர் 'விசுவாமித்தர மாமுனிவர் என்ன சொல்லுகிறாரோ அது உன்னால் அவசியம் செய்

யப்படவேண்டும்' என்று கட்டளையிட்டிருக்கிறார். அது தள்ளத்தக்கதன்று. ஆகையால் நான் என் தந்தை சொற்படி தங்கள் கட்டளையை மேற்கொண்டு தாடகையை வதைக்கிறேன்'' என்றார்.

இப்படிச் சொல்லி முடித்து இராமர் தமது கையால், வில்லின் மத்தியை உறுதியாகப் பற்றி நன்றாக நாணேற்றி நாணைத் தெறித்தார். தாடகை அவ்வொலியைக் கேட்டு திகைத்து வெகு கோபங்கொண்டு சத்தமுண்டான திக்கை நோக்கி ஓடிவந்தாள். அவள் வெகு மாயைவல்லவளாகையால் உடனே வேண்டியபடி அநேக வித உருவங்கொண்டு ஆகாயத்தில் மறைந்து நின்று மாயையால் மயக்குபவள்போல பலவிதமாக இராச குமாரர்களோடு போர்செய்ய ஆரம்பித்து, கல்மழை பொழிந்துகொண்டு வெகு பயங்கரமாய்ப்போர் புரிந்தாள். மேலும், ராமரையும், லக்ஷ்மணரையும் ஒரே அறையில் அழிக்கக் கருதி இடியிடிப்பதுபோல் கர்ச்சித்துக் கொண்டு ஓடிவரும்பொழுது நேராக அவள் மார்பைக் குறித்து இராமர் ஒரு பாணம் விடுத்தார். அவளும் பூமியில்விழுந்து மாண்டாள்.

இராமர் செய்த பராக்கிரமமான காரியத்தைப் பார்த்து விசுவாமித்திரர் ஆனந்தமடைந்து இராமரை உச்சிமோந்து "அப்பா, என் இராமா, நாம் இன்றிரவு இங்கேயே வசிப்போம். நாளைக் காலையில் நமது ஆச்சிரமம் போவோம்'' என்றார். அப்பொழுது முதல் அவ் வனத்தில் உபத்திரவம் சிறிதுமில்லாமல் நீங்கிவிட்டபடியால் அது குபேரனுடைய சைத்திரரதமென்ற உத்தியானவனம்போல் அழகியதாய் விளங்கிற்று.

5. விசுவாமித்திரர் யாகம்.

அவ்விரவு கழிந்ததும் விசுவாமித்திரர் புன்னகையுடன் இராமரைப் பார்த்து வெகு இனிமையாகப் பின் வருமாறு சொல்லலுற்ருர் :—"பெருங் கீர்த்தி பெற்ற அரசகுமாரனே, நீ செய்த காரியங்களால் நான் சந்தோஷமடைந்திருக்கிறேன். உனக்கு எக்காலங்களிலேயும் க்ஷேமமுண்டாவதாக. என் மனதிலுண்டான சந்தோஷத்தினல் நான் உனக்கு அநேக அஸ்திரங்களை உபதேசஞ் செய்கிறேன். உனக்குச் சத்துருக்களாக அசுரர்கள், கந்தருவர்கள், உரகர்கள் இவர்களுடன் தேவர்கள் சேர்ந்து வந்து போரில் உன்னை எதிர்த்தாலும், நீ அவர்களையெல்லாம் அடக்கி வெற்றிகொள்வாய். புஜபராக்கிரமமமைந்த இராமா, இவ்வஸ்திரங்கள் யாவும் தங்களுக்கிஷ்டமான உருவங்கொள்ள வல்லமையுள்ளவை; வெகுபலமுள்ளவை. சடிதியில் நீ இவைகளை என்னிடமிருந்து பெற்றுக்கொள்" என்று சொல்லி விசுவாமித்திரர் விதிப் பிரகாரம் இராமருக்கு எல்லா அஸ்திரங்களையும் அன்போடு உபதேசித்துக் கொடுத்தார்.

அஸ்திரங்களை அவ்வாறு விசுவாமித்திரரிடமிருந்து அடைந்த பிறகு வெகு சந்தோஷமாய் தமது முகம் விளங்க இராமர் வழிநடக்கும் பொழுது ஒரு பர்வதப் பிரதேசத்துக்குச் சமீபத்தில் மேகம்போல் விளங்குகின்ற அழகான ஒரு சோலையைக் கண்டு "முனிவரே, இது யாருடைய வனம்? பார்க்கப் பார்க்க மனம் ஆனந்தமடைகிறது. இது ஓர் ஆச்சிரமமென்று நினைக்கிறேன். தங்கள் வனம் எங்கிருக்கிறது? நித்தியம் யாகஞ் செய்கிறவர்களைச் கெடுத்துக்கொண்டும், அநேக பாபஞ்செய்துகொண்டுமிருக்கிற அந்தச்சண்டாளர்கள் எங்கிருக்கிருர்கள்? எந்த வனம்போய் நான் அந்த ராக்ஷசர்களை வதைசெய்யவேண்டுமோ அந்த வனம் எது?" என்று வினவினர்.

இராமர் இவ்விதம் கேட்கவே, வெகு தேஜஸ்வியான விசுவாமித்திரர் அவரைப் பார்த்துப் பின்வருமாறு விஸ்தாரமாகச் சொல்லத் தொடங்கினர்:-"மகாதபஸ்வியான காசியபர் இங்கு தமது தவத்தின் சித்தியை அடைந்தபடியால் இதற்குச் சித்தாச்சிரமம் என்று பெயராயிற்று. விஷ்ணுபகவான் அதிதி வயிற்றில் வாமனுவதாரம் செய்து, எல்லாவிதமான சோர்வுகளையும் போக்கும் இந்த ஆச்சிரமத்தில் முதலில் வாசஞ்செய்தார். அந்த வாமனுவதாம் பண்ணின விஷ்ணுவினிடம் பக்தி வைத்து, நான் இப்பொழுது இங்கு வாசம் பண்ணிக் கொண்டிருக்கிறேன். இந்த ஆச்சிரமத்தைத் தான் ராக்ஷசர்கள் அடிக்கடி உபத்திரவம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இவ்விடத்தில் நீ அவ்வரக்கர்களைக் கொல்ல வேண்டும். நாம் இப்பொழுது ஒப்புயர்வற்ற இந்தச் சித்தாச்சிரமத்தில் பிரவேசிப்போம்" என்று சொல்லி அம்முனிவர் இராமலக்ஷமணர்களுடன் தமதுஆச்சிரமத்தினுள் வெகு சந்தோஷமாய்ப் புகுந்து விளங்கினர்.

அக்குமாரர்கள் ஒரு முகூர்த்த நேரம் அங்கு இருந்து தங்கள் களைப்பை நீக்கிக்கொண்டு அதன்மேல் எழுந்திருந்து அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு விசுவாமித்திர முனிவரைப்பார்த்து "இப்பொழுதே நீர் யாகம் செய்யத் தொடங்கலாம். இந்த இடத்தின் பெயர் சித்தாச்சிரமமன்றோ. அது உண்மையா யிருக்கும்படி உமது யாகம் சித்திபெறும். உமது சொல் உண்மையாக முடியும்" என்றார்கள். அவர்கள் சொன்னதைக்கேட்டு மிகுந்த சந்தோஷமடைந்து விசுவாமித்திரர் யாகஞ்செய்யத் தொடங்கினர். இராஜ குமாரரிருவரும் சுகமாய் அன்றிரவு தூங்கி காலையில் எழுந்து காலை ஜபதபங்களை நிறைவேற்றி, ஓமஞ்செய்துகொண்டிருந்த விசுவாமித்திரரிடம் வந்து வணங்கி நின்றார்கள்.

காலமும் இடமும் அறிந்து அவைகளுக்குத் தகுந்தபடி பேசுவதில் வல்லவர்களான அவ்வரச குமாரர்கள் அங்கிருந்த ரிஷிகளெல்லாரும் சொன்னபடி நித்திரையின்றி வெகு முயற்சியுடன் வில்லேந்தியவர்களாய் யாகம் நடக்கும் அந்த ஆச்சிரமத்தை ஆறு நாள் இரவும் பகலும் காத்துக் கொண்டிருந்தார்கள். ஆறும் நாள் வந்ததும் இராமர் லக்ஷ்மணரை நோக்கி "வெகு ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொண்டிரு" என்றார்.

அரக்கர்களுடன் போரிடத் துடித்துக் கொண்டு இராமர் அவ்வாறு சொல்ல, விசுவாமித்திரருடன் ரித்துவிக்குகளாகிய முனிவர்களும், யாக குண்டம் கொழுந்து விட்டெரிய, விதிப்படி மந்திர பூர்வமாக ஓமம் பண்ணினார்கள். அப்படி யாகம் நடக்கும்பொழுது ஆகாசத்தில் எல்லாருடைய உடம்பும் மயிர்க் கூச்செறிய ஒரு பெரிய அட்டகாசமுண்டாயிற்று. மாரீசன், சுபாகு என்ற அரக்கரிருவர் மற்ற அரக்கர்களுடன் கோர ரூபத்தோடு தோன்றி யாக பூமியில் இரத்தத்தை குடங் குடமாய்க் கொட்டினார்கள். வேதியில் இரத்தத்தைக் கண்டு வேகங் கொண்ட இராமர் மாரீசன் மார்பை நோக்கி அதிக பலமும் பிரகாசமுமுள்ள மானவாஸ்திரத்தை மிக்க கோபத்தோடு விடுத்தார். அது அவனை ஒரு நூறு யோசனை தூரத்துக்கப்பால் தூக்கிக் கொண்டு போய் சமுத்திரத்தில் தள்ளி விட்டது. திவ்வியமான ஆக்கிநேயாஸ்திரம் ஒன்றை தமது வில்லில் தொடுத்து அதனால் சுபாகுவை ஆச்சிரமத்துக்கு வெளியில் விழச் செய்தார். வாயவியாஸ்திரத்தைப் பிரயோகித்து மற்ற அரக்கர்களையும் கொன்றிட்டார். உபத்திரவம் ஒழிந்து யாகம் முடிந்ததும் விசுவாமித்திர மகாமுனிவர் இராமரைப் பார்த்து "நீர் செய்த உபகாரத்தால் என் யாகம் நன்றாய் நிறைவேறிற்று. நீர் பிதிரு வாக்கிய பரிபாலனம் நன்றாகச் செய்தீர். உம்முடைய மகத்தான பராக்கிரமத்தால் இந்த

இடம் உண்மையாய்ச் சித்தாச்சிரமம் என்ற பெயரை உறுதியாக்கிக் கொண்டது'' என்று சொல்லிக் கொண்டாடினார்.

ஏற்றுக் கொண்ட காரியத்தைச் செய்துமுடித்த இராம லக்ஷ்மணர்கள் அன்றிரவு வெகு சந்தோஷமாகக் கவலையற்று நித்திரை செய்தார்கள். பொழுது விடிந்ததும் அவர்கள் எழுந்திருந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு விசுவாமித்திரரும் மற்ற ரிஷிகளும் இருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அக்கினிபோல் மிக்க ஒளியோடு விளங்குகிற விசுவாமித்திர மாமுனிவரை வந்தனம்பண்ணி வெகு கம்பீரமாயும் மதுரமாயும் "நாங்களிருவரும், நீர் கட்டளையிடும் வேலையைச் செய்யக் காத்திருக்கிறோம். இன்னும் எங்களாலாக வேண்டியவை என்ன, கட்டளையிடலாம்'' என்றார்கள். இதைக் கேட்டு, விசுவாமித்திரர் அங்கிருந்த மற்றை மகாரிஷிகளுடனே இராம லக்ஷ்மணரைப் பார்த்து "மிதிலை நகரத்து மன்னவரான ஜநகமகாராஜர் வெகு பிரசித்தமான யாகமொன்று செய்ய யத்தனிக்கின்றார். நாங்கள் அவ்விடம் போகிறோம். நீங்களும் அங்கு எங்களுடன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். அங்கு வெகு ஆச்சரியமான ஒரு தனுசு இருக்கிறது. தேவர்கள், கந்தருவர்கள், அசுரர்கள், ராக்ஷசர்கள், மானிடர்கள் ஒருவராலும் நாணேற்ற முடியாமலிருக்கிறது. நீர் எங்களுடன் புறப்பட்டு வர வேண்டும். யாகத்துக்கு போனதுபோலவுமிருக்கும். ஆச்சரியகரமான தனுசையும் பார்க்கலாம்'' என்று சொன்னார். இப்படிச் சொல்லி முடித்து விசுவாமித்திரர் இராச குமாரர்களைத் தம்முடன் அழைத்துக்கொண்டு வன தேவதைகளிடம் விடை பெற்றுக் கொண்டு முனிவர் கூட்டத்தோடு புறப்பட்டார்.

வெகு தூரம் கடந்து மத்தியான காலம் நெருங்கும்பொழுது எல்லா ரிஷிகளாலும் வணங்கப்படும்

சிறந்த நதியாகிய கங்கையைக் கண்டார்கள். அந்தப் புண்ணிய தீர்த்தத்தில் அவர்கள் எல்லோரும் விதிப்படி நீராடித் தேவர்களையும் பிதிருக்களையும் தர்ப்பணங்களால் திருப்தி பண்ணி வைத்து, அக்கினி ஹோத்திரம் முதலிய கடன்களை முடித்து அதற்கு நிவேதனம் செய்யப்பட்ட அவிஸ்ஸை அமிருதத்துக்குச்சமானமாக எண்ணிப் புசித்து வெகு சந்தோஷமடைந்தவர்களாய் இரவை அவ்விடம் கழித்தார்கள். பொழுது விடிந்து விடவே ஸ்நானஞ் செய்து தமது காலைக் கடன்களைச் சரிவர முடித்த மாமுனியைப் பார்த்து இராமர் "இரவு நல்ல விஷயத்தில் இனிதாகக் கழிந்தது. தங்களிடமிருந்து அவசியம் கேட்க வேண்டியவை பலவற்றைக் கேட்டோம். தாங்கள் சொன்ன இந்த வரலாறு முழுவதையும் சிந்திக்கச் சிந்திக்க இரவு கணம்போலக் கழிந்துவிட்டது. இப்பொழுது சீக்கிரமாக இந்தப் புண்ணிய நதியாகிய கங்கையைத் தாண்டுவோம்" என்றார். அதைக் கேட்ட விசுவாமித்திரர் முனிக் கூட்டங்களோடும் இராம லக்ஷ்மணர்களோடும் அந்த நதியைச் சீக்கிரமாகத் தாண்டினார். வடகரை சேர்ந்ததும் தம்மைப் பார்க்க வந்த ரிஷிகளுக்கு மரியாதை செய்தனுப்பினார். பின்பு கங்கைக் கரையில் கொஞ்சம் சிரம பரிகாரஞ் செய்துக் கொண்டு இரவை அவ்விடத்தில் கழித்து மறுநாள் புறப்பட்டு வடகிழக்காக நடந்து மிதிலைக்குச் சமீபத்தில் ஜநக மகாராஜாவின் யாக சாலைக்கு இராமர் லக்ஷ்மணர் விசுவாமித்திரர் மூவரும் வந்து சேர்ந்தார்கள். ஜநகமகாராஜா விசுவாமித்திரர் தமது யாகத்துக்காக வந்த செய்தியைக் கேட்டவுடன் மிகுந்த ஆனந்தமடைந்து தமது புரோகிதரான சதாநந்தரை முன்னிட்டுக் கொண்டு ரித்துவிக்குகள் எல்லாரும் தொடர்ந்து வர அர்க்கியம் பாத்தியம் முதலான உபசாரங்களுடன் வெகு வணக்கமாய் முன் சென்று விசுவாமித்திரருக்கு உபசாரம் பண்ணினார். அம்

முனியும் அவர் செய்த உபசாரங்களைப் பெற்றுக்கொண்டு அவரை ஆசீர்வதித்து அதன் பிறகு அவர் யோக க்ஷேமத்தையும் யாகம் இடையூறில்லாமல் நடந்தேறி வருகிறதா என்பதையும் விசாரித்தார். பிறகு ஜநகர் விசுவாமித்திரரைப் பார்த்து "முனிவரே, இன்றுதான் என் யாகம் முடிவு பெற்றதென்று சொல்ல வேண்டும். தாங்களிங்கு வரும்படியான பாக்கியம் பெற்றேன். தாங்கள் எப்பொழுது என் யாக பூமியை நாடி வந்தீர்களோ அப்பொழுதே என் மனோரதங்கள் யாவும் நிறைவேறின. மிகுந்த அழகும், கம்பீரமும், இளமைப் பருவமும் உள்ளவர்களாயிருப்பினும் வில்லில் தேறின போர் வீரர்களாய்க் காணப்படுகின்ற குமாரர்கள் யார்?" என்றார். ஜநகர் இப்படி விசாரிக்க விசுவாமித்திரரும் தசரதராஜ குமாரர்களுடைய வைபவத்தையும் அவர்கள் சித்தாச்சிரமம் வந்ததும், அதன் காரணமும், அங்கு அரக்கர்களைக் கொன்றதும், அவர்கள் யாத்திரையும், மிதிலையிலிருக்கும் அதிசயமான வில்லைப் பார்க்க வந்ததுமாகியவற்றையும் ஒன்றும் விடாமல் எடுத்துக் கூறினார்.

6. விசுவாமித்திரர் வரலாறு

அவ்வாறு விசுவாமித்திரர் சொன்னதைக் கேட்டலும், கௌதமருடைய மூத்த குமாரரும் மகாதபசியும் வெகு காந்திபொருந்தியவருமான சதாநந்தர் என்ற ஜநக மகாராஜருடைய புரோகிதர் மிக்க ஆச்சரியமடைந்து இராமரும் லக்ஷ்மணரும் வெகு சுகமாக உட்கார்ந்திருக்கப் பார்த்து "இராமா, தங்கள் வரவு நல்வரவாகுக. ஏதோ எங்களுடைய புண்ணியத்தால் தாங்கள் எக்காலத்திலும் வெற்றி பொருந்திய விசுவாமித்திர ரிஷியை கூட அழைத்துக்கொண்டு இங்கு வந்திருக்கிறீர்கள். இந்தக் கௌசிகமகாமுனிவரது பலத்தையும் சரித்திரத்தையும் உள்ளபடி சொல்லுகிறேன்; கேளும்.

"கீர்த்திபெற்ற காதியின் குமாரர் தான் மகாகாந்தியுடன் கூடிய இவ்விசுவாமித்திரர். இவரும் பல்லாயிரமாண்டு இவ்வுலகத்தை அரசாண்டு வந்தார். ஒரு சமயத்தில் இவர் தமது சமுத்திரம்போன்ற சேனையை அழைத்துக்கொண்டு உலகத்தை வலஞ் செய்து வருவதற்காகப் புறப்பட்டார். அநேக ஆச்சிரமங்கள் முதலியவற்றைச் சுற்றிக்கொண்டு நல்ல மரங்களாலும், பூஞ்செடிகளாலும் கொடிகளாலும் நிறைந்த வசிஷ்ட மாமுனிவருடைய ஆசிரமத்தை அடைந்தார். கிழங்கையும், பழத்தையும், புசித்துக்கொண்டும், வாலகில்லியர்கள் வைகானசர்கள் என்ற அநேக ரிஷிகள் மனத்தை அடக்கிக் கோபத்தையொழித்து ஐம்பொறிகளை வென்று மந்திரங்களை ஓதிக்கொண்டும் ஓமங்களை நடத்திக்கொண்டுமிருக்கக் கண்டார்.

"விசுவாமித்திர மகாராஜர் இவ்விதமாய் விளங்கின ஆச்சிரமத்தைக்கண்டு மனங்களித்து அதனுட்சென்று வசிஷ்ட முனிவரை வெகு மரியாதையுடன் வணங்கினர். வசிஷ்டரும் "உமது வரவு நல்வரவாகுக" என்று அவரை உபசரித்து அவருக்கு ஆசனம் அளித்து அவரை உட்காரக் கேட்டுக்கொண்டார். அவரும் அப்படியே உட்கார்ந்ததும் கிரமப்படி வசிஷ்டர் அவருக்குக் கந்தமூல பலங்கள் கொண்டுவந்து கொடுத்து உபசாரம் செய்தனர். விசுவாமித்திரரும் அவரிடமிருந்து எல்லா மரியாதைகளையும் பெற்றுக்கொண்டு அவருடைய யோகக்ஷேமத்தைப்பற்றி விசாரித்தார்.

"இப்படிப் பேசிமுடிந்ததும் வசிஷ்டமாமுனி விசுவாமித்திரரைப் பார்த்துப் புன்னகையுடன் "மகாராஜாவே, நான் தங்களுக்கும் தங்களுடைய சைனியத்துக்கும் விருந்தளிக்க கருத்துக்கொண்டிருக்கிறேன். எங்களுக்கு எல்லாம் மன்னவரன்றே தாங்கள். அரசனுக்கு விருந்தளிப்பது எங்களுக்கு முக்கிய காரியமன்றோ" என்றார். அதன்மேல்,

விசுவாமித்திரரும் "அப்படியே ஆகட்டும். தங்கள் இஷ்டம் எப்படியோ அப்படியே நடத்துங்கள்" என்று அங்கீகரித்தனர். அரசர் இவ்வாறு ஒப்புக்கொண்டவுடன், தமது மந்திரபலத்தால் எல்லாவித சித்தியையும் பெற்ற வசிஷ்டர் வெகு சந்தோஷத்துடன் தம்மிடத்திலிருந்த புண்ணியத்தின் வடிவமாகவிளங்கும் காமதேனுவை வரவழைத்து அதனிடம் "எனது அருமையான காமதேனுவே, என் மனோபீஷ்டத்தைச் சீக்கிரம் நிறைவேற்றி வைப்பாயாக. நாளை இவ்வரசருக்கும் இவருடைய சேனை முழுவதுக்கும் விருந்தளிக்க எண்ணங்கொண்டிருக்கிறேன். அதை ஒரு குறைவுமின்றி நீ நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும். வெகு உயர்ந்த விருந்து இவர்களுக்கு அளிக்க வேண்டும். அறுசுவையுண்டியும் இவர்கள் ஒவ்வொருவருடைய இஷ்டப்பிரகாரம் கொடுத்து இவர்களைத் திருப்தி பண்ணி வைக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டனர்.

"இவ்வாறு வசிஷ்டரால் கேட்டுகொள்ளப்பட்ட காமதேனுவும் யாருக்கு எது இஷ்டமோ அந்தப்பிரகாரம் விருந்துக்கு வேண்டிய பண்டங்களைக் குவிக்க ஆரம்பித்தது. இவ்வண்ணம் வசிஷ்டர் அளித்த விருந்தினால் விசுவாமித்திரருடைய சேனை முழுவதும் வெகு திருப்தியை அடைந்தது. விசுவாமித்திர மன்னரும் அவரது மந்திரிகளும் வெகு திருப்தி அடைந்தார்கள்.

"அதன் பிறகு அவர் ஆனந்தமடைந்து வசிஷ்டரைப் பார்த்து "வேதியமணியே, நான் உமக்கு விருந்தளிப்பது போக நீர் எனக்களித்த விருந்தால் நான் வெகுதிருப்தி அடைந்துவிட்டேன். ஆனால் நான் கேட்டுக்கொள்ளுகிறது ஒன்றிருக்கிறது. நான் நூறுயிரம் மாடு உமக்குக் கொடுக்கிறேன். அவைகளை நீர் ஒப்புக்கொண்டு இந்தச் சபலை என்னும் காமதேனுவை எனக்குக் கொடுத்துவிடவேண்டும். சபலை என்பது பசுக்களுக்குள் இரத்தினம் என்று எண்ணப்படுகிறது. அரசன் இரத்தினங்களுக்கு

யஜமானன் என்றன்றோ சாஸ்திரம் கூறும்" என்றார். இவர் இப்படிச் சொல்லலும், வசிஷ்டர் "வேந்தே, நூறாயிரமல்ல, நூறுகோடிப் பசுக்கள், மிகப் பல வெள்ளிப் போர்கள் தாங்கள் கொடுத்தாலும் சபலையை நான் கொடுக்கப்போகிறதில்லை. இதுவே எனது எல்லா ஆஸ்தி, எனது பிராணன், எனது தர்சம் என்ற சடங்கு, எனது பூர்ணிமாஸச் சடங்கு, தக்ஷிணையுடன் கூடிய எனது யாகம். அதிகமாகப் பேசுவதில் பயனென்ன. வேண்டும் பொருள்களை யெல்லாம் உண்டாக்கும் இக் காமதேனுவை நான் கொடேன்" என்றார்.

"வசிஷ்டமாமுனி இவ்வாறு சபலையைக் கொடுக்க மாட்டேன் என்று சொல்லிவிடவே விசுவாமித்திர மன்னர் அதைப்பலாத்காரமாக இழுத்துக்கொண்டுபோக ஆரம்பித்தார். இவ்வண்ணம் இழுக்கப்பட்ட காமதேனு அரசருடைய வேலைக்காரர்களிடமிருந்து உதறிக்கொண்டு வசிஷ்டர் காலின்கீழ் வந்து கதறி வெகு துயரத்துடன் "வேதியரே, ஏனென்னை கைவிட்டு அரசருடைய ஆட்கள் இழுத்துக்கொண்டு போகும்படி செய்தீர்கள்" என்றது. இதை வசிஷ்டர் கேட்டு "அம்மா! நான் உன்னைக் கைவிட்டதாக ஒருநாளும் எண்ண வேண்டாம். நீ எனக்கு ஒருவிதமான குற்றமும் செய்யவில்லையே. அந்த அரசரோ தமது பலத்தின் செருக்கால் உன்னை இழுத்துக்கொண்டு போகிறார். என்னுடைய பலம் அரசருடைய பலத்துக்கு நிகராகுமா? அவரோ வேந்தர். வெகு பல பராக்கிரமம் பொருந்தியவர்" என்றார்.

"இதைக் கேட்டு, சபலை வெகு வணக்கத்தோடு வசிஷ்டரைப் பார்த்து "அரசர்கள் பலம் அந்தணர்களுடைய பலத்துக்கு ஒப்பானதாக ஒருவரும் சொன்னதில்லையே. வேதியர்களுடைய பலம் வெகு அதிகம் என்றன்றோ எல்லாரும் சொல்லுகிறார்கள். அரசர்களுடைய பலத்துக்கு மேலானதன்றோ பிராமண பலம்.

உங்கள் பலத்திற்கு ஒருநாளும் தம் சைனியத்துடன் விசுவாமித்திரர் நிகராகமாட்டார். நீங்கள் உங்களுடைய வேதிய மகிமையை என்னிடத்தில் ஏவி விட்டால் ஒரு நொடியில் நான் வேண்டிய படைகளை உண்டாக்கி இந்த மன்னவனுடைய செருக்கையும் பலத்தையும் குலைக்கிறேன்" என்றது. இதை வசிஷ்டர் கேட்டு "சரி, சத்துரு சேனையை வதைக்க நீ சேனையை உண்டுபண்ணு" என்று அநுமதிசெய்ய, சபலை என்ற காமதேனுவும் ஒரு நொடியில் அவ்விதச் சேனையை உற்பத்தி பண்ணலாயிற்று. அது ஒரு முக்காரம் போடவே அதிலிருந்து நூற்றுக்கணக்காக "பல்லவர்கள்" என்ற போர்வீரர்கள் உண்டாகி விசுவாமித்திரர் கண்முன்னே அவருடைய சேனைமுழுவதையும் நாசம் பண்ணினார்கள்.

"இவ்வண்ணம் தமது சைனியம் நாசமடைந்ததைப் பார்க்க விசுவாமித்திரருடைய செருக்கும் உத்ஸாகமும் குலைந்து போய்விட்டன. மகனொருவனை "நீ நமது இராச்சியத்தை அரசநீதி தவறாது ரக்ஷித்துவா" என்று கட்டளையிட்டுவிட்டுத் தாம் தவம்புரியக் காட்டுக்குச் சென்றார்.

"ஓராயிர வருஷகாலம் ஒருவருடனும் பேசாமல் வாய் திறவா நோன்பைக் கைக்கொண்டு அதிகோரமான நிஷ்டையிலிருந்தார். அதன் மேல் கட்டைபோல் அசைவற்று நிஷ்டையில் நின்றார். இப்படி இவரிருக்கும்போது வெகுவித இடையூறுகள் இவர் நிஷ்டையைக் கெடுக்கச் சம்பவித்தன. அவ்வளவிலும் இவர் கோபத்துக்கு இடமே கொடுக்கவில்லை. இப்படி ஓராயிரம் வருஷம் உணவின்றித் தவஞ் செய்து அதன் பிறகு ஒருநாள் சிறிது அன்னம் உண்ண வேண்டும் என்று கருத்து கொண்டார். அப்படியே அவர் புசிக்க உட்காரும்போது அவர் தவத்தை எவ்விதத்திலாவது கெடுக்க வேண்டும்

என்று எண்ணங்கொண்ட இந்திரன் ஒரு ஏழைவேதியனாக உருவங்கொண்டு அங்கு வந்து அவர் புசிக்கப் போகும் அன்னத்தைத் தனக்கு வேண்டுமென்றான். அதற்காக அவன் மேல் கோபங்கொண்டு தமதுதவத்தை இழந்து விடாமல் தமக்கு எவ்வளவு பசியிருந்த போதிலும் அதைப் பாராட்டாது தமது அன்னத்தைத் தாம் உண்ணாமலே அவனுக்குக் கொடுத்துவிட்டார், அவனைப் பார்த்து ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. மறுபடி மௌனியாய் ஆயிரம் வருஷகாலம் மூச்சுவிடாமல் தவம் புரிந்தார்.

"அப்போது பிரமதேவர் தேவர்களுடன் விசுவாமித்திரரிடம் சென்று அம்மகாத்துமாவைப் பார்த்து இனிய வார்த்தையால் "ஓ பிரமரிஷியே, நீர் செய்த தவத்தால் நாங்கள் எல்லாரும் திருப்தியடைந்தோம். உமது நிஷ்டையால் நீர் பிரமரிஷிப்பட்டம் பெற்றீர். நான் தேவகணங்களுமிசைய உமக்கு நீண்ட ஆயுள் அளிக்கிறேன். இதை நீர் இனிமையாக ஒப்புக்கொள்ளும். இனி நீர் உமது இஷ்டப்படி இருக்கலாம்" என்றார். இதைக்கேட்டு வெகுசந்தோஷமடைந்து விசுவாமித்திரர், தேவர்களையும் பிரமதேவரையும் வணங்கி "கருணாகரக் கடவுளே, எனக்குப் பிரமரிஷிப்பட்டமும் நீண்ட ஆயுளுமுண்டென்பது நிச்சயமானால் எனக்கு வேதங்களை ஓதிவைக்க யோக்கியதையும் வைதிக காரியங்களை நடத்திவைக்கத் தகுந்த பதவியும் தாங்கள் அளிக்கவேண்டும். க்ஷத்திரிய வேதங்களையும் பிராமண வேதங்களையும் அறிந்தவர்களில் முதல்வராய் விளங்கிக் கொண்டு பிரமரிஷியாயிருக்கும் பிரமபுத்திரரான வசிஷ்ட முனிவருங்கூட என்னைப் பிரமரிஷி யென்று ஒப்புக்கொள்ள வேண்டும்" என்றார். பிரமதேவரும் 'அப்படியே' என்று கூறித் தேவர்களும் தாமுமாக எவ்வளவோ நல்லவார்த்தை சொல்லி முனி சிரேஷ்டரான வசிஷ்டரை வரவழைத்தார்.

வசிஷ்ட ரிஷியும் விசுவாமித்திரரும் ஒருவர்க்கொருவர் அன்பர்களானார்கள். வசிஷ்டரும் "விசுவாமித்திரர் தமது கோரிக்கைப்படி பிரமரிஷியே" என்றார். விசுவாமித்திரரும் தமது பிரதிஜ்ஞையை நிறைவேற்றித் தமது விருப்பம் முடியப்பெற்று வசிஷ்டருக்கு நமஸ்காரஞ் செய்தார்; உலகத்தில் தவத்தை நிலைநிறுத்திக்கொண்டு சஞ்சரிக்கலானார்.

"ஓ இராஜகுமாரா, இவ்வண்ணம் பிரமரிஷிப்பட்டம் பெற்றவர் இம்மாமுனிவர்." இங்ஙனம் விசுவாமித்திரரைப் பற்றிச் சதாநந்தர் சொல்லி நிறுத்தினார். விசுவாமித்திர மாமுனியும் இராம லக்ஷ்மணருடன் தம்முடன் வந்த ரிஷிகளால் ஆராதிக்கப்பட்டுத் தமது விடுதியில் சௌக்கியமாக அன்றிரவு தங்கிருந்தார்.

7. இராமர் வில்லை முறித்தல்

பிறகு பொழுதுவிடிதலும் ஜநகமகாராஜர் தமது காலைக் கடன்களைச் சரியாக நிறைவேற்றி இராம லக்ஷ்மணர்களையும் விசுவாமித்திர மாமுனியையும் வரவழைத்து உபசரித்தார். அவ்விருவரையும் மாமுனிவருடன் விதிப்படி அரசர் அர்ச்சித்து விசுவாமித்திரரை நோக்கி "பகவானே என்ன வேலை யிடுகின்றீர்களோ அதைச் செய்யக் காத்திருக்கிறேன். என்னை ஏவுங்கள்" என்றார். இப்படி அரசர் சொல்லக் கேட்டலும் முனிவர் "தசரத குமாரர்களாகிய இவ்விருவரும் உலகத்தில் புகழ் பெற்ற க்ஷத்திரிய வீரர்கள். உங்களிடத்தி லிருக்கும் வில்லைப் பார்க்க விருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் இங்கிருந்து திரும்பிப் போகுமுன் அவர்களுடைய ஆசையை நிறைவேற்றி வைக்க வேண்டும்" என்றார்.

இதைக் கேட்டு ஜநக மன்னர் பின்வருமாறு மறுமொழி சொல்லலானார்:—"கேளுங்கள். தேவதேவருடைய

தனுசு தான் இப்பொழுது எங்கள் வம்சத்தில் ஒப்பித்து வைக்கப்பட்டிருக்கின்றது. அதன் பிறகு ஒரு சமயத்தில் நான் யாகம் பண்ணுமுன் என் யாகபூமியை ஒரு கலப்பையால் உழும்போது அந்த உழுத பூமியிலிருந்து ஒரு பெண் மணி உண்டானாள். அதனாலேயே அவளுக்கு சீதை என்று பெயர் வைத்தேன். அவளும் இவ்வண்ணம் ஆச்சரியமாகப் பிறந்து வெகு அழகாக வளர்ந்துகொண்டு வருகிறாள். அவளை மணம்புரிய விரும்பி அநேக வேந்தர்கள் என்னை வந்து கேட்டார்கள். நான் யாரொருவர் இந்த வில்லை வளைக்கிறாரோ அவருக்குத்தான் இந்தப் பெண்ணைக் கொடுப்பேன் என்று உறுதிசொல்லி இந்தத் தனுசைச் சீதையைக் கல்யாணம் பண்ணும் பணயமாக வைத்திருக்கிறேன். இதைக்கேட்டு இந்தச் தனுசின் பலத்தைச் சோதிக்க, பலபராக்கிரமம் பொருந்திய அநேக மன்னர்கள் மிதிலையைநாடி வந்தார்கள். நான் அவர்களுக்குத் தனுசைக் காட்டினேன். அவர்களால் அதை அசைக்கக்கூட முடியவில்லை. இந்த ஆச்சரியமான வில்லை நான் அவசியம் இராம லக்ஷ்மணர்களுக்குக் காட்டுகிறேன். இராமர் இந்தத் தனுசை வளைத்து நாணேற்றி விடுவாரானால், வெகு அதிசயமாகப் பிறந்து விளங்கிக் கொண்டிருக்கும் சீதையை அவருக்கு நான் கொடுப்பேன்" என்றார்.

பிறகு ஜநகர் தமது மந்திரிகளைப் பார்த்து "நல்ல கந்த புஷ்பங்களைக் கொண்டு அர்ச்சித்துப் பூஜையில் வைக்கப்பட்டிருக்கும் நமது தனுசை இங்கு வரவழையுங்கள்" என்று கட்டளை யிட்டார். தனுசு கொண்டு வரப்பட்டதும் விசுவாமித்திரர் இராமரை நோக்கி "குழந்தாய், வில்லைப் பார்" என்றார். மகரிஷியின் சொற்படி இராமரும் தனுசைப் பார்த்து "நானிதை என் கையால் தொடலாமா? இதை எடுத்து நாணேற்றிப் பார்க்கட்டுமா?" என்றார். அதைக் கேட்டு அரசரும் முனிவரும்

"அப்படியே செய்க; அதற்கு ஆக்ஷேபமுண்டோ" என்ருர்கள். முனிவர் கட்டளைப்படி, வெகு அலக்ஷயமாகத் தமது இடக் கையை வில்லின் மத்தியில் வைத்து அதை இராமர் வெளியில் எடுத்து நாணேற்றும்பொருட்டு இழுக்கும்பொழுது அந்த வில் மத்தியில் இரண்டு துண்டாக முறிந்தது. அப்பொழுது பேரிடி முழக்கம்போல் அதிலிருந்து ஒரு பெரிய சத்தம் எழும்பிற்று. மலை பிளந்தாற் போன்ற அந்த முழக்கத்தைக் கேட்டு பூமி கிடுகிடு என்று நடுங்கிற்று. அந்தச் சத்தத்தால் ஜனகர் விசுவாமித்திரர் இராமர் லக்ஷ்மணர் இவர்கள் நீங்கலாக மற்ற எல்லா ஜனங்களும் கலக்கமுற்றுத் திகைப்படைந்து மூர்ச்சித்துக் கீழே விழுந்தார்கள்.

எல்லாரும் மூர்ச்சை தெளிந்தெழுந்த பிறகு பயம் நீங்கிய ஜனகர் தமது கைகளைக் கூப்பிக்கொண்டு விசுவாமித்திரரைப் பார்த்து "பகவானே, தசரத மைந்தரான இராமருடைய பராக்கிரமத்தைக் கண்டறிந்தேன். வெகு ஆச்சரியமாகவும் ஒருவராலும் எண்ணக்கூடாததாகவும் இருக்கிறது. எனது குழந்தை சீதை இராமரை மணந்து என் குலத்தின் கீர்த்தியை விளங்க வைக்கப்போகிருள் என்பதில் ஆக்ஷேபமில்லை. இப்பொழுதே தங்களுடைய கட்டளையைப் பெற்றுக்கொண்டு எனது மந்திரிகள் இரதமேறி அயோத்திக்குப் போகவேண்டும். இராமர் வில்லை வளைத்ததையும், அதன் மூலமாகச் சீதையை விவாகஞ் செய்துகொள்ளும்படி நேர்ந்த செய்தியையும், தெரிவித்துத் தசரதரை உடனே அழைத்துவரவேண்டும்" என்ருர். அதற்கு விசுவாமித்திரரும் இசைய, ஜனகரும் தமது முக்கிய மந்திரிகளைக் கூப்பிட்டு அவர்களிடம் சமாசாரங்களைச் சொல்லி தசரதரை அழைத்து வரும்படி அனுப்பினுர்.

இவ்வாறு ஜனகமகாராஜாவால் கட்டளையிடப்பட்ட தூதர்கள், தாங்கள் ஏறிவந்த குதிரைகள் வாயில் நுரை

யைத் தள்ளித் தளர்ந்துபோக அதிவேகமாய் மூன்றுநாள் இரவும் பகலும் வழிகடந்து அயோத்திமாநகரம் சேர்ந்தார்கள். உடனே அரண்மனைக்குள் சென்று தசரதமன்னரைக்கண்டு அவர்கள் அஞ்சலி செய்துகொண்டு வெகு வணக்கத்துடன் மதுரமாக "மகாராஜாவே! மிதிலை நகரத்து அரசரான எங்கள் ஜநகர் எல்லாருடைய க்ஷேம சமாசாரத்தையும் விசாரித்து இந்த சந்தோஷ சமாசாரத்தை விசுவாமித்திரர் நியமனப்படி தங்களிடம் சொல்லி வரத் திட்டஞ்செய்தார். அது என்னவென்றால் "என் வில்லை எவன் வளைக்கின்றானோ அவனுக்கு என் பெண்ணை விவாகஞ்செய்து கொடுப்பேன் என்று நான் செய்துகொண்ட உறுதிப்பாடு தங்களுக்கு நன்றாகத் தெரியுமன்றோ. அதே வில்லை இப்பொழுது இங்குத் தாமாக வந்த தங்கள் குழந்தையான இராமர் வளைத்து நாணேற்றினார். அதனால் என் குழந்தையைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள யோக்கியதைபெற்றுவிட்டார். அந்தப் பலமான வில்லை அவர் ஒரு பெரிய சபை நடுவில் இரண்டாக முறித்தெறிந்தார். எனது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும் பொருட்டு இராமருக்கு என் குழந்தையை விவாகம்செய்ய வேண்டும். இவ்வாறு என் கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்ள தங்களுடைய அநுமதி கிடைக்க வேண்டும். ஒரு நொடியில் தாங்கள் தங்கள் உபாத்தியாயர்கள், மந்திரிகள், மனைவிமார், குடிகள் முதலிய எல்லோருடனும் வந்து குழந்தைகளுடைய கல்யாணத்தைப் பார்த்து களிக்க வேண்டும். இவ்விரு குழந்தைகளுடைய பல பராக்கிரமத்தையும் கண்டு கண்கள் குளிர வேண்டும் என்பதாம்" என்று தூதர்கள் சொல்லி முடித்தார்கள்.

இவ்வண்ணம் தூதர்கள் சொல்லியதைக் கேட்ட தசரதரும் பரமானந்தமடைந்து வசிஷ்டர் வாமதேவர் முதலிய ரிஷிகளையும் எல்லா மந்திரிகளையும் பார்த்து "இது உங்களுக்கெல்லாம் சம்மதமாக இருந்தால் கால

தாமதமின்றி சீக்கிரம் புறப்பட்டு நாம் அவருடைய நகரத்துக்குப் போவோம்" என்றார். மந்திரிகளும் அங்கிருந்த எல்லா ரிஷிகளும் "உடனே புறப்பட வேண்டும். ஏற்ற சம்பந்தம் வாய்த்தது" என்றார்கள். தசரதமன்னரும் வெகு சந்தோஷமடைந்து "நாளை நாம் சம்பந்தியின் ஊருக்குப் புறப்படுவோம்" என்றார்.

இரவு நீங்கிய பின் தசரத மன்னர் தம்முடைய புரோகிதர்கள் உறவினர்கள் முதலானவர்களுடன் சுமந்திரரைப் பார்த்து "இன்று முதலில் நமது கருவூலக்காரர்கள் யதேஷ்டமாய் இரத்தினங்களையும் பணங்களையும் எடுத்துக்கொண்டு நல்ல காவலாளர் சூழ்ந்துவர புறப்பட்டுப் போகட்டும். நமது சதுரங்க சேனையும் சீக்கிரம் நடக்கட்டும். நமக்கு முன்னம் நமது குருக்களாகின்ற வசிஷ்டர், வாமதேவர், ஜாபாலி, காசியபர், நீண்ட ஆயுளுள்ள மார்க்கண்டேயர், காத்யாயனர் முதலான பிராமணோத்தமர்கள் பிரயாணப்படட்டும். சீக்கிரம் எனது இரதம் சித்தமாகட்டும். காலம் தவறக்கூடாது. ஜனகருடைய தூதர்கள் துரிதப்படுகிறார்கள்" என்றார். இம்மாதிரி அரசர் கட்டளையிடவும் அவரது சைனியமும் அவருடைய குருக்கள் முதலான எல்லாரும் புறப்பட்டார்கள். அரசரும் தமது இரதத்தில் ஏறிப்பிரயாணமானார். நான்கு நாள் வழிச் சென்று இவர்கள் எல்லாரும் விதேக நகரம் சேர்ந்தார்கள்.

தசரத மன்னரை ஜனகமகாராஜர் எதிர்சென்றழைத்து மனம் பூரித்து தேனொழுகும் மொழியால் "மகாராஜரே, பிரயாணம் சிரமமில்லாமலிருந்ததா? எனது பெரும் பாக்கியத்தால் தாங்கள் இங்கு வரும்படி நான் பெற்றேன். தங்கள் பல பராக்கிரமம் பொருந்திய இரண்டு மைந்தர்களைக் கண்டு மனம் பூரியுங்கள். அவர்களுடைய வல்லமையின் பலந்தான் தாங்கள் இங்கு வந்ததற்குக் காரணம். வெகு காந்தி பொருந்தியவரும் முக்

காலங்களையும் அறிந்தவருமான வசிஷ்டமாமுனிவரை எனது புண்ணியத்தால் நானின்று பார்க்கும்படியான பாக்கியம் பெற்றேன். அவரை உத்தமர்களான அந்தணர்கள் சூழ்ந்து நிற்பது இந்திரனை தேவர்கள் சூழ்ந்து நிற்பதுபோல விளங்குகிறது. புருஷ சிங்கமே, எனது யாகம் விரைவில் முடிந்துவிடுகிறது. அது நிறைவு பெற்றவுடன் நாம் நமது குழந்தைகளுடைய கல்யாணங்களை முடிக்கலாம்" என்றார்.

இவ்வாறு எல்லா ரிஷிகள் மத்தியிலும் ஜநகர் சொன்ன வார்த்தையைத் தசரதர் கேட்டு தாமும் பேசுவதில் வெகு புத்திமானாகையால் "தானங் கொடுத்தால் வாங்கமாட்டோம் என்று ஒருவரும் சொன்னதாக நாம் இது வரையில் கேட்டதில்லை. நீங்கள் செய்யப் போகிற தானமோ கன்னிகாதானம். ஆகையால் தங்களுடைய சொல்லை ஒரு பொழுதும் தட்டாமல் நாம் நடத்தி வைப்போம்" என்று உத்தரமளித்தார்.

ஜநகரும் வெகு சந்தோஷமடைந்து அஞ்சலி பந்தம் பண்ணிக் கொண்டு "வில்லை ஒடித்த பராக்கிரமத்தால் விலைக்கு வாங்கப்பட்ட சீதையை இராமருக்கும், ஊர்மிளையை லக்ஷ்மணருக்கும் கொடுக்கிறேன்" என்றார்.

ஜநகர் இவ்வாறு சொல்லி முடித்ததும் மாமுனியான விசுவாமித்திரரும் வசிஷ்டருமாக அந்த வீரரைப் பார்த்து பின் வருமாறு சொல்லானார்கள். "புருஷ சிங்கமே, இக்ஷ்வாகு குலமும், நிமி குலமும் இவ்வுலகத்தில் மிகக் கீர்த்தி பெற்ற குலங்கள். இவ்வளவு பிரசித்தமான குலங்கள் வேறு கிடையா. இந்த வமிசங்களுக்கு ஒப்பாக வேறு ஒரு வமிசத்தையும் சொல்ல முடியாது. அன்றியும், இராம லக்ஷ்மணர்கள், சீதை ஊர்மிளை இவர்களுக்குத் தகுந்த நாயகர்கள். சம்பத்திலும், அழகிலும், குணத்திலும் ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு பெண்ணுக்குத் தகுதியானவர். இந்த சுபகாலத்திலேயே இன்னும் சில சுபங்கள்

சேர்ந்து நடக்கும்படி நாம் ஒரு விஷயம் தெரிவிக்கிறோம். வெகுதர்மிஷ்டராயும், தங்கள் தம்பியாயுமிருக்கிற இந்தக் குசத்துவச் மன்னவருக்கு அழகில் ஒப்பற்ற இரண்டு குமாரிகள் உளரன்றோ. அவ்விருகுழந்தைகளையும் தசரதர் குழந்தைகளாகிய பரதனுக்கும், சத்துருக்கினனுக்கும் இதே பந்தலில் கல்யாணம் செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம் என்றார்.

இவ்வாறு வசிஷ்ட முனிவருடைய அனுமதியுடன் விசுவாமித்திரர் சொன்ன வாக்கியத்தை ஜநக மகாராஜர் கேட்டு அவ்விரு மகாரிஷிகளையும் பார்த்து அஞ்சலி பந்தம் பண்ணிக்கொண்டு "இவ்வண்ணம் இரு முனி மாணிக்கங்கள் இந்தச் சம்பந்தத்தை கூட்டிவைக்க ஏற்பட்ட பொழுது எமது குலம் வெகு பாக்கியம் பெற்றதென்பதை நான் சொல்லவும் வேண்டுமோ! தாங்கள் சொல்லும் சொல்லை நாங்கள் தட்டினதுமுண்டோ? அதற்கென்ன ஆக்ஷேபம்" என்றார். இவ்வாறு ஜநகர் சொன்னதைக் கேட்டு தசரதர் வெகு ஆனந்தமடைந்து அவ்விரு சகோதரரையும் பார்த்து "உங்கள் இருவருடைய உத்தம குணங்கள் வருணித்து முடியாதவை. நீங்கள் வெகு பாக்கியசாலிகள்" என்றார்.

8. சீதா விவாகம்.

பொழுது விடிந்ததும் தசரதர் தமது நித்திய கடன்களை சாஸ்திரப் பிரகாரம் செய்து முடித்து தமது குல தெய்வங்களான முனிவர்களை முன்னிட்டுக் கொண்டு விவாகசாலைக்கு வந்து சேர்ந்தார். உடனே ஜநகரும் வசிஷ்டரைப் பார்த்து "முனி ரத்தினமே, மற்ற முனிவர்களுடன் இராமருடைய கல்யாண ஹோமாதிகளை ஆரம்பித்து நடத்துங்கள்" என்றார். வசிஷ்டரும் "அப்படியே" என்று சொல்லி விசுவாமித்திரர் சதாநந்தர் முதலிய ரிஷிகளுடன் அந்தக் கல்யாண மண்டபத்தில் உட்கார்ந்தார்.

அந்த மணப் பந்தலின் மத்தியிலே வெகு அழகாக ஒரு மேடையை சாஸ்திரப் பிரகாரம் அமைத்து அந்த வேதியை கந்த புஷ்பங்களாலும் இழைக் கோலங்களாலும் அந்த முனிவர்கள் அலங்கரித்தார்கள். வசிஷ்டர் விதிப் பிரகாரம் வேதியைச் சுற்றி தருப்பைப் புல்லைப் பரப்பினார்; அதன்மத்தியில் சாஸ்திரோக்தமாய் ஓமத்தை வளர்த்து கல்யாண மந்திரத்தை ஜபித்தனர்.

இச்சமயத்தில் ஜனகமன்னர் ஸர்வாபரண பூஷிதையாய் விளங்கும் தமது பெண்மணியான சீதையை அக்கினிக்கு முன்பாக இராமரெதிரில் கொண்டு வந்து நிற்கச் செய்து இராமரைப் பார்த்து மிகச் சந்தோஷமாக பின் வருமாறு சொல்லினர்:—"என் பெண்ணாகிற இந்தச் சீதையை உம்முடைய ஒவ்வொரு தருமங்களையும் கூட நின்று நிறைவேற்றி வைக்க நான் உமக்கு தானம் பண்ணுகிறேன். உமக்கு எப்பொழுதும் க்ஷேமமுண்டாகக் கடவது. இதோ அவளுடைய கையை உமது கையால் பற்றும். இவள் எப்பொழுதும் தனது புருஷன்தான் தனக்குக் கதி என்று கருதுங் குணமுள்ளவள். எப்பொழுதும் உமது நிழல்போல் உம்மை ஒருநாளும் விட்டுப் பிரியாத மனைவியாகக்கடவளென்று ஆசீர்வாதம் பண்ணுகிறேன்" என்று சொல்லி இராமர் கையில் மந்திரஞ் சொல்லி நீரை வார்த்து தம் பெண்ணாகிய சீதையைக் கன்னிகாதானம் பண்ணின அச்சமயத்தில் ரிஷிகளும் தேவர்களும் "வெகு சிலாக்கியமான விவாகம்; வெகு அழகான கல்யாணம்" என்று எங்கே பார்த்தாலும் புகழ்ந்தார்கள். ஆகாசத்தில் தேவதைகள் துந்துபி வாத்தியம் முழங்கினார்கள். புஷ்ப மாரியும் பொழிந்தது.

இவ்வண்ணம் கையில் மந்திரஜலத்தை விட்டு சீதையை ஜனகர் தானஞ்செய்து அந்த ஆனந்தத்தால் தேகமும் மனமும் பூரித்து லக்ஷ்மணரை நோக்கிச் சொல்லலுற்றார். "லக்ஷ்மணரே, இலக்கினம் தவறக்கூடாது.

சீக்கிரமாக வாரும். எனது குழந்தை ஊர்மிளையின் கையை உமது கையால் பற்றும்'' என்றார். அதன்பின், பரதரைப் பார்த்து "உமது கரத்தால் மாண்டவியின் கரத்தைப்பற்றும்'' என்று சொன்னார். அப்புறம், சத்துருக்கினரை ஜநகர் அழைத்து "சுருதகீர்த்தியின் கரத்தை உமது கரத்தால் பற்றும்'' என்றார். "நீங்கள் நால்வர்களும் வெகு தீரர்கள்; வெகு யோக்கியர்கள்; நற்குண நற்செய்கை பொருந்தியவர்கள்; இப்பொழுது உங்கள் நால்வர்களுக்கும் விவாகம் நடக்கவேண்டும்; காலதாமதம் ஆகலாகாது'' என்று சொன்னார். இவ்வண்ணம் ஜநகர், சொல்லவே, வசிஷ்டரும் 'நல்லவேளை தப்பிவிடும், சீக்கிரம்' என்று சொல்லிக்கொண்டு நிற்க, ராஜகுமாரர்கள் நால்வரும் அந் நான்கு ராஜ குமாரிகளையும் கையாற்பற்றி ஹோமாக்கினியையும் ஜநகரையும் வலம்வந்து அப்படியே ரிஷிகளையும் அந்தணர்களையும் சூழ்ந்துசென்று கல்யாணச் சடங்குகளை விதிப்படி ஒன்றும் விடாமல் செய்து முடித்தார்கள்.

பெரிய மலர்மாரி வெகு ஒளியுடன் ஆகாயத்தினின்று பொழிந்தது. பலவகை வாத்தியங்களும் முழங்கிக்கொண்டிருக்க அவ்வரச குமாரர்கள் தங்களுடைய மனைவிமார்களுடன் அக்கினியை மூன்று முறை வலம்வந்து தங்களுடைய மனைவிகளையும் அழைத்துக்கொண்டு தங்கள் விடுதிக்குச் சென்றார்கள்.

இரவு கழிந்தவுடன், விசுவாமித்திரமாமுனிவர் தசரதர் ஜனகர் இவ்வரசர்களிடம் விடைபெற்றுக்கொண்டு இமயகிரிக்குச் சென்றார். தசரதரும் மகாத்துமாக்களான தமது குமாரர்களாலும் வேதியர்களாலும் ரிஷிகளாலும் சூழப்பட்டவராய் தமது சேனையும் வேலைக்காரர்களும் உடன் செல்ல தாம் பிரயாணமானார்.

வெகு வேகமாக எல்லாரும் அயோத்தி வந்து சேர்ந்தார்கள். தம்மை எதிர்கொண்டழைக்க வந்த குடிகளுடனும் பிராமணர்களுடனும் தசரதமன்னர் தமது பரிவாரங்

களோடு தமது பட்டணத்தில் புகுந்தனர். அவர் செல்வக் குழந்தைகளும் அவருடன் தொடர்ந்து சென்றார்கள். அந்நகரில் இமய பருவதம்போல் விளங்கும் தம் அரண்மனையில் அவர் பிரவேசித்தார்; அங்கு எல்லாராலும் மரியாதை செய்யப்பட்டு வெகு சந்தோஷத்தை அடைந்தார். கௌசல்யை, சுமித்திரை, கைகேயி முதலிய இராஜ ஸ்திரீகளும் இன்னும் மற்றுமுள்ள பெண்பாலர்களும் தங்களுடைய நாட்டுப்பெண்களான சீதை, ஊர்மிளை, மாண்டவி, சுருதகீர்த்தி இவர்களை ஆலத்தி எடுத்து அரண்மனைக்குள் அழைத்து அணைத்துக்கொண்டு ஆனந்தித்தார்கள்.

இந்நான்கு அரசகுமாரர்களும் யுத்த வித்தையை முன்னரே அடைந்து, தங்களுக்குச் சரியான மனைவிமார்களையும் பெற்று, ஒருவிதக் குறைவுமின்றி சகல சம்பத்துடனும் சிநேகிதர்களோடு எப்பொழுதும் தங்களுடைய தகப்பனாரான தசரதருக்கு பணிவிடைகள் செய்துகொண்டு சௌக்கியமாக வாழ்ந்துவந்தார்கள். இப்படிச் சிலநாள் சென்றபிறகு தசரத மன்னரானவர் தமது மகன் பரதனைக் கூப்பிட்டு அவனைப்பார்த்து "குழந்தாய், உனது மாமனும் கேகய ராசாவின் குமாரருமான யுதாஜித் உன்னை அழைத்துப்போகக் கருதி இங்குவந்திருக்கிறார். நீயும் போய்வரலாம்" என்றார். இவ்வாறு தமது தந்தை விடைகொடுக்கவே, பரதன் சத்துருக்கினனோடு கேகய நாடு சென்றான்.

பரதன் சென்றபின்பு இராமர் லக்ஷ்மணனுடன் தெய்வத்துக் கொப்பான தங்களுடைய தந்தைதாய்களுக்கு பணிவிடை செய்துகொண்டு அவர்களுக்குச் சந்தோஷமுண்டாகும்படி நடந்துகொண்டும் வந்தார். அரசர் உத்தரவுப்படி எப்பொழுதும் குடிகளுக்கு ஒருவித க்ஷேமக் குறைவும் இல்லாமல் வெகு ஆதரவாயும் அன்பாயும் இராமர் இராச்சிய காரியங்களை நடத்தினார். இராமர் நடந்து

கொண்ட விஷயத்தைப்பார்த்து அவரது தகப்பனுர் மிக்க மனமகிழ்ச்சி யடைந்தார். அந்நகரத்திலிருந்த பிராமணர் கள் வைசியர்கள் மற்றக் குடிகள் எல்லாரும் திருப்தி யடைந்தார்கள்.

வீட்டில் இராமர் சீதையிடம் வெகு அன்பாயும் ஆதர வாயும் இருந்து வெகு சௌக்கியங்களை அனுபவித்தார். சீதாதேவியும் தனது பக்தியாலும் விசுவாசத்தாலும் ரூபத்தாலும் இராமருடைய சுகத்துக்கும் சந்தோஷத்துக் கும் முக்கிய காரணமாக இருந்தாள். அவள் எல்லாவித மான உத்தம குணங்களும் பொருந்தியவளாக இருந்தாள். இராமருக்குச் சீதையினிடம் உள்ள அன்பினும் இருமடங் காக சீதைக்கு இராமரிடம் அன்பு நிகழ்ந்தது.

அயோத்தியா காண்டம்

9. இராமருக்கு பட்டங்கட்டத் தசரதர் விரும்புதல்

பரதர் சத்துருக்கனனை அழைத்துக்கொண்டு கேகய தேசத்திற்குச் சென்ற பிறகு அவர்களைப்பற்றித் தசரதர் நினையாத நாளில்லை. ஏனெனில், அவர் தமது தேகத்தில் தோன்றிய நான்கு கைகள்போல் விளங்கிய தம் குழந்தைகள் நால்வரிடத்திலும் ஒரேவிதமான அன்பும் ஆதரவும் வைத்திருந்தார். ஆனால், இராமர் கொஞ்சம் அதிகமான அன்புக்கு இடமானார்; ஏனெனில், பிராணிகளுக்குள் பிரமதேவர் எவ்வாறு சகல உத்தமகுணங்களுக்கும் இருப்பிடமானவரோ அவ்வாறே இராமரும் இந்நால்வர்களுள்ளும் வெகு விசேஷ குணங்கள் பொருந்தியவராக இருந்தார்.

இராமர் தநுர்வேதத்தில் உத்தமமான புகழ்பெற்றவர்; அதிரத வீரர்களெல்லாராலும் தம்மைவிட மேன்மை பொருந்தியவராக ஒப்புக்கொள்ளப்படுவர்; சத்துரு வந்தபின் பார்த்துக்கொள்வோம் என்றிருப்பவரல்லர்; தாமாகவே தைரியமாக சத்துருவை நாடிச்சென்று போர் செய்யும் பெருமை தங்கியவர்; அவ்விதம் செல்லும்போதெல்லாம் தமது சேனைகளை அணிவகுத்து ஒருவித அபாயத்துக்கும் உள்ளாக்காமல் நடத்தி சத்துரு சமூகத்திற் புகுவதில் வெகு திறமையுடையவர்; யுத்தத்தில் கோபத்தைக் கொண்டவர்களான தேவர்கள் அசுரர்கள் இவர்களாலுங்கூட அணுகக்கூடாத பராக்கிரமம் பொருந்தியவர்; அசூயை யில்லாதவர்; கோபத்தை வென்றவர்; செருக்கு அற்றவர்; துவேஷபுத்தி யில்லாதவர்; ஒரு பிராணியையும் அவமானப் படுத்துபவரல்லர்; சமயத்துக்குத் தக்கபடி ஒருபொழுதும் அற்பராக நடக்கமாட்டார். இராமர் இவ்வாறு சிலாக்கியமான சகல குணங்களும் பொருந்தியவராய் விளங்கினார். அவர் பொறுமையிற்

பூமிதேவிக்குச் சமமாகவும், புத்தியில் பிருகஸ்பதி போலவும், வீரத்தில் இந்திரனுக்கு ஒப்பாகவும் பிரகாசித்து வந்தார். இம்மூவுலகத்திலும் உள்ள ஒவ்வொருவரும் அவரிடம் அன்புவைத்து வந்தார்கள். பகலில் பதினைந்து நாழிகையளவில் சூரியபகவான் தனது சகல கிரணங்களாலும் எவ்வாறு ஜ்வலிக்கிருன்ே அவ்வாறு முற்றிலும் சிலாக்கியமான குணங்களால் இராமர் விளங்கினுர். அவரைப்பார்த்து, "இவ்வளவு குணங்களும், பலபராக்கிரமமும், போரில் ஒருவராலும் வெல்லப்படாத தன்மையும், உலகத்தைக் காப்பாற்றும் வல்லமையும் பொருந்திய லோகபாலர்கள் போன்ற இவர் நமக்கு நாயகராக ஏன் ஆகக்கூடாது" என்று பூதலமடந்தை கருதியவண்ணம் இருந்தாள்.

தம்முடைய புதல்வன் இவ்வளவு அதிகமான ஒப்பற்ற நற்குணங்களோடு கூடியிருப்பதை தசரதமன்னர் அறிந்து, தமக்குள் தாமே "நாம் உயிருடனிருக்கும் பொழுதே நமது இராமன் ஏன் இராஜாவாகக் கூடாது; ஏன் நாம் இந்தப் பாக்கியத்தை நடத்தி நமது கண்ணுல் பார்க்கலாகாது. இவனை இந்த இராச்சியத்தில் பட்டாபிஷேகம் பண்ணிவைத்து அதன்பின் நான் சுவர்க்கலோகஞ் சேருவேன்" என்று நினைத்தார். உடனே அவர் தமது மந்திரிமார்களை சபையிற் சேர்த்து அங்கு எல்லாரும் வந்து உட்கார்ந்தவுடன், எல்லாருடைய க்ஷேமத்தையும் நிலை நிறுத்துகின்றதும், எல்லாருடைய மனத்தையுங் களிக்கச் செய்கின்றதுமான சமாசாரத்தை சபைமத்தியில் சொல்லத் தொடங்கினுர். "நானும் எனது முன்னேர்களுமான அரசர்கள் விசாலமான இந்த இராச்சியத்தை குழந்தையை ரக்ஷிப்பது போல் பரிபாலனம் பண்ணினது உங்களுக்கெல்லாந் தெரிந்த விஷயமே. நான் எனது சிரமத்தைக் கொஞ்சமேனும் லக்ஷ்யம் பண்ணுமல், என்னுற் கூடியமட்டும்

எனது முன்னோர்கள் ஏற்படுத்திய நெறியில் நின்றுக் கொண்டு எப்பொழுதும் குடிகளை ரக்ஷித்துவந்திருக்கின்றேன். வெண்குடைக் கீழிருந்து உலகத்தைக் காப்பதிலேயே என் ஆயுள் முழுவதையும் கழித்து இப்பொழுது நான் நரை (முதுமைப் பருவம்) அடைந்திருக்கிறேன். எனக்கு இப்பொழுது அநேகமாயிரம் பிராயங்களாயின. இனிமேல் கொஞ்சம் இளைப்பாற வேண்டுமென்ற எண்ணம் வந்திருக்கிறது. ஆகையால் இவ்வதிகாரத்தில் இராமனுக்கு இளவரசுப் பட்டஞ் சூட்டி நானும் கொஞ்ச காலம் கவலையற்றிருக்க எண்ணுகிறேன். எவ்வாறு இந்தக் காரியத்தை நிறைவேற்றி வைக்க வேண்டுமோ அவ்வாறு ஆலோசித்துச் சொல்ல வேண்டும்" என்றார்.

தருமத்தையும் அர்த்தத்தையும் நன்றாய் உணர்ந்த தசரத மன்னருடைய வார்த்தையைக்கேட்டு, அவருடைய அபிப்பிராயத்தை நன்றாயறிந்துகொண்ட அங்கிருந்த எல்லா வேதியர்களும், மன்னவர்களும், நாட்டார்களும், ஊரார்களும், எல்லாருஞ் சேர்ந்து ஆலோசித்துத் தங்களுக்குள்ளும் தனித்தனியாக ஆராய்ந்து எல்லாருமாக ஒரேவிதமான அபிப்பிராயம் அடைந்து முதியவரான தசரதரைப் பார்த்து, "அரசரே, அநேகமாயிர வருஷங்கள் இராச்சிய பரிபாலனம் பண்ணி தாங்கள் முதிர்ந்த வயதை அடைந்திருக்கிறீர்கள் என்பது நிச்சயம். ஆகையால் தாங்கள் இந்தக்ஷணமே இராமரை இளவரசராகப் பண்ணி அவருக்குப் பட்டாபிஷேகம் செய்துவைக்க வேண்டுமென்று நாங்கள் வெகு ஆவல் கொண்டிருக்கிறோம். வேந்தே, தங்களுடைய புத்திரருக்குச் சிறந்த கல்யாணகுணங்கள் பல இருக்கின்றன. இவரொருவரே உலகத்தில் சிறந்த சத்புருஷர்; சத்தியத்தையும் தருமத்தையும் முக்கியமாகக் கொண்டவர்; பொறுமையுடையவர்; யாவரையும் சமாதானப் படுத்துபவர்; இனிமையாகவே பேசுபவர்; நன்றியறிவுள்ளவர்; ஜிதேந்திரியர்;

மென்மையான தன்மையுடையவர்; மனவுறுதிபூண்டவர்; எப்பொழுதும் வணக்கமுள்ளவர்; பொறுமைக்கு இடங் கொடாதவர்; எல்லாப் பிராணிகளுக்கும் இனியவையும் உண்மையுமான வார்த்தைகளையே உரைப்பவர்; மிக்க கல்வி கேள்விகளையுடைய பிராயம் முதிர்ந்த பிராமணர் களை வழிபடுபவர்; நகரத்து ஜனங்களை எல்லாம் தமது ஜனங்களைப் போல் மிக்க அன்புடனே பலவாறு க்ஷேமம் விசாரித்து வருவார். ஜனங்கள் விசனப்படும்போது தாமும் விசனப்படுதலும், அவர்கள் சந்தோஷப்படும் போது தாமும் சந்தோஷப்படுதலும் ஆகிய இயல்புள்ள வர்; சௌரிய வீரிய பராக்கிரமங்களால் உலகத்தைக் களிக்கச் செய்கிறவர்: பிரஜைகளைப் பாதுகாக்கும் வகையை உள்ளபடி யறிந்தவர்; ஆசையை வென்றவர்; இப்படி எல்லாக் குணங்களும் நிறைந்து லோகபாலர்க்குச் சமானராயுள்ள இராமரை பூமி தானே தனக்குக் கொழுநராக விரும்புகிறாள். தங்கள் நாடு நகரங்களி லுள்ள மனுஷ்யர்களான நாங்களும் தெய்வங்களைப் பிரார்த்தித்துக்கொண்டுவருகிறோம். ஆகையால் அரசரே, தாங்கள் எல்லாருடைய அபிப்பிராயத்தையும் தங்க ளுடைய மூத்த குமாரருக்கு முடிசூட்டுவதால் நிறை வேற்றிவையுங்கள்" என்றார்கள்.

அச்சபையார்களெல்லாரும் அவ்வாறு சொல்ல தச ரதர் அவர்களுடைய க்ஷேமத்தை மேன்மேலும் கருதியவ ராய் அவர்களை நோக்கி "ஆச்சரியம்! நான் வெகு ஆனந் தத்தை யடைந்துவிட்டேன். எனது பாக்கியத்துக்கு ஒப் பான பாக்கியமும் உண்டோ? நீங்கள் எல்லாரும் எனது மூத்த குமாரனை இராமனை எப்பொழுது யுவராஜாவாக செய்ய சம்மதித்தீர்களோ அப்பொழுதே எனது விருப் பங்கள் எல்லாம் நிறைவேறின" என்று அன்போடு சொன்னார்.

இவ்வண்ணம் அங்கு வந்திருப்பவர்களிடம் மரியாதை யாகச் சொல்லிவிட்டு, அவ்விடத்திலிருந்த அந்தணர்க ளெல்லாருங் கேட்டுக்கொண்டிருக்க, வசிஷ்டர் வாம தேவர் என்ற இரண்டு குருக்களையும் பார்த்து அரசர், "இந்த மாதமோ ரமணியமான வெகு நல்ல சித்திரை மாதமாயிருக்கிறது; சோலைகள் புஷ்பங்களால் நிறைந் திருக்கின்றன. நீங்கள் வெகு சீக்கிரமாக இராமனுக்கு முடிசூட்டும் உத்ஸவத்துக்கு வேண்டிய எல்லாப் பொருள் களையும் உடனே சேர்த்திடலாம்" என்றார். பிறகு சுமந்திரரை நோக்கி "ஐயா, நமது ராமனை சீக்கிரம் அழைத்து வாரும்" என்றார். சுமந்திரரும் "அப்படியே" என்று சொல்லிச் சென்று அரசருடைய கட்டளையின் படி இராமரை அழைத்துக்கொண்டு வந்தார்.

தமது சமீபத்தில் வணக்கத்துடன் வந்து பேர் சொல்லி நமஸ்கரித்து அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு நிற்கும் தமது குமாரரை தசரதமன்னர் பார்த்து அவரது கைகளைத் தமது கைகளால் பற்றி எடுத்து அணைத்துக்கொண்டு ஆனந்த பரவசரானார். பிறகு புன் னகையுடன் அவரைப் பார்த்து காசியபமாமுனி தேவேந் திரனைப் பார்த்துச் சொல்லுவது போல, "எனது தகுதி யான மூத்த பட்டஸ்திரீ வயிற்றில் எனது மூத்த குமாரனைச் சகலவித உத்தம குணங்களோடும் தகுதி யாகப் பிறந்திருக்கும் நீ என்னுடைய கண்ணுக்குக் கண் என்பது சொல்லவும் வேண்டுமோ? ராம, நான் வெகு காலம் என் இஷ்டப்பிரகாரம் அநேகவித போகங்களை அனுபவித்து இப்பொழுது முதுமைப் பருவம் அடைந்து விட்டேன். தேவதைகள், ரிஷிகள், பிதிருக்கள், அந்த ணர்கள், ஆத்மா இவர்களுக்கெல்லாம் நான் நிறைவேற்ற வேண்டிய கடன்களை நிறைவேற்றிவிட்டேன். இன்றைத் தினம் நமது குடிகளெல்லோரும் உன்னை அரசனாக அடைய வேண்டுமென்பதில் தங்களுக்கிருக்கிற ஆவலைத்

தெரிவித்துவிட்டார்கள். ஆகையால் உன்னை இளவரசனுகப் பட்டாபிஷேகம் செய்யப்போகிறேன்" என்ருர்.

இராமரும் அப்படியே நடந்துகொள்ளச் சித்தராய் தந்தையை வணங்கி விடை பெற்றுத் தமது மாளிகைக்குச் சென்ருர். அங்ஙனம் தமது மாளிகைக்குச் சென்றவுடன் அவர் தமது தகப்பஞர் கட்டளையைத் தெரிவிப்பதற்கு தமது தாயாருடைய அந்தப்புரத்திற்கு ஏகிஞர். அவளை நோக்கி "அம்மா, எனது பிதா குடிகளை ரக்ஷிக்கவேண்டும் என்று எனக்குக் கட்டளை செய்திருக்கிருர். நாளை எனக்குப் பட்டாபிஷேகமாம்" என்ருர். இதை கௌசல்யை கேட்டவுடன் இதுதான் தானும் வெகு நாளாக மனத்தில் வைத்திருந்த வேண்டுகோளாகையால் ஆனந்தக்கடலில் முழுகி, கண்களில் ஆனந்த பாஷ்பம் ததும்ப, தமது மகனைப்பார்த்து, "குழந்தாய், நீ நீடூழிகாலம் வாழ்வாயாக; ஏதாவது இடையூறு இருப்பினும் அது நசித்துப்போகட்டும். நீ எப்பொழுதும் என் பந்துக்களையும் சுமித்திரையின் சுற்றத்தார்களையும் சந்தோஷப்படுத்திவைப்பாயாக" என்ருள்.

இவ்வண்ணம் தமது தாய் சொல்லி முடித்தவுடன், இராமர் தமது அருகில் கைகூப்பிக்கொண்டு வெகு வணக்கத்துடனுஞ் சந்தோஷத்துடனும் நிற்கும் தமது தம்பி லக்ஷ்மணரைப் பார்த்து புன்னகையுடன் "லக்ஷ்மணு, என்னுடன் நீயும் இந்தப் பூமியைப் பரிபாலனம் பண்ணுவாய். நீ யார்? எனது இரண்டாவது ஆத்மா. ஆகையால் இந்தப் பட்டமும் உன்னை அடைந்துவிட்டது." என்று சொல்லி, பின்பு தமது தாயாரை வணங்கி அவர்களிடம் விடைபெற்று, சீதைக்கு விடைகொடுப்பித்து அவளுடன் தமது மாளிகைக்குத் திரும்பிவந்தார்.

10. கைகேயிக்கு கூனி உபதேசம்

அந்நகரத்தவரனைவரும் பொழுதுவிடிந்தவுடன் பட்டாபிஷேகத்தின் பொருட்டு பட்டணத்தை அலங்கரிக்கத் தொடங்கினார்கள். நாற்சந்திகளிலும், வீடுகளிலும் ஜனங்கள் ஒருத்தருக் கொருத்தர் இராமருடைய பட்டாபிஷேகத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

கைகேயிக்கும் அவள் சுற்றத்தார்க்கும் வேலைக்காரியாயும், தாய் தகப்பன்மார் இன்னாரெனத் தெரியாதவளாயும், சிறுபிராயம் முதல் கைகேயியுடன் இருப்பவளாயுமிருக்கும் மந்தரையென்பவள் வெண்மதியையொத்த மாளிகையின் உபரிகையின்மேல் தற்செயலாக ஏறினாள். அயோத்திமாநகரத்திலுள்ள இராஜவீதிகளெல்லாம் நன்றாக ஜலந்தெளிக்கப்பட்டு புஷ்பங்களால் அலங்கரிக்கப்பெற்று விளங்குவதை அவள் அங்கிருந்தபடி கண்டாள்.' தெருக்களெல்லாம் பதாகைகளாலும் விலையுயர்ந்த கொடிகளாலும் விளங்கிக் கொண்டு நின்றன. எங்கே பார்த்தாலும் எல்லா ஜனங்களும் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

இவ்வாறு விளங்கும் அயோத்திமாநகரைப் பார்த்து மந்தரை வெகுவியப்படைந்தாள். அதன்மேல் அவள் தனது சமீபத்தில் வெண்பட்டு உடுத்திக்கொண்டும் தன்னைப்போல் வெகு ஆச்சரியத்துடன் கண்களை விழித்தபடியே பார்த்துக்கொண்டும் நின்ற மற்றொரு தாதியைப் பார்த்து, "இன்று ஜனங்கள் எல்லாரும் இவ்வளவு சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கக் காரணம்என்னவோ?" என்று கேட்டாள். அந்தத் தாதி இதைக்கேட்டு வெகு சந்தோஷத்துடன் இராமருக்கு நடக்கப்போகிற பட்டாபிஷேகத்தைப் பற்றி அக்கூனியிடம் "புஷ்ய நக்ஷத்திரத்தில் நமது அரசராகிய தசரதர் கோபத்தை வென்றிருக்கும் ராமருக்கு இளவரசுப் பட்டஞ் சூட்டப்போகின்றார்" என்றாள்.

இவ்வாறு அவள் சொன்னதை கேட்டுக் கொடிய எண்ணமுடைய கூனி, படுத்துக்கொண்டிருந்த கைகேயி யினது முன்பாக நின்று, அவளைப் பார்த்து "புத்தியற்ற வரே, எழுந்திரும்; உமக்கு வரப்போகிற அபாயம் இன்னதென்று தெரியாமல் ஏன் இப்படிப் படுத்திருக்கி றீர். உம்முடைய அதிருஷ்டம் 'கோடைக் காலத்து வெள்ளம்போல் நிலையில்லாதது. தீர்த்தற்கரிய பெரிய நாசம் உங்களுக்கு வந்துவிட்டது. தசரதர் தமது புதல் வாராகிய இராமருக்கு இளவரசுப் பட்டஞ் சூட்டப் போகின்றார். அம்மா, உங்களையும் உங்கள் குமாரரையும், உங்களை அடுத்திருக்கும் என்னையும் காப்பாற்றவேண்டும்" என்றாள். மந்தரை இவ் வாறு சொன்னதை கைகேயி கேட்டு அழகியதோர் ஆபரணத்தை அவளுக்குக் கொடுத்தாள். அதன் பின் னர், அம்மாதுசிரோமணி வெகுகளிப்புடன் மந்தரையைப் பார்த்து "மந்தரே, நீ இன்று சொன்ன சமாசாரம் கேட்க வெகு ஆனந்தமாக இருக்கிறது. எனக்கு இராமன் என்றும் பரதன் என்றும் வித்தியாசம் ஒருபொழுதுங் கிடையாது. ஆகையால், இராமனுக்குப் பட்டாபிஷே கம் ஆகப்போகிறது என்று வெகு சந்தோஷப்படுகிறேன்" என்றாள்.

மந்தரை, இவ்வாறு கைகேயி சொன்னதைக் கேட்டு, அதிக வெறுப்புக்கொண்டு, அவள் தனக்கு வெகுமதி யாகக் கொடுத்த அணியை வீசி எறிந்து, வெகு துக்கத்து டனும் கோபத்துடனும் அவளை நோக்கி, "நீங்கள் மடமையால் சமயமல்லாத சமயத்திற் சந்தோஷங் கொண்டிருக்கின்றீர்கள். உங்களை துக்கக் கடலின் நடு வில் இருப்பவர்களாக நீங்கள் அறிந்து கொள்ளவில்லை. கௌசல்யைக்குப் பாக்கியம் பிறந்துவிட்டது; நீங்கள் கைகளைக் கூப்பிக்கொண்டு அவள்முன்னர் அடிமைபோல் நிற்கப்போகின்றீர்கள். இப்பொழுது இராமர் பட்டத்

துக்கு வரப்போகின்றார். அவருக்குப்பின் அவர் மகன். இராமர் பட்டத்துக்கு வந்துவிட்டாரானால் உங்கள் புத்திரர் பட்டத்துக்கு வருவதிலிருந்து விலக்கப்பட்டவரா வார். இராமர் இராச்சியத்தைப் பெற்றுக்கொண்ட பிறகு பயமில்லாமல் தாம் அரசாளும் பொருட்டு பரதரை வேறு தேசத்துக்காவது அல்லது வேறு லோகத்துக்காவது நிச்சயமாக ஓட்டிவிடப்போகின்றார். ஆகையால் கேகயராஜன் வீட்டிலிருந்தபடியே உங்க ளுடைய குமாரராகிய பரதர் காட்டுக்கு ஓடிவிடுதல் நல்ல வழி; இதுதான் எனக்கு நல்லதாகத் தோன்றுகிறது; உங்களுக்கும் க்ஷேமம்" என்று வற்புறுத்திக் கூறினாள்.

இவ்வாறு மந்தரை சொல்லக் கேட்டவுடன் கைகேயி, தனக்கு வந்த கோபத்தால் முகம் துடிதுடிக்க வெகு உஷ்ணமாக பெருமூச்சுவிட்டு, மந்தரையைப் பார்த்து, "இன்றைத்தினமே இராமனை இவ்விடத்திலிருந்து சீக்கிர மாகக் காட்டுக்கு நான் அனுப்பிவிடுகிறேன். எனது புத்திரனை பரதனுக்குக்கே இளவரசுப்பட்டம் இதோ சூட்டி வைக்கிறேன். எவ்வித உபாயத்தால் இவ்விரண் டையும் எளிதிற் செய்து முடிக்கலாம்? இராமன் ஒரு பொழுதும் இராச்சியத்தை அடையக் கூடாது; பரதனே அடையவேண்டும். ஆலோசித்துப்பார்" என்றாள்.

இப்படிக் கைகேயி சொல்ல மந்தரையானவள், "முற் காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் ஒரு யுத்தம் நடந்தபோது அதில் தேவேந்திரனுக்கு சகாயம் பண்ண உங்களுடைய நாயகராகிய தசரதர் ராஜரிஷிகளுடன் உங்களையும் அழைத்துக்கொண்டு சென்றார். திமித்துவச னுடன் பெரும்போர் புரிந்தார். அதில் அவர் விரணப் பட்டு மூர்ச்சைஅடைந்திருக்கும்பொழுது அவரை நீங் கள் போர்க்களத்திலிருந்து எடுத்துப்போய் ரக்ஷித்தீர்கள். அவர், மூர்ச்சை தெளிந்ததும் கண்விழித்துப் பார்த்து, தம்மைக் காப்பாற்றினதற்காக சந்தோஷமடைந்து

உங்களுக்கு இரண்டு வரங்கள் வேண்டிக் கொள்ள விடை கொடுத்தார். இப்பொழுது நீங்கள் 'இராமர் பதினன்கு வருஷம் காட்டிற்குப்போய் வசிக்கவேண்டும்' என்றும் 'பரதருக்குப் பட்டாபிஷேகஞ் செய்து வைக்க வேண்டும்' என்றும் இரண்டு வரங்கள் கேளுங்கள். அரசர் உங்களுக்காக பிராணனையும் விட்டுவிடுவார். அங்ஙனமாக அவர் உங்களுடைய சொல்லையா தட்டப்போகின்றார்? இராமர் பதினன்கு வருஷகாலம் வனத்தில் வசித்து திரும்பி வருவதற்குமுன்பே, பரதர் சினேகிதர்களுடன் வேரூன்றியவராய் ஆட்சியை வகிப்பர்." என்றாள்.

கைகேயி, வெகு சந்தோஷமும் ஆச்சரியமுமடைந்து, மந்தரையைப் பார்த்து, "கூனி, நீ இவ்வளவு சாமர்த்தியமுள்ளவள் என்பது இதுவரையில் எனக்குத் தெரியாது. எனது காரியத்தில் நீ ஒருத்திதான் எப்பொழுதும் நன்மையையே தேடிக்கொண்டு இருக்கின்றாய். நீ சொல்லாவிடின் இவ்விஷயம் என்னல் அறியமுடியாது. இராமன் காட்டிற்குப் போக பரதன் பட்டமடைந்தவுடன், நான் ஆணிப்பொன்னூற் செய்தமாலையால் உன்னை சூட்டுகின்றேன். மிகநல்ல அணிகளையுஞ் செய்து கொடுக்கின்றேன்." என்றாள். இவ்வண்ணம் உற்சாகப்படுத்தப் பட்டவளாயும், சௌபாக்கியத்தாலுண்டான மதத்தாற் செருக்குக் கொண்டவளுமான கைகேயி மந்தரையுடன் தனது கோபகிருகத்தைச் சேர்ந்து வெறுந்தரையிற் படுத்துக்கொண்டு, மந்தரையைப்பார்த்து, "அடி கூனி, 'இராமனைக் காட்டிற்கு அனுப்பிப் பரதனுக்கு முடிசூட்டி வைத்தால் நான் பிழைப்பேன். இல்லாவிடின் நான் இங்கு எனது பிராணனை விட்டிடுவேன். இராமனுக்குப் பட்டாபிஷேகம் ஆய்விட்டதென்றால் என் பிராணனும் அப்பொழுதே முடியவேண்டியதுதான்' என்று நீ அரசனிடம் சொல்லுவாய்" என்றாள்.

11. கைகேயி வரங்களை வேண்டுதல்

தசரத மன்னர், ஸ்ரீராமர் பட்டாபிஷேகத்துக்கு வேண்டுவனவற்றை விரைவிற் சித்தஞ்செய்யும்படி கட்டளையிட்டு, கைகயியினுடைய மாளிகைக்குள் இராகுவை கொண்ட ஆகாயத்திற் சந்திரன் நுழைவது போல் முதலிற் புகுந்து அங்கு அவளைக் காணுமல் வருத்த மடைந்து, ‘கைகேயி எங்கே’ என்று வினவ, வாயில் காப்பவள் தனது கரங்களைக் கூப்பிக்கொண்டு அச்சத் தோடு “சுவாமி, தங்களுடைய தேவியார் ஏதோ ஒரு காரணத்தால் வெகு கோபங்கொண்டு கோபவறைக்குட் புகுந்திருக்கின்ருர்” என்ருள். அதைக்கேட்டு அரசர், வெகு துன்பமுற்று, தனது வழக்கத்துக்கு விரோதமாய் தரையின் மீது வெகு துக்கப் பட்டவளாகப் படுத்துக் கொண்டிருக்குங் கைகேயியைக் கண்டார்.

பிறகு கலங்கின உள்ளத்துடன் அவளைத் தமது கைகளால் தடவிக்கொடுத்து, அவளைப்பார்த்து, அவள் விசனப்படுங் காரணத்தை விசாரிக்கலாயினுர். “தேவி, நீ என் பேரில் யாது காரணத்தாற் கோபம் அடைந்திருக் கின்ருயோ, அது எனக்குத் தெரியவில்லை. உன்னை யாவர் நிந்தித்தார்கள்? அல்லது அவமானம் பண்ணினுர்கள்? சமர்த்தர்களாயும் மனமுவந்தவர்களாயுமிருக்கும் அநேக வைத்தியர்கள் என்னிடத்தில் இருக்கின்ருர்கள். உனக்கு ஏதாவது நோய் என்ருல் உடனே சொல்லு; நான் உன் இஷ்டப்படி நடப்பவன். நீ சொல்லுவதற்குப் பிரதி கூலமாய் ஒருநாளும் நடக்க நான் பொறேன். என் பிராணனைக் கொடுத்தாவது உனது வேண்டுகோளை நான் முடித்து வைக்கின்றேன். இதைப்பற்றி எனது புண்ணியத்தின்மேலும் சத்தியம் பண்ணுகின்றேன்” என்றனர்.

மோகவலையிற் சிக்கி இவ்வாறு தன்னை விசாரித்து நின்ற அந்த உலக பாலகரைப் பார்த்து கைகேயி

"சுவாமி, என் உள்ளத்தில் ஒரு எண்ணம் இருக்கின்றது. அதனை முடித்துக் கொடுக்க தங்களுக்குக் கருத்திருந்தால், தாங்கள் சத்தியம் பண்ணிக் கொடுங்கள்" என்று கேட்பதற்கே அச்சமுண்டாகும்படி கூறினாள். தசரதர், புன்னகைகொண்ட கைகேயின் தலையைத் தமது கைகளால் தூக்கி மடியில் வைத்துக்கொண்டு, புன்னகையுடன் அவளைப்பார்த்து, "கருவமடைந்தவளே, உன்னையன்றி மடந்தையரிற் சிறந்தவர் எனக்கு இவ்வுலகத்தில் ஒருவருமில்லை. 'புருஷசிங்கமாகிய அந்த இராமன் ஒருவனைத் தவிர மனிதரில் உயர்ந்தவரொருவருமில்லை' என்பது உனக்குத் தெரியாதா? பகைவரால் வெல்ல முடியாதவனும் முக்கியனும் மகாத்மாவாயும் உனக்கு உயிர்வாழ்வினுஞ் சிறந்தவனுமிருக்கும் இராமன் மேற் சத்தியம் பண்ணி உன் இஷ்டத்தை முடித்து வைக்கின்றேன். அதை நிறைவேற்றிவைப்பதாக நான் இதுவரையினுஞ் செய்திருக்கும் புண்ணியங்களையெல்லாங் கொண்டு சபதம் பண்ணுகின்றேன்" என்றார்.

இவ்வாறு தசரதர் சொன்ன சொல்லைக் கேட்டுக் களித்து, தனது காரியத்திலேயே கருத்துவைத்த கைகேயி சந்தோஷ மடைந்தவளாய், "முன்னொருகாலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் ஒரு யுத்தம் நடந்ததன்றோ! அது தங்கள் ஞாபகத்தில் இருக்கின்றதா? அந்தப்போரில் தங்களுடைய உயிர் ஒன்றைத்தவிரத் தங்களுடைய பலம் முழுவதையும் அசுரர்கள் வாங்கிவிட்டார்கள். அக்காலத்தில் இரவும் பகலும் கண்ணிமையாமல் நான் தங்களைப் பாதுகாத்தேன். அந்த உபகாரத்திற்கு ஈடாக நான் வேண்டும் இரண்டு வரங்களைக் கொடுக்கின்றேன் என்று தாங்கள் எனக்கு அப்பொழுது வாக்குத்தத்தம் பண்ணினீர்கள். இப்பொழுது அவைகளை நான் அடைய விரும்புகின்றேன். முதலாவது, இராமனுடைய பட்டாபிஷேகத்திற்காக எவ்வெப் பொருள்கள் சித்தப்பட்டிருக்கின்றனவோ,

அவைகளைக்கொண்டு பரதனுக்குப் பட்டாபிஷேகம் பண்ணிவைக்கவேண்டும். இரண்டாவது இராமன் பதினான்கு வருஷம் தண்டகாரணியத்தில் மரவுரி மான்றோல் உடுத்து சடை யணிந்துகொண்டு முனிவன்போல் வாழவேண்டும். இன்றைத்தினமே இராமன் காட்டிற்குப் போவதை நான் என்னுடைய கண்களாற் பார்க்க வேண்டும்.'' என்றாள்.

தசரதர், இவ்வண்ணம் வெகு கொடுமையாக கைகேயி சொன்னதைக் கேட்டு, ஒன்றும் சொல்லத் தோன்றாமல் சிந்தாசாகரத்தில் முழுகி முகூர்த்தகாலம் பரிதபித்தார். பின்னர் நல்லறிவை அடைந்து, வெகு துக்கப்பட்டவராகி கைகேயியைத் தமது கண்ணால் எரித்துவிட எண்ணங் கொண்டவர் போன்று ஒரு பார்வை பார்த்து, வெகு கோபத்துடன் அவளை நோக்கிச் சொல்லலாயினர் :—"கொடுந்தன்மை யுடையவளே, கூடா வொழுக்கமுடையவளே, இந்தக் குலத்தை நாசம் பண்ண வந்தவளே, மகாபாவி, உனக்கு இராமன் என்ன தீங்குசெய்தான்? அல்லது நான்தான் என்னசெய்தேன்? இராமன் உன்னை தனது பெற்ற தாயைப் போல் எண்ணி நடந்து வருகின்றனே! அவனையே கெடுக்கும் வண்ணம் நீ இவ்வாறு யத்தனிக்கின்றாயே! ஒருகால் கௌசல்யையை நீக்கிவிட்டாலும் விட்டுவிடுவேன்? அவ்வண்ணமே எனது சம்பத்தையும் சுமித்திரையையும் பிராணனையும் விடு என்றாலும் விட்டிடுவேன்; என்னிடத்தில் எப்பொழுதும் அன்பும் ஆதரவுங் காட்டிக் கொண்டு என்னையே அடைக்கலமாக அடைந்திருக்கும் இராமனை நான் உயிருடன் இருக்கும்போது எப்படி விடுவேன்? ஒருகால், சூரியனில்லாமல் உலகம் வாழும்; தண்ணீரில்லாமற் பயிர்கள்வளரும்; இராமன் இல்லாமல் எனது தேகத்தில் உயிர் ஒரு பொழுதும் தங்கமாட்டாது. ஆகையால் அடிபாவி, இந்தக் கெட்ட எண்ணத்தை

விட்டிடு. கடல் சூழ்ந்த இந்நிலவுலகத்தில் எவ்வளவு பொருள் கிடைக்கின்றதோ அஃதெல்லாவற்றையும் நான் உனக்கு இதோ கொடுக்கின்றேன்; இராமன் விஷயமான கோபத்தைவிட்டிடு. உன்னைக் குறித்து எனது கைகளைக் கூப்புகின்றேன். உன்னுடைய பாதங்களில் விழுகின்றேன். நீதான் இராமனுக்குப் புகலிடம். என்னைவீணைகப் பாவத்திற்கு உள்ளாக்காதே'' என்று பலவாறு வேண்டினார்.

இவ்வாறு துக்கத்தால் மிகவும் பரிதபித்துக்கொண்டும், கதறிக்கொண்டும், அறிவே இல்லாமற் புரண்டு கொண்டு மிருக்குந் தசரதரைப் பார்த்து கைகேயியானவள், அதிக கோபமடைந்தவளாய், ''அரசே, முதலில் ஒரு வரத்தைக் கொடுத்துவிட்டு அதன்பின் 'ஐயோ! கொடுத்துவிட்டேனே!' என்று நீர் மனம் வருந்தினால் இனி உம்மை 'உண்மையுள்ளவர்' என்று உலகத்தில் எங்ஙனம் சொல்லிக்கொள்ளுவீர்? தருமத்தை அறிந்த அரசரே, உம்மைப் போன்ற மகாராஜர்கள் உம்மைச் சூழ்ந்து நின்று இந்த விஷயத்தைப்பற்றி உம்மை விசாரிக்கத் தொடங்கினால் அவர்கள் முன்பாக நீர் எவ்வாறு விடை சொல்வீர்? நான் கேட்டுக்கொண்டது நியாயமோ, அநியாயமோ, நன்றாக இருக்கின்றதோ, இல்லையோ, நீர் சொன்ன சொல்லை மட்டும் தவறக்கூடாது. நீர் மாத்திரம் இராமனுக்கு பட்டங் கட்டிவைத்தால் உமது கண் முன்பாகவே விஷத்தைக் குடித்து உமது காலில் விழுந்து எனது உயிரை மாய்த்துவிடுவேன்'' என்று சொல்லி ஓய்ந்தாள்.

அரசர் அதிகமாகப் பேசுதற்கு சக்தியற்றவராய் மெதுவாகக் கைகேயியைப் பார்த்து, ''இப்பொழுது, பரதன் அரசாள வேண்டுமென்றும், இராமன் காட்டிற்குப் போகவேண்டு மென்றும் வரங்கேட்கும்படியாக உனக்கு என்ன பயம் வந்தது? உனது நாயகனுடைய

நன்மையையும், உலகத்தினது க்ஷேமத்தையும், பரதனுடைய நல்வாழ்வையும், நீ விரும்பியிருப்பாயாயின் இந்தக் கெட்ட எண்ணத்தை விட்டுவிடு. பரதன் இராமனை நீக்கித் தான் அரசனுவதற்கு ஒரு பொழுதும் விரும்பான்; ஏனெனில், பரதன், இராமனிலும் அதிக தரும சிந்தையுள்ளவன். உன்னுடைய கெட்ட எண்ணத்திற்கு நான் உடன்படமாட்டேன்.” என்று கூறி தசரதர் அவளுடைய காலின் கீழ் நோயாளி போல விழுந்தார்.

12. தசரதர் இராமரைக் காட்டிற்கு அனுப்ப சம்மதித்தல்

இக்ஷ்வாகு வம்சத்து மன்னரான தசரதர் இவ்வண்ணம் சோகத்தால் தவித்துக்கொண்டு மயக்கமடைந்து பூமியிற் புரண்டுகொண்டிருக்கும்பொழுது, அந்தப் பாவி கைகேயி பின்னரும் அவரை நோக்கி “பெரியவர்கள் சத்தியம் என்பதை உத்தமமான தருமம் என்று சொல்லுகின்றார்கள். சத்தியம் என்பது எல்லோராலும் அடையத்தக்க பரம்பொரு ளன்றோ! சத்தியத்தில்தான் தருமம் தங்கி நிற்கின்றது. சத்தியந்தான் ஒருநாளும் அழியாத வேதம். சத்தியத்தாலேதான் நற்பயன் கைகூடுவதும்; ஆகையால் உமக்குத் தருமவழியில் ஒழுக மனமிருந்தால் சத்தியத்திற்கு கட்டுண்டு நடக்கவேண்டும். நான் கேட்ட வரத்தை எனக்குக் கொடுத்து விட்டீர்; இனி அதை நிறைவேற்றிவைப்பீர். என்னுடைய ஏவுதலால் அந்தத் தருமத்தைச் சரியாய் நடத்துவதனிமித்தம் உமது புத்திரனை இராமனைக் காட்டிற்கு அனுப்பும்! அனுப்பும்!! அனுப்பும்!!! மூன்றுதரஞ் சொல்லிவிட்டேன். பெரியீர், நீர் சொன்னவண்ணம் இராமனை இன்று காட்டிற்கு அனுப்பாவிடில், உபேக்ஷித்த உமது காலின்கீழ் எனது உயிரை விடுகின்றேன்” என்றாள். அரசர், இங்ஙனம் கைகேயி சொல்லச் சொல்ல, கசையால் தூண்டப்பட்ட உயர்ந்த குதிரைபோல் வருந்தி, அவனை

நோக்கி, "தருமமாகிய கயிற்ருற் கட்டுண்டேன்; எனது அறிவும் போய்விட்டது. வெகுதருமசீலனையும் எனது அன்பிற்குப் பாத்திரனையுமிருக்கும் இராமனைப் பார்க்க விரும்புகின்றேன்" என்ருர்.

இங்கு இவ்வண்ணமிருக்க, இரவுங் கழிந்து சூரியனும் உதயமானவுடன் சுமந்திரர் வழக்கம்போல் அரசரை நாடிச்சென்று அவரிருப்பிடஞ்சேர்ந்து, அஞ்சலிபந்தஞ் செய்துகொண்டு "இரவோ கழிந்தது; இனி எழுந்திருந்து செய்யவேண்டிய காரியங்களைச் செய்யுங்கள்." என்று தோத்திரம் செய்தார். சுமந்திரர் இவ்விதமாகச் சொன்ன பொருள்பொருந்திய நயச்சொல்லைக் கேட்டவுடன், தசரதருடைய துக்கம்மீட்டும் புதிதாகப் பொங்கிற்று. அவர் சோகத்தால் ஒரு வார்த்தை சொல்லுவதற்கும் சக்தியே இல்லாமலிருந்தார். மன்னவர் அவ்வாறிருக்கையில், ஆலோசனையில் சமர்த்தையான கைகேயி சுமந்திரரைப்பார்த்து "சுமந்திரரே, நீர் சென்று புகழ்பெற்ற அந்த இராமனை இங்கு அழைத்துவாரும். உமக்கு மங்களம் உண்டாகுக; ஒன்றும் ஆலோசிக்க வேண்டாம்" என்ருள்.

சிறிது நேரம் கழித்து மன்னவரும் இவ்வாறு சொன்னவுடனே, சுமந்திரர் தலையால் வணங்கி, பெரிய நன்மை வந்துவிட்டதென்று நினைத்தவராகி அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, ஜனங்கள் நிறைந்து நிற்கும் அந்தப்புரத்து வாயிலைக் கடந்து நல்ல விரிப்புப் பரப்பப்பட்டிருந்த பொற்கட்டிலில் இராமர் நல்ல ஆடையாபரணங்கள் அணிந்துகொண்டு, குபேரன்போல் வீற்றிருக்கக் கண்டார். இராமர் சித்திராதேவியுடன் கூடியிருக்குஞ் சந்திரன்போல் விளங்கினுர். வணக்கத்தையுடைய சுமந்திரர், இராமரைக் கண்டு வணங்கி அஞ்சலிபந்தஞ் செய்துகொண்டு இராமரைப் பார்த்து க்ஷேமத்தை வினவி, "ராம, கௌசலை உம்மைப் பெற்றதால் வெகு பாக்கியசாலி. உம்மை உம்முடைய தகப்பனுர் கைகேயியுடன்

பார்க்க விரும்புகின்றார். விரைவாக அவ்விடம் வரவேண்டும்" என்றார். இதைக் கேட்டவுடன், புருஷசிரேஷ்டராயும் மிக்க காந்தியை யுடையவராயு மிருக்கும் இராமர், சுமந்திரரைக் கொண்டாடி, தமது தந்தையாரின் கட்டளைப்படி நடப்பதற்கு விரைந்து, தமது மனைவியைப் பார்த்து, "சீதே, சந்தேகமில்லை; என்னுடைய பிதாவும் மாதாவும் எனது பட்டாபிஷேக விஷயமாக ஏதோ ஆலோசனை செய்துகொண்டிருக்கின்றார்கள். கண்ணழகுடையவளே, எனக்கு நன்மை செய்ய விரும்பினவராயும், மிகச் சமர்த்தையாயும், நான் பொருளைப் பெறுவதில் விருப்பை யுடையவராயும், எனது மாதாவாயுமிருக்கும் கைகேயி, தமது கணவருடைய அபிப்பிராயத்தை நன்றாக அறிந்து கொண்டு சந்தோஷமடைந்து, எனது அபிஷேகத்தை சீக்கிரமாக நடத்திவைக்க அரசரைத் தூண்டிக்கொண்டிருக்கின்றார்." என்றார்.

பின்பு சீதைக்கு செல்ல விடைகொடுத்து விட்டு சுமந்திரருடன் அம்மாளிகையை விட்டுப் புறப்பட்டார். லக்ஷ்மணர் இரதத்தின் பின் புறத்தில் ஏறிக் கையில் வெண்குடை சாமரம் இவைகளைப் பிடித்துக்கொண்டு தமது தமையனாரை வெயில் முதலியவற்றினின்று காப்பாற்றினார். இராமர் ஆங்காங்கு தம்மைக்குறித்து நண்பர்கள் கூறுகின்ற ஆசிகளைப் பெற்றுக்கொண்டு சென்றார். பின்பு தந்தையா ரிருக்கும் அந்தப்புரத்திற்குள் போனார்.

விலையுயர்ந்த ஒரு ஆசனத்தில் கைகேயியுடன் இருந்த தமது தந்தையாரது முகம் வெகு பரிதாபகரமான நிலைமையில் இருப்பதை இராமர் கண்டார். அவர் தமது தந்தையாரது சரணாரவிந்தங்களில் வெகு வணக்கத்துடன் முதலில் நமஸ்காரம் பண்ணி அதன் பிறகு கைகேயியின் பாதங்களில் வந்தனஞ்செய்தார். இவரைக் கண்டவுடன் எளிய தசரதர், "ஏ ராம!" என்று சொல்லி, நீர் நிரம்பிய

கண்களையுடையவராய் இவரைப் பார்த்தற்கும் பேசுதற்கும் வல்லவராகவில்லை. ஒரு நாளிலும் அவ்வாறு இராத தமது தந்தையார் அன்று அவ்வாறு இருந்ததையும், மனத்தில் பயத்தை உண்டாக்கும் அவருடைய உருவத்தையுங் கண்டு இராமர் காலினால் ஒரு சர்ப்பத்தை மிதித்தவர்போல் நடுங்கிவிட்டார். பின்பு கைகேயியைப்பார்த்து, "அறியாமையாலேனும் நான் எனது தந்தைக்குக் குற்றம் பண்ணினதில்லையே! ஏன் என் தந்தை கோபித்துக் கொண்டிருக்கிறார்? அதைச் சொல்லும். அவரை சமாதானப்படுத்தும். என் தந்தையாரின் மனத்திற்கு மகிழ்ச்சியை உண்டாக்காமலும், அவருடைய சொற்படி நடவாமலும், அவர் என்மேற் கோபிக்கவும் நான் ஒரு இமைப்பொழுதும் பிழைத்திருக்கமாட்டேன் என்றார். மகாத்துமாவாகிய இராமர் இவ்வண்ணங் கேட்க, கைகேயி சற்றேனும் வெட்கமில்லாமல் தனக்கு நன்மையைத் தரும் மொழியை கம்பீரமாகச் சொல்லத் தொடங்கினாள். "ராம, அரசருக்கு ஒருவித கோபமும் இல்லை. அவருக்குத் துக்கமும் இல்லை. ஆனால் அவருடைய மனத்தில் ஒன்றிருக்கின்றது. அதை உனக்குப் பயந்து வெளியிடாதிருக்கின்றார். அரசர் உன்னைப் பார்த்துச் சொல்லப்போகின்றது, உனக்கு நன்மையைத் தருவதோ தீமையைத் தருவதோ, எப்படியிருந்தாலும், அவர் சொல்லை வீணாக்காமல் அவசியம் செய்வேனென்று நீ ஒப்புக்கொள்ளுவாயாகில், நானே அதைச் சொல்லுகின்றேன்" என்றாள். இவ்வாறு இவள் சொன்னதைக் கேட்டு, இராமர், மிகவும் மனம் நொந்து, தமது தந்தையாருடைய எதிரில் அவளைப் பார்த்து, "சீ! சீ!! என்னைப் பார்த்து இவ்வாறு நீர் சொல்லக் கூடாது. என்னை 'நெருப்பில் குதி' என்றாலும் உடனே குதிப்பேன். 'விஷத்தைக் குடி' என்றாலும் குடிப்பேன். 'சமுத்திரத்தில் முழுகு' என்றாலும் முழுகிவிடுவேன். ஆகையால், அம்மா, தந்தையாருடைய கருத்தைச்

சொல்லும்; அவசியம் நான் செய்துமுடிக்கிறேன். பிரதிஜ்ஞை செய்கின்றேன். இதுவரையிலும் இராமன் இருவகையாகச் சொன்னதேயில்லை'' என்றார். நேர்மையுடையவரும் சத்தியத்தைக் கூறுகின்றவருமான இராமரைப் பார்த்து, மகாபாவியாகிய கைகேயி, தனது எண்ணத்தை வெளியிடுபவளாய், ''முன்னொரு காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் உண்டான சண்டையில் பாணத்தாற் புண்பட்ட உனது தந்தையாரை நான் காப்பாற்றினபடியால், அவர் எனக்கு இரண்டு வரங்கொடுத்தார். அவைகளில் ஒன்றால் 'பரதனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்துவைக்கவேண்டும்' என்றும் இரண்டாவதால் 'இன்றைத்தினமே இராமன் தண்டகாரணியத்திற்கு போக வேண்டும்' என்றும் கேட்டுக்கொண்டேன். நீ உன்னையும் உனது தந்தையையும் உண்மையில் நடப்பவர்களாக செய்யவேண்டுமென்று எண்ணினையாகில் பதினான்கு வருஷகாலம் நீ தண்டகாரண்யத்தில் வாழ்ந்து வரக்கடவாய். உனது தந்தையாரின் சொற்படி நடந்து, அவரையும் சத்தியத்தின் கரையை அடைந்தவராகச் செய்துவைப்பாயாக'' என்றனள்.

இவ்விதமாக மரணத்துக்கொப்பான கடுஞ் சொற்களை கைகேயி சொல்லக் கேட்டு, பகைவெல்லும் வலிபடைத்த இராமர், சற்றும் வருத்தமடையாது அவளைப் பார்த்து, இது ஒன்றுதான் என் மனத்தை மிகவும் வருத்துகின்றது; என்னிடத்தில் நேராக என் தந்தையார் 'பரதனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்துவைக்கவேண்டும்' என்று ஏன் சொல்லக்கூடாது? நானே சீதையையும் இராச்சியத்தையும் உயிரையும் பொருளையும் ஒருவருடைய ஏவலுமில்லாமல் மனமுவந்து எனது சகோதரர்களுக்குக் கொடுத்துவிடுவேன். உமது வாக்கைக் காக்கும்படி உம்முடைய வேண்டுகோளை நிறைவேற்றிவைக்கும்பொருட்டு அரசர் என்னை ஏவினால் பரதனுக்கு நான் கொடுப்பதைப்

பற்றிக் கேட்கவேண்டுமோ? ஆகையால் நீர் இனி அரசரைத் தேற்றிவைப்பீராக. எதற்காக அவர் தலை குனிந்து தரையில் தாரையாகக் கண்ணீர் வடிக்கவேண்டும்? இக்கணமே நான் இங்கிருந்து தண்டகாரணியத்தில் எனது தந்தையார் ஆஜ்ஞைப்படி பதினான்கு வருஷகாலம் வசிக்கச் செல்கின்றேன்" என்றார்.

இவ்வாறு இராமர் சொன்னதைக் கேட்டுத் தசரதர் சிறிதும் பொறுக்கக்கூடாத துக்கத்தினால் வாய்விட்டுப் பேச நா வெழாமல் உரத்த சத்தத்துடன் அழுதார். இராமர் தசரதரையும் கைகேயியையும் வலம்வந்து நமஸ்காரஞ் செய்து இச்சங்கதியை தமது தாயாருக்குத் தெரியப் படுத்த அவள் மாளிகைக்கு சென்றார். நான்கு பக்கத்திலுமிருந்த செல்வவான்களான ஜனங்களுள் ஒருவராவது சத்தியவாதியாயும் காந்தியுடையவராயு மிருக்கும் இராமரது முகத்தில் ஒருவிதமான விகாரத்தையும் அறியவில்லை.

'கௌசலை தனது புத்திரனுடைய நன்மையை நாடி ஸ்ரீமந்நாராயண மூர்த்திக்குப் பூஜை பண்ணிக்கொண்டிருந்தாள். இராமர் தாயாரைப்பார்த்து தமது கைகளைக் குவித்துக்கொண்டு "அம்மா, இப்பொழுது ஒரு பயமீ வந்திருக்கிறது இப்பயம் உமக்கும் சீதைக்கும் லக்ஷ்மணனுக்கும் அதிகமாக துக்கத்தைத் தரும். மகாராஜர் பரதனுக்கு இளவரசு பட்டத்தைக் கொடுத்து என்னை தண்டகாரணியத்தில் ரிஷிபோல் வசித்திருக்கக் கட்டளையிட்டார். ஆகையால் நான் ஜனங்களில்லாத காட்டில் ஆறெட்டு வருஷம் வசிக்கப்போகின்றேன்'' என்றார்.

அவள், அதைக் கேட்டவுடன், காட்டில் கோடரியால் வெட்டப்பட்ட ஆச்சாமரத்துக் கிளைபோலவும், ஆகாயத்தினின்று தவறி வீழ்ந்த தேவதைபோலவும் பூமியில் திடீர் என்று விழுந்தாள். பின்பு சௌக்கியத்தையே அனுபவிக்கத் தக்கவளாயும் துக்கத்தால் மெலியவளாயு மிருக்கும் கௌசலை, இராமரைப் பார்த்து, லக்ஷ்மணரும் கேட்கும்

வண்ணம் சொல்லலுற்ருள். "என் மைந்த, ராகவ, நீ எனக்குத் துக்கம் விளையும்படி பிறவாமலே இருந்தால், பிள்ளைபெருத நான், பிள்ளையின்மையால் உண்டாகுந் துக்கத்தைவிட வேறு துக்கத்தைக் காணுமல் இருக்கலாம். பிள்ளாய், புத்திரப் பேறு அற்றவளுக்கு ஒரே துக்கம். அதென்ன வென்ருல், 'புத்திரனில்லை' என்பதுதான். அதைப்பார்க்கிலும் வேறு ஒரு துக்கமும் அவளுக்கு இல்லை. கணவருடைய அநுகூலத்திஞல் உண்டாகுஞ் சிறப்பையும் செளக்கியத்தையும் முன்னர் ஒரு பொழுதும் நான் கண்டதேயில்லை. இராமனுலாவது சுகத்தைக் காணலாமென்று நினைத்திருந்தேன். உனக்கு உபநயனஞ் செய்த பின்னர் இந்தப் பதினேழு வருஷங்களாக "எப்பொழுது என்னுடைய துக்கம் போகப்போகின்றது? எப்பொழுது உன்னுடைய பட்டாபிஷேகத்தை நான் காணப் போகின்றேன்" என்று காத்திருந்தேன். இந்தத் தீராத்துக்கத்தை ஒரு கணமேனும் பொறுக்க முடியாது. நீ இன்றி இனி நான் பிழைத்திருப்பது வீண்" என இவ்வண்ணம் பலவாருகக் கௌசலை புலம்பிஞள்.

இராமர் மறுபடியும் கௌசல்யையைப் பார்த்துத் "அம்மா, காட்டிற்குப்போக எனக்கு விடைகொடுத்து அனுப்புவீர். எனக்கு ஸ்வஸ்த்யயனம் பண்ணும். நான் காட்டுக்குச்சென்று அங்கு என் தந்தை சொற்படி வாசம் பண்ணி, அவர் வாக்கை உண்மையாகச் செய்துவிட்டு, இந்நகரத்திற்குத் திரும்பி வருவேன்" என்ருர்.

13. இராமர் விடை எடுத்துக்கொள்ளல்

கௌசல்யை, இராமர் தமது தந்தையின் கட்டளையை நிறைவேற்றுவதற்கு நிச்சயித்திருப்பதைக் கண்டு கண்களில் நீர் ததும்ப அவரைப் பார்த்து, "பனிக்காலம் நீங்கினபின்பு காட்டுத்தீ புதரை எரிப்பதுபோல், உன்னை விட்டுப் பிரிந்த பிறகு எனக்கு உண்டாகும் பொறுக்க

முடியாத பெரிய துக்காக்கினியானது என்னை மெலியச் செய்து கொளுத்தும். ஆகையால் கன்றினைத் தொடர்ந்து பசு போவதுபோல், நானும் உன்னைத் தொடர்ந்து வருவேன்'' என்று கூறினுள். புருஷ சிரேஷ்டரான இராமர் இவ்வண்ணம் வெகு துக்கத்துடன் சொல்லும் தம் தாயாரைப்பார்த்து, ''மனைவி தனது கணவனை விட்டுவிடுவது வெகு கொடிய பாதகமன்ருே! எல்லாரா்லும் மிகவும் பழிக்கப்பட்ட இப்பாதகத்தை நீர் மனத்திலும் எண்ணக் கூடாது. எனது தந்தை எதுவரையில் இவ்வுலகத்தில் உயிருடனிருக்கிருரோ, அதுவரையில் நீர் அவரிடம் பணிவிடை செய்துகொண்டு இருக்கவேண்டும். இதுதான் தருமங்களுள் உத்தமமான தருமம்''. உயிருடன் இருக்கிறவரையில் மனைவிக்கு அவள் கணவன்தான் தெய்வம்; அவன்தான் பிரபு. நான், ஆரண்ணியத்துக்குப் போன பிறகு என்னை விட்டுப் பிரிந்த துக்கத்தால் அரசர் மெலிந்துவிடாதபடி ஜாக்கிரதையாய் காப்பாற்றி வாரும்'' என்ருர். கௌசலை, கண்களில் நீர் தாரைதாரையாகப் பெருக, இராமரைப் பார்த்து, ''என் வீரசிங்கமே, நீ காட்டுக்குப்போய், க்ஷேமமாகத் திரும்பிவந்து மிக அழகிய நல்ல உன் வாக்குகளால் என் மனத்தைக் களிக்கச்செய்வாய்'' என்ருள்.

பின்பு இராமர் கௌசலையால் ஸ்வஸ்தியயனஞ் செய்யப்பட்டவராய் தமது மாளிகைக்குட் புகுந்தார். சீதை, துக்கத்தால் மெலிவடைந்தவரும் சிந்தையாற் கலங்கிய இந்திரியங்களை யுடையவருமான கணவரைப் பார்த்து, தனது ஆசனத்தினின்று எழுந்து நடுநடுங்கி நின்ருள். அவளைக் கண்டவுடன் இராமர் மனதிலிருந்த துக்கத்தைப் பொறுக்க முடியாதவரானுர்; அதனுல் அத்துயரம் வெளிப்பட்டது; இதைக்கண்ட சீதை ''அபிஷேகஞ் சித்தமா யிருப்பதா லுண்டாகவேண்டிய அபூர்வமான முகத்தின் நிறமும், மகிழ்ச்சியும் காணப்படவில்லையே!!

இதென்ன?" என்று வினவிப் புலம்ப, இராமர், அவளைப் பார்த்து, "சீதை, எனது தந்தையார் என்னைக் காட்டுக்கு அனுப்புகிறார். கேள், சத்தியசந்தரும் எனது தந்தையுமான தசரத சக்கரவர்த்தியார், முன்னொரு காலத்தில், எனது தாயாரான கைகேயிக்கு இரண்டு வரங்களைக் கொடுத்திருந்தார். எனக்குப் பட்டாபிஷேகம் பண்ணி வைக்க அரசர் சித்தராகவிருந்த இப்பொழுது, அவ்வரங்களைக் கைகேயியம்மா கேட்க, என் தந்தையார், தருமத்தால் வெல்லப்பட்டார். அதனால், நான் பதினான்கு வருஷகாலம் தண்டகவனத்தில் வசிக்கவேண்டும். எனது தந்தையார் பரதனுக்கு இளவரசுப்பட்டங் கட்டப் போகிறார். நான் உன்னைப்பார்த்துவிட்டு காட்டுக்குப் போக வந்தேன். நீ உன் மனத்தைத் தைரியம் பண்ணிக்கொண்டு இவ்விடத்தில் வசித்திரு. நான் புறப்பட்டு எனது தந்தை சொல்லைக் காப்பாற்ற இப்பொழுதே காட்டுக்குப் போகிறேன்" என்றார்.

சீதை இதைக்கேட்டு சொல்லலானாள்:" எனது நாதரே, தந்தை, தாய், சகோதரன், புத்திரன், மருமகள் ஆகிய இவர்களெல்லாரும் தங்கள் தங்கள் புண்ணிய பாவங்களின் பயனைத் தாங்களே தனிமையில் அநுபவிக்கிறார்கள். புருஷசிரேஷ்டரே, மனைவி ஒருத்திதான் தனது கணவன் செய்த புண்ணிய பாவங்களின் பயனைப் பகுத்துக்கொண்டு அநுபவிக்கிறாள். ஆகையால், 'காட்டில் வசிக்கவேண்டும்' என்று உங்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை எனக்குங் கொடுக்கப்பட்டது தான். ஆகையால் மனிதர்களால் கிட்டுதற்கரிய காட்டுக்குத் தாங்கள் இப்பொழுது புறப்பட்டால், நான் புற்களையும் முட்களையும் மிதித்துக்கொண்டு தங்களுக்கு முன் நடந்து போவேன். தினந்தோறும் தங்களுடன் கூடிக்கலந்து விளையாடி தங்களுக்குச் சந்தோஷத்தையுண்டாக்கப்போகிறேன். இவ்வாறு பதினாயிரம் வருஷங்

கழித்தாலும் அதை நான் அறியேன். இவ்வாறிருப்பதை விட்டுச் சுவர்க்கத்தில் வசிப்பது எனக்கு இஷ்டமன்று'' என்றாள்.

இராமர், காட்டிலிருக்குங் கஷ்டங்களை நினைத்து, சீதையைத் தம்முடன் அழைத்துப்போகத் துணியாமல், கண்ணீருடன் நிற்கும் அவளுக்கு நல்லவார்த்தை சொல்லி அவளைக் காட்டுக்குப்போவதிலிருந்து திருப்பும்பொருட்டு அவளைப் பார்த்து, ''சீதே, காட்டில் வெகு சங்கடங்களிருக்கின்றன. அவைகளை நான் சொல்லுகிறேன், கேள். காட்டில் சுகலேசமுங் கிடையாது; துக்கந்தான் உள்ளது. குகைகளில் வசிக்குஞ் சிங்கங்களின் கர்ச்சனைகள், மலையருவிகளின் ஒலியால் வளரப்பெற்று, கர்ணகடோரமாய்க் கேட்கும்: ஆகையால், காட்டில் துன்பம் வெகு அதிகம். நிர்மாநுஷமான காடுகளில் அச்சமில்லாமல் மதித்து விளையாடிக்கொண்டு திரியும் அநேக மிருகங்கள் மனிதர்களைக் கண்டால் துரத்திக்கொண்டு வரும்; ஆகையால், காட்டில் துன்பம் வெகு அதிகம். காடுகளில் முதலைகளுடன் கூடியனவும் சேற்றினையுடையனவும் மதயானைகளாலுந் தாண்டமுடியாதனவுமான நதிகள் இருக்கின்றன; ஆகையால், காட்டில் துன்பம் வெகு அதிகம். நடக்கிற இடங்களெல்லாம் கொடிகளாலும் முட்களாலும் அடர்ந்திருக்கும்: எங்குப் பார்த்தாலும் காட்டுக்கோழிகள் பயங்கரமாகக் கூவிக்கொண்டிருக்கும்; சில இடங்களில் குடிக்கச் சலம் அகப்படாது; சில இடங்களில் வழியேயிராது; ஆகையால் காட்டில் துன்பம் வெகு அதிகம். பகலெல்லாம் அலைந்து களைத்து, மரங்களிலிருந்து தானாக உதிரும் சருகுகளையுடைய தரையிற் படுத்து உறங்கவேண்டும்; ஆகையால் காட்டில் துன்பம் வெகு அதிகம். இரவும் பகலும் மரத்திலிருந்தே விழுங் கனிகளைப் புசித்து ஐம்புலனை யடக்கி வேறொன்றை நினைக்கும் ஆசையற்று இருக்கவேண்டும்; சலபங்களும்,

தேள்களும், புழுக்களும், காட்டீக்களும், கொசுக்களும் வருத்தும்; ஆகையால், வனம் முழுமையும் துன்பமே. ஆகையால், நீ வனத்துக்கு வரவேண்டாம். உனக்கு வன வாசம் ஒவ்வாது. நான் நன்ருக ஆலோசித்துச் சொல்லு கிறேன்; வனத்தில் வெகுவித பயங்களிருக்கின்றன" என்ருர்.

இவ்வாறு இராமர் சொல்லியதைக் கேட்டுச் சீதை, துக்கமடைந்து கண்களில் நீர்பெருகத் தனது கணவரைப் பார்த்து, "தாங்கள் எடுத்துக்கூறிய வனவாச துக்கங் களெல்லாம் தங்களிடத்தில் அன்பு வைத்திருக்கும் என்ஞல் பார்க்கப்பட்டவைகளாய், இன்பங்களாகவே தோன்றுமென அறியக்கடவீர்கள். பெரியவர்கள் கட் டளைப்படி நான் தங்களுடன் புறப்படத்தான் வேண்டும். தங்களை விட்டுப் பிரிந்தால் என் பிராணன் போய்விடும். தங்கள் சமீபத்தில் நான் இருந்தால், என்னைத் தேவர் களுக்கெல்லாந் தலைவஞன இந்திரபகவாஞலும் தனது தேஜஸால் ஒன்றுஞ் செய்யமுடியாது. 'கணவனை விட்டுப் பிரிந்த ஸ்திரீ பிழைத்திருக்கமாட்டாள்' என்று அநேக தரம் தாங்கள் எனக்கு உபதேசித்திருக்கிறீர்கள். தவம் புரிதலும் காட்டில் வசித்தலும் சுவர்க்கத்திலிருத்தலும் எனக்கு தங்களுடன்தான் வேண்டும். தங்களை நான் அநுசரித்து நடந்தால் எனக்குச் சிறிதேனும் வருத்தமுண் டாகாது. இலையோ, கனியோ, கிழங்கோ, அதிகமோ, குறைவோ எப்படியிருந்தாலும், தாங்கள் கைகளால் எடுத்துவந்து கொடுப்பதே எனக்கு அமிருதரஸமாகும். தாய், தகப்பன், வீடு இவைகளொன்றையும் நினையேன். நான் கஷ்டப்பட்டு போற்றத்தக்கவளாக இருக்க மாட்டேன். வனத்திற்கு உடன்வர அஞ்சாது நிற்கும் என்னை தாங்கள் அழைத்துக்கொண்டு போகாவிடில், இன்றைய தினமே விஷத்தை நான் குடித்துவிடுவேன்." என்ருள்.

சீதை இவ்வாறு சோகத்தால் பரிதபித்துக்கொண்டு, பலவாறு எளிமையாகப் புலம்பி, தனது கணவரைத் தழுவிக்கொண்டு, ஆயாசத்தை யடைந்தவளாய் ஸ்வரத்தோடு கதறத் தொடங்கினாள். சீதையை இரகு நாதர் தமது கைகளால் தழுவிக்கொண்டு தேறுதலடையப் பின் வருமாறு மொழியலானார் :— "உனக்கு துயரம் விளைவதாயிருப்பின் நான் ஸ்வர்க்கத்தையும் விரும்பேன். சுயம்புவான கடவுளுக்கு எவ்வாறு ஒருவரிடத்திலிருந்தும் அச்சமில்லையோ அவ்வாறே எனக்கும் அச்சமில்லை. நீ என்னைப் பின்தொடர்ந்து காட்டிற்கு வந்து என்னுடன் தருமங்களைச் செய்வாய். நீ என்னுடன் காட்டுக்கு வருவதாக நிச்சயஞ்செய்தது எனது குலத்துக்கும் உனது குலத்துக்கும் ஒத்ததாயிருக்கிறது. நாயகியே, நீ கணவனை அநுசரித்து நடக்குங் கருத்தை மிகக் கொண்டிருக்கின்றாய்; வனவாசஞ் செய்தற்கு சாதனமான காரியங்களைத் தொடங்குவாய். சீதே, உன்னுடனன்றி சுவர்க்கலோகத்திலிருக்கவும் எனக்கு ஆசையில்லை" என்றனர்.

முன்னமே அவ்விடம் வந்து காத்திருந்த லக்ஷ்மணர் இவ்வண்ணம் இராமருக்கும் சீதைக்கும் நடந்த சம்பாஷணையைக் கேட்டு தமக்குவந்த துக்கத்தை சகிக்க முடியாதவராய், கண்களில் நீர் ததும்ப, மிக்க விரதத்தையுடைய தமையனாரது கால்களை உறுதியாகப் பிடித்துக்கொண்டு அவரையும் சீதையையும் நோக்கி பின்வருமாறு சொல்லலானார் :—" மான்களாலும் யானைகளாலும் நிரம்பிய காட்டுக்குப் போகவேணுமென்று தாங்கள் நிச்சயித்துவிட்டால், நானும் என்கையில் விற்பிடித்து தங்களுக்கு முன்பாகவும் பின்பாகவும் நடந்துகொண்டு காட்டுக்குத் தங்களுடன் வருவேன். நான் தங்களைவிட்டுத் தேவலோகத்தை யடைவதையும் சாவில்லாத வாழ்வையும் விரும்பேன்; எல்லா வுலகங்களுக்கும் அரசனாய் ஆள்வதிலும் எனக்கு விருப்பமில்லை.

நான் கையில் பாணத்தோடு கூடின விற்பிடித்து, மண் வெட்டியையும் சிறு கூடையையும் எடுத்துக்கொண்டு, தங்களுக்கு வழிகாட்டிக் கொண்டு தங்கள் முன்னே நடந்து போவேன். தினந்தோறும் கிழங்குகள் பழங்கள் இன்னும் தவசிகள் புசிக்கும் காட்டிலுண்டாகும் இனிய உணவுகள் ஆகிய எல்லாவற்றையுங் கொண்டுவந்து தங்களுக்குக் கொடுப்பேன். தாங்களும் சீதையும் சந்தோஷமாகத் தாழ்வரைகளில் விளையாடலாம். தாங்கள் விழித்திருக்கும்பொழுதுந் தூங்கும் பொழுதும் தங்களுக்கு வேண்டிய எல்லாவற்றையும் என் பேருகச் செய்வேன்" என்றனர்.

இராமர் இப்படி லக்ஷ்மணர் சொன்னதைக் கேட்டு வெகு சந்தோஷமடைந்து தமது தம்பியைப் பார்த்து "லக்ஷ்மணா, சீக்கிரம் எல்லா நண்பர்களிடமும் விடை பெற்று என்னுடன் காட்டிற்கு வா. ஜனகமகாராஜன் யாகம்பண்ணின பொழுது வருணபகவான் எனக்குத் தாமாகவே கொடுத்த வெகு பயங்கரமான தோற்றமுள்ள திவ்விய விற்களிரண்டும், ஒருவராலும் பிளக்கக்கூடாத கவசங்களிரண்டும், வற்றாத அம்புக் கூடுகளிரண்டும், சூரியனைப்போல விளங்கும் பொன்னுற் செய்த வாள்களிரண்டும் கொடுத்தாரே; அவைகளை நமது குருவீட்டில் பூஜை செய்து வைத்திருக்கிறேன்; விரைவில் அவைகளையும் எடுத்துக்கொண்டு வா" என்றார்.

இராமலக்ஷ்மணரிருவரும் மிக்கபொருள்களை அந்தணர்களுக்கு தானஞ் செய்துவிட்டு சீதாதேவியுடன் தங்கள் தந்தையைப் பார்க்கச் சென்றார்கள். இவர்கள் கால்நடையாக வீதியில் நடப்பதை அந்நகரத்துச் சனங்கள் கண்டு, சோகத்தால் மனந்தடுமாறி பலவாறு சொல்லலானார்கள். "எவள் முன்பு ஆகாசத்திற் சஞ்சரிக்கும் பிராணிகளாலும் பார்க்க முடியாதவளோ அச்சீதை இராஜவீதியில் நிற்கும் ஜனங்களால் இப்பொழுது

பார்க்கப்படுகின்றுள். நமக்குத் தோட்டங்கள் கழனிகள் வீடுகள் ஒன்றும் வேண்டாம்; தருமப்ரப்புவாகிய இராமருக்கு வருஞ் சுகதுக்கங்களை உடனிருந்து அநுபவித்துக் கொண்டு அவர்பின் நடந்து செல்வோம்'' என்றுர்கள்.

இவ்வண்ணம் பலர் பலவாருக சொல்லிக்கொண்டிருந்தவற்றை யெல்லாங்கேட்டும், இராமருடைய மனம் கொஞ்சமேனுங் கலங்கவில்லை. அவர் வெகு தூரத்திலிருந்து கைலாயமலையின் சிகரம்போல் விளங்கும் தம்து தந்தையின் மாளிகையை நோக்கி நடந்தார். இராமர் வணக்கமுள்ள வீரர் பலர் தங்கியிருக்கும் அரச மாளிகையிற் புகுந்து வாட்டமடைந்திருக்குஞ் சுமந்திரரை சிறிது தூரத்திற் கண்டார்.

இராமர் தமது தந்தையின் மாளிகை சேர்ந்தவுடன் அங்கிருந்த சுமந்திரரைப்பார்த்து, ''நான் வந்திருப்பதை எனது பிதாவினிடந் தெரிவியும்'' என்றுர். இவ்வண்ணம் இராமர் சொல்ல, சோகத்தாற் கலங்கின மனத்தையுடைய சுமந்திரர், அம்மாளிகையினுள் விரைவாகச் சென்று பெருமூச்சு எறிந்துகொண்டு தசரதமன்னவர் வீற்றிருப்பதைக் கண்டார். பின்பு வெகு பயத்துடன் நாக்குளற ''வேந்தே, தங்கள் குமாரராயும் புருஷசிங்கமாயும் உண்மை தவருதவராயுமிருக்கும் இராமர் வாயிலில் வந்து காத்திருக்கிருர். தமது மித்திரர்களிடம் விடைபெற்றுக்கொண்டு தங்களைக் கண்டு விடைபெற்றுப் போக வந்திருக்கின்றுர். தங்கள் குமாரரைக் காட்டுக்குப் போகுமுன் தாங்கள் பாருங்கள். தங்களுக்கு மங்களமுண்டாகுக'' என்றுர்.

அரசர், ''சுமந்திரரே, சீக்கிரஞ் சென்று எனது மனைவிமாரெல்லாரையும் அழைத்து வாரும். தருமத்தின் வடிவாகிய என் குமாரனை எனது எல்லா மனைவிமார்களோடும் கூடிப்பார்க்க ஆசைப்படுகிறேன்'' என்றுர். முந்நூற்றைம்பது பெண்டுகள் அரசர் கட்டளைப்படி

கௌசலையைச் சூழ்ந்துகொண்டு அரசர் வீட்டை நோக்கிச் சென்றார்கள். தசரதர் இவர்கள் வந்ததைப்பார்த்து சுமந்திரரை நோக்கி சுமந்திரரே, எனது குழந்தையை அழைத்துவாரும்" என்றார். அவரும் அப்படியே சென்று இராமர் லக்ஷ்மணர் சீதை இம்மூவரையும் அங்கு அரசர் சமீபத்தில் விரைவில் அழைத்து வந்தார்.

மிக்க துக்கத்தை யுடையவராயும் மனைவியரால் சூழ்ப்பட்டவராயு மிருக்குந் தசரதர் தூரத்திலிருந்தே கைகளை கூப்பிக்கொண்டுவரும் தமது குமாரரைக் கண்டு தமது ஆசனத்தினின்று விரைவாக எழுந்திருந்து அவருக்கு எதிரே துரிதமாய் ஓடினார்; தமது அறிவு தப்பி மிக்க சோகத்தை அடைந்தவராய் பூமியில் மூர்ச்சித்து விழுந்தார். பின்பு இராமர் ஒரு முகூர்த்தத்தில் பிரஜ்ஞையடைந்த தசரதரைப் பார்த்து அஞ்சலி பந்தம் பண்ணிக்கொண்டு "எல்லார்க்கும் ராஜாவான எங்கள் மகாராஜாரே, தங்களிடம் தண்டகாரியணத்துக்குப்போக விடைபெற வந்தேன். எங்களை கடாக்ஷிக்க வேண்டும். லக்ஷ்மணனும் சீதையும் என்னுடன் கூடவே காட்டுக்குவர விடை யளிக்கவேண்டும். 'காட்டுக்கு வரவேண்டாம்' என்று அநேகவிதமாக அவர்களுக்குச் சொல்லியும் அவர்கள் அவ்வாறிருக்க விரும்பவில்லை. எல்லோருக்கும் சோகப்படாமல் அநுமதி கொடுத்து அனுப்பும்" என்றார். தசரதர் இவ்விதமாக தமது குமாரர் காட்டுக்குச் செல்ல விடைபெறக் காத்திருப்பதைப் பார்த்து, "இராகவா, நான் கைகேயிக்கு வரத்தை கொடுத்ததால் வஞ்சிக்கப்பட்டேன். அதனால் என்னை நீ மறுத்து அயோத்திமாநகருக்கு மன்னனாகுவாய்" என்றார். இங்ஙனம் தசரதர் சொல்ல தருமத்தில் நிலை நின்ற இராமர், "தங்களை நான் பொய்யராகச் செய்யக்கூடாது; ஆகையால் நான் காட்டில் வசிக்கின்றேன். நான், 'தங்களது ஆணை' என்ற காரணத்தினால்

தான் பட்டங்கட்டிக்கொள்ள உடன்பட்டேன்; எனது மனத்தில் விருப்பமுற்றேனும் இன்பத்தை எண்ணியேனும் இராச்சியத்தை நான் அங்கீகரிக்கவில்லை. தந்தை தெய்வங்களுக்கெல்லாம் மேலான தெய்வம்'' என்றன்றோ சாஸ்திரங்களுங் கூறுகின்றன; புருஷசிரேஷ்டரே, ஆகையால், நான், தங்கள் சொல்லை 'தெய்வத்தின் கட்டளை' என நினைத்தே நிறைவேற்றுகின்றேன். பதினான்கு வருஷம் முடிந்தவுடன் நான் இங்கு வரத் தாங்கள் என்னைப் பார்ப்பீர்கள்; இத்துக்கத்தை விட்டிடுங்கள்'' என்றார்.

மகாபாகுவான தசரதர், சிறிது நேரஞ் சோகத்தால் மயக்கமடைந்து இராமரைக் குறித்தே சிந்தித்தவராய்ப் புலம்பலானார். "நான் முன் ஜன்மத்தில் அநேக பசுக்களைக் கன்றுகளினின்று பிரித்திருப்பேன்; அல்லது அநேக பிராணிகளை இம்சித்திருப்பேன்; அதனால்தான் இப்பொழுது நான் இவ்விதமான அவஸ்தைக்கு உள்ளானேன்.'' என்று சொல்லி, நீரால் மறைந்த கண்களையுடையவராய், "இராம'' என்று ஒருதரங்கூவி அதன் பிறகு வாய்திறக்க திறனற்றவரானார். சீதை நமஸ்கரிக்க கௌசல்யை அவளைக் கைகளால் அணைத்துக் கொண்டு உச்சிமோந்து, "பதிவிரதைகளுக்கு பரிசுத்தி செய்பவனான கணவனொருவனே விசேஷமானவன். ஆகையால் காட்டுக்குப் போகின்ற என் குமாரனான இராமனை நீ அலட்சியம் பண்ணாதே. கணவன் செல்வம் படைத்தவனாக இருந்தாலும் பணமற்றவனாக இருந்தாலும், அவன்தான் உனக்குத் தெய்வம்'' என்றாள்.

இவ்வாறு தனது மாமியார் சொன்ன அறத்தோடும் அருத்தத்தோடுங் கூடிய சொற்களைக்கேட்டுச் சீதை கைகளைகூப்பிக்கொண்டு தனது எதிரே நிற்கும் மாமியாரை நோக்கி, "தங்கள் உத்திரவுப்படியே எல்லாவற்றையுஞ் செய்கிறேன். நான் கணவரிடத்தில் நடந்துகொள்ள

வேண்டிய விதத்தைத் தெரிந்திருக்கிறேன் ; இப்பொழுது தங்களிடமிருந்து அதைக்கேட்டுமிருக்கிறேன். சந்திரனை விட்டு ஒளி நீங்காததுபோல நான் நன்னெறியை விட்டு நீங்கேன்" என்ருள். இவ்வாறு மொழிந்த மனோகரமான சொற்களைக்கேட்டு கௌசலை வெகு சுத்தமான குண முள்ளவளாகையால் உடனே துக்கத்தாலும் சந்தோஷத்தாலும் கண்ணீரை வடித்தாள்.

மிக்க தருமாத்துமாவாகிய இராமர் அஞ்சலி பந்தம் பண்ணியவராய் மிகவுங் கௌரவிக்கப்பட்டு தமது தாய்மார்களின் மத்தியிலிருக்குங் கௌசலையைப் பிரதக்ஷிணஞ்செய்து சொல்லலுற்ருர் :—"அம்மா, நீங்கள் அதிக துக்கத்தால் என் தந்தையை அலட்சியம் பண்ணுமலிருக்க வேண்டும். நான் அரணியவாசம் பண்ணவேண்டிய காலம் சீக்கிரமாக முடிந்துவிடும். ஒரு தூக்கம் தூங்கி விழிக்குமளவிற்குள் நீங்கள் இப்பதினன்கு வருஷமும் ஓடிப்போக காண்பீர்கள்" என்ருர்.

14. இராமர் முதலிய மூவரும் வனம்புகுதல்

அதன்பிறகு, இராமர் லக்ஷ்மணர் சீதை இம்மூவரும் தசரதருடைய நிலைமையைக் கண்டு பரிதபித்து, கூப்பிய கையை யுடையவர்களாய், அவருடைய தாள்களில் வணங்கி அவரை வலம்வந்தார்கள். தருமப்பிரபுவாகிய இராமர் அவரிடம் விடைபெற்றுக்கொண்டு துக்கக்கடலில் மூழ்கினவராய் சீதையுடன் தமது தாயான கௌசலையை அபிவாதனஞ்செய்து நின்ருர். அவர் வணங்கின பின்பு, லக்ஷ்மணர் கௌசலையை அபிவாதனஞ் செய்து, பின்பு, தமது தாயான சுமித்திரையின் பாதங்களில் நமஸ்காரஞ் செய்தார். சுமித்திரை லக்ஷ்மணரைப் பார்த்து அழுதுகொண்டே உச்சிமோந்து அவருடைய நன்மையின் பொருட்டு பின்வருமாறு சொல்லலானுள் :—"புதல்வனே,

இராமனைத் தசரதராகவும், சீதையை நானாகவும், அரணியத்தை அயோத்திமாநகராகவும் கருதுவாய்; குழந்தாய் சுகமாகப் போய்வா" என்றாள்.

அதன்பிறகு, வெகு வணக்கத்தையுடையவராயும் விநயத்தை யறிந்தவராயு மிருக்குஞ் சுமந்திரர், இராமரைப் பார்த்து அஞ்சலியுடன் கூடியவராய், "இராஜகுமாரரே, மிகு புகழ்படைத்தவரே, இராமரே இரதத்தில் ஏறுங்கள்; உங்களுக்கு க்ஷேம முண்டாகுக; எங்குப்போகவேண்டுமென்று எனக்குக் கட்டளை யிடுகிறீர்களோ, அங்கு ஒரு நொடியில் நான் கொண்டு போய்விடுகின்றேன்," என்று சொன்னவுடன் சீதை சூரியன்போற் பிரகாசிக்கும் அந்த இரதத்தின்மேல் வெகு குதூகலத்துடன் முதலில் ஏறினாள்: இராமலக்ஷ்மணர்களும் அந்த இரதத்தில் விரைவாக ஏறினார்கள். இராமர் லக்ஷ்மணர் இவ்விருவரும் ஆயுதக் கூட்டங்களையும், கவசங்களையும், தோலாற் கட்டப்பட்ட கூடை மண்வெட்டி இவைகளையும் இரதத்தின் மத்தியில் வைத்திட்டு சீதையுடன் இரதத்தில் வீற்றிருந்ததை சுமந்திரர் பார்த்து வாயுவேகமாகப் போகுஞ் சிறந்த குதிரைகளை வேகமாக ஓட்டினார், முதுவேனிற் பருவத்தால் மெலிந்தவர் புனலை நாடி ஓடுவதுபோல இராம விரஹதுக்கத்தால் மிகத்துயரடைந்த பாலரையும் முதியவரையுமுடைய அந்நகரம் இராமரை நாடி ஓடத்தலைப்பட்டது.

இராமர் தமது கைகளைக் கூப்பிக்கொண்டு நகர்நீங்கினபொழுது ஸ்திரீகளின் அந்தப்புரத்தில் வெகு பரிதாபமான பெரிய சத்தமுண்டாயிற்று. இம்மாதிரியாக அந்தப்புரத்திலிருந்துண்டாகும் கோரமான எளிய புலம்பல்களை புத்திரசோகத்தாற் பரிதபித்துக்கொண்டிருக்கும் தசரதர் கேட்டு பின்னும் அதிகமான சோகக்கடலில் முழுகி நின்றார். வெளிப்புறப்படும் இராமராலுண்டான தூளிகள் எவ்வளவு காலம் வரையிற் புலப்பட்டனவோ

அவ்வளவு காலம்வரையில் தசரதர் தமதுகண்களைத் திருப்பவேயில்லை. இராமர் போவதாலுண்டான தூளி யுங் காணப்படாதபொழுது தசரத மன்னவர் பீடை யையடைந்த சரீரத்தோடு மிகவுந் துக்கித்தவராய் பூமி யில் விழுந்தார். அவரைத் தூக்குவதற்காக கௌசலை அவருடைய வலக்கையை அநுசரித்தாள்; கைகேயி அவருடைய இடக்கையை அநுசரித்தாள். நியாயத்தை யும் தருமத்தையும் வணக்கத்தையும் கைவிடாத தசரத மன்னவர் இராமவிரகத்தால் துன்புற்ற பொறியையுடை யவராய் கைகேயியைப்பார்த்து, "கைகேயி, நீ என்னு டைய அங்கங்களைத்தொடாதே. நீ கெட்ட வொழுக்க முடையவள். உன்னை நான் பார்க்கவிரும்பவில்லை. நீ என் மனைவியுமல்லை; பந்துவுமன்று; பரதன் இவ்விராச் சியத்தை யடைந்து மகிழ்ந்தால் எனக்காக அவன் செய் யும் தர்ப்பணம் முதலிய சடங்குகள் என்னைச் சேர வேண்டா" என்றார். அதன்பிறகு துயரத்தால் வாட்ட மடைந்த கௌசலை அங்கமெல்லாம் புழுதி மண்டியிருக் கும் தமது பர்த்தாவை எழுந்திருக்கச்செய்து அவருடன் சென்றாள்.

ஜனங்கள், சத்தியவிரதத்தை கைக்கொண்டிருந்த இராமரிடம் மிக்க அபிமானம் வைத்தவர்களாய் அவர் அரணியவாசஞ் செய்யப்போகும்பொழுது கூடவே சென் றார்கள். அவர் ஜனங்களை அன்புடன் பார்த்து, அவர் களைத் தமது மக்களைப்போல எண்ணி அன்புடன் "அயோத்தியில் வசிக்கும் நீங்கள் என்னை சந்தோஷப் படுத்துவதனிமித்தம் என்னிடத்து வைத்திருக்கும் பிரீதி யையும் வெகுமதியையும் மிகுதியாக பரதனிடஞ் செலுத்தவேண்டும்." என்றார். பருவத்திலும், அறிவிலும் தவத்திலும் முதிர்ந்த அந்தணர்கள் கிழத்தன்மையால் நடுங்கிய தலையினராய்த் தூரத்திலே நின்று, "ஓ! ஓ! விரைவுள்ள உத்தமஜாதிக் குதிரைகளே, இராமனை வகித்

துக்கொண்டு போகாதேயுங்கள் : நில்லுங்கள்; தலைவனிடத்தில் நன்மை செய்பவராக இருங்கள்'' என்று கதறினார்கள். இராமர் இவ்வாறு அந்தணர்களெல்லாம் வெகு பரிதாபமாக அரற்றக்கேட்டு இரதத்தை விட்டுக் கீழிறங்கினார். அவர் லக்ஷ்மணருடனும் சீதையுடனும் மெல்லக் காலினாலேயே நடந்தார்.

இராமர் இரம்மியமான தமசை நதிக்கரையைச் சேர்ந்து சமீப தேசத்தில் பட்டணத்து ஜனங்களுடன் அவ்விரவு வசித்தார். இரவில் இராமர் எழுந்திருந்து உறங்கும் பட்டணத்து சனங்களைப் பார்த்து, வெகு புண்ணிய லக்ஷணங்களுடன் கூடிய தம்பியான லக்ஷ்மணரை நோக்கி "லக்ஷ்மணா, நம்மிடத்தில் மிக்க அன்பு வைத்து காதலிகளிடத்திலும் அன்பு நீங்கியவர்களும் மரங்களினடிகளில் தூங்குபவர்களுமான இவர்களை இப்பொழுது பார். லக்ஷ்மணா, இவர்களெல்லாரும் என்னைக் காட்டுக்குப் போகாமல் ஊருக்குத் திருப்பி யழைத்துப் போகத் தீர்மானித்திருக்கிறார்கள். இவர்கள் பிராணனை விட்டாலும் விடுவார்களேயல்லது தங்களுடைய உறுதியை மட்டும் விடமாட்டார்கள். ஆகையால் நாம் இவர்கள் தூங்கும்பொழுதே மெல்ல எழுந்திருந்து இரதமேறி அச்சமில்லாத வழியிற்செல்லுவோம்'' என்றார். பின்பு இராமர் பட்டணத்துச் சனங்களை வஞ்சிக்கக் கருதியவராய், சுமந்திரரைப்பார்த்து, "சாரதியே, நீங்கள் இரதமேறி வடக்கு முகமாக ஒரு முகூர்த்தகாலம் வேகமாகச் சென்று, பிறகு இரதத்தைத் திருப்பிக்கொண்டு வாருங்கள். பட்டணத்துச் சனங்கள் நான் போகும் வழியை அறியாவண்ணம் சாக்கிரதையுடன் செய்யுங்கள்'' என்றார். சுமந்திரர் இராமர் சொன்னவண்ணஞ்செய்து, வேற்றுவழியால் இராமரிடந் திரும்பிவந்து, இரதங் கொணர்ந்துவந்ததை அறிவித்தார். பிறகு இராமர் லக்ஷ்

மணர் சீதை இம்மூவரும் பிரயாணத்தின் மங்களத்தின் பொருட்டு வடக்குமுகமாக நிறுத்தப்பட்ட இரதத்திலேற, சுமந்திரர் அந்த இரதத்தைத் தவசிகள் வசிக்குங் காட்டை நோக்கி யோட்டினுர்.

இரவு கழிந்து பொழுது விடிந்தவளவில் நகரத்துச் சனங்கள் தூங்கி யெழுந்து, இராமரைக் காணுமற் சோகம் மேலிட்டதால் செய்தொழிலற்றவர்களாய், மனம் முறியப் பெற்ருர்கள். நல்லமனத்தையுடைய அவர்கள் எளிமையை யடைந்தவர்களாய், எளிய வார்த்தைகளைப் பரஸ்பரஞ் சொல்லலானுர்கள்: "நம்முடைய தூக்கம் பழிக்கத்தக்கது; ஏனெனில் நாம் அத்தூக்கத்திற்கு வசப்பட்டபடியாலன்ருே இராமரை இப்பொழுது பார்க்கமுடியாமற் போயிற்று" என்று பலவகையாக சொல்லிக்கொண்டு, கைகளை உயரவெடுத்து, துக்கத்தால் கன்றுகளை யிழந்த பசுக்கள்போல புலம்பினுர்கள். பிறகு அவர்கள் இரதம்போன சுவட்டால் வழியைப் பிடித்துச் சென்று இரதச்சுவடு மறைய, மீண்டும் மிக்க துயரமடைந்தவர்களாய், அயோத்திமாநகருக்கு திரும்பிவந்து சேர்ந்தார்கள்.

அவர்கள் தம் தம் வீட்டை யடைந்து பெண்டுகள் பிள்ளைகள் இவர்களாற் சூழப்பட்டு, நீர்நிறைந்த முகங்களையுடையவர்களாய் அழுதார்கள். வீட்டுக்குத் திரும்பி வந்த தம் தம் கணவர்களை, மனைவியர் அழுதுகொண்டு மாவெட்டிகளால் யானைகளைக் குத்துவதுபோல் கொடுஞ் சொற்களால் பழித்து "எவர்கள் இராகவரைப் பார்க்கவில்லையோ, அவர்களுக்கு வீடுகளாலாவது மனைவியாலாவது பொருளாலாவது பிள்ளைகளாலாவது வேறுவகைச் சுகங்களாலாவது என்ன பயன்?" என சொல்லிக்கொண்டு யமனிடத்தினின்று பயத்தையடைந்தவர்கள்போல் அலறினவர்களாய் துக்கத்தால் பரிதவித்துக் கதறினுர்கள்.

இராமரும் தமது தந்தையின் கட்டளையை நினைத்துக்கொண்டு நகரத்து சனங்களைவிட்ட அவ்விராத்திரியின் மிகுதிப் பொழுதிலேயே வெகுதூரஞ் சென்றார். விசாலமாயும் அழகியதாயுமுள்ள கோசலநாட்டைக் கடந்தபிறகு, கூப்பியகையராய் அயோத்தியையிருக்குந் திசையைநோக்கி, "ககுஸ்தவம்சத்து மன்னவர்களால் இரட்சிக்கப்படுபவளே, நகரங்களுட் சிறந்தவளே, உன்னிடத்தில் நான் விடை கேட்டுக்கொள்ளுகிறேன். உன்னுடைய நாலு மருங்கிலும் வசித்துக்கொண்டு உன்னைப் பாதுகாக்குந் தெய்வங்களிடத்திலும் நான் விடை கேட்டுக் கொள்ளுகிறேன்; நான் என் வனவாசத்தை நிறைவேற்றி, தந்தையார் சொல்லை மெய்யாகப் பண்ணுவதால் அவர்கடனைத் தீர்த்து, தாய்தந்தையர்களுடன் சேர்ந்தவனாய் மறுபடி உன்னைப் பார்ப்பேன்" என்றார். பிறகு இராகவர் சுவர்க்க பூமி பாதாளங்களிற் செல்லுவதும், நிர்மலமான நீரையுடையதும், பாசி நீங்கியதும் புண்ணியமானதும், முனிவர்களாற் சூழப்பெற்றதுமான கங்கையைப் பார்த்தார். சமீபத்திலுள்ள அழகிய ஆச்சிரமங்களால் விளக்கப்பட்டதும், விஷ்ணுபகவானுடைய திருவடியிலிருந்து தோன்றியதும், பாபமற்றதும், தன்னில் மூழ்குபவரது பாவத்தைப் போக்குவதும், சிவபெருமானது சடைமுடியிலிருந்து பெருகுவதும், நீர்ப்பறவைகள் ஒலித்துக் கொண்டிருக்கப்பெற்றதும், சமுத்திரத்தின் பட்டமகிஷியுமான அக்கங்கையை சிருங்கபேரபுரத்தை நோக்கிச் செல்லும் இராமர் அடைந்தார்.

இராமர் பொழுது விடியுஞ் சமயத்தில் லக்ஷ்மணரை நோக்கி, "காமத்தை விளைக்கும் இரவு பெரும்பாலுங் கழிந்தது. அருணனுதிக்குந் தருணமும் கிட்டிற்று. குழந்தாய், சமுத்திரத்தை நாடி வேகமாகச் செல்லும் இக்கங்கையை நாம் கடப்போம்" என்றார். அதன் பிறகு இராமலக்ஷ்மணர்கள் கவசமணிந்து தூணிகளையுங் கத்திகளையுங்

தரித்துக்கொண்டு வில்லாளிகளாய் சீதையுடன் கங்கையை யடையும் வழியாகச் சென்ருர்கள்.

சுமந்திரர் இராமரை வணக்கத்துடன் கிட்டிக் கூப்பிய கையராய், "எனக்கு என்ன கட்டளை யிடுகிறீர்கள் ?" என்று கேட்க, இராமர் கங்கைக்கரை வரையில் நீங்கள் இரதமோட்டி வந்தீர்களன்ருே! இனி, இரதத்தை விட்டுக் கால்களினுற் பெருங் காட்டிற்போவேன். ஆகையால் நீங்கள் திரும்பிவிடலாம். நீங்கள் மகாராஜாவை என் பொருட்டு வணங்கி, "நானும் லக்ஷ்மணனும் சீதையும், அயோத்தியை விட்டுவந்து துயரப்படாது காட்டில் வசிக்கிருேம். பதினுன்கு வருஷங்கழிந்தவுடனே யாவரும் லக்ஷ்மணனையும் என்னையும் சீதையையும் பார்க்கப்போகிறீர்கள். அன்றியும் கௌசலையிடத்தும் மகாராஜரிடத்தும் சீதை நான் லக்ஷ்மணன் ஆகிய மூவரும் சொன்னதாக வணக்கத்தையுஞ் சொல்லவேண்டும். அங்கு போய்ச் சேர்ந்தவுடனே நீங்கள் பரதனை வரவழைத்து அவனுக்கு இளவரசு பட்டாபிஷேகம் பண்ணிவைக்கவேண்டும். என்னுடைய சிறிய தாயாரான கைகேயியம்மா, பட்டணத்தையடைந்த உங்களைப்பார்த்து "இராமன் காட்டை யடைந்தான்" என்று விசுவாசமடைவர்" என்ருர்.

பிறகு இராமர் தமக்கும் லக்ஷ்மணருக்கும் ஜடை செய்தார். சுமந்திரருக்கும் தமது பரிவாரங்களுக்கும் விடை கொடுத்து விட்டு, மரக்கலத்தில் வீற்றிருந்தவராய், அதனைச் செலுத்தும்படி நாவிகர்களுக்குக் கட்டளையிட்டார். அது கங்கையின் நடுவை யடைந்தவுடன், குற்றமற்ற சீதை கங்கையை நோக்கி, "தேவி, மூன்று பிரிவாகப் பிரிந்து மூன்று வழியிலோடுகின்ற நீ பிரமலோகத்தினின்று தோன்றினுய்; இவ்வுலகத்தில் சமுத்திர ராஜனுடைய பார்யையாகவுங் காணப்படுகின்ருய். அழகியே, இவ்வாறு புகழ் பெற்ற உன்னை நான் நமஸ்கரிக்கிறேன் ; துதிக்கிறேன். ஆண் புலியான இராமர்

மங்களமாகத் திரும்பி வந்து இராச்சியத்தை யடைந்த பொழுது உனக்கு விருப்பத்தைச் செய்யும் பொருட்டு அந்தணர்களுக்கு நூறுயிரம் பசுக்களையும் வஸ்திரங்களையும் மனோஜ்ஞமான அன்னத்தையுங் கொடுப்பேன். தேவீ, நகரத்தை மீண்டுமடைந்த நான் நியமத்தையுடையவளாய் ஆயிரங் கள்ளுக் குடங்களாலும் மாம்சமாகிற உணவினுலும் உன்னைப் பூஜிப்பேன். உன் நதிக் கரையிலிருக்குந் தேவதைகளெல்லாரையும் புண்ணிய தீர்த்தங்களையுங் கோயில்களையும் பூஜிக்கிறேன்" என்றுள்.

இராமர் தென்கரையை யடைந்து தமது தம்பியுடனும் சீதையுடனும் மரக்கலத்தை விட்டு இறங்கி நடக்கலானுர். பின்பு மகாபாகுவான இராமர் லக்ஷ்மணரைப் பார்த்து, "நீ, ஜனங்களிருக்குமிடத்திலும் ஜனங்களில்லாத இடத்திலும் பாதுகாப்பவனுக இருக்க வேண்டும். இதற்கு முன் பார்த்திராததும் ஜனங்களற்றதுமான காட்டிற் பாதுகாப்பு அவசியஞ் செய்யத் தக்கது. லக்ஷ்மணு, நீ முன் நட; உன் பின்னே சீதை வருகிருள். நான் உன்னையும் சீதையையும் பாதுகாத்துக் கொண்டு உங்களிருவர்க்கும் பின்னே வருகிறேன். ஆணேறே, இக்காட்டில் நம்மில் ஒருவரையொருவர் தாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்" என்றுர். அவ்வில்லாளிகளிருவரும் சுகமாக நடந்து சூரியன் அஸ்தமனமாகும் வேளையில், கங்கையும் யமுனையுஞ் சந்திக்குமிடத்துக்கு சமீபத்திலிருக்கும் பரத்துவாஜ முனிவருடைய ஆச்சிரமத்தின் அருகை யடைந்தார்கள். ஆச்சிரமத்தை யடைந்து சிஷ்யர்களின் கூட்டத்தால் சூழப்பட்ட பரத்துவாஜ முனிவரை அபிவாதனம் பண்ணினுர். இராமர் அம்முனிவரிடத்தில் தங்களைப்பற்றி, "பகவானே! நாங்களிருவரும் தசரதருடைய பிள்ளைகள். இராமன் என்றும் லக்ஷ்மணன் என்றும் எங்களுடைய பேர். இவள் என்

மனைவி. விதேக வம்சத்தில் பிறந்தவள்; ஜனக மகா ராஜாவினுடைய மகள்" என்று தெரியப்படுத்தினார்.

பரத்துவாஜர் இராமருடைய வார்த்தையைக் கேட்டு அவரை நோக்கி தருமத்துடன் கூடிய இவ்வார்த்தையைச் சொன்னார்: "ககுஸ்த குலத்தில் உதித்தவரே, ஐம்பொறிகளாலும் அறிய வொண்ணாத தங்களை எப்பொழுதும் தியானித்துக் கொண்டிருக்கும் யான், வெகு காலத்திற்குப் பின்பு இங்கு என் கண் முன்பே வரக் காண்கிறேன்! தாங்கள் காரணமின்றி காட்டுக்கு ஓட்டப் பட்டதைக் கேள்விப்பட்டேன். ரகு குலக் கொழுந்தே, நீங்கள் எங்கு வசிக்கப் போகின்றீர்களோ, அம்மலை இங்கிருந்து பத்துக் குரோச தூரத்திலிருக்கிறது. கந்தமா தனம் என்ற பருவதத்தை யொத்தது; சித்திரகூடம் என்று பிரசித்தி பெற்றது; ஒருவன் அதன் சிகரங்களைத் தூரத்திலே காணினும் புண்ணியத்தையே செய்கிறான். அவனுடைய மனம் பாவத்தை எண்ணாது" என்றார்.

இராஜ குமாரர்கள் இரவை அவ்வாசிரமத்திற் போக்கிப் பின்பு பரத்துவாஜ மகாரிஷியை வணங்கி அம் மலையைக் குறித்துப் போகச் சித்தரானார்கள். பின்பு சீதையுடன் அவர்கள் அழகியதும் மனத்தைக் கவர்வது மான சித்திரகூட மலையைச் சேர்ந்தார்கள். பிறகு அம் மூவரும் வால்மீகியின் ஆச்சிரமத்தை யடைந்து அம் மாமுனிவரை அபிவாதனம் பண்ணினார்கள். அறத்தை யறிந்தவரான அம்மகர்ஷி மகிழ்ச்சி யடைந்தவராய் அவர்களைப் பூஜித்து, "வீற்றிருக்கலாம்" என்று கூறி நல் வரவை வினவினார். இராமர் தம்மை முறைப்படி வால்மீகிக்கு அறிவித்து, லக்ஷ்மணரைப் பார்த்து, "ஸௌம்ய, லக்ஷ்மணா, உறுதியாயும், சிறந்தனவாயுமிருக்கும் மரப் பலகைகளைக் கொண்டு வா; வசிக்குமிடத்தைச் செய். இங்கு வசிக்க வேண்டுமென்று என் மனம் விரும்புகின்றது" என்று கூறினார். லக்ஷ்மணர் இராமருடைய

சொல்லைக் கேட்டு அநேக விதமான மரங்களைக் கொண்டு வந்து பர்ணசாலையை நிருமித்தார். இராமர் ஸ்நானஞ் செய்து நியமத்துடன் கூடியவராய் வாஸ்து சாந்தி முடிவதற்கு எவ்வளவு மந்திரங்களை ஜபிக்க வேண்டுமோ அவ்வளவு மந்திரங்களையும் ஜபித்தார். பிறகு பரிசுத்தராய் வாஸ்து தேவதைகளைப் பூஜித்து வசிக்கக் கட்டின இடத்திற் புகுந்தார்; மிக்க பராக்கிரமத்தை யுடைய இராமருக்கு மனத்தில் மகிழ்ச்சி உண்டாயிற்று.

15. தசரதர் இறத்தல்

சுமந்திரர் விடைபெற்று குதிரைகளை இரதத்திற் பூட்டி மூன்றும் நாள் மாலைப் பொழுதில் அயோத்தியை யடைந்து அது ஆனந்தமற்றிருப்பதைக் கண்டார். முகத்தை மூடிக் கொண்டு ராஜ மார்க்கத்தின் நடுவால் தசரத மன்னவரிருந்த மனையை யடைந்தார். ஏழு கட்டுக் களையுங் கடந்தார். எட்டாவது கட்டில் புத்திர சோகத்தால் வாட்டமடைந்த அரசரைப் பார்த்தார். அச்சுமந்திரர், வீற்றிருந்த தசரத மன்னவரை யணுகி, அவரை வணங்கி, இராமருடைய சொல்லை அவர் சொன்ன வண்ணமே தெரிவித்தார். தசரதர், அதை மௌனத்தோடு கேட்டு, குழப்பமடைந்த மனமுடையவராய், இராமர் விஷயமான சோகத்தாற் பீடிக்கப்பட்டு மூர்ச்சை யடைந்து பூமியில் விழுந்தார்.

பின்பு உபசாரங்களினால் மூர்ச்சை தெளிந்தவராய் தம்மைக் கிட்டின சுமந்திரரைப் பார்த்து மிக எளியவராய், “எனது தருமாத்துமாவாகிய இராமன் எந்த மரத்தினடியை யடைந்து வசிக்கிறான்? ஸூதரே, மிகவுஞ் சுகியான அந்த இராகவன் எதை உண்கிறான்? இராமன் என்ன சொன்னான்? லக்ஷ்மணன் என்ன சொன்னான்? சீதை என்ன சொன்னாள்?” என்றார். இவ்வாறு அரசரால்

ஏவப்பட்ட சுமந்திரர் கண்ணீரால் தழுதழுத்துத் தடையை யடையுஞ் சொல்லால் கூறத் தொடங்கினார்: "மகாராஜாவே, இராமர் தருமத்தையே பார்த்தவராய், "சுமந்திரரே, வணங்கத் தக்கவராயும் மகாத்துமாவாயும் புகழ் பெற்றவராயுமிருக்குந் தந்தையாருடைய திருவடிகள் அஞ்சலி பண்ணி என்னுடைய வார்த்தையால் தலையால் வணங்கத் தக்கவை; அந்தப்புரத்திலிருக்கும் எல்லோரும் முறைப்படி என் வணக்கத்தையும் என் க்ஷேமத்தையும் சொல்ல வுரியர். என்னுடைய நமஸ்காரத்தையும் க்ஷேமத்தையுஞ் ஜாக்கிரதையையும் என் தாயாராகிய கௌசலையிடத்திற் சொல்லி அதன் பின்பு பரதனுக்கு என் க்ஷேமத்தைச் சொல்லி அவனிடத்தில், "எல்லாத் தாய்மார்களிடத்திலும் முறைப்படியே நடப்பாய். நீ இளவரசனாக இருந்து கொண்டு இராச்சியத்திலிருக்கும் மன்னவரைப் பாதுகாப்பாய். புத்திரனிடத்தில் அதிக அன்பு வைத்திருக்கும் என் தாயை உன் தாயான கைகேயியைப்போல் பார்த்துக்கொள்ள வேண்டும்' என்று பரதனிடஞ் சொல்லுங்கள்" என்று சொன்னார். மகாராஜரே, இவ்வாறு சொல்லிக் கொண்டே செந்தாமரைக் கண்ணரான இராமர் மிகக் கண்ணீர் வடித்தார்.

"லக்ஷ்மணரோ மிகச்சினந்தவராய் பெருமூச்செறிந்து கொண்டு, "அரச குமாரரான இந்த இராமர் எந்த அபராதத்தினால் நாட்டிலிருந்து ஓட்டப்பட்டார்? நானோ மகாராஜரிடத்தில் தகப்பன் முறையைக் காணவில்லை; எனக்குச் சகோதரரும், தலைவரும், தகப்பனும், சுற்றமும் இராகவரே" என்றார். மகாராஜரே, ஜானகி என்னிடத்தில் ஒன்றுஞ் சொல்லவில்லை. வாட்டமடைந்த முகத்துடன் அவள் தனது கணவரையும், புறப்படும் என்னையும் பார்த்துக் கண்ணீர் விட்டாள்" என்றார்.

இவ்வாறு சுமந்திரர் சொன்னதைக் கேட்டு தசரதர் தழுதழுத்ததாயும் மிகவும் எளிமையை யுடையதாயுமிருக்

கும் வாக்கினால் சுமந்திரரை நோக்கிப் பின்வருமாறு மொழியலானார்:—"குலமுறையாக வந்த கொடிய எண்ணத்தையுடைய கைகேயியால் ஏவப்பட்ட நான் ஆலோசனையில் வல்லவர்களான பெரியவர்களுடன் சேர்ந்து எண்ணினேனில்லை. சிநேகிதர், மந்திரிமார், நகரத்தவர் இவர்களுடன் சேர்ந்து ஆலோசியாமல் மோக பரவசனாய் ஸ்திரீக்காக இத்தொழிலை சாகசமாய்ச் செய்துவிட்டேன். இவ்வாறன்றி இவ்விசனம் இக்குலத்தை யழிப்பதற்காகக் காரணங் கூற முடியாத விதியால் விளைந்ததே. என்னை இப்பொழுதே இராமனிடத்திற் கொண்டு போய் விடும்; பிராணன் என்னைவிட்டுப் போக விரும்புகின்றது" என்று சொல்லி, ஹா ராமா! ஹா! லக்ஷ்மணா! ஹா பதி விரதா தருமத்தைக் கைவிடாத சீதையே! துக்கத்தால் நாதனற்றவன்போல் மாளும் என்னை நீங்கள் அறிகின்றிலீர்கள்!!!" எனப் பலவாறு பிரலாபித்தனர். அதன் பிறகு பேய் பிடித்தவன்போல மிகப் புரளுபவளும் உயிர் போனவள் போன்றவளுமான கௌசல்யை பூமியில் விழுந்து சுமந்திரரைப் பார்த்து "எங்கு இராமன் இருக்கிறானோ, எங்கு சீதை இருக்கிறாளோ, எங்கு லக்ஷ்மணன் இருக்கிறானோ, அங்கு என்னையும் யழைத்துச் செல்லும்" என்றாள்.

தசரதர் மேலும் சொல்லலானார். "கௌஸல்யே, கண்ணால் உன்னைக் காண்கின்றிலேன்; என்னுடைய ஸ்மிருதியும் அழிந்துவிடுகின்றது; யமதூதர்கள் என்னை விரைவிக்கின்றனர். இதைவிட மிகத் துக்கமானது என்ன இருக்கிறது? உண்மையில் பராக்கிரமத்தையுடையவனும் தருமத்தை யுணர்ந்தவனுமான இராமனைப் பிராணன் போகுஞ் சமயத்திற் காண்கின்றிலேனே! நதியின் வேகம் அதன் கரையை யறுப்பதுபோல இச்சோகம் அநாதனும் அறிவற்றிருப்பவனுமான என்னை மெலியச் செய்கின்றது. ஐயோ! இராகவனே, ஆ! மகாபாகுவே, ஆ! ஆ! என்

ஏவப்பட்ட சுமந்திரர் கண்ணீரால் தழுதழுத்துத் தடையை யடையுஞ் சொல்லால் கூறத் தொடங்கினார்: "மகாராஜாவே, இராமர் தருமத்தையே பார்த்தவராய், "சுமந்திரரே, வணங்கத் தக்கவராயும் மகாத்துமாவாயும் புகழ் பெற்றவராயுமிருக்குந் தந்தையாருடைய திருவடிகள் அஞ்சலி பண்ணி என்னுடைய வார்த்தையால் தலையால் வணங்கத் தக்கவை; அந்தப்புரத்திலிருக்கும் எல்லோரும் முறைப்படி என் வணக்கத்தையும் என் க்ஷேமத்தையும் சொல்ல வுரியர். என்னுடைய நமஸ்காரத்தையும் க்ஷேமத்தையுஞ் ஜாக்கிரதையையும் என் தாயாராகிய கௌசலையிடத்திற் சொல்லி அதன் பின்பு பரதனுக்கு என் க்ஷேமத்தைச் சொல்லி அவனிடத்தில், "எல்லாத் தாய்மார்களிடத்திலும் முறைப்படியே நடப்பாய். நீ இளவரசனாக இருந்து கொண்டு இராச்சியத்திலிருக்கும் மன்னவரைப் பாதுகாப்பாய். புத்திரனிடத்தில் அதிக அன்பு வைத்திருக்கும் என் தாயை உன் தாயான கைகேயியைப்போல் பார்த்துக்கொள்ள வேண்டும்' என்று பரதனிடஞ் சொல்லுங்கள்" என்று சொன்னார். மகாராஜரே, இவ்வாறு சொல்லிக் கொண்டே செந்தாமரைக் கண்ணரான இராமர் மிகக் கண்ணீர் வடித்தார்.

"லக்ஷ்மணரோ மிகச்சினந்தவராய் பெருமூச்செறிந்து கொண்டு, "அரச குமாரரான இந்த இராமர் எந்த அபராதத்தினால் நாட்டிலிருந்து ஓட்டப்பட்டார்? நானோ மகாராஜரிடத்தில் தகப்பன் முறையைக் காணவில்லை; எனக்குச் சகோதரரும், தலைவரும், தகப்பனும், சுற்றமும் இராகவரே" என்றார். மகாராஜரே, ஜானகி என்னிடத்தில் ஒன்றுஞ் சொல்லவில்லை. வாட்டமடைந்த முகத்துடன் அவள் தனது கணவரையும், புறப்படும் என்னையும் பார்த்துக் கண்ணீர் விட்டாள்" என்றார்.

இவ்வாறு சுமந்திரர் சொன்னதைக் கேட்டு தசரதர் தழுதழுத்ததாயும் மிகவும் எளிமையை யுடையதாயுமிருக்

கும் வாக்கினால் சுமந்திரரை நோக்கிப் பின்வருமாறு மொழியலானார்:—"குலமுறையாக வந்த கொடிய எண்ணத்தையுடைய கைகேயியால் ஏவப்பட்ட நான் ஆலோசனையில் வல்லவர்களான பெரியவர்களுடன் சேர்ந்து எண்ணினேனில்லை. சிநேகிதர், மந்திரிமார், நகரத்தவர் இவர்களுடன் சேர்ந்து ஆலோசியாமல் மோக பரவசனாய் ஸ்திரீக்காக இத்தொழிலை சாகசமாய்ச் செய்துவிட்டேன். இவ்வாறன்றி இவ்விசனம் இக்குலத்தை யழிப்பதற்காகக் காரணங் கூற முடியாத விதியால் விளைந்ததே. என்னை இப்பொழுதே இராமனிடத்திற் கொண்டு போய் விடும்; பிராணன் என்னைவிட்டுப் போக விரும்புகின்றது" என்று சொல்லி, ஹா ராமா! ஹா! லக்ஷ்மணா! ஹா பதிவிரதா தருமத்தைக் கைவிடாத சீதையே! துக்கத்தால் நாதனற்றவன்போல் மாளும் என்னை நீங்கள் அறிகின்றிலீர்கள்!!!" எனப் பலவாறு பிரலாபித்தனர். அதன் பிறகு பேய் பிடித்தவன்போல மிகப் புரளுபவளும் உயிர் போனவள் போன்றவளுமான கௌசல்யை பூமியில் விழுந்து சுமந்திரரைப் பார்த்து "எங்கு இராமன் இருக்கிறானோ, எங்கு சீதை இருக்கிறாளோ, எங்கு லக்ஷ்மணன் இருக்கிறானோ, அங்கு என்னையும் யழைத்துச் செல்லும்" என்றாள்.

தசரதர் மேலும் சொல்லலானார். "கௌஸல்யே, கண்ணால் உன்னைக் காண்கின்றிலேன்; என்னுடைய ஸ்மிருதியும் அழிந்துவிடுகின்றது; யமதூதர்கள் என்னை விரைவிக்கின்றனர். இதைவிட மிகத் துக்கமானது என்ன இருக்கிறது? உண்மையில் பராக்கிரமத்தையுடையவனும் தருமத்தை யுணர்ந்தவனுமான இராமனைப் பிராணன் போகுஞ் சமயத்திற் காண்கின்றிலேனே! நதியின் வேகம் அதன் கரையை யறுப்பதுபோல இச்சோகம் அநாதனும் அறிவற்றிருப்பவனுமான என்னை மெலியச் செய்கின்றது. ஐயோ! இராகவனே, ஆ! மகாபாகுவே, ஆ! ஆ! என்

துக்கத்தைப் போக்குபவனே, ஆ! தந்தை மீது அன்பு வைத்தவனே, ஆ! எனக்கு நாதனே, ஆ! புதல்வனே, நீ இப்பொழுது எங்கிருக்கின்றாய்? அந்தோ! கௌசல்யே, நான் சாகப்போகின்றேன்; ஆ! பதிவிரதா தருமத்தைக் கைவிடாதிருக்கும் சுமித்திரையே, ஆ! ஆ! கொடியவளே, எனக்குப் பகையே, கைகேயி, குலத்தைக் கெடுக்க வந்தவளே" என இவ்வாறு கூறிக் கோசலையின் முன்னிலையிலும் சுமித்திரையின் முன்னிலையிலும் தசரத மன்னர் துக்கித்துக்கொண்டே பிராணனுடைய முடிவு காலத்தை யடைந்தார்.

பிறகு அமைச்சர்கள் தசரதரைத் தழுவிக்கொண்டு புலம்புபவளும் துயரத்தால் மெலிந்தவளுமான கௌசலையை அங்கிருந்து வேற்றிடத்திற்குக் கொண்டுபோனார்கள். அம்மந்திரிமார் வசிஷ்டர் முதலியோரது கட்டளையால் எண்ணெய் நிரம்பிய கடாரத்தில் அரசரை யிட்டுப் பின்பு மக்களைக் காத்தல் முதலிய அரசருடைய தொழில்களைச் செய்தார்கள். மகாத்மாவாகிய மன்னரை யிழந்த அயோத்திமாநகரம் சந்திரனில்லாத இரவுபோலவும் கணவனில்லாத பெண்போலவும் விளக்கமற்றிருந்தது. கண்ணீர்விட்டுக் கலங்கும் ஜனங்களையுடையதும் ஹா ஹா என்று புலம்பும் குலப்பெண்களுடன் சேர்ந்ததுமான நகரம் முன்போல விளங்கவில்லை.

இரவுகழியச் சூரியோதத்தின் பின்பு மார்க்கண்டேயர், மௌத்கல்யர். வாமதேவர், காச்யபர், காத்யாயநர், கௌதமர், ஜாபாலி, இவ்வந்தணர்களும், மந்திரிகளும், சபையை அடைந்து அரசருடைய முக்கிய புரோகிதரான வசிஷ்டமாமுனிவரை நோக்கித் தனித்தனிபேசலானார்கள்; "நமது அரசர் புத்திரசோகத்தால் மரணத்தை யடைந்தவளவில் நமக்கு நூறு வருஷங்கள்போலத் தோன்றின இரவும் துயரமாய்ச் சென்றுவிட்டது. அரசரும் சுவர்க்கத்தை யடைந்தார்; இராமரும் காட்டை யடைந்தார்;

லக்ஷ்மணரும் இராமருடனேயே சென்றார்; பரதசத்துருக்கனர்களும் கேகய நாட்டில் ராஜகிருஹம் என்ற அழகான நகரத்தில் மாதாமகனுடைய வீட்டில் இருக்கின்றார்கள். இப்பொழுதே இங்கு இக்ஷ்வாகு வமிசத்திற் பிறந்த இராமர் முதலிய நால்வரில் ஒருவர் மன்னவராக ஏற்படுத்தப்படட்டும். அரசனில்லாத இராச்சியம் நிச்சயமாய் நாசமடையு மன்றோ! பார்வை தேகத்தின் தீமையைக் கடிந்து நன்மையைச் செய்ய எப்பொழுதும் முயற்சிசெய்வதுபோல், சத்தியத்துக்குந் தருமத்துக்குங் காரணமான அரசனும் நாட்டின் தீமையைக் கடிந்து நன்மையைச் செய்ய எப்பொழுதும் முயல்கின்றான். அரசன் தான் சத்தியத்தையும் தருமத்தையும் நடத்துவிப்பவன். அரசன் தான் நற்குலத்திற் பிறந்தவருடைய குலாசாரத்தை நடத்துவிப்பவன். அரசன்தான் தாயுந் தந்தையும். அரசனே மனிதர்களுக்கு நன்மையைப் புரிபவன்" என்றார்கள்.

வசிஷ்டர் அவர்களுடைய சொல்லைக் கேட்டு "இங்கு வாருங்கள், ஸித்தார்த்தனே, விஜயனே, ஜயந்தனே, அசோகனே, நந்தனனே, துயரத்தை விட்டவர்களாய், என்னுடைய கட்டளையால் பரதரிடத்தில் "தங்களை நோக்கிப் புரோகிதரும் அமைச்சர்களெல்லோரும் க்ஷேமத்தைக் கூறுகின்றனர். வேகமாய்த் தாங்கள் வரவேண்டும்; காலங் கடந்த தொழிலொன்று தங்களுக்கு இருக்கிறது" என்று இதைச் சொல்லுங்கள். நீங்கள் அவரிடத்திற் சென்று, இராமர் காட்டுக்குப் போனதையும், தந்தையான தசரதர் மாண்டதையும், இரகுவின் குலத்துக்கு வந்திருக்குங் குறைவையும் சொல்ல வேண்டாம்" என்றார்.

அத்தூதர்கள் விரைவாகச் சென்று அழகியதும் பகைவர்களால் கிட்டக்கூடாத அகழியை யுடையதுமான 'ராஜகிருஹம்' என்ற பட்டணத்திற்புகுந்து, கேகய தேசத்து மன்னவராலும் அவருடைய புதல்வரான யுதா-

ஜித்தாலும் சம்மானிக்கப்பட்டவர்களாய், பரதருடைய பாதங்களில் வணங்கி, அவரைப் பார்த்து, "புரோகித ரான வசிஷ்டரும் மந்திரிமார்களெல்லோரும் தங்களை நோக்கி க்ஷேமத்தைச் சொல்லுகின்றனர். வேகமாய்த் தாங்கள் வரவேண்டும்" என்றார்கள். பரதர் பயணத்தில் விரைந்தவராய் மாதாமகனிடத்திலும் மாமனிடத்திலும் விடை பெற்றுச் சத்துருக்கனருடன் தேரிலேறிப் புறப் பட்டார். பரதர் வழியில் ஏழிரவுகளைக் கழித்து எட்டா வது நாட் காலையில் தம்மெதிரில் அயோத்தியையைக் கண்டு தமது சாரதியைப்பார்த்து பின்வருமாறு சொல்ல லானார் :—"சாரதியே, புகழ்படைத்த இந்நகரம் அரணிய மாய்விட்டதாக எனக்குத் தோன்றுகின்றது. இங்கு சிவிகை முதலியவைகளும் குதிரைகளும் யானைகளும் காணப்படவில்லையே! பிரதான மனிதர்கள் முன்போல் புறப்படவும் உட்புகவுங் காணவில்லையே! ஏதோ அநிஷ் டத்தைத் தெரிவிப்பனவாயும் கொடியனவாயும் பார்க்கும் பொழுதே துக்கத்தை யுண்டாக்குவனவாயுமுள்ள பல வகை கெட்ட சகுனங்களைக் காண்கின்றேன் ; அதனால் எனது மனம் துயரப்படுகின்றது. ஏன் காரணமின்றி விரைவாக நான் அழைக்கப்பட்டேன்? எனது மனம் கெட்டதை எண்ணுகிறது. எனது தன்மையும் அழிகின் றதுபோலும்" என்று சொல்லிக்கொண்டு அபசகுனங் களைக் கண்டு மனம் நொந்து அரண்மனையிற் புகுந்தார்.

பின்பு பரதர் தந்தையார் மாளிகையில் தமது தந்தையைக் காணமல் தமது தாயைக் காண அவள் மாளிகையை நோக்கிச் சென்றார். கைகேயி வெளியூரி லிருந்து வந்து சேர்ந்த புதல்வரான பரதரைக் கண்டு கட்டியணைத்து உச்சி மோந்து க்ஷேம சமாசாரம் வினவ பரதர் மாதாவினிடத்தில் எல்லாவற்றையுஞ் சொல்லி "அரசருடைய வாக்கியத்தைக் கொண்டுவந்தவர்களான தூதர்கள் என்னை விரைவித்ததனால் நான் முன்னே

வந்துவிட்டேன். பொன்னாலாகிய அலங்காரம் அமைந்ததும் படுக்கவுரியதுமான தங்களுடைய மஞ்சம் தகப்பனையின்றி யிருக்கிறது. அவரைப் பார்க்கவேண்டுமென்ற விருப்பத்துடன் இங்கு வந்தேன்; அம்மா, கௌசலையாரின் மாளிகையில் அவர் இருக்கின்றாரா?" என்றார். அரசர் நிலையை அறியாதவரான பரதரை நோக்கி கைகேயி "அரசரும் மகாத்மாவும் தேஜஸ்வியும் யாகஞ்செய்தவரும் நல்லவர்களுக்கு புகலிடமுமான உன் தகப்பனார் எல்லாப் பிராணிகளு மடையுங் கதியைத் தாமுமடைந்தார். மகாத்துமாவும் மிகவுத்தமருமான அம்மன்னவர், "ஹா! ராமா, ஹா! ஸீதா, ஹா! லக்ஷ்மணா," என்று புலம்பிக்கொண்டே பரலோகஞ் சென்றார். புதல்வ, நான்தான் இராமனுடைய பட்டாபிஷேகத்தைக் கேள்வியுற்று உனது பிதாவினிடத்தில் உனக்கு இராச்சியத்தையும் இராமன் காட்டுக்குப் போவதையும் வேண்டினேன். அவரும் தாம் முன்கொடுத்திருந்த வரத்தின்படி அவ்வாறே செய்தார், இராமனும் சீதையுடனும் லக்ஷ்மணனுடனும் காட்டுக்கு அனுப்பப்பட்டான். பெரும் புகழ் பெற்ற அம்மன்னவரும் அன்பனான தமது புத்திரனைக் காணமல் புத்திரசோகத்தாற் பரிதவித்தவராய் இறந்தார். அரச நீதியை யுணர்ந்தவனே, நீ இப்பொழுது அரசைக் கைப்பற்றுவாய்" என்றனள்.

பரதர் தந்தை இறந்ததையும் உடன்பிறந்தவரிருவர் காட்டுக்குப் போனதையும் கேட்டு துக்கத்தால் எரிக்கப்பட்டவராய் பின்வருமாறு சொல்லலானார்:— "தந்தையில்லாமலும் தந்தைக்குச்சமானரான உடன்பிறந்தவரில்லரமலும் நாசமாய்ப் போய்ப் புலம்பும் எனக்கு இங்கு இராச்சியத்தால் என்ன பயன்? எனது தந்தையார் நெருப்பைக் கட்டிக்கொண்டு அறியாதிருந்தார். எனக்குத் தீங்கையாலோசிப்பவரே, மன்னவர் உம்மால்கூற்றுவனுக்குக்கொடுக்கப்பட்டார். புதல்வனுடைய நன்மையிலேயே

அன்புகொண்ட உம்மை நிறைவேறின விருப்பினராகச் செய்யேன். சகலபந்துக்களுக்கும் அன்பரும் மாசற்றவரு மான தமையனுரைக் காட்டிலிருந்து அழைத்துவரப் போகிறேன். நான் இராமரைத் திருப்பிக் கொண்டுவந்த பிறகு விளங்குகின்ற ஒளியுள்ள அவர்க்கு நிலேயான மனத்தினுல் அடியனுகப் போகிறேன். நீர் அக்கினியி லாவது பிரவேசியும்; தண்டகையிலாவதுபுகும்; கழுத்திற் கயிற்றையாவது கட்டிக்கொள்ளும்; உமக்கு வேருெரு கதியில்லே" என இவ்வாறு கோபமடைந்தவராய், பாம்பு போற் பெருமூச்சுவிட்டு, தோமரத்தாலும் அங்குசத் தாலும் குத்தப்பட்ட யானே காட்டுப் பள்ளத்தில் விழு வதுபோல் பூமியில் விழுந்தார்.

16. பரதர் சபதம்

வெகுநேரங் கழிந்தபின்னர் எழுந்திருந்து அறிவை யடைந்து சத்துருக்கனருடன் கௌசலேயின் மாளிகையை நோக்கிப் புறப்பட்டார். பின்பு பரத சத்துருக்கனர்கள் கௌசலேயைக் கண்டு துயரமடைந்து, துயரத்தினுல் தோன்றிய வருத்தத்தினுல் பூமியில் விழுந்து அறிவிழந்த வளும், புலம்புபவளும், பூஜிக்கத்தக்கவளும், நன்மனத்தை யுடையவளுமான அவளே, புலம்புதலோடு வெகு வருத்தப் பட்டுக் கிட்டி கட்டி யணேத்துக்கொண்டார்கள். மிகவுந் துக்கித்தவளான கௌசலே பரதரை நோக்கி, "இராச் சியத்தில் ஆசையுள்ள உன்னுல் பகையற்ற இராச்சியம் அடையப்பட்டது. என் புதல்வன் எங்கே தவம்புரிகி ருனே, அங்கு நீயே என்னே அழைத்துப்போதல் தக்கதே; அது எனக்கு இஷ்டந்தான்" என்ருள்.

இவ்வாறு கொடிய வார்த்தைகளால் பயமுறுத்தப் பட்டவரான பரதர் விரணத்தில் ஊசியினுல் வருத்தப் பட்டவர்போல் மிக்க வேதனேயை அடைந்தார். பிறகு அவர் அஞ்சலியுடன் கௌசலேயைப் பார்த்து "ஆர்யே, பட்டாபிஷேகம் முதலியவைகளேப்பற்றி யறியாதவனும்

குற்றமற்றவனுமான என்னை ஏன் பழிக்கின்றீர்கள்? இராகவரிடத்தில் மிகுதியாகவுள்ள உறுதியான என் அன்பை தாங்கள் அறிவீர்களே" என்று சொல்லி கணவனையும் புத்திரனையு மிழந்த கௌசலையை சமாதானப் படுத்தி துக்கத்தாற் பீடிக்கப்பட்டவாராய் விழுந்தார்! கஷ்டம்! அப்போது சோகத்தாற் பரிதாபமடைந்த பரதரை நோக்கி கௌசலை, "புதல்வனே, எனக்குத் துக்கம் மீண்டு முண்டாகிறது. நீ சபதஞ் செய்து என் பிராணனை வருத்துகிறாய். என் புதல்வனே, உனது மனம் லக்ஷ்மணன் மனம்போல் தெய்வாதீனமாய்த் தருமத்தினின்று தவறாது நிற்கின்றது; உண்மையான பிரதிக்ஞையையுடைய நீ ஸத்துக்கள்டையுங் கதியை யடைவாய்" என சொல்லி, தமையன்மேல் அன்புவைத்தவரும் மகாபாகுவுமான அவரை மடியில் வைத்துக் கட்டி யணைத்துக் கொண்டு, மிக்க துயரப்பட்டவளாய்ப் புலம்பினாள்.

முனிவர்களி லுத்தமரான வசிஷ்டர், கைகேயியின் புத்திரரான பரதர் இவ்வாறு துயரத்தாற் பரிதபித்து நிற்க, அவரைப்பார்த்து, "ராஜகுமாரரே, மிக்க புகழ் பெற்றவரே, இனி சோகத்தை விட்டிடுங்கள். உங்களுக்கு மங்கள முண்டாகுக. தக்ககாலத்தில் மன்னவரை சுவர்க்கத்தை யடைவிக்குஞ் சிறந்ததான கருமத்தைச் செய்திடுக" என்றார். பரதர் வசிஷ்டருடைய வார்த்தையைக் கேட்டு தைரியமடைந்தவராய் பிரேதத்துக்குச் செய்யவேண்டிய எல்லாக் கருமங்களையுஞ் செய்தார்.

பிறகு பொழுது விடிந்தவுடன் பதினான்காம் நாள் அரசனையேற்படுத்திப் பட்டாபிஷேகஞ் செய்யுமவர்கள், ஒன்றுகூடிப் பரதரைப் பார்த்து, "மூத்த குமாரராகிய இராமரையும் மகாபலம் பொருந்திய லக்ஷ்மணரையும் காட்டுக்கு அனுப்பிவிட்டு நமக் கெல்லாஞ் சிறந்த குரவரான தசரதமன்னவர் சுவர்க்கஞ் சென்றார். ராஜ

குமாரரே, மிக்க புகழுடையவரே, தாங்கள் இப்பொழுது எங்களுக்கு அரசராகவேண்டும். இந்த ராஜ்யம் நாயகனற்றிருந்தும் தெய்வச் செயலால் குற்றஞ்செய்யாமலிருக்கிறது. ராஜ குமாரரே, இரகுவம்சத்திற் பிறந்தவரே, பட்டாபிஷேகத்திற்கு உரிய பொருளை சித்தமாக வைத்துக் கொண்டு அமைச்சர் முதலிய ராஜாங்கத்தவர்களும் பட்டணத்தவர்களும் தங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.'' என்றார்கள்.

விரதம்பூண்ட பரதர், பட்டாபிஷேகத்துக்கு உரிய எல்லாப் பொருள்களையும் வலம்வந்து, அந்தச் சனங்களெல்லாரையும் பார்த்து, "எப்பொழுதும் நமது குலத்தில் ஜ்யேஷ்டனுக்கே அரசு தக்கது. ஆகையால், ஜனங்களே, சமர்த்தர்களான நீங்கள், இவ்வாறு சொல்ல உரியவரல்லீர்கள். எனக்கு முன் தோன்றியவரும் தமையனுமான இராமர் நமக்குத் தலைவர். நான் அவருக்குப் பிரதிநிதியாகப் பதினான்குவருஷங் காட்டில் வசிப்பேன். சதுரங்கமென்ற மிக்க பலத்துடன்கூடிய சேனை சித்தமாகட்டும். இராமருக்கு பட்டாபிஷேகஞ் செய்வதற்காக அபிஷேகத்திற்கு உரிய இவ்வெல்லாப் பொருள்களையும் முன்னிட்டுக் கொண்டு காட்டுக்குச் செல்வேன். அவ்விடத்திலேயே அவருக்குப் பட்டாபிஷேகம் செய்து யாகசாலையிலிருந்து திரேதாக்கினியைக் கொண்டு வருவது போல் காட்டிலிருந்து அவரை அழைத்துவரப் போகிறேன்.'' என்று மறுமொழி கூறினார். ஜனங்களெல்லோரும் இராமரைக் குறித்து இவ்விதமான வார்த்தையைக் கூறும் பரதரைப்பார்த்து "தாமரையில் வசிக்கும் லக்ஷ்மிதேவி இவ்விதமாகப்பேசுந் தங்களை யணைந்து வசிக்கட்டும். தாங்கள் அரசருடைய குமாரரான இராமரிடத்தில் பூமியைக் கொடுக்க விரும்புகிறீரன்றோ" என்றார்கள். பின்னர் தமக்கு சமீபத்திலிருந்த சுமந்திரரை நோக்கி, "சுமந்திரரே, நீங்கள் சடிதியில் சென்று, என் கட்டளை

யால் விரைவில் யாத்திரையைப்பற்றி கட்டளையிட்டுச் சைநியத்தையும் அழைத்துவாருங்கள்" என்றார். பரதரால் இவ்வாறு சொல்லப்பட்ட சுமந்திரர் மகிழ்ச்சியோடு அவருடைய விருப்பத்திற்குத் தக்கவாறு அவர் கட்டளைப் படி உத்திரவிட்டார். இராமரை யழைத்துவரும் பொருட்டுக் கட்டளையிட்ட சைநியத்தின் யாத்திரையைக் கேட்டு பட்டணத்தோர்களும் சேனைத்தலைவர்களும் மிகவுஞ் சந்தோஷமடைந்தார்கள்.

பிறகு பரதர் எழுந்து காலைப்பொழுதில் சிறந்த தேரிலேறி இராமரைக் காணவேண்டுமென்ற ஆவலால் விரைவிற் புறப்பட்டார். அவருடைய மந்திரிமார் புரோகிதர்களெல்லாம், சூரியபகவானுடைய இரதத்தை யொத்தனவும் குதிரைகள் பூட்டப் பெற்றனவுமான இரதங்களிலேறி, அவருடைய முன்புறத்திற் சென்றார்கள். முறைப் படி சித்தமான ஒன்பதினாயிரம் யானைகளும், அறுபதினாயிரம் இரதங்களும் பலவகைப் படைகளையுடைய வில்லாளிகளும், பின்தொடர்ந்தனர். நூறாயிரங் குதிரைகள், குதிரைக்காரர்களுடன் கூடியனவாய், சத்திய சந்தரும் ஜிதேந்திரியரும் இராமரை நோக்கிச் செல்பவருமான பரதரைப் பின்தொடர்ந்து சென்றன. கைகேயியும் சுமித்திரையும் கௌசலையும் பிரகாசிக்கும் வாகனமேறி இராமரைத் திருப்பியழைத்துவரும்பொருட்டுச் சென்றார்கள். சனங்க ளெல்லோரும் மகிழ்ந்தவர்களாய் இராமரை நாடிச் சென்றார்கள். சிருங்கிபேரபுரத்துக்குச் சமீபத்தில் சக்கரவாகப் பறவைகளால் விளக்கமுற்ற கங்கைக்கரையைச் சேர்ந்து எல்லா மந்திரிமார்களையும் பார்த்து, "எனது சேனையை அதன் விருப்பத்தின்படி எல்லாப் பக்கங்களிலும் தங்க விடுங்கள். இப்பொழுது சிரமமடைந்த நாம் நாளைத்தினம் இந்நதியைக் கடப்போம். சுவர்க்கத்தையடைந்த மன்னவரது மேலிடத்தி

லடைந்த உடம்பின் சுகத்திற்காக நதியிலிறங்கி ஜலங் கொடுப்பதற்கு விரும்புகிறேன்" என்றார் பரதர். இவ் வாறு சொல்ல, மந்திரிமார்கள், "அப்படியே" என்று சொல்லி அச்சேனைத் தலைவர்களை அவரவரின் விருப்பின் படி வெவ்வேறாக இருக்க வைத்தார்கள்.

அங்கு கங்கைக் கரையிலேயே அவ்விரவு வசித்து, காலையில் எழுந்து மைத்திரமென்ற முகூர்த்தத்தில் பிரயாகை என்ற வனத்தை யடைந்து, பரதர், பரத்து வாச முனிவரது ஆச்சிரமத்தைக் கண்டு, புரோகிதராகிய வசிஷ்டரை முன்னிட்டுக்கொண்டு, காலால் நடந்துச் சென்றார். பின்பு பெருந் தவசியாகிய பரத்துவாசர், வசிட் டரைக் கண்டவுடன், சீடர்களைநோக்கி, "அருக்கியங் கொண்டு வாருங்கள்" என்று சொல்லிக்கொண்டு ஆசனத்திலிருந்து எழுந்தார். மிக்க தேஜஸ்வியான அவர், வசிட்டரைச் சேர்ந்து, பரதரால் அபிவாதனஞ் செய்யப் பட்டவராய், அவரைத் தசரத குமாரரென்று அறிந்தார். முறைப்படி பரத்துவாசர், பரதர், சத்துருக்கனர்களுக்கு அருக்கியத்தையும் பாத்தியத்தையும் பழங்களையுங் கொடுத்து க்ஷேமத்தை வினவி, "இராச்சியத்தைக் காக்கும் நீர் இங்கு வரக் காரணமென்ன? இதை முழு வதும் என்னிடத்திற் சொல்லும். என் மனம் தெளிவு பெற வில்லை" என்றார்.

இப்படிப் பரத்துவாசராற் சொல்லப்பட்ட பரதர் கண்களில் நீர் ததும்ப, "நான், என் தமயன் இராம ருடைய தாளில் அபிவாதனஞ் செய்யவும், அவரிடத்து நல்லவார்த்தைச் சொல்லவும், அவரை அயோத்திக்குத் திருப்பி யழைத்துப்போகவும் வந்தேன். தாங்கள் என்னைப்பற்றி இவ்வாறறிந்து என்னிடத்து அருள்புரிய வேண்டும். பகவானே, மன்னவரான இராமர் இப் பொழுது எங்கிருக்கிறார்? எனக்குச் சொல்லுங்கள்"

என்று மறுமொழி கூறினர். பரத்துவாசர் அருளோடு பரதரைப் பார்த்து இராமர் சீதையுடனும் லக்ஷ்மணருடனும் வசிக்குமிட மறிவேன். சித்திரகூட மகாபருவதத்தில் உமது தமையனுர் வசிக்கிருர். நாளை அவ்விடத்திற்குப் போவீர். இன்று மந்திரிகளுடன் இங்கு வசியும்." என்றனர்.

பரத்துவாசமுனிவர் பிறகு கைகேயியின் புத்திரரான பரதரை விருந்தினருக்குச் செய்யவேண்டிய சத்காரத்தின் பொருட்டு வேண்டினுர். அதிதி பூஜையைப் பெற்ற பரதர், அவ்விரவில் பரிவாரத்துடன் வசித்து, பின்பு இராமரைக் காணவேணுமென்ற விருப்பத்தால் பரத்வாசரை யடைந்து அஞ்சலிபந்தம் பண்ணிக் கொண்டு முனிவரை நோக்கி, அவரைச் சேவித்து வினவலானுர்: "பகவானே, தங்களால் மிகவும் திருப்தி செய்விக்கப்பட்டு, நிறைந்த சைநியங்களும் வாகனங்களையுமுடைய நான், மந்திரிகளுடன் சுகமாக வசித்தேன். இராமருடைய ஆச்சிரமத்தை எனக்குச் சொல்லுங்கள். அதற்கு வழியெது? இங்கிருந்து அது எவ்வளவு தூரத்திலுள்ளது?" என்று கேட்டார்.

மகாதேஜஸ்வியான பரத்துவாசர், "பரதரே, இரண்டரையோசனை தூரத்துக்கப்பால் நிர்மாநுஷமான காட்டில் அழகிய குகைகளையும் காடுகளையுமுடைய சித்திரகூடமென்ற பருவதம் இருக்கிறது. சிறியீர், அவ்விடம் பர்ணசாலை இருக்கிறது; அங்குதான் இராகவரைக் காண்பீர்" என்றனர். பரதர் அபிவாதனஞ் செய்து, அம்முனிவரிடத்தினின்றும் ஆசீர்வாதமடைந்து அவரை வலம்வந்து, அவரிடம் விடைபெற்று சைநியத்தை நோக்கி சித்தமாகும்படி கட்டளை யிட்டார்.

17. பரதர் இராமரைக் காணுதல்

ஸ்ரீமானுன பரதர் வெகு தூரம் வழிகடந்து மந்திரிகளிற் சிறந்தவரான வசிஷ்டரைப் பார்த்து, "என்னுல் பரத்துவாசரிடத்திலிருந்து எவ்வாறு கேட்கப்பட்டதோ அவ்வாறே காணப்படுகின்றது இவ்விடத்தின் வடிவம். ஆகையால் நாம் பரத்துவாசமாமுனிவர் சொன்ன இடத்தை நிச்சயமாயடைந்துவிட்டோம். இது சித்திர கூடமலை; இது மந்தாகினீ நதி. இதோ கொஞ்சந்தூரத்தில் கார்மேகம்போற் கறுத்த காடு விளங்குகின்றது. சேனையிற் சேர்ந்தவர்களில் தக்கவர்கள் இராமலட்சுமணர்களை காட்டில் காணுமாறு தேடட்டும்; புறப்படட்டும்" என்ருர். பரதருடைய வார்த்தையைக் கேட்டு ஆயுதபாணிகளும் சூரர்களுமான புருஷர்கள் அக்காட்டிற் புகுந்தார்கள்; பின்பு புகையையுங் கண்டார்கள். அவர்கள் தூமசிகையைக் கண்டு திரும்பி வந்து பரதரை நோக்கி, "மனிதரில்லாத இடத்தில் நெருப்பு இராது; ஆகையால் இவ்விடத்திலேயே இராமலட்சுமணர்க ளிருப்பது நிச்சயம்." என்ருர்கள். பரதர் அவர்களுடைய மனத்திற்குப்பிடித்த வார்த்தையைக் கேட்டு அச்சைனியங்க ளெல்லாவற்றையும் நோக்கி, "நீங்கள் சத்தஞ்செய்யாமலிருங்கள். இங்கிருந்து இனிமேற் செல்லவேண்டாம். நானும் சுமந்திரரும் வசிஷ்டருமே செல்லப்போகின்ருேம்" என்ருர். பின்பு இவ்வாறு சொல்லப்பட்ட அவர்களெல்லோரும் அங்கேயே நான்கு பக்கத்திலும் இருந்தார்கள். பரதரும் தூமசிகையிருந்த இடத்தில் கண்வைத்தார்.

அங்கு வெகு நாள் வசித்தும் அப்பருவதத்தையும் அங்குள்ள வனத்தையும் புதியவற்றைப்போலக் கண்டு மகிழ்பவருமான இராமர், காலைக்கடனை முடித்தபின்பு, சீதையை மகிழ்விக்கவும் அதனுல் தமது மனம் மகிழவும்

விருப்பங்கொண்டு, சசிதேவிக்கு இந்திரன் காண்பிப்பது போல் தமது மனைவிக்குச் சித்திரகூடத்தைக் காட்டி, "மங்களகரையே, இராச்சியத்தை விட்டு வந்ததும் அன்பர் களை விட்டிருத்தலும் இரமணீயமான இப்பருவத்தைப் பார்க்கும் என்னுடைய மனத்தை வருத்தவில்லை. நான் உன்னுடனும் லக்ஷ்மணனுடனும் இங்கு அநேக வருஷம் வசிப்பேனேயானால் அப்பொழுதும் துக்கம் என்னை வருத்தாது. நான் இந்த வனவாசத்தால் தந்தை யின் வாக்கை உண்மையாக்குதலும் பரதனுடைய பிரியத் தைச் செய்தலும் என்ற இரண்டு பயனடைந்தேன்" என்றார்.

அதன் பிறகு இராமர் சித்திரகூடபருவதத்தை விட் டுப் புறப்பட்டு அழகிய நீரையுடைய இரமணீயமான மந் தாகினி நதியை சீதைக்குக் காண்பித்து அவளைப்பார்த்து "மனமொத்தவளே, சித்திரகூடவாசம் பட்டணத்தில் வசிப்பதினும் மிக்க இன்பந் தருகின்றது; மந்தாகினியின் தோற்றம் உன்னைக் காண்பதினும் அதிக சுககரமானது. தவம், ஐம்பொறி யடக்கல், மனத்தைவெல்லல் இவைக ளுடன் பொருந்தியவர்களும் மாசற்றவர்களுமான சித்தர் களாற் கலக்கப்பட்ட நீரையுடைய மந்தாகினியில் என் னுடன் ஸ்நாநஞ்செய்வாய். நன்மடந்தாய், தோழியுடன் நீரில் மூழ்குவதுபோல என்னுடன் மந்தாகினி நதியில் மூழ்குவாய். தருமாத்மாவான லக்ஷ்மணனும் என் கட்டளை யில் நிற்கின்றான்; வைதேகி, நீயும் எனக்கு அநுகூலை; ஆகையால் நீவிரிருவரும் எனக்கு மகிழ்ச்சியை விளைவிக் கின்றீர்கள். முக்காலமும் இந்நதியில் உன்னுடன் ஸ்நா நஞ் செய்து, தேன், கிழங்கு, கனி இவைகளைப் புசிப்ப தால், எனக்கு அயோத்தியின்மேலும் விருப்பமில்லை; இராஜ்யத்தின்மேலும் விருப்பமில்லை" என்று மிக்க அன் போடு மேலும் சொல்லிக்கொண்டு, கண்ணுக்கு மைபோற் கறுத்துத் தோன்றுஞ் சித்திரகூடத்திற் சஞ்சரித்தார்.

பரதர் தமது சைன்யத்தை நிறுத்திவிட்டு பெருங் கானகத்தில் தாள்களினுலேயே புகுந்தார். சித்திரகூட மலையிலுள்ள பூத்திருக்கும் ஆச்சாமரத்தின்மீது ஏறி இராமராச்சிரமத்திலிருக்கும் அக்கினியினது உயரவெழும் பும் புகையைக் கண்டார். அதைப் பார்த்து ஸ்ரீமானுன பரதர், "இங்கு இராமர்" என அறிந்து, சுற்றத்தார்க ளுடன் ஆநந்தத்தாற் பரவசராஞர். சமுத்திரத்தின் கரையை யடைந்தவன் போலவும் ஆஞர்.

பின்பு பரதர் ஒரு முகூர்த்தத்தில் சித்திரகூடத்தை யடைந்து பெரியதும் மனோகரமானதுமான பர்ணசாலை யைக் கண்டார். ஒரு முகூர்த்தகாலம் உற்றுநோக்கி, பின்பு தமது குரவரும், பர்ணசாலையில் வீற்றிருப்பவரும், ஜடா மண்டலதாரியும் மான்தோல் தரித்தவரும், மரவுரியுடுத்த வருமான இராமர், தருப்பை பரப்பப்பட்ட பூமியில், சீதையுடனும் லக்ஷ்மணருடனும் வீற்றிருக்கக் கண்டார். "சுகத்திற்கு உரிய இராமர் என்பொருட்டு இத்துக் கத்தை யடைந்தார். உலகத்தவராற் பழிக்கப்படுவதான கொடிய என்னுடைய உயிர் பழிக்கத்தக்கதே" என புலம்பி எளிமையையடைந்து, முகத்தில் வேர்வைநீர் வடிய, இராமருடைய திருவடிகளை யடையாமல் விழுந் தார்! சத்துருக்கனரும், புலம்பிக்கொண்டு இராமர் திரு வடிகளை வணங்கிஞர். இராமரும் அவ்விருவரையும் அணைத்துக்கொண்டு கண்ணீர் வடித்தார்.

இராமர் பிறகு பரதரை உச்சிமோந்து கட்டிக் கொண்டு தமது மடிமேல் வைத்து வெகு அன்புடன் கேட்கலாஞர் :" குழந்தாய், நீ காட்டுக்கு வந்தபடியால் கேட்கிறேன்; உனது தந்தை எங்கே போஞர்? அவர் உயி ருடனிருக்க நீ காட்டுக்கு வருதல் தக்கதன்று. எளியவ ராய் லோகாந்தரத்தை யடையாமலிருக்கின்ருரா? யாகஞ் செய்ய உரியவனே, சிறியவனுன உன்னுடைய உறுதி யான இராச்சியம் கைசோராமலிருக்கின்றதா? குழந்தாய்,

சத்தியத்திற் பராக்கிரமமுள்ள தந்தைக்கு பணிவிடை செய்கின்றனையா? தம்தம் தொழிலைச் செய்வதில் கருத்தூன்றியவர்களும் ஐம்புலன்களையு மடக்கியவர்களும் உத்தமர்களும் வெகு உத்ஸாகத்தோடு கூடியவர்களுமான ஆயிரக் கணக்காயுள்ள பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் இவர்களால் எப்பொழுதும் சூழப்பெற்றதும், பலவகையான கோயில்களாற் சூழப்பட்டதும், வித்துவான்கள் நிரம்பியுள்ளதும், மிக்க மகிழ்ச்சியை யடைந்ததும், வளமுள்ளதுமான அயோத்திமா நகரை அதனுடைய பேர் சத்தியமாம்படி நீ இரட்சிக்கிறாயா? இரகுவம்சத்தவனே, முதியவர்களையும் சிறுவர்களையும் சிறந்த வித்துவான்களையும் தானம், அன்பு, இனியபேச்சு ஆகிய இம்மூன்றினாலும் வசப்படுத்திக்கொள்ளுகிறாயா? குருக்களையும், பெரியவர்களையும், தவசிகளையும், தெய்வங்களையும் விருந்தினர்களையும், நாற்சந்திகளிலுள்ளனவும் தெய்வங்களுக்கு வசிக்குமிடமுமான விருக்ஷங்களையும், யாகம் முதலியவற்றால் அவ்வுலக வின்பத்தை இவ்வுலகத்திலேயே பெற்ற அந்தணர்களையும் வணங்குகிறாயா? தருமார்த்த காமங்களைப் பிரித்து காலத்தில் நடத்துகிறாயா?"

இராமருடைய வார்த்தையைக் கேட்டு பரதர், "தருமத்தைக் கைவிட்ட என்னை ராஜதருமம் என்செய்யும்? ஆணேறே, அரசரே, 'மூத்தகுமார னிருக்கும்பொழுது இளையவன் அரசனாவதில்லை' என்ற சாசுவதமான தருமம் நம் முன்னோரிடத்திலிருந்தது. வளமுள்ள அயோத்திக்கு என்னுடன் வாருங்கள். நம்முடைய இக்குலத்தின் நன்மைக்காகத் தங்களை யபிஷேகஞ் செய்துகொள்ளுங்கள். தாங்கள் சீதையுடனும் லக்ஷ்மணனுடனும் புறப்பட்ட மாத்திரத்தில், அரசர் துக்கத்தாலும் சோகத்தாலும் மேலிடப்பட்டவராய் சுவர்க்கத்தைச் சேர்ந்தார். புருஷரிற் சிறந்தவரே, எழுந்திருங்கள்; தந்தையாருக்கு ஜலகிரியையைச் செய்யுங்கள். நானும் இந்தச் சத்துருக்கன

னும் ஸபிண்டீகரணம் வரையிலுஞ் செய்யவேண்டிய எல்லாக் கிரியைகளையும் முன்னமே பண்ணிவிட்டோம். இராகவரே, இஷ்டரால் கொடுக்கப்பட்ட ஜலம் பித்ருலோகத்தில் என்றும் குறையாததாகின்றதென்றன்றோ சொல்லுகிறார்கள்; தாங்களே தந்தைக்கு இஷ்டர்'' என்று கூறினார்.

இராகவர் தகப்பனாரின் மரணத்தைப்பற்றி பரதர் சொல்லைக்கேட்டு அறிவிழந்தவரானார். சோகத்தால் மெலிவடைந்து பூமியில் விழுந்த இராமரின்மேல் உடன் பிறந்தவர்கள் தண்ணீர் தெளித்தார்கள். இராமர் மீண்டும் அறிவையடைந்து, கண்களினால் நீரைச் சொரிந்துகொண்டு பரதரைப்பார்த்து, ''அகோ! பரத, குற்றமற்றவனே, நீ பயன் கைகூடப்பெற்றவன்; எதனால் மன்னவர், பிரேத காரியங்களெல்லாங் கிட்டினவளவில், உன்னாலும் சத்துருக்கனனாலும் கௌரவிக்கப்பட்டாரோ. நான் பிரதான புருஷனற்றும் ஆகுலத்தை யடைந்தும் அரசனில்லாமலுமிருக்கும் அயோத்தியை வனவாசத்தினின்று திரும்பின பின்பும் அடைய விரும்பேன்'' என வெகு தருமத்துடன் கூடிய சொற்களைக் கூறினார்.

இராமர் இவ்விதமாகப் பரதரைப்பார்த்துச் சொல்லி துயரத்தால் தபிக்கப்பட்டவராய் பூர்ண சந்திரன் போன்ற முகத்தையுடைய மனைவியிடஞ் சென்று, ''சீதே, உன் மாமனார் மரணமடைந்தார். லக்ஷ்மணா, தந்தையையிழந்தவனாகின்றாய். பரதன் துக்கமுண்டாம்படி தந்தை சுவர்க்கமடைந்தாரெனச் சொல்லுகிறான்'' என்றார். சீதை மாமனார் இறந்ததைக் கேட்டு நீர் நிறைந்த கண்களால் தனது கணவரை பார்க்க முடியாதவளாக இருந்தாள். பிறகு இராமர் உடன் பிறந்தவர்களுடன் மந்தாகினி தீரத்தினின்று சிறிது தூரங்கடந்து தனது தந்தைக்குப் பிண்ட பிரதானஞ் செய்தார். சீதையுடன் புலம்புகின்ற அவ்வுடன்பிறந்தவர்களுடைய ஒலியால், பருவதத்தில்

ள திரொலியுண்டாயிற்று. அப்பேரொலியையறிந்து பரதரின் சைநியத்திலுள்ளவர்கள் அச்சமடைந்தவர்களாய் பின்பு "பரதர் இராமரைச் சேர்ந்தாரென்பது திண்ணம்" என்று பேசினார்கள். இராமரைக்காண ஆவல் கொண்டவர்களாய் விரைவாய் ஆச்சிரமத்தை நோக்கிச் சென்றார்கள். வசிஷ்டர் தசரதருடைய மனைவிமார்களை முன்னிட்டுக்கொண்டு சென்று ஆகாசத்திலிருந்து நழுவிவிழுந்த தேவஜாதியிற் பிறந்தவனைப் போன்ற இராமரை ஆசிரமத்திற் கண்டார்.

எல்லாவிதமான போகங்களையு மொழித்த இராமரைப் பார்த்து தாய்மார்கள் சோகத்தால் மெலிந்தவர்களாய் வருத்தமுற்றுக் கூக்குரலிட்டுக் கண்ணீர் விட்டார்கள். இராமர் எழுந்திருந்து அவர்களுடைய அழகிய பாதங்களில் வணங்கினார். லக்ஷ்மணரும் அந்தத் தாய்மார்களெல்லாரையுங் கண்டு துக்கித்தவராய், இராமர் நமஸ்காரம் பண்ணின பிறகு தாமும் அபிவாதநஞ் செய்தார். சீதையும் மாமியாரான அவர்களுடைய பாதங்களில் வணங்கி, துக்கித்தவளாய், நீர் நிறைந்த கண்களையுடையவளாய், அவர்கள் முன்னின்றுகொண்டிருந்தாள். கௌசலை வனவாசத்தாலிளைத்து எளிமையை யடைந்து துக்கத்தால் வருந்துஞ் சீதையை தாய் மகளைக் கட்டியணைப்பதுபோல கட்டியணைத்துக்கொண்டு, "விதேகராஜருடைய மகளாயும் தசரத மன்னருக்கு மருகியாயும் இராமனுடைய மனைவியாயுமிருந்து நிர்மானுஷமான இக்காட்டில் எவ்வாறு துக்கத்தை யடைந்தாய்! உன் முகத்தைப் பார்க்கும் என்னை சோகாக்கினி நெருப்பு தான் இருக்குமிடத்தை யெரிப்பதுபோல் மிகவு மெரிக்கிறது" என்று கூறினாள். இராமர் துயரத்தால் வருந்துந் தமது தாயார் இவ்விதமாகப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது வசிஷ்டருடைய திருவடிகளைக் கிட்டி வணங்கினார்.

லட்சுமணருடன் கூடிய இராமர் தம்பியைத் தம் மேல் மிக்க அன்புடையவராக அறிந்து, "நீ, ஜடையையும் மரவுரியையுந் தரித்து இராச்சியத்தை விட்டிட்டு எந்த காரணத்தினுல் இத்தேசத்திற்கு வந்தனையோ அதைக் கேட்க விரும்புகிறேன். கிருஷ்ணுஜினம் ஜடை இவைகளைத் தரித்தவனுய் எதற்காக இத்தலத்திற் புகுந்தாய்? அதெல்லாவற்றையும் நீ சொல்ல வுரியாய்" என்று வினவினுர். மகாத்மாவான காகுத்தரால் நன்ருய்க் கட்டித் தழுவிக்கொண்டு இவ்வாறு மீண்டுங் கேட்கப்பட்ட பரதர் அஞ்சலி செய்துகொண்டு, "இப்பொழுதே தேவேந்திரன் போல் இராச்சியத்தால் அபிஷேகம் பண்ணிக்கொள்ளுங்கள். மந்திரிமார் முதலிய இந்தப்பிரகிருதிகளனைவரும், கைம்பெண்களான தாய்மார்களும், தங்கள் சமீபத்தையடைந்திருக்கின்ருர்கள்; ஆகையால் அருள்புரியவுரியீர். இராச்சியத்தைத் தருமத்தாலடையுங்கள்; நண்பர்களை விருப்ப மடைந்தவர்களாகச் செய்யுங்கள். தலைவரான தங்களால் நிறைந்த பூமி தலைவனற்றிருத்தலையிழந்ததாகட்டும்" என்றுசொல்லி நீர்நிறைந்த கண்ணினராய், இராமருடைய திருவடிகளை மீண்டும் முறைப்படி பிடித்துக்கொண்டார்.

இராமர் மதித்த யானையோல் அடிக்கடி பெருமூச்செறியும் தமது தம்பி பரதரைக் கட்டியணைத்து, "நற்குலத்திற் பிறந்தவனும், சத்துவகுணத்தை மிகுதியாகவுடையவனும், பராக்கிரமசாலியும், நல்லொழுக்கமுள்ளவனுமான உன்னைப்போன்றவன் இராச்சிய விஷயமாக, மூத்தவனுக்கெதிரா யிருத்தலாகிற பாபத்தை எவ்வாறு செய்வான்? சத்துருக்களை யடக்குபவனே, உன்னிடத்தில் நுண்ணிய குற்றத்தையும் நான் காணவில்லை. நீ பிதா கொடுத்த பாகத்தை உள்ளபடி யனுபவிக்கவுரியாய். நான் பதினன்கு வருஷம் தண்டகாரணியத்தை யாச்சிரயித்தவனுய், மகாத்மா

வாகிய தந்தையாரால் கொடுக்கப்பட்ட பாகத்தை யனுபவிப்பேன். அவருடைய கட்டளையை மீறுதல் எனக்குத் தக்கதன்று; எப்பொழுதும் அக்கட்டளை உன்னாலும் மேற்கொள்ளத்தக்கதே; அவர்தாம் நமது பந்து" என சொல்லி நின்றார்.

தார்மிகரான பரதர், இராமர் இவ்வாறு பொருளோடு கூடிய வார்த்தையைச் சொல்லி நின்றபின்பு, அற நெறியிற் பிழையாத விசித்திரமான வார்த்தையைக் கூறலானார்:—"நான், பரிசுத்தமானதும் பெரியவர்களாலநுஷ்டிக்கப்படுவதுமான தொழிலையே செய்யும் தசரதரிடத்தினின்று பிறந்து, தருமத்தையும் அறிந்து, உலகத்தார் வெறுக்கும் அதருமகார்ரியத்தை எவ்வாறு செய்வேன்? மிக்க அறிவினரே, க்ஷத்திரியர்களுடைய முதல் தருமம் குடிகளைப் பரிபாலனம் பண்ணக்கூடிய அபிஷேகஞ் செய்துகொள்ளுவதன்றோ! கண்ணுக்குத் தோன்றுஞ் சுகத்துக்கும் பரலோகத்துக்குஞ் சாதனமான குடிகளைக் காத்தலாகிற தருமத்தைக் கைவிட்டு, அப்பிரதியட்சமான பயன் விளைவையுடையதும், நிர்ணயிக்கப்பட்ட லக்ஷணமற்றதும், காலாந்தரத்தில் பயனை விளைவிப்பதும், க்ஷத்திரியன் முதலில் அநுஷ்டிக்க வேண்டுமென்று ஒருவராலும் அறுதியிடப்படாததுமான தவசிகளின் தருமத்தை எந்த க்ஷத்ரியன் அநுஷ்டிப்பான்? சிரமத்தை விளைக்குந் தருமத்தைச் செய்ய தாங்கள் விரும்புவீர்களேயானால் முறைப்படி நான்கு வருணங்களையும் பாதுகாத்துச் சிரமத்தை யடையுங்கள். இவ்விடத்திலேயே வசிஷ்டமகா ரிஷியுடன்கூடிய மந்திரமறிந்த ரித்விக்குகள், மந்திரிமார் முதலிய பிரகிருதிகளுடனொன்றுசேர்ந்து, பட்டாபிஷேகத்தைத் தங்களுக்கு முறைப்படி நடத்தட்டும். நான் தங்களைத் தலையால் வேண்டிக்கொள்ளுகிறேன்" என்றார்.

பின்பு இராமர் மறுபடியும் இவ்வாறு சொல்லும் பரதைரைப்பார்த்து, "உடன்பிறந்தவனே, முற்காலத்தில் உனது தாயரை மணம்புரிந்து கொண்டபொழுது, நமது தந்தையார் உனது பாட்டனாரிடம் 'தங்கள் பெண்வயிற்றிற் பிறக்கும் புத்ரனுக்கு இராச்சியத்தைக் கொடுக்கிறேன்' என்று பிரதிஜ்ஞை பண்ணினார். உனது தாய் உனக்கு இராச்சியமும் எனக்கு வனவாசமும் ஆக இரண்டுவரங் கேட்டார்; மன்னவர் இரண்டுவரத்தையும் கொடுத்தார். அதனால் நான் ஒருவராலுந் தடுக்க முடியாதவனாய் சீதையுடனும் லக்ஷ்மணனுடனும் இக் காட்டை யடைந்தேன்; அரசரிற் சிறந்தவனே, நீயும் 'அப்படியே' என்று ஒப்பி வெகுசீக்கிரமாக பட்டாபிஷேகஞ் செய்துகொள்வதனால் தந்தையைச் சத்தியவாதியாகச்செய்ய வுரியை. பரதனே, நீ மன்னவரைக் கடனிலிருந்து நீக்கிவை; தாயையும் களிக்கச்செய்" என்றார்.

18. பரதர் பாதுகைப் பெற்றது

வசிஷ்டர் இராமரைப் பார்த்து அப்போது கூறலானார். "இவ்வுலகத்தில் பிறந்த புருஷனுக்கு மூன்று குரவர்களுண்டு; காகுஸ்தரே, அவராவார், ஆசிரியரும் தந்தையும் தாயும். சத்துருக்களைத் தவிக்கச் செய்பவரே, நானே தகப்பனாருக்கும் தங்களுக்கும் ஆசிரியன். தாங்கள் என் சொல்லைச் செய்து முன்னோர்சென்ற வழியைக் கடவாதிருங்கள். இராகவரே, இரக்கின்ற பரதருடைய பேச்சுப்படி நடந்து அடைந்தவர்க்கு வசப்பட்டிருத்தலாகிற குணத்தைக் கடவாதிருங்கள்." இவ்வாறு மதுரமாகக் குருவாகிய வசிஷ்டராற் கூறப்பட்டவராய், இராமர் வசிஷ்டரைப் பார்த்து, "தசரத மன்னவர் என்னைப் பெற்ற தந்தை; அவர் எனக்கு இட்ட கட்டளை பொய்யாகமாட்டாது" என்றார். பின்பு பரதர், சபையோர்களே, மந்திரிமார்களே, பட்டணத்தவர்களே, கேளுங்

கள். நான் பிதாவினிடத்தில் இராச்சியத்தை வேண்டவில்லை. 'இவ்வாறு செய்யும்' என்று தாய்க்குங் கட்டளையிடவில்லை. மகா தருமஜ்ஞரும் பெரியவருமான இராமர் காட்டுக்குப் போக நான் மனமொப்பவுமில்லை. அவசியம் இராமர் காட்டில் வசிக்கவேண்டுமென்றும் அவர் பித்ரு வாக்கியபரிபாலனம் பண்ணவேண்டுமென்றும் நீங்கள் எண்ணுகிறீர்களேயானல், நானே அவருக்குப் பதிலாகக் காட்டில் பதினன்கு வருஷம் வசிப்பேன்'' என்றனர்.

அங்குச் சேர்ந்த மகரிஷிகள் ஒப்பற்ற காந்தியையுடைய அவ்வுடன்பிறந்தவர்களின் மயிரைச் சிலிர்ப்பிக்குஞ் சேர்க்கையைப் பார்த்து ஆச்சரியமடைந்தவரானுர்கள். அதன் பிறகு ராஜரிஷிகளும் தேவரிஷிகளும் கந்தருவர்களும் சீக்கிரம் இராவணனுடைய வதத்தை விரும்பினவர்களாய் ஒற்றுமையை யடைந்து இராசசார்த்தூலராகிய பரதரைப் பார்த்து, ''நற்குலத்திற் பிறந்தவரே, மிக்க அறிவுடையவரே, நல்லொழுக்கமுடையவரே, மிக்க புகழ்படைத்தவரே, பிதா நற்கதி யடையவேணுமென்று கருதுகின்றீரேயானல், இராமருடைய வார்த்தையை யங்கீகரிக்கவேணும். நாங்கள் இராமரைத் தந்தையின் கடனை நீக்கியவராயிருக்கும்படி எப்பொழுதும் விரும்புகின்ருேம்'' என்று சொல்லி தம்தம் கதிகளை யடைந்தார்கள். நல்லவற்றையே யறியுமவரான இராமர் அவ்வழகிய வார்த்தையால் மகிழ்ந்து மலர்ந்தமுகத்துடன் அவர்களைப் பூஜித்தார். பரதர் மெய்நடுங்க இராமரைப்பார்த்து, அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு, ''காகுஸ்தரே, நானொருவனுக, இந்தப் பெரிய இராச்சியத்தை இரட்சிக்க வல்லமையுள்ளவனன்று. பெரியவரே, பொன்னிலைலங்கரிக்கப்பட்ட பாதுகைகளைத் தாள்களினுல் ஏறுக: இவைகள் எல்லாவுலகத்தின் யோகக்ஷேமங்களைச் செய்யும்'' என்றுர். மிக்க தேஜஸ்வியான அந்த மனிதப்புலியானவர் பாதுகைகளி

லேறி யிறங்கி மகாத்மாவான பரதருக்கு அப்பாதுகை களைக் கொடுத்தார். பரதர், பாதுகைகளை வணங்கி, இராமரை நோக்கி, "வீரரே, நான் பதினான்கு வருஷ காலம், ஜடைதரித்து, மரவுரி யுடுத்து, பலங்களையும் மூலங்களையும் உணவாகக்கொண்டு, தங்கள் பாதுகை யிடத்தில் இராச்சிய தந்திரத்தைவைத்து, பதினான்கு வருஷம் நிரம்பினபின்பு அடுத்தவருஷத்து முதல்தினத்தில் தங்களைக் காணாவிடின், அக்கினியிற் புகுவேன்" என்றார். இராமர் அப்படியே யென்று பிரதிஜ்ஞைபண்ணி அவரை அன்புடன் தழுவியணைத்து சத்துருக்கனரையுந் தழுவி பரதரைப்பார்த்து, "தாயான கைகேயியைக் காப்பாற்று; அவர்மேல் கோபங் கொள்ளாதே. இரகுவம்சத்திலுத்தமனே, என்னாலும் சீதையாலும் ஆணையிடப்பட்டிருக்கிறாய்" எனக் கூறி, நீர்கொண்ட கண்ணினராய் தம் விடை கொடுத்தார்.

அதன்மேல் பரதர் பாதுகைகளை தலையின் மேல் வைத்துக்கொண்டு அயோத்தியில் விரைவிற் புகுந்தார். பிறகு பரதர் தமது தாய்மார்களை அயோத்தியில் விட்டிட்டு, சோகத்தால் தாபமடைந்தவராய், பெரியோர்களைப் பார்த்து, "நான் இப்பொழுது நந்தி கிராமத்திற்குப் போக உங்களெல்லாரிடத்திலும் விடைகேட்டுக் கொள்ளுகிறேன். இராமரைப் பிரிந்ததாலுண்டாகுந் துக்கத்தை அங்குப் பொறுப்பேன்" என்றார். மகாத்மாவாகிய பரதருடைய அழகிய வாக்கியத்தைக்கேட்டு எல்லாமந்திரிகளும் புரோகிதாரகிய வசிஷ்டரும், "பரதரே, தமையனாரிடத்து அன்பால் தாங்கள் சொன்ன மிகக் கொண்டாடத்தக்க சொல் தங்களுக்கே தக்கது" என்றார்கள்.

அதன்பின்பு பரதர் நந்திகிராமத்திற் புகுந்து சீக்கிரம் இரதத்தைவிட்டுக் கீழேயிறங்கித் தமது குரவர்களைப் பார்த்து, "எனது தமையனாரால் கொடுக்கப்பட்ட இந்த

இராச்சியத்தினுடைய யோகக்ஷேமங்களை நடத்துபவை பொன்னலலங்கரிக்கப்பட்ட இப்பாதுகைகளே" என்று சொன்னார். அதன் பின்னர் பரதர் தமக்குப் பதிலாக இராமரால் அளிக்கப்பட்ட அம்மரவடிகளைத் தலையால் தாங்கி, துக்கத்தால் தபித்துக்கொண்டு, மந்திரிமார் முதலான பிரகிருதிகளெல்லாரையும் நோக்கி, "இவ்விரு பாதுகைகளும் எனது பெரியவருடையன; இவைகளுக்குக் குடை முதலியவைகளைச் சீக்கிரம் பிடியுங்கள். எனது பெரியவருடைய இப்பாதுகைகளால் இராச்சியத்தில் தருமம் தங்குகின்றது. எனது தமையனார் என்மீதுள்ள அன்பால் மரவடியாகிற இந்தப் பிரதிநிதியை யளித்தார். நான் இராமருடைய வரவை யுத்தேசித்து இப்பிரதிநிதியைக் காப்பேன்". என புலம்பி நந்திகிராமத்தில் மந்திரிகளுடன் மரவுரியுடுத்து சடைமுடிதரித்து முனிவேஷம் பூண்டு அரசு புரிந்தார்.

பின்பு இராமர், ரிஷிகள் போனவளவில், "இவ்விடத்தில் நான் பரதரைக் கண்டேன்; நகரத்தார்களுடன் தாய்மார்களையுங் கண்டேன். நித்தியம் என் நினைவு அவர்களைப் பின் செல்கின்றது" எனப் பல காரணங்களை யாலோசித்து வேறு இடத்திற்குச் செல்வோமென்றெண்ணினார்.

ஆரணியகாண்டம்

19. இராமர் தண்டகாரணியத்தில் முனிவர்களை சந்தித்தல்

இராமர் மகாரணியமாகிய தண்டகாரணியத்தில் பிரவேசித்து, நாலுபக்கத்திலும், தருப்பைகளும் மரவுரிகளும் பரவியுள்ளதும், பிரமதேஜஸால் சூழப்பட்டதும், ஆகாயத்தில் ஜ்வலித்துக்கொண்டிருக்கிற சூரியமண்டலம் போல் பார்க்க முடியாததும், பல மூலங்களை அருந்துபவர்களும் இந்திரிய நிக்கிரகம் செய்தவர்களும் மரவுரி மான்றோலைத் தரித்தவர்களும் சூரியாக்கினிகளுக்குச் சமானமான காந்தியை யுடையவர்களுமான புராதன முனிவர்கள் வசிப்பதும், பரிசுத்தமானவர்களும் நியாயமான ஆகாரத்தை யுடையவர்களுமான பரமரிஷிகளால் விளங்குவதுமான முனிவர்களுடைய ஆச்சிரம மண்டலத்தைக் கண்டார். அங்கிருந்த திவ்யக்ஞானிகளாகிய மகரிஷிகள் இராமரையும் வைதேகியையும் லக்ஷ்மணரையும் கண்டு அன்போடு எதிர்கொண்டு அங்குள்ள பர்ணசாலைக்குள் உட்காரவைத்து உபசரித்து, கைகூப்பிக்கொண்டு பின்வருமாறு கூறினார்கள் :—

"வருணாச்சிரமங்களைப் பாதுகாத்து எல்லாரையும் ரக்ஷிப்பவராய், வெகு புகழ் பெற்றவராய், வெகு மரியாதைபொருந்தியவராய், எல்லாராலும் வணங்கப்பெற்றவராய், துஷ்டர்களை அடக்கிச் சிஷ்டர்களைப் பரிபாலனம் பண்ணுபவராய்த் தாங்கள் உள்ளீர்கள். தாங்களே எங்களெல்லாருக்கும் யஜமானர். இந்திரனுடைய நான்கிலொரு அம்சமாகிய இராஜா குடிகளை ரக்ஷிப்பது வழக்கமாகையால், அவர் எல்லாராலும் வணங்கப்பட்டுச் சகல சௌக்கியத்தையும் அனுபவிக்கிறார் என்பது கோட்பாடு. நாங்களெல்லாரும் தங்களுடைய நாட்டில் வசிக்குங் குடிகளாயிருக்கிறோமாகையால், தாங்களே எங்களெல்லாரை

யும் ரக்ஷித்தருளவேண்டும். காட்டிலிருப்பினுஞ்சரி நகரத்தில் வசிப்பினுஞ்சரி, தாங்களே எங்களுக்கு இறைவர். ஐயா, தாங்கள் இக்ஷ்வாகு குலத்திற்கும் இவ்வுலகத்திற்கும் முதல்வராயும் யஜமானராயும் இருக்கிறீர்கள். தேவர்களுக்கெல்லாம் எவ்வாறு இந்திரன் யஜமானனோ அது போல் எங்களுக்கெல்லாம் யஜமானன் தாங்களே. நாங்கள் யாசகர்களாக தங்களை அடைந்து சொல்லப்போகிறதைக் கேட்டு தாங்கள் எங்களை மன்னிக்கவேண்டும். இப்பொழுது தங்கள்முன் வந்துள்ள வானப்பிரஸ்த நிலையில் நின்றொழுகும் அந்தணர்களெல்லாம் அநாதைகள்போல ராக்ஷசர்களுபத்திரவத்தால் இக்காட்டில் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஐயா, எங்களுடன் கூட வந்து வெகு கொடியவர்களான இவ்வரக்கர்களால் பலவாறு கொல்லப்பட்ட பரிசுத்தர்களாகிய அளவிறந்த அருந்தவர்களுடைய சரீரங்களைப் பாருங்கள். நாங்களெல்லாரும் தங்களை இப்பொழுது சரணமாக அடைந்திருக்கிறோம். இராஜகுமாரரே, எங்களெல்லாரையும் இவ்வரக்கர்களுடைய உபத்திரவத்திலிருந்து ரக்ஷிக்கவேண்டும்.'' என்று ஒருங்கே முறையிட்டார்கள்.

தருமாத்துமாவாகிய இராமர் அதனைக்கேட்டு அவ்வருந்தபசிகளை நோக்கி "முனிவர்களே, இவ்வாறு என்னை நீங்கள் வருந்திக்கேட்டுக் கொள்ளுவது நியாயமன்று. நானே உங்களால் கட்டளையிடப்படவேண்டியவன். நான் இக்காட்டுக்கு வந்தது என் தந்தை வாக்கை நிறைவேற்ற. என் வனவாசமும் இதனால் வெகு பயனுள்ளதாகமுடியும். அருந்தவர்களுடைய சத்துருக்களாகிய அரக்கர்கள் எல்லாரையும் யுத்தத்தில் மடியச் செய்கிறேன்.'' என்றனர்.

தண்டகாரணியத்து ஆசிரம சமூகங்களில் இராமர் சுகமாக ஆங்காங்கு வசித்து அங்கிருந்த அருந்தவர்களால் பூசிக்கப்பட்டு, மறுபடியும் அவர்களுடைய ஆசிரமங்களில் ஒவ்வொன்றிற்கும் போகலானார். இராகவர்

8

முதலில் தாம் கொஞ்சநாள் வசித்த ஆசிரமங்களுக்கு மறுபடியும்சென்று, சில ஆசிரமங்களில் பத்து மாதம், சிலவற்றில் ஒருவருஷம், சிலவிடங்களில் நான்கு மாதம், சில தபோவனங்களில் ஐந்து அல்லது ஆறுமாதம், சிற் சில ஆசிரமங்களில் ஒன்றரைமாதம், சிலவாசிரமங் களில் அதற் கதிகமானகாலம், சிலவிடங்களில் மூன்று மாதம், சிலவற்றில் எட்டுமாதம் சுகமாக வசித்தனர். இவ்விதமாக முனிவர்களாச்சிரமங்கள்தோறும் ஒருவித குறைவும் உபத்திரவமுமில்லாமல் இராமர் பத்து வருஷ காலம் வசித்தார்.

பிறகு, அங்கிருந்து லக்ஷ்மணரோடும் சீதையோடும் அகஸ்தியமாமுனிவருடைய ஆச்சிரமத்துக்குப் புறப்பட் டார். குறிக்கப்பட்ட வழியே நடந்து 'காட்டுமரங்கள் யானைத்துதிக்கைகளால் கசக்கப்பட்டும், வானரக்கூட்டங் களால் விளக்கமுற்றும் மதர்த்த பறவைக்கூட்டங்கள் உல்லாசமாக உட்கார்ந்து கூவப் பெற்று நிற்கவும் இராமர் கண்டார். பின்பு லக்ஷ்மணரைப்பார்த்து இராமர் "லக்ஷ்மணா, இவ்விடத்தில் விருக்ஷங்கள் அடர்ந்து பசே லென்று தழைத்திருக்கின்றன. மிருகங்களும் பறவை களும் பழகினவைகள்போல வெகுசாதுவாக இருக் கின்றன. ஆகையால் பரிசுத்தமான ஆத்துமாவாகிய அகஸ்தியரது ஆச்சிரமம் சமீபத்தில் உளது போலும். இப்புண்ணியாசிரமம் கீர்த்திபெற்ற தீர்க்காயுளை யுடைய அகஸ்தியமாமுனிவருடையது. அவர் எப் பொழுதும் சாதுக்கள் க்ஷேமத்தையே கருதுபவர்; உலகத்தா ரெல்லாராலும் ஆராதிக்கப்படுபவர். நாம் அவரைக் கண்டால் நமக்கும் அவர் நன்மையையே பண்ணி வைப்பார். நாம் இவ்விடத்தில் அகஸ்தியமாமுனிவரை வணங்குவோம்." என்று கூறினர்.

இராமர் சீதா லக்ஷ்மணர்களோடு மிக்க சாந்தமான மான் கூட்டங்கள் நிரம்பியுள்ள அவ்வாச்சிரமத்தின் அழ

கைப்பார்த்துக்கொண்டு அதனுட்புகுந்தார். பிறகு மூவரும் முனிவரைப் பணிந்து எழுந்து கைகூப்பி வணங்கி நின்றார்கள். முனிவர் இராமரைப்பார்த்து "ஓ காகுத்த, எவ்வுலகத்துக்கும் அரசராய், தருமவானாய், மஹாரதராய், எல்லாராலும் வணங்கவும் சம்மானிக்கவும் தக்கவராய் உள்ள தாங்கள் எனக்குப் பிரியமான அதிதியல்லவா" என்றுசொல்லி, தன்னன்பிற் கிசைய பழங்களாலும் கிழங்குகளாலும் புஷ்பங்களாலும் இன்னும் மற்றவை களாலும் இராகவரை உபசரித்து மறுபடியும் அவரை நோக்கி சொல்லுவாராயினார். "ஓ புருஷ சிரேஷ்டரே, இதோ வெகு பெரிதாகப் பொன்னும் மணியும் இழைக்கப் பட்டு காணப்படுகிற இந்தத்திவ்ய தனுசு விஷ்ணு வினுடையது; விசுவகர்மாவால் இயற்றப்பட்டது. ஒரு பொழுதும் தவறுதலில்லாத சூரியன்போல் பிரகாசிக்கும் இந்தப் பாணம் அஸ்திரங்களுக்குள் உத்தமமானது; பிரமதேவரால் கொடுக்கப்பட்டது. இவைகளை யன்றி என்றும் குன்றாத கொழுந்துவிட்டெரியும் அக்கினி போல் விளங்கிக்கொண்டிருக்கும் பாணங்களால் நிரம்பிய இரண்டு அம்பறாத்தூணிகளும் என்னிடம் இருக்கின்றன. இவைகள் எனக்கு இந்திரனால் கொடுக்கப்பட்டன. இந்தத் தனுசைக்கொண்டுதான் விஷ்ணுபகவான் அசுரர் களை யெல்லாம் போரில் வெற்றி கொண்டு தேவர் களுடைய பெரும்பாக்கியம் என்றென்றைக்கும் கேடின்றி விளங்கும்படி வைத்தார். இந்த வில், இந்த அம்பறாத் தூணி, இந்த அஸ்திரம், இந்த வாள், இவைகளைத் தாங்கள், இந்திரன் வச்சிராயுதத்தைக்கைப்பற்றுவது போல் வெற்றியடையும்பொருட்டுக் கைப்பற்றுங்கள்." இவ்வண்ணஞ்சொல்லி, அகஸ்தியமுனிவர் அவ்வுத்தம மான ஆயுதங்களெல்லாவற்றையும் இராமருக்களித்து மறுபடியும் அவரைப்பார்த்துப் பின்வருமாறு மொழிந் தார்.

"ஓ இராமா, தங்களைக்கண்டு நான் மிக்க சந்தோஷமடைந்தேன். தங்களுக்கு க்ஷேம முண்டாகக்கடவது. லக்ஷ்மணா, உங்கள் வரவாலும் நான் மிகக் களித்தேன். என்னை வணங்கவேண்டுமென்றே நீங்கள் சீதையுடன் இவ்விடத்துக்கு எவ்வளவு சிரமப்பட்டு வந்தீர்கள்." இவ்வண்ணம் அகஸ்தியமாமுனிவர் சொல்ல இராகவர் அஞ்சலி செய்து அம்முனிவரைப் பார்த்து "ஐயா, முனிபுங்கவராகிய தாங்களே என்னிடத்தும், என் தம்பி, என் மனைவி, இவர்களிடத்தும் இருக்குங் குணங்களைக் கண்டு வியந்ததனால் நானின்றுமுதல் வெகு பாக்கியமும் அனுக்கிரகமும் பெற்றவனானேன். தாங்கள் இப்பொழுது நான் பர்ணசாலை கட்டிக்கொண்டு சுகமாக வசிக்கத்தக்கதான நல்ல, நீர்வளமுள்ளதும் அழகான காடடர்ந்ததும் ஆகிய ஓரிடத்தை அருளிச்செய்யவேண்டும்" என்றனர்.

இவ்விதமாக இராமர் சொன்னதைக்கேட்ட அகஸ்தியர் கொஞ்சநேரம் யோசித்து; வெகு பிரியமாக "இங்கிருந்து இரண்டுயோசனை தூரத்தில், அநேக பல மூலங்கள் நிரம்பி, பற்பல மான்கள் கொஞ்சிவிளையாடும் பஞ்சவடி என்று பெயர்போன ஒரு அழகான பிரதேசம் இருக்கின்றது. அங்கே போய் அவ்விடத்தில் ஓர் ஆசிரமபதத்தை ஏற்பாடுசெய்து கொண்டு லக்ஷ்மணரோடு வெகு சுகமாக பிதிர்வாக்கிய பரிபாலனம் பண்ணிக்கொண்டு வாசஞ்செய்க. அது வெகு சிலாக்கியமானது. அது இங்கிருந்து வெகுதூரமுமன்று; கோதாவரி நதிக்கு அருகிலுள்ளது. அதைக்கண்டும் வைதேகி சந்தோஷமடைவாள்." என்று சொல்லினர்.

பஞ்சவடிக்கேகும்பொழுது இராமர் அதி பராக்கிரமம் பொருந்தியதும், பருத்த உடலையுடையதுமான கழுகொன்றைக்கண்டார். ஒரு பெரும் ஆலமரத்தில் உட்கார்ந்திருந்த அக்கழுகைக் கண்டு இராமலக்ஷ்மணர்கள் அதனை ஓரரக்கனென்று தங்களுக்குள்ளே எண்ணிக்கொண்டு

அதைப்பார்த்து "நீ யார்?" என்று கேட்டார்கள். அக்கழுகு அவர்களைப் பார்த்து வெகு மதுரமாகவும் பிரியமாகவும், "என் குழந்தைகளே, நான் உங்கள் தந்தையின் தோழனென்று அறிந்துக்கொள்ளுங்கள்" என்றது. தமது தந்தையின் தோழனென்று கேட்ட மாத்திரத்தில் இராமர் அக்கழுகினுக்கு மரியாதைபண்ணி, அதன்மேல் அப்பக்ஷிராஜனுடைய குலத்தையும் பெயரையும்பற்றிக் கேட்டார். இராமர் சொன்னதைக்கேட்டு அப்புள்ளரசு எல்லாப் பிராணிகளுடைய உற்பத்தியையும் தனது பெயரையும் சொல்லி "என்னை சேனி புத்திரன் ஜடாயு என்று அறிந்துக் கொள்ளுங்கள். தங்களுக்கு மனமிருக்கும் பக்ஷத்தில் நான் தாங்கள் வசிக்குமிடத்திலிருந்துகொண்டு தங்களுக்கு என்னால் செய்யக்கூடுமுதவிகளைச் செய்வேன். இக்காடு மிக அடர்ந்து மிருகங்களும் ராக்ஷசர்களும் சஞ்சாரம் பண்ணுமிடமாக விருக்கிறது. தாங்களும் லக்ஷ்மணரும் பர்ணசாலையைவிட்டு எப்பொழுதாவது வெளியிற்போகும்படி நேர்ந்தால் நான் அக்காலத்தில் சீதையைப் பாதுகாப்பேன்" என்றது.

பிறகு, இராமர் அநேக மான்களும் கொடிய சர்ப்பங்களும் மிருகங்களுஞ் சஞ்சரித்துக்கொண்டிருக்கும் பஞ்சவடி சேர்ந்து, வெகு பராக்கிரமசாலியாகிய தமது தம்பி லக்ஷ்மணரைப்பார்த்து "இவ்விடம் சமமாயும் வெகு அழகாயும் மலர் மரங்களால் சூழப்பட்டும் இருக்கிறது. ஆகையால், இவ்விடத்திலேயே நாம் வசிக்க ஓர் ஆச்சிரமத்தை நீ செய்" என்றார்.

இராமர் அம்மொழி புகலலும் வலிமிகுந்த லக்ஷ்மணர் வெகு சீக்கிரமாக தமது தமையனார் வசிப்பதற்காக ஓர் ஆச்சிரமத்தை அவ்விடத்தில் அமைத்தனர்.

இராமர் அங்கே சுகமாக வசித்துக்கொண்டிருக்கும்பொழுது சரத்காலங்கழிந்து ஹேமந்தருது தொடங்கிற்று. அக்காலத்தில் ஒருநாள் இரவு கழிந்து பொழுதுவிடியும்

வேளையில் பிராதக்கால ஸ்நானத்திற்காக இரகுநந்தனர் அழகான கோதாவரிக்கு தம்பியோடும் சீதையோடும் போயினர். பிறகு அவர்கள் தங்கள் பிதிர்களுக்கும் தேவதைகளுக்கும் செய்யவேண்டிய தர்ப்பணங்களைச் செய்து முடித்து உதயஞ்செய்த சூரியனையும் மற்ற தேவதைகளையும் விதிப்பிரகாரம் ஸ்தோத்திரம் பண்ணினார்கள். சீதா தேவியுடன் இராமர் தமது ஆச்சிரமத்தில் வீற்றிருந்தது சித்திரையோடு சந்திரன் கூடியிருந்ததுபோல் விளங்கிற்று.

20. பஞ்சவடிக்கு சூர்ப்பணகையின் வரவு

இராமர் தம் ஆச்சிரமத்தில் மகரிஷிகள் ஆராதிக்கத் தமது தம்பி லக்ஷ்மணரோடு அனேக விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். இவ்விதமாக அவர் பேசிக்கொண்டிருந்த காலத்தில் தசக்கிரீவன் தங்கையாகிய அரக்கி சூர்ப்பணகை தற்செயலாக அவ்விடம் வந்தாள், தேவர்க்கொப்பான இராமரைக் கண்டாள். அவரது சுமுகமெங்கே? இவளது துர்முகமெங்கே? அவரது குறுகிய வயிறெங்கே? இவளது சரிந்த பெருத்த வயிறெங்கே? அவரது நீண்ட பெரிய கண்களெங்கே? இவளது விகாரமான கண்களெங்கே? அவருடைய அழகிய குஞ்சியெங்கே? இவளது சிவந்த விரிந்த கூந்தலெங்கே? கண்டோர் மனதைக்கவரும் அவரது வனப்பெங்கே? எல்லாரும் நடுங்கத்தக்க இவளது கோரமான உருவெங்கே? அவரது இனிய குரல் எங்கே? இவளது பயங்கரமான குரலெங்கே? அவரது இளமையெங்கே? இவளது மூப்பெங்கே? அவரது இனிய பிரிய வசனமெங்கே? இவளது வன்சொல்லெங்கே? அவரது அறநெறியெங்கே? இவளது மறநெறியெங்கே? இராமரோ அழகுள்ள சுந்தரபுருஷர். சூர்ப்பணகையோ, வெகு விகாரமான அரக்கி. இவ்வளவு வித்தியாசங்கள் காமத்தால் கட்டுண்டவர்களுக்குத்

தோற்றுமா? ஆகையால், சூர்ப்பணகை இராமரைக் கண்டு மயங்கி அவரை நோக்கிச் "சடைமுடிதரித்துத் தவ வேடம் பூண்டு வில்லேந்திக்கொண்டு மனைவியுடன் ராக்ஷசர்கள் சஞ்சரிக்கும் இந்த இடத்துக்கு ஏன் வந்திருக்கிறீர்? நீர் வந்த காரணமென்ன? அதின் உண்மையை எனக்குச் சொல்லவேண்டும்" என்று வினவினள். இவ்வாறு சூர்ப்பணகை தம்மைக் கேட்கவே, எல்லா விஷயங்களையும் இராமர் கூறினர்.

இதைக்கேட்டுக் காமத்தால் வருத்தப்பட்டுக் கொண்டிருந்த சூர்ப்பணகை இராமரைப்பார்த்து "கேளும் இராமரே, நானுண்மையைச் சொல்லுகிறேன். நான் சூர்ப்பணகை என்னும் அரக்கி. இஷ்டப்படி உருவங்கொள்ளுஞ் சக்தி எனக்குண்டு. பார்ப்பவர்கள் உள்ளத்தை நடுங்கச் செய்துகொண்டு நானிந்தக்காட்டில் தனிமையாக எப்பொழுதும் சஞ்சரிப்பவள். இராவணன் என் தமையன். அவன் வெகு பலசாலி; அரக்கர்களுக்கெல்லாம் இறைவன். அவ்வீரன் விசிரவசுவுடைய குமாரன். அவனைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். எப்பொழுதுந் தூங்கிக்கொண்டே யிருக்கும் மகாபலம்பொருந்திய கும்பகர்ணனும், ராக்ஷசகுலத்தில் பிறந்தும் வெகு தர்மாத்துமாவாய் ராக்ஷச குணமேயில்லாத விபீஷணனும், போரில் கீர்த்தி பெற்ற கரனும், தூஷணனுமாகிய இவர்களெல்லாரும் என் சகோதரர்கள். நான் இவர்கள் எல்லாரையும் விட்டுவிட்டு என்னிஷ்டப்படி சஞ்சரிக்க வல்லவள். இராமரே, நான் தங்களைக் கண்டமாத்திரத்தில் தாங்கள் எனக்குப் புருஷனாகவேண்டுமென்று எண்ணங்கொண்டு தங்களிடம் வந்திருக்கிறேன். என்றென்றைக்கும் என் கணவராகத் தாங்கள் ஆகவேண்டும். சீதை உங்களுக்கு என்ன செய்யப்போகிருள்" என்றனள்.

இவ்வண்ணம் காமவலையில் கட்டுண்டு பேசின சூர்ப்பணகையைப் பார்த்து இராமர் சிறிது முறுவலித்து பரி

காசமாகக் கூறலுற்றுர் :—"மெல்லியலே, நான் கல்யாண மானவன். இவள் என் மனைவி. உன்னைப்போன்ற மங்கையர்கள் மாற்றவளைக் கண்டால் சகியார்கள். என் தம்பி லக்ஷ்மணன் மிக நல்லவன்; அழகுள்ளவன்; ஆகையால் நீ அவனைப் புருஷனுக அடை." இவ்வாறு இராமர் சொல்லவே, காமத்தால் மோகித்திருந்த சூர்ப்பணகை உடனே அவரை விட்டுவிட்டு விரைவாக லக்ஷ்மணரிடமோடி அவரைப் பார்த்து "வெகு அழகான உருவம் படைத்த தங்களுக்குத் தகுந்த மனைவி நாளுெருத்தியே. தாங்களும் என்னுடன் சுகமாகத் தண்டகையின் இடமெங்கும் சஞ்சரிக்கலாம்" என்று சொன்னுள். இவ்விதமாகத் தம்மைப் பார்த்து சூர்ப்பணகை சொல்ல, பேசுவதில் சமர்த்தராகிய லக்ஷ்மணர் புன்னகை செய்து அவளை நோக்கி "தாமரை போன்ற அழகான நிறமுள்ள மாதே, நான் சுவதந்தரம் உள்ளவனல்லன். என் தமையனுருடைய தாஸன். தாஸபூதனுன எனக்கு நீ மனைவியாகுவது நன்ருகவிருக்கவில்லை. மிக்க சிறு பெண்ணுகிய நீ உன் மனோரதங்களை நிறைவேற்றிக் கொள்ள விரும்பின் வெகு பாக்கியசாலியான என் தமையனுருடைய மனைவியாகி விடு" என்று கூறினர்.

இது பரிகாசம் என்றறியும் புத்தியில்லாத, சரிந்த வயிறுடைய அக்கொடிய ராக்ஷசி அவர் சொன்ன சொல்லை உண்மையென்றெண்ணிக் காதலால் மயங்கி சீதாதேவியுடன் பர்ணசாலையில் உட்கார்ந்திருந்த இராமரை நாடிச் சென்று அவரை நோக்கி "இந்த அழகற்ற, கெட்ட நடக்கையுள்ள, சரிந்த வயிறுள்ள கிழவியை மனைவியாக அடைந்திருக்கிறபடியால் தாங்கள் என்னிடம் அன்பற்றிருக்கிறீர்கள். மனுஷியாகிய இப்பேதையை நானிதோ தாங்கள் பார்த்துக் கொண்டிருக்க புசித்து விடுகிறேன். அதன் பிறகு சக்களத்திப் பயமின்றி நான் தங்களுடன் கூட சுகமாக வசிக்கிறேன்" என்று சொல்லி, அவ்வரக்கி வெகு கோபத்துடன் உரோகிணி நக்ஷத்திரத்தை ஒரு

தூமகேது சீறிச்செல்வதுபோல மான் போன்ற பார்வையுடைய சீதையை நோக்கி ஓடினாள். காலபாசத்துக்கொப்பாக அவ்வாறு ஓடி வரும் அரக்கியை வலி மிகுந்த இராமர் தடுத்து வெகு கோபங் கொண்டு லக்ஷ்மணரைப் பார்த்து "லக்ஷ்மணா, கொடிய குணமுள்ள துஷ்டர்களுடன் விளையாடல் ஒரு பொழுதும் கூடாது. சீதையினுடைய உயிருக்கு நாசம் வரப் பார்த்தது. குரூபியும், கொடியவளுமான இந்த ராக்ஷசியை உருவங்குலைத்துவிடு" என்றார். இராமர் அவ்வாறு சொல்ல, லக்ஷ்மணர் சூர்ப்பணகையைப் பார்த்து வெகு கோபங்கொண்டு தமது கத்தியை எடுத்து அவளுடைய காதுகளையும் மூக்கையும் அறுத்து விட்டார். தனது மூக்கும் காதும் வெட்டுண்டவுடன் சூர்ப்பணகை வெகுபயங்கரமாகக் கதறிக்கொண்டு தான் வந்த வழியாகவே காட்டுக்குள் ஓடினாள். அதன் பிறகு அவள் கரன் என்ற தமது தமையனிருந்த ஜனஸ்தானத்துக்குச் சென்று ராக்ஷசர்கள் சூழ சபையில் பயங்கரமாக விளங்கிக் கொண்டிருந்த அவன் முன்பாக ஆகாசத்திலிருந்து இடிவிழுவதுபோலப் போய்விழுந்தாள்.

உருவங்குலைந்து, இரத்தம் பெருகிக்கொண்டு, தன் முன் கதறிக்கொண்டு வந்துவிழுந்த சூர்ப்பணகையை கரன்பார்த்து மனங் கொதித்து 'எழுந்திரு; உனது பயத்தையும் கலக்கத்தையும் விட்டுவிடு; இவ்விதமாக நீ யாரால் உருக்குலைக்கப்பட்டாய் என்பதைத் தெளிவாகச் சொல்லு" என்றான். இவ்விதமாக வெகு கோபத்தோடு தனது தமையன் மொழிந்ததைச் சூர்ப்பணகை கேட்டு, கண்ணுங்கண்ணீருமாக அவனைப் பார்த்துச் சொன்னாள்:- "யௌவனமான மிக அழகிய உருவமுள்ளவர்களாய், மகா பலசாலிகளாய், தாமரைபோல விசாலமான கண்களுடையவர்களாய், மரவுரியும் மான்தோலும் உடுத்து, பழங்களையும் கிழங்குகளையும் புசித்து, வெகு பரிசுத்தர்களாய், ஐம்புலன்களையுமடக்கித் தருமத்தை நடத்தும்

தபசிகளாய், கந்தர்வ மன்னவருக்கொப்பானவர்களாய், ராஜ லக்ஷணங்கள் அமைந்த தசரதருடைய குமாரர்களான இராம லக்ஷ்மணர்களென்ற இரண்டு சகோதரர்கள் இப்பொழுது இக்காட்டில் வந்திருக்கிறார்கள். எல்லாவித லக்ஷணமுமமைந்து எல்லாவித நகைகளும் பூண்டிருக்கும் ஒரு அழகான சிறுபெண் அவர்களுடனிருக்கிறாள். அந்தப் பெண்ணின் நிமித்தம் அவர்களால் நான் அநாதையாய் நெறிநீங்கி அலையும் ஒருபெண்போல அவமானம் அடைந்தேன். தீயநெறியில் ஒழுகும் அந்தப் பெண்ணையும் அவர்களையும் சண்டையில் கொன்று அவர்களுடைய இரத்தத்தை நான் நுரையுடன் குடிக்க விரும்புகிறேன்.'' இவ்விதமாக அவள் சொல்லக் கேட்ட கரன், வெகு கோபங்கொண்டு, யமனுக்கொப்பான மகாபலம் பொருந்திய பதினன்கு ராக்ஷஸர்களைப் பார்த்து "ஆயுதபாணிகளாய் மரவுரி மான்றோல் உடுத்து இரண்டு மனிதர்கள் ஒரு பெண்ணுடன் இந்தப் பயங்கரமான தண்டகாரணியத்துக்கு வந்திருக்கிறார்களாம். அவர்களையும் அக்கொடிய பெண்ணையும் நீங்கள் கொன்றுவிட்டு வரவேண்டும். அம்மூவர்களுடைய இரத்தத்தை என் தங்கை குடிக்கட்டும்'' என்று கட்டளையிட்டான். இவ்வாறு கட்டளை இடப்பட்ட பதினன்கு ராக்ஷசர்களும் காற்றினால் ஓட்டப்பட்ட மேகங்கள்போல இராமரிருந்த இடத்தை நாடிச் சூர்ப்பணகையுடன் சென்றார்கள்.

சூர்ப்பணகை இராமருடைய ஆசிரமஞ் சேர்ந்து அவ்விடத்தில் சீதையுடன் உட்கார்ந்திருந்த அவ்விரு சகோதரர்களையும் அவர்களுக்குக் காண்பித்தாள். அவ்வாறு வந்த ராக்ஷசர்களையும் சூர்ப்பணகையையும் இராமர் கண்டு லக்ஷ்மணரைப் பார்த்து, "லக்ஷ்மணா, கொஞ்சநேரம் சீதையைக் காத்துக்கொண்டிரு. இவ்விடம் வந்திருக்கும் அரக்கர்களை நான் வதஞ்செய்கிறேன்'' என்றார். எல்லாமறிந்த இராமர் சொன்னதைக் கேட்டு லக்ஷ்மணர்

"அப்படியே யாகட்டும்" என்று சொல்லி அவ்வாறே செய்தார். உடனே இராமர் தமது பெரிய வில்லை நாணேற்றிக் கையிற் பிடித்துக்கொண்டு அங்கு வந்திருந்த அரக்கர்களைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்:—"நாங்களிருவரும் தசரத மன்னவரின் குமாரர்கள். எங்கள் பெயர் இராம லக்ஷ்மணர்கள். எளிதில் கடக்க முடியாத இத் தண்டகாரணியத்துக்கு சீதையுடன் நாங்கள் வந்திருக்கிறோம். இருஷிகள் நடத்தும் பெரிய யாகங்களுக்கு எப்பொழுதும் இடையூறியற்றும் பாபிகளாகிய உங்களை வதைக்க வேண்டுமென்று, அவர்களுடைய வேண்டுகோளின்படி, நான் எனது பாணங்களையும் மற்ற ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு இங்கு வந்திருக்கிறேன். என்னுடன் போர்புரிய வேண்டுமென்ற எண்ணமிருந்தால் இவ்விடமே பின் வாங்காமல் நில்லுங்கள்."

அப்பதினன்கு ராக்ஷசர்களும் இராமர் சொன்ன சொல்லைக் கேட்டு அவர்மேல் தாங்கள் கையில் பிடித்திருந்த சூலங்களை விசை கொண்டு எறிந்தார்கள். அவ்விதமாகத் தம் மீது விடப்பட்ட பதினன்கு சூலங்களையும் இராமர் பொன்னிழைத்த பாணங்களைச் செலுத்தித் துணித்தெறிந்தார். பிறகு கல்லையுந் துளைக்குங் கூர்மையுள்ள பதினன்கு பாணங்களைக் கையிலெடுத்து, தமது வில்லை நேராக நிறுத்தி அதில் பூட்டி, அவ்வரக்கர்களைச் சரியாகக் குறிப்பிட்டு, இந்திரன் தனது வச்சிராயுதத்தை விடுவதுபோல விடுத்தனர். அரக்கர்கள் தங்கள் மார்புகள் பிளவுண்டு தேக முழுதும் இரத்தமோடப் பாணத்தால் உடம்புகள் துளைக்கப்பட்டு பிராணனை இழந்து வேர் வெட்டுண்ட விருக்ஷங்கள்போல பூமியிற் சாய்ந்தார்கள்.

அவர்கள் அவ்வாறு பூமியில் விழுந்ததைக் கண்ட சூர்ப்பணகை வெகு கோபமடைந்து கரன் முன் சென்று "பதினன்கு ராக்ஷசவீரர்களையும் என்பொருட்டு அனுப்பி

னீர்கள். என் மனதைக் களிப்பிக்க அவர்களை இராமனை யும் லக்ஷ்மணனையும் வதைக்கக் கட்டளை யிட்டீர்கள். கையில் தரித்த சூலங்களையும் கத்திகளையும் உடைய கோபிளான அவ்வரக்கர்கள் மார்பைப் பிளந்து சென்ற பாணங்களால் யுத்தத்தில் கொல்லப்பட்டார்கள். மகா பலம் பொருந்திய அவர்கள் ஒரு நொடியில் மாண்டு பூமியில் விழுந்ததையும், இராமனது ஆச்சரியமான செய் கையையும் கண்டு எனக்குப் பெரும் பயமுண்டாயிருக் கிறது. நான்கு பக்கங்களிலும் பயம் வரக் கண்டு நான் உன்னைச் சரணமடைந்தேன். என் மீதும் அவ்வரக்கர்கள் மேலும் உனக்குக் கருணை இருப்பதும் இராமர் முன் நின்று போர் புரிய உனக்கு சக்தி இருப்பதும் உண்மையானால், இப்பொழுது தண்டகாரணியத்தில் குடிவந்த இவ்வரக்கர் குல கோடரியை நீ நாசம் பண்ண வேண்டும். எனக்குச் சத்துருவாகிய இராமனை நீ இன்று கொல்லாவிடில், நான் வெட்கம் மானம் என்பவைகளை விட்டு நின் கண் முன்பாக என் உயிரை விட்டுவிடுவேன்" என்றாள். பெரிய வயிற்றை யுடைய அந்த அரக்கி இவ்வாறு நெடுநேரம் புலம்பித் தனது கைகளால் மார்ப்பிலடித்துக் கொண்டு வெகு துக்கத்துடன் கதறினாள்.

அரக்கர்கள் மத்தியிலிருந்த மகாசூரனாகிய கரன், சூர்ப்பணகை இவ்வாறு இடித்திடித்துச் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டு சகிக்க முடியாதவனாகி, அவளைப் பார்த்து "அம்மா, நீ சொன்ன அவமானச் சொற்களால் எனக்குண்டாயிருக்குங் கோபத்துக்கு அளவேயில்லை. பொங்கிவரும் சமுத்திரத்தைத் தாங்க முடியாத கரை போல் அதனை என்னால் சகிக்க முடியவில்லை. என் வீரத் துக்கு 'மானுடனாகிய இராமனை நானொரு பொருளாக எண்ணவேயில்லை. தான் செய்த குற்றத்திற்காக அவன் இன்று என்னால் வதைக்கப்பட்டு தன் பிராணனை இழக் கப் போகிறான். ஆகையால் நீ கண்ணீர் சொரிவதை

அடக்கு; உன் பயத்தை விட்டுவிடு. நானின்று இராமனை அவன் தம்பியுடன் யமன் வீட்டுக்கு அனுப்பிவிடுகிறேன்'' என்றனன்.

பிறகு கரன் தனது சேனுபதியான தூஷணனைப் பார்த்து, ''அன்பனே, எனது சொற்றவருமல் நடப்பவர்களும், அஞ்சத்தக்க வேகத்தை உடையவர்களும், போர் முகத்தில் பின் வாங்காமல் நிற்கும் திறனுள்ளவர்களும், பராக்கிரமமுள்ளவர்களுமான பதினுலாயிரம் ராக்ஷசர்களைத் தண்டுசேர். எனது இரதத்தையும் எனது வில்லையும் பாணங்களையும் கொண்டுவா. செருக்குற்ற இந்த இராமனை வதைக்க நானே போகிறேன்'' என்றனன். இவ்வாறு கரன் சொல்ல தூஷணன் அநேக வித வர்ணமுடைய குதிரைகளைப் பூட்டி சூரியனுக்கொப்பாகிய காந்தியையுடைய இரதத்தைக் கொண்டு வந்தனன். மேருமலையின் சிகரம்போல விளங்குவதும், மாற்றுயர்ந்த தங்கத்தால் இழைக்கப்பட்டதும், மிக்க அழகான குதிரைகள் பூட்டப்பட்டதுமான அந்த இரதத்தின்மேல் கரன் வெகு கோபத்தோடு ஏறினன். தேரிலேறி இரதங்களும் ஆயுதங்களும் கொடிகளும் நெருங்கிய பெரிய சேனையிலுள்ள ராக்ஷசக் கூட்டங்களைப் பார்த்துக் கரனும் தூஷணனும் ''நடவுங்கள்'' என்று சொன்னர்கள்.

பராக்கிரமமுள்ள கொடிய கரன் இராமரது ஆசிரமத்துக்குச் சமீபத்தில் வரும்பொழுது, இராமர் தமது தம்பி லக்ஷ்மணரைப் பார்த்து'' மகாபலம் பொருந்தியவனே, எல்லாப் பிராணிகளையும் ஒழித்துவிடக்கூடிய இப்பெரிய நிமித்தங்களைப் பார்! இவைகளெல்லாம் இப்பொழுது ராக்ஷசர்கள் நாசத்துக்காகவே தோன்றுகின்றன. கொடிய செயல்களைப் புரியும் ராக்ஷசர்களுடைய கர்ச்சனையோடு கூட அவர்களது பேரிடியின் முழக்கமும் கேட்கின்றது. புத்திமானுயிருக்கப்பட்டவன் தனக்கு ஆபத்து வரப் போகிறதென்று எப்பொழுது சந்தேகிக்கிருனே அப்

பொழுதே அதை வருமுன்னரே தடுக்க வேண்டிய பிரயத்தனங்கள் பண்ண வேண்டுமன்றோ? அப்பொழுது தான் அவனுக்கு நன்மையுண்டு. ஆகையால் நீ உன் கையிற் பாணங்களையும் விற்களையும் சித்தமாக எடுத்துக்கொண்டு வைதேஹியோடு நான்கு பக்கங்களிலும் மரமடர்ந்த ஒருவரும் எளிதில் அணுகக்கூடாத அம்மலையின் குகையில் போயிரு" என்றார். இவ்விதமாக இராமர் சொல்லியதைக் கேட்டு லக்ஷ்மணர் வில்லையும் அம்பையும் கையிலெடுத்துக் கொண்டு சீதையுடன் ஒருவராலும் அணுகக்கூடாத குகையொன்றைச் சேர்ந்தார். லக்ஷ்மணர் அவ்வண்ணம் சீதையை அழைத்துக்கொண்டு குகைசேர, இராமர் "நாம் சொன்னபடி நமது தம்பி நடத்தினன்" என்று சந்தோஷமடைந்து தமது கவசத்தையெடுத்து அணிந்துகொண்டார். அக்கினிக்குச் சமமான கவசத்தை பூண்ட இராமர் இருட்டறையில் விளங்கும் புகையில்லாத நெருப்புப்போல் பிரகாசித்தார். அவர் கையில் வில்லை ஏந்திப் பாணங்களைத் தெரித்து கொண்டு எத்திசையிலும் நாண் சத்தத்தைக் கேட்பித்து நின்றார்.

கரன் தன்முன்னே போன சைநியத்துடன் இராமருடைய ஆச்சிரமத்துக்குச் சென்று, அவ்விடத்தில் பகைவரை யடக்கும் பமராக்கிரமுள்ள இராமர் கையில் வில்லேந்தி வெகு கோபமாக நிற்பதைக்கண்டான். அவரைப் பார்த்தவுடன் கரன் வில்லையும், பாணங்களையும் கையில் எடுத்து உயர்த்திக்கொண்டு, அவருக்கு நேர்முகமாக இரதத்தை நடத்தும்படி "ஓட்டு, ஓட்டு" என்று சாரதியை நோக்கி பெருஞ்சத்தமாகக் கட்டளையிட்டான். கரனுடைய உத்தரவுப்படி இராமர் வில்லைப்பிடித்துக்கொண்டு தனிமையாக நின்ற இடத்திற்குக் குதிரைகளைச் சாரதி நடத்தினன். இராமருக்கும் அவ்வரக்கர்களுக்கும் பார்ப்பவர்கள் மயிர்க்கூச்செறியும்படியாக ஆச்சரியமும் பயங்கரமுமான யுத்தம் அன்று நேர்ந்தது. கரன் தனது பல

மான வில்லை நாணேற்றி இரத்தத்தில் தோய்ந்து கோபங் கொண்ட விஷசர்ப்பங்கள்போல் விளங்கும் பாணங்களை இராமர்மேல் விடுத்தான். சூரியனுக் கொப்பான பிரகாச முடைய இராமருடைய கவசம் அப்பாணங்களால் வெட்டுண்டு கீழே விழுந்தது. அப்பாணங்களால் தேகம் முழுதும் அடியுண்டு வெகு கோபங்கொண்டு போர்க்களத்தில் நின்ற இராமர் கரனை உடனே முடித்துவிடக் கருதி வெகு கம்பீரமாக ஒலிக்கும் மற்றொருவில்லை எடுத்து நாணேற்றினார். அது விஷ்ணுவின் வில்; அகஸ்தியரால் இராமருக்குக் கொடுக்கப்பட்டது. புகழ்பெற்ற அந்த வில்லை இராமர் கையிலெடுத்துக்கொண்டு கரனை எதிர்த்தார். கொஞ்சம் வளைந்த முனைகளும் பொன் இறகுகளுமுள்ள பாணங்களை இராமர் வெகு கோபத்துடன் விடுத்துக் கரனுடைய வில்லை வெட்டினார்.

பிறகு கரனைப்பார்த்து இராமர் வெகு மிருதுவாக அவன் கொடிய செயல்களையெடுத்துக் காட்டினார். "எவனொருவன் உலோபத்தன்மையால் பாபங்களைப் பண்ணிக்கொண்டு அதிக இலாபத்தின் இச்சையால்தான் செய்வது பாபமென்றறியாமல் இருக்கிறானோ அவன் ஐஸ்வரியத்திலிருந்து விலக்கப்பட்டவனாய், ஆலங்கட்டியைப் புசித்த அறணை மாண்டுவிடுவது போல, சீக்கிரம் மாள்வான். தருமத்தை நடத்திக்கொண்டு தண்டகாரணியத்தில் வசித்து வரும் தபசிகளைக் கொன்றதனால் உனக்கு என்ன இலாபம்? உலகத்தார் வெறுக்கும் கொடிய செய்கைகளைச் செய்யும் பாவிகள் ஒருபொழுதும் க்ஷேமமாக இருக்க மாட்டார்கள்; வேரற்ற விருக்ஷம்போல் அழிந்துவிடுவார்கள். விருக்ஷங்கள் பருவத்தில் புஷ்பிப்பதுபோல, பாவத்தொழிலைச் செய்வன் ஒவ்வொருவனும் அத்தொழிலின் பலனை தக்கநேரத்தில் தப்பாமல் அடைவான். உலகத்துக்கு தீமையைச்செய்யும் கொடிய பாவிகளுடைய பிராணனை வாங்க அரசனால் நான் கட்டளையிடப்பட்

டிருக்கிறேன். இப்பொழுது என்னால் விடுவிக்கப்படும் தங்கமிழைக்கப்பட்ட பாணங்கள் உனது உடலை ஊடுருவி, பாம்புகள் புற்றில் நுழைவதுபோல, பூமியைப் போய்ந்து புக்கொளிக்கும்.''

இவ்வாறு இராமர் சொன்ன சொற்களைக் கேட்டுக் கோபமடைந்து கண்கள் சிவந்து கோபத்தால் ஒன்றுந் தெரியாதவனாகிக் கரன் சொல்லலுற்றான். "இவ்விடத்தில் நான் கதையைப் பிடித்துக்கொண்டு, அசைக்கக்கூடாத பெரும்பருவதம் தாதுராகத்தால் விளக்கமுற்று நிற்பது போல் நிற்பது உனது கண்ணிற்குப் புலப்படவில்லை. நான் கையில் கதையைப் பிடித்துக்கொண்டு உனது பிராணனை மட்டுமன்று, இம்மூவுலகத்திலும் உள்ளாருடைய பிராணன்களையும், கையில் பாசம் பிடித்த யமன்போல் தனியே வாங்கிவிடவல்லேன். நீபதினாலாயிரம் ராக்ஷசரைக் கொன்றதனால் அவர்கள் பந்துக்கள் விடும் துக்கக்கண்ணீரை இன்று நான் உன்னை வதைத்து துடைத்துவிடுகிறேன்'' இவ்வண்ணஞ் சொல்லிக் கரன் வெகு கோபத்துடன் அழகான கேயூரமணிந்த தனது கைகளால் எரிகின்ற இடிபோன்ற கதையைத்தூக்கி இராமர்மேல் எரிந்தான். அவ்விதமாக தம்மைநோக்கி அக்கினிபோல் விளங்கி காலனுடைய பாசத்துக்கொப்பாக வந்துகொண்டிருந்த கதையை இராமர் தமது பாணங்களால் ஆகாயத்திலேயே துகளாக்கி மாற்றினார்.

பிறகு கரனை வதை செய்வதற்காக அக்கினிக்கொப்பாய்மற்றொரு பிரமதண்டம்போல்விளங்கும் பாணமொன்றைக்கையிலெடுத்தார். அது தேவேந்திரனால் கொடுக்கப்பட்ட பாணம். அப்பாணம் இராமருடைய வில்லிலிருந்து விடுக்கப்பட்டு, இடிபோல முழங்கிக்கொண்டு, கரன் மார்பில் பாய்ந்தது. கரன் திருவெண்காட்டில் ருத்திரனால் தஹிக்கப்பட்டு அந்தகாசுரன் மாய்ந்ததுபோல இராமருடைய சராக்கினியால் தஹிக்கப்பட்டுப் பூமியில் விழுந்தான்.

பிறகு ராஜரிஷிகளும் மற்ற ரிஷிகளும் சேர்ந்து இராமரைக்கண்டு களித்து "கொடிய செயல்புரியும் இவ் விராக்ஷசர்களை வதைக்கும் பொருட்டே மகரிஷிகளும் தங்களை அநேக உபாயங்களால் இக்காட்டுக்குக் கொண்டு வந்தார்கள். ஆகா! எவ்வளவு பெருங்காரியம் இராமர் செய்தார்! என்ன சாமர்த்தியம்! என்ன பராக்கிரமம்! இது விஷ்ணுவின் பராக்கிரமம் போலல்லவா காண்கிறது" என்று இவ்விதமாகச் சொல்லிக்கொண்டு தங்கள் தங்கள் இருப்பிடம் சென்றார்கள்.

அச்சமயத்தில் வீரராகிய லக்ஷ்மணர் சீதையுடன் மலைக் குகையைவிட்டு வந்து சந்தோஷமாக ஆச்சிரமத்துள் புகுந்தார். சத்துருக்களைக் கொன்று, பெரிய ரிஷிகளுக்கெல்லாம் சுகத்தை உண்டு பண்ணின தனது கணவரான இராமரை சீதை கண்டு களிகூர்ந்து ஆனந்தத்தால் தழுவினாள். ராக்ஷசக்கூட்டங்கள் மாண்டதையும் இராமர் காயமின்றி இருந்ததையும் சீதை பார்த்து சந்தோஷமடைந்து ஆனந்தக் கடலில் மூழ்கினாள்.

21. இராவணனுக்கு அகம்பனன் உபதேசம்

பின்பு அகம்பனன் என்னும் அரக்கன் ஜனஸ்தானத்தை விட்டு வெகு வேகத்துடன் சென்று இராவணனைப் பார்த்து "அரசனே, ஜனஸ்தானத்திலிருந்த அரக்கர்கள் எல்லாரும் வதைக்கப்பட்டார்கள். கரனும் போரில் மாண்டான். நான் மாத்திரம் வெகு கஷ்டப்பட்டு பிழைத்து வந்தேன்" என்று சொன்னான். இவ்வாறு அகம்பனன் சொன்ன சொல்லை இராவணன் கேட்டு கோபத்தால் கண்கள் சிவந்து அவனைக் கொளுத்திவிடுவதுபோலப் பார்த்து "தனது ஆயுண் முடிந்து எனது அழகான ஜனஸ்தானத்தை அழித்தவன் யாவன்? இப்பொழுது இவ்வுலகத்தில் ஒரு நாளும் வாழ முடியாத வழியைத் தேடிக்கொண்டவன் யாவன்? எனக்கு கெடுதல் செய்த

பின்பு அவன் இந்திரனுக இருப்பினும், அல்லது குபேரன், யமன், விஷ்ணு இவர்களில் ஒருவனுக இருப்பினும் ஒரு பொழுதும் சுகமென்பதை அடையான். நான் காலனுக்கும் காலன்; நெருப்பையும் கொளுத்துவேன்; சாவுக்கும் சாவுவரச் செய்வேன். கோபம் கொண்டால் நான் சூரியனையும் நெருப்பையுங்கூட எரித்துவிடுவேன். எனது பலத்தால் காற்றின் வேகத்தைக்கூட நான் தடுக்க மாட்டுவேன்" என்று சொன்னுன்.

அகம்பனன் பயத்தால் நடுங்கிக் கைகூப்பி "சிரேஷ்டமான அங்கமுள்ளவனும், யௌவனமுள்ளவனும் ரிஷபத்தின் பிடர்போன்ற பிட்ரை உடையவனும், உருண்டு நீண்டு அழகாயுள்ள கரங்களை உடையவனும், நிகரற்ற பலபராக்கிரம முடையவனும், வீரனும், கீர்த்தியுள்ளவனும், ஸ்ரீமானும், தசரத மன்னவனுடைய குமாரனுமான இராமனென்பவன் ஒருவனிருக்கிருன். அவன் பெரும் புகழ் படைத்தவன்! பலவிதகான சம்பத்தடைந்தவன். அவன் தான் ஜனஸ்தானத்தை நாசம்பண்ணினவன்; கரனையும் தூஷணனையும் வதைத்தவன். அவனுக்குச் சரியான பலமுள்ள அவன் தம்பி லக்ஷ்மணன் சிவந்த கண்களுடையவன்; பேரிபோல ஒலிக்கும் குரலுமுள்ளவன்; சந்திரன்போன்ற முகமுடையவன்" என்ருன். அகம்பனன் சொன்ன சொல்லை இராவணன் கேட்டு "இதோ நான் இராமலக்ஷ்மணர்களைக் கொல்ல ஜனஸ்தானம் செல்லுகிறேன்" என்ருன்.

அதைக் கேட்ட அகம்பனன் சொல்லலுற்ருன் :—"அரச, இராமனுடைய பலத்தையும் பராக்கிரமத்தையும் பற்றி நான் உண்மையாய்ச் சொல்வதைக் கேள். ஓ தசக்கிரீவ, இராமனை நீயாவது, அல்லது அரக்கர்கணமாவது ஜெயிப்பது, சுவர்க்கலோகம் பாபிகளுக்குக் கிட்டாதவாறுபோல் சிறிதும் கூடாது. எல்லாத் தேவர்களும் அசுரர்களும் ஒன்றுகூடினும் இராமனைக் கொல்லமுடியாதென்

பது என் எண்ணம். ஆனால் அவனைக்கொல்ல உபாய மொன்றுண்டு. அதை நான் சொல்லுகிறேன்; சற்றுக்கவனமாகக் கேள். சீதை என்ற மெல்லியலாள் அவனுடைய மனைவி. அவள் இவ்வுலகத்திலே உத்தமமான பெண். அவள் நல்ல யௌவனபருவமுள்ளவள். அவளது அவயவங்கள் ஒவ்வொன்றும் சரியாக அமைக்கப்பட்டுள்ளன. பெண்களுக்குள் ஓரிரத்தினம்போலுமவள் மணிகளிழைக்கப்பட்ட ஆபரணங்கள் பூண்டு விளங்குகிறாள். தேவப்பெண், கந்தர்வப்பெண், அப்சரஸ் பெண் அசுரப்பெண் ஒருவரும் அவளுக்குச் சமானம் இல்லை. பின்னர் மானிடப்பெண் எப்படி அவளுக்கொப்பாவாள்? ஆகையால் நீ எப்படியாவது முயன்று இராமனை வஞ்சித்து அவனுக்குத் தெரியாமல் அவன் மனைவியை காட்டிலிருந்து தூக்கிக்கொண்டு போய்விடவேண்டும். அவளிடம் அவனுக்குக் காதல் கரையில்லையாதலால் அவள் போன பின்பு தன்னுயிரை விட்டுவிடுவான்" இவ்வண்ணம் அகம்பனன் சொன்ன சொல் அரக்கர் மன்னவனாகிய இராவணன் மனத்திற்கு ஒத்திருந்தது. அவன் சிறிதுநேரம் சிந்தித்து அகம்பனனை நோக்கி "ஆம்; நீ சொன்னது நன்றாகவிருக்கிறது. நான் எனது சாரதியுடன் புறப்பட்டுக் காலையில் தனிமையாய் இராமனிருக்குமிடம் போகிறேன். இவ்வழகிய மாநகருக்கு சீதையைக் கொண்டு வந்துவிடுகிறேன்" என்று சொன்னான்.

அதன்பின் இராவணன் இரதத்தின்மேல் ஏறி எண்டிசைகளையும் பிரகாசிக்க செய்துகொண்டு புறப்பட்டான். நெடுந்தூரம் போய்த் தாடகையின் குமாரனாகிய மாரீசன் வசித்துகொண்டிருந்த ஆச்சிரமத்தை அடைந்தான். மாரீசன் தன்னை நாடிவந்த மன்னவனுக்கு திவ்வியமான உணவுகளையும் பானங்களையும் கொடுத்து உபசாரம்பண்ணினான். இராவணன் "ஐயா, வெகு புகழ்பெற்ற இராமன் ஜனஸ்தானத்தில் இருந்த காவலாளர்களை எல்லாம்

கொன்றுவிட்டான். அழித்தற்கரிய ஜனஸ்தானம் முழுவதும் யுத்தத்தில் அழிந்துவிட்டது. நான் இப்பொழுது அவன் மனைவியைக் கவர்ந்துகொண்டு வரப்போகிறேன். அதற்கு நீ சகாயம் பண்ணவேண்டும்'' என்று கூறினான்.

ராக்ஷசேந்திரன் சொன்னசொல்லை மாரீசன் கேட்டு அவனைப்பார்த்து 'சீதையைத் தூக்கிவந்து விடு' என்று நின்னிடம் சொன்னவன் எவன்? அரக்கர் குலத்தினுடைய சிகரத்தைச் சிதைக்கக்கருதினவன் எவன்? இந்தத் தொழிற்கு நின்னை ஏவினவன் நினக்கு சத்துருவேயன்றி வேறல்லன். அதற்குச் சந்தேகமில்லை. அவன் நின்னைக் கொண்டு பாம்பின் வாயிலிருக்கும் விஷப்பல்லைப் பிடுங்க எண்ணுகிறான். நின்னை இந்தக் கெட்ட வழியில் செலுத்த நினைத்தவன் எவன்? இலங்கை நாயக, கோபங்கொள்ளற்க; சௌக்கியமாக வந்தவழியே திரும்பி இலங்கைக்குச்செல். நீ நின் மனைவிமார்களோடு எப்போதும் இன்புற்று வாழ்ந்திரு. இராமன் தன்மனைவியோடு வனத்தில் வசிக்கட்டும்'' என்றான். மாரீசன் அவ்வாறு சொல்ல, தசக்கிரீவன் இலங்கை திரும்பி சென்றனன்.

இராமர் ஒருவரே கொடிய செயல்கள் செய்துவந்த பதினாலாயிரம் அரக்கர்களையும், திரிசிரனுடன் தூஷணனையும், கரனையும் வதைத்ததைக் கண்ட சூர்ப்பணகை இலங்கையை நோக்கி ஓடினாள். அவ்விடத்தில் தனது விமானத்தில், தேவர்கள் மத்தியில் இந்திரன் வீற்றிருப்பதுபோல, மந்திரிமார்கள் சூழ மிக்க பொலிவோடு இராவணன் வீற்றிருக்கக் கண்டாள். இருபது தோளும், ஒருபது முகமும், அழகான ஆடைகளும், விசாலமான மார்புள்ளவனும், எல்லா ராஜலக்ஷணங்களும் அமைந்தவனும் எவ்வுலகத்துக்கும் பயமுண்டாக்குகிறவனுமான இராவணனை சூர்ப்பணகை கண்டாள்.

பின்னர், வெகு பரிதாபமான நிலையிலிருந்த சூர்ப்பணகை இராவணனைப் பார்த்து, வெகு கோபத்துடன் பின் வருமாறு சொன்னாள் :—“நீ இஷ்டப்படி எல்லாம் நடந்து, சுகங்களில் ஆழ்ந்து மயக்குற்று கேட்பவர்கள் ஒருவருமில்லாமல், நினக்குப் பெருங்கேடு வந்துவிட்டதைக்கூட அறிந்துகொள்ளாமல் இருக்கிறாய். ஒற்றர்களாகின்ற கண்களால் வெகுதூரத்தில் நடக்கும் விஷயங்களை அறிகின்றதனால் அரசர்கள் தீர்க்கதரிசிகளென்று சொல்லப்படுகிறார்கள். நமது சுற்றத்தார் ஜனஸ்தானத்தில் மாண்டதை நீ இன்னும் தெரிந்துகொள்ளாதபடியால் உனக்கு சாரணர்கள் இல்லையென்றும், உன்னைச் சுற்றி உட்கார்ந்திருக்கும் மந்திரிகள் சாமான்யர்களென்றும் நான் எண்ணுகிறேன். இராமனொருவனால் வெகு கொடிய செயல்கள் புரிந்துவந்த பதினாலாயிரம் ராக்ஷஸர்களும் கரனும் தூஷணனும் கொல்லப்பட்டார்கள். அன்றியும் அவன் ரிஷிகளுக்கு அபயம் கொடுத்து தண்டகாரணியத்திற்கு க்ஷேமத்தை உண்டாக்கி ஜனஸ்தானத்தை அலைத்துவிட்டான்”

இவ்வாறு சூர்ப்பணகை சபை நடுவே கொடுஞ்சொற்களைச் சொல்ல, இராவணன் கோபங்கொண்டு அவளை நோக்கி “இராமன் என்பவன் யார்? அவன் பராக்கிரமம் என்ன? அவன் உருவம் எப்படிப்பட்டது. அவன் வீரியம் எத்தன்மையது? என்ன காரணத்தால் ஒருவராலும் நெருங்கமுடியாத தண்டகாரணியத்துக்கு அவன் வந்திருக்கிறான்? என்று கேட்க சூர்ப்பணகை வெகு கோபத்துடன் தான் கண்டபடி இராமருடைய பராக்கிரமத்தைப் பற்றி சொல்லத்தொடங்கினாள் :—

“தசரத குமாரனான இராமன் நீண்ட கைகளும் விசாலமான கண்களுமுடையவன்; மரவுரிமான்றோலுமுடுத்தவன்; மன்மதன்போல் உருவமமைந்தவன். அவன் பொற்பூண் பூண்ட இந்திரதனுசுபோன்ற தனது வில்லை

நாணேற்றி மகாவிஷமுள்ள சர்ப்பங்களுக்கொப்பான கூர்மையான பாணங்களைத் தொடுக்கிறுன். அவன் யுத்தத்தில் வில்லை வளைப்பதை நான் காணவில்லை ; சரமாரியால் அரக்கர் சேனை மாண்டுவிழுவதையே கண்டேன். அவன் தம்பி வெகு பராக்கிரமும் அவனுக்கொப்பான சவுரியமுமுள்ளவன் ; அவனை இராமனுடைய வலக்கையென்றும் புறத்திற் சஞ்சரிக்கும் உயிர் என்றும் சொல்லலாம். இராமனுடைய அரிய மனைவி அவனுடைய நன்மையையே எப்பொழுதும் நாடுபவள். அழகிய கூந்தலும், அழகிய மூக்கும், அழகிய துடையும் உடைய அந்தத் தையல் தண்டகாரணியத்திற்கு ஒரு தேவதை போலவும், மற்ருெரு லக்ஷ்மிபோலவும் விளங்கிக்கொண்டிருக்கிருள். பொன்போன்ற மேனியும் சிவந்து உயர்ந்த நகங்களும் உடைய அந்த அழகுடையாள் பெயர் சீதை. அம்மெல்லிய இடையையுடையாள் விதேகராஜனுடைய குமாரி. அவ்வளவு நல்நடக்கையும், தேகத்தின் வனப்பும், நிகரற்ருெளிரும் காந்தியுமுள்ள அவள்தான் நினக்குச் சரியான மனைவி. நீ தான் அவளுக்குச் சரியான கணவன். உன்னுடைய கூரிய பாணங்களால் இராமனையும் லக்ஷ்மணனையுங் கொன்று கணவனையிழந்த சீதையை மணஞ்செய்துக்கொள். அரக்கர் வேந்தே, நான் சொல்லுவது நின் மனத்திற்கொத்திருந்தால் உடனே நான் சொல்லும் வண்ணம் நட"

சூர்ப்பணகை கூறிய மயிர்க்கூச்செறியும்படியான மொழியைக் கேட்டுத்தான் செய்யவேண்டிய காரியத்தை மந்திரிகளுடன் ஆராய்ந்து இராவணன் புறப்பட்டான். இஷ்டப்படி செல்லும் இரதமேறி, இராவணன் சமுத்திரக்கரையோரமாகவிருந்த மலைகளையும் சமுத்திரத்தையும் தாண்டி அக்கரை சேர்ந்து அங்கு ஜனசஞ்சாரமில்லாத அழகான அரணியத்தின் ஒரு பக்கத்தில் ஓர் ஆச்சிரமத்தை அடைந்தான். அவ்விடத்தில் மாரீசன் என்ற ராக்ஷஸனை

அவன் கண்டான். மாரீசன் மனிதர்களால் செய்யமுடியாத உபசாரங்களைச் செய்து அரக்கராஜனை ஏற்றுக் கொண்டான். பொருள் பொருந்திய சொற்களால் "ராக்ஷசேந்திரா, இலங்கையில் எல்லாம் க்ஷேமமா? யாது நிமித்தம் நீ இவ்வளவு சீக்கிரமாக மறுபடியும் இங்கே திரும்பிவந்தனை?" என்று வினவினன்.

22. மாயை மான்

இவ்வாறு மாரீசன் வினவ, அவனைப் பார்த்து இராவணன் சொல்லுற்றான்:—"ஓ மாரீசா, நான் சொல்லுவதைக் கேள். எனக்கு மிகுந்த துக்கமொன்று நேர்ந்திருக்கிறது. துக்கமடைந்தவனை அத்துக்கத்திலிருந்து நீக்கி வைக்க நீதான் வல்லவன். ஜனஸ்தானத்தில் வெகுபலம் பொருந்திய பதினாலாயிரம் அரக்கர்களும் பாதசாரியாய் யுத்தம் செய்த மனுஷனாகிய இராமன் ஒருவனால் கொல்லப்பட்டார்கள். போரில் கரனும் மாண்டான். தண்டகாரணியமும் பயம் நீங்கியது. இராமன் தன் பலத்தின் செருக்கால் கொஞ்சமேனும் பகையில்லாத எனது தங்கையின் காதுகளையும் மூக்கையும் அறுத்து அவளுடைய உருவத்தைக் குலைத்தான். தேவப்பெண்ணுக் கொப்பான அவன் மனைவி சீதையை நான் ஜனஸ்தானத்திலிருந்து எடுத்துவரப்போகிறேன். அவ்விஷயத்தில் நீ எனக்கு உதவி செய்யவேண்டும். நீ எனக்குச் செய்ய வேண்டிய உதவி இன்னதென்பதை நான் சொல்லுகிறேன் கேள். நீ அழகான வெள்ளிப் புள்ளிகள் அமைந்த ஒரு பொன் மானாக உருவமெடுக்க வேண்டும். அவ்வுருவுடன் இராமனாச்சிரமம் சென்று, நீ சீதையின் முன்னர் உலாவவேண்டும். உன்னை சீதை உண்மையாகவே ஒரு மானாக எண்ணித் தனது கணவனையும் அவன் தம்பி லக்ஷ்மணனையும் பார்த்து உன்னைப் பிடித்துக்கொடுக்கும்படிவேண்டுவாள். அவ்விருவர்களும் உன்னைப் பிடிக்க ஆச்சிரமத்தை விட்டு

புறப்பட்டபின்பு, ஒருவித இடையூறுமின்றி சந்திரனது காந்தியை இராகு விழுங்குவதுபோல் நான் சீதையை எடுத்துச் செல்வேன்.''

இவ்வண்ணம் இராவணன் சொன்ன சொல்லைக் கேட்டு மாரீசன் முகம் சோர்ந்து பயத்தால் நடுங்கினன். உலர்ந்துபோன தனது உதடுகளை நாவினல் நக்கிக்கொண்டு கண்களை இமை கொட்டாமல் விழித்து, இறந்தவன் போலாகி, மிக்க துயரமடைந்து, இராவணனை உற்றுப் பார்த்தான். விஷயங்களை நன்ருக அறிந்தவனுன மாரீசன் இராவணனைப் பார்த்து,

"வேந்தே, இனிமையாகப்பேசுகின்றவர்கள் எங்கும் உளர்; கேட்கும்பொழுது அப்பிரியமாய்த் தோன்றின போதிலும் பிறகு மிகுந்த நன்மையைப் பயக்கும்படியான வார்த்தைகளைப்பேசுகிறவர்களும் கேட்பவர்களும் அரியர். ஒற்றர்களில்லாமையாலும், சாபல்லியத்தாலும், இந்திரனுக்கும் வருணனுக்கும் ஒப்பான மகாவீரியமும் மகா குணமும் பொருந்திய இராமனை நீ உண்மையாக அறிந்து கொள்ளவில்லை. ஐயனே, இராமன் கோபங்கொண்டு இவ்வுலகத்தில் அரக்கர்கள் இல்லையாம்படி செய்யாமலிருந்தால், சீதை பிறந்தது உனது நாசத்திற்கு அல்லாமலிருந்தால், சீதையின் காரணத்தால் எனக்கும் ஒருவித கேடும் உண்டாகாமலிருந்தால், அதுபோதும். இராமன் தருமத்தின் அவதாரம். அவன் வெகு சாது; உண்மையான பராக்கிரமமுள்ளவன். இந்திரன் தேவர்களுக்கு இறைவனுமாறுபோல அவன் இவ்வுலகத்திற்கெல்லாம் இறைவன். பதிவிரதா தருமத்தால் பாதுகாக்கப்பட்டு விளங்கும் சீதையை அக்கினியிடமிருந்து அதன் ஒளியை அபகரிக்க எண்ணுகிறவன்போல் எண்ணுகிருய். அவனது பராக்கிரமம் ஒப்பிட முடியாதது. அவன் மனைவி சீதை அவனுடைய வில்லால் பாதுகாக்கப்பட்டு வருகிருள். அவளைக் காட்டிலிருந்து எடுத்துவர உன்

ளுல் ஒருபொழுதும் முடியாது. அப்பெண்மணி சிங்கத்தின் பிடர் போன்ற பிடரையுடைய மானிட சிங்கமாகிய இராமனுடைய உயிருக்குயிரான மனைவி; எப்பொழுதும் அவனிடம் நீங்காத அன்புடையவள். வெகு பராக்கிரமசாலியாகிய இராமனுடைய மனைவியை, கொழுந்துவிட்டெரியும் தீயின் ஒளியை எடுத்தோடக் கருதுபவன்போல், நீ எடுத்தோட எண்ணுவது ஒரு பொழுதும் முடியாத காரியம். நீ உன்னுடைய பிராணன் மேலும், சுகங்களின்மேலும், எய்தற்கரிய இராச்சியத்தின் மேலும் ஆசை உள்ளவனாய் அவைகளை வெகு காலம் அனுபவிக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருந்தால், இராமருடைய பகையை ஒருகாலும் தேடாதே.

"நான் முன்னொருகாலத்தில் ஆயிரம் யானைகளின் பலமுடைய மலைக்கொப்பான உருவுடன் இவ்வுலகமெங்கும் சஞ்சரித்தேன். அப்பொழுது நான் முகில்போல் கரிய நிறமுடையவனாய், காதில் தங்கக்குண்டலங்கள் அணிந்து தலையில் கிரீடம் புனைந்து, கையில் பரிகையாயுதம் ஏந்தி உலகத்துக்கெல்லாம் பெரும் பயத்தை உண்டுபண்ணிக் கொண்டு, ரிஷிகளின் மாமிசத்தைப் புசித்து, தண்டகாரணியத்தில் திரிந்து கொண்டிருந்தேன். அப்படி நானிருந்த காலத்தில் என்னைக் கண்டு விசுவாமித்திர முனிவர் பயந்து தசரதரிடம் சென்று அவரைப் பார்த்து "வேந்தே, மாரீசனுக்கு நான் மிகவும் அஞ்சுகிறேன். ஆகையால் நான் யக்ஞம் பண்ணுங்காலத்தில் இராமன் வந்து என்னைப் பாதுகாக்க வேண்டும்" என்றார். இராமரை அழைத்துக்கொண்டு சந்தோஷமாக தமது ஆச்சிரமம் சென்றார். அவர் அதன்மேல் தீக்ஷைசெய்து கொண்டு தண்டகாரணியத்தில் யக்ஞம்பண்ண உட்கார்ந்தார். அவருக்கு அருகில் இராமன் தனது வில்லைக் கையிற் பிடித்து நின்றான். நான் அவனைச் சிறுபிள்ளை என்று எனது புத்தியின்மையால் அலக்ஷ்யமாய் எண்ணி வெகு

வேகமாக விசுவாமித்திர முனிவருடைய வேதிகையை நோக்கிச் சென்றேன். அப்போது இராமன் கூரிய பாண மொன்றை எய்து, என்னைத் தூக்கி நூறுயோசனை தூரத்துக்கப்பால் சமுத்திரத்தில் எறிந்தனன். உன்மனைவிகளோடு நீ சந்தோஷமாக இருந்து வெகுகாலம்வாழவேண்டுமென்று விரும்பினால் இராமனுடைய பகையைத் தேடாதே.

"இவ்வாறு வெகு கஷ்டப்பட்டு அப்போரில் நான் இராமனிடமிருந்து தப்பிப்பிழைத்தேன். பின்பு நடந்ததைச் சொல்லுகிறேன்; பதிலுத்தரம் சொல்லாமல் கேள். முன்பு இராமனால் அலக்ஷ்யமாய் விடப்பட்டபடியால், பின்னர் நான் செருக்குக் கொண்டு, வேறு இரண்டு அரக்கர்களுடன் உருமாறித் தண்டகாரணியம் புகுந்தேன். தீக்கொப்பான நாவும், கூர்மையான கோரப்பல்லும் உடைய பெரிய மான் வடிவமெடுத்து, முனிவர்களுடைய மாமிசத்தைப் புசித்துக்கொண்டு, நான் அக்காட்டில் திரிந்தேன். முனிவர்களைக் கொன்று அவர்களுடைய இரத்தத்தைக் குடித்து மாமிசத்தைப் புசித்து திரியும் காலத்தில் ஒருநாள் தவவேடம் பூண்டு தருமத்தை வளர்த்துக்கொண்டு வந்த இராமனையும், வெகு பாக்கியசாலியான சீதையையும், மகாரதனான லக்ஷ்மணனையும் கண்டேன். உண்டியைக் குறைத்துக்கொண்டு, எல்லாப் பிராணிகளுக்கும் நன்மை புரிந்துவந்த இராமனுடைய பலத்தை நான் முன்போலிருக்கும் என்று கருதாமல், என் புத்தியின்மையால் அவனைத் தபசி என்று அலக்ஷியம் செய்து, அவனிடம் முன்பு நான் வைத்திருந்த பகைமையால் கோபங்கொண்டு, எனது கூரான கொம்பினால் அவனைக் கொன்று விடவேண்டுமென்று மானுருவத்தோடு போய் எதிர்த்தேன். அவன் தனது வில்லை வளைத்து மூன்று பாணங்களை விடுத்தான். அவை அவனுடைய வில்லிலிருந்து கருடனுக்கொப்பான வேகத்துடன்

கிளம்பின. இரத்தத்தைத் தங்களுக்கு உணவாகக் கொண்ட அப்பாணங்கள் வச்சிராயுதத்துக்கொப்பாக எங்கள் மூவர்களையும் நாடி வெகு வேகமாக வந்தன. முன்னரே இராமனுடைய பாணத்தின் பலத்தை அறிந் தவனாகையால் நான் ஓடித் தப்பினேன். மற்ற இருவர் களும் அப்பாணத்தால் மாண்டார்கள்.

"இராமனுடைய பாணத்தால் மாளாமல் நான் எவ் வாறே உயிர் தப்பி, கெட்டசெய்கைகளைவிட்டு, தவவேடம் பூண்டு, அன்று முதல் இவ்விடத்தில் தவஞ்செய்து கொண்டு வசிக்கிறேன். மரங்களைப் பார்க்கும்பொழு தெல்லாம் ஒவ்வொரு மரத்திலும் கையில் பாசமேந்திய யமனைப்போல மரவுரியும் மான்றோலுமுடுத்த இராமனை நான் காண்கிறேன். அதிக பயமுடைமையால் என்னைச் சுற்றி எப்போதும் ஆயிரம் இராமர்கள் நிற்க நான் காண் கிறேன். இக்காடு முழுதும் இராமன் ஒருவனே இருக்கிற தாக எனக்குத் தோற்றுகிறது. இராமன் இல்லாத இடங் களிலும் அவனை நான் காண்கிறேன். தூக்கத்திலுங்கூட நான் இராமனைப்பற்றிக் கனவுகண்டு உளறிக்கொண்டு பிரக்ஞையற்றவனாகிறேன். இராமனுக்கு நான் மிகவும் பயந்திருக்கிறபடியால் ரகாரத்தில் தொடங்கும் ரத்தினம், ரதம் என்ற பெயர்கள்கூட எனக்குப் பெரும்பயத்தை உண்டாக்குகின்றன. இராகவனுடைய வீரியத்தை நான் நன்றாக அறிவேன். நீ அவனுடன் யுத்தம் செய்வது சரியன்று. நான் பிழைத்திருக்க வேண்டுமென்ற எண் ணம் உனக்கிருந்தால் அவன் பெயரை என் முன் சொல் லாதே. இவ்வுலகத்தில் தருமத்தைச் செய்துவந்த சாதுக் கள் அநேகர் பிறர் குற்றங்களுக்காக மாண்டிருக்கிறார் கள். நீ என் நண்பன் ஆகையால் நான் உன் நன்மையை நாடி இந்த உண்மையைச் சொன்னேன். நீ என் சொல் லைக் கேளாவிடில் உன்னுடைய பந்துக்களுடன் இராம னால் போரில் மாண்டுவிடுவாய்.'

வெகு நியாயமாக மாரீசன்சொன்ன நன்மை பயக்கும் சொற்களை, இறந்துபோக எண்ணினவன் மருந்தை உட்கொள்ளாதவாறு இராவணன் ஒத்துக்கொள்ளவில்லை. அன்றியும் வெகு அநுகூலமாகப் பேசின மாரீசனைநோக்கி, இராவணன், தனக்கு முடிவுகாலம் கிட்டிவிட்டபடியால், பின்வரும்கடுஞ்சொற்களைச் சொன்னான்:-"ஓ மாரீசா,நான் உன்னிடம் இந்த விஷயத்தின் நன்மை தீமைகளைப் பற்றி யாவது தகுதியைப்பற்றியாவது கேட்கவரவில்லை. உன்னுடைய உதவியை மட்டும் கேட்டேன். ஓ ராக்ஷசா, இது செய்து விட்டு, நீ உன்னிஷ்டப்படி எவ்விடம் போக வேண்டுமோ அவ்விடம் போ. நானிந்த உபகாரத்துக்காக உனக்கு என்னுடைய இராச்சியத்தில் பாதி கொடுக்கிறேன். என் கட்டளைப்படி நீ செய்யாதபக்ஷத்தில் நான் உன்னை இப்பொழுதே கொன்றுவிடுவேன். அரசனுடைய விருப்பத்திற்கு மாறாக நடப்பவன் ஒருகாலும் சுகத்தை அடையமாட்டான்".

இது ராஜாக்கினையாக கட்டளை யிடப்பட்ட மாரீசன் அவனைப்பார்த்து சற்றும் அஞ்சாது கோபத்தோடு கூறுவானாயினான் ;—"நிசாசர, எந்தப்பாவி நீயும், உனது பிள்ளைகளும், தேசமும், மந்திமார்களும், எல்லாரும் ஒருங்கே அழிய இவ்விதமான போதனையை உனக்குச் செய்தான்? இராவணா, கெட்ட வழியில் புகும் உன்னைத் தடுக்காத அமைச்சர்கள் கொல்லப்படத் தக்கவர்களாயினும் நீ அவர்களைக் கொல்லுகின்றிலை. துர்ப்புத்தியுள்ளவனும் ஐம்புலன்களை அடக்காதவனுமான நின்னை அரசனாகவுடைய அரக்கர்கள் அனைவர்களும் அவசியமாக நாசமடையப் போகிறார்கள். இராமன் என்னைக்கொன்று சீக்கிரமாக உன்னையும் கொன்றுவிடப் போகிறான். நீ சீதையை என்னுடைய உதவியால் ஆச்சிரமத்திலிருந்து எடுத்துவந்துவிட்டபோது நீ யென்ன நானென்ன இலங்கையென இராக்கதர்களென்ன உய்வதில்லை."

பின்னர் இராவணனும் மாரீசனும் தேவவிமானம் போன்ற அந்தத் தேர்மீதேறி அவ்வாச்சிரமத்தை விட்டு வேகமாகப் புறப்பட்டார்கள். தண்டகாரணியம் சேர்ந்து இராமருடைய ஆச்சிரமத்தை அடைந்தார்கள். தேரினின்றும் இறங்கி இராவணன் மாரீசனுடன் அவ்வாச்சிரமத்தைப் பார்த்தான். பின்பு அவன் மாரீசன் கையைப் பற்றிக்கொண்டு "அதோ வாழைகளால் சூழப்பட்டுத் தோன்றுகிறதே அதுதான் இராமனுடைய ஆச்சிரமம். இனி நீ நாம் இங்கு வந்த காரியத்தைச் செய்யக்கடவாய்" என்முன். அதைக் கேட்ட மாரீசன் சீதையினுடைய மனத்தைக் கவர்வதற்காக ஒரு கணப்பொழுதிற்குள் அநேகவிதமான அழகிய இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டாற்போன்ற புள்ளிகளையுடைய பொன்மான் உருவங்கொண்டு அவ்வழகான காட்டையும் இராமருடைய ஆச்சிரமத்தையும் பொலிவுறச்செய்து பசும்புற்றரைகளில் புல்மேய்ந்து திரிந்தனன். அம்மான் சிலநேரம் ஓரிடம் மேய்ந்துவிட்டு மற்றோரிடத்துக்கோடும்; மறுபடி அங்கிருந்து திரும்பும்; சிறிதுகாலம் வேகமாக ஓடித் திரும்பும்; சிறிதுநேரம் துள்ளி விளையாடும்; சிறிதுவேளை தரையில் படுக்கும். அந்த மானைக்கண்டு அக்காட்டிலுள்ள மற்றை மான்கள் அதனருகிற் சென்று அதை மோந்து, பின் பலதிசைகளிலும் ஓடின.

அத்தருணத்தில் அழகிய கண்களையுடைய சீதை மலர் கொய்யும்பொருட்டு அக்காட்டுக்கு வந்தாள். சீதை முத்தும் மாணிக்கமும் போன்ற புள்ளிகளையுடையதும் ஒருபொழுதும் காணுததுமான அம்மானை கண்டு வெகு ஆச்சரியமும் சந்தோஷமுமடைந்து ஆயுதபாணிகளாகிய தனது கணவனையும் லக்ஷ்மணரையும் அவ்விடத்துக்கு வரும்படி கூப்பிட்டாள். அவர்கள் அவ்விடம்சென்று நான்கு புறத்தும் பார்த்து அம்மானைக் கண்டார்கள். அதைக்கண்டதும் லக்ஷ்மணர் சந்தேகப்பட்டு இராமரை

நோக்கி "இந்தமானை ராக்ஷச மாரீசன் என்று நான் எண்ணுகிறேன். ஓ புருஷசிரேஷ்ட, உலகத்தில் இப்படி இரத்தினமிழைத்த மான் உண்மையாக இல்லை. ஆனபடியால் இது மாயை என்பதற்குச் சந்தேகமில்லை" என்று சொன்னார்.

லக்ஷ்மணர் அப்படிச் சொன்னதைச் சீதை தடுத்து, மாரீசனுடையமாயை மனத்தைக் கவர புன்னகைசெய்து சந்தோஷங்கொண்டு, கணவனைப்பார்த்து "என் நாதா, இவ்வழகான மான் என்மனத்தைக் கவருகின்றது. தாங்கள் இதை எனக்குப் பிடித்துத் தரவேண்டும். நமது விளையாட்டுக்கு இது உபயோகப்படும். உயிருடனே இம் மானைத் தாங்கள் பிடிக்கக்கூடுமானால் மிக ஆச்சரியமாக இருக்கும். எல்லாரும் இதைக்கண்டு வியப்படைவார்கள். வனவாசம் முடிந்து நாம் நமது இராச்சியத்தை அடைந்தபோது இம்மான் நமது அந்தப்புரத்திற்கு ஒரு அலங்காரமாக இருக்கும். இம்மானை உயிருடன் பிடிக்க முடியாதாயின் இதனுடைய தோல்கூட அழகாகவிருக்கும்" என்று வேண்டினள். இராமரும் வியப்புற்றார். வெகு சந்தோஷத்துடன் தமது தம்பியைப்பார்த்து "லக்ஷ்மண, சீதை இம்மானிடத்தில் மிக ஆசைப்பட்டிருக்கிறாள். தங்கநிறமானதும் அநேகவித இரத்தினங்களின் வண்ணத்தை உடையதுமான இதன்ரூபத்தைக் கண்டு யார் தான் ஆச்சரியமடையார்? நீ சொல்லுகிறபடி இது அரக்கன் மாயையாகவிருந்தாலும் நான் அவசியம் இதை வதை செய்யவேண்டியவன். மாரீசன் என்ற அக்கொடிய பாவி இக்காட்டில் அநேக முனிவர்களை வதை செய்திருக்கிறான். நீ ஆயுதபாணியாகச் சீதையைச் சாக்கிரதையாய் இவ்விடத்தில் பாதுகாத்துக்கொண்டிரு. நான் இதைப்பிடிக்கப்போகிறேன்" என்று கூறினர்.

இவ்வாறு தன் தம்பிக்குக் கட்டளையிட்டுவிட்டு வெகு பராக்கிரமத்தையுடைய இராமர் பொற்பிடியுள்ள தமது

வாளை இடையில் கட்டினார். பின்பு இரண்டு அம்பறாத் தூணிகளை முதுகில் வீக்கி தமக்கு ஓராபரணம்போல விளங்குவதான மூவிடங்களில் வளைந்துள்ள தமது வில்லைக் கையில் எடுத்துக்கொண்டு புறப்பட்டார். அவ்வாறு புறப்பட்டுவந்த அம்மன்னர் மன்னனைக்கண்டு மாரீசனாகிய மான் நடுநடுங்கி ஓடி யொளிந்தது; மறுபடி அவர் கண்ணிற்குப் புலனாயிற்று. ஒருகால் பாணம் பாயும் தூரத்துக்கப்பால் ஓடிச் செல்லும்; ஒருகால் கிட்டி வந்து ஆசைகாட்டும்; ஒருகால் தன் உயிருக்கு அபாயம் வந்ததாகப் பயந்து வெகுகலக்கமெய்தி ஆகாயத்தில் எழும்பிக் குதித்தோடும்; ஒருகால் காட்டில் வந்து கண்ணுக்குப் புலனாகும்; ஒருகால் புலனாகாது மறைந்துவிடும். இவ்வாறு மாரீசன் இராமர் கண்களுக்கு எதிர்ப்பட்டும் எதிர்ப்படாது ஓடிமறைந்தும் அவரை ஆச்சிரமத்திலிருந்து வெகு தூரம் கொண்டுசென்றான்.

இராமர் தம்மை அவ்வளவு தூரம் அம்மான் இழுத்து வந்ததற்காக வெகு கோபங்கொண்டு அதனைக் கொல்ல உறுதி செய்து, சூரியனுடைய கிரணங்களுக் கொப்பாக ஜ்வலிக்கும் ஒரு பாணத்தை எடுத்துத் தமது பலமான வில்லில் பூட்டி அம் மானைக்குறிப்பிட்டு எய்தார். இடிக் கொப்பான அந்த உத்தம பாணம் மாரீசன் தேகத்தைக் கிழித்து அவனுடைய இருதயத்தையும் பிளந்தது. ஆயுள் முடிந்த அவ்வரக்கன் ஒரு பனையுயரம் ஆகாயத்தில் எழும்பி வெகு பயங்கரமாக "ஓ சீதா! ஓ லக்ஷ்மணா!" என்று கதறிக்கொண்டு பூமியில் விழுந்தான்.

அப்பொழுது அவன் அரக்கர்களுக்குரிய பயங்கரமான உருவத்தை அடைந்து, மாண்டுபூமியில் விழுந்து, தேகமெல்லாம் இரத்தமொழுக வெறுந் தரையில் புரண்டு கொண்டிருந்ததை இராமர் கண்டு, லக்ஷ்மணன் சொன்னது நிச்சயமாய் விட்டதென்று தெரிந்து மனதில் சீதையைக் குறித்து நினைத்தார். "இது மாரீச

னுடைய மாயை. லக்ஷ்மணன் இதை முன்னரே அறிந்து சொன்னுன். 'ஓ சீதா, ஓ லக்ஷ்மணு' என்று பெருஞ் சத்த மாய்க் கூச்சலிட்டு மாண்டான்! இதைக்கேட்டுச் சீதை என்ன செய்வாளோ தெரியவில்லை! வெகு பராக்கிரம சாலியாகிய லக்ஷ்மணன் யாது செய்வான்?" என்று சிந்தித் துக்கொண்டிருக்கையில் தர்மாத்துமாவான இராமருக்குத் தேகம் மயிர்க்கூச்செறிந்தது. அவர் உடனே ஆச்சிர மத்தை நோக்கி வெகு வேகமாகச் சென்ருர்.

தனது நாயகனுடைய குரல்போன்ற அந்தப் பரிதாப மான கூச்சலைக்கேட்டு சீதை லக்ஷ்மணரைப்பார்த்து "இராகவருக்கு என்ன நேர்ந்தது என்று போய்ப்பாரும். அவர் கதறினதைக்கேட்டு எனது இருதயமும் உயிரும் தம்முடைய நிலையில் நிற்கவில்லை. காட்டில் கதறும் உமது தமையனுரைக் காப்பாற்றுவது உமது கடமை. உடனே செல்லும். இடபம் சிங்கத்தினிடத்தில் சிக்கிக்கொண் டதுபோல் அவர் அரக்கர்கள் வசம் அகப்பட்டுக் கொண் டார்" என்ருள். அவளைப் பார்த்து லக்ஷ்மணர் "வைதேகி, பன்னகர், அசுரர், கந்தருவர், தேவர், மானிடர், ராக்ஷசர் ஆகிய இவர்களில் ஒருவரும் உம்முடைய கணவரைவெல்ல முடியாது. இந்திரனுக்கொப்பான இராமர் முன் நின்று போர்புரிய வல்லவர்கள் ராக்ஷசர்கள், பிசாசர்கள், கின் னரர்கள், மிருகங்கள், பயங்கரமான தான வர்கள் முதலியவர்களுள் ஒருவருமில்லை. அம்மா, இரா மரைப்போரில் கொல்ல வல்லவர்கள் ஒருவருமிலர். ஆகை யால் உமது உள்ளத்தில் துயரம் வேண்டாம்; எவ்வித மான தாபமும் வேண்டாம். அந்தப் பொன் மானைக் கொன்றுவிட்டு உமது கணவர் விரைவில் திரும்பிவருவார். அக்கூச்சல் அவர் குரலன்று; வேறு யாரோ மாயையால் இட்ட சத்தம். இராமர் தாம் திரும்பி வருகிறவரையில் பாதுகாக்கும்படி உம்மை என்னிடம் ஒப்பித்தார். ஆகை யால் நான் உம்மை விட்டுச் செல்லமாட்டேன்" என்ருர்.

இவ்விதமாக லக்ஷ்மணர்சொல்ல சீதை வெகு கோபம் கொண்டு கண்கள் சிவந்து அவரைப் பார்த்துக் கடுஞ் சொல்லால் "கெட்டவரே! கருணையற்றவரே! கொடிய வரே! குடிகேடரே! இராமருக்கு இப்போது நேரிட்ட பெருந்தீங்கு உமக்குச் சம்மதம் போலும். ஆகையாற்றான் அவருக்குத் தீங்கு வந்துவிட்டதென்பதைத் தெரிந்தும் நீர் இவ்வாறு பேசுகிறீர். குரூரமனமும் கெட்ட எண்ணமு முடைய சத்துருவாகிய உம்மிடத்தில் இவ்விதமான கொடிய செய்கை காணப்படுவது ஆச்சரியமன்று" என்றாள். இவ்வண்ணம் மயிர்சிலிர்க்கும்படியான கொடிய வசனங்களை சீதை சொல்ல ஐம்புலன்களையும் அடக்கின லக்ஷ்மணர் கைகுவித்து அவளைப்பார்த்து "அம்மா, நீர் எனக்கு ஒரு தெய்வமாகையால் நான் உமக்கு ஒரு மறு மொழியும் சொல்லக் கூடாதவனாக இருக்கின்றேன். நான் இராகவர் இருக்கிற இடம் போகிறேன். நீர் க்ஷேமமாக இரும். உம்மை இவ்வனதேவதைகள் பாதுகாக்கட்டும். பல அபசகுனங்கள் தோன்றுகின்றன! மறுபடி நான் இராமரோடு திரும்பி வரும்பொழுது உம்மைப் பார்ப் பேனாக" என்றார்.

23. இராவணன் சீதையை எடுத்துச் செல்லல்

இவ்விதமாகக் கடுஞ் சொல் கூறப்பெற்ற லக்ஷ்மணர் கோபங்கொண்டு இராமரைத் தேடிப் புறப்பட்டுச் சென்றார். சமயம்பார்த்து ஒளித்திருந்த தசக்கிரீவன் உடனே சந்நியாசி வேஷம்கொண்டு சீதைமுன் வந்தான். அழகான காவித்துணி உடுத்து, தலையிலொரு சிறு குடுமி வைத்து, கையிற் குடைபிடித்து, பாதங்களில் செருப் பணிந்து, இடத்தோளில் தண்டமும் கமண்டலுவுந் தாங்கி சீதையிருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தான். சந்திர சூரியர்கள் இருவரும் இல்லாமலிருக்கும் சந்தியாகாலத்தை நள்ளிருள் நணுகினதுபோலத் தோன்றிற்று. ராக்ஷசேந்

திரன் வேதமோதிக்கொண்டு சீதையை அணுகி புகழத் தொடங்கினன்.

"பொன் போன்ற மேனியை உடையராகி மஞ்சள் பட்டுடுத்து தாமரை ஓடைபோல அழகான தாமரை மலர் மாலையை அணிந்திருக்கும் நீங்கள் யாரம்மா? அழகான முகம் படைத்த மாதே நீங்கள் யார்? கீர்த்தியோ? அழகோ? லக்ஷ்மியோ? அப்சரசோ? ஐசுவரியத்தின் உருவமோ? அல்லது தனது இஷ்டப்படி சஞ்சரிக்கும் ரதி தேவியோ? உங்களுடைய பற்கள் ஒன்றுபோல் எல்லாம் அழகாகவும் கூரிய முனைகளை யுடையனவாகவும் வெண்மையாகவும் இருக்கின்றன. உங்கள் கண்கள் விசாலமாகவும் நிஷ்களங்கமாகவும் செவ்வரிபடர்ந்தனவாகவும் கருவிழிகளுடையனவாகவும் விளங்குகின்றன. கடிபாகம் விசாலமும் பெருமனுமா யிருக்கின்றது; துடைகள் யானைத் துதிக்கைபோலத் திரண்டு பருத்திருக்கின்றன. தனங்கள் விம்மிப் புடைத்து இறுமாந்து மணிவடங்களணிந்து பனம்பழத்துக் கொப் பாக விளங்குகின்றன. அம்மணி, உங்கள் புன்னகையும், பற்களின் அழகும், கண்களின் ஒளியும், உங்கள் மேனியும் ஆற்று நீர் கரையைக் கரைத்துக்கொண்டோடுவது போல என் உள்ளத்தை முழுதும் கவர்ந்துவிட்டன. பிடிக் கடங்கின இடையையும் அழகிய கூந்தலையும் உடையவரே, உம்மைப்போல் இவ்வளவு அழகான பெண்ணை தேவப் பெண்களுள்ளும், கந்தர்வ யக்ஷ கின்னரப் பெண் களுள்ளும் நான் பார்த்ததில்லை. இவ்வுலகத்தில் மிக உத்தமமான உங்கள் அழகும், இளமையும், சாயலும், நீங்கள் காட்டில் வசிப்பதும் எல்லாம் என் மனத்தை மயக்குகின்றன. தங்களிஷ்டப்படி உருவம் மாறும் கொடிய அரக்கர்கள் வசிக்கும் காடு இது. நீர் எவ்வாறு இங்கு வந்தீர்?" என்முன்.

துஷ்டனாகிய இராவணனால் இவ்வாறு வினவப்பட்ட சீதை அவனுடைய அந்தண வேஷத்தைக்கண்டு அவனுக்கு அதிதிகளுக்குச் செய்யவேண்டிய மரியாதைகளில் ஒன்றுங் குறையாமல் செய்தாள். பின்னர் தனக்குள்ளே "இவரோ நமது அதிதி. மேலும் பிராமணர். கேட்டதைச் சொல்லாவிடில் இவர் நம்மைச் சபிப்பார்" என்று கொஞ்சநேரம் யோசித்து அவனைப்பார்த்து சீதை சொல்லலுற்றாள் :—"உங்களுக்கு நன்மையுண்டாகுக. நான் மிதிலைக்கரசனான மகாத்துமாவாகிய ஜனக மகாராஜாவின் குமாரி ; இராமருடைய அன்பான மனைவி. என்பெயர் சீதை. இக்ஷ்வாகு வம்சத்தரசர்கள் மாளிகையில் பன்னிரண்டு வருஷகாலம் வசித்துப் பலவித போகங்களையும் அனுபவித்து என்னுடைய இச்சைகள் எல்லாம் நிறைவேறப் பெற்றேன். பதின்மூன்றும் வருஷத்தில் தசரதமன்னர் தமது மந்திரிமார்களுடன் யோசித்து இராமருக்குப் பட்டாபிஷேகம் செய்துவைக்கத் தீர்மானித்தார். பட்டாபிஷேக நிமித்தமாக தந்தையிடம் சென்ற என் பர்த்தாவாகிய இராமரைப் பார்த்துக் கைகேயி "இராகவா, உனது தந்தை என்னிடம் செய்திருக்கும் கட்டளையைக் கேள். ஒருவித இடைஞ்சலின்றி இந்த இராச்சியம் பரதனுக்காகவும் நீ ஏழிரண்டாண்டு காட்டிலுறையவும் வேண்டுமாம். ஆகையால் நீ அவ்வாறு சென்று உனது தந்தையினுடைய வார்த்தையை காப்பாற்றி வைப்பாயாக" என்று இக் கொடுஞ் சொற்களைச் சொன்னாள். என் கணவராகிய இராமர் அவ்வாறே ஆகுக வென்று அவளுடைய வார்த்தையை அங்கீகரித்து விரதம் பூண்டு இவ்விடம் வந்தார். இராமருடைய இளையதாயார் வயிற்றிற் பிறந்த தம்பி லக்ஷ்மணர். அவர் இராமருக்கு உதவியாயுள்ளவர் ; சத்துருக்களை வதைக்கும் வல்லமை பெற்றவர். ஐம்புலன்களையும் அடக்கித் தருமத்தை இடைவிடாது நடத்தும் இராமர் சடைபுனைந்து தவ

வேடம் பூண்டு தமது தம்பியோடும் இந்தத் தண்டகாரணியத்துக்கு வந்து சேர்ந்தார். ஐயா பிராமணோத்தமரே, தாங்கள் இங்கே சற்றுத்தங்கி இளைப்பாறுங்கள். எனது கணவர் காட்டில் உள்ள கந்தமூல பலங்களையும் மான் பன்றி முதலானவைகளைக் கொன்று போதுமான இறைச்சியையும் எடுத்துக்கொண்டு இதோ திரும்பிவந்து விடுவார்".

இவ்வாறு இராமருடைய மனைவியாகிய சீதை சொல்ல அரக்கர் வேந்தன் விரைந்து கூறலுற்றான் :—"சீதாய், நான் இராவணன்; அரக்கர் மன்னன். தேவர்கள், அசுரர்கள், மானுடர்கள் யாவரும் அஞ்சுபவன். பொன்போலும் மேனியுடையவளும் பட்டுடுத்துள்ளவளுமாகிய உன்னைக் கண்டது முதல் நான் எனது மனைவிமார்கள் மேல் ஆசையை முழுதும் ஒழித்து விட்டேன். நான் பல இடங்களிலிருந்து அநேக அழகான பெண்களைக் கொண்டுவந்து வைத்திருக்கிறேன். அவர்களெல்லாருக்கும் நீ தலைவி ஆகுவாயாக. சமுத்திரத்தின் நடுவில் நாலுபுறமும் கடலால் சூழப்பட்டு மலையின் சிகரத்தில் அமைக்கப்பட்ட இலங்கை எனது இராஜதானி" இவ்வாறு இராவணன் சொல்ல, உத்தமியான ஜானகி கோபமடைந்து அவ்வரக்கனை அகன்று நின்று சொல்லலுற்றாள் :-"பெரிய மலைபோல அசைக்க முடியாதவரும், மஹேந்திரனுக்கொப்பானவரும், பெருங்கடல் போலக் கலக்க முடியாதவருமான இராமருடைய மனைவி நான். சகல லக்ஷணங்களும் பொருந்தினவரும், ஆலவிஷம் போல்வரும், சத்தியவந்தரும், மகாத்துமாவாகிய இராமருடைய மனைவி நான். நீண்டகரங்களும், அகன்ற மார்பும், மதத்த சிங்கத்தின் நடையுமுடைய புருஷ சிங்கமாகிய இராமருடைய மனைவி நான். பூரண சந்திரனுக் கொப்பான முகமுடையவரும், ராஜ குமாரரும், ஐம்புலன்களை அடக்கினவரும், பெரும் புகழ்பெற்றவருமாகிய இராமருடைய மனைவி நான்.

மந்தரமலையை நின்கையால்தழுவவும் விஷத்தை உண்டு விட்டு உயிருடனிருக்கவும் நீ நினைக்கின்றாய்! கூரிய ஊசியால் கண்களைத் துடைக்கவும் கத்தியின் கூரை நாவால் பரிசிக்கவும் நீ நினைக்கின்றாய்! கழுத்தில் ஒரு பெருங் கல்லைக் கட்டிக்கொண்டு சமுத்திரத்தைக் கடக்க நீ விரும்புகிறாய்! இராமருடைய உத்தமமான பத்தினியை விரும்பும் நீ சூரியசந்திரர்களைக் கையால்பற்றவும், கொழுந்து விட்டெரியும் தீயை துணியில் முடிந்துகொள்ளவும், கூரிய இருப்புச் சூலங்களின்மேல் நடக்கவும் கருதுகிறாய்! சிங்கத்துக்கும் நரிக்கும் போலவும், கால்வாய்க்கும் சமுத்திரத்துக்கும் போலவும், அமுதத்துக்கும் கஞ்சிக்கும் போலவும், தங்கத்துக்கும் இரும்புக்கும்போலவும், சந்தனத்துக்கும் சேற்றுக்கும் போலவும், யானைக்கும் பூனைக்கும் போலவும். காக்கைக்கும் கருடனுக்கும் போலவும், மயிலுக்கும் நீர்க் கோழிக்கும் போலவும், சாரசப்பக்ஷிக்கும் கழுகுக்கும் போலவும், இராமருக்கும் உனக்கும் உள்ள வேற்றுமை பெரிது." இந்தச் சொற்களைச் சொல்லி உத்தமியான சீதை பெருங்காற்றால் அசைக்கப்படும் வாழைபோல நடுங்கி நின்றாள்.

சீதை இவ்வாறு சொல்ல இராவணன் அதிக கோபங் கொண்டு, தனது புருவங்களை நெரித்துக் கூறலுற்றான் :— "ஓ சுந்தரி, நான் குபேரனுடைய தம்பி. என்பெயர் பத்துத்தலைகளைப் படைத்த இராவணன். நீ வாழ்வாயாக. நான் வெகு பிரதாபமுள்ளவன். சமுத்திரத்துக்கு அக்கரையில் எனது அழகிய பட்டணமாகிய இலங்கை உளது. விரும்பிய பழங்களைக் கொடுக்கும் பல்வகை மரங்கள் நிறைந்து சிங்கார வனங்கள் செறிந்தது. ஜனகராஜ புத்திரி, சீதே, நீ அவ்விடத்தில் என்னுடன் வாழ வேண்டும். அவ்விடத்தில் நீ மானிடர்களுக் கெட்டாத போகங்களை அனுபவித்துக்கொண்டு சுகமாயிருக்கும் போது அற்ப ஆயுளுடைய மானிடனாகிய இராமனை

நினைக்கவே மாட்டாய். தனது இராச்சியத்தை இழந்து துன்புறும் விரதியாகிய இராமனோடு இனி உனக்கு உறவு என்ன? நீ அலக்ஷ்யம் செய்வாயேயானால் பரிதாபப் படுவாய்".

இராவணன் இவ்வண்ணம் சொன்னதை சீதை கேட்டு வெகு கோபமடைந்து கண்கள் சிவந்து அவ்வரக்கர் மன்னவனை நோக்கி இவ்வித கடினமான சொற்களைச் சொல்வாளாயினாள். "அடா இராவணா, புலன்களை அடக்காத புத்தியற்ற கொடியவனாகிய உன்னை அரசனாக அடைந்ததால் அரக்கர்கள் எல்லாரும் மாண்டுபோகப் போகிறார்கள். இந்திரன் மனைவியாகிய சசிதேவியைக் கவர்ந்து சென்றவன் ஒருகால் பிழைத்தாலும் பிழைக்க லாம்; இராமருடைய மனைவியாகிய என்னைக் கவர்ந் தவன் ஒரு நாளும் உயிருடன் இருக்கமாட்டான்."

சீதை சொன்னதைக் கேட்டு தசக்கிரீவன் கையொடு கையைத் தட்டிகொண்டு தான்கொண்ட சந்நியாசி வேஷத் தை நீக்கிவிட்டு யமனுக்கொப்பான தனது நிஜ உருவங் கொண்டு பத்துத் தலைகளும், பாணங்களும், வில்லுகளும் உடையவனாய் வெகு கோபங்கொண்டு நின்றான். பின்பு அவன் சீதையை அவளுடைய கூந்தலை இடக்கையாலும் துடைகளை வலக்கையாலும் பிடித்துத் தூக்கினான். பன்ன கேந்திரன் மனைவிபோலத் துவளும் சீதையை இராவணன் மோகத்தால் மயங்கித் தூக்கிக்கொண்டு உயரக் கிளம் பினான். அவள் அவன்மேல் சிறிதும் அன்பில்லாதவளாத லால் தன்னை அவன் கையில் நின்று விடுவிக்கப் பெரிதும் முயன்றாள். அரக்கர் மன்னவனால் ஆகாசமார்க்கமாகக் கொண்டுபோகப்படாநிற்கையில் அவள் பைத்தியம் பிடித் தவள் போலவும், பிராந்தி கொண்டவள்போலவும், பிணி கொண்டவள்போலவும் அதிகமாகக் கதறத் தலைப்பட் டாள்; "ஆ! லக்ஷ்மணரே, பெரும் பராக்கிரமம் பொருந்தியவரே, பெரியவர்கள் சொற்படி நடப்பவரே,

நம்மிடம் அருளைக்கொண்ட அரக்கன் என்னைத் தூக்கிப்போவதை நீர் அறியீரோ? தருமத்தின் பொருட்டு வாழ்வையும் சுகத்தையும் பொருளையும் துறந்து காட்டுக்கு வந்த இராகவரே, வெகு பாவியாகிய இராவணன் என்னை எடுத்துப்போவதை நீர் காணிலீரோ? நன்றாகப் புஷ்பித்த பல சிகரங்களையுடைய பிரசரவணபருவதமே, உனக்கு நமஸ்காரம்; நீ ராமரிடம் இராவணன் சீதையைத் தூக்கிப் போகிறான் என்று விரைவில் கூறு. அன்னம் காரண்டவம் முதலிய பறவைகள் நிரம்பிய கோதாவரி நதியே, உனக்கு நமஸ்காரம் செய்கிறேன்; அம்மா நீயும் இராமரிடம் இராவணன் சீதையைத் தூக்கிப்போகிறான் என்று சொல்லு. விருக்ஷங்கள் அடர்ந்த இக்காட்டிலுள்ள தெய்வங்களே, உங்களுக் கெல்லாம் நமஸ்காரம்; நீங்கள் எல்லாரும் என் கணவரிடம் இராவணன் என்னைத் தூக்கிப்போனான் என்று தெரிவியுங்கள். "ஐயா ஜடாயுவே, ஓ பெரியவரே, என்னைப் பாருங்கள்! என்னை அநாதைபோலக் கொடிய அரக்கன் இரக்கமின்றி தூக்கிக்கொண்டு போகிறானே! வெகு பலமுடையவனும் ஆயுதந்தரித்தவனுமாகிய இக்கொடிய அரக்கனைத் தடுக்க தங்களால் முடியாது. என்னை இவன் தூக்கிக்கொண்டு போகும் சமாசாரத்தை ஒன்றும் விடால் தாங்கள் கண்டதைக் கண்டபடி இராமரிடத்திலும் லக்ஷ்மணரிடத்திலும் சொல்லவேண்டும்" என்று வேண்டினாள்.

அந்தச் சத்தத்தைச் சிறிது தூங்கிக்கொண்டிருந்த ஜடாயு கேட்டு எழுந்து இராவணனையும் சீதையையும் கண்டார். அதன்பிறகு மலையின் சிகரம்போன்ற கூரிய மூக்குடைய அப்புள்ளரசர் மரத்தில் இருந்தபடியே இராவணனைப்பார்த்து "தம்பி தசக்கிரீவ, நான் பழமையான தருமங்களை அநுஷ்டித்து உண்மையைக்கைப்பற்றினவன். என் பெயர் ஜடாயு; பலம் பொருந்திய கழுகுகளுக் கரசன். தசரத குமாரராகிய இராமர் எல்லாப் பிராணி

களுக்கும் எப்பொழுதும் நன்மையே செய்பவர். நீ இப்பொழுது தூக்கிக்கொண்டுபோகும் இந்த மிக அழகிய பெரும் புகழ்பெற்ற சீதை அவ்வுலோக நாதருடைய தரும பத்தினி. நீ சீதையை உடனே விட்டுவிடு; இல்லாவிடில், இந்திரனுடைய வச்சிராயுதம் விருத்திராசுரனை எரித்தது போல, அக்கினிக்கொப்பான இராமருடைய கண்கள் உன்னை எரித்துவிடும். ஓ இராவணா, எனக்கு வயது அறுபதினாயிரமாகின்றது. நான் இதுவரையில் எனது மூதாதைகளிடமிருந்து எனக்குக்கிடைத்த இராச்சியத்தை நன்றாகப் பாதுகாத்து வருகிறேன். நான் வயதுசென்றவனாயினும் என்முன் சிறுவயதுள்ளவனும் கையில் விற்பிடித்து தேகத்தில் கவசமணிந்து இரதத்திலேறிச் செல்பவனுமாகிய நீ சீதையை எளிதில் தூக்கிக்கொண்டு போகமாட்டாய். நீ சூரனானால் கொஞ்சநேரம் காத்திருந்து இராமர் முன் நின்று போர்புரி. அப்போது கரனைப்போல் நீயும் மாண்டுவிழுந்து பூமியைத் தழுவுவாய். என்னால் கூடிய வரையில் நான் உனக்குப்போர் விருந்தளிக்கின்றேன். காம்பினின்று பழத்தைப் பறித்தெறிவதுபோல இவ்விரதத்திலிருந்து உன்னைக் கீழே தள்ளுகிறேன்'' என்று சொன்னார்.

ஜடாயு இவ்வாறு உரைக்க இராவணன் கோபமடைந்து, அக்கினிபோலக் கண்கள் சிவந்து, தானணிந்திருந்த தங்கக்குண்டலங்களாட, அவரை எதிர்த்து ஓடினான். அப்பொழுது அவ்விடத்தில் அரக்கர் மன்னவனுக்கும் கழுகரசனுக்கும் இடையில் காற்றினால் துரத்தப்பட்ட மேகங்கள் ஒன்றோடொன்று மோதினாற்போல பெரும் போர் நிகழ்ந்தது. இராவணன் தீக்ஷணமான நாளீகம், நாராசம், விகர்ணம் என்கிற பாணங்களை மழைபொழிவதுபோல அக்கழுகரசன் மேல் செலுத்தினான். ஜடாயு அவைகளைப் பொறுத்துக்கொண்டு கூரிய நகங்களுள்ள தனது கால்களால் வெகுபலசாலியாகிய இராவணு

னுடைய தேகத்தில் பலவிடங்களில் காயம் பண்ணினார். அதன்மேல் இராவணன் வெகு கோபங்கொண்டு சீதையைப் பூமியில் விட்டுவிட்டு ஜடாயுவின் இரு சிறகுகளையும் கால்களையும் விலாக்களையும் வாளால் வெட்டினான். கொடிய அரக்கனால் அவ்வாறு சிறகுகள் வெட்டுண்ட புள்ளரசர் குற்றுயிராகப் பூமியில் விழுந்தார்.

சீதை இராவணனால் வெட்டுண்டு புள்ளரசர் மாண்டு விழுந்ததைக் கண்டு வெகுவாகப் புலம்பினாள். "ஓ இராமா, ஓ லக்ஷ்மணா, என்னைக் காப்பாற்றுங்கள்" என்று சொல்லி அவ்வுத்தமியானவள் பயத்தால் நடுங்கிக்கொண்டு தனக்குச் சமீபத்திலிருப்பவர்களைக் கூப்பிடுவதுபோல கதறினாள். இராமா, இராமா, என்று கதறும் சீதையை இராவணன் தூக்கிக்கொண்டு ஆகாயமார்க்கமாகச் சென்றான்.

சீதை தன்னைத் தூக்கிக்கொண்டு ஆகாய மார்க்கமாகப்போகிற இராவணனைப் பார்த்துத் துயருற்று மிகவும் மனங்கலங்கிப் பெரும் பயமடைந்தாள். அவ்வாறு கொண்டுபோகப்படும்போது சீதை மிகவும் பரிதாபமாக அழுது, தனது கண்களில் கோபமும், அழுகையும், அச்சமும் புலப்பட தறுகண்ணனாகிய இராவணனைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினாள் :—"அடா இராவணா, அற்பனே, நான் தனியாக இருப்பதை அறிந்து என்னைத் தூக்கிக்கொண்டு போகிறாயே! உனக்கு வெட்கம் இல்லையா? இந்த நிந்தனையான காரியத்தைச் செய்துவிட்டு வெட்கம் இல்லாதிருக்கின்றாயே! ஒருவனுடைய மனைவியை அவனில்லாத சமயத்தில் அபகரிப்பதாகிய இந்தக் கொடிய இழிவான செய்கையை உலகமெங்கும் பெரியோர்கள் தூற்றுவார்கள். அவ்விரு ராஜகுமாரர்களுடைய கண்களுக்கு நீ எதிர்ப்படுவாயானால் உனது சைனியங்கள் சூழ இருந்தபோதிலும் நீ ஒரு நாழிகைகூட உயிரோடிருக்கமாட்டாய். விஷத்தைக் குடித்தவன் பிழைத்திருப்பது எவ்வாறு சிறிதும் முடியாதோ அது

போல மகாத்துமாவாகிய இராமருக்கு இந்தக் குற்றம் செய்து நீ பிழைக்கவே மாட்டாய்" என்றும் இன்னுமநேக விதமாகவும் இராவணன் மடியிற் கிடந்துகொண்டு சீதை வெகு பரிதாபமாகப் பிரலாபித்தாள்.

இராவணன் இவ்வாறு அவளைத் தூக்கிக்கொண்டு போகும்பொழுது சீதை ஒரு மலையின் சிகரத்தின்மேல் ஐந்து வானர வீரர்கள் நிற்கக்கண்டாள். அவர்கள் தன் விருத்தாந்தத்தை இராமருக்குச் சொல்லக்கூடும் என்று எண்ணி அவள் அவர்கள் மத்தியில் பொன்னிறம் பொருந்திய தனது மஞ்சள்பட்டு மேல்வஸ்திரத்தில் சில நகைகளை முடிந்து எறிந்தாள். அவ்வானர வீரர்கள் அவ்வாறு அழுதுக்கொண்டு போகும் சீதையைக் கண் இமையாது நன்குகப் பார்த்தார்கள். அரக்கர் குலாதிபன் பம்பா சரசைத்தாண்டி இலங்கை நோக்கி அழுதுகொண்டிருந்த தனது நாசத்துக்குக் காரணமான சீதையை எடுத்துக்கொண்டு இலங்கையை அடைந்தான்.

துயரத்தால் தீனமாய் தலைகுனிந்திருக்கும் சீதைக்கு தேவர்கள் மாளிகைக் கொப்பான தனது மாளிகையை இராவணன் பலாத்காரமாகக் காட்டினுன். அன்றியும் அவளுடன் தங்கத்தாலியற்றப்பட்டு வெகு அழகாக விளங்கும் தனது மாடிப்படியில் ஏறினுன். அம்மாளிகையிலுள்ள பலகணிகள் தந்தத்தாலும் வெள்ளியாலும் செய்யப்பட்டுப் பொன்புனைந்த வலைகளால் மூடப்பட்டிருந்தன. தரை மாணிக்கக்கற்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இராவணன் இப்படிப்பட்ட தனது மாளிகை முழுதையும் சீதைக்குக் காண்பித்தான். பிறகு அவளுடைய மனத்தை வசப்படுத்தும் பொருட்டு சொல்லலுற்றுன்:

"சீதாய், முப்பத்திரண்டுகோடி கோரமான அரக்கர்களுக்கு நான் தலைவன். என்னுயிரினும் நீ எனக்கு அரியை. இங்குள்ள உத்தமிகளாகிய என் மனைவியர்கள் எல்லாருக்கும் நீ தலைவியாகு. காதலி, நீ என்மனைவியாகு. இது

உனக்கு அழகு. வேறுவித யோசனை வேண்டாம். நான் சொல்லும் பேச்சைக்கேள். நான் உன்னுசையால் தவிக்கிறேன். என்மீது கருணைவைத்து என்னைச் சேர். நூறு யோசனை விஸ்தாரமுள்ள இந்த இலங்கை நான்கு பக்கங்களிலும் கடலால் சூழப்பட்டிருக்கிறது; இந்திரனோடு கூடிய தேவர்களாலும் எதிர்க்க முடியாதது. தேவர்கள், யக்ஷர்கள், கந்தர்வர்கள், பன்னகர்கள் முதலியவர்களுள் எனக்கொப்பான பராக்கிரமமுள்ளவன் ஒருவனுமில்லை. தனது இராச்சியத்தை இழந்து தீனனுகித் தவசு செய்து கொண்டிருக்கும் அற்ப ஆயுளுடைய மானிடனுகிய இராமனுல் உனக்கென்ன பயன்? ஆகையால், சீதாய், என்னிடத்து உன் மனத்தை வை. நான் உனக்கேற்ற நாயகன். மெல்லியலே, இளமை நிலையாது, ஆதலால் என்னை அணைவாய். இலங்கையிலிருந்துகொண்டு இந்தப் பெரிய இராச்சியத்தை நீயே பரிபாலனம் பண்ணு. நீ முன் செய்திருந்த பாவங்கள் எல்லாம் உனது வனவாசத்துடன் தொலைந்து விட்டன. இனி நீ செய்துள்ள புண்ணியத்தின் பலனை இவ்விடத்தில் அனுபவி. இதோ, உனது அழகான இரு தாள்களையும் என் தலையால் வணங்குகிறேன். சீக்கிரமாக என்மேல் கருணைவை. நான் உனது அடிமை. இராவணன் இதுவரையில் ஒரு பெண்ணையும் தலை வணங்கினதில்லை." என்று கூறினுன். இவ்வாறு கூறித் தசமுகன் மாளுங் காலம் கிட்டிவிட்டபடியால் மைதிலியைத் தனக்குரியவளாகவே எண்ணினுன்.

இராவணன் சீதையைப்பார்த்து இவ்வாறு சொல்ல அவள் துயரத்தால் தபித்துக் கொண்டிருந்தபோதிலும் அச்சமின்றி அவனுக்கும் தனக்கும் இடையில் ஒரு துரும்பைப் போட்டு அவனுக்கு மறுமொழி கூறுவாளாயினுள். "தருமாத்துமாவாகிய இராகவருடைய பெயர் இம்மூவுலகங்களிலேயும் பரவியிருக்கிறது. அவர் நீண்ட கைகளையுடையவர்; விசாலமான கண்களையுடையவர்; தெய்வம்

போல்பவர். அவன்தான் என் கணவர். அவர் இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்தவர்; சிங்கத்தின் தோள்போன்ற தோள்களையுடையவர்; மிக்க புகழை உடையவர். அவரே தமது தம்பியாகிய லக்ஷ்மணருடன் உனது உயிரை வாங்கப் போகிறார். கோபத்தால் கொழுந்து விட்டெரியும் கண்களால் இராமர் உன்னைப் பார்ப்பாராயின் நீ மன்மதனைப் போல உடனே எரிந்து நீறுவாய். உனது ஆயுள் மாய்ந்து விட்டது. உனது லக்ஷ்மி உன்னைவிட்டு நீங்கிவிட்டாள்; உனது பலம் போய்விட்டது; உனது புலன்களும் குன்றி விட்டன. உன் நிமித்தம் இலங்கை கைம்மைத் தன்மை அடையப்போகின்றது. இராமருடைய தரும பத்தினியும் பதிவிரதையுமான என்னை நீ தொட முடியாது. உணர்ச்சியற்ற இந்தச் சரீரத்தை நீ கட்டினுலென்! அழித்தாலென்! அடா இராவணு; இந்த சரீரத்தையாவது உயிரையாவது காப்பாற்ற முயலேன்''

இவ் வன்மொழியை இராவணன் கேட்டு சீதையை நோக்கி "அடியே சீதே, நான் சொல்லுவதைக் கேள். இன்னும் பன்னிரண்டு மாதங்களுக்குள் நீ என் கருத்துக்கிசையாவிடில் என் சமையற்காரர்கள் என் காலையுணவுக்காக உன்னைத் துண்டம் செய்வார்கள்'' என்று அச்சந் தரும் சொற்களைச் சொன்னான். இவ்விதமாக சொல்லி அங்கிருந்த ராக்ஷசிகளைப்பார்த்து "பயங்கரமான தோற்றமுள்ள ராக்ஷசிகளே, மாம்சத்தையும் இரத்தத்தையும் உணவாகக் கொண்டவர்களே, நீங்கள் தானே இவள் செருக்கை அடக்குங்கள். சீதையை அசோகவனத்திற்குக் கொண்டுபோங்கள். அங்கே அவளைச் சூழ்ந்து பாதுகாத்துக்கொண்டு காட்டு யானையை வசமாக்குவது போல ஒருகால் வெருட்டியும் ஒருகால் இன்சொற்சொல்லியும் அவ்ளை மெதுவாக வசமாக்குங்கள்'' என்றான். இவ்விதமாகக் கட்டளையிடப்பட்ட ராக்ஷசிகள் சீதையை அழைத்துக்கொண்டு, அசோகவனம் சென்றார்கள்.

24. ஜடாயுவின் தகனம்

ராக்ஷச மாரீசனைக் கொன்றுவிட்டு இராமர் விரைந்து திரும்பிவந்தார். சீதையைப் பார்க்கவேண்டுமென்று அதி வேகமாக அவர் சென்றுகொண்டிருக்கையில், அவருக்குப் பின்புறத்தில் நரிகள் வெகு கோரமாக ஊளையிட்டன. மயிர்க்கூச் செறியும்படியான அந்தப் பயங்கரமான சத்தத்தை கேட்டு யோசித்துக்கொண்டு இராமர் தமது ஆச்சிரமத்துக்கு விரைந்து திரும்பினார். ஒளிகுன்றிய முகத்துடன் லக்ஷ்மணர் வருவதைக்கண்டார். இராமர் மிகுந்த துக்கத்துடன் லக்ஷ்மணருடைய இடக்கையைப் பிடித்துக் கொண்டு மிக மெதுவாக "ஐயோ! லக்ஷ்மணா, நீ செய்தது பெருங்குற்றம். சீதையைத் தனியாக விட்டுவிட்டு நீ வந்தாயே! அவள் க்ஷேமமாக இருக்கிறாளா? அவளை அரக்கர்கள் கொன்றிருப்பார்கள் அல்லது புசித்திருப்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. வெகுவித அபசகுனங்கள் காணப்படுகின்றன. ஓ லக்ஷ்மணா! ஜனகருடைய புத்திரியாகிய சீதை பிழைத்து உயிருடனிருக்க நாம் காண்போமா? ஆச்சிரமத்தில் நீ அவளைத் தனியே விட்டுச் சென்றதென்ன?" என்றார்.

இவ்வாறு இராமர் கேட்க லக்ஷ்மணர் அதிக துக்கமடைந்தவராய், இராமரைப் பார்த்து "நான் என்னிஷ்டப்படி சீதையைத் தனியாக விட்டிட்டு வரவில்லை. "ஓ லக்ஷ்மணா, என்னைக் காப்பாற்று" என்று தாங்கள் கூவினாற் போன்ற சத்தம் அவள் காதில் விழுந்தது. அந்தப் பரிதாபமான சத்தத்தை மைதிலி கேட்டு தங்கண்மாட்டு வைத்த அன்பால் அழுது, பயத்தால் மீதூரப்பட்டு, என்னைப் பார்த்து "போ போ" என்று கட்டளையிட்டாள். இப்படியாக அவள் என்னைப் போ, போ, என்று பலதரம் ஏவ நான் அவளை நோக்கி, அவளை ஆற்றும் வண்ணம் "இராமர் மனத்தில் பயத்தை உண்டுபண்ணத்தக்க அரக்

கனே நான் பார்க்கவில்லை. இம்மூவுலகத்திலும் இராமரை போர்முகத்தில் வெல்லத்தகுந்தவர் ஒருவரும் இல்லை; இனிப் பிறக்கப்போகிறதுமில்லை'' என்றேன். இப்படி நான் சொல்லியும் சீதை புத்திமயங்கி கண்ணீர் விட்டுக் கொண்டு என்னைநோக்கி ''நீ என் தமையனுர் இறந்து போக என்னை அடையலாம் என்ற கெட்ட எண்ணம் கொண்டிருக்கின்றாய். நீ மாறுவேஷம் பூண்ட சத்துரு. எனக்காக இராமரைப் பின்றொடர்ந்தாய். ஆகையாற்றான் நீ அவருக்கு உதவி செய்யப்போகின்றாயில்லை'' என்று இக்கொடிய மொழிகளைச் சொன்னுள். இவ்வாறு சீதைசொல்ல நான் ஆச்சிரமத்தை விட்டு ஓடிவந்தேன்'' என்ருர். இவ்வாறு லக்ஷ்மணர்சொல்ல, இராமர் அதிக துக்கத்தால் அறிவுமயங்கி அவரைப்பார்த்து ''தம்பி, நீ அவளை விட்டிட்டு வந்தது குற்றம். அரக்கர்களால் என்னை வெல்ல முடியாது என்பதை நன்ருக அறிந்திருந்தும் சீதை கோபமாகச் சொன்னதைக்கேட்டு நீ ஆச்சிரமத்தை விட்டு புறப்பட்டுவந்தாய். கோபத்திஞல் அவள் சொன்னதைக்கேட்டு அவளைத் தனியாகவிட்டு நானிட்ட கட்டளையைக் காப்பாற்ருதது எவ்வகையானும் குற்றம். மான் உருவங்கொண்டு என்னை ஆச்சிரமத்திலிருந்து வெகு தூரம் இழுத்துச் சென்ற அரக்கன் இப்பொழுது என் அம்பால் அடியுண்டு மாண்டு கிடக்கிருன்'' என்று சொன்னுர்.

இராமர் ஆச்சிரமத்தை நோக்கிச் செல்லும்போது அவருக்கு இடக்கண் துடித்தது. கால் தடுமாறிற்று; தேகம் முழுதும் நடுங்கிற்று. இவ்வாறு அடிக்கடி உண்டாகும் அபசகுனங்களைப் பார்த்து அவர் லக்ஷ்மணரை நோக்கிச் ''சீதை க்ஷேமமா'' என்று பன்முறை கேட்டார். வெகு வேகமாகச் சென்று ஆசிரமம் வெறிதாக இருக்கக் கண்டு மனம் கலங்கினுர். பர்ணசாலை சீதை இன்றி பனிக் காலத்தில் தாமரைப் பூக்களில்லாத தடாகம்போல அழ

கற்றிருந்தது. தமது ஆசிரமம் அலங்கோலமாக இருக்கக் கண்டு இராமர் அடிக்கடி புலம்பினர்.

"சீதாய், நீ எங்கே போனாய்" என்று புலம்பிக்கொண்டு இராமர் ஒரு காட்டினின்று மற்றொரு காட்டுக்குச் சென்றும், ஒரு வேளை வேகமாய் ஓடியும், ஒரு வேளை விரைவாய் நடந்தும், பைத்தியம் கொண்டவர்போல் பலவாறலைந்து ஒரு நிமிஷம் நின்றவிடத்தில் மற்றொரு நிமிஷம் நிற்காமல் வனங்கள், ஆறுகள், மலைகள், அருவிகள் முதலிய விடங்களெல்லாம் சென்று சீதையை எங்கும் காணாராகிக் கையைத் தூக்கிக்கொண்டு புலம்பத் தொடங்கினர்:—"ஓ லக்ஷ்மணா, சீதை எங்கே? அவளிவ்விடம் விட்டு எங்கே போய்விட்டாள்? என் காதலியை யார் தூக்கிப்போயினர்? அன்றி யார் புசித்துவிட்டார்? ஓ சீதாய், நீ மரங்களில் மறைந்துகொண்டு என்னைப் பரிகாசம்பண்ணக் கருதுவது போதும்; துக்கத்தினால் வருந்தும் என்னைவந்து தேற்றுதல் செய். ஓ சீதாய், உன்னுடைய அன்புள்ள இந்தச் சிறுமான்கள் உன்னைக் காணாமல் கண்ணீர்விட்டு விசாரங் கொண்டிருக்கின்றன. ஓ லக்ஷ்மணா, சீதையின்றி நான் பிழைத்திருக்கமாட்டேன்"

லக்ஷ்மணர் இராமரைப்பார்த்து "ஐயா, மிக்க பராக்கிரமம் பொருந்தியவரே, துக்கப்படவேண்டாம். நாமிருவரும் இன்னும் தேடிப்பார்ப்போம். அந்தப் பெரியமலை அநேக குகைகளை உடையது. சீதை காட்டில் உலாவுகிறதில் ஆவல்கொண்டவள்; புஷ்பித்த மரங்களைக்கண்டு களிப்பவள். அவள் இக்காட்டில் எங்கேயாவது சென்றிருக்கலாம்; அல்லது பூக்கள் நிறைந்த தாமரையோடைக்குப் போய் இருக்கலாம். அவள் மீன்களும் நீர் நொச்சிகளும் நிறைந்த ஆற்றண்டை சென்றிருப்பாள். அல்லது நமக்கு அச்சமுண்டாக்கி நாம் எவ்வாறு அவளைத் தேடிப் பிடிப்போமென்பதைக் காண காட்டில் ஒளித்திருப்பாள், ஆகையால் நாம் விரைந்து அவளைத் தேடுவோம்" என்று

சொன்னார். இவ்விதமாக லக்ஷ்மணர் சொன்னவுடன் இராமர் மனந்தேறி தம்பியுடன் சீதையைத் தேடத் தொடங்கினார். வனங்கள், மலைகள், மலைகளின் உச்சிகள் தாழ்வரைகள், ஆறுகள், ஓடைகள் முதலிய எல்லாவிடங்களிலும் தேடியும் அவர்கள் சீதையைக் காணவில்லை.

பின்னர் இராமர் லக்ஷ்மணரைப்பார்த்து "லக்ஷ்மணா, இந்தப் பிரஸ்ரவணமலையிலும் தேடுவோம். வீரனே, பார்; இந்த மான்கள் அடிக்கடி என்னை உற்றுப்பார்க்கின்றன. அவைகளின் தோற்றத்தை நோக்குமிடத்து அவைகள் என்னிடம் ஏதோ சொல்லவிரும்புவன போலத் தோன்றுகின்றன" என்று உரைத்து இராமர் அம்மான்களைப்பார்த்து, தமது கண்களில் நீர் ததும்ப "சீதை எங்கே" என்று கேட்டனர். அப்படி அவர் கேட்டவுடனே அம்மான்கள் எழுந்து தென்முகமாக ஆகாசத்தை நோக்கிக்கொண்டு சீதையைத் தூக்கிக்கொண்டு போன வழியே நடக்கலாயின. அப்படிப்போகும் மான்கள் இராமரைத் திரும்பித் திரும்பிப் பார்த்து அந்த வழியையும் பூமியையும் அடிக்கடி உற்றுநோக்கிச் சென்றன. இவைகளை யெல்லாம் லக்ஷ்மணர் நன்றாகப்பார்த்து யோசித்து தமையனாரைப்பார்த்து "ஐய, சீதை எங்கே என்று தாங்கள் கேட்டவுடன் இம்மான்கள் எழுந்து பூமியைக்காட்டி தென்திசையை நோக்கிக்கொண்டு செல்லுகின்றன. ஆகையால் நாம் தென்திசையை நோக்கிச் செல்லுவோம். அப்படிச் செல்வதால் நாம் சீதையை அல்லது அவளைப்பற்றிய அடையாளங்களைக் காணலாம்" என்றார். இராமர் "அப்படியே ஆகட்டும்" என்று சொல்லி லக்ஷ்மணருடன் தென்திசையை நோக்கி போகும்வழியெல்லாம் சீதையைத் தேடிக்கொண்டே போயினார்.

அவ்வாறு அவ்விரு சகோதரர்களும் ஒருவருடன் ஒருவர் பேசிக்கொண்டு போகையில் அரக்கர்கோனுடைய அடிச்சுவடுகளையும் அவனாற் பற்றப்பட்டபோது பயந்து

இராமரைக் காணவேண்டி அங்குமிங்கும் ஓடித் தத்தளித்த சீதையினுடைய அடிச்சுவடுகளையும் கண்டார். இந்த அடிச்சுவடுகளையும் முறிந்த வில்லையும், தூணியையும், அழிந்த தேரையும் கண்டு இராமர் மனம் கலங்கி தமது தம்பியைப் பார்த்து "லக்ஷ்மணா, இதோ பார்! சீதையினுடைய பொன்னாபரணத் துண்டங்களும் அவள் அணிந்திருந்த மாலைகளும் அங்குமிங்கும் சிதறுண்டிருக்கின்றன. மாயாவிகளான அரக்கர்கள் சீதையைப் பல துண்டங்கள் செய்து புசித்துவிட்டார்கள் போலத்தோன்றுகிறது. சீதையின் பொருட்டு ராக்ஷசர்கள் இங்கு ஒருவரோடொருவர் எதிர்த்து பெரும்போர் செய்திருக்கவேண்டும். முத்துக்களும் வயிரக்கற்களும் இழைக்கப்பட்டு இங்கு முறிந்து கிடக்கின்ற இந்த வில் யாருடையது? இது தேவர்களது அல்லது ராக்ஷசர்களது ஆகவேண்டும். இதோ உடைந்து கிடக்கின்ற இளஞ்சூரியன் போன்ற வைடூரிய மணிகளிழைக்கப்பட்ட பொற்கவசம் யாருடையது? இதோ முறிந்து கிடக்கின்ற திவ்வியமாலைகள் கட்டப்பட்டதும் நூறுகம்பிகள் போடப்பட்டதுமான குடை யாருடையது? பேய்முக முடையனவும் மார்பிற் கவசம் பூண்டனவுமான இந்தப் பெரிய பயங்கரமான கோவேறு கழுதைகள் யாருடைய போரில் கொல்லப்பட்டன? இதோ உடைந்து, தரையில் கவிழ்ந்து, கொழுந்து விட்டெரியும் செழுந்தீக்கொப்பான கொடிகளையுடையதாய்க் கிடக்கின்ற இந்தப் போர்த்தேர் யாருடையது? இதோ கையிற் பிடித்த குதிரைச் சம்மட்டியோடுங் கடிவாளத்தோடும் மாண்டு கிடக்கின்ற தேர்ப்பாகன் யாருடைய சாரதி? தலைப்பாகையும், குண்டலங்களும் தரித்து கையிற்பிடித்த சாமரங்களுடன் இறந்து கிடக்கின்றவர்களாகிய இந்தச் சாமரம் போடுகிறவர்கள் யாருடைய ஆட்கள்? இந்த அடிச்சுவடுகள் அரக்கர்களுடையவை

களே. மாயங்கள் வல்ல கொடிய மனமுள்ள அரக்கர்களை யான் எனக்குப் பகைவர்களாக்கிக்கொண்டேன். ஏழையாகிய சீதை இறந்திருக்கவேண்டும்; அல்லது அவளை அரக்கர்கள் விழுங்கியிருக்கவேண்டும்; அல்லது தூக்கிக் கொண்டு போயிருக்கவேண்டும்" என்றார்.

சீதையின் பிரிவால் மிகவுந் துன்புற்று, பெருமூச் செறிந்துகொண்டு இராமர் நிற்க, லக்ஷ்மணர் முன் ஒரு பொழுதும் காணாத இராமருடைய பெருங்கோபத்தைக் கண்டு முகம்வாடி அஞ்சலி செய்து "ஐயா, தாங்கள் இப்பொழுது வில்லைக் கையில் பற்றி என்னையும் முனிவர்களையுந் துணையாகக்கொண்டு சீதையைக் கவர்ந்துபோனவனை கடல் மலை காடுகளிலும் பயங்கரமான குகைகளிலும், நீர் நிலைகளிலும் தேடுவீர். ஓ காகுத்த, தாங்களே இந்தத் துன்பத்தை சகிக்கிராயின் அறிவிலிகள் வேறு யார் சகிக்க வல்லார்? தாங்களே எனக்கு எத்தனையோதரம் சொல்லியிருக்கின்றீர்கள். பிருகஸ்பதிக் கொப்பான அறிவுள்ள தங்களுக்கு யாரால் புத்திசொல்ல முடியும்? தங்களுடைய புத்தியைத் தேவர்களாலும் அளவிட முடியாது. அவ்விதமான புத்தி இப்பொழுது துக்கத்தால் சோர்ந்து தூங்குகின்றது; நான் அதைத் துயிலுணர்த்துகின்றேன்" என்று கூறினார்.

லக்ஷ்மணர் இவ்வாறு நல்ல தகுதியான இனிய வார்த்தைகளைச் சொல்ல இராமர் அவைகளை ஒப்புக்கொண்டார். உடனே இராமர் தமது அழகான வில்லை ஊன்றிக் கொண்டு நின்று லக்ஷ்மணரை நோக்கி "தம்பீ, நாமிப்பொழுது எங்கே போகவேண்டும், என்னசெய்யவேண்டும், என்ன உபாயத்தினால் சீதையை அடையலாம் என்பவைகளைப்பற்றி யோசனைசெய்" என்றார். அதற்கு உத்தரமாக லக்ஷ்மணர் துயருறும் இராமரைப்பார்த்து "ஐய, இந்த ஜனஸ்தானத்தில் சீதையைத் தேடவேண்டும்" என்

றனர். இந்தச் சொற்களைக் கேட்டு இராமர் லக்ஷ்மணரோடு காடெங்குந் தேடினர்.

அப்போது அவர் எருவைக்கரசனாகிய ஜடாயு மலை போலப் பூமியில் விழுந்து தேகமெல்லாம் இரத்தந் தோய்ந்து கிடப்பதைக் காண ஜடாயு இராமரைப் பார்த்து நுரையுடன் இரத்தத்தைக் கக்கிக்கொண்டு "சிரஞ்சீவி, இப்பெருங்காட்டில் அரிய மூலிகையைப் போல நீர் தேடித்திரியும் அப்பெண்ணனங்கையையும் என் பிராணனையும் இராவணன் கவர்ந்துகொண்டு போய் விட்டான். ஓ ராகவா, நீரும் லக்ஷ்மணருமில்லாத சமயத்தில் வெகு பலசாலியாகிய இராவணன் சீதையைத் தூக்கிக்கொண்டோடுவதை நான் பார்த்து, அவளை மீட்பதற்காக அவனை எதிர்த்துப் போர்புரிந்து அவன் இரதத்தை அழித்துக் குடையை முரித்து அவனைப் பூமியில் வீழ்த்தினேன். அவனுடைய முரிந்த வில் இது. அவனுடைய ஒடிந்த பாணங்கள் இவை. நான் சிறிது சோர்ந்த சமயம் பார்த்து இராவணன் என் சிறகுகளை வாளால் வெட்டி சீதையைத் தூக்கிக்கொண்டு ஆகாசமார்க்கமாகச் சென்றுவிட்டான்." என்றார். இராமர் இவ்விதமாகச் சீதையின் வரலாற்றைக் கேட்டு புள்ளரசனைக் கட்டித் தழுவி லக்ஷ்மணருடன் கதறத் தலைப்பட்டார்.

பிறகு இராமர் ஜடாயுவைப்பார்த்து, "ஓ ஜடாயு, உமக்கு நன்மையுண்டாகுக. கூடுமாயிருந்தால் இராவணன் சீதையை எவ்வாறு கவர்ந்துகொண்டு போயினனென்றும், உம்மை எவ்வாறு கொன்றனென்றும் சொல்லும். இராவணன் சீதையை ஏன் களவாக எடுத்துக் கொண்டு போனான்? நான் அவனுக்கு என்ன குற்றஞ் செய்தேன்! அவன் அவ்வாறு அவளைக் கொண்டுபோகும் பொழுது சந்திரனுக் கொப்பான அவளுடைய அழகிய முகம் எவ்வாறிருந்தது? ஓ பறவை வேந்த, அவள் அப்போது என்ன சொன்னாள்? அவ்வரக்கனுடைய பலம்

என்ன? அவனுடைய உருவம் எவ்வாறிருக்கும்? அவன் செயல் யாது? அவன் வசிப்பது எங்கு? பெரியோய், சொல்லும்" என்று கேட்டார். இவ்வாறு எளியோர் போலப் புலம்பும் இராமரை நோக்கித் தருமாத்துமா வாகிய ஜடாயு மிக நுணுகிய குரலால் "ராக்ஷசேஸ்வரனு கிய இராவணன் சீதையைத் தூக்கிக்கொண்டு போனுன். அவன் சீதையை எடுத்துக்கொண்டு தென்திசைக் கேகி னுன். ஓ ராகவ, எனது பிராணன் போகப்போகிறது. எனது கண்கள் சுழன்றுகொண்டிருக்கின்றன. இராவ ணன் தூண்டிலைக் கவ்வின மீன்போல் விரைவில் மாண்டு போவான். ஆகையால் சீதையை மீட்டுக்கொள்வதைப் பற்றி சிறிதும் சந்தேகம் வேண்டாம். இராவணனைப் போரில் வதைத்து நீர் சீக்கிரம் சீதையைக் கூடிச் சந் தோஷமடைவீர்" என்று சொல்லி அவர் தமது பிராணனை விட்டார். மலைபோன்ற பெரிய உடலையும் சிவந்த கண் களையுமுடைய புள்ளரசர் மாண்டு விழுந்ததைக் கண்டு இராமர் துக்கமடைந்து, லக்ஷ்மணரைப் பார்த்து "பார் லக்ஷ்மணு, எனக்கு உபகாரமாகச் சீதையை மீட்கமுயன்ற ஜடாயு கொல்லப்பட்டார். மிக்க புகழ்படைத்த தசரத ரைப்போல இந்தப் புள்ளரசர் என்னுல் பணிந்துபோற் றப்படத்தக்கவர். ஓ லக்ஷ்மணு, நீ விறகுகொண்டு வா. நான் தீமூட்டி அதனுல் எனக்காக மாண்ட இப்புள்ளரச ரின் உடலைத் தகனம் செய்கிறேன்" என்ருர். இவ்வாறு சொல்லித் தர்மாத்துமாவாகிய இராமர் துக்கமடைந்தவ ராய் ஈமத்தின்மேல் ஜடாயுவினுடலை வைத்து அவரைத் தமது உறவினனைப்போலத் தகனம் பண்ணினுர். பிறகு அவ்விரு இராஜகுமாரர்களும் கோதாவரி நதிக்குச்சென்று ஸ்நானம் பண்ணி அவ்விடத்தில் சாஸ்திரப் பிரகாரம் கழுகரசனுக்குத் தர்ப்பணம் செய்தார்கள்.

25. இராமலக்ஷ்மணர்கள் கவந்தனைக் காணுதல்

அவ்வாறு ஜடாயுவுக்கு நீர்க்கடன் செய்துவிட்டு இராம லக்ஷ்மணர்கள் இருவரும் வில்பிடித்த கையர்களாய் சீதையைத் தேடிக்கொண்டு அக்காட்டில் தென்மேற்குத் திசையாகச் சென்றார்கள்; பின்பு தெற்கே திரும்பி ஜனங்கள் நடக்கப் பெறாத அரிய வழியொன்றை அடைந்தார்கள். அவர்கள் சென்ற காடு பெருஞ் சூழல்களும், மரங்களும், கொடிகளும் நெருங்கி நுழைதற்கரியதாய் பார்ப்பதற்கு வெகு பயங்கரமாக விருந்தது. தென்புறமாகச் சென்று அந்தக் கொடிய பாழ்ங்காட்டை இராம லக்ஷ்மணர்களிருவரும் விரைந்து கடந்து ஜனஸ்தானத்திலிருந்து மூன்று குரோச தூரத்திலுள்ள அடர்ந்த கிரௌஞ்சாரண்ணியத்தைக் கிட்டினார்கள். பலவித மரங்களும் அடர்ந்த சூழல்களும் நெருங்கி, அநேக மிருகங்களும் பறவைகளும் மலிந்துள்ள அப்பயங்கரமான காட்டைத் தேடியபின் ஒரு மலையின்மேல் பாதாளம்போல ஆழ்ந்து எப்போதும் இருள் செறிந்திருந்த குகை யொன்றை அவ்விரு ராஜ குமாரர்கள் கண்டார்கள்.

அப்பால் அவர்கள் அந்தக்காடு முழுதையும் தேடும்பொழுது காட்டை ஒடிப்பது போன்ற ஒரு பெரும் சத்தமுண்டாயது. அச்சத்தம் எங்கிருந்து வந்ததென்று உற்று நோக்கின இராமலக்ஷ்மணர்கள் மிக்க பெரிய உருவத்தையும் பெரிய துடையையுமுடைய அரக்கனொருவனைக் கண்டார்கள். அவர்களுக்கு முன்தோன்றிய அவ்விராக்ஷசனுடைய ரூபம் தலையற்ற கபந்தமாய் வயிற்றில் வாயுடையதாயிருந்தது. அவ்வரக்கன் யோசனை தூரம் தனது இரண்டு கைகளையும் நீட்டி அவற்றிற்குள் அகப்பட்ட மான் கரடி சிங்கங்களைப் பிடித்துப் புசித்தான். மற்ற மிருகங்கள் பக்ஷிகளை யெல்லாம் கையாற் பிடித்தெறிந்து கொண்டிருந்தான். அவன் வழியை மறித்து

இராமலக்ஷ்மணர்கள் வரவை எதிர்பார்த்திருந்தான். அவர்கள் ஒரு குரோசதூரஞ் சென்று கைகளினால் மிருகங்களை எல்லாம் வழிமறித்துத் தடுத்துக்கொண்டிருக்கிற பயங்கரமான கோரரூபமுள்ள கவந்தனைக் கண்ணுற்றார்கள். அப்போது கவந்தன் தனது பெரிய கைகளை நீட்டி இராமலக்ஷ்மணர்களைப் பிடித்துத் தனது பலத்தினால் நெரித்தான். உடனே இராமலக்ஷ்மணர்கள் காலத்தையும் இடத்தையும் நோக்கி வெகு சந்தோஷமாகி தங்களுடைய வாளினால் கவந்தன் தோள்களிலிருந்து அவனுடைய கைகளை வெட்டித் தள்ளினார்கள். கைகள் வெட்டுண்ட கவந்தன் மேக முழக்கம்போலப் பெருங்கூச்சலிட்டு ஆகாசம் பூமி எண்டிசைகளாகிய எவ்விடத்துங் கேட்கக் கதறிக்கொண்டு பூமியில் விழுந்தான்.

கைகள் வெட்டுண்டு தனது தேகமெல்லாம் இரத்த வெள்ளம்பெருக நின்ற அரக்கன் அவர்களைப் பார்த்து "நீங்கள் யார்?" என்று பரிந்துகேட்டான். இவ்வாறு கவந்தன் கேட்க லக்ஷ்மணர் அவனுக்கு ராகவரைப் பற்றிச் சொல்லலுற்று "இவர் இக்ஷ்வாகு வம்சத்தில் தோன்றி இராமர் என்று பெயருடையவர். நான் அவருடைய தம்பி லக்ஷ்மணன். அடர்ந்த காட்டில் வசித்துக் கொண்டிருக்கும்பொழுது தெய்வப் பெண்போன்ற இவருடைய மனைவியை ஒரு அரக்கன் தூக்கிக்கொண்டு போய் விட்டான். அவளைத் தேடிக்கொண்டு நாங்கள் இங்கு வந்தோம். நீ யார்; துடைகள் முரிந்து வாய் மார்பில் அமைக்கப்பட்டு இக்கவந்த உருவத்துடன் நீ ஏன் இக் காட்டில் வசித்துக்கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார். இவ்வாறு லக்ஷ்மணர் நல்லவார்த்தையால் கேட்க, கவந்தன் சந்தோஷமடைந்து இந்திரன் சொற்களை நினைத்துக்கொண்டு அவர்களைப்பார்த்து "புருஷோத்தமர்களே, உங்களுடைய வரவு நல்வரவாகுக. என்னுடைய பாக்கியத்தினால் நான் உங்களைக் கண்டேன். நான் சொல்லு

கிறேன் கேளுங்கள். பெருந்தோள்களையும் பேராற்றலையுமுடைய இராம, இந்திரனையும் சந்திராதித்தியர்களையும் போன்ற சொல்லமுடியாத என் அழகினால் நான் முன் மூவுலகங்களிலும் கீர்த்தி பெற்றிருந்தேன். நான் அந்த அழகிய ரூபத்தை யொழித்துக் கோரரூபங்கொண்டு எத்திசைகளிலும் காட்டில் வசிக்கும் ரிஷிகளை பயமுறுத்திக்கொண்டு வந்தேன். அப்படிச் செய்து வரும்பொழுது ஒருநாள் நான் இந்தக் கோரரூபத்தைத் தரித்துக் காட்டில் பழம் பறித்துக்கொண்டிருந்த ஸ்தூலசிரசென்ற பெரிய முனிவரைப் பயமுறுத்தினேன். அவர் கோபங் கொண்டு "மனிதர் எல்லாராலும் வெறுக்கப்படும் இக்கோர ரூபத்தை நீ அடையக்கடவாய்" என்று என்னைச் சபித்தார். நான் அவரை வணங்கி என் சாப விமோசனத்திற்காகப் பிரார்த்திக்க, அவர் "இராமர் உன் கைகளை வெட்டி உன்னை ஒரு பெரிய காட்டில் தகனஞ் செய்யும் போது நீ உன் அழகான உருவத்தை அடையக் கடவாய்" என்றார். அந்த இராமர் நீரே. ஓ ராகவ, உமக்கு நன்மையுண்டாகுக. இராமர் அன்றி வேறெவராலும் என்னைக் கொல்ல முடியாதென்று அம்மாமுனி உண்மையாகச்சொன்னார். சூரியன் மறையுமுன் என்னைக் குழியில் தள்ளி சாஸ்திரப்பிரகாரம் தகனம் செய்யும். உம்மால் தகனம் செய்யப்பட்டதன்பின் அந்த ராக்ஷசனை அறிந்தவ னொருவனை நான் உமக்குச் சொல்லுவேன். அவனோடு நீர் நட்பு செய்து கொள்ளும். அவன் உமக்குத் தகுந்த உதவி செய்வான். இந்த மூவுலகங்களிலும் அவனுக்குத் தெரியாத தொன்றில்லை. அவன் முன்னொருகாலத்தில் ஒரு காரணத்தால் மூவுலகங்களையும் சுற்றிவந்துளான்" என்றான்.

கவந்தன் இவ்வாறு கூறியபின் இராமலக்ஷ்மணர்கள் அவனை ஒரு மலைக்குகைக்குக் கொண்டுபோய் தகனம் செய்தார்கள். லக்ஷ்மணர் ஈமத்திற்கு நெருப்புவைத்தார். அது நாலுபக்கமும் நன்றாகப்பற்றி எரிந்தது. நெய்போல்

வதாகிய கவந்தனுடைய பெரிய தசை செறிந்த சரீரத்தை அந்தத் தீ மெதுவாக தகனம் செய்தது. அதன்பின் அப் பெரிய ராக்ஷசன் ஈமத்தினின்றும் புகையற்ற அக்கினிப் பிழம்புபோல் எழுந்து சுத்தவஸ்திரம் தரித்து திவ்விய மாலை யணிந்து விளங்கினான். அவன் வானில் நின்று இராமரை நோக்கி "ஓ இராகவ, யாது காரியம் செய்தால் நீர் உண்மையாய்ச் சீதையை அடையலாமென்பதைக் கேளும். பம்பாசரசின் கரையிலுள்ள மலைகளுட் சிறந்த ரிசியமூக பர்வதத்தில் கோபங்கொண்ட இந்திரன் குமாரனான வீரமும் அடக்கமுமுள்ள சுக்கிரீவன் என்னும் வானரத் தலைவன் தன் தமையன் வாலியால் துரத்தப்பட்டு, நான்கு வானரர்களோடு வசிக்கின்றான். அவன் உம்மோடு நட்பாகி சீதையைத் தேடுவதற்கு உதவி செய்வான். நீர் துக்கத்தி லாழவேண்டாம். இக்ஷ்வாகு குலோத்தம, இவ்வுலகத்தில் விதியை வெல்ல ஒருவராலும் முடியாது. நீர் இப்போதே இங்கே யிருந்து புறப்பட்டு விரைந்து சென்று மகாபலவானாகிய சுக்கிரீவனோடு நட்புச் செய்துகொள்ளும்." என்றனன்.

சீதையை அடைதற்கேற்ற வழியை இராமருக்கு நன்றாக எடுத்துக்கூறியபின் கவந்தன் மறுபடியும் அவரை நோக்கிப் பொருள்பொதிந்த சொற்களால் "இதோ மேற்குத்திக்கை அலங்காரம் செய்துகொண்டு மரங்கள் நிற்கின்றனவே, இதுதான் ரிசியமூக பர்வதத்திற்குப் போகும் வழி; வீரர்காள், காடுகளையும் மலைகளையும் சிறு குன்றுகளையும் ஒவ்வொன்றாகக் கடந்து சென்றால் நீங்கள் பம்பை என்னும் பெரிய ஏரிக்கரையைச் சேருவீர்கள். அப்பம்பாசரசிற்கு எதிரே பூத்த மரங்களையுடையதும் ஏறுவதற்கரியதும் சிறு பாம்புகளால் நான்கு பக்கத்தும் காக்கப்படுவதுமாகிய ரிசியமூக பருவத மிருக்கின்றது. நான்கு பக்கங்களிலும் கருங்கற் பாறைகளால் சூழப்பட்டு உட்புக வரியதாய் வாயிலில் பழந்தருமரங்கள் சூழ்ந்ததும்

குளிர்ந்த ஜலமுடையதுமாகிய அழகிய தடஞ்சுனை யொன்று பொருந்திய பெருங் குகையொன்று அந்த மலையிலிருக்கிறது. அக்குகையிலேதான் சுக்கிரீவன் தனது வானரத் துணைவர்களோடு வசிக்கிறான். அவன் சில சமயங்களில் அந்த மலையின் உச்சியிலும் இருப்பான். நீங்கள் உங்கள் காரியத்தை முடிக்கப்போங்கள்" என்று சொல்லி சந்தோஷமடைந்த இராமலக்ஷ்மணர்களிடத்தில் விடை பெற்றுக்கொண்டு போயினான்.

தருமாத்துமாவாகிய இராமர் தம்மனத்துள் சிந்தித்து லக்ஷ்மணரைப் பார்த்து "தம்பி, வா, அழகிய பம்பாசரசிற்குப் போவோம். அதோ சமீபமாகவே ரிசியமூகபருவதம் தோன்றுகின்றது. அவ்விடத்தில்தான் சூரிய குமாரனான சுக்கிரீவன் வசித்துக்கொண்டிருக்கிறான்" என்றார். பின்னர், இராமர் தமது தம்பியுடன் அநேக மரங்களையும், நீர் நிலைகளையும், நான்கு பக்கத்தும் பெரிய மரங்களடர்ந்ததும், புஷ்பங்கள் பொலிந்ததும், மயில் குயில் முதலிய பறவைகளொலிப்பதும், மூங்கில்கள் சடசடப்பதுமாகிய பெரிய வனங்களையுங் கடந்து பம்பையைப் பார்த்து லக்ஷ்மணரோடு "கவந்தன் சொன்னபடி இதன் கரையில் பல தாதுக்களையுடையதும் பல்வகை வர்ணங்களையுடைய பூமரங்கள் சூழ்ந்ததுமாகிய ரிசியமூக பருவதம் அதோ நிற்கிறது. மகாத்துமாவான ரிக்ஷரஜசின் குமாரனாகிய சுக்கிரீவனென்னும் புகழ் பெற்ற வானரத்தலைவன் அங்கேதான் வசிக்கின்றான். புருஷோத்தம, நீ அவனிடம் போய் வா" என்று சொன்னார்.

கிஷ்கிந்தா காண்டம்

26. சுக்கிரீவனோடு நட்பு

ஸ்ரீராமர் லக்ஷ்மணருடன் தாமரைகளும் நீலோத்பலங்களும் மீன்களும் நிரம்பிய பம்பையை அடைந்தார். அவ்வேரியைக் கண்டமாத்திரத்தில் அவர் உள்ளங் குளிர்ந்து இந்திரியங்கள் சலிக்க, சீதையினிடத்திலிருந்த ஆசை பெருகி மனக்கலக்கமுற்று புலம்புவராயினர்.—
"லக்ஷ்மணா, தெளிவான நீரினால் வைடூரியம் போலும் பம்பை நன்றாய் மலர்ந்த தாமரைகளாலும் ஆம்பல்களாலும் விருக்ஷங்களாலும் எவ்வளவு அழகாய் விளங்குகின்றது பார். அதைச் சூழ்ந்திருக்கிற அழகிய காட்டில் உள்ள ஒவ்வொரு மரமும் கோடுகள் சிகரங்கள் போலத் தோன்ற ஒவ்வொரு மலைபோலக் காணப்படுகின்றது. இப்பம்பை. துக்கத்தில் முன்னரே மூழ்கியிருக்கும், என்னை மேன்மேலும் வருத்துகின்றது. பறவைகள் இனிமையாக சப்திக்கின்ற வசந்தகாலம் சீதையைப் பிரிந்திருக்கும் எனக்கு சோகத்தை விளைக்கின்றது. லக்ஷ்மணா, முன்னரே துயரத்திலாழ்ந்திருக்கும் என்னை மன்மதன் பின்னும் தபிக்கச் செய்கிறான். அழகான கண்ணிமைகளையும் கருங் குழலையும் இன்சொல்லையுமுடைய சீதையைக் காணாது நான் உயிர் தரித்திருப்பதில் என்ன பிரயோஜனம்? என்னையகியிருக்குமிடத்திலும் இவ்வாறே வசந்தகாலமாயின் அவளும் என்னைப் போலவே துயருறுவாள் என்பதில் சந்தேகமில்லை. வைதேகியின் அன்பு முழுதும் என்னிடத்திலேயே. அப்படியே என்னுடைய அன்பும் அவளிடத்திலே. அநேகவிதமான பறவைகள் இனியகுரலெழுப்பிக்கூவி எனக்கு வேட்கை பெருகச் செய்கின்றன. அதோபார், விசித்திரமான அம்மலைத் தாள்வரைகளில் மான்கள் ஆணும் பெண்ணுமாய் விளையாடுகின்றன.

அவைகள் அங்ஙன்மாக, நான் இவ்விடத்தில்மான்போன்ற கண்களை உடைய வைதேகியைப் பிரிந்து வாடுகின்றேன். தாமரை மலர்போன்ற கண்களையுடைய என்னுடைய பிராணநாயகி என்னைவிட்டுப் பரதந்திரையாய் எவ்வாறு உயிர்தரித்திருக்கின்றாள்? அவளுடைய முகமண்டலத்தைக் காணாது என் மனம் வாடுகின்றது. லக்ஷ்மணா, ஒப்பில்லாததும், இனியதும், நன்மை பயப்பதும், இடையிடை புன்முறுவலோடு விரவியதும், எளிதிற் பொருள் விளங்கும் சொற்கள் பொதிந்ததும், நல்ல நடையினை யுடையதுமான அவ்வைதேகியின் வசனத்தை நான் எப்பொழுது கேட்கப் பெறுவேன்.''

இவ்வாறாக மகாத்துமாவாகிய இராமர் திக்கற்றவரைப்போல் புலம்புவதை லக்ஷ்மணர் பார்த்து காலோசிதமான வார்த்தைகளை சொல்வாராயினர் :—''ரகுகுல திலக, உமக்குண்டாயிருக்கும் இந்தத் துக்கத்தை விட்டு விடுவீராக. உமக்கு மங்களமுண்டாகுக. புருஷோத்தம, நீர் விசனப்பட வேண்டாம். சுத்தாத்துமாக்களுடைய புத்தி இவ்விதமாய்க் கலக்கமடைவது கூடாது. இப்பொழுது சீதையின்பிரிவாலுண்டாயிருக்கும் துக்கத்தை நினைந்து பிரிய ஜனங்களிடத்தில் அதிக நேசம் பாராட்டக்கூடாதென்று அதை யொழித்துவிட வேண்டும். எண்ணெயில் அதிகமாய் நனைந்த வர்த்தி எண்ணெயின் ஈரமுள்ளதேனும் எரிந்துவிடும். ஓ இராகவ, பாதாளம் சென்றாலும் சரி, அதன் கீழேபோயொளிந்தாலும் சரி, இராவணன் ஒரு நாளும் பிழைக்கப்போகிறதில்லை. முதலில் நாங்கள் அக்கொடிய அரக்கனுடைய சங்கதிகளை அறிந்துகொள்வோம்; உடனே அவன் சீதையைக் கொண்டுவந்து விட்டாலாயிற்று; இல்லையாயின் அவன் மரணமடைவது திண்ணம். தேவரீர் மனக்கலக்கத்தை மாற்றித் தைரியங்கொண்டு துயரம் நீங்கியிருங்கள், காரியத்தைச் சாதிக்கவல்லவர்க்கும் கைநழுவின காரியம்

எத்தனமின்றி மீட்டும் கூடாது. ஐய, இவ்வுலகத்தில் உற்சாகமே வலிமைக்குக் காரணம். அதனின் மிக்க வலியுள்ள தொன்றுமில்லை. அதைப் பெற்றவனுக்கு இவ்வுலகத்தில் கிட்டாததொன்றுமில்லை. உற்சாகமுள்ள புருஷர்கள் தாங்கள் செய்யும் தொழிலில் ஒருபொழுதும் மனச் சோர்வடையமாட்டார்கள்."

இவ்வாறு லக்ஷ்மணரால் தேற்றப்பட்டு விசனத்தில் மூழ்கியிருந்த இராமர் தம்மைப்பற்றிய சோக மோகங்களை முற்றும் துறந்து தைரியங் கொண்டார். லக்ஷ்மணர் கூறிய மொழிகளை மனதில் சிந்தித்துக்கொண்டு இராமர் காறுறுகளும் குகைகளும் நிறைந்த அவ்வனத்தின் விநோதத்தைப் பார்த்து தமது மனவருத்தத்தை அடக்கிக் கொண்டு தம்பியுடன் வழிநடந்தார்.

இராம லக்ஷ்மணர்கள் பெரிய ஆயுதங்களை கையில் தாங்கி அங்கு வருவதைக் கண்ட வானரோத்தமனாகிய சுக்கிரீவன் பயமடைந்தவனாய், நாற்புறமும் சுற்றிப் பார்த்து, ஓரிடத்திலும் நிலைகொண்டு நிற்க இயலாது உள்ளம் தடுமாறினான். பிறகு வசனிப்பதில் சமர்த்தனை அனுமான் வாலியின் கெட்ட செய்கைகளை நினைந்து பயமடைந்த சுக்ரீவனை நோக்கி "நீவிர் அனைவரும் வாலியின் பயத்தை விட்டுவிடுங்கள். இந்தச் சிறந்த மலய பர்வதத்தில் வாலியினால் ஒன்றும் செய்ய முடியாது" என்றார்.

இந்தப் பொருள் பொதிந்த சொற்களை செவியுற்ற சுக்ரீவன் அனுமானை நோக்கி முன்னிலும் மேன்மையான வார்த்தைகளால் "நீண்ட கைகளையும் விசாலமான கண்களையும் உடையவராய் வில்லும் அம்பும் வாளும் தரித்துத் தேவகுமாரர்களைப் போல் விளங்கும் அவ்விரு வீரர்களையும் கண்டால் யார்தான் அச்சமடையார்? அனுமானே, நீர் வேற்றுருவங்கொண்டு சென்று, அவர்களை இன்னாரென்று தெரிந்து, அவர்களுடைய முகக்குறி, தோற்றம்,

பேச்சுக்களை நன்றாய்க் கவனித்து, அவர்களுடைய காரியம் யாதென்று அறிவீராக. அவர்கள் நம்மிடத்தில் நல்ல எண்ணம் உடையவர்கள் எனத் தெளிவீராகில் அவர்கள் முன் என்னைப் புகழ்ந்து பேசி அக்காலத்தில் அவர்களுடைய முகக்குறிகள் எவ்வாறிருக்கின்றன வென்றறிந்துக் கொள்ளும். அந்த வில் வீரர்கள் சுத்தாத்துமாக்களாக விருக்கும்பக்ஷத்தில் அவர்கள் இந்தக் காட்டிற்கு என்ன காரியமாக வந்தார்கள் என்று கேட்டறியும். அவர்களுடைய எண்ணம் நல்லதோ கெட்டதோவென்று தெரிந்து கொள்ளும்" என்றான்.

அனுமான் சுக்கிரீவனுடைய வசனங்களின் கருத்தை யறிந்து, ரிசியமூக பர்வதத்தினின்று புறப்பட்டு, சத்தியமும் பராக்கிரமமுமுடைய ரகுநந்தனர்களிருக்குமிடத்தை நாடிச் சென்று, தான் இன்னானென்று தெரியாதிருக்க வேண்டி தனது வானர உருவத்தை நீக்கி பிரமசாரி வேடங்கொண்டு அவர்களை அதிக வினயத்துடன் பணிந்து விதிப்படி பூசித்து, அவர்களைப் பார்த்து சொல்லலுற்றான்.—"ராஜரிஷிகளையும் தேவர்களையும் போலத் தேசசுள்ளவர்களாய்த் தோன்றும் நீவிர் அரியதவவிரதம் பூண்டவர்ளாய்க் காணப்படுகிறீர்கள். அங்ஙனமாகவும் இவ்வனத்திலுள்ள மான் கூட்டங்களையும் மற்றுமுள்ள விலங்குகளையும் வெருவச் செய்துகொண்டு நீங்களிங்கு வந்த காரணமென்ன? இராச்சியபாரத்தை வகிக்க யோக்கியர்களாயும் தேவதுல்லியர்களாயுமிருக்கும் நீவிர் இங்கு வரக் காரணம் யாது? ஒருவரை யொருவர் ஒத்துத்தோன்றும் தாமரைபோன்ற கண்களையுடைய மகாவீரர்களான உங்களைப் பார்க்குமிடத்து தேவலோகத்திலிருந்து வந்தவர்கள் போலத் தோன்றுகிறது. நீங்கள் இப்பூவுலகில் சுயேச்சையால் வந்துலாவுகின்ற சந்திர சூரியர்கள் போல் காணுகின்றீர்கள். மகா வல்லமைசாலியும் தருமாத்துமாவுமாய் விளங்குகின்ற சுக்ரீவன் என்னும் பெயருடைய

வானராதிபன் ஒருவன் தமையனால் துரத்தப்பட்டு, அதிக துக்கமுடையவனாய் இவ்வுலகத்தில் அலைந்து திரிகின்றான். நான் அந்த மகாத்துமாவினால் அனுப்பப்பட்டு இங்கு வந்தேன். என் பெயர் அனுமான். அந்த வானரோத்தமனாகிய சுக்ரீவன் உங்களுடைய நட்பை விரும்புகின்றான். நான் அவனுடைய மந்திரி; ஜாதியில் வானரன்; வாயுகுமாரன். நினைத்த உருவம் எடுக்க வல்லேனாதல்பற்றி பிரமசாரி வேடம் தரித்துச் சுக்கிரீவனுக்கு இதத்தைச் செய்யும்பொருட்டு ரிசியமூக பர்வதத்தை விட்டு இங்கு வந்தேன்" என்று சொல்லிவிட்டு மௌனமாயிருந்தனன்.

இந்த வார்த்தையைச் செவியுற்ற ஸ்ரீமானாகிய இராமர் சந்தோஷமடைந்து, பக்கத்திலிருக்கும் லக்ஷ்மணரை நோக்கி "தம்பி, இவர் வானரேந்திரனும் மகாத்துமாவுமான சுக்ரீவனுடைய மந்திரி. அந்தச் சுக்ரீவனுடைய நன்மையைக் கருதி எம்மிடத்து வந்தனர். சுக்ரீவனுடைய மந்திரியாகையால் நட்பை யுண்டாக்கவல்ல சொன்னயமுடைய மறுமொழி சொல்லு" என்று சொன்னார். அது கேட்டு லக்ஷ்மணர் அனுமானைப் பார்த்து "ஓ புலவ, மகாத்துமாவாகிய சுக்ரீவனுடைய குணங்களை நாங்கள் செவ்வனே தெரிந்துள்ளோம். அவ்வானரேந்திரனைப் போய்க் காண்போம். சுக்ரீவனுடைய உத்தரவையனுசரித்து நீர் சொல்லுமாறு செய்கின்றோம்" என்றார். பிறகு அனுமான் அதிக உவப்புற்று வாக்கில் வல்லவராகிய இராமரைப் பார்த்து "ஐய, யாது காரணத்தால் நீர் உம்முடைய தம்பியுடன் பயங்கரமானதும், நானாவிதமான மிருகங்கள் சஞ்சரிப்பதும், பிரவேசிக்க கூடாததும், பம்பைக் கரையிலுள்ள மரச்சூழல்களால் அலங்கிருதமானதுமான இவ்வனத்துக்கு வந்தீர்?" என்று வினவினான். அதைக் கேட்டவுடன் லக்ஷ்மணர் இராமருடைய கட்டளையால் அவரைப் பற்றி அனுமானுக்குச் சொல்லத் தொடங்கினர் :—"மகா காந்திமானும் தருமத்தில் அபி

மானமுள்ளவருமான தசரதர் என்று ஒரு சக்கரவர்த்தி யிருந்தார். இவர் அவருடைய மூத்தகுமாரனான இராமர்; உத்தம குணங்களுடையவர். இவர் நாட்டைத் துறந்து காட்டில் வசிக்க என்னுடன் இங்கு வந்திருக்கிறார்; இவருடைய பாரியையான சீதை இவரைத் தொடர்ந்து வந்தாள். நான் இவருக்கிளையவன்; எல்லாமறிந்தவரும் நன்றி மறவாதவருமான இந்த மகானுபாவனுடைய் குணாதிசயங்களால் கவரப்பட்டு இவருக்கு குற்றேவல் செய்வதே விரதமாகக் கொண்டுள்ளேன். என் பெயர் இலக்ஷ்மணன். சுகத்திலிருக்கத் தக்கவரும், சர்வபூதங்களுக்கும் நன்மையை நாடுபவருமான இம்மகானுபாவன் பாக்கியத்தை இழந்து வனத்தில் வசித்து வருகையில் அரக்கன் ஒருவன் உருமாறி வந்து இவருடைய மனைவியை அபகரித்துச் சென்றான். அவ்வாறு இவருடைய மனைவியை அபகரித்துச் சென்ற அரக்கன் இன்னான் என்பது தெரியாது. இதனால் நாங்கள் கலங்கும்பொழுது, திதியின்குமாரனாகிய தனு என்பவன் சாபத்தால் அரக்கனுருக்கொண்டிருந்தானைக் கண்டோம். அவன் எங்களைப் பார்த்து "சுக்ரீவன் என்று ஒரு வானரத் தலைவனிருக்கிறான். அவன் நுமது மனைவியைக் கவர்ந்து சென்றவனை கண்டறியத் தக்கவன் என்று சொல்லிவிட்டுத் தேஜோரூபந்தரித்து தேவருலகம் சென்றான். இப்பொழுது இராமரும் நானும் சுக்ரீவனைச் சரணடைந்தவர்களா யிருக்கிறோம். இவ்வுலகத்துக்கெல்லாம் வேந்தராயிருந்து அநேக தானங்கள் வழங்கி புகழ்பெற்றிருந்த இராமர் இப்பொழுது சுக்ரீவனை தனக்கு தலைவனாக்க விரும்புகின்றனர்."' இவ்வாறு லக்ஷ்மணர் கண்ணீர் பெருகச் சொல்லி நிற்க, பேசுதலில் வல்ல அனுமான் அவரைப் பார்த்து "இத்தகைய புத்தி விசேஷத்தைப் பெற்று கோபத்தை யடக்கி சாந்த சித்தர்களாய் ஐம்புலன்களை யவித்துள்ள மகா புருஷர்களை அவ்வானரேந்திரனே வந்து பார்க்கவேண்டும். அப்

படியிருக்க நீங்களே அவனைப் பார்க்கச் செல்லுவது அவனுடைய பாக்கியமன்றோ? அவனும் நாடிழந்து தமையனாகிய வாலியுடன் பகைகொண்டிருக்கிறான். அவனுடைய மனைவியை வாலி யபகரித்துக்கொண்டு அவனை அல்லல் செய்து வருவதால் அவன் பயந்து வனத்தில் வசிக்கிறான். சூரிய புத்திரனாகிய அந்தச் சுக்ரீவனும் எங்களுடன் சீதையைத் தேடுவதில் வேண்டிய சகாயம் செய்வான்" என்று இனிய வார்த்தை சொல்லி பிரமசாரி உருவத்தை நீக்கி வானர வடிவுகொண்டு, அவ்விரு வீரர்களையும் தன்னிரு தோள்கள் மேலுமேற்றிக்கொண்டு, வந்த காரியம் பலித்ததென்று உள்ளம் பூரித்து, வானரமன்னவனிருந்த மலையைச் சேர்ந்தான்.

அனுமான் ரிசியமூகபர்வதத்தை விட்டு மலயபர்வதத்துக்கு வந்து வீரர்களான இராமலக்ஷ்மணர்களுடைவரவை வானரத்தலைவனுக்கு அறிவித்து "பெருமானே, இதோ தம்பி லக்ஷ்மணருடன் வந்திருக்கிறாரே இவர் இராமர்; மகா புத்திமான்; உண்மையான பராக்கிரமமுடையவர்; இக்ஷ்வாகு குலத்தில் பிறந்தவர்; தசரத சக்கரவர்த்தியின் குமாரர். இவர் தந்தையின் கட்டளையைச் சிரமேற்கொண்டு வனவாசம் செய்யவந்தார். வந்த இடத்தில் இவரது மனைவியாரை இராவணன் அபகரித்துச் சென்றான். ஆதலின் இவர் உம்மை சரணமாக அடைந்திருக்கின்றனர். இவ்விரு சகோதரர்களும் உம்முடன் சிநேகம் செய்துகொள்ள விரும்புகின்றார்கள். பூசிக்கத்தக்கவர்களாகிய இவ்விருவரையும் நீர் தக்கபடி மரியாதை செய்து அழைத்துக் கொள்ளும்" என்றனன்.

அனுமானிவ்வாறு சொல்லக்கேட்டு வானராதிபனாகிய சுக்கிரீவன் மனத்திற் சந்தோஷங்கொண்டு, இராமரிடத்தில் தான் கொண்டிருந்த பயத்தைத் தவிர்த்து, மனோவியாகூலத்தைப் போக்கி, அழகிய

மானிட உருவம் தரித்து, வெகு பிரீதியுடன் இராகவரை நோக்கி "ஐய, நீர் தருமவழி நின்று எல்லாரிடத்திலும் அன்பு பாராட்டும் தன்மையர் என்று உம்முடைய குணங்களனைத்தையும் யதார்த்தமாக மாருதி சொல்லக் கேட்டேன். பிரபுவே, வானரனை என்னோடு நீர் நட்புக் கொள்ள விரும்புவது எனக்கு மிக்க மேன்மையும் பெரிய லாபமும் ஆகின்றது. என்னுடைய சினேகம் உமக்கு வேண்டுமாகில் இதோ யான் நீட்டிய கையை உம்முடைய கையால் பற்றி செய்யவேண்டிய உறுதியைச் செய்து கொள்ளும்" என்றான். இவ்வண்ணம் சுக்கிரீவன் சொன்ன இனிமையான வார்த்தையை இராமர் கேட்டு களிப்புற்று தமது கையால் வெகு சந்தோஷத்துடன் சுக்கிரீவன் கையைப் பற்றினார்; அவனை இறுகத் தழுவிக் கொண்டார். இருவரும் தீயை வலம்வந்து, சினேக வுறுதி செய்துகொண்டார்கள்.

பின்பு சுக்கிரீவன் சந்தோஷத்தால் தன்னிரு கண்களும் மலர்ந்து தோன்ற இராமரைப் பார்த்து மதுரமான வார்த்தைகளால் "ஓ ரகுநந்தன, நானிந்தக்காட்டில் என் தேசத்தையும் மனைவியையு மிழந்து, மிக்க பயமடைந்து, எனது சத்துருக்களுக்கு அணுகமுடியாத இம் மலையை யடைந்து பிழைத்திருக்கிறேன். என் தமையன் வாலியினால் பகைப்பட்டு அவனுடைய பயத்தால் மதி கலங்கி இங்கு வசித்துக்கொண்டிருக்கிறேன். இவ்வாறு வாலியை நினைந்து பயங்கொண்டு திரியும் என்னை நீர் அபயப்பிரதானம் செய்து காத்தருளவேண்டும் என்றனன். இராமர் சுக்கிரீவன் சொன்னதைக் கேட்டுப் புன்முறுவல்கொண்டு, அவனை நோக்கி "கபிசிரேஷ்டனே, நட்பினது பயன் உபகாரமியற்றுதல் என நான் அறிவேனாகையால் உம்முடைய மனைவியை யபகரித்த வாலியை வதைக்கிறேன்." என்று மறுமொழி பகர்ந்தனர்.

27. சுக்கிரீவன் இராமருக்குச் சீதையின் ஆபரணங்களை காண்பித்தல்.

மறுபடியும் சுக்கிரீவன் மிகவும் சந்தோஷமடைந்து இரகுகுலத்துக்கு ஆனந்தகரனாய் விளங்கும் இராமரை நோக்கி "இராமா, என் மந்திரிமாருக்குள் முதல்வனான அனுமான் என்ன காரணத்தால் நீங்கள் மனித சஞ்சார மற்ற இக்காட்டை யடைந்திருக்கிறீர்கள் என்பதைச் சொன்னான். துயரத்தை விட்டு விடும். உம்முடைய நாயகியை நான் கொண்டுவருகிறேன். முன் ஒரு நாள் அரக்கனொருவன் ஒரு பெண்பிள்ளையை தூக்கிக் கொண்டு போகக் கண்டேன். அவள் மைதிலியாகத்தானிருக்க வேண்டுமென்று இப்போது அனுமானிக்கின்றேன். அக் கொடிய அரக்கன் அவளைக் கொண்டுபோகையில் அவள் "இராமா லக்ஷ்மணா" என்று கதறிக்கொண்டு போயி னாள். அப்பொழுது அவள் இராவணனுடைய மடியின் மேல் பாம்புபோல் துடித்துக்கொண்டிருந்தாள். நான் எனது மந்திரிமார்கள் நால்வருடன் இம்மலையினுச்சியி லிருந்ததைப் பார்த்து, அவ்வம்மணி தனது மேலா டையையும் மங்களகரமான சில ஆபரணங்களையும் நாங் களிருந்த இடத்தை நோக்கி எறிந்தனள். அவைகளை நான் எடுத்துப் பத்திரமாய் வைத்திருக்கின்றேன். இதோ கொண்டு வருகிறேன். அவைகளைப் பார்வையிட்டு அவை கள் உம்முடைய மனைவியார் அணிந்திருந்தவைதானோ என்பதைத் தெரிந்துகொள்ளும்" என்றான்.

சுக்கிரீவன் வெகு அன்புடன் இவ்வண்ணம் சொல்ல இராமர் "நண்பனே, அவைகளைச் சீக்கிரமாய்க் கொண்டு வாரும்; ஏன் தாமதிக்கின்றீர்" என்றார். உடனே சுக்கிரீவன் விரைந்து ஒரு பெரிய குகைக்குள் நுழைந்து உத்தரீயத்தையும் அழகான அவ்வாபரணங்களையும் எடுத்துவந்து "இதோ பாரும்" என்று இராமருக்குக்

காண்பித்தான். அவ்வாடையையும் ஆபரணங்களையும் இராமர் கையால் எடுத்ததும் அவருடைய முகம் சந்திர பிம்பம் பனியால் மறைக்கப்பட்டதுபோல் கண்ணீரால் மூடப்பட்டது. அவர் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த லக்ஷ்மணரைப் பார்த்து வெகு பரிதாபமாய் புலம்பத் தலைப்பட்டு "லக்ஷ்மணா, அரக்கன் தன்னை அபகரித்துச் செல்லும்போது சீதை தன் சரீரத்திலிருந்து கழற்றி எறிந்த உத்தரீயத்தையும் ஆபரணங்களையும் பார்" என்று சொல்ல, லக்ஷ்மணர் அவரைப்பார்த்து "ஐயனே, நான் தினமும் அவருடைய பாதங்களை சேவித்தவனாகை யால் அவர் பாதங்களில் அணிந்திருந்த நூபுரங்களை யறிவேனேயன்றி அவர் கையிலும் காதிலும் அணிந்திருந்த கேயூரங்களையும் குண்டலங்களையும் அறியேன்" என்றார். பின்பு இராமர் சுக்கிரீவனை நோக்கி வெகு தீனமாய் "ஓ சுக்கிரீவ, அக்கொடிய அரக்கன் என்னுயிர்க்குயிரா யிருக்கும் என் பிராணநாயகியைக் கவர்ந்துபோகையில் நீர் அவனை எவ்விடத்தில் எவ்வண்ணமாய்க் கண்டீர்?" என்றார்.

இவ்வாறு விசனம் விஞ்சியவராய் இராமர் சுக்கிரீவனை நோக்கிச் சொல்ல அவன் தன்னிரு கைகளையும் கூப்பிக் கொண்டு கண்களில் நீர் ததும்ப நாத் தழு தழுத்து அவ ரைப் பார்த்து, "மகா பாபியான அந்த ராக்ஷசனுடைய இருப்பிடம், சாமர்த்தியம், பராக்கிரமம், குலம் முதலிய வற்றுள் ஒன்றையும் நான் அறியேன். ஆயினும் மைதி லியை நீங்கள் அடையும்படியான பிரயத்தினம் செய் கிறேன். இது சத்தியம். ஓ சத்துருசூதன, சோகத்தை விட்டுவிடுங்கள். நீங்கள் உங்களுடைய பெரிய பராக்கிர மத்தைக் காண்பித்து இராவணனை அவன் கூட்டத்தா ருடன் சங்கரித்து சந்தோஷிக்குமாறு நான் தாமதமின்றிச் செய்யக் காத்திருக்கின்றேன். துயருற்றாலும், பொருளை யிழந்தாலும், பயமடைந்தாலும், உயிர்க்கிறுதி நேரும்

காலம் வந்தாலும் தீரபுருஷர்கள் தங்களுடைய சுய புத்தியினுல் நன்ருய்ப் பரியாலோசனை செய்து தெளிவுறுவார்களேயன்றி தைரியத்தைக் கைவிடமாட்டார்கள். கோழை மனமுள்ள சிறியர்கள் சங்கடம் நேரிடுங்காலத்தில் மனவலி தளர்ந்து, பாரம் மிகுந்த ஓடம் கடலில் தத்தளிப்பது போல் விசனுக்கிராந்தர்களாய் வருந்துவார்கள். உங்களிடத்தில் எனக்குள்ள அன்பின் மிகுதியால் இரு கைகளையும் கூப்பி வேண்டுகின்றேன். துக்கத்துக்கு கொஞ்சமேனும் இடம்கொடாமல் ஆண்மைத்தனத்தை மேற்கொள்ளும். துக்கத்துக் கிடங்கொடுப்பவனுக்கு சுகம் என்பதேயிராது. அவன் எத்துணைப் பலவானுயினும் மெலிந்து வாடுவான். துக்கத்தில் முழுகியிருப்பவனுடைய பிராணனுக்கே அபாயம் வந்துவிடும்.''

இப்படி இனிதாய்ச் சுக்கிரீவனுல் தேற்றப்பட்ட இராமர் சுக்ரீவனை தழுவிக்கொண்டு ''சுக்கிரீவ, இவ்விதமான நண்பன் இத்துக்ககாலத்தில் கிடைப்பது மிகவும் அரிது. இனி நீர் மைதிலியைக் கண்டுபிடிக்கவும், துராத்துமாவாகிய அக்கொடிய இராவணனை வதைக்கவும் முயற்சி செய்யவேண்டும். அன்றியும் நான் உமக்காகச் செய்ய வேண்டிய காரியம் இன்னதெனத் தெளிவாகச் சொல்ல வேண்டும்'' என்ருர்.

சுக்கிரீவன் இராமருடைய வார்த்தைகளால் சந்தோஷ மடைந்து அவரைப்பார்த்து ''நான் தமையனுல் இடுக்கணெய்தி மனைவியையிழந்து வெகு துக்கமும் அச்சமுங்கொண்டு அதியுன்னதமான இந்த ரிஷியமூகபர்வதத்தில் வந்து வாசம் பண்ணுகிறேன். ஓ இராகவ, நான் வாலியால் நெருக்கப்பட்டு பெரும்பயங் கொண்டவனுய் இருக்கின்றேன். உலகம் யாவையும் காத்தருள்பவரே, இத்தகையேனுகிய என்னைக் காப்பது உமது கடன்'' என்ருன். இதைக்கேட்டு, தருமத்தையறிந்து அதன் வழி ஒழுகும் இராமர் சுக்கிரீவனை நோக்கி ''உபகாரமியற்று

தல் நட்புக்கு லக்ஷணம்; தீங்கிழைத்தல் பகைவர் செயல். ஆதலால் உமது மனைவியை அபகரித்தவனை இன்றே சங்கரித்து விடுகின்றேன்" என்று கூறினார்.

இந்த வார்த்தையைக் கேட்ட சுக்கிரீவன் மறுபடியும் பேசத்தொடங்கி "ஓ இராம, சத்துருசங்காரகனாகியவாலி என்பவன் என் தமையன். பூர்வத்தில் அவனிடத்தில் எங்கள் தந்தை மிகவும் அன்பு பாராட்டிவந்தார். நானும் அவனிடத்தில் அவ்வாறே அன்பு பாராட்டிவந்தேன். எங்களுடைய பிதா இறந்த பிறகு மந்திரிமாரனைவரும் "இவன் மூத்தவன்" என்று சொல்லி, எல்லாரும் சம்மதிக்க, வாலிக்கு முடிசூட்டி அவனை வானரர்களுக்கதிபதியாக்கினார்கள். தன்னுடைய முன்னோர்களிடமிருந்து தனக்குக் கிடைத்த இராச்சியத்தை வாலி பரிபாலனம் பண்ணிவரு நாளில் நான் அவனுக்கடங்கி அடிமைபோலிருந்தேன். அக்காலத்தில் மகா பராக்கிரமசாலியாகிய துந்துபியின் மூத்தகுமாரனான மாயாவி என்னுமோர் அசுரனிருந்தான். ஒரு பெண் விஷயமாய் அவனுக்கும் வாலிக்கும் பெரும் பகை உண்டாயிற்று. அவன் ஒருநாளிரவில் அனைவரும் அயர்ந்து நித்திரை செய்கையில் கிஷ்கிந்தைக்கு வந்து, கோட்டைவாயிலில் நின்று உரக்கக் கர்ச்சனைசெய்து, வாலியைச் சண்டைக் கழைத்தான். தூங்கிக்கொண்டிருந்த என் தமையன் பயங்கரமான அந்தக் கர்ச்சனையைக் கேட்டு கொஞ்சமும் சகியாமல் எழுந்து வெகு வேகமாய் அவனை எதிர்க்க ஓடினான். அந்தப்புரத்து மாதர் அனைவரும் நானும் அவனை போகவேண்டாமென்று தடுத்தோம். வாலி எங்களனைவரையும் உதறிவிட்டு வெளியே சென்றான். அவனிடத்தில் எனக்கிருந்த அன்பினால் நான் அவனைத் தொடர்ந்து சென்றேன். அவ்வசுரன் என் தமையனையும் என்னையும் தூரத்தில் கண்டவுடன் திகிலடைந்து ஓடத்தலைப்பட்டான். அங்ஙனம் பயந்து ஓடுபவனை நாங்கள் துரத்திச் செல்லும்பொழுது சந்திரன்

உதயமாகி வழி நன்ருகத் தெரிந்தது. அவன் ஓடிப் புற்களால் மூடப்பட்டு உட்புக வரிதாய் வெகு ஆழமாயும் பெரிதாயுமிருந்த ஒரு குகைக்குள் நுழைந்தான். நாங்கள் அக்குகையின் துவாரத்தில் சென்று நின்றேம். பகைவன் குகைக்குள் புகுந்ததைக் கண்ட வாலி, மிக்க கோபங்கொண்டு, மெய்பதற, என்னைப்பார்த்து 'சுக்ரீவா, நீ இவ்விடத்திற்றனே வெகு ஜாக்கிரதையாய் இத்துவாரத்தைக் காத்துக்கொண்டிரு. நான் உள்ளே புகுந்து சத்துருவைச் சங்கரிக்கின்றேன்' என்றான்.

புகுந்தபின் நான் அவ்விடத்திலே ஒரு வருஷகாலம் காத்திருந்தேன். வாலி திரும்பி வராமையால் நான் அவன் மரித்துவிட்டான் என்று பயந்து மிகவும் துயரமடைந்தேன். வெகுகாலத்தின் பின் அக்குகைக்குள்ளிருந்து இரத்தவெள்ளம் நுரைத்துக்கொண்டு மேலே கிளம்பிவந்தது. அதைக் கண்டதும் நான் அதிக துக்கமடைந்தேன். அசுரர்கள் கர்ச்சித்த சத்தம் என் காதில் விழுந்தது. சண்டைசெய்யச் சென்ற என் தமையனுடைய குரல் கேட்டிலது. இந்த அடையாளங்களால் நான் என் தமையன் மாண்டான் என்று எண்ணி மலைபோன்ற பெருங்கற்பாறை யொன்றினல் அக்குகையின் துவாரத்தை மூடிவிட்டு துக்காக்கிராந்தனய்க் கிஷ்கிந்தை சென்று சேர்ந்தேன். இந்தச் செய்தியை நான் ஒருவருக்கும் வெளியிடாது மறைத்து வைத்திருக்கவும் மந்திரிமார்கள் எல்லாவற்றையும் அறிந்து ஒருங்கு கூடி எனக்கு முடிசூட்டி வைத்தார்கள். நான் இராச்சியத்தை வகித்து நீதியாய் ஆண்டுவருகையில் வாலி அந்த அசுரனைக் கொன்றுவிட்டு கிஷ்கிந்தை வந்து சேர்ந்தான். நான் முடிசூட்டி அரசாண்டு வருவதைக் கண்டு என்னைப் பலவாறுக நிந்தித்தான். நான் அவனுக்குத் தக்க மரியாதைகள் செய்து அவனை அடிபணிந்து நின்றேனகவும் அவன் கோபத்தால் என்னை வாழ்த்தவுமில்லை, அருள் புரியவுமில்லை."

"அதன் பின்பு, நான் என் க்ஷேமத்தைக் கருதி, என் மேல் கோபங்கொண்டிருந்த என் சகோதரன் பிரீதியைச் சம்பாதிக்க வெகுவாய் முயன்றேன். 'ஐயா, நீர் உம்முடைய சத்துருவைக் கொன்று க்ஷேமமாய்த் திரும்பிவந்ததற்கு சந்தோஷ மடைந்தேன். அநாதரக்ஷகனா யிருக்கும் உம்மையன்றி எனக்கு வேறு நாதனில்லை. அநேக சலாகைகளையுடைய உதயசந்திரன்போன்ற இக்குடையை உமக்கு நானே பிடிக்கிறேன்; வெண்சாமரை யிரட்டுகிறேன். நான் செய்யும் பணிவிடைகளை நீர் ஏற்றுக்கொள்ளும். மஹாராஜ, நான் வெகு துக்கத்தோடு ஒரு வருஷகாலம் அக்குகையின் துவாரத்தில் காத்திருந்தேன். பின்பு அக்குகையிலிருந்து கிளம்பின உதிரப்பெருக்கைக் கண்டு நடுங்கி சோகத்தால் பரிதபித்து மனம் கலங்கி ஒரு மலையின் கொடுமுடியைப் பெயர்த்தெடுத்துக் குகையின் வாயை மூடிவிட்டு அங்கிருந்து புறப்பட்டுக் கிஷ்கிந்தை வந்து சேர்ந்தேன். நீர் இல்லாத காரணத்தால் நகரத்தார் என்னை அரசனாக்கினார்களேயன்றி மற்றில்லை. என்னிடத்தில் ஒப்புவிக்கப் பட்டிருந்த இந்த இராச்சியத்தை நான் இப்போது உம்மிடத்தில் ஒப்புவித்துவிட்டேன். என்மீது கோபம்கொள்ளவேண்டாம்" என்றிவ்வாறு நான் அன்புடன் சொல்லவும் வாலி என்னைக் கடிந்துபேசி 'ஓ! நீ கெட்டாய்!' என்று சொல்லி என்னை யோட்டி விட்டான். இராகவ, என்னை இவ்வாறு அவமானம் செய்து என் மனைவியையும் பிடித்துக்கொண்டான். அவனுக்குப் பயந்து சமுத்திரஞ் சூழ்ந்த காடடர்ந்த இப்பூமி முழுதும் நான் அலைந்து திரிந்து ஒருகாரணத்தால் வாலியால் அணுகொணாத இந்த ரிசியமூக பர்வதத்தில் துக்கத்துடன் பிரவேசித்தேன். வாலிக்கும் எனக்கும் பகை நேர்ந்த விதம் முற்றும் சொல்லிவிட்டேன். இராகவ, நிர்த்தோஷியாகிய எனக்கு இப்பெரிய விசனம் வந்திருக்கிறது"

இவ்வாறு சுக்கிரீவன் சொல்லத் தருமமறிந்த பெருவிறல் இராமர் புன்னகைகொண்டு சுக்கிரீவனைப் பார்த்து "இலக்குத் தவறுதனவும் நன்ருகத் தீட்டப்பட்டுச் சூரியனைப்போல் விளங்குவனவுமாகிய எனது பாணங்கள் உம்முடைய மனைவியை அபகரித்துக்கொண்ட அந்தக் கொடிய பாவி வாலியின்மேல் பாயப்போகின்றன. நாம் சீக்கிரம் கிஷ்கிந்தைக்குப் போவோம். நீ முன்பு போய் உன் கொடிய சகோதரனை சண்டைக்கழை" என்ருர்.

பின்பு எல்லாரும் கிஷ்கிந்தைக்கு வேகமாய்ச் சென்று அடர்ந்த காட்டின்கணுள்ள மரங்களில் மறைந்து நின்ருர்கள். அப்போது சுக்கிரீவன் தனது ஆடையை யிறுக்கிக் கட்டிக்கொண்டு வாலியைப் போரிற் கழைத்து பயங்கரமாகக் கூச்சலிட்டான். தன் சகோதரன் இட்ட கூச்சலை வாலிகேட்டு பெருங் கோபமடைந்து மேற்குத் திக்கிலிருந்து தோன்றும் சூரியனைப்போல் தன்னகரத்தைவிட்டு வெளியே வந்தான். உடனே ஆகாயத்திலே புதனும் அங்காரகனுஞ் சண்டையிடுவதுபோல வாலியும் சுக்கிரீவனும் இடியேறுபோலக் கைகளால் அறைந்து வச்சிராயுதம் போன்ற முட்டிகளால் ஒருவரை யொருவர் குத்தி வெகு பயங்கரமாகப் போர்புரிந்தார்கள். இராமர் வில்லை எடுத்துக்கொண்டு பார்க்க, அவர்கள் இருவரும் உருவத்தில் பேதமின்றி அசுவினி தேவர்களைப் போலக் காணப்பட்டனர். அதனுல் அவர் எவன் வாலி, ஏவன் சுக்ரீவன் என்று தெரிந்துக் கொள்ளாதவராய் தனது பாணத்தைப் பிரயோகியாது நின்ருர். அதற்கிடையில் சுக்கிரீவன் வாலிக்குத் தோற்று இராமரைக் காணுது ரிசியமூகபர்வதத்தை நோக்கி ஓடினுன்.

அப்போது இராமர் லக்ஷ்மணரோடும் அனுமானுேடும் சுக்கிரீவன் இருந்த காட்டிற்குச் சென்ருர். அவரைக் கண்டு சுக்கிரீவன் வெட்கமடைந்து பூமியைப் பார்த்துக்கொண்டு பரிதாபமாக "இராகவ,

வாலியைச் சண்டைக் கழை என்று என்னை ஏவி, உம்முடைய பராக்கிரமத்தையும் எனக்குக் காட்டி, என்னைச் சத்துருவினால் அடியுண்ணப்பண்ணி செய்யாத காரியம் செய்தீர்?" என்றான். இவ்வாறு சுக்கிரீவன் சொன்னதை இராமர் கேட்டு மறுமொழிகூறலுற்றார் :-"ஐய சுக்கிரீவ, யாது காரணத்தால் நான் பாணம் தொடுக்கவில்லை யென்பதைக் கேளும். ஆபரணுதிகளாலும் உருவத்தாலும் நடையுடைகளாலும் நீங்களிருவரும் ஒருவரையொருவர் ஒத்திருக்கின்றீர்கள். குரலாலும், தோற்றத்தாலும் பராக்கிரமத்தாலும் உங்களுக்குள் ஒரு பேதமும் நான் காணவில்லை. வானரோத்தம, உங்களுடைய உருவத்தின் ஒற்றுமையினுல் மயங்கி என்னுடைய பாணத்தை யான் விடவில்லை. ஆகையால், நீர் போய் மறுபடியும் யுத்தஞ் செய்யும். பயப்படவேண்டாம். போர் புரியும்போது உம்மை நானறிந்துகொள்ளும்படி நீர் உம்முடைய உடலில் ஓரடையாளம் தரித்துக்கொள்ளும்." என்றார். உடனே லக்ஷ்மணர் நாகபுஷ்பக்கொடியைப் பிடுங்கி மகாத்துமாவாகிய சுக்கிரீவனுடைய கழுத்தில் போட, கொடியை அணிந்த சுக்கிரீவன் பௌர்ணிமையில் நடு ராத்திரியில் நக்ஷத்திரங்கள் சூழ்ந்து விளங்கும் சந்திரன் போலவும் சந்தியாகாலத்தில் கொக்குக்கள் சூழ்ந்து விளங்கும் மேகம்போலவும் பிரகாசித்தான். பின்பு அவன் மனந்தேறி முகமலர்ச்சியடைந்து இராமருடன் கிஷ்கிந்தைக்குப் போயினன்.

28. வாலிவதை

அவர்களனைவரும் வேகமாய் கிஷ்கிந்தையையடைந்து ஓர் அடர்ந்த காட்டில் மரங்களின் பின் மறைந்து நின்றார்கள். அப்போது சுக்கிரீவன் தன் பரிவாரங்கள் சூழ்ந்து நிற்க, நாற்புறமும் சுற்றிப் பார்த்து வெகு கோபங்கொண்டு அண்டமுகடு கிழியும்படி ஆர்த்து,

வாலியைச் சண்டைக் கழைத்தான். சுக்கிரீவன் இட்ட பேரிரைச்சலை அந்தப்புரத்திருந்த வாலி கேட்டு பெருங் கோபங்கொண்டு பூமி பிளந்து போமாறு காலெடுத்து வைத்து விரைந்து புறப்பட்டான். அப்போது தாரை மிகவும் பயந்து வாட்டமுற்று வாலியினிடத்தில் அதிக அன்புகாட்டி அவனைக்கட்டித் தழுவிக்கொண்டு அவனைத் தடுப்பாளாயினுள்.

"வீர, ஆற்றுப் பெருக்கைப்போலப் பொங்கியெழு கின்ற உம்முடைய கோபத்தை விட்டுவிடும். நீர் அதனை இரவிற் புனைந்திருந்த பூமாலையைக் காலையிற்றுயிலெழும் போது களைந்து விடுவதுபோல் நீக்கிவிடும். சுக்கிரீவனு டன் நீர் நாளைக்குப் போர் செய்யலாம். நான் ஏன் உம் மைத் தடுக்கின்றேனென்பதைக் கேளும். முன் உம்மால் அடிபட்டுத் தோற்றோடின சுக்கிரீவன் மீளவும் உம்மை போருக்கழைப்பதைப் பார்த்தால் எனக்குச் சந்தேகமுண் டாகின்றது. அவன் துணை யாருமின்றி வந்திருப்பதாக நான் எண்ணவில்லை. தலைவ, நமது குமாரன் அங்கதன் சொல்ல நான் முன் கேள்விப்பட்டதை இன்று கேளும். அவன் காட்டில் திரிந்தபோது தன்னுடைய சாரர்களால் சுக்கிரீவனைப்பற்றி அறிந்த சமாசாரத்தை என்னிடம் சொல்லினன். அதாவது: அயோத்திமா நகரத்து மன் னன் புதல்வரிருவர், இரமரர் லக்ஷ்மணர் என்னும் பெய ருடையவர்கள், மகாசூரர்கள், போரில் வெல்லற் கரியர் கள், காட்டில் வந்திருக்கிறார்கள். அவர்கள் சுக்கிரீவ னுக்கு நன்மை செய்யவேண்டி இவ்விடம் வந்திருக்கிறார் கள். உம்முடைய சகோதரன் சுக்கிரீவனுக்கு யுத்தத்தில் துணை இராமர். அவர் ஊழித்தீயை ஒத்தவர்; பகைவரை அழிப்பவர்; சாதுக்களுக்குச் சரணமாயுள்ளவர்; புன் கணுற்றோர்க்குப் புகலிடமானவர். இத்துணைப் பெரிய ஆற்றலுடைய இராமரோடு நீர் முரணுவது யுக்த மன்று. யான் சொல்வதைக் கேளும். இராமரோடு

சிநேகம் செய்து சுக்கிரீவனிடத்துள்ள பகையை ஒழித்து அவனுடைய அன்பை மீட்டும் பெறுவது உமக்கு நன்மையென் றெண்ணுகின்றேன். இக்கணமே சுக்கிரீவனை யழைத்து இளவரசாக்கும். உம்முடைய தம்பியை நீரன்றோ லாலனைசெய்யவேண்டும்? உம்முடைய நன்மையை நான் விரும்பினவள் என்று என்னுடைய எண்ணத்தின்படி உமக்கு நடக்க இஷ்டமானால் நான் வேண்டிக் கொள்வதை நீர் செய்யும்; நான் கூறும் நற்புத்திகளைக் கேளும்." என்றாள்.

தாரை இவ்வாறு சொல்ல, வாலி அவளைக் கடிந்து "மாதே, என் தம்பியும் சத்துருவுமான சுக்கிரீவ னிவ்வாறு உறுமிக் கர்ச்சிக்க நான் அதைக்கேட்டு எப்படி பொறுத்திருப்பேன்? இராமரால் எனக்குக் கெடுதி நேருமென்று நீ பயப்படவேண்டாம். தரும முணர்ந்தவருமான நன்றி யறிந்தவருமான இராமர் எங்ஙனம் தீமை செய்வார்? நீ ஏன் என்னைத் தொடர்ந்துவருகின்றனை? மற்றைப் பெண்களோடு திரும்பிச்செல். என்னிடத்தில் நீ அன்பும் ஆசையுமுடையவள் என்பதை முன்னரே காட்டிவிட்டாய். நான் அங்கே சென்று சுக்கிரீவனோடு போர் செய்து அவனுடைய செருக்கை அடக்கி விடுகிறேன்." என்று சொன்னான். பொன்னிறமுடைய சுக்கிரீவன் ஆடையை நன்றாக இறுக்கிக் கட்டிக்கொண்டு பற்றியெரியும் அக்கினிபோல விளங்கிக் கொண்டிருக்கக் கண்டு, வாலி பெருங் கோபங்கொண்டு, மடியைத் தற்றுக் கொண்டு சுக்கிரீவனுக்கு முந்துற்று கையோக்கி நின்றான். அவர்களிருவரும் விருத்திராசுரனையும் இந்திரனையும் போல ஒருவரையொருவர் முட்டிகளாலும், முழங்கால்களாலும், கால்களாலும், தோள்களாலும் தாக்கி, போர் புரிந்தார்கள். அப்போது சுக்கிரீவன் வரவர இளைத்து அடிக்கடி இராமரிருக்கு மிடத்தைப் பார்த்தான். இவ்வண்ணம் சுக்கிரீவன் சங்கடப்படுவதை மகா பராக்கிரம

சாலியான இராமர் பார்த்து வாலியை வதைப்பதற்காக யமனுடைய காலசக்கரத்தைப்போல தன் வில்லை வளைத்தார். அவர் செய்த நாணோசையைக் கேட்டு பறவைகளும் விலங்குகளும் யுகாந்த காலத்திற்போல நடுங்கி நாற்றிசைகளிலும் ஓடின. இராமரது வில்லிலிருந்து விடப்பட்ட, அக்கினி போன்றதும், காலனை நிகர்த்ததும், வச்சிராயுதத்தை ஒத்ததுமாகிய அந்தப் பெரும்பாணம் தனது மார்பிற் பாய, வாலி சாய்ந்து பூமியில் விழுந்தான்.

கீழே வீழ்ந்தும், இந்திரன் கொடுத்த காஞ்சன மாலையை அணிந்திருந்ததினால் அவனுடைய பிராணன் போகவுமில்லை, தேககாந்தி குறையவுமில்லை, பராக்கிரமம் நீங்கவுமில்லை. அம்மாலையால் அவன் அந்தியில் தோன்றும் செவ்வானம்போலப் பிரகாசித்தான். வாலி அவ்வாறு போர்க்களத்தில் அணைந்த அக்கினிபோல விழுந்திருப்பதைக் கண்டு இராமர் லக்ஷ்மணருடன் சென்று அவனைப் பார்த்தார். இராமரையும் மகாபலம் பொருந்திய லக்ஷ்மணரையும் கண்டமாத்திரத்தில் வாலி வணக்கமாயும் தைரியமாயும் அறந்தழுவிய சில வார்த்தைகளைப் பேசுவானாயினான்:—

"நீவிர் இராஜகுமாரர்; பிரதாபமுடையவர்; கண்ணுக்கினியர்; நல்ல குலத்திலுதித்தவர்; பலாட்டியர்; காந்தியுடையவர்; விரதம்பூண்டுள்ளவர்; அப்படியிருந்தும் பராமுகனாயிருந்த என்னை எய்து நீர் யாது பயனடைந்தீர்? இவ்வுலகிலனைவரும் உம்மைக் கருணைக்கடலென்றும் குடிகளுடைய நன்மையில் நாட்டமுள்ளவரென்றும் ஐம்புலன்களையு மவித்தவரென்றும் புகழ்ந்து கொண்டாடுகிறார்கள். உம்மைப்பார்த்தால் இராஜகுமாரராகவும் கண்டோரால் விரும்பப்படும் தன்மை நோக்கமுடையராகவும் விரதம் பூண்டவராகவும் காணப்படுகின்றீர். காகுத்த, யாதொரு குற்றமும் செய்யாத என்னை அம்பெய்து கொன்றீர்; இத்தகாத காரியத்தை

ஏன் செய்திரென்று சாதுக்கள் கேட்டால் நீர் யாது சொல்வீர்? என்முன் நின்று போர் செய்திருப்பீராகில் நீர் இந்நேரம் என்னால் கொல்லப்பட்டு யமலோகம் போயிருப்பீர். நீர் முன்னரே என்னிடம் சொல்லியிருந்திரால் ஒரே பகலில் மைதிலியை உம்மிடம் கொண்டு வந்து விட்டிருப்பேன். இராவணனை உயிருடனே கழுத்தைப் பிடித்துத்தள்ளி கொணர்ந்திருப்பேனே. நான் சுவர்க்கம் புகுந்ததற்பின் சுக்கிரீவன் அரசாளவேண்டியது நியாயமாயினும், போரில் இவ்வண்ணம் நீர் என்னை வஞ்சகமாக கொன்றது நியாயமன்று.''

வாலி இவ்வாறு கொஞ்சம் கடிந்து தருமத்தோடொத்த சொற்களைக் கூற, இராமர் அவனை நோக்கி 'தருமம், அர்த்தம், காமம், லௌகிகம் இவைகளை யறியாமல் சிறு பிள்ளைபோல நீர் ஏன் என்னைக் குற்றங் கூறுகின்றீர்? மலைகளும் காடுகளும் செறிந்த இப்பூமிமுழுவதும் இக்ஷ்வாகு வமிசத்தவரைச் சேர்ந்தது. இதிலுள்ள மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் மானுடர்களுக்கும் தண்டனை புரிதற்கும் அனுக்கிரகம் செய்வதற்கும் உரியார் அவர்களே. இப்போது உண்மையைக் கடைப்பிடித்து நேர்மையுடனொழுகும் தருமாத்துமாவும், தருமார்த்த காமங்களை யறிந்தவருமாகிய பரதர் இவ்விராச்சியத்தைப் பரிபாலித்து, நிக்கிரகானுக்கிரகம் செய்துவருகின்றனர். பரதருடைய கட்டளையைச் சிரமேற்கொண்டு நாங்கள் அறநெறி தப்பி நடப்பவர்களை விதிப்படி சிக்ஷித்துவருகின்றோம். நீர் தருமத்தைக் கெடுத்து காமத்தின் வசப்பட்டு அநியாயம் செய்து அரசர்க்குரிய நீதிமார்க்கத்தினின்றும் தவறி யிருக்கின்றீர். அறநெறியிற் செல்லும் தந்தை, தமையன், குரு ஆகிய இம்மூவரும் பிதாக்களாகப் பாவிக்கப்படுவர்; தம்பி, தனயன், சீடன் ஆகிய இம்மூவரும் தருமம் வழுவாது நிற்பாராயின் புத்திரராகப் பாவிக்கற்பாலர். இவற்றிற்கெல்லாம் தருமமே காரணம். நான்

உம்மைக் கொன்றதன் காரணம் புராதனமாயுள்ள தருமத்தை விட்டுவிட்டு நீர் உம்முடைய தம்பியின் மனைவியை கவர்ந்துகொண்டீர் என்பதே. லக்ஷ்மணனைப்போல சுக்கிரீவர் எனக்கு நண்பராயினர். நான் அவருக்கு அவரது மனைவியையும் நாட்டையும் மீட்டுக்கொடுப்பதாக வானரர்கள் முன் வாக்களித்தேன். நான் செய்த பிரதிக்ஞையை நிறைவேற்றாது வாளாவிருப்பேனோ? தருமசாஸ்திரத்தை யனுசரித்தே இவ்விதமான பெரிய காரணங்களால் நான் உம்மைத் தண்டித்தேன். நீர் இதை அறிந்து கொள்ளும். மற்றுமோர் காரணமு முண்டு. அதையும் சொல்லுகிறேன் கேளும். அதைக் கேட்டபின் என்மீது கொள்ளும் கோபத்தை ஒழித்துவிடும். மாமிசத்தை அபேட்சிக்கும் மனிதர்கள் அநேக மிருகங்களை வலைகளாலும், கயிறுகளாலும், பலவிதமான கண்ணிகளாலும், எதிர்ப்பட்டும் மறைந்து நின்றும் பிடிக்கிறார்கள். நீர் தருமம் இன்னதென்றுணராது, கோபத்தால், முன்னோர்களுடைய தருமத்தை அனுசரிக்கும் என்னைத் தூஷிக்கிறீர்" என்று சொன்னார்.

இவ்வாறு இராமர் சொல்லக்கேட்ட வாலி தன்னைப் பலவாறாக நிந்தித்து தன்னிருகைகளையும் கூப்பிக்கொண்டு இராமரை நோக்கி "புருஷோத்தம, நீர் சகல தருமங்களையுமறிந்தவர்; எப்பொழுதும் குடிகளுடைய நன்மையை நாடுபவர்; இது செய்யத் தகுந்தது, இது செய்யத்தகாதது என்பதை தெளிவாயுணர்ந்தவர். நான் இப்போது என்னைப் பற்றியும், என் மனைவி தாரையைப்பற்றியும் மற்றுமுள்ள பந்துக்களைப்பற்றியும் விசனப்படவில்லை; பொன்னாலாய அங்கதங்களையணிந்த நற்குணங்களையுடைய எனது புத்திரன் அங்கதனைக் குறித்தே விசனப்படுகிறேன். அவன் தாரையினிடத்து எனக்குப் பிறந்த ஒரே குமாரன்; யாதுமறியாப் பாலகன்; ஆயினும் மகாபலவான். அவனை நீர் காப்பாற்றவேண்டும். சுக்கிரீவனைப் போலவே அங்கத

னையும் பாதுகாக்கவேண்டும். அவர்களைக் கண்டிப்பதும், காப்பாற்றுவதும், காரியா காரியங்களறிந்து நடக்கச் செய்வதும் உம்முடைய பொறுப்பு. அரச, நீர் பரதலக்ஷ்மணர்களிடத்தில், அன்பு பாராட்டுவதுபோலவே சுக்கிரீவனிடத்திலும் அங்கதனிடத்திலும் அன்பு பாராட்டவேண்டும். குற்றமற்ற தாரையை சுக்கிரீவன் என் குற்றத்திற்காக அவமதிக்காதபடி நீர் செய்யவேண்டும்'' என்று சொல்லி நிறுத்தினான். அப்போது இராமர் நல்லறிவு பெற்ற வாலியைச் சாதுக்களால் அங்கீகரிக்கப்படும் தரும தத்வமொட்டின நன்மொழிகளால் சாந்தப்படுத்தினார்.

வாலி இராமர் சொன்ன சொற்களைக் கேட்டுப் பேசாதிருந்தான். அவனுடைய மனைவி தாரை இராமர் எய்த பாணத்தால் வாலி மாண்டான் என்று கேள்விப்பட்டு, மெய் நடுங்கி தன் குமாரனுடன் தானிருந்த குகையை விட்டு வெளிப்பட்டாள். சோகத்தால் மெலிந்து புலம்பி, தனது தலையிலும் மார்பிலும் கைகளாலறைந்துகொண்டு வாலி விழுந்து கிடக்குமிடத்திற்குச் சென்றாள். இராமர் தமது சிறந்த வில்லை ஊன்றிக்கொண்டு நிற்பதையும் அவரைச் சார்ந்து லக்ஷ்மணரும் சுக்கிரீவனும் நிற்பதையும் தாரை கண்டாள். அவர்களை அவள் கடந்துச் சென்று, தனது நாயகனருகில் போய் அவன் மடிந்து கிடப்பதைக் கண்டு, மெய்பதறி, மூர்ச்சையடைந்து பூமியில் விழுந்தாள். தூங்கி விழித்தவள்போல அவள் மறுபடி எழுந்து, காலபாசத்தால் கட்டுண்டிருக்கும் கணவனைப்பார்த்து "ஆரியபுத்திர!'' என்று கூவி அழுதாள்.

அப்போது விண்ணிலிருந்து விழுந்த விண்மீன்போலத் தரையில் கிடந்த தாரையை வானரத் தலைவனாகிய அனுமான் கண்டு அவளைத் தேற்றுவானாயினான் :—

"உயிர்கள் எல்லாம் அறிந்தும் அறியாதும் செய்த நல்வினை தீவினைகளினால் சுக துக்கங்களை அடைகின்றன. நீவிர் உம்மைக் குறித்து துக்கப்படவேண்டியவராயிருந்து

கொண்டு மற்றொருவர் பொருட்டுத் துக்கப்படுவானேன்? நீவிரே ஏழையாயிருந்துகொண்டு மற்றோரேழையின் பொருட்டு பரிதாபப்படுவது யாதுகாரணம் பற்றி? நீரிற் குமிழிபோல நிலையற்ற இந்தயாக்கை, காரணமாக யார் பொருட்டு யார் துக்கப்பட வேண்டியவர்களா யிருக்கிறார்கள்? இனி உயிரோடுள்ள உமது குமாரன் அங்கதனைப் பாதுகாத்து மற்று மும்மால் செய்யவேண்டியவைகளைச் செய்தல் உமக்குத் தக்கது. நல்லாய், இங்குள்ள வானர சிரேஷ்டர்களும், இந்த அங்கத குமாரனும், இந்த வானர ராச்சியமும் எல்லாம் இனி உம்முடைமையன்றோ? ஆதலால் இனி சோகத்தையும் தாபத்தையும் விட்டு விடும். உம்முடைய சொல்லின்படி அங்கதன் அரசாளட்டும். அந்திய கருமங்கள் செய்யவேண்டிய காலமிதுவே. அவைகள் செய்தாயினபின் அங்கதனுக்கு முடிசூட்டும். பின்பு உமது புத்திரனைச் சிம்மாசனத்தில் வீற்றிருக்கக் காண உமக்குத் துக்கம் ஆறிவிடும்.''

இந்த வார்த்தைகளை தாரைகேட்டு அருகில் நின்ற அனுமானைப் பார்த்து "அங்கதன்போன்ற நூறு குமாரர்களை உடையவளாயிருத்தலினும் இங்கு மாண்டுகிடக்கும் வீரனாகிய என் நாயகனோடு உயிர்துறப்பதே எனக்கு மேலான காரியம். என் நாயகனுக்குச் செய்யவேண்டிய பிரேத கர்மங்களைச் செய்விப்பதற்காவது, அங்கதனுக்கு முடிசூட்டுவதற்காவது யான் உரியளல்லேன். அந்தக் கடமைகளெல்லாம் அங்கதனுக்குச் சிற்றப்பனான சுக்கிரீவனைச் சேர்ந்தவை. ஐய அனும, நான் இந்த இராச்சியத்தை அங்கதனுக்குக் கொடுக்கவேண்டுமென்று நீர் எண்ணுவதை விட்டுவிடும். இந்தக் காரியத்தில் பிள்ளைக்குப் பந்துவாயுள்ளவன் தந்தையே அன்றித் தாயல்லள்.'' என்று கூறினாள்.

மரணதசையை யடைந்த வாலி மூர்ச்சை தெளிந்து, கண் விழித்து மெதுவாக மூச்சுவிட்டு சுக்கிரீவனைக் கண்ணுற்று அன்போடு கூறுவானாயினான்:—

"சுக்கிரீவ, நான் உனக்குச் செய்த குற்றங்களை நீ மனத்திற்கொள்ளற்க. அவற்றை யான் அறியாமையாலும் வினைவலியாலும் செய்தேனென்று கொள். ஒரே காலத்தில் நாங்களிருவரும் தமையன் தம்பியாய்க் கூடியிருந்து இந்த ராச்சியத்தை அனுபவித்தற்கு எங்களுக்கு விதியில்லை என்று எண்ணுகிறேன். அன்றேல் இப்படிச் சம்பவிக்கவேண்டிய காரணமென்ன? என்னை யமபுரஞ் சென்றவனுகப் பாவித்து நீ இன்றைக்கே இந்த ராச்சியத்தை வகித்துக்கொள். அரச, இந்தத் தசையில் நான் சொல்லுவனவற்றை, அவை செய்தற்கரியனவா யிருப்பினும், நீ செய்யவேண்டும். தரையில் விழுந்து கண்ணீர் விட்டழுகின்ற அங்கதனைப் பார். அவன் குழந்தை; கஷ்டமறியாதவன்; இதுவரையும் செல்வத்தில் வளர்ந்தவன்; இனிமேலும் இன்பத்தை அனுபவிக்கவேண்டியவன். என் உயிரினு மினிய என் குழந்தையாகிய இவனை, யானிறந்ததன் பின், நீ அவன் குறைகளை முடித்து, உன் வயிற்றிற் பிறந்த குழந்தைபோலப் பாவி. இவ்விளைஞன் ஊக்கமும் வலியுமுடையன்; வீரத்தில் உன்னை யொத்தவன்; அரக்கர்களுடைய போரில் உனக்கு முன்னின்று பேராண்மை செய்யத்தக்கவன். இராமருடைய வேலைகளை நீ சிறிதும் பின்னில்லாது செய்யவேண்டும். பின்னிற்பையாயின் உனக்கு பாபம் உண்டாம்; அவர் கோபங்கொண்டு உன்னைத் தண்டிக்கவுங் கூடும். சுக்கிரீவ, என் கழுத்திலுள்ள இந்தத் திவ்விய பொன்மாலையை எடுத்து நீ அணிந்துக்கொள்; இதிலுள்ள லக்ஷ்மி யானிறந்தாற் போய்விடுவள்."

சகோதர வாஞ்சையால் வாலி இவ்வாறு கூற, சுக்கிரீவன் சினந்தணிந்து மகிழ்ச்சிகுன்றி, இராகு கௌவப்பட்ட சந்திரன்போல் ஒளியிழந்து, அவன் சொன்ன சொற்களை அங்கீகரித்து, அவன் கொடுத்த காஞ்சனமாலையைப் பெற்றுக்கொண்டான். வாலி, பொன்மாலையைக்

கொடுத்துவிட்டு, உயிர்விட ஆயத்தமாகி, தன் முன்னே நிற்கும் தனது பிள்ளையாகிய அங்கதனைப்பார்த்து "மகனே, இனி நீ சுக்கிரீவன் சொற்படிநின்று, காலமு மிடமுமறிந்து, சுகமடைதல் காரணமாக உனக்கு நேருந் துக்கங்களைப் பொறுத்து நடந்துக்கொள். என்னிடத்தில் வளர்ந்ததுபோல நீ இன்னும் இருப்பையாகில், சுக்கிரீவன் உன்னை மதிக்கமாட்டான். நீ ஒருபோதும் சுக்கிரீவனுடைய பகைவர்களோடு சேராதே. அவனுடைய நல்வாழ் விலே எப்போதுங் கருத்துடையவனாய், அவனுக்கடங்கி நடந்துகொள். நீ யாருடனாவது அதிக நண்பு பாராட்டவும் வேண்டாம், நண்பு பாராட்டாது நடக்கவும் வேண்டாம்; இவை யிரண்டும் மிக்க தீமை பயக்கும்; ஆதலால் நடுத்தரமாக நடந்துகொள்" என்று சொல்லி, அம்பு தைத்த வருத்தம் மேலிட்டமையால் கண்களைப்புரட்டி வாயைத்திறந்து உயிரை விட்டான்.

அதன்பின் இராமர் துக்கமடைந்த லக்ஷ்மணரோடு, சுக்கிரீவனுக்கும் தாரைக்கும் அங்கதனுக்கும் தேற்றறிவு கூறுவாராயினர்:—

"அழுவதும் துக்கப்படுவதும் இறந்துபோன வாலிக்கு நன்மை பயப்பனவாகா. ஆதலால் இனி அவனுக்குச் செய்யவேண்டிய அந்திய கர்மங்களைச் செய்வது தக்கது. உலக வழக்கத்தோடொட்டி நீங்கள் மிகவும் கண்ணீர் பெருக்கி அழுதுவிட்டீர்கள். இனிச் செய்யக்கடவ கிர்த்தியங்களைச் செய்யாது பாணிப்பு தக்கதன்று. உலகத்தில் காலமே முதற்காரணம்; காலமே கர்ம சாதனம்; காலமே எல்லாவுயிர்களின் தொழிலுக்குங் காரணம்." இவ்வாறு இராமர் கூறி லக்ஷ்மணரைப் பார்த்து "விரைவில் வாலியினுடைய பிரேதகாரியங்களைச் செய்வி" என்று சொன்னார்.

அதன்பின் சுக்கிரீவன் வாலியின் அந்தியகர்மங்களைச் செய்வதற்குக் கட்டளை யிடுவானாய் "வானரர்கள் விலை

யுயர்ந்த மணிகளை இறைத்துக்கொண்டு முன்னே போகட்டும்; அதன்பின் பிரேதயானம் செல்லட்டும்'' என்றான்.

அதைக்கேட்டு வானரத் தலைவர்களும் மற்றவானரர்களும் அரசனையிழந்த துக்கத்தால் அங்கதனைக்கட்டி அழுதுகொண்டு சென்றார்கள். நாயகனையிழந்த தாரை முதலிய வானரப் பெண்கள் "வீர, வீர'' என்று சொல்லிப் பரிதபித்தார்கள். பின்பு அங்கதன் சிதைக்கு நெருப்பு வைத்து அதனைச் சுற்றிவந்து நீர்க்கடன் செய்வதற்காக ஒரு நதியின் புண்ணிய தீர்த்தக்கரையில் போய்ச் சேர்ந்தான். அங்கே சுக்கிரீவனும் தாரையும் மற்றை வானரர்களும் அங்கதனை முன்னிட்டுக்கொண்டு தர்ப்பணஞ் செய்தார்கள். பெருவிறலினையுடைய இராமர் சுக்கிரீவன் போல் தாமும் துக்கமடைந்து வாலிக்குச் செய்யவேண்டிய நீர்க்கடன் முதலியவற்றைச் செய்வித்தார்.

29. சுக்கிரீவன் பட்டாபிஷேகம்

அப்போது துக்கமுற்று ஈரவாடையோடிருந்த சுக்கிரீவனை வானரர்களும் மகாமாத்திரர்களும் வந்து சூழ்ந்தார்கள், அவர்கள் எல்லாரும் சோர்வில்லாத இராமரை அடைந்து கைகுவித்துக்கொண்டு பிரமதேவன் முன்நிற்கும் முனிவர்களைப்போல நின்றார்கள். அப்போது அனுமான் கை குவித்துக்கொண்டு இராமரை நோக்கி "ஐய, சுக்கிரீவன் உம்முடைய உதவியினால் பெறுதற்கரிய இந்தப் பெரிய வானர ராச்சியத்தைப் பெற்றுக்கொண்டான். இனி உம்முடைய ஆஞ்ஞையின்படி அவன் இந்த நகரத்துட் புகுந்து அரசாட்சி செய்யவேண்டும். முறைப்படி அபிஷேகம் செய்யப்பெற்று அவன் உம்மை மணிகளும் மாலைகளும் கந்தங்களும் ஒஷதிகளும் கொண்டு பூசை செய்யவேண்டும். ஆதலால் நீர் இந்த அழகிய மலைநகருக்குச் சென்று சுக்கிரீவனுக்கு பட்டாபிஷேகம்செய்து வானரர்களை மகிழ்வித்தருளும்'' என்று கேட்டான். அதற்குத்

தரமாக இராமர் அநுமானை நோக்கி "அநுமானே, என் தந்தையாரின் கட்டளைப் பிரகாரம் நான் இந்தப் பதினான்கு வருஷங்கள் கழியுமளவும் ஒரு நகரத்திற்குள்ளாவது நாட்டிற்குள்ளாவது புகமாட்டேன். நீங்கள் எல்லாரும் சுக்கிரீவனை நகரத்துக் கழைத்துக்கொண்டுபோய் விரைவில் அபிஷேகம் பண்ணிவையுங்கள்" என்றார். பின்பு அவர் சுக்கிரீவனை நோக்கி "நீர் உலக வழக்கத்தை அறிந்தவர். இந்த வீரமுடைய அங்கதனை இளவரசனாக்கி வையும். இது மழைக்காலமான நான்குமாதங்களுள் முதலாகிய ஆவணி மாதம். இப்போது சீதையைத் தேடுவதற்கு யாதொன்றுஞ் செய்துகொள்ள முடியாது. ஆதலால் நீர் உமது நகருக்குப்போம். நான் லக்ஷ்மணனோடு இந்த மலையில் இருக்கிறேன். கார்த்திகை மாதம் பிறந்தவுடன் இராவணனை கொல்வதற்கு நீர் முயற்சி செய்ய வேண்டும். ஆதலால் நீர் உமது நகரம்போய்ச்சேர்ந்து அபிஷேகம் பண்ணப்பெற்று உமதன்பர்களை மகிழச்செய்யும்" என்றார்.

இராமரால் இவ்வாறு ஆஞ்ஞாபிக்கப்பட்டு வானரர் தலைவனான சுக்கிரீவன் வாலியால் கட்டப்பட்ட அழகிய கிஷ்கிந்தைக்குப் போயினான். அவனைச் சூழ்ந்து கொண்டு பல்லாயிரம் வானரர்கள் அந்நகரத்துள் புகுந்து சுக்கிரீவனை, ஆயிரங் கண்ணனாகிய இந்திரனைத் தேவர்கள் அபிஷேகம் செய்து வைத்தாற்போல, பட்டாபிஷேகம் செய்து வைத்தார்கள்.

வானரர்களெல்லோரும் கிஷ்கிந்தைக்குப் போய்ச் சுக்கிரீவனுக்கு பட்டாபிஷேகஞ்செய்ய, இராமர், லக்ஷ்மணரோடு பிரஸ்ரவணமலையை யடைந்தார். அந்த மலைச் சிகரத்திலுள்ள ஓரகன்ற பெரிய குகையை அவர் தமக்கிருப்பிடமாக செய்துக் கொண்டு லக்ஷ்மணரை நோக்கி "இந்த மலைக்குகை அழகாயும், விசாலமாயும் நல்ல காற்றுடையதாயுமிருக்கின்றது; இதில் நாங்கள் இந்த மழைக்

காலத்தைக் கழிப்போம். இந்த மலைக்கோடு உன்னதமான தாயும், அழகுள்ளதாயும் கறுப்பும் வெளுப்பும் சிவப்புமான கற்களையுடையதாயும், அநேக தாதுக்கள் நிறைந்ததாயும், குகைகளும் அருவிகளுமுடையதாயுமிருக்கின்றது. திரிகூட பர்வதத்திலே பெருகும் கங்கையைப்போல குகைக்கு முன்புறத்தில் தெளிந்த நீருடைய நதியொன்று கிழக்கு முகமாக ஓடுகின்றது பார். ரிஷி கூட்டங்கள் வந்து தங்கப்பெற்று, இந்த அழகிய நதி வெகு ரமணீயமாயிருக்கின்றது. அந்தச் சந்தன மரங்களின் பத்தி நிரல்படவைத்தாற்போல காணப்படுகின்றன பார். இவ்விடத்திற்குச் சுக்கிரீவனுடைய அழகிய நகரமாகிய காடு சூழ்ந்த கிஷ்கிந்தை மிகவுந்தூரமன்று; அங்கே மிருதங்கத் தொனியோடு கீத வாத்தியங்களினொலியும் கேட்கின்றது" என்று சொல்லிவிட்டு இராமர் லக்ஷ்மணரோடு வசிக்கலானார்.

உயிரினுமினிய தம் மனைவியைப் பறிகொடுத்து வருந்திய இராமருக்கு அங்கு வசித்ததனால் சிறிதும் இன்பமுண்டாகவில்லை. இந்தத் துன்பத்தினால் கண்ணீர் விட்டு அறிவிழந்து எப்போதும் துக்கத்திலாழ்ந்து கிடந்த இராமரை ஒத்த துன்பத்தையுடைய லக்ஷ்மணர் தேற்றுவாராய் "வீர, நீர் துன்புற்றதுபோதும்; நீர் துன்பமடைதற்கருகரல்லர். துன்பப்படுபவர்கள் எல்லா வகையாலும் முயற்சி இல்லாதவராவார்கள். இது நீரறிந்ததே. இப்போது கார்காலம் வந்துவிட்டது; இனிக் கூதிர்க்காலம் வருமளவும் பொறுத்திரும்; பின் இராவணனை அவன் சுற்றத்தோடும் இராச்சியத்தோடும் அழிக்கலாம். நீறு பூத்த நெருப்பை நெய்யாகுதியினால் சுவாலிக்கச் செய்வது போல் தூங்கியிருக்கின்ற உமது வீரியத்தை நானெழுப்பி விடுகிறேன்" என்று கூறினார். லக்ஷ்மணர் கூறிய இந்த இதமான வார்த்தையைக் கேட்டு இராமர் அவரை அன்போடு நோக்கி "லக்ஷ்மண, அன்பும் நேயமும் இதமும் உண்மையும் ஆண்மையுமுடையவர்கள் சொல்வதை நீயும்

சொல்லினை. சர்வ காரியங்களையும் கெடுக்கின்ற இந்தத் துன்பத்தை ஒழித்துவிட்டு ஆண்மை செய்வதில் தடைப்படுதலில்லாத ஊக்கத்தை யான் பூண்டுக்கொள்ளுகிறேன். உன்னுடைய சொற்படி நான் சரற்காலத்தின் வரவையும் நதிகளின் தெளிவையும் சுக்கிரீவனுடைய தயவையும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். வீரர்கள் ஒருபகாரம் செய்யப் பெறுவார்களாயின் அதற்குப் பிரத்தியுபகாரம் செய்யாதுபோகார்கள். பிரத்தியுபகாரம் செய்யாதவர்கள் பெரியோர்களுக்கு மனவருத்தத்தை உண்டாக்குவார்கள்'' என்று சொன்னார்.

30. சுக்கிரீவன் சீதையைத்தேட வானரர்களை அனுப்புதல்

மழைக் காலம் கழிந்தது. ஆகாயம் நிர்மலமாய் மேகங்களும் மின்னலும் நீங்கி விளங்கிற்று. பொருள்களை நிச்சயஞ்செய்தவனும், பொருள் நூல்களை அறிந்தவனும், கால தர்மங்களை நன்றாயுணர்ந்தவனுமாகிய அனுமான் வானர ராஜனை யடைந்து கூறலுற்றான் :—

''அரச, உமக்கு இராச்சியமும் கீர்த்தியும் கிட்டிவிட்டன; குலமுறையாக வந்த செல்வமும் வளருகின்றது; நண்பினருடைய கூட்டுறவே எஞ்சி நிற்கின்றது; அதை இனி நீர் செய்துகொள்ள வேண்டும். காலத்தை யறிந்து நண்பர்களிடத்தில் நன்றாய் நடப்பவனுக்கு இராச்சியமும் கீர்த்தியும் பிரதாபமும் பெருகும். 'நாம் இப்போது நமது மித்திரராகிய இராமருக்குச் செய்ய வேண்டிய காரியம் வைதேகியிருக்குமிடத்தைத் தேடுதல். செய்யக் கடவ காரியத்தை விரைவிற் செய்ய வேண்டுமென்ற விருப்பமுடையவராயின் அது செய்தற்கு வானரத்தலைவர்களைக் கட்டளையிட்டருளும்.''

இந்த வசனத்தைக் கேட்டு சுக்கிரீவன் நல்ல புத்தி அடைந்து, எல்லாத் திக்குகளிலுமுள்ள சகல சைனியங்களையும் சேர்க்கும்படிக்கு தன்னால் நன்கு மதிக்கப்பட்டவ

னும் எப்போதும் சுறுசுறுப்புள்ளவனுமான நீலனை நோக்கி "எனது சேனைகளெல்லாம் தங்கள் தலைவர்களோடு தடையின்றி இங்கே வரும்படி செய். என்னுடைய கட்டளையினால் திகாந்தரங்களிலுள்ள தலைவர்களும் விரைவாகச் செல்லுபவர்களும் சீக்கிரமாக வந்து சேரட்டும். அங்ஙனம் வந்து சேர்ந்த பின் நீயே சென்று அவர்களைப் பார். பதினைந்து நாளிற்குள் வராதவர்களுக்குப் பிராண தண்டனை செய்; இதில் விசாரம் வேண்டியதில்லை" என கட்டளையிட்டான்.

வானம் மேகங்கள் நீங்கி வெளியாக, காமத்தினாலும் சோகத்தினாலும் வருந்திய இராமர் மழைக் காலத்திரவினால் நொந்து, ஆகாயம் வெண்மையடைந்ததையும், சந்திர மண்டலம் நிர்மலமாயிருப்பதையும், சரற்காலத் திரவு நிலவுபரந்து விளங்குவதையும் கண்டு, வைதேகியை பற்றிச் சிந்திப்பாராயினர். பின்னர் இராமர் மைதிலியை நினைத்து முகம் வாடி லக்ஷ்மணரை நோக்கிச் சொல்லலுற்றார் :—"ஆயிரங்கண்ணன் பூமியை மழையினால் குளிரச் செய்து பயிர்களை வளர்த்துத் தமது காரியத்தை முடித்துக் கொண்டு போய்விட்டான். மேகங்கள் மிகப் பயங்கரமாக முழங்கி, மலைகளுக்கும் மரங்களுக்கும் முன் சென்று, நீரைப் பொழிந்துவிட்டு, இளைப்பாறுகின்றன. அரசர்கள் யுத்தத்திற்காயத்தம் செய்தற்கேற்றகாலம் வந்துவிட்டது. சுக்கிரீவன் அதற்கேற்ற முயற்சி ஒன்றும் செய்யக் காணவில்லை. சீதையைக் காணாது சோகமுற்றிருக்கும் எனக்கு இந்த மழைக் காலத்து நான்கு மாசங்களும் நூறு வருஷங்கள் போலக் கழிந்தன. பெருவிறலாய், நீ சுக்கிரீவனிடம் போய்ப் பார்த்து வா" என்றார்.

அப்போது பூதூளி எழுந்து ஆகாயத்தின் கண்ணே சூரியனுடைய தீவிரமான உஷ்ண கிரணத்தை மறைத்தது. பூதூளி மிகுதியால் திசைகள் மூடுண்டன. பூமி, மலை, காடு, பெருங்காடு முதலியவெல்லாம் நடுங்கின.

அதன்பின் மேருமலை போன்றவர்களும் கூரிய பற்களை யுடையவர்களும் மகாபலமுள்ளவர்களுமான கணக்கிறந்த வானரர்களும் வானரத் தலைவர்களும் பூமியும் மலைகளும் காடுகளும் மறையும்படியாக வந்தார்கள். சுக்கிரீவன் கை கூப்பிக்கொண்டு இராமருக்கு வானரர்களெல்லாரும் வந்ததை அறிவித்து விட்டு "எனது தேயத்திலுள்ள இந்திரன் போன்ற வலி படைத்த நினைத்த ரூபமெடுக்க வல்ல வானரர்களெல்லாரும் வந்துவிட்டார்கள். ஆண்மை யிற் சிறந்தவர்கள்; காரியத்தில் தேர்ந்தவர்கள்; தரை யிலும் நீரிலும் சஞ்சரிப்பவர்கள்; மலைகளில் வசிப்பவர்கள். உம்மிடத்தில் வந்துள்ள உமது சைனியத்திற்கு நீரே கட்டளை செய்ய வேண்டும். இவர்கள் செய்ய வேண்டிய காரியம் எனக்கு நன்ருய்த் தெரியுமாயினும் நீரே முறைப் படி அதைக்கட்டளையிடல்வேண்டும்" என்று சொன்னன்.

இவ்வாறு கூறிய சுக்கிரீவனை இராமர் தன் கைகளால் கட்டித்தழுவி "பேரறிவாள, நமது வைதேகி உயிரோடிருக்கிருளா இல்லையா என்பதையும் இராவணன் எவ்விடத்தில் வசிக்கின்ருன் என்பதையும் அறிய வேண்டும். இவை அறிந்தபின் நாம் செய்யத்தக்கதை நானும் நீருமாகச் செய்வோம். இந்தச் சேனையை ஏவு தற்கு உரியவன் நானுமன்று, லக்ஷ்மணனுமன்று; அது செய்யவேண்டியவர் நீரே. என்னுடைய காரியத்தில் செய்யவேண்டியதிதுவென்பதை நீரே கட்டளையிடும்." என்று சொன்னர்.

இராமர் இவ்வாறு கூறினவுடன் சுக்கிரீவன் அவருக் கும் புத்திமானுகிய லக்ஷ்மணருக்கும் முன்னிலையில் மலை போன்றவனும் இடிபோன்ற குரலுடையவனுமாகிய விநதனென்னும் வானரத்தலைவனை நோக்கி "நூருயிரம் வானரர்கள் சூழ, மலைகளும் சோலைகளும் காடுகளுமடர்ந்த கீழ்த்திசைக்குச் செல். அங்கே மலைகளிலும் வனங்களிலும் நதிகளிலும் சீதையையும் இராவணனுடைய இருப்பிடத்

தையும் தேடு. அழகிய பாகீரதிநதியிலும், சரயு, கௌசிகி, காளிந்தி, யமுனைகளிலும், யமுனா நதியின் கரையிலுள்ள பெரிய மலைகளிலும், சரஸ்வதி, சிந்து நதிகளிலும், மாணிக்கம்போன்ற நீரையுடைய சோனை நதியிலும், மலைகளும் காடுகளுஞ் செறிந்த மகி, காளமகி நாடுகளிலும், பிரம்மமாலம், விதேகம், மாளவம், காசி, கோசலம், மகதம், புண்டரம், வங்கம் முதலிய நாடுகளிலும், தசரதன் மருகியும் இராமர் மனைவியுமாகிய சீதையைத் தேடுங்கள். நீங்கள் உதய பர்வதத்தை அடைந்து வைதேகியையும் இராவணனுடைய இருப்பிடத்தையுங்கண்டு ஒரு மாதத்திற்குள் திரும்பிவிடவேண்டும். ஒரு மாதத்தின்மேல் நிற்கப்படாது; நின்றால் என்றால் கொல்லப்படுவீர்கள்; மைதிலியைக்கண்டு உங்கள் காரியத்தை முடித்துக் கொண்டு திரும்பிவிடுங்கள்.'' என்று கூறினான்.

அந்தப்பெரிய வானரசேனையை அனுப்பிவிட்டு குறிக்கப்பட்ட வானரர்கள் சிலரைச் சுக்கிரீவன் தென்றிசைக் கேவுவானுயினான். பேராற்றலுள்ள அங்கதனைத் தலைவனாகக் கொண்ட, வேகமும் ஆண்மையுமுள்ள, அக்கினி குமாரனான நீலன், அனுமான், பிரமதேவன் புத்திரனாகிய பெருவலிவுடைய ஜாம்பவன், முதலிய வீரர்களைத்தேசங்களையறிந்த அரிகுலத்தலைவன் தெற்குத் திக்குக்குப் போங்களென்று கட்டளையிட்டான். அவர்களுக்கு முன்னே போகும்படி தாமதமின்றிச் செல்லவல்ல பெருஞ் சேனையையும் ஏவினான். பின்பு அவன் தென்றிசையில் எந்த இடம் போதற்கரிதா யிருக்குமென்பதைப்பற்றி அவர்களை நோக்கிச் சொல்லத் தொடங்கி "ஆயிரஞ் சிகரங்களையுடைய விந்தமலையையும், பெரும்பாம்புகள் தங்குவதும் கடத்தற் கரியதுமாகிய நருமதா நதியையும், அழகிய கோதாவரியையும், பெரிய கிருஷ்ணவேணி நதியையும், பெரும் பகுதிகளையுடைய வரதா நதியையும், நீங்கள் காண்பீர்கள். விதர்ப்பம், ரிஷிகம், மாகிஷம்,

வங்கம், கலிங்கம், கௌசிகம், மலைகளும், நதிகளும், குகைகளுமுடைய தண்டகாரணியம், கோதாவரி நதி முதலியவற்றையும் காண்பீர்கள். அவ்வாறே ஆந்திரம், புண்டரம், சோளம், பாண்டியம், கேரளமுதலிய நாடுகளையும் காண்பீர்கள். பின்பு தாதுக்கள் நிறைந்ததும்; விசித்திரமான சிகரங்களையுடையதும், பல வர்ணமான பூக்கள் நிறைந்த சோலைகளையுடையதும், சந்தன வனங்கள் செறிந்ததுமான பெரிய அயோமுக மலையைத் தேடுங்கள். அதன்பின் தெளிந்த நீரையுடைய அழகிய காவேரி நதியை அங்கே காண்பீர்கள். அந்த மலயமலையின் சிகரத்திலே ஆதித்தனுக்குச் சமமான மிகுந்த ஒளியையுடைய முனிசிரேஷ்டரான அகத்தியரைக் காண்பீர்கள். பின்பு அம்மகரிஷியிடத்தில் விடைபெற்றுக்கொண்டு முதலைகள் நிரம்பிய பெரிய தாமிரபருணி நதியைத்தாண்டுங்கள். நான் கூறியவைகளெல்லாவற்றையும் தேடி மற்றுள்ளவைகளையும் பார்த்துவிட்டு வைதேகி சென்ற வழியையறிந்து திரும்பிவரக் கடவீர்கள். ஒரு மாதத்திற்குள் திரும்பி வந்து நான் சீதையைக் கண்டேனென்று முதலிற் சொல்லுபவன் எனது செல்வத்துக்கொப்பான செல்வத்தையடைந்து சுகமனுபவிப்பான்" என்முன்.

சுக்கிரீவன் அந்த வானரர்களைத் தக்ஷிண திசைக்கனுப்பிவிட்டு மேகம்போன்ற சுஷேசணனை நோக்கினுன். அவன் தாரையின் பிதாவாகிய அச்சந்தரும் ஆண்மையினையுடைய தன் மாமனைக்கிட்டிக் கைகூப்பிப்பணிந்து, மேற்குத்திசைக்கேவுபவனுய் "வானரவீரர்காள், சுஷேணர் முதலாக நீவிர் இருநூருயிரவர்சென்று வைதேகியைத் தேடுங்கள். சௌராஷ்டிரம், வாகிலிகம், சூரதேசம், பீமதேசம் முதலிய தேசங்களையும் மணற்காடுகளையும், உயர்ந்த சிகரங்களையுடைய மலைகளையும், மலைக்கூட்டங்களாற் சூழப்பட்ட துர்க்கங்களையும் தேடினபின், சிறிது தூரம் மேற்கே சென்ருல், திமிமீனும் முதலையும் நிறைந்த

சமுத்திரத்தைக் காண்பீர்கள். சிந்துநதி போய் கடலிற் சங்கமமாகின்ற இடத்தில் பெரிய மரங்களடர்ந்த நூறு கொடுமுடிகளையுடைய பெரிய ஹேமகிரியென்றொரு மலையிருக்கின்றது. அந்த அழகியமலைப்பக்கத்தில் சிங்கை என்னும் பறவைகளிருக்கின்றன. அவைகள் திமிமீனையும் யானைகளையும் தங்கள்கூடுகளிற் கொண்டுபோய்வைக்கும். அங்கேயுள்ள ஆறுகள் குளங்கள் துர்க்கங்களெல்லாவற்றிலும் சீதையையும் இராவணனையுந் தேடவேண்டும். வைதேகியையும் இராவணனுடைய இருப்பிடத்தையுங் கண்டு ஒரு மாதத்திற்குள் திரும்பிவிடுங்கள். ஒரு மாதத்தின்மேல் நிற்கப்படாது; நின்றால் நீங்கள் உயிரிழப்பீர்கள்" என்றான்.

வானரோத்தமனாகிய சுக்கிரீவன் ஏறு போன்ற சதவலி என்னும் வீரனை நோக்கி "உன்னைப்போலும் நூறாயிரம் வானரர்கள் உன்னைச் சூழ்ந்துவர, நீ யமனுடைய குமாரனோடும் உனது மந்திரிகளோடும் இமய மலையாகிய காதணியையுடைய வடதிசைக்குச் சென்று குற்றமில்லாத இராமருடைய பத்தினியை எவ்விடத்திலும் தேடவேண்டும். புத்தியும் ஆண்மையுமுடைய நீங்கள் நதிகளையும், மலைகளின் நடுக்களையும், வனத்திலுள்ள துர்க்கங்களையும் தேடுங்கள். சீனம், பரமசீனம், நீகாரம் முதலிய நாடுகளையெல்லாம் பெயர்த்தும் பெயர்த்தும் தேடி இமயமலையையும் அவ்வாறு தேடுங்கள். அங்குள்ள வெட்பாலைவனம், பத்மகவனம் தேவதாருவனம் என்னும் வனங்களொவ்வொன்றிலும் இராவணனையும் வைதேகியையுந் தேடுங்கள். யான் கூறிய இடங்களையும் யான் கூறாதொழிந்த மற்றை இடங்களையும் நீங்கள் தேடவேண்டும். காற்றும் நெருப்பும் போன்றவர்களே, நீங்கள் வைதேகியைக் கண்டு பிடிப்பீர்களாயின் இராமருக்கும் எனக்கும் பிரியமாகிய செய்கையைச் செய்தவர்களாவீர்கள்" என்று சொன்னான்.

வானர வேந்தனாகிய சுக்கிரீவன் அநுமானே சீதையைத் தேடுங்காரியத்தைச் செய்து முடிக்கவல்லனென முழுதும் நம்பி, அவனை நோக்கி "அரிபுங்கவ, பூமியிலாவது, ஆகாயத்திலாவது, அம்பரத்திலாவது, தேவருலகத்திலாவது, நீரிலாவது, உனது செலவிற் கொருதடை யிருப்பதாய் நான் காணவில்லை. அசுரலோகம், கந்தருவலோகம் நாகலோகம், நரலோகம், தேவலோக முதலிய எல்லா லோகங்களையும், சமுத்திரங்களையும் மலைகளையும் நீ நன்குயறிவாய். வீர, செலவாலும் வேகத்தாலும் ஆண்மையாலும் விரைவாலும் நீ உனது பிதாவை ஒப்பாய். ஆகையால் சீதையை அடையும் வழியை நீதான் தேடவேண்டும்" என்று கூறினான். அதுகேட்டு இராமர் தமது காரியம் அனுமானாலேயே கைகூடவேண்டுமென்று அறிந்து, காரியம் கைகூடியவராகத் தம்மை மதித்து, இந்திரியங்களும் மனமுங் களிப்படைந்து தமது பெயர் பொறிக்கப்பட்ட மோதிரத்தை ஜானகிக்கு அறிகுறியாக அனுமானிடத்தில் கொடுத்து "வானரோத்தம, இந்த அடையாளத்தினாலே ஜானகி உன்னை என்னிடத்திலிருந்து வந்தவனாகத் தடையின்றி அறிந்துகொள்வாள். உன்னுடைய தொழிலாற்றலும் வலியும் சுக்கிரீவன் உன்னிடத்து வைத்த நம்பிக்கையும் எனக்குக் காரியம் சித்தியாகுமென்று சொல்லுகின்றன" என்று கூறினார்.

சீதையைத் தேடும்படி சுக்கிரீவனால் அனுப்பப்பட்ட வானர வீரர்கள் அவன் சொன்னவாறு எல்லாத் திசைகளுக்கும் விரைந்து சென்றார்கள். அவர்கள் குளங்கள், சிற்றாறுகள், கரிகாடுகள், மலைகள், வெளிகள், நகரங்கள், கடத்தற்கரிய பேராறுகள், மலைகள், முதலிய யாவற்றையுந் தேடினார்கள். மகாபலமுடைய விநதன் தனக்கிட்ட கட்டளையின்படி கிழக்குத் திக்கைத்தேடி சீதையைக் காணுதவனாய் தன் மந்திரிளோடு திரும்பிவந்தான். வீரனாகிய சதவலி வடக்குத்திசை முழுதுந் தேடிவிட்டு

தனது சேனைகளுடன் திரும்பிவந்தான். சுஷேசணன்வான ரர்களோடு மேற்குத் திசையைத் தேடிவிட்டு ஒரு மாச மானவுடன் சுக்கிரீவன் முன் வந்து சேர்ந்தான். அவர்க ளெல்லாரும் பிரஸ்ரவ்ண மலையின்மேல் இராமரோடு வீற் றிருந்த சுக்கிரீவனைக் கிட்டிப் பணிந்து "எல்லா மலைகளும் சோலைகளும், காடுகளும், ஆறுகளும், கடல்களும், ஊர் களும் தேடியாய்விட்டன; நீர் கூறிய குகைகளெல்லாம் தேடியாய்விட்டன; கொடிகள் படர்ந்த மரச்சுழல்க ளெல்லாந்தேடியாய் விட்டன; காட்டிடங்களிலும், துர்க் கங்களிலும், பள்ளங்களிலு முள்ள பெரிய மிருகங்க ளெல்லாந் தேடிக் கொல்லப்பட்டன. உதாரகுணமும் பெருந்திறலுமுடைய பெரியாய், அனுமானே மைதிலி யைக் காண்பான்; ஏனெனில் அவனே அவள் போன திசைக்குச் சென்றிருக்கின்றான்" என்றார்கள்.

31. அனுமான் முதலானோர் தென்றிசையில் தேடுதல்

அனுமான் தாரனோடும் அங்கதனோடும் சுக்கிரீவன் குறித்த திசையை நோக்கி விரைந்துச் சென்றான். அவர்கள் வெகுதூரஞ் சென்று விந்தமலையின் குகைகளையுங் காடு களையும், மலைக்கோடுகளையும், கடக்கமுடியாத ஆறுகளை யும், குளங்களையும், பெரிய மரங்களையும், தேடியும் சீதையைக் காணவில்லை. அதன்பின் அவர்கள் பயங்கர மான அலைகள் வீசி முழங்கும் வருணனுக்கிருப்பிடமாகிய கரையற்ற பெருங்கடலைக் கண்டார்கள். அப்போது அறிவிற்சிறந்த இளவரசனை அங்கதன் "வானரர்காள், எங்களரசன் கட்டளையினால் நாங்கள் எல்லாரும் கார்த் திகை மாதத்திற்குள் சீதையைத் தேடுவதாகச் சொல்லிப் புறப்பட்டு வந்தோம்; அந்த மாதம் கழிந்துவிட்டது; இனிச் செய்யவேண்டிய காரியம் என்ன? அரசன் ஏவிய காரியத்தைச் செய்துமுடிக்காத நாங்கள் கொலைக்காளா வோம்; இதிற் சந்தேகமில்லை. வானர ராஜனுடைய

ஏவலைச் செய்யாது யாவன் சுகமடைந்தவன்? சுக்கிரீவன் குறித்தகாலம் கழிந்தமையால் நாம் பட்டினிகிடந்து உயிர் துறத்தல் தக்கது. ஆகையால் இந்தச் சமுத்திரத்தின் புண்ணியதீரத்திலேயே நான் பட்டினி கிடக்கின்றேன்" என்று கூறினன். அங்கதன் இவ்வாறு சொல்லிவிட்டுப் பெரியவர்களை வணங்கி, மனம்வருந்தி, அழுதுகொண்டு பூமியில் தருப்பையின்மேல் உட்கார்ந்தான். வானரவீரர்கள் அங்கதனுடைய எண்ணத்தை அறிந்துகொண்டு தண்ணீரைக்குடித்துவிட்டுக் கிழக்கு முகமாக விருந்தார்கள். அவர்கள் நீர்க்கரையில் தெற்கு முகமாகப் பரப்பிய தருப்பையின்மேல் இருந்துகொண்டு "இதுவே எமக்கு ஏற்றது" என்று எண்ணினார்கள்.

வானரர்கள் அந்த மலையின்மேலே பட்டினியிருந்து உயிர்துறக்க நிச்சயித்து உட்கார்ந்தபோது அங்கே கழுகரசன் வந்தான். அவன் சம்பாதி என்று கூறப்படுபவன்; நீடித்த ஆயுளுடையவன்; ஜடாயுவின் சகோதரன்; வலியாலும் ஆண்மையாலும் புகழ்படைத்தவன். அங்கிருந்த வானரர்களைக் கண்டு சந்தோஷமுற்று "இவ்வுலகத்தில் ஒவ்வொருவனையும் அவன் வினைப்பயன் தொடருகின்றது. அதனாலன்றோ எனக்கென்று நியமிக்கப்பட்ட இந்த உணவு நெடுங்காலங் கழித்து என்னிடம் வந்திருக்கின்றது" என்று சொன்னான்.

பசித்திருந்த அந்தப்பறவையின் வார்த்தையை அங்கதன் கேட்டு மிகவும் கவலையடைந்து அனுமானை நோக்கி "சீதை என்னும் வியாஜத்தை வைத்துக்கொண்டு சூரிய புத்திரனாகிய யமன் தானே வானரர்களை அழிக்கும் பொருட்டு இங்கு வந்திருக்கிறான். இராமருடைய காரியமும் முடிவுபெறவில்லை. நமதரசன் கட்டளையும் நிறைவேறவில்லை. அப்படியிருக்க வானரர்களுக்குத் தெரியாமலே அவர்களுக்கு இந்த விபத்து வந்திருக்கின்றது. சீதைக்கு நன்மை செய்யும் பொருட்டு முன் கழுகரசனை

ஜடாயு இங்கே யாது செய்தானென்பதை நீங்கள் முழுதும் கேட்டிருக்கின்றீர்கள். இவ்வாறே விலங்கு சாதியுள்பட எல்லாப்பிராணிகளும், எங்களைப்போலவே, தம்முயிரைக்கொடுத்து, இராமருக்கு வேண்டியவற்றைச் செய்கின்றன. கழுகரசன் யுத்தத்தில் இராவணனால் கொல்லப்பட்டுச் சுகமடைந்தான்" என்று கூறினான்.

அங்கதன் வாயிலிருந்து வந்த சொற்களைக்கேட்டு கூரிய மூக்கும் பெரிய குரலுமுடைய சம்பாதி வானரர்களைநோக்கி "என்னுடைய மனத்தை நடுங்கும்படி செய்து என்னுயிரினுமினிய சகோதரன் ஜடாயுவினுடைய மரணத்தைப்பற்றிப் பேசுகின்றவன் யாவன்? ஜனஸ்தானத்தில் இராக்ஷசர்களுக்கும் ஜடாயுவுக்குமிடையில் யுத்தம் எப்படி யுண்டாயிற்று? நெடுநாள் கழித்து இப்போது தான் என் சகோதரன் பெயரை நான் கேட்கிறேன். நான் இந்த மலைத்துர்க்கத்திலிருந்து இறங்க விரும்புகின்றேன். குணங்களை யறிந்தவனும் ஆண்மைக்காக யாவராலும் புகழப்படுபவனுமாகிய என் தம்பியின் கீர்த்தியை நெடுநாளைக்குப்பின் கேட்டு மிகவும் சந்தோஷமடைந்தேன். வானரவீரர்காள், ஜனஸ்தானத்தில் வசித்த எனது தம்பி ஜடாயுவின் மரணத்தைப்பற்றி நான் அறிய விரும்புகிறேன்." என்றான்.

அங்கதன் மலைச்சிகரத்தினின்று சம்பாதியை இறக்கி "கழுகரச, பிரதாபமுடைய ரிக்ஷரஜன் என்று ஒருவானரவேந்தன் இருந்தான். அவ்வரசன் என் பிதாமகன்; தருமகுணமுடையவன். அவனுக்கு வாலி என்றும் சுக்கிரீவன் என்றும் இரண்டு குமாரர்கள். அவர்கள் அளவற்ற பலமுடையவர்கள். எனது பிதாவாகிய வாலி என்னும் அரசன் இவ்வுலகத்தில் தன் தொழிலாற்றலால் பேர்போனவன். தசரத குமாரராகிய இராமர் இவ்வுலகிற்கெல்லா மரசர்; இக்ஷ்வாகு குலத்தில் வந்த பெருந்தேர் வீரர். அவர் தருமவழியில் நின்று தந்தை கட்டளையை

நிறைவேற்றவேண்டி, தன் தம்பி லக்ஷ்மணரோடும் மனைவி சீதையோடும், தண்டகாவனத்திற்கு வந்தார். அவருடைய மனைவியை ஜனஸ்தானத்திலிருந்து இராவணன் வலிந்து எடுத்துக்கொண்டு போய்விட்டான். இராமருடைய தந்தையின் நண்பனாகிய ஜடாயுவென்னும் கழுகரசன் சீதையை இராவணன் ஆகாயமார்க்கமாக எடுத்துக்கொண்டு போவதைக்கண்டு அவனைத் தேரழித்துப் பூமியில் இறக்கிவிட்டான். பின்பு அவன் மூப்பினால் இளைப்படைந்திருந்தமையின் இராவணனால் கொல்லப்பட்டான். ஜடாயு இராமரால் பிரேத சம்ஸ்காரம் செய்யப்பெற்று நற்கதியடைந்தான். பின்பு இராமர் என் சிற்றப்பனை சுக்கிரீவனோடு நட்புக்கொண்டார்; அவரே என் தந்தை வாலியையும் கொன்றார். சுக்கிரீவன் மந்திரிமார்களோடு என் தந்தையால் ஊரைவிட்டுத் துரத்தப்பட்டிருந்தான். இராமர் வாலியைக்கொன்று சுக்கிரீவனுக்கு அபிஷேகம் செய்தார். வானர வீரர்களுக்கெல்லாம் அரசனாகிய சுக்கிரீவனால் நாங்கள் ஏவப்பட்டோம். இராமர் சொற்படி நாங்கள் சீதையை எவ்விடங்களிலும் தேடினோம். இராத்திரியில் சூரியனுடைய ஒளியைக் காணக்கூடாதவாறு வைதேகியை நாங்கள் தலைப்படவில்லை.” என்று கூறினான்.

உயிர் போவதுபோலிருந்த வானரர்கள் இந்தப் பரிதாபமான வார்த்தையைக் கூற, சம்பாதி அவர்களை நோக்கி “வானரர்காள், என் தம்பி ஜடாயு யுத்தத்திலே இராவணனால் கொல்லப்பட்டான் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். மூப்பினாலும் சிறகின்மையினாலும் நீங்கள் சொன்னதைக்கேட்டுப் பொறுத்திருக்கிறேன். எனது தம்பியைக் கொன்றதற்காகப் பழிவாங்க நான் இப்போது வலியன் அல்லேன். முன்னொரு காலத்தில் விருத்திராசுரன் கொலையுண்டபோது நாங்களிருவரும் ஒருவரை ஒருவர் வெல்லவேண்டுமென்று கிரண வரிசைகளாற்

சொலித்துக்கொண்டிருந்த ஆதித்தனுக்குக் கிட்டப்பறந்து சென்றோம். ஆகாயமார்க்கத்திலே நாங்கள் அதிவேகமாகச் சுற்றிப் பறந்துபோனபோது, சூரியன் உச்சியில் வர, ஜடாயு இளைப்புற்றான். சூரியகிரணத்தினால் என் தம்பி வருந்துவதைக்கண்டு நான் என் சிறைகளினால் அவனை மறைத்தேன். அப்போது நான் சிறகர் கரிந்து விந்த மலையின்மேல் விழுந்தேன். அன்று தொட்டு நான் இங்கேயே யிருந்தமையின் என் தம்பியுடைய செய்தி ஒன்றுமறியேன்'' என்று கூறினான்.

சம்பாதி இவ்வாறுசொல்ல, பேரறிவுடைய அங்கதன் அவனைநோக்கி "நீ ஜடாயுவின் சகோதரனானால், நீ நான் சொன்னதைக் கேட்டிருத்தலின், அந்த ராக்ஷசனுடைய இருப்பிடம் உனக்குத்தெரியுமோ? சொல்'' என்று கேட்டான். பின்பு சம்பாதி, வானரர்களை மகிழ்விப்பவனாய் "வானரர்காள், நான் என் சிறகெரிந்து வலிகுன்றினவனா யிருக்கிறேன்; ஆகையினால் நான் வாக்கு மாத்திரத்தினாலேயே இராமருக்கு ஒரு பேருதவி செய்கின்றேன். இராமருடைய காரியமாகிய இதனை நான் முதலில் செய்கின்றேன். கொடிய இராவணன் அழகும் இளமையுமுடைய ஒரு பெண்ணணங்கை எடுத்துக்கொண்டுபோனதை யான் கண்டேன். அந்நல்லாள் அப்போது "இராமா இராமா" என்றும் "லக்ஷ்மணா" என்றும் கதறிக்கொண்டு, உடல் நடுங்கி, தான் அணிந்திருந்த ஆபரணங்களைக் கழற்றி எறிந்தாள். அவளுடைய சிறந்த கோசிகப்பட்டு மலையினுச்சியிலெறிக்கும் வெயில்போன்றிருந்தது; கரிய இராக்ஷசன் மடியிலிருந்த அவள் கார்மேகத்தில் தோன்றும் மின்னல்போல விளங்கினாள். இராமருடைய பெயரைச் சொல்லினமையால் அவளை சீதையென்று நான் எண்ணுகிறேன். அவன் இருப்பிடத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள். அவன் விச்சிரவசுவின் புதல்வன்; வைச்சிரவணனுக்குத் தம்பி. அவன் வசிப்பது

இலங்கைநகரத்தில். அந்த அழகிய நகரம் விசுவகர்மனால் செய்யப்பட்டது; அது சமுத்திரத்திலே நூறு யோசனை தூரத்தில் ஒரு தீவின்கணுள்ளது. சீதை அங்கே யிருக்கிறாள். அவ்வேழை கோசிகப்பட்டுடுத்து இராவணனுடைய அந்தப்புரத்திலே இராக்ஷசிகளால் காவல் செய்யப்பட்டு அழுதுகொண்டிருக்கிறாள். வானரர்காள், நீங்கள் ஊக்கத்தோடு மிக விரைவாக அங்கே செல்லுங்கள். நீங்கள் சீதையைக்கண்டு திரும்புவதை நான் ஞானத்தினால் காண்கின்றேன். நான் இங்கிருந்துக்கொண்டே இராவணனையும் ஜானகியையும் காண்கின்றேன். அப்படிப்பட்ட திவ்வியமான சிறந்த கண்பார்வை எங்களுக்குண்டு. உணவின்வலியாலும் எங்கள் இயற்கையாலும் நாங்கள் எப்போதும் நூறுயோசனைக் கப்பாலுள்ளதையும் காண்போம். உப்புச் சமுத்திரத்தைக் கடப்பதற்கு வழிபாருங்கள். நீங்கள் வைதேகியைக் கண்டு உங்கள் காரியத்தை முடித்துக்கொண்டு திரும்புங்கள். என்னைச் சமுத்திரக்கரைக்கு எடுத்துக்கொண்டு போய்விடுங்கள். சுவர்க்கமடைந்த என் பெருமையுடைய தம்பிக்கு நான் நீர்க்கடன் செய்ய விரும்புகின்றேன்'' என்றான். அப்போது மிகுந்த வேகத்தையுடைய வானரர்கள் சிறகெரிந்திருந்த சம்பாதியை சமுத்திரதீரத்திலே அவனாற் குறிக்கப்பட்ட இடத்திற் கொண்டுபோய்விட்டு மறுபடியும் அவனை அவனிருந்தவிடத்திற்கு கொண்டுவந்து சேர்த்து, சீதையின் செய்தியைக் கேள்வியுற்றுச் சந்தோஷமடைந்தார்கள்.

அந்த மலையின் சிகரத்தில் நீர்க்கடன்செய்து ஸ்நானம் பண்ணிவிட்டிருந்த சம்பாதியை வானரவீரர்கள் நான்கு புறத்திலும் சூழ்ந்திருந்தார்கள். அப்போது சம்பாதி நம்பிக்கை கொண்டு சந்தோஷத்தோடு வானரர்கள் சூழவிருந்த அங்கதனை நோக்கி ''வானரர்காள், சத்தம் பண்ணாது ஒரே மனத்துடன் கேளுங்கள். சூரியனுடைய வெயி

னுல் உடல்வாடி அவனுடைய கிரணத்தினுல் சூடுண்டு நான் முன்னர் இந்த மலையின் சிகரத்தின்மேல் விழுந்தேன். விழுந்தபின் ஆறு நாள் இரவும் பகலும் மூர்ச்சையடைந் திருந்தேன். பின் நான் கடல்களையும் மலைகளையும் நதி களையும் அருவிகளையும் காடுகளையும் கடற்கரைகளையும் பார்த்து இது இவ்விடமென்று அறிந்துகொண்டேன். களிப்படைந்த பறவைக் கூட்டங்கள் நிறைந்திருத்தலி னுலும் குகைகளும் சிகரங்களுமுடைமையினுலும் தென் சமுத்திர தீரத்திலுள்ள விந்தமலை இதுவென்று நான் நிச்சயித்தேன். இங்கே தேவர்களாலும் பூசிக்கப்படும் புண்ணியாசிரம மொன்றிருந்தது; நிசாகரர் என்னும் பெயருடைய பெரிய தவமுனிவர் அவ்வாசிரமத்தில் வசித் தார். நான் அந்த புண்ணிய ஆசிரமத்தை யடைந்து பக வான் நிசாகர முனிவரைக் காணவேண்டி ஒரு மரத்தினடி யில் காத்திருந்தேன். அப்போது அம்முனிவர், ஸ்நானம் செய்துவிட்டு, உடலம் ஒளிக்க வடக்கு நோக்கி எனக்குச் சமீபமாக வந்துகொண்டிருந்தார். முனிவர் என்னைக் கண்டு சந்தோஷமடைந்து ஆசிரமத்துள் புகுந்து ஒரு முகூர்த்தம் கழித்துவந்து என்னை நோக்கி "உன்னுடைய சிறகுகளும் தூவிகளும் உனக்குப் புதிதாக மறுபடியும் முளைக்கும். உன்னுடைய உயிரும் பார்வையும் ஆண்மை யும் பலமும் மறுபடியும் வரும். ஒரு பெரிய காரியம் இவ் வுலகத்தில் நடக்கப் போகின்றதென்று முன்பு கேட்டிருக் கின்றேன். இராமரால் அனுப்பப்பட்ட வானரர்கள் சீதையைத் தேடி வருவார்கள்; அவர்களுக்கு நீ சீதையின் செய்தி முழுதையும் சொல்லு. நீ இதைவிட்டு ஒருபோதும் போகாதே. நீ எங்கே போவாய்? காலத்தையும் இடத்தை யும் உனக்குச் சிறகு முளைத்தலையும் பார்த்துக்கொண்டு நீ இங்கேயே இரு. உனக்கு இன்றைக்கே சிறகு முளைக் கும்படி நான் செய்யமாட்டேன்." என்ருர். முனிவரர் இவ் வண்ணம் பலவாருக என்னைப் புகழ்ந்துரைத்து எனக்கு விடை தந்துவிட்டுத் தமதாசிரமத்துள் புகுந்தார்."

இவ்வாறு வானரர்களோடு பேசிக்கொண்டிருந்த சம்பாதிக்கு வானரர்களுடைய கண் முன்னிலையில் சிறகு முளைத்தது. சம்பாதி தன்னுடைய உடலில் சூரியனைப் போல ஒளியுடைய சிறகு முளைத்ததைக் கண்டு ஒப்பற்ற சந்தோஷங்கொண்டு வானரர்களை நோக்கி, "அளவிலாற்றலுடைய நிசாகர முனிவர் கிருபையினால் சூரிய கிரணத்தினால் எரிந்துபோன என் சிறகுகள் முளைத்துவிட்டன. எல்லா வகையாலும் முயற்சி செய்யுங்கள்; நீங்கள் சீதையைக் காணுவீர்கள். நான் சிறகுபெற்றது உங்கள் முயற்சி சித்திக்கு நம்பிக்கை புகட்டுவதாக யிருக்கின்றது" என்றான். இப்படிச் சொல்லிவிட்டு சம்பாதி மலையுச்சியில் நின்று ஆகாயத்தில் பறந்தான்.

வானரவீரர்கள் இராவணனுடைய இருப்பிடத்தைக் குறித்துச் சம்பாதி சொன்னவற்றைக் கேட்டுச் சந்தோஷங்கொண்டு சீதையைக் காண விரும்பி சமுத்திரக் கரைக்குச் சென்றார்கள். அவர்கள் அந்தத் தென் சமுத்திரத்தின் வடகரையில் தங்கி கடல் ஆகாயம்போல் விரிந்து கடத்தற்கரிதா யிருத்தலைக் கண்டு யாது செய்வதென்று மனங் கலங்கினார்கள். வானரர்களுக்குள் சிறந்த அங்கதன் கடலைக்கண்டு சேனைகள் மனம் கலங்கினதை அறிந்து அவர்களுக்குத் தேற்றறிவு சொல்லி "மனத்தைக் கலங்க விடப்படாது; மனக்கலக்கம் மிகவும் குற்றமுடையது. சீற்றங்கொண்ட பாம்பு ஒரு குழந்தையைக் கொல்லுமாறு போல மனக்கலக்கம் ஒருவனைக் கொன்றுவிடும். தனது ஆண்மையைக் காட்டவேண்டிய காலத்தில் மனங் கலங்குபவன் ஒளிகுன்றிப் புருஷார்த்தத்தையும் இழந்து விடுவான்" என்று கூறினான். பின்பு அங்கதன் வானரச் சேனைக்கும் வானரத் தலைவர்களுக்கும் பணிந்து "இந்தக் கடலைக் கடக்கும் பெருந்திறலுடையான் யாவன்? பகைவர்களை யடக்கும் சுக்கிரீவனைச் சத்தியவானாகச் செய்பவன் யாவன்? வானரர்காள், எந்த வீரன் நூறு

யோசனை தாவ வல்லவன்? இந்த வானரத் தலைவர்களின் பயத்தை நீக்குபவன் யாவன்? உங்களுள் எவராலாவது இந்தக் கடலைக் கடக்க முடியுமானால் எங்களுக்கு இப்போதே அபயம் கொடுங்கள்" என்று கூறினான். அங்கதன் சொன்னவற்றைக் கேட்டு, கஜன், கவாக்ஷன், கவயன், சரபன், கந்தமாதனன், மயிந்தன், துவிவிதன், சுஷேணன், சாம்பவன் முதலிய வானரவீரர்கள் கடலைக் கடத்தலில் தங்கள் தங்களுக்குள்ள வலியை முறைப்படி சொல்லினார்கள். இவர்கள் இவ்வாறு சொல்ல, வானர வீரர்களுக்குள் மூத்தோனாகிய சாம்பவன் அவர்களுக்கு வந்தனைசெய்து "முன்னர் என்னிடத்தில் இக்கடலைக் கடக்க ஆற்றலிருந்தது; நான் இப்போது வயசின் மறுகரையில் வந்துவிட்டேன். ஆயினும் நான் தொண்ணூறு யோசனை செல்வேன். இந்த வலியினால் காரியம் முடியமாட்டாது" என்றான்.

பின்னர் அங்கதன் "இந்தப் பெரிய நூறு யோசனை தூரத்தையுங் கடக்க என்னால் முடியும்; திரும்பி வருவதற்கு எனக்கு சக்தி உண்டோ இல்லையோ என்று சொல்ல முடியாது" என்றான். சாம்பவன் அவனை நோக்கி "வானரோத்தம, கடலைக் கடத்தலில் உமக்குள்ள வலியை நாங்கள் அறிவோம். நீர் நூறாயிரயோசனை கடக்கவும் திரும்பி வரவும் சமர்த்தர் அன்றோ? அடியேங்கள் உம்மைப் போமென்றேவல் தக்கதன்று. அப்ப, தொழுவார்கள் இறைவனை ஒருபோதும் ஏவப்படாது. நீரே எங்களை ஏவல்வேண்டும். வீர, இந்தக் காரியத்திற்கு ஒரு குறையும் வாராது. இந்தக் காரியத்தைச் செய்துமுடிக்க வல்லானை நான் அனுப்புகின்றேன்" என்றான்.

சாம்பவன், அநேக நூறாயிரம் பேரடங்கிய வானர சேனை துக்கப்பட்டுக்கொண் டிருப்பதைப்பார்த்து, அநுமானை நோக்கி "வானரர்களுக்குள் வீர, நூன்முழுதறிந்த புலவ, மௌனமாய்த் தனியிடத்திற் போயிருந்துகொண்டு

ஏன் பேசாதிருக்கின்றாய்? நீ உன் வலியினாலும் ஆண்மையினாலும் வானர வேந்தனாகிய சுக்கிரீவனுக்கும் இராமருக்கும் லக்ஷ்மணருக்கும் ஒப்பானவன். உன்னுடைய பலமும் புத்தியும் உரனும் ஆண்மையும் யாவருக்கும் தெரிந்தவை. நீ ஏன் அவற்றை அறியவில்லை? ஆண்மையாலும் தாவுஞ் சத்தியாலும் நீ வாயுவை ஒத்தவன். நாங்கள் இப்போது உயிர்போயிருக்கின்றோம். நீ எங்களை இப்போது காப்பாற்றவேண்டும். வானரோத்தம, எழுந்து கடலைக் கடப்பாயாக" என்றான்.

அநுமான் வானரர்கள் புகழப்புகழ வளர்ந்து சந்தோஷத்தால் வாலை அசைத்துப் பலமடைந்தான். பின்னர் வானரர்கள் நடுவினின்றும் எழுந்து, மயிர்ப்புளகங் கொண்டு, அவர்களுள் மூத்தோர்களைப் புகழ்ந்து "வானர வீரர்காள், நான் கடிய வேகத்தோடு ஆகாசத்திலே திரிகின்ற சோதிவர்க்கங்களுக்கு மேலே செல்லவும் வல்லேன். கடலை வற்றச்செய்வேன்; தரையைப் பிளந்துவிடுவேன். நான் வைதேகியைக் காண்பேன். நீங்கள் களிகூறுங்கள். நான் ஒரே தாண்டில் இலங்கையையும் கடந்து அப்பாற் செல்வேன் என்று எனக்குத் தோன்றுகின்றது" என்று சொன்னான். இவ்வாறு கூறி அநுமான் கர்ச்சிக்க அதனை வானரர்கள் கண்டு சந்தோஷமும் ஆச்சரியமும் அடைந்தார்கள். அநுமான் கூறிய வார்த்தையைச் சாம்பவன் கேட்டு "வீர. கேசரிபுத்திர, வாயுகுமார, உன் சுற்றத்தாரின் துக்கத்தை நீ போக்கிவிட்டனை. முனிவர்களுடைய அருளாலும் வானர மூத்தோர்களுடைய அநுமதியாலும் பெரியோர்களின் அநுக்கிரகத்தாலும் நீ பெரிய கடலைக் கடப்பாயாக. நீ திரும்பி வரும்வரையும் நாங்கள் ஒற்றைக்காலில் நின்று தவஞ்செய்வோம். வானரர்களுடைய உயிரெல்லாம் உன்னைத் தொடர்ந்துவரும்" என்று கூறினான். பின்னர் அநுமான் சிறந்த மகேந்திர மலையின்மேல் ஏறி உலாவினான்.

சுந்தர காண்டம்

32. அநுமான் இலங்கையினுள் புகுதல்

அந்தச்சிறந்த மகேந்திர மலையிலே, அநேக பெரிய யானைகள் தங்கிய இடத்திலே நின்ற அநுமான் ஒரு மடுவினிடத்தே நின்ற யானைபோல விளங்கினான். அவன் சூரியனுக்கும் தேவேந்திரனுக்கும் வாயு தேவனுக்கும் பிரமதேவனுக்கும் பூதங்களுக்கும் அஞ்சலி செய்து கடலைக் கடக்க நினைத்தான். அவன் பின்பு கிழக்கு நோக்கி தனது தந்தையாகிய வாயுவை வணங்கி, கடலைக்கடந்து தெற்கே போக நிச்சயித்து, உயர்ந் தோங்கினான். அவன் அங்கு நின்று குதிக்க வேண்டி தன்கால்களையும் கைகளையும் ஊன்ற, அந்த மலை ஒரு முகூர்த்தகாலம் அசைந்தது. அப்போது அம்மலையில் பூத்திருந்த மரங்களிலிருந்து பூக்கள் உதிர்ந்தன. அவ்வாறு கீழே உதிர்ந்த நறிய மலர்க் குவைகளால் அந்தமலை மூடுண்டு புஷ்பமயமாய் விளங்கிற்று. அந்தமலை நெரிந்தபோது அதன் குகைகளினுள்ளிருந்து உடம்பு நெரிந்த விலங்குகள் எவ்விடங்களிலும் இரங்கற்குரலால் அரற்றின. அந்த அரற்றொலி பூமியிலும் திசைகளிலும் சோலைகளிலும் பரவிற்று.

அப்போது ஆகாயத்திலே நின்ற சித்தர்களும் சாரணர்களும் யோகப்பயிற்சியுடைய முனிவர்களும் " இந்த மலைபோன்ற அநுமான் மகாவேகத்தோடு சுறாக்களுக்கிருப்பிடமாகிய கடலைக்கடக்கப் போகின்றான். அவன் இராமர்பொருட்டும் வானரர்கள்பொருட்டும் மற்றொருவரும் செய்தற்கரிய செயலைச் செய்து கிட்டுதற்கரிய கடலின் அக்கரையை அடையவிரும்புகின்றான் " என்று சொன்ன சொற் கேட்டது.

க்லையமரம் போன்ற தனது கைகளை அசையாமல் மலையிலூன்றி, இடையை ஒடுக்கி, கால்களை மடக்கி,

தோளையும் கழுத்தையும் சுருக்கி, அறிவு ஆண்மை வீரமென்பவைகளை மேற்கொண்டு, மேல் நோக்கிய கண்களாலே தூரத்திலிருந்துதான் செல்லும் வழியையும் ஆகாயத்தையும் பார்த்து, நெஞ்சினுள்ளே மூச்சை அடக்கி, இரண்டு கால்களையும் அசையாமலூன்றி, காதுகளை வளைத்து மேலெழும்பும் அநுமானுடைய தொடையின் விசையாலிழுக்கப்பட்டு பெரிய மரங்கள், நெடுவழி செல்லப்புறப்பட்ட சுற்றத்தவனை சிறிதுதூரஞ்சென்று வழிவிடும் உறவினரைப்போல, ஒரு முகூர்த்தகாலம் அவனைத் தொடர்ந்துசென்றன. அவன் சென்ற விசையினுற் சிதறுண்ட பூக்களால் அந்தச் சமுத்திரம் அழகிய நக்ஷத்திரங்கள் உதித்த ஆகாயம்போலத் தோன்றிற்று. சமுத்திரத்தைக் கடந்து சென்றபோது அவன் கைம்மூலத்தினின்றும் வந்த காற்று மேகம்போல முழங்கிற்று. அவன் பெயர்த்தும் பெயர்த்தும் மேகக் கூட்டங்களுள் நுழைந்து மறைந்தும் அவற்றினின்று புறப்பட்டுப் பிரகாசமாயும் சந்திரனைப்போலத் தோன்றினுன். நாள், கோள், சந்திரன், சூரியன், தாராகணம் முதலியவற்றுல் அணிசெய்யப்பட்ட வாயுமார்க்கத்திலே கருடனைப்போல அதிவேகத்தோடு சென்றுன். நூறுயோசனை தூரமும் கடந்தபின் அவன் கரையை அடைந்து நான்குபுறமும் பார்க்கையில் அவன் பலவித மரங்கள் செறிந்த இலங்கைத்தீவையும் மலயமலைச் சோலையையும் கண்டான். ஆகாயத்தை மறைப்பதுபோன்ற பெரிய மேகத்துக்குச் சமானமான தனதுடலை அவன் பார்த்து சிறிது யோசித்து பின்பு தனது உடலைச் சுருக்கி மோகம்நீங்கிய ஆன்மாவைப் போலத் தன் சுவரூபத்தை அடைந்து அநுமான் மூன்றடியால் உலகத்தை யளந்து மாவலியைச் சிதைத்த வாமனன் போல விளங்கினுன்.

அநுமான் ஒருவராலுங் கடக்க முடியாத கடலைக் கடந்து இளைப்பு சிறிதுமின்றி திரிகூட பர்வதத்தின்

மேலுள்ள இலங்கையைக் கண்டான். அவன் இலங்கையைக்கிட்டி, அது தாமரைகளும் நீலோத்பலங்களும் நிறைந்த அகழி சூழ்ந்து, அவ்விராவணன் ஏவலாற் கொடிய வில்லைப் பிடித்துத் திரிந்துக்கொண்டிருந்த இராக்ஷசர்களால் எவ்விடத்தும் நன்றுகக் காவல் செய்யப்பட்டு, அழகிய பொன்மதில் வளைந்து, சரற்காலத்து மேகங்களையும் நவக்கோள்களையும் நிகர்த்த மாளிகைகள் நிறைந்து, வெள்ளிய உயர்ந்த வீதிகள் சூழ்ந்து, அட்டாலைகள் மிகுந்து, சிறு கொடிகளும் பெருங் கொடிகளும் நெருங்கி, கொடிவேலைகள் செய்யப்பட்ட பொன்மயமான தோரண வாயில்களை யுடையதாகிச் சுவர்க்கலோகம்போல விளங்கக்கண்டான்.

இலங்கை நகரின் வடக்குவாயிலை யடைந்து, "கொடிய ராக்ஷசவேந்தனுகிய இராவணன் கண்ணிலகப்படாமல் நான் எவ்வித உபாயத்தினுலே ஜனகன் புத்திரியாகிய சீதையைத்தேடுவேன்? ஆன்ம ஞானமுடைய இராமரது காரியங் கேடுருதபடி அந்தரங்கமான இடத்திலே சீதையைத் தனிமையாக நான் காணுமாறு எப்படி? முடிவிற்கு வந்த காரியங்களும் அறிவில்லாத தூதனிடத்தில் அகப்பட்டாற் காலத்தாலும் இடத்தாலும் மாறுபட்டு சூரியன்முன் எதிர்ப்பட்ட இருள்போல அழிந்துவிடும். இது செய்யத்தகும் இது செய்யத்தகாதென்று விசாரித்து நிச்சயிக்கப்பட்ட காரியங்கள் தூதனுடைய மூடத்தனத்தினுல் விளங்குவதில்லை. தங்களைப் பண்டிதர்களாக மதிக்கிற தூதர்கள் காரியங்களைக் கெடுத்துவிடுவார்கள். இராமருடைய காரியஞ் சித்தியடையும்பொருட்டு நான் எனது ரூபத்தோடேயே உடலைச் சுருக்கிக்கொண்டு இலங்கைக்குள் இராத்திரி வேளையிற் புகுவேன்" என்று அநுமான் எண்ணி சூரியன் அஸ்தமித்தபின் தனது தேகத்தைச் சுருக்கி, ஒரு பூனையளவான அற்புத தோற்றத்தைக் கொண்டான். அவன் மாலைக்

காலம் வந்தவுடன் மலைமுடியிலிருந்து விரைந்து குதித்து அழகிய இலங்கை நகரத்தினுள்ளே பிரவேசித்தான்.

தீபங்களாலும் ஒளிகளாலும் பெரிய மாளிகைகளாலும் இருள்போக்கப்பட்டது இராவணனுடைய அந்த நகரம். அப்போது அந்நகரத்தினுள்ளே போகவந்த பெருவலியுடைய அநுமானை இலங்கைமாது கண்டு, சுயரூபத்தோடு பெருஞ்சத்தமிட்டு "குரங்கே, நீ யார்? இங்கே என்ன காரியமாய் வந்தாய்? உன்னுடைய உயிரிருக்கும்போதே உண்மையைச் சொல். நான் ராக்ஷசராசனாகிய இராவணனது கட்டளைப்படி ஒழுகுபவள்; ஒருவராலும் வெல்லமுடியாதவள்; இந்நகரத்தைக் காப்பவள்" என்றாள். இலங்கைமாது சொன்ன வார்த்தையைக் கேட்டு அநுமான் ஒரு மலைபோல அசையாது நின்றான். அவன் விகாரரூபமுடைய அந்த இலங்கைமாதை நோக்கி "இலங்கையினுடைய வனங்கள், உபவனங்கள், காடுகள், பெரிய வீடுகள் ஆகிய இவைகளை நான் பார்க்கவன்றோ வந்தேன்" என்றான். அநுமான் சொன்ன வார்த்தையை இலங்கைமாது கேட்டு, மிகுந்த கோபங்கொண்டு, "குரங்குகளுக்குளிழிந்த, தீய புத்தியுடைய குரங்கே, என்னை வெல்லாது அரக்கர்கோன் பாதுகாப்பிலுள்ள இந்த நகரத்தை உன்னாற் பார்க்க முடியாது" என்று சொன்னாள்.

அவள் பிறகு அச்சந்தரும்படியாகப் பேரொலி செய்து வேகத்தோடு அநுமானைத் தனது கையினால் அறைந்தாள். அடிப்பட்ட வீரனாகிய அநுமான் ஆரவாரித்து அதட்டிக் கோபத்தினாலே தன்னை மறந்து முட்டியால் இலங்கைமாதைக் குத்தினான். பெண்ணென்று நினைத்து அநுமான் அவளை அதிகங் கோபிக்கவில்லை. அவ்விராக்ஷசி அந்த அடியினாலே கைகால் உதறிப் பூமியிலே திடீரென்று விழுந்தாள். அதன்பின் இலங்கைமாது செருக்கு நீங்கி, மிகவும் அச்சமடைந்தவளாய், நாத்

தழுதழுத்து, அநுமானை நோக்கி "பெருந்தோளுடைய வரே, என் மீது அருள்புரியும்; வானரோத்தமரே, என்னைக் காத்தருளும். பெருவலியுடைய குணவான்கள் நெறி தப்பமாட்டார்கள். நானே இவ்விலங்கை நகரம். என்னை நீர் உமது பராக்கிரமத்தால் வென்று விட்டீர். வானரோத்தமரே, எனக்குப் பிரம தேவர் கொடுத்த வரம் இன்னதென்று சொல்லுகிறேன். அந்த உண்மையைக் கேளும். 'நீ ஒரு குரங்கினுடைய பலத்திற்குத் தோற்றுப் போனபோது ராக்ஷசர்களுக்கு கேடுவந்ததென்று அறிந்து கொள்' என்று அவர் சொன்னார். உம்மைக் கண்டதனால் எனக்கு அந்தச் சமயம் வந்துவிட்டது. ஆகையால் இராவணன் அரசாளும் இந்த நகரத்துள் நீர் போய்ச் செய்ய வேண்டிய காரியங்கள் எல்லாவற்றையும் செய்து கொள்ளும்" என்றாள்.

அநுமான், தனது வலிமையினால் பெரிய இலங்கை மாதை வென்றபின் ஒவ்வொரு வீடாகச்சென்று அங் கங்கே பலவித வடிவமடைந்த உறையுள்களைக் கண்டான். இராசவீதியைச் சூழ்ந்து நிற்கும் ராக்ஷச சேனையையும், அதற்கு நடுவிலே திரியும் அநேக ஒற்றர்களையும், சம்மட்டி எடுத்தவர்களையும், இருப்புலக்கை பிடித்தவர்களையும், தண்டாயுதம் தரித்தவர்களையும் கண்டான். பின்பு பொன்னாற் செய்யப்பட்ட பெரிய தோரண வாயிலை யுடையதாகி மலையினுச்சியிலே கட்டப்பட்டு, புகழ் படைத்ததாகிய இராவணனுடைய மாளிகையைக் கண் டான். அதன் பின்னர் கோட்டை வாயிலைக் கிட்டி அந்தப் புரத்தினுள்ளே பிரவேசித்தான்.

33. சீதையைக் காணுதல்

அநுமான் நீண்ட கண்களையுடைய சீதையை அந்த மாளிகை எங்குந் தேடித் திரிந்தான். எவ்விடமும் சுற்றிப் பார்த்து அங்கே சிறந்த படிகத்தினாற் செய்து இரத்தி

ன்ங்களால் அலங்கரிக்கப்பட்டு தேவலோகத்தின்கண்ணுள்ளதுபோல விளங்கின ஒரு படுக்கையிடத்தைக் கண்டான். அதன்மீது சிவந்த கண்களும் நீண்ட கைகளும் அழகிய ரூபமுமுடைய இராவணன் படுத்திருந்தான். அவன், பொன்னுடை புனைந்து, ஒளியுள்ள சிறந்த குண்டலங்கள் தரித்து, மின்னல் செறிந்த செவ்வானம்போன்று விளங்கினன். கிரீடித்துக் களைத்து கள்ளுண்டு ஓய்ந்து அவன் அசைவற்று நித்திரை செய்தான். அந்த வெள்ளிய படுக்கையின்மேலே, திரண்டு, உடலுக்குத் தக்கவைகளாயிருந்த இராவணனுடைய கைகள் பொன்றுற் செய்த தோள்வளை பூண்டன, இந்திரத் துவசம் போன்றன, ஐராவதத்தினது கொம்பின் நுனிகள் பாய்ந்த தழும்புகளுள்ளன, வச்சிராயுதம் உராய்ந்து புடைக்கொண்ட தோள்களுடையன, விஷ்ணுவின் சக்கரத்தினுலே மோதுண்டன, போட்டுக் கிடந்தன. அவ்விதமான பருத்த தோள்களையுடைய அரக்கர்கோன் இரண்டு குவடுகளுடைய மந்தர மலைபோல விளங்கினன்.

இராவணனுடைய காலடியில் அவனுடைய பிரியமுள்ள பத்தினிமார்கள், சந்திரன்போன்ற முகமுடையவர்கள், காதில் அழகிய குண்டலந் தரித்து வாடாத மாலையணிந்தவர்கள் நித்திரை செய்து கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட பள்ளியறையிலே ஒரு தனியிடத்திலே போடப்பட்ட அழகிய படுக்கையின்மேல் ஓரழகிய பெண் முத்துக்களாலும் இரத்தினங்களாலும் இயற்றிய ஆபரணங்களணிந்து படுத்திருந்தாள். அவளை அநுமான் கண்டு அழகும் இளமையும் உடைமையாற் சீதை என்று எண்ணிப் பெருமகிழ்ச்சி அடைந்தான். பின்னர் அந்த எண்ணத்தைப் போக்கிவிட்டு சீதையைப்பற்றி வேறு விதமாக எண்ணினன். "சீதை இராமரைப் பிரிந்து உண்ணவும், உறங்கவும், ஒப்பனை செய்து கொள்ளவும், பானங்களைப் பருகவுந் தக்கவளல்லள். தேவேந்திரனுயி

னும் அந்நிய புருஷனை அவள் அணையமாட்டாள். ஆதலால் இவள் வேறு" என்று அநுமான் நிச்சயித்துப் பான பூமிக்குச் சென்றான். பின்பு அந்தப்புரத்தை அநுமான் ஓரிடமும் விடாது தேடினான்; ஆயினும் அவன் ஜானகியைக் கண்டிலன். அங்குள்ள பெண்களை எல்லாம் கண்ட அநுமான் அதனாலே தனது தருமம் தவறி விட்டதோவென்று பயந்து பெருஞ்சிந்தனையுற்றான். "பிறன் மனைவியர் நித்திரை செய்து கொண்டிருக்கிற இந்த அந்தப்புரத்தைப் பார்ப்பது எனது தருமத்தை அழித்து விடும். விரும்பிப் பார்க்கவில்லையாதலால் எனது மனம் சிறிதும் வேறுபாடடையவில்லை. இன்ப துன்பத் துறைகளிற் புலன்களைச் செலுத்துவது மனம்; அந்த மனம் எனக்கு நிலையிலிருக்கின்றது. நான் சீதையை வேறு எங்கே தேட முடியும்" என்று நினைத்து மறுபடியும் மிக்க முயற்சியோடு அந்தப்புரத்தைத் தேடலுற்றான்.

இராவணனுடைய அந்தப்புரத்திலே அநுமான் செல்லாத இடம் நாலங்குலமளவுகூட இல்லை. மதிலின் இடை வழிகள், அருநிழன் மரங்களைச் சேர்ந்த பீடங்கள், துரவுகள், குளங்கள் முதலிய யாவற்றையும் அவன் தேடினான். எங்குஞ் சுற்றி சீதையைக் காணாது சொல்ல லுற்றான் :—"இராமருக்குப் பிரியமான காரியத்தைச் செய்பவனாய் நான் இந்த இலங்கை முழுவதையும் தேடி விட்டேன்! உருப்புக்களெல்லாவற்றாலும் அழகியவைதேகி யைக்கண்டிலேன். சீதை! விதேகநாடி! மிதிலையர் கோமகள்! ஜனகன் திருமகள்! அவள் இந்தத் துராசாரியான இராவ ணனைக் காமுற்றுச் சேர்வாளா? இராவணன் அவளை எடுத்துக்கொண்டு இராமருடைய பாணங்களுக்கஞ்சி விரைந்து உயரக் கிளம்பும்போது அவள் நழுவி இடையிலே விழுந்து விட்டாள்போலும். இல்லையாயின், இராவணன் எடுத்துக்கொண்டு சித்தர்கள் திரியும் ஆகாய மார்க்கமாகப் போகும்போது அவள் கடலைக் கண்டு

பயந்து விழுந்து விட்டிருக்கவேண்டும். இராவணனுடைய நடையின் வேகத்தாலும் அவனுடைய தோள்களாலே நெருக்கப்பட்டமையினாலும் அந்தத் தடங்கண்ணாள் உயிரைவிட்டிருக்கலாம். இல்லையாயின், அவள் இராவண னுடைய மாளிகையிற் சிறை வைக்கப்பட்டு கூட்டி லடைத்த கிளிபோல வருந்துகின்றாளென்றே எண்ணு கின்றேன். இராமருடைய பத்தினியாகிய புகழ் படைத்த சீதையைக் காணும் வரைக்கும் இந்த இலங்காபுரியை நான் மீட்டும் மீட்டும் தேடுவேன். நான் இனி இங்கேயே உண்டியைச் சுருக்கி ஐம்பொறிகளையுமடக்கி வசிப்பேன். பெரிய மரங்களடர்ந்த அசோக வனமொன்று அதோ தோன்றுகின்றது; அதனை நான் இன்னும் தேடவில்லை."

இவ்வாறு ஒரு முகூர்த்த காலம் சிந்தித்து கவலையாற் பொறிகள் கலங்கி வாயு குமாரனை அநுமான் வெகு ஊக்கத்தோடு எழுந்து,

> போற்றி ராகவன் போற்றி யிலக்குவன்
> போற்றி ஜானகி போற்றி யுருத்திரன்
> போற்றி யிந்திரன் வாயு பொற்றார்யமன்
> போற்றி சந்திரா தித்தர் புத்தேளிரே

என்று இராம லக்ஷ்மணர்களையும் சீதையையும் தேவர் களையும் போற்றி செய்து, சுக்கிரீவனையும் தொழுது, அசோக வனமுள்ள திக்கை முழுதும் நன்றாகப் பார்த்து அங்கே மனத்தைச் செலுத்தி, பின்னர் எண்ணுவா னயினான்.

ஒரு முகூர்த்த காலம் அநுமான் எண்ணமிட்டிருந்து, முதலில் அவ்வசோக வனத்தின்மேல் மனத்தைச்செலுத்தி இராவணனுடைய மாளிகையிலிருந்து மதிலின்மேற் பாய்ந்தான். அவன் மதிலின் மேலிருந்து இளவேனிற் காலத் தொடக்கத்தில் தலை நிறையப் பூத்திருந்த ஆச்சா, அழகிய அசோகம், நல்ல மலர்களுடைய சம்பகம் முதலிய

மரங்களைக் கண்டு, உடலெங்கும் மயிர்ப் புளகங் கொண்டான். இலைகள் பொதுளி, சிறந்த கொடிகள் படர்ந்து, நான்கு புறத்தும் பொற்பீடங்கள் சூழ்ந்து விளங்கிய ஒரு பொன்மயமான சிஞ்சுபா மரத்தை அநுமான் கண்டான். இலைகள் செறிந்த, அந்தச் சிஞ்சுபா மரத்தின் மேல் அவன் ஏறி "இராமரைக் காணும் விருப்பத்தாலே துக்கத்தோடு தன்னிஷ்டப்படி இங்குமங்குந் திரிகிற சீதையை நான் இங்கே காண்பேன். இந்தத் தாமரை யோடையும் பறவைக் கூட்டங்கள் தங்கி மிக வழகாக விருக்கின்றது. இங்கே இராமருடைய தேவி ஜானகி நிச்சயமாக வருவாள்; காட்டிலே திரியவல்ல கற்புடைய ஜானகி நிச்சயமாக வருவாள்" என்று அநுமான் எண்ணி இராமருடைய தேவியைக் காண வேண்டி மலர் நிறைந்த சிஞ்சுபா மரத்தின் இலைச் செறிவிலே மறைந்து கொண்டு அங்குள்ளவைகள் எல்லாவற்றையும் உற்று நோக்கினான்.

சிஞ்சுபா மரத்தின் மேலிருந்து அநுமான் நிலத்தை முழுவதையும் பார்த்தான். பின்னர் அவன் இராக்ஷசிகளுக்கு நடுவிலே அழுக்கடைந்த ஆடையுடுத்து, ஊனின்றி மெலிந்து, அடிக்கடி பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த ஓரேழை மாதைப் பார்த்தான். அவள் சுக்கில பக்ஷத் தொடக்கத்திலே தோன்றும் சந்திர கலைபோலக் குற்றமில்லாதவளாய், அழுக்கடைந்ததான சிறந்த மஞ்சள் புடவையொன்று உடுத்து, புழுதி படிந்து, அலங்காரம் செய்யப்படாது, அதனாலே தாமரையில்லாத தடாகம் போன்று, நாணமடைந்து, துக்கத்தால் வருந்தி, வாட்டமுற்று கண்ணீர் முகத்திலொழுக உணவின்றி மெலிந்து, துயரமும் சிந்தனையும் மிக்கு, இடையீடில்லாத துக்கமுடையவளாகக் காணப்பட்டாள். தன் துற்றுரை காணாது இராக்ஷசிகளையே பார்த்திருந்த அந்தப் பெண் தன்னினத்தை விட்டுப் பிரிந்து நாய்களாற் சூழப்பட்ட மான் போலத்தோன்றினாள். அந்தத் தடங்கண்ணாளை அநுமான்

நன்றாக நோக்கி தக்க காரணங்களைக் கொண்டு "இவள் சீதையே" என்று எண்ணினான். "வேண்டிய உருவ மெடுக்க வல்ல இராவணன் எடுத்துக்கொண்டு போக நாங்கள் கண்ட பெண் இவளே" என்று அவன் கருதினான்.

அவன் வைதேகியின் அவயவங்களில் அணிந்திருந்தன வென்று இராமர் கூறின அணிகலன்கள் அந்த மரக் கிளை களின் மேல் பிரகாசிப்பதைக் கண்டான். நெடுநாள் அணிந்திருந்தமையால் தேய்ந்து கறுத்திருந்த நல்ல வேலைப்பாடுடைய குண்டலங்களையும், நல்ல வடிவமான சுவதண்டிரமென்னும் காதணியையும், மணியாலும் பவளத்தாலும் செய்த பல வகைப்பட்ட கையணிகளையும் அநுமான் பார்த்து "இராமர் சொன்ன ஆபரணங்கள் இவைகளே என்று நான் எண்ணுகிறேன். அங்கே விழுந்து விட்ட ஆபரணங்கள் ஒன்றும் இங்கில்லை. வானரர்கள் மலையின்மேலே நழுவி விழக்கண்ட பொற் றகடு போன்ற ஒளியினையுடைய பீதாம்பர உத்தரீயமும் ஒல்லெனு ஒலிக்கும் விலைபெற்ற சிறந்த ஆபரணங்களும் இவள் எறிந்துவிட்டவைகளே. இந்த வஸ்திரம் நெடுநாள் தரித்திருந்தமையால் கசங்கியிருப்பினும், நிறமும் ஒளியும் வானரர்கள் கண்ட அந்த வஸ்திரம்போன்றதென்பது திண்ணம்" என்று எண்ணினான். சீதையைப் பார்த்துக் களிப்படைந்து இராமரை மனத்தில் நினைத்து அவரைப் புகழ்ந்தான்.

34. இராவணன் சீதையை வேண்டுதல்

அநுமான் பூத்த மரங்கள் செறிந்த அசோக வனத்தில் தேடி வைதேகியைக் கண்டு பார்த்துக் கொண் டிருக்கையில் இரவு கழியச் சிறிது காலம் மாத்திர மிருந்தது. புகழாளனை அரக்கர்கோன் தக்க காலத்தில் எழுந்து, மாலைகள் நழுவி ஆடை நெகிழா நிற்க, சீதையை மனத்தில் நினைத்தான். அவன் மன்மதனாலே சீதையி

னிடத்து மிகவும் மோகம் மூடப்பட்டுக் காமத்தை மனத்தில் அடக்கமாட்டாதவனுயினுன். அவன் ஆபரணங்கள் அணிந்து கொண்டு மிகவும் வியக்கத் தக்கதாயிருந்த அசோக வனத்தினுள்ளே புகுந்தான். சமீபத்தில் வந்த இராவணனை அநுமான் தழை பரந்த மரத்திலிருந்து தழைகளாலும் மலர்களாலும் தன்னை மூடிக் கொண்டு பார்த்து "இவன் இராவணன்" என்று கருதிக் கீழிறங்கினுன்.

அப்போது, அரக்கர் வேந்தனுகிய இராவணனைப் பழிப்படையாத அழகான் மிக்க சீதை கண்டு பெருங் காற்றால் அடியுண்ட வாழைபோல நடுங்கினுள். அவள் தன் வயிற்றைத் தொடைகளினுலும் தனங்களைக் கைகளினுலும் மூடிக் கொண்டு அழுதாள். இராக்ஷசிகள் காவலிலுள்ள சீதையை இராவணன் நோக்கினுன். அவள் கடலில் அமிழ்ந்த மரக்கலம் போலத் துக்கமடைந்தாள். தவமேற்கொண்டு இராவணன் செய்த இழிதகவை மனத்தால் இராமருக்குக் கூறி கைகூப்பி யிரந்துகொண்டிருந்த துன்பமுற்ற தேவதைபோலச் சீதைதோன்றினுள்.

சந்தோஷமற்றுக் கண்டோர் இரங்கத்தக்க நிலைமையிலிருந்த சீதைக்குப் பொருள் பொதிந்த இனிய மொழிகளால் இராவணன் தனது விருப்பத்தை தெரிவிக்கலாயினுன். "தடங்கண்ணுய், நான் உன்னை விரும்புகின்றேன்; காதலீ, அழகி, யாவர்க்கும் இனியாளே, எனக்கு அருள் செய். அச்சமுள்ளவளே, பிறர் மனைவியரை விழைதலும் அவர்களை எவ்விதமாவது வலிந்து பிடித்து வருதலும் அரக்கர்களுக்கியற்கை. ஆயினும் என்னிடத்து விருப்பில்லாத உன்னை நான் தொடமாட்டேன். காமன் தனதிச்சைப்படி என்னுடலை வருத்தட்டும். தேவீ, நீ இங்கே பயப்பட வேண்டாம்; காதலீ, என்னை நம்பு; உண்மையாக என்மேல் அன்பு செய்; இவ்வாறு துன்பத்தால் வருந்த வேண்டாம். ஏகவேணியாயிருத்தலும்,

தரையிற் படுத்தலும், அழுக்காடை தரித்தலும், விசாரப் படுதலும் வீண் பட்டினியிருத்தலும் உனக்குத் தகுந்தன வல்ல. உன்னுடைய இந்த அழகான இளமைப் பருவம் வீணுய்ப் போகின்றதே; விரைந்தோடுகின்ற வெள்ளப் பெருக்குப்போல இது போனுல் வராதே. இந்த அறியா மையை ஒழித்து விடு; எனக்கு மனைவியாகு; பற்பல இடங் களிலிருந்தும் கொண்டு வந்த சிறந்த பெண்களுக்கெல்லாம் நீ எனக்கு முதற்றேவியாவாய். நீ நன்ருக அலங்காரஞ் செய்துக்கொண்டு உன்னிச்சைப்படி போகங்களை அநுபவி; குடி; விளையாடு; இந்த நிலங்களையும் தனங்களையும் எவர்க் காயினும் உன்னிஷ்டப்படிக் கொடு. தையால், மரவுரி யுடுத்த இராமனேடு நீ என்ன செய்யப் போகின்ருய். வெற்றி யழிந்து, செல்வம்போய், காட்டிற்புகுந்து, விரதம் பூண்டு, நிலத்திற் படுத்து திரிகின்ருன் இராமன்; அவன் உயிரோடிருக்கின்ருனே இல்லையோ என்று ஐயமுறுகின் றேன். கொக்குக்கள் சுற்றிப் பறக்கின்ற கரிய மேகத்தால் மறைக்கப்பட்ட நிலவைப்போல இராமனுக்கு நீ காணப் படவும் மாட்டாய். என் கையில் அகப்பட்ட உன்னை பெற்றுக் கொள்ளற்கும் இராமன் அருகனல்லன். அச்ச முள்ளவளே, உன் அழகிய புன்முறுவலும், அழகிய பல்லும், அழகிய கண்ணும், கருடன் பாம்பினைப் பிடித் துக்கொண்டு போமாறுபோல என் மனத்தை வாரிக் கொண்டு போகின்றன" என்று சீதையை இராவணன் இரந்தான்.

இராவணன் கூறிய வார்த்தையைக்கேட்டு, சீதை ஒரு துரும்பைத் தனக்கும் இராவணனுக்கும் இடையி லிட்டு, புன்முறுவல்கொண்டு விளம்பலுற்ருள் :—"என் னிடத்திலிருந்து உன்மனத்தை மீட்டுக்கொள்; உன் மனை வியர்களிடத்திலே மனதைச் செலுத்து; பாபஞ் செய்த வன் நல்லமோக்ஷத்தை விரும்புதல் போல, நீ என்னை விழைவது தகாது. நற்குலத்திற் பிறந்து, நற்குலத்திற்

புகுந்து, ஒருவருக்கு மனைவியாகிய எனக்கு பழிப்புக்கிட மான செய்யத் தகாத காரியத்தைச் செய்தல் அடாது. நான் பிறன் மனைவி; கற்புடையவள்; உனக்கு மனைவி யாகத் தகுந்தவளல்லள். நீ சான்ருேரறத்தைக் கடைப் பிடித்து சான்ருேர் ஒழுக்கத்தை மேற்கொள். ஏ நிசாசர, உனது மனைவியர்கள் எவ்வாறு கற்பினைக் காக்கவேண் டுமோ அவ்வாறு பிறர் மனைவியர்களும் கற்பினைக்காக்க வேண்டியவர்களன்ருே? நீ உன்னையே இதற்குபமான மாக வைத்துக்கொண்டு உன்னுடைய மனைவியர்களைக் கூடி இன்பமுறு. இராவணா, துன்பமுழக்கும் என்னை நீ இராமரோடு சேர்த்துவிடு. இவ்வாறு என்னை இரகு குலோத்தமனிடத்து கொடுப்பாயானல் உனக்கு நன்மை உண்டாகும்; வேறுவினை செய்வாயானல், நீ மாண்டு போவாய். அரக்க, இராக்ஷசசேனை மாய்ந்து ஜனஸ் தானமும் அழிந்தபோது அவற்றைக் காக்க வலியில்லாத நீ இந்தத் தீத்தொழிலைச் செய்தாய். சிங்கவேறுகள் போன்ற தமையன் தம்பிமார் இருவரும் வெளியே போயிருந்தபோது நீ அவர்களுடைய காவலற்ற ஆசிரமத் துள்ளே புகுந்து, அதம, என்னை எடுத்து வந்தாய். இராம லக்ஷ்மணர்களுடைய மணம்பட்டவுடன், புலியின் மணம் பட்ட நாய்போல நீ அவர்கள் கண்ணுக்கெதிரில் நிற்க வலியுடையையல்லை. எனது நாயகரான இராமர் இலக்ஷ் மணரோடு சேர்ந்து சூரியன் சிறிது நீரைக் காய்ந்தாற் போல, உனது உயிரைத் தமது பாணங்களாற் சீக்கிரம் வாங்கிவிடுவார்'' என்று சீதை கூறினள்.

இராவணன் சீதை கூறிய கடுஞ்சொற்களைக் கேட்டு அக் கண்ணுக்கினியாளுக்கு கொடிய மறுமொழி பகர்த லுற்று ''மைதிலீ, நீ இங்கே என்னைக் கூறும் கடுஞ்சொல் ஒவ்வொன்றுக்கும் உன்னைக் கடுங்கொலை புரியத்தகும். நான் உனக்கு குறித்தகாலத்தில் இன்னும் இரண்டு மாத முள; அதற்குள், நல்லாய், நீ எனது கட்டிலில் ஏறிவிடு

இரண்டு மாதம் கழிந்தபின் நீ என்னைக் கணவனாகக் கொள்ளாதொழிவாயாயின் உன்னை எனக்குக் காலையுணவிற்காக அடுக்களையில் வெட்டிவிடுவார்கள்" என்று கூறினான்.

பின்னர் இராவணன் அங்குள்ள குரூரமான தோற்றமுள்ள இராக்ஷசிகளை விளித்து "நீங்கள் எல்லீரும் ஒன்று சேர்ந்து இந்தச் சீதையை சீக்கிரம் எனக்கு வசப்பட்டவளாகச் செய்யவேண்டும். அவளுக்கு ஒத்துப் போயும், ஒவ்வாது நடந்தும், கொடுத்தல் இன்சொற் சொல்லல் முதலிய உபாயங்களைச் செய்தும், ஒறுக்க முயன்றும் அவளைத் திருப்புங்கள்" என்று கட்டளையிட்டு ஒளியுடைய சூரியனைப்போல பொலிவுற்று விளங்கிய தனது மாளிகைக்குப் போயினான். இராவணன் போய் அந்தப்புரத்தையடைய, பயங்கரமான ரூபமுடைய இராக்ஷசிகள் சீதையை உறுத்தத்தொடங்கினார்கள். சீதை பயங்கரமான இராக்ஷசிகளாற் பயமுறுத்தப்பட்டுத் தைரியமிழந்து அழுதாள்.

இவ்வாறு அந்தக்கொடிய அரக்கிகள் ஈரமின்றிக் கடுஞ்சொற் கூற ஜனகன் மகள் மிகவும் பயந்து நாத் தழுதழுத்து "மானுடப்பெண் அரக்கனுக்கு மனைவியாதற் குரியளல்லள். என்னை நீங்கள் எல்லீரும் உங்கள் விருப்பப்படி தின்னுங்கள்; நான் உங்கள் சொற்படி செய்யேன்" என்று சொன்னாள். அவள் பூத்திருந்த அசோக மரத்தின் பெரிய கிளை ஒன்றைப் பிடித்துக் கொண்டு கவலையாற் செயலற்று தனது நாயகனை நினைத்தாள். அவ்வாறு நின்ற சீதையினுடைய நீண்ட பெரிய கூந்தல் நடுக்கமுற்று ஓடின பாம்பு போலத் தோன்றிற்று. அவள் பெருமூச்சுவிட்டு, துன்பமேலிட்டு, மனமிடிந்து, வருந்தி, கண்ணீர்விட்டு அழுதாள்.

அவள் "ஆ இராமா!" என்றாள்; மறுபடி "ஆ இலக்ஷ்மணா!" என்றாள்; "ஆ மாமீ கௌசலை! ஆ சுமித்திரை!"

என்முன். "ஆணுக்காவது பெண்ணுக்காவது காலம் வாராமல் மரணம் வராது என்று பண்டிதர்கள் நன்ருகச் சொன்னார்கள். இந்த உலக வார்த்தை உண்மையே. ஏனெனில், நான் இவ்வாறு கொடிய இராக்ஷசிகளால் இங்கே வருத்தமடைந்து, இராமரைப் பிரிந்து, கவலையுற்றும் இறந்து போகாது ஒரு முகூர்த்தகாலமாவது உயிரோடிருக்கின்றேனே. நான் முற்பிறப்பிற் செய்த பாவம் எப்படிப்பட்டதோ?. அதனாலன்றோ நான் இந்த மிகக் கொடிய துக்கத்தை அடைந்தேன்! நான் இந்தப் பெரிய துக்கத்திலே முழுகி உயிரை விட்டுவிட விரும்புகின்றேன்.

"இராகவர் அறிவுள்ளவர்; நன்றியறிவுள்ளவர்; அருளுள்ளவர்; ஒழுக்கமுள்ளவர் என்று பெயர் படைத்தவர். அத்தகையாருக்கு என்னிடத்தில் அருளில்லாது போனது எனது புண்ணியக் கேட்டினாலென்றே எண்ணுகின்றேன். ஜனஸ்தானத்திலே பதினாயிரம் இராக்ஷசர்களைத் தாமே தனிநின்று கொன்றவர்! அவர் ஏன் என்னை அடையாதிருக்கின்முர்? இராமர் திடமான வலியுள்ளவர்; அவர் அரக்கன் பற்றின் தமது பிரிய நாயகியை மீட்டுக்கொள்ளாதிருப்பதற்குக் காரணமென்னே? அவரைக் கொடிய இராவணன் வஞ்சித்துக்கொன்று விட்டானே?

"நான் இங்கிருப்பது அவருக்குத் தெரியாதென்றே எண்ணுகின்றேன். தெரிந்தால், தமக்கு நேர்ந்த அவமானத்தை அவ்வீரர் பொறுத்திருப்பாரா? நான் பிடிபட்டதைப்போய் இராமருக்கு அறிவிக்கவல்ல கழுகரசனாகிய சடாயுவையும் இராவணன் யுத்தத்திற் கொன்றுவிட்டான். நான் இங்கிருப்பதை இராமர் அறிவாராயின் கோபமூண்டு இப்போதே தமது பாணத்தினால் உலகத்தில் இராக்ஷசர் இல்லை என்னும்படி செய்துவிடுவார்;

நீசனுகிய இராவணனுடைய பெயரையும் புகழையும் நாச மாக்கி விடுவார். விரைவில் இந்த இலங்கை சுடுகாடு போலாகிவிடும். வீடுகள் தோறும் இராக்ஷசிகள் துன்பத் திலே முழுகி அழுகின்ற அழுகையைச் சிறிது காலத்திலே நான் கேட்கப் போகின்றேன்; இது நிச்சயம். ஊன் தின்னி களாகிய இந்த அரக்கர்கள் தருமம் அறியார்கள்; என் னைக் காலையுணவிற்கு மெய்யாகவே சமைத்துவிடுவார்கள். எனக்கு யாராவது இங்கே விஷங்கொடுப்பவர்கள் இருந் தால் நான் சீக்கிரமாக யமனைக் காண்பேன்." என்று சீதை புலம்பினுள்.

கொடிய இராக்ஷசிகள் சீதையை வெருட்டுவதை அங்கே படுத்திருந்த திரிசடை என்னும் இராக்ஷசக் கிழவி பார்த்து "என்னைத் தின்னுங்கள்; ஜனகனுடைய புதல்வி யும் தசரதனுடைய மருமகளுமாகிய சீதையைத் தொடா தீர்கள். அவளுடைய நாயகனுக்கு ஆக்கமும் இராக்ஷசர் களுக்கு அழிவும் குறித்த கொடிய கனவொன்று இப் போது நான் கண்டேன்; அதனை நினைக்க மயிர் சிலிர்க் கின்றது. இராமர் இலக்ஷ்மணரோடு வெள்ளை வஸ்திரந் தரித்து, வெள்ளை மாலை யணிந்து, ஆயிரம் அன்னங்கள் தாங்கப்பெற்ற யானைத் தந்தத்தாற்செய்த சிறந்த சிவி கையில் ஏறி ஆகாசமார்க்கமாக வந்தார். சீதையும் வெள்ளைக் கலை உடுத்து கடல்சூழ்ந்த ஒரு வெள்ளை மலை யின்மேல் ஏறி இராமரைச் சேர்ந்து சூரியனைச் சேர்ந்த ஒளி போல விளங்கினுள். பின்பு இராமர் தம்பி இலக்ஷ்மண ரோடும் சீதையோடும் சூரியன்போன்ற ஒளியுடைய சிறந்த புஷ்பக விமானத்திலேறிக்கொண்டு வடதிசையை நோக்கிச் செல்லக்கண்டேன். இராவணன் புஷ்பக விமா னத்திலிருந்து பூமியில் விழக்கண்டேன். சிவந்த வஸ்திரந் தரித்த ஒரு கறுத்த நிறப்பெண், உடலெல்லாம் அழுக்குப் படிந்தவள், அவனைக் கழுத்திலே கட்டிப் பிடித்து தென் றிசைக் கிழுத்தாள். இவ்வாறே கும்பகர்ணனுக்கும் நிக

முக்கண்டேன். இராவணனுடைய பிள்ளைகளெல்லாரும் தலையை மொட்டையடித்து எண்ணெய் வார்த்துக்கொண்டிருக்கக் கண்டேன். அந்தக்கனவில் விபீஷணன் ஒருவனே வெண்குடையின் கீழ் நிற்கக்கண்டேன். அவன் வெள்ளையாடை உடுத்து வெள்ளைமாலை புனைந்து, வெண் சந்தனம் பூசி, சங்கு முழங்க, துந்துபி ஒலிக்க, ஆடலும் பாடலும் நிகழ, மேகம்போல முழங்கிய நான்கு கொம்புகளையுடைய மலைபோன்ற ஒரு சிறந்த யானையின்மேலேறி நான்கு மந்திரிகளோடு ஆகாயத்திலே நின்றான். இராவணனாற் காக்கப்படும் இவ்விலங்கையை இராமருடைய தூதனை வலியகுரங்கொன்று எரித்துவிடவுங் கண்டேன். நீங்கள் கடுஞ்சொற் சொன்னது போதும்; இனி இன்சொற் பேசுங்கள்; சீதையைப் பொறுதி கேட்டுக் கொள்ளுங்கள். இதுதான் நீங்கள் செய்யத்தகுந்ததாக எனக்குத் தோன்றுகின்றது. நான் இவ்வாறு கனவுகண்ட சீதை எல்லாத் துக்கங்களும் நீங்கி ஒப்புயர்வில்லாத தன் காதலனை அடையப்போகின்றாள். அவளுடைய தாமரையிதழ் போன்ற நெடியகண் துடிக்கின்றது; அவளுடைய இடத்தோளும் திடீரென்று சிறிது புளகங்கொண்டு துடிக்கின்றது. இவை அவள் நல்ல சமாசாரம் கேட்கப் போகின்றாளென்பதற்கு நிமித்தமாயிருக்கின்றன. அவளது யானைத் துதிக்கை போன்ற சிறந்த தொடை துடிப்பது இராகவர் எதிரில் வந்துவிட்டார் என்பதைக்காட்டுகின்றது." என்று திரிசடை கூறினாள்.

சீதை இராக்ஷசிகள் நடுவில் அகப்பட்டு இராவணனால் வெருட்டப்பட்டு மனித சஞ்சாரமில்லாத காட்டிலே விடப்பட்ட இளம்பெண்போல அழுதாள். "ஆ இராமா! சத்தியவிரத! நெடுந்தோளாய்! முழுமதி முகத்தாய்! நீர் உயிர்களுக்கெல்லாம் நன்மை செய்பவராயிற்றே! நான் அரக்கர்களால் வதைக்கப்படுவதை நீர் அறியீரோ? உம்மையன்றி வேறு தெய்வமில்லை என்ற என் கொள்

கையும் எனது பொறையும், நான் தரையிற்படுத்ததும், தருமந்தவருது நின்றதும், எனது கற்பும் எல்லாம், நன்றி கொல்பவனுக்குச் செய்த உபகாரம்போல, பயனற்றன வாய்ப் போயின. நான் உம்மைக் காணுது மெலிந்து, நிறம் வெளுத்து, ஏழையாய், உம்மைக்கூடுவேன் என்ற ஆசையும் இழந்துவிட்டேன்; ஆதலால் நான் செய்த தரும மும் எனது கற்பும் எல்லாம் வீணுய்ப்போயின. புண்ணி யங்கெட்ட நான் உம்மிடத்தில் ஆசைகொண்டு, அழிவின் பொருட்டு உம்மிடத்து நெடுங்காலம் என் மனத்தைச் செலுத்தி, வீணுகத் தவங்களையும் விரதங்களையும் அநுட் டித்து, ஆ கெடுவேன்! என் உயிரை விடுகின்றேன்." என்று சீதை பலவாறு புலம்பி சிந்தித்து, பின்னியிருந்த தன் கூந்தலைக் கையிற்பற்றி "இந்தப் பின்னலைக் கழுத்தி லிட்டுத் தூக்கி விரைவிலே நான் யமன் சந்நிதியை அடை வேன்" என்று எண்ணி, அந்த மரத்தின் கிளை ஒன்றை பிடித்துக்கொண்டு நின்ருள்.

அப்போது நன்மை குறிப்பனவும், தைரியங் கொடுப் பனவும் நன்மை பயந்தனவுமான பல நற்சகுனங்கள் காணப்பட்டன. வளைந்த இமைகள் சூழ்ந்து, கறுத்து, அகன்று, வெளுத்து, கடை சிவந்த, அவளுடைய அழகிய இடக்கண், மீனுலசைந்த தாமரை மலர்போலத் துடித்தது. அழகமைந்து பருத்துத்திரண்ட அவளது இடத்தோ ளும் துடித்தது. இவ்வித நன்னிமித்தங்களால் சீதை தேற்றமுற்று, காற்றினுலும் வெயிலினுலும் வாடிக்கிடந்த வித்து மழையினுலே தளிர்ப்பதுபோல, மனக்கிளர்ச்சி யடைந்தாள். கொவ்வப்பழம்போன்ற வாயும், அழகிய புருவமும், வளைந்த கண்ணிமையும் கடை குழன்ற கூந் தலும், அழகிய வெண்பல்லுமுடைய சீதையின் முகம் இராகுவின் வாயிலிருந்து விடப்பட்ட சந்திரன்போலப் பிரகாசித்தது.

ஆண்மையுடைய அநுமான் இராக்ஷசிகள் வெருட்டினதையும், சீதை புலம்பினதையும், திரிசடை இராக்ஷசிகளுக்குக் கூறின கனவையும் எல்லாம் கேட்டான். இந்திரனுடைய நந்த வனத்திலுள்ள தெய்வப்பெண்போல அவ்வனத்திலிருந்த சீதையை அநுமான் பார்த்துப் பல ஆலோசனைகள் செய்து சீதைக்குக் கேட்கும்படி இனிய வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கினான். அவன் "அரசனுவான் தசரதன் என்பான், ரத கஜ துரகமுடையான், புண்ணிய சீலன், மிகுபுகழாளன், நேர்மையாளன். அவனுடைய அன்புள்ள மூத்த மகனுவான் இராமன் என்பான். அவன் சந்திரன்போன்ற முகமுடையவன்; பேரறிவாளன்; வில்வீரர்களுட்சிறந்தவன். அவன் சத்தியத்தைக்காக்க விரும்பி மூப்படைந்த தனது தந்தையின் சொல்லால் மனைவியோடும் தம்பியோடுங் காட்டுக்குச் சென்றான். அவன் அப்பெருங்காட்டிலே வேட்டையாடித் திரிந்து வேண்டிய உருவமெடுக்கவல்ல வலிய அரக்கர்கள் பலரைக்கொன்றான். ஜனஸ்தானம் அழிந்ததையும் கரதூஷணர்கள் கொலையுண்டதையும் கேள்வியுற்று இராவணன் கோபங்கொண்டு, காட்டிலே மாயமானை ஏவிவிட்டு, இராமனை வஞ்சனை செய்து, ஜானகியைக் கவர்ந்து சென்றான். இராமன் குற்றமில்லாத தனது தேவியைத் தேடித்திரிகையில் காட்டிலே சுக்கிரீவன் என்பான் ஒரு வானரனை நண்புகொண்டான். சுக்கிரீவனால் ஏவப்பட்டு வேண்டிய வடிவ மெடுக்கவல்ல வானரர்கள் எல்லாத் திக்கிலும் இராமன் மனைவியைத் தேடுகின்றார்கள். நான், சம்பாதியினுடைய சொல்லால், அந்தத் தடங்கண்ணாள் காரணமாக, நூறு யோசனை அகலமுள்ள இந்தக் கடலை வேகத்தோடு கடந்தேன்; இராகவன் கூறிய வடிவும் நிறமும் திருவுமுடையாளை இங்கே கண்டேன்" என்று சொல்லிவிட்டுப் பேசாதிருந்தான்.

35. சீதை அநுமானைக் காணல்

சீதை அந்தச் சொற்களைக் கேட்டு மிகவும் ஆச்சரியம் அடைந்தாள். பின்பு அச்சமுற்று முகத்தை உயர்த்திச் சிம்சுபா விருக்ஷத்தைப் பார்த்தாள். தனக்கு இன்பத்தைக் கொடுத்த சொற்களைச் சொன்ன குரங்கு அங்கே மறைந்துகொண்டு உருக்கின பொன்போன்ற கண்களோடு விரிந்த அசோக மலர்க்குவைபோல விளங்கி தன்னைக் குறுகி வணக்கத்தோடு நின்ற அநுமானைப்பார்த்து இது கனவோ என்று எண்ணினாள்.

வலியாற் சிறந்த அநுமான் மரத்தினின்றும் இறங்கி, பணிவு தோன்றிய ஏழை வேஷத்தோடு சீதையைக் குறுகி வணங்கி, தலைமேற்கைகூப்பி, இனியசொற்களாற் பேசலுற்று "மாசில்லாதவளே, கசங்கிய பட்டுடுத்து மரத்தின் கிளையைப் பற்றி நிற்கின்றாய்; தாமரை மலர்களையுடையாய், நீ யார்? தாமரை மலர்களினின்று சிதறுகின்ற நீர்போல உனது கண்களினின்று துன்பத்தினாலே தோன்றிய கண்ணீர் பெருகுவது எதன் பொருட்டு? அழுவதனாலும், பெருமூச்சு விடுவதனாலும், கால் நிலந் தோய்தலாலும், ராஜ லக்ஷணங்கள் அமைந்திருத்தலாலும் நான் உன்னைத் தெய்வப் பெண்ணென்று எண்ணவில்லை. உன்னுடைய அவயவங்களையும் இலக்ஷணங்களையும் பார்த்து உன்னை ஓரரசன் கோப்பெருந்தேவி என்றும் கோமகள் என்றும் எண்ணுகிறேன். இராவணன் ஜனஸ்தானத்திலிருந்து வலிந்து கவர்ந்துவந்த சீதை நீயாயின், உனக்கு நன்மை உண்டாகுக. உன்னை வினவுவோனுக்கு அதனைச் சொல்லு. உன்னுடைய ஏழைமையாலும், மக்களின் மிக்க அழகாலும், தவவடிவத்தினாலும் நீ இராமருடைய தேவியாவது நிச்சயம்" என்று கூறினான்.

சீதை அநுமானுடைய சொற்களைச் செவியிற் கொண்டு, இராமருடைய புகழைக் கேட்டுக் களிப்புற்று மரத்தைச் சார்ந்து நின்ற அவனை நோக்கி "பூமியிலுள்ள

அரசர்களுக்குள்ளே சிறந்தவனாகிய, பகைவரது படையைப் பதைக்கவாட்டுந் தன்னுணர்வுடைய தசரதனுக்கு மருமகள் யான். விதேகர் கோனாகிய ஜனகனுக்கு மகள்; அறிவுடைய இராமருக்கு மனைவி; சீதை என்று பெயர் கூறப்படுவேன்" என்று கூறினாள்.

அநுமான் சீதையின் வார்த்தையைக் கேட்டு, அவளை ஆற்றுவித்தற்கேற்ற மறுமொழி சொல்லலுற்று "தேவீ, நான் இராமருடைய கட்டளையின்படி உம்மிடத்து வந்த தூதன். இராமர் சுகமேயிருக்கின்றார். அவர் உம்க்குத் தமது சுகஞ்சொன்னார். உமது நாயகருக்கு அன்பனும் உடனுறைபவனுமாகிய இலக்ஷ்மணனென்னும் பெருவிறலாளன் சோகத்தால் வாடி உம்மைத் தலையால் வணங்குகின்றான்" என்றான். சீதை இராம லக்ஷ்மணர்களுடைய சுகத்தைக் கேட்டு மனமகிழ்ந்து, உடலெங்கும் மயிர் சிலிர்த்து, அநுமானை நோக்கி "உயிருடனிருந்தார் நூறு வருடம் சென்றாலும் இன்பமெய்துவர் என்னும் சான்றோர் வாக்கு உண்மை என்றே எனக்குத் தோன்றுகிறது" என்று சொன்னாள். அதைக்கேட்டலும் அநுமானுக்கு மிகவும் பெரிய சந்தோஷமுண்டாயிற்று. பின்பு நம்பிக்கை உண்டாகி, சீதையும் அநுமானும் ஒருவரோடொருவர் பேசத் தொடங்கினார்கள்.

அவள் அவனை நோக்கி பெருமூச்சுவிட்டு இனியகுரலால் "நீ இராமருடைய தூதனாக வந்தவனாயின் உனக்கு நன்மை உண்டாகுக. நான் உன்னை வேண்டிக்கொள்ளுகின்றேன்; இராமருடைய கதையைக் கேட்பது எனக்குப் பிரியம்; எனது நாயகருடைய குணங்களை சொல்லு." என்று கூறினாள். அநுமான் செவிக்கினிய சொற்களால் அவளை மகிழ்விப்பானாயினான். அவன் "இராமர் குபேரனைப்போல எல்லா உலகங்களுக்கும் அரசர்; அதி சீக்கிரமாக அவ்வீரர் கோபங்கொண்டு எரிகின்ற அக்கினி போன்ற தனது பாணங்களைச் செலுத்தி இராவணனைப்

போரிலே கொல்லப் போகின்றார். அவர் அனுப்பின தூது வனாக நான் உம்மை இங்கு வந்தடைந்தேன். உம்முடைய பிரிவினாலே துன்பம் மீதூர்ந்துள்ள இராமர் உமக்குச் சுகஞ் சொன்னார். சுமித்திரை புத்திரராகிய பெருவிற லுடைய இலக்ஷ்மணரும் உம்மை வணங்கி உமக்குச் சுகம் சொன்னார். அன்னாய், இராமருக்கு நண்பனான வானர வேந்தன் சுக்கிரீவனும் உமக்குச் சுகம் சொன்னான். இராமர் சுக்கிரீவனோடும் இலக்ஷ்மணரோடும் உம்மை எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கின்றார். தெய்வா தீனத்தால் நீர் இராக்ஷசிகள் வசமடைந்தும் பிழைத்திருக் கின்றீர். நீர் சீக்கிரத்தில் இராமரையும் இலக்ஷ்மணரை யும் வானரகோடிகளுக்கு நடுவிலுள்ள அளவிலாற்ற லுடைய சுக்கிரீவனையும் பார்ப்பீர். நான் சுக்கிரீவனுக்கு மந்திரியாவேன்; அநுமான் என்னும் பெயருடைய வான ரன்; பெரிய கடலைத் தாவி இலங்கை நகருக்கு வந்தேன். நான் சொல்வதை நம்பும்'' என்றான்.

அநுமான் கூறிய இராமன் கதையைச் சீதை கேட்டு இனியகுரலாற் பேசலுற்று ''இராமரோடு நீ எவ் வாறு சேர்ந்தாய்? இலக்ஷ்மணரை நீ எப்படி அறிவாய்? வானரர்களுக்கும் நரர்களுக்கும் கூட்டுறவு எங்ஙனம் உண்டாயிற்று''? என்று கேட்டாள். சீதை இவ்வாறு சொல்ல அநுமான் இராமருடைய இலக்ஷணங்களை விரி வாக எடுத்துரைத்தான். சீதை இவ்விதமான ஏதுக் களாலே நம்புமாறு செய்யப்பட்டு, தக்க அடையாளங்கள் கொண்டு அநுமானை அறிந்து ஆனந்தக்கண்ணீர் பெருக் கினாள்.

மறுபடியும் மிக்க வலியுள்ள அநுமான் சீதைக்கு நம்பிக்கை உண்டாகுமாறு வணக்கமாக ''எம்பெரு மாட்டீ, இதோ இராமருடைய பெயர் பொறித்த மோதி ரத்தைக் கண்டருளும். உமக்கு நம்பிக்கைக்காக இராமர் இதனைக் கொடுத்தார்; நான் வாங்கிக்கொண்டு வந்

தேன்". என்று சொன்னான். தனது நாயகன் கையிலணிந்திருந்த மோதிரத்தை சீதை வாங்கிப்பார்த்து தனது நாயகனைக் கண்டாற்போல் சந்தோஷமடைந்தாள். நீண்டு வெளுத்து கடை சிவந்த கண்களையுடைய அவளது முகம் இராகுவின் வாயினின்று விடப்பட்ட சந்திரன்போல விளங்கிற்று. பின்னர் அவள் சிறிது நாணமுற்று, நாயகனுடைய செய்தியைக் கேட்டுக் களித்து, மகிழ்கூர்ந்து, அநுமானை நன்மதித்துப் புகழ்ந்தாள். "வானரோத்தம, நீ ஆண்மையுடையை; ஆற்றலுடையை; அறிவுடையை. ஆதலானன்றோ நீ தனியே இந்த இராக்ஷச நகரத்தின் அரணைக்கடந்தனை? வானரத் தலைவ, நான் உன்னை சாதாரணமான வானரனென்று எண்ணவில்லை. ஏனெனில் இராவணனிடத்தில் உனக்குப் பயமுமில்லை; தடுமாற்றமுமில்லை. நீ என்னுடன் பேசத்தகும். இராமர் துன்பப்படவில்லையா? அவர் பரிதவியாதிருக்கின்றாரா? அவரைப் பிரிந்து தூரத்தில் வசிக்கும் என்னிடத்து அன்பு நீங்கிவிட்டாரா? என்னை இந்த துக்கத்திலிருந்து நீக்குவாரா?" என்று சொல்லிவிட்டு சும்மாவிருந்தாள்.

அஞ்சத்தக்க ஆண்மையுடைய அநுமான் சீதை சொன்னதைக் கேட்டுத் தலையிற் கைகுவித்து மறுமொழி சொல்லலுற்றான். "தாமரைக் கண்ணாய், நீர் இங்கிருப்பதை இராமர் அறியார்; இனி என் வார்த்தையைக் கேட்டவுடன் அவர் குரங்குகளும் கரடிகளும் நிறைந்த பெரிய சேனையைக் கூட்டிக்கொண்டு சீக்கிரம் வருவார். வைதேகி, சுவர்க்கலோகத்தின் உச்சியில் வீற்றிருக்கும் இந்திரன்போல பிரஸ்ரவண மலையின்மேல் வீற்றிருக்கும் இராமரை நீர் காண்பீர். அவருக்கு எப்போதும் உமதெண்ணமே; எப்போதும் துக்கமே. அவர் சிறிதும் வேறொன்றையும் எண்ணுவதில்லை; காதலின் வசப்பட்டிருக்கின்றார். அவருக்கு ஒருபோதும் நித்திரையில்லை. சிறிது நித்திரை கொண்டாலும் "சீதை" என்ற இனிய

சொல்லைச் சொல்லிக்கொண்டு எழும்பிவிடுவார். பூவையோ, பழத்தையோ, அழகிய பொருள் வேறொன்றையோ பார்த்தால் பலமுறை பெரு மூச்சு விட்டு "ஆ காதலீ" என்று உம்மை அழைப்பார்." என்று அநுமான் கூறினன்.

சீதை அதுகேட்டு அநுமானுக்கு அறமும் பொருளும் வாய்ந்த வார்த்தைகள் கூறினள். "வானர, நீ சொன்ன வார்த்தை விஷங்கலந்த அமிர்தம் போன்றிருக்கின்றது. கடலில் ஓடி அலைகழிக்கின்ற உடைந்த மரக்கலம்போல இராமர் இந்தத் துக்கத்தின் கரையைக் காணுவது எப்போது? இராக்ஷசர்களைக்கொன்று இராவணனை நாசம் செய்து இலங்கையையும் அழித்து என் நாதர் என்னை எப்போது காண்பார்? அவரை விரைந்து வரச்சொல். இந்த வருஷம் முடிமளவுந்தான் நான் உயிரோடிருப்பேன். கொடிய இராவணனால் எனக்குக் குறிக்கப்பட்ட காலத்திற் பத்தாவது மாசம் இப்போது நடக்கிறது. மிச்சம் இரண்டு மாதந்தான் உள்ளன" என்றாள்.

இராமர் பொருட்டுத் துன்பத்தினாலே மெலிந்து கண்ணீர் விட்டுக்கொண்டு இவ்வாறு கூறின சீதையை நோக்கி அநுமான் சொல்லலுற்றான். "என்து சொல்லைக் கேட்டவுடனே இராகவர் குரங்குகளுங் கரடிகளும் நிறைந்த சேனையைக் கூட்டிக்கொண்டு வருவார். இல்லையாயின், இந்தத் துன்பத்திலிருந்து நான் உம்மை இப்போதே விடுவிக்கிறேன்; மாசில்லீர், நீர் என் முதுகின்மீது ஏறியருளும். ஓமஞ்செய்த அவிசை இந்திரனிடத்து சேர்ப்பிக்கும் அக்கினியைப்போல பிரஸ்ரவணமலையின் மேலிருக்கும் இராமரிடத்து நான் உம்மைச் சேர்ப்பேன். இராமரையும் இலக்ஷ்மணரையும் நீர் இதோ காண்பீர்" என்றான். அநுமானுடைய இந்த அற்புதமான வசனத்தைக் கேட்ட சீதை சந்தோஷமடைந்து தேகமெங்கும் புளகங்கொண்டு "அநுமான், என்னை எடுத்துக் கொண்டு நெடுவழி போக நீ எப்படி எண்ணுவாய்? இதுதான் உனது

குரங்குத் தன்மை என்று எண்ணுகின்றேன். வானரோத்தம், சிற்றுருவமுடைய நீ என்னைக் கொண்டுபோவதற்கு எப்படி எண்ணுவாய்" என்று சொன்னாள்.

சீதை சொன்னதைக்கேட்டு அநுமான் சீதைக்கு நம்பிக்கையுண்டாகும் பொருட்டு உடலை வளர்க்கத் தொடங்கினான். அவன் மேருமலையும் மந்தரமலையும் போலப் பருத்து, எரிகின்ற அக்கினிபோல ஒளியுடைய வனாகி சீதைக்கு முன்பு நின்றான். பயங்கரமான தோற்றத்தையுடைய அநுமானைச் சீதை பார்த்து "மீண்டு போவதற்கு மாத்திரமன்றி என்னையும் எடுத்துக் கொண்டு செல்வதற்கும் உனக்கு ஆற்றல் உண்டென்று நான் அறிவேன். ஆயினும், பெருமையிற் சிறந்த இராமரது காரியத்தை முடிக்கும் விதத்தை விரைந்து விசாரிக்க வேண்டியது அவசியம். வானரோத்தம, உன்னோடு போவது எனக்கு முடியாது; வாயுவேகம் போன்ற உனது வேகத்தால் நான் மூர்ச்சை அடைந்து விடுவேன். நான் கடலுக்கு மேலே ஆகாயத்தை அடைந்து வேகமாகச்செல்லுகின்ற உன்னுடைய முதுகிலிருந்து பயத்தினால் விழுந்து விடுவேன். நான் அவ்வாறு கடலில் விழுந்து செயலற்று அதில் வாழுந் திமிங்கிலம், முதலை, மீன் முதலிய விலங்குகளுக்கு விரைவில் இரையாய் விடுவேன். ஆதலால் உன்னோடு போவதற்கு நான் ஒருப்படமாட்டேன். வானரோத்தம, மேலும் என்னுடைய பதிவிரதத்தன்மையை முன்னிட்டு இராமரல்லாத மற்றொரு ஆண்மகனை நான் தீண்டமாட்டேன். நான் முன் இராவணனுடைய உடலைத் தீண்டினது பலாத்காரத்தினாலாயிற்று; காப்பாரின்றி தன்வயமழிந்து செயலற்ற யான் என்ன செய்வேன்? இராமர்வந்து இராவணனை சுற்றத்தாரோடுங்கொன்று என்னை இங்கிருந்து மீட்டுக்கொண்டு போவதுதான் அவர் பெருமைக்குத் தக்கதாயிருக்கும்." என்றாள்.

அநுமான் அந்த வார்த்தைகளைக் கேட்டு சந்தோஷமுற்று சீதையை நோக்கிக் கூறலுற்றான். "எம்பெருமாட்டி, நீர் சொன்னவைகள் எல்லாம் பொருந்தும்; அவை பெண்தன்மைக்கும் கற்புடைமகளிர் ஒழுக்கத்திற்குந் தக்கவைகளே. அன்றைய், என்முன்னர் நீர் சொன்னவைகளையும் செய்தவைகளையும் எல்லாம் ஒன்றும் தவறாமல் இராகவர் கேட்பார். மாசில்லீர், என்னோடு வரவிரும்பீராயின், இராகவர் உம்மை அறியத்தக்க ஓர் அடையாளங் கொடும்" என்று அநுமான் சீதையைக் கேட்டான்.

சீதை அனுமானை நோக்கி "நன்மனமுடைய கௌசலை பெற்ற உலகநாயகரை எம்பொருட்டு தலையால் வணங்கி சுகம் விசாரி. சுமித்திரையின் நற்புதல்வர் மேலான சுகத்தையும் கைவிட்டு இராமரைத் தந்தையாகவும் என்னைத் தாயாகவும் மதிப்பவர். அந்த லக்ஷ்மணர் என்னை இராவணன் எடுத்து வரும்போது காணமற் போயினர். அவர் பெரியாரைப் பணிபவர்; திருவாளர்; ஆற்றலுள்ளவர்; அதிகமாகப் பேசாதவர்; அவருக்கு என்பொருட்டாக எனது குசல வார்த்தையைச் சொல்லு. இராமருக்கினிய இலக்ஷ்மணர் எப்போதுஞ் சாது; தூயர்; வல்லவர். அவரை எனது துக்கத்தை நீக்குபவராகச் செய். வானரோத்தம, எனது காரியத்தை முடித்தற்கு நீ தான் கட்டளைக் கல். உனது உற்சாகத்தினல் இராகவர் என்னைக் குறித்து முயற்சியுடையவராக வேண்டும். எனது நாயகரான இராமருக்குப் பெயர்த்தும் பெயர்த்தும் இது சொல்:—'இராகவ. ஒருமாதந்தான் நான் உயிருடனிருப்பேன்; ஒரு மாதத்திற்குமேல் உயிர் வைத்திரேன்; இது நான் சத்தியமாக உமக்குச் சொல்லுகிறேன்" என்று சொல்லி, பின்னர் ஒரு திவ்வியமான அழகிய சூடாமணியை தனது ஆடையிலிருந்து அவிழ்த்தெடுத்து "இதனை இராமருக்குக் கொடு" என்று அநுமான் கையிற் கொடுத்தாள்.

அநுமான் அந்த ஒப்பற்ற மணிரத்தினத்தை வாங்கி சீதையைப் பணிந்து, வலம்வந்து, நமஸ்காரஞ்செய்து தலை மேல் கை குவித்துக்கொண்டு "வானரர்களும் கரடிகளும் புடைசூழ இராமர் சீக்கிரம் வருவார்; வந்து பகைவர்களை வென்று உமது துக்கத்தை நீக்குவார். ஆதலால், தேவீ, நீர் வருந்தினது போதும்; இனித் துன்பத்தை ஒழித்து விடும். வானர வீரர்கள் ஓரே பாய்ச்சலில் இலங்கையை அடைந்து விடுவார்கள். சந்திரனும் சூரியனும் ஒருசேர உதித்தாற்போல இராம இலக்ஷ்மணர்கள் என் முதுகின் மீதேறிக்கொண்டு உம்மை வந்து சேருவார்கள். இலங்கை நகருட்புகுந்து அதனை அழித்துவிடப் போகின்றார்கள். இரகுநந்தனர் இராவணனை இராக்ஷசக் கூட்டங்களோடு கொன்று உம்மை மீட்டுக்கொண்டு தமது நகருக்குத் திரும்புவார். ஆதலிற் சிறிது ஆற்றியிரும். உமக்கு நன்மை உண்டாகின்றது. காலத்தை எதிர்பார்த்திரும். எரிகின்ற அக்கினிபோன்ற இராமரைச் சீக்கிரத்தில் பார்ப்பீர்" என்று மறுமொழி சொன்னான். அநுமான் சொன்ன வார்த்தையைக் கேட்டு சீதை "அநும, இனிய மொழி கூறுகின்ற உன்னைக்கண்டு, மழைபெய்யப்பெற்றுப் பாதி முளைத்த பயிருற்ற நிலம்போல நான் மகிழ்கிறேன். நான் கொடுத்த அடையாளத்தையும் இராமருக்குக் கொடு. காகத்தின் ஒரு கண்ணைப் போக்கிவிட அவர் அம்பு செலுத்தியதையுஞ் சொல்லு" என்றாள். இவ்வாறு சீதை வார்த்தையைக் கேட்டு, மிக்க வலியுள்ள அநுமான் சீதையை தலையால் வணங்கிப்போதற்கு முயன்றான்.

36. அநுமான் அசோகவனம் அழித்தல்

சீதை நன்மொழி கூறி வாழ்த்த அநுமான் அவ் விடத்தை விட்டுப் புறப்பட்டுப்போய் எண்ணலாயினான். "சீதையைக் கண்டுகொண்டேன்; நான் செய்ய வேண் டிய காரியம் இன்னுஞ் சிறிதிருக்கின்றது. அக்காரியத்

திற்கு முதன் மூன்று உபாயங்களையும் விட்டு நான்காம் உபாயந்தான் தக்கதாக தோன்றுகின்றது. இன்சொற் சொல்லல் இராக்ஷசர்களிடத்திலே பயன்படமாட்டாது; அது குணமுடையவருக்கு நியமித்தது; பொருளுடையவரிடத்திலே கொடுத்தல் பொருந்தாது; வலிமிக்கவர்கள் வேறுபடுத்தலால் சாத்தியப்படமாட்டார்கள். ஒறுத்தல் ஒன்றுதான் இங்கே பொருந்துமென்று எனக்குத்தோன்றுகின்றது. ஒரு வினைசெய்தற்கு ஏவப்பட்ட ஒருவன் அந்த வினைக்கொரு கேடுமின்றிப் பலவினைகளை முடிப்பானாயின் அவனே வினை செய்தற்குரியவனாவன். அந்தக் கொடியோனுடைய இந்தப் பூஞ்சோலை இந்திரனுடைய நந்தவனம் போன்று சிறந்து கண்ணையும் மனத்தையும் கவரும் வனப்பினதாய், பலவகை மரங்களும் கொடிகளுஞ் செறிந்திருக்கின்றது. உலர்ந்த காட்டிலே பற்றின அக்கினிபோல நான் இந்த வனத்தை அழிப்பேன். வனம் அழிந்த பின் இராவணனுக்குக் கோபம் உண்டாகும்''

அநுமான் இவ்வாறு எண்ணி வாயுவைப்போல கோபங்கொண்டு, தனது காலின் வேகத்தாலே மரங்களை அடிபாறச் செய்ய மரங்கள் முறிந்த சத்தத்தினாலும் பறவைகளினொலியினாலும் இலங்கையில் வாழ்பவர் யாவரும் பயந்து நடுநடுங்கினார்கள். பறவைகளும் விலங்குகளும் பயந்து வெருண்டோடிக் கூச்சலிட்டன. அரக்கர்களுக்குக் கொடிய துர்ச்சகுணங்கள் உண்டாயின. பின்பு பேழ்வாயரக்கிகள் நித்திரைவிட்டெழுந்து அந்த வனம் அழிந்ததையும் அங்கொரு குரங்கு நிற்பதையுங் கண்டார்கள். பெருவிறலும் பெருவலியுமுள்ள அநுமான் அவர்களைப் பார்த்து அவர்கள் அஞ்சும்படியான பெரிய வடிவங் கொண்டான். அரக்கிகள் இராவணனிடம் சென்று கொடிய பயங்கரமான ரூபத்தையுடைய அநுமானைப் பற்றி சொல்லத்தொடங்கினார்கள்:—'' அரச, அசோக வனத்தின் நடுவிலே அளவில்லாத ஆற்றலுடையதாகிய

பெரிய குரங்கொன்று வந்து சீதையோடு பேசிக்கொண்டிருக்கின்றது. ஆச்சரியப்படத்தக்க உருவமுடைய அந்தக் குரங்கு பலவகை மிருகங்கள் நிறைந்துள்ள உன்னுடைய அழகிய பிரமதா வனத்தை அழித்துவிட்டது. சீதை தானுக இருப்பது அழகிய தளிர்களும் மலர்களும் நிறைந்த ஒரு பெரிய சிஞ்சுபா மரத்தினடி. அந்த மரத்தை அந்தக் குரங்கு அழிக்கவில்லை. அந்தக் கொடிய குரங்குக்கு நீர் தக்க தண்டனை கொடுக்க வேண்டும்.''

இராக்ஷசிகள் சொன்ன வார்த்தையைக் கேட்டு இராவணன் மிக்கவலியுடைய கிங்கரர் என்னும் அரக்கர்களை அநுமானைத் தண்டிக்கும்படி ஏவினுன். அவர்கள் அதிக வேகமாகச் சென்று, விளக்கின்மேல் விழுகின்ற விட்டிற் பூச்சிகளைப்போல தோரணவாயிலின்மேலிருந்த அநுமான் மேல் விழுந்தார்கள். அவர்கள் பலவித தண்டாயுதங்களினுலும், பொற்பூணிட்ட பரிகாயுதங்களினுலும், சூரியன் போன்ற ஒளியுடைய அம்புகளினுலும் அநுமானை அடித்தார்கள். அப்போது அநுமான் வாலைச் சுழற்றிப் பூமியிலடித்துப் பெருஞ்சத்தமிட்டான். பின்னர் ஒரு பெரிய வடிவமெடுத்து உரத்த சத்தமாக ''பெருவிறலுடைய இராமர் வெல்க; மகா பலமுடைய இலக்ஷ்மணர் வெல்க; இராமராற் காப்பாற்றப்பட்ட அரசன் சுக்ரீவன் வெல்க. கோசலர்கோன் இராமன் குற்றமில் செய்கையோனுக்கு அடியேன் யான்; வாயுவின் புத்திரன்; பகைவர் படையை யழிப்பவன்; அநுமானென்போன். மரங்களையும் மலைகளையும் ஆயிரமாயிரமாக எடுத்து வீசும் எனக்கு ஆயிரம் இராவணர்களும் யுத்தத்திலே நிகராகமாட்டார்கள். நான் இராக்ஷசர்கள் எல்லாருங் காண இலங்கையை அழித்து சீதையைப் பணிந்து என் வேலைகளை முடித்துக்கொண்டு போகப்போகின்றேன்'' என்று கூவினுன். அந்த வீரத்தொனியைக் கிங்கரர்கள் கேட்டுப் பயந்தார்கள்.

பின்னர் அநுமான் மண்டபத்தின் கண்ணுள்ள பொன்மயமான நெடிய தூணென்றை விரைந்து பிடுங்கி அதனைப் பலவிதமாகச் சுழற்றினன். அப்போது அதிலே நெருப்புண்டாகி அந்த மண்டபம் பற்றி எரிந்தது. அநுமானுடைய செயல்களை கேள்வியுற்ற இராவணன் தன் மனவெண்ணத்தை வெளிப்படுத்தாமல் நல்ல ஆலோசனை செய்தான். "அதன் செய்கைகளினல் நான் அதனைக் குரங்கென்று எண்ணவில்லை. ஆண்மையுள்ள பெரிய குரங்குகளை நான் முன்னர் கண்டிருக்கின்றேன்; வாலி, சுக்ரீவன் மிக்க வலிவுடைய சாம்பவன், சேனபதி நீலன், துவிவிதன் என்று அவர்கள் பலருளர். அவர்கள் ஒருவரிடத்திலும் இந்தக் கடுவேகமும், வலியும், ஆண்மையும், புத்தியும், பலமும், உற்சாகமும், வேண்டிய உருவமெடுக்கும் வன்மையும் இல்லை. இது குரங்குருவமெடுத்த ஒரு பெரும் பூதமே. ஆதலால் பெருமுயற்சி செய்து இதனைப் பிடிக்க வேண்டும்" என்று சொன்னன்.

பின்பு இராவணன் தன் மனத்தை திடப்படுத்திக்கொண்டு, இந்திரனுக்குச் சமானமான இந்திரசித்துவை ஏவினன். இந்திரசித்து தந்தை சொன்ன வார்த்தையைக் கேட்டு, யுத்தத்திற்குப் போக இசைந்து, அவனை வலம் வந்தான். பின்னர் அவன் சுற்ற மித்திரர்கள் போற்ற யுத்தத்தில் உற்சாகங்கொண்டு போருக்குப் புறப்பட்டான். வில்வீரர்களுட் சிறந்தவனும், படைத்தொழில் பயின்றவனும் அஸ்திரவித்தை அறிந்தவர்களுட் சிறந்தவனுமான இந்திரசித்து பெரிய வில்லையும் கூறிய நுதியுடைய அம்புகளையும் எடுத்துக்கொண்டு தேரின்மேலேறி அநுமானிருந்த இடத்திற்குப் போனன். அவனுடைய தேரோசையையும் வில்லின் நாணெசையையுங் கேட்டு அநுமான் மிக்க சந்தோஷமடைந்தான். விரைந்து வந்த இந்திரசித்துவை அனுமான் கண்டு பேரொலிசெய்து வேகமாக உடல் பருத்தான். இந்

திரசித்து வில்லைக்கையிலெடுத்து இடிபோல முழங்கும்படி நாணொலி செய்தான். வேகமுடையவர்களும் போர்த் தொழில் பயின்றவர்களுமான அநுமானும் மேகநாதனும் கண்டோர் மனத்தை எல்லாம் கவரத்தக்க சிறந்த யுத்தஞ் செய்தார்கள். இந்திரசித்து அநுமானுடைய செயல் களிலே தன் மனத்தைச் செலுத்தி அவனைக் கொல்லு வது அரிதென்று கண்டு அவனைப் பிடிப்பது எப்படி என்று எண்ணி அநுமான்மேல் பிரமாஸ்திரத்தை ஏவினான்.

பிரமாஸ்திரத்தால் கட்டுண்ட அநுமான் கை கால் கள் தொழிற்படுதலின்றிப் பூமியிலே விழுந்தான். பின்னர் அநுமான் பிரமமந்திரத்தால் அபிமந்திரிக்கப்பட்ட பிரமாஸ்திரத்தையும் பிரமன் கொடுத்த வரத்தையும் நினைத்தான். "இந்த அஸ்திரத்தாற் கட்டுண்டதனாலே எனக்கொரு பயமுமில்லை. பிரமனும் இந்திரனும் வாயுவும் என்னைக் காக்கின்றார்கள். இராக்ஷசர்கள் என்னைப் பிடிப்பதனாலே எனக்கு இராவணனைக் கண்டு பேசுவ தாகிய பெரிய நன்மை உண்டாகும்; ஆதலால் அவர்கள் என்னைப் பிடிக்கட்டும்" என்று நிச்சயித்து செயலற்றுக் கிடக்க அவனை இராக்ஷசர்கள் சணற்கயிற்றினாலும் பின்னிய மர நாரினாலுங் கட்டினார்கள்.

அரக்கர்கள் அநுமானைக் கயிற்றினாற் கட்டவே அஸ் திரத்தின் கட்டு அவிழ்ந்துவிட்டது. ஏனெனில் பிரமாஸ்தி ரத்தின் கட்டு வேறொன்றின் கட்டோடு உடனுறையாது. அநுமான் தான் அஸ்திரத்தினின்று விடப்பட்டதை வெளியிலே காட்டவில்லை; இராக்ஷசர்களாலே இழுக்கப் பட்டுங் கட்டப்பட்டும் வருந்தினான். அவனை அரக்கர்கள் கையினாலுந் தடியினாலும் அடித்து இராவணன் முன் இழுத்துக் கொண்டுபோனார்கள். அநுமானும் ஒளியும் வலியுமமைந்து எரியுஞ் சூரியனைப்போல விளங்கிய இரா வணனைக் கண்டான். சிறப்புடன் வீற்றிருந்த இராவ

ணனைக் கண்ணுற்ற அநுமான் அவனுடைய பெருமை யாலே மயங்கி எண்ணலுற்ருன். "ஆகா! என்ன உரு வம்! என்ன தைரியம்! என்ன விறல்! என்ன ஒளி! இவனுக்குச் சர்வலக்ஷணங்களும் எவ்வாறு அமைந்திருக் கின்றன! இவன் செய்த அதர்மம் பெரிதாயிராது போனல் இவன் இந்திரனுக்கும் தேவலோகத்துக்கும் இறைவ னுவானே" என்று அரக்கர்கோனது பெருமையை அநு மான் பலவாறு கருதினன்.

உலகங்களை அழுவித்த இராவணன் தன் முன்னின்ற அநுமானைப் பார்த்து சந்தேகமுற்று "நான் முன் கைலாச மலையைப் பிடுங்கினபோது என்னைச் சபித்த நந்திபக வானே குரங்கு வடிவமெடுத்துக் கண்கூடாக இங்கு வந் தாரோ? அல்லது வாணசுரனே?" என்று எண்ணினன். பின்னர் அவன் கோபமுற்று, கண் சிவந்து, முதன் மந்திரி யாகிய பிரகஸ்தனைப் பார்த்து "இவன் எங்கிருந்து வந் தான்? என்ன காரணமாக வந்தான்?" என்று இந்தத் துஷ்டனைக்கேள்" என்று சொன்னன். இராவணன் சொன் னதைக் கேட்டு, பிரகஸ்தன் அநுமானை நோக்கி "வாழி, வானர; நீ பயப்படாதே; மனத்தைத் தேற்றிக்கொள். உண்மையைச் சொன்னல் உன்னை விட்டுவிடுவார்கள். என்ன காரணத்தினல் நீ இராவணேசுரனுடைய நகரத் துட் பிரவேசித்தாய்?" என்று கேட்டான். இவ்வாறு வினவப்பட்ட அநுமான் நான் சாதியில் வானரன். என் சுயரூபத்தோடேயே இங்கு வந்தேன். இராக்ஷசேந்திர னுடைய தரிசனங் கிட்டாமையாலே நான் இது செய் தேன். இராக்ஷசேந்திரனுடைய தரிசனத்துக்காகவே நான் வனத்தை அழித்தேன். தேவர்களாலும் அசுரர்களாலும் அஸ்திரபாசங்களினல் என்னைக் கட்டமுடியாது. இந்த வரத்தை நானும் பிரமனிடத்திலிருந்தே பெற்றேன். நான் ஓர் இராஜகாரியமாக உன்னை அடைந்தேன். பேராற்ற லுடைய இராமன் தூதனென்று என்னை நீ அறிந்து

கொள்.அரசனே, நான் சொல்லும் இந்த நல்ல வார்த்தையைக் கேட்கவேண்டும்.

"அரக்கர்கோவே, நான் சுக்கிரீவனுடைய ஏவலால் உன்னிடம் வந்தேன்; வானரவேந்தன் உனக்குக் குசலஞ் சொன்னான். சுக்கிரீவன் சொன்ன வார்த்தைகள் அறத்தோடும் பொருளோடும் இயைந்தன; இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை பயப்பன; அவற்றைக்கேள். அரசனுவான் தசரதனென்பான் கஜரத துரகமுடையவன்; உலகத்திற்குத் தந்தைபோ லினியவன்; இந்திரன் போன்ற ஒளியுடையவன். அவன் மூத்த குமாரனுவான் இராமனென்பான் பெருந்தோளன்; இன்பத்தைச் செய்பவன்; பெரியவன். அவன் தந்தை ஏவலாலே தம்பி லக்ஷ்மணனோடும் மனைவி சீதையோடும் புறப்பட்டு தண்டகாவனத்தை அடைந்தான். அவனுடைய மனைவி சீதை; பதிவிரதை; விதேகநாட்டிற் கரசனுகிய ஜனகன் புத்திரி. அவள் காட்டிலே காணமற் போய்விட்டாள். இராமன் தம்பி இலக்ஷ்மணனோடு மனைவியைத் தேடிக்கொண்டு வந்து, ரிசியமூக பர்வதத்தை அடைந்து, சுக்கிரீவனைத் தலைப்பட்டான். அவனுக்கு சுக்கிரீவன் சீதையைத் தேடுவதாக வாக்குச்செய்தான். சுக்கிரீவனுக்கு அவன் வானரராச்சியத்தைக் கொடுப்பதாக வாக்குச்செய்தான். பின்னர் அவன் போரில் வாலியைக்கொன்று சுக்கிரீவனை வானரர்களுக்கும் கரடிகளுக்குந் தலைவனுக்கி அரசு புரிய வைத்தான். வானரர்களுட் சிறந்த வாலியை நீ முன்னர் அறிவாய். அவனைப் போரிலே இராமன் ஓரம்பினுற் கொன்ருன். வானரவேந்தன் சுக்கிரீவன் தன் வாக்குத் தவருதபடி விரைந்து சீதையைத் தேடுமாறு திக்குகளெல்லாம் வானரர்களை அனுப்பியுள்ளான். அந்த வானரர்கள் நூறு, ஆயிரம், பத்துலக்ஷம் என்னும் கணக்காகத் திக்குகளெங்குங் கீழும் மேலும் ஆகாயத்திலும் தேடுகின்றனர். நான் அநுமான் என்பவன்; வாயுவின் புத்திரன்;

சீதையின் பொருட்டு நூறுயோசனை அகலமுள்ள கடலைக் கடந்து அவளைக் காணவேண்டி இங்குவந்தேன். எங்குந் திரிந்து உன்னுடைய வீட்டில் அவளைக்கண்டேன்.

"நீ அறம்பொருள்களை அறிந்தவன்; தவங்களை உரிமையாக்கிக் கொண்டவன்; பேரறிவாளன்; உனக்கு பிறர் மனைவியைச் சிறைப்படுத்துவது தகாது. உன்னையொத்த அறிவாளர்கள் அறத்திற்கு மாறுயினவும் கேடு பயப்பனவும் அடியோடழிப்பனவுமான கருமங்களிலே தலையிடார்கள். ஆதலால், முக்காலத்தும் நன்மை பயப்பதும் அறமாபுள்ளதும் பொருளோடியைந்ததுமான இந்த வார்த்தையை நன்கு மதி. இராமனுக்குச் சீதையைத் திருப்பிக் கொடுத்துவிடு. இல்லையேல் உன் அதர்மத்தின் பயனை விரைவில் அடையப்போகின்றாய். இதிற் சந்தேகமில்லை.

"ஜனஸ்தானத்தின் அழிவையும் வாலியின் வதையையும் அறிந்து, இராமனுக்குஞ் சுக்கிரீவனுக்குமுள்ள நட்பையும் நோக்கி, உனக்கு நன்மையைத் தெரிந்துகொள். நானே இந்த இலங்கையை ரதகஜ துரகங்களோடு தனியே அழிக்கவல்லேன்; ஆனால் இராமருக்கு அது கருத்தன்று. அவர் வானரர்களுக்குங் கரடிகளுக்கும் முன்னிலையிற் சீதையை வருத்திய பகைவர்களை தாமே அழித்து விடுவதாகச் சபதஞ் செய்திருக்கின்றார். நேராக இந்திரனாலும் இராமருக்குத் தீங்குசெய்துவிட்டு சுகமடைய மாட்டான். பின்னர் உன்போலியர்களுக்குச் சுகம் உண்டாவது எப்படி? நீ எவளைச் சீதை என்றும் உன் வசத்திலிருக்கிறாள் என்றும் எண்ணுகின்றாயோ அவளை இலங்கை முழுவதையும் அழிக்கவந்த காலராத்திரி என்று அறிந்துகொள். சீதை வடிவமைந்த காலபாசத்தை நீ கழுத்திலே மாட்டிக்கொண்டது போதும். இனி உனக்கு ஒத்ததை அறிந்துகொள். சீதையின் கற்பினாலே தகிக்கப்பட்டும், இராமருடைய கோபத்தினாலே நெருக்கப்பட்டும் இந்த நகரம் அட்டாலைகளோடும் வீதிகளோடும் எரிகின்

றது பார். உன்னுடைய நண்பர்களையும், மந்திரிகளையும், சுற்றத்தாரையும், சகோதரர்களையும், பிள்ளைகளையும், அன்பர்களையும். வாழ்வுகளையும், மனைவியர்களையும் அழிவு செய்யாதே. அரக்கர்கோவே, நான் சொல்லும் உண்மை வார்த்தையைக் கேள். உலகங்கள் யாவற்றிற்கும் அரசரும் அரசர்க்கரசருமாகிய இராமருக்கு இவ்வித தீங்கு செய்துவிட்டு நீ பிழைப்பது அரிது" என்று அநுமான் கூறினன்.

அநுமான் சொன்ன வார்த்தையைக் கேட்டு இராவணன் கோபமீதூர்ந்து அவனைக்கொல்லும்படி கட்டளையிட்டான். கொடிய இராவணன் தூதுவந்துசொன்ன அநுமானைக் கொல்லும்படி கட்டளையிட்டதற்கு விபீஷணன் உடன்படவில்லை. இராவணன் கோபமுற்றிருப்பதையும் அவன் கட்டளை முடியப்போவதையும் பார்த்து தமையனை வணங்கித் தான் சொல்லவிரும்பிய சொற்களை ஆராய்ந்து மிகவும் இனிதாகச் சொல்லலுற்றான்.

"இராக்ஷசேந்திர, பொறுத்தருள்: கோபத்தை விட்டு விடு; தயைசெய்து நான் சொல்வதைக் கேள்; பூவுலகிலுள்ள பெருமை சிறுமைகளை அறிந்த நல்ல அரசர்கள் தூதர்களைக் கொல்லமாட்டார்கள். அரக்கர்கோவே, தயை செய், பகைவர்களை அழிப்பவனே, வெல்லற்கரியானே, இவ்விடத்தில் எது தக்கது எது தகாதது என்று ஆராய்ந்து தூதனுக்குத் தண்டனை விதி. உறுப்புகளைக் குறைத்தல், கசையாலடித்தல், முண்டிதஞ்செய்தல், உடம்பில் அடையாளஞ் செய்தல் என்பவைகளே தூதர்களுக்குச் சொன்ன தண்டங்கள். தூதர்களுக்குக் கொலைத் தண்டனை கேட்டதேயில்லை. இந்த வானரனைக் கொல்லுவதில் ஒரு குணத்தையும் நான் காணவில்லை. இவன் நல்லவனானுலுமாக கெட்டவனாலுமாக; இவன் பிறரால் அனுப்பப்பட்டு அவர்கள் கருத்தைச் சொல்பவன்; பிறருடைய தூதன்; இவனைக் கொலைசெய்வது தக்கதன்று" என்றான்.

37. அநுமான் இராமருக்குச் செய்தி சொல்லல்

விபீஷணன் சொன்ன வார்த்தையைக்கேட்டு மிக்க வலியுள்ள இராவணன் இடத்துக்கும் காலத்துக்கும் ஏற்கத் தன் தம்பிக்கு மறுமொழி சொன்னான். "நீ நன்கு சொன்னாய். தூதனைக் கொல்லுவது பழிப்புக்கிடமானது. குரங்குகளுக்கு வாலே பிரியமான ஆபரணமாயிருக்கின்றது. இவனுடைய வாலைச் சீக்கிரஞ் சுட்டுவிடுங்கள், இவன் சுடுபட்ட வாலோடு போகட்டும்" என்று இராவணன் கட்டளையிட்டான். இராவணனுடைய கட்டளையைக் கேட்டுக் கோபங் கன்றின இராக்ஷசர்கள் அநுமானுடைய வாலிலே பழந்துணிகளைச் சுற்றினார்கள். வாலிலே துணி சுற்றும்போது அநுமான் காட்டிலே காய்ந்த விறகிற்பற்றிய தீப்போலவளர்ந்தான். பின்னர் அவர்கள் அதனை எண்ணெயால் நனைத்து நெருப்பைக் கொளுத்தினார்கள். அவனைப் பிடித்துக்கொண்டு இராக்ஷசர்கள் சந்தோஷத்தோடு சென்றார்கள்.

அநுமானுடைய வாலிலே அக்கினி பற்றி எரிந்தபோது இராக்ஷசிகள் சீதைக்கு அந்த வருத்தமான செய்தியைச் சொன்னார்கள்." சீதாய், உன்னோடு பேசிக் கொண்டிருந்த சிவந்த முகத்தையுடைய குரங்கை வாலிலே நெருப்பை கொளுத்தித் தெருவில் இழுத்துத் திரிகின்றார்கள்" என்று அவர்கள் சொன்னார்கள். தன் உயிரையே பறித்தாற்போன்ற கொடுமையான அந்த வசனத்தைக்கேட்டுச் சீதை துக்கம் மேலிட்டு அக்கினியைப் பிரார்த்தித்தாள். "என்னிடத்திலே நாயகனைப் பணிதலும், தவவொழுக்கமும், கற்பும் இருக்குமாயின் நீ அநுமானுக்குத் தண்ணென்றிருக்கவேண்டும். என்னை நல்லொழுக்க முள்ளவளாகவும் தம்மை அடைய வேண்டுமென்னும் விருப்பமுள்ளவளாகவும் அந்தத் தருமவான் எண்ணி யிருப்பாராயின் நீ அநுமானுக்குத் தண்

ணென் றிருக்கவேண்டும். சத்தியந் தவருத சுக்கிரீவன் என்னும் பெரியோன் இந்தத் துக்கக்கடலிலிருந்து என்னைக் கரையேற்றுவானுயின் நீ அநுமானுக்குத் தண்ணென் றிருக்கவேண்டும்'' என்று சீதை வேண்டிக்கொண்டாள். உடனே அநுமானது வாலிற்கொளுத்தின அக்கினி அழன்று வலமாகச்சுவாலித்து மான் கன்றுபோன்ற கண்களையுடைய சீதைக்கு அநுமான் சுகத்தைச் சொல்வதுபோலப் பற்றி எரிந்தது.

இவ்வாறு வாலெறிந்தபோது அநுமான் சிந்தித்தான். "எரிகின்ற இந்த அக்கினி ஏன் என்னை எங்குஞ் சுடவில்லை? பெருஞ் சுவாலைவிட்டு எரிகின்றதே; ஏன் என்னை இது வருத்தவில்லை? சீதையினுடைய அருளினுலும் இராகவருடைய பெருமையினுலும் என்னுடைய தந்தைக்குத்தான் நண்பனுனதாலும் அக்கினி என்னைச் சுடவில்லை'' என்று அவன் எண்ணினுன். வேகமாக மேலே பாய்ந்து கர்ச்சித்தான். பின்னர் அவன் இராக்ஷசர்கள் நெருங்கா திருந்த மலைமுடி போலுயர்ந்த நகர வாயிலை அடைந்தான். அவன் ஒரு கணப்பொழுதில் மலைபோலப் பருத்து மறுபடி மிகவுஞ் சிறிய ரூபத்தை அடைந்து தன் மேலுள்ள கட்டுக்களை நழுவும்படி செய்தான். மீட்டும் மலைபோல வளர்ந்து நாற்புறமும் பார்த்து தோரணவாயிலிலே இருந்த இருப்பெழுவை எடுத்து அங்கிருந்த காவலர்களெல்லாரையும் அதனுலடித்துக் கொன்ருன்.

பின்னர் அக்கினிபற்றிய வாலினுலே, மின்னலோடு கூடிய மேகம்போல விளங்கி அநுமான் இலங்கையிலுள்ள வீடுகளின் முகட்டில் ஏறித்திரிந்தான். விபீஷனுடைய வீடொழிந்த மற்றை ஒவ்வொரு மாளிகைகளிலும் வீடுகளிலும் மிகுந்த செல்வர்களுடைய செல்வங்களெல்லாவற்றையும் கொளுத்தினுன். பின்னர் அந்த வீரன் எல்லா வீடுகளையுங் கடந்து இராக்ஷசாதிபனுன

இராவணனுடைய வீட்டை அடைந்தான். பலவித இரத்தினங்களால் அணிசெய்யப்பெற்று, சகல மங்களங்களும் நிறைந்து, மேருமலையும் மந்தரமலையும் போல விளங்கிய அந்தச் சிறந்த மாளிகையிலே, தன் வாலில் எரிந்து கொண்டிருந்த அக்கினியை வைத்துவிட்டு, யுகாந்த காலத்து மேகம்போல அநுமான் கர்ச்சித்தான். உருத்திரன் முன்னுளிலே முப்புரங்களையும் எரித்ததுபோல வேகமுடைய பெரிய அநுமான், இலங்கையை எரித்தான்.

சிறந்த அரக்கர் கூட்டங்களெல்லாம் அங்கே ஒருங்கு சேர்ந்து, "இவன் வச்சிராயுதந் தரித்த தேவர்களுக்கரசனை இந்திரனோ? கண்கூடாக வந்த யமனோ? வருணனோ? வாயுவோ? உருத்திரனோ? அக்கினியோ? சூரியனோ? குபேரனோ? சந்திரனோ? இவன் வானரனல்லன்? காலனே. எல்லாவற்றையும் படைத்து எல்லாவற்றிற்குந் தந்தையாயுள்ள நான்முகப் பிரமனுடைய பெருங்கோபமே வானரரூபமெடுத்து அரக்கர்களை அழிக்க வேண்டி இங்கு வந்ததுவோ? அல்லது ஈறில்லாததும் உருவமில்லாததும் நினைத்தற்கரியதுமான விஷ்ணுவின் பெரிய வலியே அரக்கர்களை அழிக்கவேண்டி குரங்குருவமெடுத்து இப்போது வந்ததோ?" என்று சொல்லிக் கொண்டார்கள். இலங்கை இராக்ஷசர்களோடும் ரதகஜதுரகங்களோடும், பறவைக்கூட்டங்களோடும் மிருகங்களோடும் மரங்களோடும் விரைந்து எரிந்தது. அநுமான் இலங்கை முழுவதையுங் கொளுத்திவிட்டுத் தன்வாலைக் கடலிலேதோய்த்து அதிற் பற்றியிருந்த தீயை அணைத்தான். பின்பு அநுமான் ஆகாயத்திலே திரியுஞ் சாரணர்கள் "என்ன ஆச்சரியம்! அநுமான் செய்த வேலையை யார் செய்யமுடியும்? அரக்கர்களுடைய வீடுகளிற் கொடிய அக்கினியை நன்ருகக் கொளுத்திவிட்டான். இந்நகரம் அட்டாலைகள் மதில்கள் தோரண வாயில்களோடு எரிந்துவிட்டது; சீதை மாத்திரம் எரியவில்லை;

என்ன ஆச்சரியத்துக்குமேல் ஆச்சரியம் இது" என்று சொன்ன வார்த்தையைக் கேட்டான். அதன்மேல் அவன் தனது எண்ணங்களெல்லாம் முற்றி, சீதை இறக்கவில்லை என்று அறிந்து, அவளை நேராகப் பார்த்துவிட்டுக் திரும்பிப்போக எண்ணினான்.

அவன் பின்பு சிஞ்சுபாமரத்தினடியிலிருந்த சீதையை வணங்கி "தெய்வாதீனத்தால் நான் உம்மை இங்கு உயிரோடு பார்க்கப்பெற்றேன்" என்று சொன்னான். பின்பு போகப்புறப்பட்ட அநுமானைச் சீதை அடிக்கடி பார்த்துத் தனது நாயகன் மீதுள்ள அன்பால் "வீர, காரியத்தை முடிப்பதற்கு நீ ஒருவனே போதும். உன்னுடைய வலியின் பெருமை புகழத்தக்கது. ஆயினும் பகைவர் வலியை நாசஞ் செய்யுங் காகுத்தருடைய பெருமைக்கு அவரே தமது சரங்களால் இலங்கையை நிறைவித்து என்னை அழைத்துக்கொண்டு போவது தக்கதாகும். போரிற் சிறந்த அவருடைய ஆண்மை அவருக்குத் தகுந்ததாய் முடியும்படி நீ செய்ய வேண்டும்" என்று சொன்னாள். காரணத்தோடு பொருந்தியும் பொருளமைந்து மிகுந்த அந்த மெல்லிய சொல்லைக்கேட்டு அநுமான் "காகுத்தர் சீக்கிரமாக வருவார்; அவர் வானரவீரர்களுங் கரடித் தலைவர்களும் புடைசூழ வந்து பகைவரைப் போரிலழித்து உமது துன்பத்தை ஒழித்துவிடுவார்" என்று சொல்லிச் சீதையைத் தேற்றி, போதற்குத்துணிந்து, அவளைப் பணிந்தான்.

பின்னர் அவன் இராமரைப் பார்க்கவேண்டுமென்ற ஆசைமிக்கு கடல் போல விளங்கிய ஆகாயத்திலே வருத்தமின்றிப் பாய்ந்து போனான். அநுமான் அந்த மேகக் கூட்டங்களுள் அடிக்கடி நுழைந்து மறைந்தும் அவற்றினின்று வெளிப்பட்டுப் பிரகாசித்துஞ் சந்திரன் போலச் சென்றான். அவன் கொஞ்சத்தூரஞ்சென்று மேகம் போன்ற பெரிய மகேந்திர மலையைப் பார்த்து மேக

முழக்கம்போன்ற தனது பேரொலியினால் பத்துத்திக்கும் நிறையும்படி செய்தான்.

அநுமான் வரவை நோக்கி முன்னரே கடலின் வட கரையிலிருந்த வானர வீரர்கள் காற்றுக் கொண்டுவந்த அநுமானுடைய மேகமுழக்கம்போன்ற முழக்கத்தைக் கேட்டு அவனைக் காணும் உற்சாகமுடையவர்களானார்கள். வானரர்களுக்குட் சிறந்த ஜாம்பவன் மனமகிழ்ச்சியடைந்து வானரர்களெல்லாரையும் அழைத்து "எல்லா விதத்தாலுங் காரியங்களை முடித்துக்கொண்டே வருகின்றான் அநுமான். இதிற் சந்தேகமில்லை. காரியம் முடியாவிடின் இவ்வாறு சத்தமிட மாட்டான்" என்றான். பின்பு அநுமான் மரங்கள் அடர்ந்த மகேந்திரமலையின் உச்சியில் இறங்கினான். வானரத்தலைவர்களெல்லாரும் அநுமானை வந்து சூழ்ந்தார்கள்; அநுமானுக்குப் பழங்களையும் கிழங்குகளையும் உபாயனங்களாகக் கொண்டுவந்து கொடுத்து வெகுமானஞ் செய்தார்கள்.

அநுமான் ஜாம்பவன் முதலிய பெரிய வானரர்களையும் இராஜகுமாரனை அங்கதனையும் வணங்கினான். பின்னர் அவன் அங்கதன் ஜாம்பவன் முதலியவர்களுடைய நன் மதிப்பையும் மற்றை வானரர்களுடைய அருளையும் பெற்றுக் "கண்டேன் சீதையை" என்று சீதையைக் கண்டதைச் சுருக்கமாகத் தெரிவித்தான். அநுமான் சொன்ன பொருள் பொதிந்த அமுதம் போன்ற "கண்டேன்" என்ற சொல்லைக் கேட்டு வானரர்களெல்லாங் களிப்படைந்தார்கள். அந்த வார்த்தையைச்சொன்ன அநுமானை அங்கதன் நோக்கி வானரவீரர்கள் யாவருக்கும் நடுவிலே புகழ்ந்துபேசினான். அவன் "வீர, அகன்ற கடலைக் கடந்து மறுபடி திரும்பி வந்த உமக்கு வலியிலாவது வீரத்திலாவது சமமானவர்கள் ஒருவருமில்லை. இராமரிடத்திலே நீர் வைத்திருக்கும் அன்பென்ன! உம்முடைய வீரமென்ன! உம்முடைய திட்பமென்ன!

இராமர் பத்தினியாகிய புகழ்படைத்த சீதையை நீர் தெய்வாதீனத்தாற் கண்டீர். இனிச் சீதையைப் பிரிந்த துன்பத்தினின்றும் இராமர் தெய்வாதீனத்தால் நீங்குவர்'' என்று சொன்னான்.

பின்பு வானரர்கள் எல்லாரும் மனமகிழ்ந்து மகேந்திர மலையைவிட்டு அநுமான் முன்புபோக அவன் பின்னே பாய்ந்துப் போனார்கள். இராமரைப் பார்க்க விரும்பினவர்களாய், அங்கதனையும் அநுமானையும் முன்னிட்டுக் கொண்டுவந்து, மனமகிழ்ந்து, களிகூர்ந்து, இராமருக்குஞ் சுக்கிரீவனுக்குஞ் சமீபத்தில் இறங்கினார்கள். அதன்பின் அநுமான் இராமரைத் தலையால் வணங்கிச் சீதை நெறி தவறாமலுங் கற்பழியாமலும் இருப்பதைத் தெரிவித்தான். அது கேட்டுச் சுக்கிரீவன் தன் சொல் நிச்சயமாயிற்றென்று அநுமானிடத்தில் மகிழ்ச்சியடைந்தான்; இலக்ஷ்மணரும் மகிழ்ச்சியுற்று களிப் படைந்த அநுமானை நன்குமதித்துப் பார்த்தார். பின்பு பகைவரை வாட்ட வல்ல இராமரும் மகிழ்ச்சியாற் களிகூர்ந்து அநுமானை மிக்க நன்மதிப்போடு பார்த்தார்.

சீதை உயிரோடிருப்பதைக் கேட்டவுடன் இராமர் மறுமொழி சொன்னார். ''வானரர்காள், சீதாதேவி எங்கே இருக்கின்றாள்? என்னிடத்தில் எவ்வாறிருக்கின்றாள்? என்று அவளைப்பற்றி எல்லாவற்றையும் எனக்குச் சொல்லுங்கள்'' என்றார். இராமருடைய வார்த்தையைக்கேட்டுச் சீதாதேவியைத் திக்குநோக்கித் தலையால் வணங்கி, தான் அவளைக்கண்ட வரலாற்றை அநுமான் கூறலாயினான்.

''நான் சீதையைக் காணவேண்டுமென்று இச்சையால் நூறுயோசனை அகலமுள்ள கடலைத் தாவி அவளைத் தேடிக்கொண்டு சென்றேன். அங்கே தென்திசையிலே கடலின் தென்கரையிலே தீயவனான இராவணனுடைய

இலங்கை என்னும் நகர் உளது. அங்கே இராவணனுடைய அந்தப்புரத்திலே நான் சீதையைக் கண்டேன். அவள் ஒன்ருகப் பின்னிய சடை தரித்து, ஏழையாய், உம்மையே நினைத்துக்கொண்டு இருக்கின்ருள். அவள் தரையிலே படுத்து, பனிக்கால வரவால் வாட்டமடைந்த தாமரை மலர்போல நிறம் பசந்து, இராவணனிடத்திலே வெறுப்புற்று, உயிர்விடத் துணிந்தவளா யிருக்கின்ருள். அதன் பின் அவள் என்னேடு வார்த்தையாடினுள். நான் அவளுக்கு எல்லாச்செய்திகளையுஞ் சொன்னேன். அவள் சித்திரகூட மலையிலே உமது முன்னிலையிலே நடந்த காகத்தினுடைய செய்தியை என்னிடத்தில் அறிகுறியாகச் சொன்னுள். "வாயுபுத்திர, நீ இங்கே கண்டவைகள் யாவற்றையும் மக்களுட்சிறந்த இராமருக்கு அறிவிப்பாயாக. நான் பேணிக்காத்து வைத்திருந்த இந்த மணியை அவருக்குக்கொடு. நான் மிக்க ஒளியுள்ள இந்தச் சூடாமணியை வெகு கவனமாகக் காப்பாற்றினேன். ஒரு மாதத்துக்குமேல் அரக்கர் கையில் அகப்பட்ட யான் உயிர்வைத்திரேன்" என்று தருமந் தவருமல் உடன்மெலிந்துள்ள சீதை என்னிடஞ் சொன்னுள்." என்று அநுமான் சொன்னுன். அவன், அரசகுமாரர்களிருவரும் ஆறுதலடைந்தது தெரிந்து கொண்டு, சீதை கொடுத்த சூடாமணியை இராமரிடங் கொடுத்துச் சீதை சொன்னவைகளை எல்லாம் முறையாக முழுதும் சொன்னுன்.

இவ்வாறு அநுமான் சொல்ல, இராமர் அந்தச் சூடாமணியை மார்போடணைத்துக்கொண்டு சுக்கிரீவனுக்குச் சொல்லலுற்ருர். "கன்றினிடத்துள்ள அன்பினுற் பசுவின்பால் பெருகுவதுபோல, என்னுடைய மனமும் இந்தச் சிறந்த சூடாமணியைக் கண்டு உருகுகின்றது. நான் இதனைக்கண்டு இப்போதே அவளை அடைந்தவன் போல எண்ணுகின்றேன். வைதேகி ஒரு மாதம் உயிரோ

டிருப்பாளாயின் நெடுங்காலம் வாழ்வாள் ; நான் அவள் இன்றி ஒரு கணப்பொழுதும் உயிரோடிரேன். அநுமான், சீதை என்ன சொன்னாள் ? அதனை உண்மையாக எனக்குச்சொல்லு ; நோயாளி மருந்திறைற் பிழைப்பது போல நான் அதனாலன்றோ உயிரோடிருக்கின்றேன்" என்று கேட்டார். இராமர் இவ்வாறு சொல்ல, அநுமான் அவருக்குச் சீதை சொன்னவைகள் யாவற்றையும் விவரமாக உரைத்தனன்.

யுத்த காண்டம்

38. வானர சேனையுடன் இராமர் புறப்படுதல்

அநுமான் தான் கண்டபடியே சொன்ன சொல்லை இராமர் கேட்டு, வெகு சந்தோஷமடைந்து சொல்ல லானார் :—" இவ்வுலகத்தில் ஒருவராலும் மனத்தினாலும் எண்ணமுடியாத மிக்க அரும்பெருங்காரியத்தை, அநுமான் செய்து முடித்தான். கருட பகவானும் வாயுபகவானும் அநுமானுமே யன்றி, பெருங்கடலைத் தாண்டுபவர் வேறொருவரிருப்பதாக எனக்குப் புலப்படவில்லை. சுக்கிரீவனுக்கு அடிமையாக இருந்து, செய்ய வேண்டிய பெருங்காரியத்தை அனுமான் செய்துமுடித்தான்" என்று சொல்லி, இராமர் அநுமானை ஆனந்தத்தால் உடம்பு சிலிர்க்கக் கட்டிக்கொண்டார். அதன் பிறகு, சிறிது ஆலோசித்துப் பார்த்து, வானரரெல்லார்க்கும் மன்னவனாகிய சுக்கிரீவன் கேட்டுக்கொண்டிருக்கும்பொழுதே, பின்வருமாறு ரகுநந்தனர் சொல்லலானார் :—" சீதை யுள்ள விடத்தை நாடியறிதல் நன்றாகச் செய்து முடிந்தது; என்றாலும், நடுவிற் பெருங்கடலொன்றிருப்பதை ஆலோசித்துப் பார்த்து என் மனம் கெடுகின்றது. கரையில்லாத இப்பெருங்கடலின் தென்கரையை எவ்வண்ணம் இவ் வானரர்களெல்லாரும் ஒன்றுசேர்ந்து அடைவார்கள்"? என்று அநுமானைப் பார்த்துச் சொல்லிவிட்டு துக்கப் பட்டவராகச் சிந்திக்கலானார்.

சுக்ரீவன் அப்போது அவரது துக்கத்தைப் போக்குஞ் சொற்களைப் பின்வருமாறு சொல்லலானான் :—" வீரரே! சாதாரண மநுஷ்யன் பரிதபிப்பதுபோலத் தாங்கள் ஏன் பரிதபிக்கின்றீர்கள்? தாங்கள் இவ்வாறு இருத்தல் தகுதி யன்று. செய்ந்நன்றி யறியாதவன் சிநேகத்தை விடுவது போல, தாங்கள் சோகத்தை அகற்றுங்கள். இந்த சமுத்

திரத்தில் சேதுகட்டி, அதன் வழியாக நாம் ராக்ஷச ராஜனுடைய நகரத்தை எவ்வாறு சென்று காணவேண்டுமோ அவ்வாறு தாங்கள் இப்பொழுது உபாயத்தை ஆலோசியுங்கள். திரிகூட மலையின் உச்சியிலிருக்கும் இலங்கையை நாம் பார்த்தமாத்திரத்தாலேயே, இராவணன் போரில் வதைக்கப்பட்டானென்று உறுதிகொள்ளுங்கள். ஐயா! தாங்களோ புத்திமான்களுட் சிறந்தவர்கள்; சாஸ்திரங்களெல்லாவற்றையும் நன்கு கற்றறிந்தவர்கள்; ஆகையால், இப்பொழுது என்னைப்போன்ற மந்திரிகளுடன் கூடிச் சத்துருவை வெல்லுவது தங்களுக்குத் தகுதியானது."

இராமர், யுக்தியுக்தமான சுக்கிரீவன் சொல்லைக் கேட்டு, ஒப்புக்கொண்டு, அநுமானை நோக்கிச் சொல்லலானார் :—"எனது தவத்தின் மகிமையினாலே சேதுவைக் கட்டி முடித்தாவது, வற்றச்செய்தாவது இக்கடலைக் கடக்க எப்படியும் எனக்கு வல்லமையுண்டு. அநுமானே! இலங்கையை ஒருவராலும் தகைய முடியாதென்கிறீர்களே; அதில், எத்தனை கோட்டைகளிருக்கின்றன? அவற்றை எனக்குச் சொல்லுக. அரக்கர்களுடைய சேனையின் அளவு, வாயில்களில் துர்க்கங்களின் அமைப்பு, இலங்கை பாதுகாக்கப்பட்டுவரும் விதம், அரக்கர்களின் மாளிகைகள் ஆகிய இவைகளெல்லாவற்றையும் நேரிற் கண்டதுபோல அறிய விரும்புகிறேன்" என்றார்.

அநுமான், இவ்விதமாக இராமர் சொன்னதைக் கேட்டு, பின்வருமாறு சொல்லலானார் :—"கொழுத்த யானைகளால் நிரம்பிய இலங்கை, உத்ஸாகமுள்ள ஜனங்களைக் கொண்டிருக்கிறது; பெரிய ரதங்கள் நிறைந்து, அரக்கர்களின் கூட்டங்கள் எங்கும்சஞ்சரிக்கும்படி விசாலமாக விளங்குகின்றது; குதிரைகள் அதிகமாக நிரம்பிய அப்பட்டணத்துள் சத்துருக்கள் எளிதில் நுழையமுடியாது. உறுதியாக அமைக்கப்பட்ட கதவுகளையுடையனவும் உழலைமரங்களைக் கொண்டனவும் மிகப்பெரியன

வும் விசாலமுமாகிய நான்கு வாயில்கள் அந்நகரத்திலிருக்கின்றன ; அவைகளில் அம்புகளைக் கக்குவனவும் கற்களையெறிவனவாகவுமாகிய வலிய பெரிய யந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்நகரத்தின் மதில் பொன்னு லெடுக்கப்பட்டு வெகு உன்னதமாக விளங்குகின்றது. அம்மதிலைச் சூழ்ந்து, எல்லாப் பக்கங்களிலும், குளிர்ந்த ஜலம் நிரம்பி அழகாய், அளவிடமுடியாத ஆழமுடையனவாய், முதலைகளும் மீன்களும் நிரம்பியுள்ள பயங்கரமான அகழிகள் வெட்டப்பட்டிருக்கின்றன. அவ்வகழிகளைக் கடக்க நான்கு வாயில் வழிகளிலும் நீண்ட பாலங்கள் இருக்கின்றன. அவைகளில் அநேகவித யந்திரங்களும் வாயிற் காவலர் வாழும் பெரிய வீட்டு வரிசைகளும் இருக்கின்றன. சத்துருக்களின் சைனியங்கள் வரும்பொழுது அந்நகரத்தை அப்பாலங்கள் காக்கின்றன ; அப்போது அப்பாலங்கள் யந்திரங்களால் உட்புறமாக இழுத்துக் கொள்ளப்படுகின்றன. அப்பாலங்களுக்குள் ஒரு பாலம் ஒருவராலும் அசைக்க முடியாதபடி வெகு உறுதியாகக் கட்டப்பட்டிருக்கின்றது. இராமரே ! இராவணனே, சூது முதலிய தீக்குணங்களின்றி அவதானமாக இருந்துக் கொண்டும் ஜாக்கிரதையாக தினந்தோறும் தனது சைனியங்களை நேரில்வந்து பார்த்துக்கொண்டும் யுத்தத்துக்குச் சித்தமாகக் காத்துக்கொண்டிருக்கிறுன்.

"தங்கள் கைகளிற் சூலங்களைப் பிடித்துக்கொண்டு அரக்கவீரர்கள் பதினுயிரம் பெயர்கள் அவ்விலங்கையின் கீழைக் கோட்டை வாயிலிற் காவலிருக்கின்றார்கள். அக்கோட்டையின் தென்வாயிலில் லக்ஷம் அரக்கர்கள் காவல் காக்கின்றார்கள் ; அவர்கள் நான்குவித சேனைகளுடன் தங்களுக்குமேற் போர்வீரர்களில்லை யென்னும்படி போர்புரிய வல்லவர்கள். அக்கோட்டையின் மேலை வாயிலில் பத்துலட்சம் அரக்கர்கள் இருக்கிறார்கள். வடக்குக் கோட்டை வாயிலில் ஆயிர லக்ஷம் அரக்கர்கள் இருக்கின்

றூர்கள். நகரத்தின் நடுவிலோ ஒருவராலும் தகைய முடியாத அரக்கர்கள் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக் கணக்காகவும் கோடிக்கணக்காகவும் இருக்கின்றூர்கள்.

"ஆனல், நானே அப்பாலங்களை யெல்லாம் முறித் தேன். அகழிகளைத் தூர்த்தேன். இலங்கையையே தீ யிட்டு எரித்தேன்; மதில்களையும் இடித்தேன்; பேருரு வத்தையுடைய அரக்கர்களில் ஒரு பாகத்தை நாசம் பண்ணினேன். எவ்விதமாகவாவது நாம் சமுத்திரத்தைத் தாண்டிவிடுவோமானல் வானரர்களால் இலங்கை அழிக் கப்பட்டதென்றே உறுதியாக எண்ணுங்கள். இலங் கையை யழிக்க, அங்கதன், த்விவிதன், மைந்தன், ஜாம்ப வன், பநஸன், நளன், சேனைத்தலைவனுன நீலன் இவர் கள் மட்டுமே போதும்; மற்றை வானரசேனை தங்களுக்கு எதற்கு? இவர்கள் சமுத்திரத்தைக் கடந்தவர்களாய் இராவணனுடைய பெரிய பட்டணத்திற் புகுந்து, மலை காடு அகழி வாயில் பிராகாரம் மாளிகை இவைகளோடு கூடிய இலங்கையையே பிளந்து, இங்குத் தூக்கிவந்து விடுவார்கள். இவ்வண்ணம் செய்யுமாறு சீக்கிரமாக இவ்வானர சேனைகளுக்குள் ஸாரமான அங்கதன் முதலி யோர்க்கு கட்டளையிடுங்கள். நல்ல வேளையிலே பிரயா ணத்தை விரும்புங்கள்."

அநுமான் சொன்னதைக் கேட்டு இராமர் சுக்கிரீவனை நோக்கி பின் வருமாறு சொல்லலானூர்:—"பயங்கரமான அரக்கனுடைய நகரமென்று எந்த இலங்கையைப்பற்றித் தெரிவிக்கின்றீரோ, அப்பட்டணத்தை நான் சடிதியில் நாசம் பண்ணிவிடுகின்றேன்: இது உண்மை. சுக்ரீவ! இந்த முகூர்த்தத்தில் பிரயாணத்தைத் தொடங்க விரும்பு கின்றேன். சூரியபகாவான் உச்சியிலிருக்கும் இம்முகூர்த் தந்தான் வெற்றிக்கு எடுத்த முகூர்த்தம். இன்று உத்தர நட்சத்திரம்: நாளைக்கோ சந்திரன் ஹஸ்தநட்சத்திரத் துடன் சேர்கின்றூன். ஆகையால், சுக்கிரீவ! நாம் இப்

வும் விசாலமுமாகிய நான்கு வாயில்கள் அந்நகரத்திலிருக்கின்றன; அவைகளில் அம்புகளைக் கக்குவனவும் கற்களை யெறிவனவாகவுமாகிய வலிய பெரிய யந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்நகரத்தின் மதில் பொன்னுலெடுக்கப்பட்டு வெகு உன்னதமாக விளங்குகின்றது. அம்மதிலைச் சூழ்ந்து, எல்லாப் பக்கங்களிலும், குளிர்ந்த ஜலம் நிரம்பி அழகாய், அளவிடமுடியாத ஆழமுடையனவாய், முதலைகளும் மீன்களும் நிரம்பியுள்ள பயங்கரமான அகழிகள் வெட்டப்பட்டிருக்கின்றன. அவ்வகழிகளைக் கடக்க நான்கு வாயில் வழிகளிலும் நீண்ட பாலங்கள் இருக்கின்றன. அவைகளில் அநேகவித யந்திரங்களும் வாயிற்காவலர் வாழும் பெரிய வீட்டு வரிசைகளும் இருக்கின்றன. சத்துருக்களின் சைனியங்கள் வரும்பொழுது அந்நகரத்தை அப்பாலங்கள் காக்கின்றன; அப்போது அப்பாலங்கள் யந்திரங்களால் உட்புறமாக இழுத்துக் கொள்ளப்படுகின்றன. அப்பாலங்களுக்குள் ஒரு பாலம் ஒருவராலும் அசைக்க முடியாதபடி வெகு உறுதியாகக் கட்டப்பட்டிருக்கின்றது. இராமரே! இராவணனே, சூது முதலிய தீக்குணங்களின்றி அவதானமாக இருந்துக்கொண்டும் ஜாக்கிரதையாக தினந்தோறும் தனது சைனியங்களை நேரில்வந்து பார்த்துக்கொண்டும் யுத்தத்துக்குச் சித்தமாகக் காத்துக்கொண்டிருக்கிறான்.

"தங்கள் கைகளிற் சூலங்களைப் பிடித்துக்கொண்டு அரக்கவீரர்கள் பதினாயிரம் பெயர்கள் அவ்விலங்கையின் கீழைக் கோட்டை வாயிலிற் காவலிருக்கின்றார்கள். அக்கோட்டையின் தென்வாயிலில் லக்ஷம் அரக்கர்கள் காவல் காக்கின்றார்கள்; அவர்கள் நான்குவித சேனைகளுடன் தங்களுக்குமேற் போர்வீரர்களில்லையென்னும்படி போர் புரிய வல்லவர்கள். அக்கோட்டையின் மேலை வாயிலில் பத்துலட்சம் அரக்கர்கள் இருக்கிறார்கள். வடக்குக் கோட்டை வாயிலில் ஆயிர லக்ஷம் அரக்கர்கள் இருக்கின்

ளூர்கள். நகரத்தின் நடுவிலோ ஒருவராலும் தகைய முடியாத அரக்கர்கள் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக் கணக்காகவும் கோடிக்கணக்காகவும் இருக்கின்றூர்கள்.

"ஆனுல், நானே அப்பாலங்களை யெல்லாம் முறித் தேன். அகழிகளைத் தூர்த்தேன். இலங்கையையே தீ யிட்டு எரித்தேன்; மதில்களையும் இடித்தேன்; பேருரு வத்தையுடைய அரக்கர்களில் ஒரு பாகத்தை நாசம் பண்ணினேன். எவ்விதமாகவாவது நாம் சமுத்திரத்தைத் தாண்டிவிடுவோமானுல் வானரர்களால் இலங்கை அழிக் கப்பட்டதென்றே உறுதியாக எண்ணுங்கள். இலங் கையை யழிக்க, அங்கதன், த்விவிதன், மைந்தன், ஜாம்ப வன், பநஸன், நளன், சேனைத்தலைவனை நீலன் இவர் கள் மட்டுமே போதும்; மற்றை வானரசேனை தங்களுக்கு எதற்கு? இவர்கள் சமுத்திரத்தைக் கடந்தவர்களாய் இராவணனுடைய பெரிய பட்டணத்திற் புகுந்து, மலை காடு அகழி வாயில் பிராகாரம் மாளிகை இவைகளோடு கூடிய இலங்கையையே பிளந்து, இங்குத் தூக்கிவந்து விடுவார்கள். இவ்வண்ணம் செய்யுமாறு சீக்கிரமாக இவ்வானர சேனைகளுக்குள் ஸாரமான அங்கதன் முதலி யோர்க்கு கட்டளையிடுங்கள். நல்ல வேளையிலே பிரயா ணத்தை விரும்புங்கள்."

அநுமான் சொன்னதைக் கேட்டு இராமர் சுக்கிரீவனை நோக்கி பின் வருமாறு சொல்லலானூர்:—"பயங்கரமான அரக்கனுடைய நகரமென்று எந்த இலங்கையைப்பற்றித் தெரிவிக்கின்றீரோ, அப்பட்டணத்தை நான் சடுதியில் நாசம் பண்ணிவிடுகின்றேன்: இது உண்மை. சுக்ரீவ! இந்த முகூர்த்தத்தில் பிரயாணத்தைத் தொடங்க விரும்பு கின்றேன். சூரியபகாவான் உச்சியிலிருக்கும் இம்முகூர்த் தந்தான் வெற்றிக்கு எடுத்த முகூர்த்தம். இன்று உத்தர நட்சத்திரம்: நாளைக்கோ சந்திரன் ஹஸ்தநட்சத்திரத் துடன் சேர்கின்றூன். ஆகையால், சுக்கிரீவ! நாம் இப்

பொழுதே வானரர்களெல்லோரும் சூழப் பிரயாணப் படுவோம். அன்றியும் இப்பொழுது தோன்றும் நிமித்தங் கள் நமது பாக்கியத்தை எடுத்துக்காட்டும். நான் இரா வணனைக் கொன்று சீதையை மீட்டுவருவேன். எனது இடக்கண்ணின் மேலிமை துடிப்பதானது என் மனோரத மாகிய வெற்றி கைகூடியதென்று வெளியிடுகின்றது போலும்".

"வெகு பலசாலிகளான வானரர்கள் நூறுயிரவர் தன்னைச் சூழ்ந்து நடக்க நீலன், இச்சேனைக்கு முன்பாக வழியை நன்றாகச் சோதித்தலின்பொருட்டுப் போகட்டும். வானரர்களுட் சிறந்தவனான ரிஷபன் வானர சேனையின் வலப்பக்கத்தைப் பாதுகாத்துக்கொண்டு போகட்டும். அடக்கமுடியாமல் மதயானைபோல வெகுபலத்துடன் விளங்கும் கந்தமாதனன் வானரசேனையின் இடப்பக்கத் தைப் பாதுகாத்துக்கொண்டு போகட்டும். இந்திரன் ஐரா வதத்தின்மேல் ஏறிச்செல்வதுபோல, நான் அநுமான் மேல் ஏறி வானரசேனைகளின் மனதைக் களிப்பித்துக் கொண்டு, சேனைகளின் நடுவிற் செல்வேன். யமதர்மராஜ னுக்கு ஒப்பான இலக்ஷ்மணன் அங்கதன்மேல் ஏறிக் கொண்டு செல்லட்டும். மகாபலம் பொருந்திய ருக்ஷர் களுக்கு மன்னன் ஜாம்பவன் ஸுஷேணன் வேகதர்சி யென்னும் வானரன் ஆகிய இம்மூவரும், வானரசேனை யின் வயிற்றுப்புறத்தை பாதுகாத்துக்கொண்டு வரட்டும்" என்றார்.

சுக்கிரீவன், ஸ்ரீராமரிட்ட கட்டளையைக் கேட்டதும் மஹாவீரர்களான வானரர்களுக்கு உடனே புறப்படு மாறு கட்டளையிட்டான். சுக்கிரீவனும் இலக்ஷ்மணனும் மரியாதையுடன் தொடர்ந்துவர, தர்மாத்மாவாகிய இராமர் சைனியங்களுடன் தென்திசையை நோக்கிப் பிரயாணமானார். அப்பொழுது இராமர் நூற்றுக்கணக் காகவும் நூறுயிரக் கணக்காகவும் கோடிக்கணக்காகவும்

பதினுயிரகோடிக் கணக்காகவும் யானைகளைப்போன்ற வானரர்கள் தம்மைச் சூழ்ந்துவரச் சென்றூர்.

இராமர் மகேந்திரமலையைச் சேர்ந்ததும் அநேக மரங்களடர்ந்து அழகாக விளங்கிய அதன்சிகரத்தின்மேல் ஏறலானுர். அச்சிகரத்தைச் சேர்ந்து ஆமை மீன் முதலிய ஜலஜந்துக்களால் நிரம்பிய சமுத்திரத்தைக் கண்ணுற்றூர். மலையை விட்டு இறங்கி சுக்கிரீவனுடனும் இலக்ஷ்மணருடனும்அக்கடற்கரையிலிருந்த காட்டிற் புகுந்து கடற்கரையையடைந்து இராமர் பின்வருமாறு சொல்லலானுர் :- "சுக்கிரீவா! நாம் எல்லோரும் இப்பொழுது இச்சமுத்திரம் வந்து சேர்ந்துவிட்டோம். இங்குவந்த பிறகு, சமுத்திரத்தைக் கடப்பதைப் பற்றி முன்னே நமக்கு உண்டான கலக்கம் மீண்டும் உண்டாகின்றது. இனி அக்கரை கண்ணுக்குத் தென்படாத இப்பெருங் கடலை பேருபாயத்தாலன்றி நாம் எவ்வாறு தாண்டமுடியும்? ஆகையால் நமது சேனைகளை நாம் இவ்விடத்திலேயே தங்குவிப்போம். எவ்வாறு இக்கடலை வானரசேனை கடப்பதென்பதைப்பற்றி மந்திராலோசனை பண்ணுவோம்" என்றூர். இராமர் சொன்னதைக் கேட்டதும் சுக்கிரீவனும் இலக்ஷ்மணரும் மரங்களடர்ந்த அக்கடற்கரையில் வானர சேனைகளை இறக்கினுர்கள்.

சமுத்திரமானது ஆகாயத்தைப்போல் விளங்கிற்று. ஆகாயமும் சமுத்திரம்போல் விளங்கிற்று. சமுத்திரத்துக்கும் ஆகாயத்துக்கும் ஒருவகை வேறுபாடும் தோன்றுமலிருந்தது. இரத்தினங்களையுடைய கடலின் ஜலம்ஆகாயத்தோடும் நட்சத்திரங்களையுடைய ஆகாயம் கடலின் ஜலத்தோடும் வேறுபாடு தோன்றுமல் ஒரேநிறத்தனவாய் விளங்கின. மேலெழும் மேகங்களைக்கொண்ட ஆகாயம், உயரவெழுந்திரைகளையுடைய சமுத்திரம், ஆக இரண்டுக்கும் அப்பொழுது வேறுபாடு யாதொன்றுமில்லை. யுத்தகளத்திற் பெரும்பேரிகை வாத்தியங்கள் பலவிடங்

களில் இடிக்கப்படுவதுபோல சமுத்திரத்திற் கிளம்பிய பேரலைகள் ஒன்றுடன் ஒன்று மோதி பயங்கரமாகச் சத்தித்துக்கொண்டிருந்தன. அப்போது, திரைகள் கொந்தளித்து ஒலிக்க, திக்பிரமைகொண்டவன் போலத் தோன்றுகின்ற அச்சமுத்திரத்தை வானர வீரர்கள் கண்டுகளிப்படைந்தார்கள்.

39. இராவணன் மந்திரிமார்களின் சபை கூடுதல்

ராக்ஷசராஜனுன இராவணன், மகாத்துமாவான இந்திரன்போல் அநுமான் இலங்கையிற்செய்த பயங்கரமான கொடுஞ்செயல்களைப் பார்த்து, வெட்கத்தாற் சிறிது தலை தாழ்ந்து எல்லா வரக்கர்களையும் நோக்கிப் பின்வருமாறு சொல்லுற்றான்:—" ஒரு வானரன், எவராலும் வெல்லப்படாத இலங்கையில் தனியாகப் புகுந்து அழித்து சீதையையும் பார்த்துவிட்டுச் சென்றான்; நமது நகரத்துப் பிரதான அரண்மனையை அழித்தான்; பெயர் பெற்ற அரக்கர்கள் அநேகரை வதைத்தான்; அநுமான் ஒருவனே இலங்கை முழுவதையும் ஒருகலக்குக் கலக்கினான். ஆகையால் இனி எவ்விதமாகச் செய்தால் நன்றாகச் செய்ததாகுமோ, எது நமக்கு ஹிதமானதோ அதனைச் சொல்லுங்கள்; அவ்வாறே செய்வேன். உங்களுக்கு மங்களமுண்டாகுக. வெற்றி யென்பது மந்திராலோசனையிலிருந்து உண்டாகிறதென்று பெரியோர் சொல்லுகின்றார்கள். ஆகையால், மகாபலவான்களே! இராமனை வெல்வதைப்பற்றி ஆலோசிக்க விரும்புகின்றேன். மஹாவீரர்களான வானரர்கள் ஆயிரக்கணக்காகச் சூழ இராமன் நம்மை எதிரிடுமாறு இலங்கையைநோக்கி வந்துகொண்டிருக்கின்றான். இராமன், தனது வல்லமையால் வற்றச்செய்தாவது, வேறு உபாயஞ்செய்தாவது, இச்சமுத்திரத்தைத் தாண்டி தனது தம்பியுடனும் வானர சேனையுடனும் இவ்விடம் வந்துவிடுவானென்பது நிச்சயம்."

மகாபலவான்களான அரக்கர்களைப்பார்த்து இராவணன் அவ்வண்ணம் சொன்னதும், அவர்களெல்லோரும் அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு இராவணனை நோக்கி சத்துருவின் பலத்தையறியாதவர்களாய் நீதிசாஸ்திரத்திற்குமாருக தங்களுடைய அறிவின்மையாற் சொல்லலானார்கள்: "வேந்தே! மிகவும் பெரிய நமது சைனியம் உழலைத்தடி, நீண்டதடி, கத்தி, சூலம், பட்டஸம் முதலிய ஆயுதங்களால் நிரம்பி நிற்கின்றதே; தங்களுக்கு ஏன் இப்பொழுது துக்கமுண்டாக வேண்டும்? தாங்கள் போகவதி யென்ற நகரத்துக்குச் சென்று அங்கிருந்த பன்னகர்களைப்போரில் வென்றவர்களாயிற்றே. யக்ஷர்கள் பலராற் சூழப்பட்டு கைலாஸ மலையினுச்சியிலே வசித்துக் கொண்டிருந்த குபேரனோடு பெரும்போரிட்டு அவரைத் தாங்கள் வசமாக்கிக்கொண்டீர்களே. யக்ஷர்களை யெல்லாம் போர்செய்து கொன்றும், நடுநடுங்கச் செய்தும், கைலாஸமலையினுச்சியிலிருந்து தாங்கள் இந்தப் புஷ்பக விமானத்தைப் பறித்துக்கொண்டுவந்தீர்கள். யமனது சேனைசமுத்திரத்திற் புகுந்து, ராஜரே! தாங்கள் மிக்க வெற்றிகொண்டு, காலனைத் தங்களிடம் நெருங்காமலிருக்கும்படி தள்ளிவைத்தீர்கள். பெருவேந்தரே! தாங்கள் நில்லுங்கள்; தாங்கள் ஏன் சிரமப்படவேண்டும்? மிக்க தோள்வலிமையுடைய இந்த இந்திரஜித்து ஒருவரே வானரர்களையெல்லாம் நாசஞ்செய்து விடுவார். இந்திரஜித்தொருவரைத் தாங்கள் அனுப்புங்கள்; அவர் எல்லா வானர சேனைகளுடனும் இராமரை நாசமாக்குவார்.' என்றார்கள்.

அவர்களையெல்லாம் தடுத்து விபீஷணர் அஞ்சலி பந்தம் பண்ணிக்கொண்டு பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்:—"ஐயா! எந்தக் காரியத்தை சாமம் பேதம் தானம் என்ற மூன்றுவித உபாயங்களாற் சாதிக்க முடியவில்லையோ, அப்பொழுதுதான் அக்காரியத்தைப்

பராக்கிரமத்தால் முடிக்க வேண்டுமென்று புத்திமான்கள் சொல்லியிருக்கின்றார்கள். பகைவர்கள் ஜாக்கிரதையில்லாதவர்களாகவாவது, வெறுத்தவர்களாகவாவது, பாக்கிய மற்றவர்களாகவாவது இருக்கும் பட்சத்தில், நல்ல மந்திரிகளுடன் கூடி ஆலோசித்து, நீதி முறைப்படி அப்பகைவர்களிடம் காட்டும் வல்லமை வெற்றியைக் கொடுக்கும். இராமரோ வெகு ஜாக்கிரதை யுள்ளவர்; எப்பொழுதும் வெற்றியடையும் ஆவல்கொண்டு அதற்குத்தகுந்த பலத்துடனிருப்பவர்; கோபத்தை யடக்கியிருப்பவர்; ஒருவராலும் எளிதில் தகையக்கூடாதவர்; அவ்வித வீரரை நீங்கள் எவ்வாறு வெல்ல விரும்புகின்றீர்கள்? பெருநதிகளெல்லாவற்றிக்கும் அடைக்கலமாய் வெகு பயங்கரமாயிருக்கும் இந்தச்சமுத்திரராஜனை அநுமான் தாண்டி செய்வதற்கு அரிய இவ்வகைத் தொழிலைச் செய்தானே! இதையாவது கருதுங்கள். அரக்கர்களே! நமது பகைவர்களுடைய பலமும் வல்லமையும் அளவிடா முடியாமலிருக்கின்றன; ஆகையால் நீங்கள் அவர்களைத் திடீரென்று அலட்சியமாக எண்ணக்கூடாது.

"நமது மன்னவருக்கு இராமர் என்ன கெடுதி செய்தார்? என்ன காரணத்துக்காக ஜனஸ்தானத்திலிருந்து அவ்வீரருடைய கற்புள்ள மனைவியைக் கவர வேண்டும்? நீதிவழுவாமல் நடந்து வரும் அவ்வுத்தம புருஷருடன் வீண் பகை விளைத்துக்கொள்ளுதல் நமக்குத் தகுதியன்று. ஆதலால் சீக்கிரமாகச் சீதாதேவியை இராமருக்குக் கொடுத்துவிடுங்கள். யானைகள் குதிரைகள் நிரம்பிப் பலவகை இரத்தினங்கள் நிறைந்து விளங்கும் இவ்விலங்கையை இராமர் தமது பாணங்களால் நாசம்பண்ணுவதற்குமுன்னே சீதாதேவியை அவரிடம் கொடுத்துவிடுங்கள். வெகு பயங்கரமானவும் வெல்ல முடியாததுமாகிய பெருவானர சைனியம் நமது இலங்கையைத் தகையு முன்னமே சீதாதேவியைக் கொடுத்து

விடுங்கள். தாங்களே இராமரிடம் அவருடைய அன்பான மனைவியைக் கொடாத பக்ஷத்தில் இவ்விலங்கை நாசமாய்விடும்; வீரர்களான எல்லா அரக்கர்களும் அடியோடு அழிந்துபோய் விடுவார்கள். நான் தங்களுக்கு உறவுமுறையானதலால் தங்களை வேண்டிக்கொள்ளுகின்றேன்: நான் சொல்வதைக் கேளுங்கள். என் சொல் உங்களுடைய நன்மையை நாடியதாகவும், உண்மையை எடுத்துக்காட்டுவதாகவுமிருக்கின்றது; சீதையை இராமரிடம் கொடுத்துவிடுங்கள். என்றைய தினம் இவ்விடம் சீதை வந்தாளோ, அன்று முதல் நமது பட்டணத்தில் அநேக அபசகுனங்கள் காணப்படுகின்றன. நானோ கண்டதையும் கேட்டதையும் ஒன்றும் ஒளிக்காமல் எடுத்துச் சொல்லவேண்டியவன். நியாயம் இன்னதென்பதைச் சீர்தூக்கி அவ்வண்ணம் தாங்கள் நடக்கவேண்டும்." என்று விபீஷணர் இராவணனை நோக்கி நன்மையை நாடிச் சொல்லிமுடித்தார்.

பின்னர் கும்பகர்ணன் வெகு கோபங் கொண்டு சொல்லலானான்:—"மஹாராஜரே! இவ்வாலோசனைகளெல்லாம் சீதையைக் கொணர்தற்கு முன்னமே தாங்கள் எங்களுடன் ஆலோசித்திருந்தால் சரியாக இருந்திருக்கும். இராவணரே! எவனொருவன் இராஜ காரியங்களை நியாயமாகப் பார்த்துச்செய்கிறானோ அவ்வரசனது புத்தி எல்லாருடைய ஆலோசனையாலும் ஒரு விதமான நிச்சயத்துக்கு வந்திருக்குமாதலால் அவன் பின்னால் ஒரு வகைப் பரிதாபத்தையும் அடைய மாட்டான். எவனொருவன் உபாயங்களை மந்திரிமார்களுடன் ஆலோசிக்காமல் அக்கிரமமாகச் செய்கிறானோ, அவனுடைய காரியங்கள் அசுசியான பாத்திரத்தில் வைக்கப்பட்ட அவிசுகள்போல் வீணாய் விடும். எவனொருவன் முன் செய்ய வேண்டிய காரியத்தைப் பின்னும் பின் செய்ய வேண்டிய காரியத்தை முன்னும் செய்கிறானோ அவன் நீதியநீதிகளை உணரா

தவனே. தாங்கள் ஆலோசிக்காமல் இந்தப் பெரும் பாவ காரியத்தைச் செய்து விட்டீர்கள்; விஷங் கலந்த மாமிசம் தன்னைப் புசிப்பவனை கொல்வதுபோல இராமர் இது வரையில் தங்களைக் கொல்லாமலிருப்பதே ஆச்சரியம். ஆனாலும் நான், தங்களுடைய சத்துருக்களை யெல்லாம் கொன்று, தாங்கள் எடுத்துக் கொண்ட இக்காரியத்தைச் சரியான காரியமாகப் பண்ணி வைக்கின்றேன்; தாங்கள் கவலையற்றிருங்கள். எண்டிசைகளுக்கும் அதிபதியாக விளங்கும் மன்னவரே! இந்திர சூரியர்களாயிருந்தாலும், அக்கினி வாயுக்களாயிருந்தாலும், குபேர வருணர்களா யிருந்தாலும், தங்களுடைய சத்துருக்களை நான் வதைக்கின்றேன். மலைபோன்ற எனது தேகத்தையும் கூரான கடைவாய்ப் பற்களுடன் நான் செய்யும் அட்டஹாஸத்தையும் பெருமலைத் தடியெடுத்து நான் போர் புரிவதையும் கண்டால் இந்திரன்கூடப் பயப்படுவான்.''

வெகு பலசாலியாகிய மஹாபார்சுவன் இராவணன் கோபமாயிருப்பதை யறிந்து ஒரு முகூர்த்த காலம் ஆலோசித்து கூப்பிய கையனாய் பின் வருமாறு சொல்லலானான்:—
"எவனொருவன் பாம்புகளாலும் மற்றும் பல விலங்குகளாலும் நிரம்பி யிருக்குங் காட்டுக்குள் தேனைப் பருக வேண்டுமென்ற விருப்பத்தோடு புகுந்து தேனைப்பெற்றும் குடிக்காமலிருக்கிறானோ அவன் மூடனேயாவன். சத்துருக்களை யடக்கும் வேந்தே! எல்லாருக்கும் மேலாகவிருக்கும் தங்களுக்கு மேலானவர் யார் இருக்கின்றார்கள்? ஆகையால் தாங்கள் தங்களுடைய சத்துருக்கள் தலையில் காலை வைத்ததாகக் கொண்டு சீதையுடன் சுகமாக வாழுங்கள்.''

மகாபார்சுவன் இவ்வண்ணஞ் சொன்னதும் அவனை மெச்சி ராக்ஷச ராஜன் மறுமொழி சொல்லுகின்றான் :—
"என் வேகமோ சமுத்திரத்தின் வேகத்துக்கு ஒப்பானது; என்னுடைய போக்கோ வாயுவுக்குச் சமானமானது.

இவைகளொன்றையும் இராமன் அறியான்; ஆதலால் அவன் என்னை எதிர்க்க வந்திருக்கின்றான். தனது குகையிற் படுத்துத் தூங்குஞ் சிங்கம்போலவும் உறங்கும் யமன் போலவும் கோபித்துக் கொள்ளுதற்கு உரியவனாகிய என்னை எவன் தான் தட்டி யெழுப்பத் துணிவான்? வச்சிராயுதத்துக்கு ஒப்பாக எனது வில்லிலிருந்து புறப்படும் நூற்றுக் கணக்கான பாணங்களால் நான் இராமனை கொள்ளிக் கட்டைகளால் யானையைக் கொளுத்துவதுபோல ஒரு நொடியிற் கொளுத்திவிடுவேன். பெருஞ் சைனியத்தால் சூழப்பட்ட நான் காலையில் உதிக்குஞ்சூரியன் நட்சத்திரங்களின் காந்தியை வாங்கிவிடுவது போல இராமனுடைய பலம் முழுவதையும் இழுத்து விடுவேன்'' என்றான்.

அரக்கர் தலைவனான இராவணன் சொன்ன சொல்லையும், கும்பகர்ணன் பேசின நிரர்த்தகமான பேச்சுக்களையும் விபீஷணர், கேட்டு, இராவணனை நோக்கி, நன்மையை நாடி, வெகு அர்த்தத்துடன் கூடிய சொற்களைப் பின் வருமாறு சொல்லுற்றார் :—''பெருமலையின் சிகரத்துக்கு ஒப்பான சரீரமமைந்து, கோர தந்தங்களையும் நகங்களையும் ஆயுதங்களாக வுடைய வானரர்கள், நமது இலங்கையை நோக்கி ஓடி வருமுன் தாங்கள் இராமரிடம் சீதா தேவியைக் கொடுத்து விடுங்கள். வச்சிராயுதம் போன்று வாயுவுக்கு ஒப்பான வேகத்தைக் கொண்ட பாணங்கள் இராமபிரானாற் பிரயோகிக்கப்பட்டு அரக்கர்களுள் முக்கியமானவர்களுடைய தலைகளைக் கவருமுன்னமே இராமரிடம் சீதாதேவியைக் கொடுத்து விடுங்கள். கும்பகர்ண இந்திரஜித்துக்களாவது, நமது அரசராவது, மகாபார்சுவ மகோதரர்களாவது, நிகும்ப கும்பர்களாவது, அதிகாயனாவது போர்முகத்தில் இராமருடைய எதிரில் நிற்க வல்லவரல்லர். வேந்தே! உம்மைச் சூரிய பகவானே காப்பாற்றினாலும், மருத்துக்கள் பாதுகாப்பினும், நீங்கள்

இந்திரன்மடியின்மேலேறி உட்கார்ந்தாலும், யமனுடைய ஸம்ரக்ஷணையிலிருந்தாலும், ஆகாயத்திற் பறந்தாலும், பாதாளத்திற் புகுந்துக் கொண்டாலும் உம்மை இராமர் உயிருடன் பிழைத்திருக்க விடார். எவனொருவன் பகைவருடைய பலம் இடம் சக்தி சித்திகள் தன்னுடையவற்றோடு ஒத்திருத்தல் குறைந்திருத்தல் மிக்கிருத்தல் என்ற இவைகளையெல்லாம் நன்றாக ஆலோசித்து தனது யஜமானனது நன்மைக்குக் குறைவு வராதபடி சொல்லுகின்றானோ அவன்தான் மந்திரியாவான்" என்றார்.

40. விபீஷணர் இராமரிடம் வருதல்

செவிக்கினியதும் நன்மை நாடியதுமான வார்த்தையை விபீஷணர் சொல்ல, இராவணன் காலத்தினால் ஏவப்பட்டவனாய், அவரை நோக்கிக் கடுமையாகச் சொல்லலானான் :—"சத்துருவோடும் கோபித்திருக்கின்ற பாம்போடும் வசித்தாலும் வசிக்கலாம்; நண்பன்போலத் தோன்றி சத்துருவினிடத்திற் பட்சபாதமுடையவனுடன் வசிக்கவே கூடாது. அடா அரக்கா! உலக முழுவதும் பங்காளிக் காய்ச்சலென்று சொல்லப்படுவதை நான் நன்றாக அறிவேன். . தாயாதிகளென்பவர்கள் எப்பொழுதும் தங்களுடைய தாயாதிகளுக்கு சங்கடமுண்டாகும் பொழுது களிக்கிறார்கள். தமது குடியில் முக்கியமானவனையும் படித்தவனையும் காரியங்களைத் தவறாது செய்து முடிப்பவனையும் தருமங்களை ஆராய்பவனையும் சூரனையும் எவன் இருக்கின்றானோ அவனை தாயாதிகள் லட்சியம் பண்ணாமல் நடக்கின்றார்கள்; சமயம் நேரும்பொழுது அவமானமும் செய்கிறார்கள். தங்கள் மனத்தில் தீமையை ஒளித்து வைத்துக்கொண்டு, வெளிக்கு மட்டும் எப்பொழுதும் நண்பர்கள்போல நடித்து வந்து, கொடிய செயல்களையே செய்யும் பங்காளிகள், சமயம் நேரிடும்பொழுது துரோகமும் பண்ணி விடுகின்றார்கள்: ஆகையால்

அவர்கள் எப்பொழுதும் பயத்தைத் தோற்றுவிப்பவர்களே. பசுக்களிடத்தில் வளத்துக்குக் காரணமும், அந்தணர்களிடத்தில் பஞ்சேந்திரிய நிக்கிரகமும், மகளிரிடத்திற் சஞ்சலமும்போல, தாயாதிகளிடத்தில் பயத்தையுண்டாக்குங் குணம் இயல்பாகவே யிருக்கின்றது" என்றான்.

இவ்வாறு இராவணன் கடுமையாகச் சொல்லவே விபீஷணர் தமது கதாயுதத்தைக் கையிலெடுத்துக் கொண்டு, தம்மைச் சேர்ந்த நான்கு அரக்கர்களுடன் ஆகாயத்திற் உயர கிளம்பி கோபங் கொண்டவராய் இராவணனை நோக்கிச் சொல்லலானார் :—"வேந்தே! தாங்கள் என் தமையனாராக இருக்கின்றீர்கள்; ஆகையால் உங்கள் மனத்துக்குத் தோன்றியபடி, நீங்கள் என்னைப்பற்றி என்னென்ன சொல்ல வேண்டுமோ அவைகளைச் சொல்லுக. தமையனார் மரியாதை செய்யத் தக்கவர்; தந்தைக்குச் சமானமானவர்; ஆனாலும் தாங்கள் தருமத்தின் வழியில் நிற்கவில்லை. இப்பொழுது தாங்கள் என்னை நோக்கிக் கடிந்து கூறிய சொற்கள் அவ்வளவும் பொய். அவைகள் என்னாற் சகிக்க முடியவில்லை. ஐயா! பத்து முகங்கள் பெற்றவரே! தங்கள் நன்மையை நாடி நான் நீதிகளை எடுத்துச் சொன்னேன். நல்லறிவில்லாதவர்கள் காலத்தின் கொடுமையிற் சிக்கிக் கொண்டு தங்களுடைய நன்மைக்காகச் சொல்லப்படுகின்ற இதங்களை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அரசரே! எப்பொழுதும் இனிமையாகவே பேசுங் குணமுள்ளவர்கள் இவ்வுலகத்தில் எங்கும் கிடைப்பார்கள்; கேட்பதற்கு இனிமையாயிராத நன்மை தரக்கூடியதை எடுத்துச் சொல்பவனும் அரியன்; அதைக் கேட்பவனும் அரியனே. கொழுந்து விட்டெரியும் தீப்போலப் பிரகாசிக்கின்ற பொன் மயமாயகி கூரான இராம பாணங்களால் நீங்கள் மாண்டு போவதைப் பார்க்க மனஞ் சகியாதவனாய் நான் போகி

றேன். என்னைவிட்டு எப்படியாவது சுகமடையுங்கள்" என்றார்.

விபீஷணர் இவ்வாறு இராவணனைக் கடிந்து சொல்லி ஒரு முகூர்த்த காலத்துக்குள் இராமரும் இலக்ஷ்மணரும் எவ்விடத்தில் இருந்தார்களோ அவ்விடம் நான்கு அரக்கர்களுடன் வர வானரராஜனான சுக்கிரீவன் அவர்களைப் பார்த்து மற்றை வானரர்களுடன் ஆலோசிக்கலானான். விபீஷணர் சுக்கிரீவனையும் வானரர்களையும் நோக்கி பெருங்குரலால் பின்வருமாறு சொல்லலுற்றார்:— "ஐயா! அரக்கர் வேந்தனாய் அரக்கனுமாய் கொடிய நடத்தையுள்ளவனுமாய் இராவணனென்று பிரசித்தி பெற்ற ஒருவன் இருக்கின்றான். அவனுக்குப் பின் பிறந்த சகோதரன் நான்; விபீஷணனென்னும் பெயருடையேன். அவ்விராவணன் ஜடாயுவென்பவரைக் கொன்று ஜனஸ்தானத்தினின்று சீதா தேவியையெடுத்துப் போய் அசோகவனிகையிலே மூச்சும் விடவொண்ணாதபடி சிறைப்படுத்திப் பரவசையாய் எளியவளாயிருக்குமாறு வைத்திருக்கின்றான்; அவளை ராக்ஷசிகள் பாதுகாக்கின்றார்கள். நானோ பல தடவை பல காரணங்களை எடுத்துக் காட்டி இராமரிடம் சீதாதேவியை விட்டுவிடுங்களென்று அவ்விராவணனுக்கு அறிவு மூட்டினேன். ஆயுள் முடிந்தவன் மருந்துண்பதை ஒப்புக்கொள்ளாதவாறு நான் சொன்ன நன்மையான வாக்கியங்களை தனது பொல்லாத காலத்தால் ஏவப்பட்டு அவ்விராவணன் ஒப்புக்கொள்ளவில்லை. அதுவுமல்லாமல் அவன் என்னை மிகவுங் கடிந்து பேசி ஓர் அடிமைபோல அவமானமுஞ் செய்தான். ஆகையால் நான் என் பெண்டு பிள்ளைகளை விட்டு இராகவரைச் சரணமாக வந்தடைந்தேன். எல்லா உலகங்களுக்கும் சரண்யராய் மகாத்துமாவாக விளங்கும் இராகவரிடம், நீங்கள் சடிதியிற் சென்று விபீஷணன் வந்திருக்கின்றானென்று என்னைப்பற்றிச் சொல்லுங்கள்" என்றார்.

இவ்வார்த்தையைக் கேட்டதும் சுக்கிரீவன் வெகு வேகமாகச் சென்று இலக்ஷ்மணருடைய முன்பாக இராமரிடம், வெகு பரபரப்புடன் பின்வருமாறு சொல்லலுற்றான் :—"இராவணனுக்குப் பின் பிறந்த சகோதரனாகிய விபீஷணனென்பானொருவன் நான்கு அரக்கர்களுடன் வந்து தங்களைச் சரணமாக அடைந்திருக்கின்றான். இவ்வரக்கன் நல்லவனாயிருந்தாலும் சரி கெட்டவனாயிருந்தாலும் சரி நன்றியற்ற இவனால் நமக்கு என்ன பயன்? இப்படிப்பட்ட பெருஞ்சங்கடத்திலிருக்கும் தமது தமையனைக் கைவிட்டு வந்த இவ்விபீஷணனை கைவிடாமலிருக்கத் தகுந்தவன் எவன்தான்" என்றான்.

இவ்வண்ணம் சுக்கிரீவன் சொன்ன சொல்லைக் கேட்டு, காகுத்தர் எல்லாரையும் பார்த்துப் புன்னகை கொண்டு சொல்லலுற்றார் :—"நண்பன்போல் அபிநயித்துக்கொண்டு வந்தவனையும் கைவிடலாமென்ற எண்ணம் எனக்கு ஒருபொழுதுமில்லை ; அவனிடம் குற்றங்கள் இருப்பினும் இருக்கட்டும் ; இதுதான் பெரியோர்கட்குப் பழிப்பை யுண்டாக்காதது. ஐயா! உலகத்தில் எல்லாத் தம்பிகளும் பரதனுக்கு ஒப்பாவார்களோ? சிறந்த தந்தையைப் பெற்றவர்களில், என்னைப் போன்ற புத்திரர்களும் இல்லை; உன்னைப் போன்ற சிநேகிதர்களும் இல்லை. சரணமாக அடைந்தவன் நொந்தவனாக இருப்பினும் சரி, கருவமுடையவனாக இருப்பினும் சரி, அவனையோக்கியமுள்ள ஒருவன் தனது உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றவேண்டும். ஒருகால் சரணம் புகப்பெற்றவன் பயத்தினாலாவது, பொருளாசையினாலாவது அறியாமையினாலாவது உண்மையாகத் தன்னாலியன்றமட்டும் தனது பலங்கொண்டு காப்பாற்றுமற்போனால் அவனது பாதகம் உலகத்தாரால் நிந்திக்கப்படும். காப்பாற்றும் நிலையிலிருக்கும் ஒருவன் பார்த்துக்கொண்டிருக்கும் போதே சரணமடைந்தவன் பாதுகாக்கப்படாமல் வதைக்

கப்படுவானேயானால், அச்சரணுகதன் அவ்வாறு தன்னை இரட்சியாதவனுடைய புண்ணியங்களனைத்தையும் எடுத்துக்கொண்டு புண்ணியப் பயனுன உலகத்திற் போய்விடுகின்றுன். சரணமென்று அடைந்தவர்களை இரட்சியாவிட்டால், இதில் இவ்வாறு பெருங்குற்றம் உண்டாகின்றது. இது நரகத்தை விளைத்து இதுவரையிற் கிடைத்திருக்கின்ற புகழ் பலம் வீரியம் முதலியவைகளையும் அகற்றிவிடும். ஒருகால் மானஸிகமாகப் பிரபத்தி பண்ணினவனுக்கும், 'நான் உனக்கு அடியவன்' என்று ஒருகால் இரந்தவனுக்கும் எல்லாப் பிராணிகளிடத்தினின்றும் அபயம் அளிக்கின்றேன்; இதுதான் என்னுடைய நோன்பு. வானர வேந்தே! இவரை அழைத்துவருக: நான் இவர்க்கு அபயங் கொடுத்துவிட்டேன்; இவர் விபீஷணராகவாவது இருக்கட்டும்; அன்றி ஸ்வயம் இராவணனேயாகவாவது இருக்கட்டும்'' என்று சொன்னுர்.

இராமர் அவ்வாறு அபயங்கொடுத்ததும் மகிழ்ச்சி கொண்டவராய் மஹாபுத்திமானுகிய விபீஷணர் வணக்கத்துடன் கீழ்நோக்கிக்கொண்டே தம்மிடத்தில் அன்பு கொண்டு உடன்வந்தவர்களுடன் ஆகாயத்தைவிட்டுப் பூமியில் இறங்கி ஸ்ரீராமருடைய சரணங்களில் வணங்கினுர். மேலும், விபீஷனர், அப்போது, தருமத்தோடு கூடியதாயும், அக்காலத்திற்குத் தக்கதாயும், எல்லார்க்கும் சந்தோஷத்தை விளைக்கக் கூடியதாயுமுள்ள சொற்களைச் சொல்லத்தொடங்கினுர் :—"நான் இராவணனுடைய தம்பி; அவனுல் அவமானம் பண்ணப்பட்டு எல்லாப்பிராணிகளுக்கும் அடைக்கலமாக விளங்கும் தங்களையே சரணமாக அடைந்திட்டேன். நான் இலங்கையையும் அதிலிருக்கும் எனது நண்பர்களையும் பொருளையும் விட்டிட்டு இங்கு வந்திருக்கின்றேன். என்னுடைய ராச்சியமும் உயிரும் சுகமும் தங்கள் அதீனமானவை' என்றுர்.

அவர் அவ்வாறு சொன்னதைக் கேட்டு இராமர் தமது வாக்கினால் அவரைச் சமாதானம்பண்ணி தமது கண்களால் அவரைப் பருகுகின்றவர்போலக் கடாட்சித்து "தாங்கள் என்னிடம் அரக்கர்களுடைய பலாபலங்களை உள்ளபடி சொல்லவேண்டும்" என்றார். இராமர் இவ்வண்ணம் கேட்கவே அந்த ராக்ஷசசிரேஷ்டர் இராவணனது பலம் முதலியவற்றைப்பற்றி மொழியலானார் :— "சக்கரவர்த்தித் திருமகனாரே! பிரமதேவரிடமிருந்து கிடைத்துள்ள வரத்தினால் கந்தர்வர் அரசர் அரக்கர் என்ற இவர்களில் ஒருவரும் இராவணனைக் கொல்ல முடியாது. இராவணனுக்குப் பின்னும் எனக்கு முன்னும் பிறந்த பராக்கிரமசாலியும் மஹாதேஜஸ்வியுமாகிய கும்பகர்ணனென்ற சகோதரன் போரில் இந்திரனுக்கு ஒப்பான பலமுள்ளவன். இந்திரஜித்தோ தனது விரல்களில் உடும்புத்தோலாலாகிய விரற்சட்டைகளை மாட்டிக் கொண்டு, எவராலும் பிளக்கமுடியாத கவசமணிந்து, கையில் வில்லை யெடுத்துக்கொண்டு, போரில் தான் நிற்குமிடத்தை ஒருவராலும் காணமுடியாதபடி நிற்பன். இராகவரே! போர்புரியும் வேளையில் அணிவகுத்த படையின் நடுவிலிருந்துகொண்டு இந்திரஜித்தென்பவன் அக்கினிபகவானைத் திருப்திசெய்வித்து தான் ஒருவருடைய கண்ணுக்கும் புலப்படாமல் நிற்கும் சக்தியை யடைந்து தனது சத்துருக்களை வதைக்கும் வல்லமையுள்ளவன். தங்களுக்குத்தோன்றும் உருவங்களைக் கொள்ளவல்லவர்களாய், மாமிசத்தைப் புசித்து, இரத்தத்தைக் குடித்துக் கொண்டு இலங்கையில் பதினாயிரங்கோடிக் கணக்காக அரக்கர்கள் இருக்கின்றார்கள். இவர்களின் உதவியைக் கொண்டுதான் ராக்ஷசேந்திரனாகிய இராவணன் லோகபாலர்களுடனும் போர்புரிந்தான்" என்றார்.

வெகு உறுதியான வீரியம்பொருந்திய இராமர், விபீஷணர் சொன்னதைக் கேட்டு, தமது மனத்தினுள்ளேயே

எல்லாவற்றையும் ஆராய்ந்தறிந்து, பின்வருமாறு சொல்லத் தொடங்கினர்:—"விபீஷணரே! இராவணனைப் பற்றித் தாங்கள் உண்மையாகச்சொன்ன, முன்பு நடந்துள்ள அந்தச் விஷயங்கள் எனக்கு நன்றாகத் தெரியும். நான் பிரகஸ்தனுடனும் பந்துக்களுடனும் தசக்கிரீவனைக் கொன்று தங்களை வேந்தராகச் செய்துவைக்கின்றேன். இதனைத் தங்களிடத்திற் சத்தியமாகச் சொல்லுகிறேன். குமாரர்களுடனும் சேனைகளுடனும் பந்துக்களுடனும் இராவணனை நான் போரிற் கொல்லாமல் அயோத்திக்குத் திரும்பிப்போகின்றதில்லை; எனது மூன்று சகோதரர்கள் மேலும் ஆணையிட்டுச் சொல்லுகின்றேன்!" என்றார்.

எளிதாகத் தொழில் செய்யவல்ல இராமருடைய சொற்களை தருமாத்துமாவாகிய விபீஷணர் கேட்டு தமது தலையால் இராமரை வணங்கி மறுபடியும் சொல்லத் தொடங்கினர்: "இராகவரே! என்னுடைய வலிமைக்கு இயன்றமட்டும் அரக்கர்களைக் கொல்வதில் துணைபுரிவதிலும் இலங்கையைத் தகைவதிலும் உதவிசெய்வேன்; நான் சேனையின் நடுவிலும் புகுவேன்" என்றார். இப்படிச் சொல்லும் விபீஷணரை இராமர் தழுவிக்கொண்டு வெகு சந்தோஷத்துடனே இலக்ஷ்மணரைப் பார்த்து, "அடைந்தோர்க்குப் பெருமையைக் கொடுப்பவனே! சமுத்திரத்திலிருந்து ஜலம் கொண்டுவருக; அந்தத் தீர்த்தத்தாற் பேரறிவினராகிய இவ்விபீஷணருக்கு சீக்கிரம் ராக்ஷசராஜாவாகப் பட்டாபிஷேகஞ் செய்துவைப்பாய். நான் அவரிடம் அநுக்கிரகங் கொண்டிருக்கிறேன்" என்றார். இவ்விதமாக இராமர் சொன்னதும் அவர் கட்டளைப்படி இளையபெருமாளும் வானரசிரேஷ்டர்கள் நடுவில் விபீஷணரை அரக்கர்வேந்தராகப் பட்டாபிஷேகஞ் செய்துவைத்தார். சக்கரவர்த்தித் திருமகனர் அவ்வண்ணம் விபீஷணரிடம் ஒருநொடிப் பொழுதிற் கருணைகொண்டதை வானரர்கள் பார்த்து வெகு சந்தோஷத்துடன்

கூச்சலிட்டு நன்று நன்றென்று மஹாத்மாவாகிய இராமரைக் கொண்டாடினார்கள்.

அதன் பிறகு, அநுமானும் சுக்கிரீவனும், விபீஷணரைப்பார்த்து, "மகாபலசாலிகளான வானரர்களடங்கிய இச்சேனையுடன் நாம் எல்லாரும் நதிகளுக்கும் நதங்களுக்கும் நாயகனாக விளங்கும் இந்தச் சமுத்திரத்தை வலிமை கொண்டு சைனியங்களுடன் யாங்களெல்லோரும் எப்படித் தாண்டுவோம்? இவ்விஷயத்தில் எங்களுக்கு உபாயமொன்றும் புலப்படவில்லை" என்றார்கள். இப்படி அவர்கள் தம்மைக் கேட்டவுடனே விபீஷணர் மறுமொழி சொல்லலானார்:—"வேந்தராகிய இராமர் சமுத்திரத்தைச் சரணமாக அடையவேண்டும். கரைகாணுதற்கு அரிய இந்தச்சமுத்திரம் சகரரால் வெட்டியுண்டாக்கப்பட்டது; பேரறிவினனாகிய சமுத்திரராஜன் தனது உற்பத்தியை நினைத்துக்கொண்டு இராமர் சகர குலத்திலுதித்தவராகையால் அவருடைய காரியத்தில் தவறாமல் உதவிசெய்வான்" என்றார். விபீஷணர் சொன்னதை சுக்கிரீவனும் இலக்ஷ்மணனும் ஆமோதிக்க, இராமர் அந்த சமுத்திரக்கரையில் தருப்பை படுக்கையில் யாக வேதிகையில் அக்கினிபோல படுத்தார்.

41. அணை கட்டுதல்

"இன்று எனக்கு மரணமாவது சம்பவிக்கவேண்டும்; அல்லது சமுத்திரத்தை கடத்தலாவது ஆகவேண்டும்" என்று நிச்சயித்து, இராமர் மனோவாக்காயங்களில் நியமமுள்ளவராய், தர்ம சாஸ்திரப்பிரகாரம் சமுத்திரராஜனைக் குறித்துப் படுக்கலானார். தருப்பை பரப்பிய வெறுந் தரையின் மேல் நோன்பு வழுவாமல் இராமர் படுத்திருக்கையில் மூன்றிரவுகள் கழிந்தன. இராமர் தகுதிக்கு ஏற்பப் பூஜித்தபோதிலும் மூடனான சமுத்திரராஜன் அப்போது இராமருக்குத் தரிசனங் கொடுக்கவில்லை.

அதன்மேல் இராமர் சமுத்திரராஜன்மீது அதிக கோபங் கொண்டவராய் தமது கடைக்கண்கள் சிவக்க தமது அருகிலிருந்த இலக்ஷ்மணரை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானார் :—"சமுத்திரராஜனுடைய செருக்கைப் பார்த்தாயா! நேரில் வருகின்றானில்லை. கோபமின்மை, பொறுமை, நேர்வழியாக நடத்தல், இனிமையாகப் பேசுதல் என்ற இந்த பெரியோர் குணங்கள் நற்குணமில்லாதவர்கட்கு அசாமர்த்தியமாகத் தோன்றுகின்றன. அறிவில்லாத ஜனங்கள் தற்புகழ்ச்சிசெய்தும் வஞ்சித்தும் கருணையற்றும் எல்லாரையுந்துரத்தியும் எல்லாரிடத்திலும் தண்டனை செய்தும் வருகின்ற மனிதனைக் கண்டு கௌரவிக்கிறார்கள். பலத்தினாலுண்டாகும் புகழ் சாமோபாயத்தால் உண்டாகின்றதில்லை; பராக்கிரமத்தால் தோன்றும் யசசும் சாமோபாயத்தால் உண்டாகமாட்டாது, போர்முகத்தில் வெற்றியென்பதும், லக்ஷ்மணனே! இவ்வுலகத்தில் சாமோபாயத்தால் உண்டாகமாட்டாது. இன்று சுறாமீன்கள் நிறைந்துள்ள இச்சமுத்திரமானது தன்து நீர் முழுவதும் என்பாணங்களாற் பிளக்கப்பட்டு மிதக்கின்ற சுறாமீன்களால் நிரம்புவதை நீ பார்க்கப் போகின்றாய். இச் சமுத்திரத்தை வற்றடிக்கப்போகின்றேன். வானரர்கள் தடையின்றி காலால் நடந்து செல்லட்டும்." என சொல்லிவிட்டு இராமர் தமது கையில் வில்லை யேந்திக் கோபத்தால் விழித்த கண்களையுடையவராய், கற்பாந்த காலத்தில் ஜ்வலிக்கும் அக்கினிபோலத் தகையமுடியாத உக்கிரமுடையவரானார். அவர் தமது பயங்கரமான வில்லை வளைத்து நாணேற்றி, உலக முழுவதும் நடுநடுங்கும்படியாக, இந்திரன் வச்சிராயுதத்தை யெறிவதுபோலக் கொடிய பாணங்களை எய்தார். உத்தமமான அந்தப்பாணங்கள் வெகுவேகத்துடன் ஜ்வலித்துக்கொண்டு சமுத்திரத்திலிருந்த சர்ப்பங்களெல்லாம் பயப்படும்படி அதன் ஜலத்தில் வந்து விழலாயின.

அதன் பிறகு, ரகுநந்தனர், சமுத்திரத்தைப் பார்த்து, "பெருங்கடலே! இன்றையதினம் நான் உன்னைப் பாதாளம் வரையில் வற்றும்படி செய்கின்றேன். சாகரமே? எனது அம்புகளால் ஜலமும் வறண்டு ஊற்றுக்கண்களும் வற்றி ஜலஜந்துக்களும்மாள முன்பு உன்னிடத்து நீரிருந்தவிடத்திற் பெரும்புழுதி பறக்கச் செய்கின்றேன், வானரர்கள் காலாலேயே உனது அக்கரையைச் சேர்வார்கள்." என்று சொல்லி இராமர் தமது சிறந்த வில்லில் பிரமதண்டத்துக்கொப்பான பாணமொன்றைத் தொடுத்து பிரமாஸ்திர மந்திரத்தை அபிமந்திரித்து நாணையிழுக்கலானுர்.

அப்பொழுது கடலின் மத்தியினின்று சமுத்திரராஜன் வழுவழுப்பான வைடூரியங்களைப் போலத் தோன்றியும், சிவந்த மாலைகளையும் வஸ்திரங்களையும் தரித்தும், தாமரையிதழ் போன்ற கண்களைப் பெற்றும், தன்னிடத்திலுண்டாகிய பலவகை இரத்தினங்களாலிழைக்கப்பட்ட உயர்ந்த ஆபரணங்களைப் பூண்டு ஸ்ரீராம நாமத்தைச் சொல்லி யழைத்துக்கொண்டே வந்து, அஞ்சலி செய்து, வில்லுங்கையுமாய் நிற்கும் இராமபிரானைப்பார்த்து பின்வருமாறு சொல்லலானுன்:—" இரகுபுங்கவரே! சாந்தரே! பிருதிவி, வாயு, ஆகாசம், ஜலம், அக்கினி இவைகள் யாவும் நெடுநாளாகத் தங்கட்கு இயல்பென்று ஏற்பட்டிருக்கும் வழியில் பிறழாமலிருக்கின்றன; ஆகவே, ஆழம் அளவிட முடியாதென்பதும், பிறரால் தாண்டமுடியாதென்பதும் எனக்கு இயற்கை. தரை காணப்படுவதென்பது எனது இவ்வியற்கைக்கு விரோதமாம். அவ்விஷயமாக நான் சொல்வதைக் கேளுங்கள்; சக்கரவர்த்தித்திருமகனுரே! நான் விருப்பங்கொண்டாவது, உலோபகுணங்கொண்டாவது, பயந்தாவது, மீன்களாலும் முதலைகளாலும் நிரம்பியிருக்கும் எனது ஜலத்தை வருந்தியும் ஸ்தம்பனஞ் செய்யக்கூடாது. ஆனல் எவ்வித உபாயத்தால் நானும் என்னைப் பொறுப்

பேனே, எவ்வாறு முதலைகள் ஒருவகைத் தீங்கும் செய்யாமலிருக்கச் சேனைகள் என்னைத் தாண்டிச் செல்லுமோ, அவ்வாறு செய்வேன்; வானரர்கள் என்னைக் கடக்குமாறு அணைகட்டுகையில் அதனை அடித்துக்கொண்டு போகாமல் நிலம்போல நிற்கச் செய்கிறேன். சாந்தமூர்த்தியே! இவன் நளனென்ற வானரன்; விசுவகருமாவினுடைய புதல்வன்; தந்தையினிடத்தில் வரம்பெற்ற செல்வப்புதல்வன்; விசுவகருமாவுக்கு ஒப்பானவன்; அதிக சுருசுருப்புள்ள இவ்வானரன் என்மேல் அணைகட்டட்டும்; அவ்வணையை நான் தாங்குகிறேன்.''

இவ்விதமாகச் சொல்லி சமுத்திரராஜன் மறைந்ததும் மகாபலம் பொருந்தியவனும் வானரசிரேஷ்டனுமான நளன் எழுந்து, இராமரைப்பார்த்து ''விசாலமான இந்தச் சமுத்திரத்தின்மீது, நான் என் தந்தையின் வல்லமையைக் கைப்பற்றியவனுய் அணையைக் கட்டுகின்றேன்'' என்றான். இராமர் அவ்வாறே கட்டளையிட வானரவீரர்கள் நாற்புறத்திலும் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் பெருங்காட்டிற் சென்று புகுந்தார்கள். மலைகள்போன்ற உருவத்துடன் விளங்கிய அவ்வானரசிரேஷ்டர்கள் மரங்களை வேரோடு பெயர்த்து சமுத்திரத்துக்கருகில் இழுத்து வந்தார்கள். அவர்கள் ஆச்சா அசுவகர்ணம் தவம் மூங்கில் அசோகம் என்ற மரங்களால் சமுத்திரத்தை நிரப்பினார்கள். அன்றியும் அவர்கள் யானைகள்போற் பெரியவைகளாயிருந்த பெருங்கற்களையும் மலைகளையும் வேருடன்பறித்து யந்திரங்களால் தூக்கி வந்தார்கள். மலைகள் ஜலத்திற் போடப்பட்ட அவ்வப்பொழுது சமுத்திரஜலம் ஆகாயம் வரையிற் கிளம்பிற்று. வானரர்கள் நான்குபக்கங்களிலேயும் இருந்துகொண்டு சமுத்திரத்தைக் கலக்கினார்கள். சிலர் நூறுயோஜனைதூரம் கயிறுகளை நீட்டிப்பிடித்து நின்றார்கள்; சிலர் அளவுகோலைத் தாங்கினார்கள்; சிலர்

அவற்றைத்தேடினார்கள். நளனென்பவன் மிகப்பெரிய அணையொன்றை சமுத்திரத்தின்மேற் கட்டலானான். ஐந்து நாட்களில் அவன் அணைகட்டி முடித்தான். அந்த அணையானது ஆகாயத்தில் சுவாதிவழிகாணப்படுவது போல காணலாயிற்று.

அவ்வாயிரங்கோடி வானரர்களும் அச்சேதுவின் வழியாக நடந்து சமுத்திரத்தின் அக்கரையைச் சேரலானார்கள். சமுத்திரத்தின் அக்கரையிலே விபீஷணர் தமது நான்கு மந்திரிகளுடனே வானரர்களை எதிர்க்கவருஞ் சத்துருக்களை வதைக்கும்பொருட்டு கதாயுதமும் கையுமாக நின்றார். அதன்பிறகு இராமரை நோக்கி சுக்கிரீவன் பின்வருமாறு கூறலானான் :—"நீங்கள் அநுமான்மீது ஏறிக்கொள்ளுங்கள். இலக்ஷ்மணர் அங்கதன்மீது ஏறிக்கொள்ளட்டும். இச்சமுத்திரம் வெகுவிசாலமுடையதாகையால் ஆகாயமார்க்கத்தாற் செல்லும் இவ்வானர வீரர்கள் உங்களைத் தாண்டுவிப்பார்கள்" என்றான். இப்படிச் சுக்கிரீவன் சொன்னதும், அச்சேனைக்கு முன்பாக இலக்ஷ்மணருடன் கூடிய தருமாத்துமாவும் வில்வீரரும் சீமானுமாகிய இராமர் சுக்கிரீவனுடன் சென்றார்.

சகுனசாஸ்திரத்தை நன்றாக அறிந்த இராமர், அப்பொழுது தோன்றிய சில சகுனங்களைப் பார்த்து இலக்ஷ்சுமணரைத் தழுவி சொல்லலுற்றார் :—"இலக்ஷ்மணா! குளிர்ந்த நீரையும் கனிகள்நிரம்பிய காட்டையும் நாம் அடைந் திருக்கின்றோமாகையால் இவ்விடத்தில் நமது சைனியத்தைச் சற்றே நிறுத்தி அதனை அணிவகுத்து சிறிதுநேரம்இருப்போம். வெகுவீரர்களான வானரர்களும் ருக்ஷர்களும் அரக்கர்களும் தொலையக்கூடியதாக இவ்வுலகத்தையே பாழாக்கும்படியாக பயங்கரமான பெரும் போர் நெருங்கி விட்டதாகத் தோன்றுகிறது. நாம் இப்போதே சடிதியில் வெகுவேகமாக நான்கு பக்கங்களிலேயும் நமது சேனைகளாற் சூழப்பட்டவர்களாய் இதுவரை

ஒருவராலுந் தகையப்படாத இராவணநகரமாகிய இலங்கையை எதிர்ப்போம்" என்றார். போரில் எப்பொழுதும் உத்ஸாகப்படுபவரும், விற்பிடித்தவரும், மகாவீரரும், வியாபகரும், தருமாத்துமாவுமான இராமர் இவ்வாறு சொல்லி இலங்கையை நோக்கி முன்னே புறப்பட்டார். அவர்க்குப்பின்னர் விபீஷண சுக்கிரீவருடன் கூடிய வானரசேனை தங்கள் சத்துருக்களை வதைப்பதில் உறுதிகொண்டனவாய் அட்டகாசம் பண்ணிக்கொண்டு புறப்பட்டன.

அழகான துவசங்களும் தோரணங்களும் பறந்துகொண்டிருக்கும் இலங்கையை இராமர் தனது கண்களாற் பார்த்ததும் சீதையைப்பற்றி நினைத்தார். அதன் பிறகு இராமர் நூல்களிற் கூறியவாறு தமது படையை அணிவகுப்பதைப் பற்றி கட்டளையிடலானார்.

வானரசேனையுடன் இராமர் சமுத்திரத்தைக் கடந்ததும் சீமானான இராவணன் தனது மந்திரிகளான சுகஸாரணர்களை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானான்:— "ஒருவராலும் தாண்டமுடியாத பெருங்கடலை வானரசேனை தாண்டிவிட்டது. முந்தி ஒருவராலும் செய்யப்படாத காரியமாகிய சமுத்திரத்தின் மீது அணைக்கட்டுதலை இராமன் செய்து முடித்தான். கடலின்மேல் சேது கட்டப்பட்டதென்பதை நான் ஒருபொழுதும் நம்பவே மாட்டேன். அது எப்படியிருந்தபோதிலும் அவ்வானரசேனை இவ்வளவென்பதை நான் இப்போது அவசியமாக அறிந்துகொள்ளவேண்டும். ஆகையால் நீங்கள் ஒருவருக்குந் தெரியாமல் வானரசைனியத்திற் புகுந்து அச்சேனை அளவையும் பலத்தையும் அதில் எவர்கள் முக்கியமான வானரர்களென்பதையும் இராமனுடைய மந்திரிகள் யாவரென்பதையும் சுக்கிரீவனுக்கு வேண்டியவர்கள் இன்னாரென்பதையும் எவர்கள் சைனியத்தில் முற்பட்டு நிற்கின்றார்களென்பதையும் எவ்வானரர்கள் சூரரென்பதையும்

இராமருடைய விவசாயம் பலம் ஆயுதங்கள் இவைகளை யும் இலக்ஷ்மணனுடைய பலத்தையும் உள்ளபடி அறிந்து வரவேண்டும். வெகுபலமமைந்த அவ்வானர சேனைக்கு அதிபதி யாரென்பதையும் உள்ளபடி அறிந்துகொண்டு சடிதியில் திரும்பிவந்து சேரவேண்டும்" என்றான்.

வீரரான சுகஸாரண ரென்ற அரக்கர் இவ்வாறு கட்டளையிடப்பட்டதும் வானரவுருவமெடுத்துக்கொண்டு அந்த வானர சேனைக்குள் நுழைந்தார்கள். சுகஸார ணர்கள் வேற்றுருவத்துடன் வந்திருப்பதை வீபீஷணர் கண்டு அவர்களைப் பற்றிக்கொண்டு வந்து "பகைவர்கள் பட்டணங்களை வெல்லும் மன்னவரே! இவர்கள் அவ் வரக்க வேந்தருடைய மந்திரிகளாகிய சுகஸாரணர்: இலங்கையிலிருந்து ஒற்றர்களாக வந்திருக்கின்றார்கள்" என்று இராமரிடம் தெரிவித்தார். அத்தூதர்கள் இரா மரைக் கண்டதும் வருந்தி தங்களுயிரின்மேல் ஆசையற்ற வர்களாய் அஞ்சலி பண்ணிக்கொண்டு, வெகுபயத்துடன் நின்றார்கள்.

எல்லாப்பிராணிகட்கும் நன்மையைச் செய்வதிற் கருத்துள்ளவரான இராமர், புன்னகையுடன் பின்வரு மாறு மொழியலானார் :— "எங்களுடைய சேனைமுழு வதையும் பார்த்து விட்டு நீங்கள் இஷ்டப்படி திரும்பிச் செல்லலாம். நீங்கள் இன்னும் பார்க்காதது ஏதாவது இருந்தால் மறுபடியும் சென்று பார்க்கலாம். வேண்டு மானால் விபீஷணர் முழுவதையும் மறுபடியும் காட்டுவார். நீங்கள் இலங்கை சேர்ந்தவுடன் குபேரனது தம்பியாகிய அரக்கர் தலைவனிடம் நான் சொன்னதாக நான் சொல்லு கிறபடி சொல்லவேண்டும். "எப்படிப்பட்ட வல்லமை யின்மேல் உறுதிவைத்து எனது சீதா தேவியைக் கவர்ந் தாயோ அதனை உன்னுடைய இஷ்டப்படி உனது சேனை யுடனும் பந்துக்களுடனும் கூடியவனாகி என் முன் காட்

டுக. நாளை காலையில் பிராகாரங்களுடனும் தோரணங்களுடனும் இலங்கைமாநகரையும் அரக்கர்கள் சேனையையும் நான் என்பாணங்களால் நாசம் பண்ணுவதை நீ பார்.''

இவ்வண்ணம் இராமராற் கட்டளையிடப்பட்ட சுகஸாரணர் இராமரை "தங்களுக்கு ஜயமுண்டாகட்டும்" என்று வாழ்த்துக்கூறி இலங்கைக்குத் திரும்பிச் சென்று அரக்கர் வேந்தனிடம் பின்வருமாறு சொல்லலுற்றார்: "இராக்ஷசர் தலைவரே! வதைத்தற்கு உரியவரென்று விபீஷணராற் பற்றிக்கொண்டு விடப்பட்ட எங்களை ஒப்பில்லாத ஒளியோடு விளங்குகின்ற தருமாத்துவாகிய இராமர் விடுதலை செய்தார். இராமர் இலக்ஷ்மணர் விபீஷணர் இந்திரனுக்கு ஒப்பான வல்லமை பொருந்திய சுக்கிரீவன் இவர்கள் இவ்விலங்காபுரியை மதில்களுடனும் கோபுரங்களுடனும் வேரோடு பிடுங்கியெறியவல்லவர்கள். மற்றை வானரர்கள் இருக்கட்டும். இராமருடைய உருவத்தையும் ஆயுதங்களையும் பார்த்தால் அவரொருவரே இவ்விலங்காபுரியை அடியோடு நாசம் பண்ணுவாரென்று தோன்றுகின்றது; மற்றை மூவரும் இருக்கட்டும். இராமலக்ஷ்மணரும் சுக்கிரீவனும் பாதுகாத்து வருகின்ற அச்சைனியத்தை தேவாசுரர்கள் இந்திரனை முன்னிட்டுக் கொண்டுவந்தாலும் ஒருபொழுதும் வெல்ல முடியாதென்று தோன்றுகின்றது. பேருருவத்தையுடைய அவ்வானரர்களின் சேனையோ வெகு உத்ஸாஹத்துடன் எப்பொழுது போருண்டாகுமென்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு நிற்கின்றது: ஆகையால் அவர்களுடன் விரோதமென்பது வேண்டாம்: சினத்தைப் போக்கிவிடுங்கள்: இராமரிடம் சீதாதேவியைக் கொடுத்து விடுங்கள்" என்றார்கள்.

42. வானர சேனையின் வர்ணனை

அவ்வாறு வெகுநன்மையாகவும் உண்மையாகவும் பயமில்லாமலும் ஸாரணன் சொல்ல இராவணன் "சாந்தனே! நீ வானரர்களால் வெல்லப்பட்டு மிகவும் அஞ்சினாய்; அதனால் இப்போதே சீதையைத் திருப்பிக் கொடுப்பதே நலமென்று நினைக்கின்றாய். என்னை எப்பகைவன் தான் வெல்லவல்லவன்?" என்றான். இவ்வண்ணம் அரக்கர்களின் மன்னவனும் சீமானுமாகிய இராவணன் பேசிவிட்டு மாளிகையினுபரிகையில் ஏறினான். வானர வீரர்களால் நிரம்பியிருந்த பூமிபாகத்தையும் பார்த்தான். கரையில்லாமலும் அளவிட முடியுமாலுமிருந்த பெரிய அந்த வானரசேனையைக் கண்டு இராவணன் ஸாரணனைக்கேட்கலானான் :— "இவ்வானர முக்கியர்களுக்குள் எவர்கள் சூரர்கள்? எவர்கள் அதிக பல மமைந்தவர்கள்? எவர்கள் மஹோத்ஸாஹமுள்ளவர்களாய் நாற்புறத்திமுற்பட்டு நிற்கின்றவர்கள்? எவர்கள் சொல்லைச் சுக்ரீவன் கேட்கின்றான்? எவர்கள் சேனைத்தலைவர்களுக்கும் தலைவர்? எவர்கள் சேனாதிபதிகள்? ஸாரணா! எல்லாச் சங்கதிகளையும் உள்ளபடி என்னிடம் சொல்லுக" என்றான்.

இவ்விதமாக அரக்கர் தலைவன் தன்னைக் கேட்டதும் வானரர்களுள் முக்கியமானவர்களை நன்றாக அறிந்துவந்த ஸாரணன் வானரர்கட்குள் பிரதானமானவர்களைப் பற்றிச்சொல்லலானான் :—"வேந்தரே! மதம்பிடித்தயானைகள் போலவும் கங்கைக் கரையில் முளைத்துள்ள ஆலமரம்போலவும் இமயமலையில் முளைத்துள்ள ஆச்சா மரம் போலவும் நிற்கத் தாங்கள் காண்கின்றீர்களே இவர்கள் போரில் எவராலும் வெல்லமுடியாத வீரர்கள்; தங்களுக்கு இஷ்டமான உருவங்கொள்ளும் வல்லமையுள்ளவர்கள்; ஒவ்வொருவரும் தேவர்கள்போலவும் அசுரர்கள்

போலவும் விளங்கிக்கொண்டு போரில் தேவர்களுக்கு ஒப்பான பராக்கிரமமுள்ளவர்கள். இவர்களின் தொகை இருபத்தோராயிரங்கோடிக் கணக்காகவும் அப்படியே ஆயிரஞ் சங்கக்கணக்காகவும், நூறுபிருந்த மென்னுங் கணக்காகவும் இருக்கின்றன.

"இங்கு அப்புறம் நிற்குஞ் சூரரைப் பாருங்கள்; நீல நிறமுள்ளவராய்த் தாமரையிதழுக்கொப்பான கண்களமைந்தவராய் நிற்கின்றாரே அவர்தான் இக்ஷ்வாகு வம்சத்திற் பிறந்த அதிரதர்; இவ்வுலகத்திற் பெயர்பெற்ற பராக்கிரமமுள்ளவர். அவரிடத்தில் தருமம் சலிப்பதேயில்லை; அவர் அதருமத்தை ஒருபோதும் அநுசரிப்பவரல்லர். அவருக்குப் பிரமாஸ்திரமும் வேதங்களும் தெரியும்; வேதங்களைக் கற்றுணர்ந்தவர்களுக்குள் அவர் மிகவும் உத்தமர். தமது அம்புகளால் ஆகாசத்தையும் கிழித்துவிடுவார்: மலைகளையும் பிளந்துவிடுவார்: அவரது கோபமோ யமனுடைய கோபத்துக்கொப்பானது; அவருடைய பராக்கிரமம் இந்திரனுடைய பராக்கிரமத்துக்கு ஒப்பானது. அவருடைய மனைவியாகிய சீதையென்பவளைத்தான் ஜனஸ்தானத்திலிருந்து தாங்கள் கவர்ந்து வந்தீர்கள். அரசே! அவ்விராமர் தங்களுடன்போர்புரிய அதோ வந்திருக்கிறார்.

"அவருடைய வலப்பக்கத்தில் பத்தரைமாற்றுத்தங்கத்துக்கு ஒப்பான நிறமமைந்தவராய் விசாலமான மார்பைப் பொருந்தியவராய்க் கண்கள் சிவந்தவராய் கறுத்தும் சுருண்டுமுள்ள மயிர்முடி யமைந்தவராய் விளங்குகின்றாரே அவர்தான் இராமபிரானுடைய தம்பி இலக்ஷ்மணர்; அவருடைய உயிர்க்கு ஒப்பானவர்; அவரிடம் எப்பொழுதும் அன்புவைத்தவர்; நியாயசாஸ்திரத்திலும் யுத்தத்திலும் சாமர்த்தியமுள்ளவர்; எல்லாச்சாஸ்திரங்களையும் நன்றாகக் கற்றுத்தேர்ந்தவர். பொறுக்காத தன்மையுள்ளவர்; அவரை வெல்ல ஒருவராலும் முடி

யாது. தாம் வெற்றியடைபவர்; பராக்கிரமசாலி; புத்தியமைந்த பலசாலி. அவரை இராமருடைய வலக்கையென்றும் வெளியில்நடக்கும் அவருடைய உயிரென்றும் சொல்லவேண்டும்; அவர் இராமருடையகாரியம் நிறைவேறுவதானால் தமது உயிரின்மேலும் அபிமானங் கொள்ளார். அவர் தர்மாகவே அரக்கர்களையெல்லாம் போரிற் கொல்ல எண்ணங்கொண்டிருக்கின்றார்.

"ஒரு கோடிமகௌகமென்று சொல்லும்படியாய் சமுத்திரம்போன்ற வானரசேனையாற் சூழப்பட்டும், ராக்ஷச மந்திரியுடன் கூடிய விபீஷணரால் உதவிசெய்யப் பெற்றும், மகா பலபராக்கிரமசாலியாய் வானரராஜரான சுக்கிரீவர் தங்களுடன் போர்புரிய வந்து நிற்கிறார். மகாராஜாவே! கொடியகிரகத்துக்கு ஒப்பாக வந்து நிற்கும் இப்பெருஞ்சைனியத்தைப் பார்த்து பிறகு இந்தப் பகைவர்கள் நம்மைத்தோற்கடியாமல் நாம்வெற்றியடையும்படி உத்தமமான முயற்சியைச் செய்யுங்கள்" என்றான்.

சுகன் குறிப்பிட்டுச் சொன்ன அந்த வானரசேனைத் தலைவர்களையும் இராமருக்கு அருகில் நிற்கும் தனது தம்பி விபீஷணரையும் இராமருடைய வலக்கைபோன்ற மகா வீரராகிய இலக்ஷ்மணரையும் பயங்கரமான பராக்கிரமமுள்ள எல்லாவானரர்களுக்கும் வேந்தரான சுக்கிரீவரையும் பார்த்துஇராவணன் கொஞ்சம் மனங்கலங்கிக்கோபங் கொண்டவனாய் அவ்வாறு சொல்லி வாய்மூடின அந்தச் சுகஸாரணரென்ற வீரர்களைக் கண்டித்து கோபத்தால் தழுதழுத்த கொடியவாக்கால் பின் வருமாறு மொழியலுற்றான் :—"ஓர் அரசன் கீழ் அடங்கி நடக்கும் மந்திரிகள் தங்களைத் தண்டிக்கவும் அருள் செய்யவும் வல்லமைபெற்ற அரசன் முன்பாக நின்றுகொண்டு, அவனுக்குக் கேட்கப்பிடிக்காத சொற்களைச் சொல்லுதல் அடியோடு தகாது. உங்களைக் கேட்காமலிருக்கும்பொழுதே, நமக்குப்

பகைவர்களாய்ப் போர்செய்யவந்தவர்களாயிருக்குஞ் சத்துருக்களைப்பற்றிக் காலமல்லாத காலத்தில் இவ்வாறு நீங்களிருவரும் புகழ்ந்துபேசுவது தகுதியோ? இதுவரையில் நீங்கள் ஆசிரியர் பெரியவர் இவர்களிடத்திற் பழகியது வீணேயாம்; ஏனெனில் ராஜநீதிநூலின் ஸாரமாக ஒருவன்கீழடங்கி நடக்கவேண்டியவன் தொழிலைத் தெரிந்துகொள்ளவில்லையே. கற்றறிந்ததை மறந்துவிட்டீர்களோ? அன்றி நடவடிக்கைக்குக்கொண்டு வராமல் அறிவின் சுமையை மாத்திரம் தாங்குகின்றீர்களோ? இவ்வண்ணம் மூடர்களான மந்திரிமார்களை வைத்துக்கொண்டு நான் இராச்சியத்தை வகித்துவருவதும் பேராச்சரியந்தான். என்னைப்பார்த்து இவ்விதமான சொற்களைச் சொல்லி வந்தீர்களே! நமது அரசன் நம்மைக் கொன்றுவிடுவானென்ற பயமும் உண்டாகவில்லையா என்ன? என்முன்னிலையில் நில்லாதேயுங்கள்; நீங்கள் எனக்குச் செய்திருக்கின்ற உபகாரங்களை நினைப்பதனால் நான் உங்களைக்கொல்ல விரும்பவில்லை.'' என்றான்.

பின்னர் சீதாதேவியின் தோழியாகிய ஸரமையென்ற ராக்ஷசி பின்வருமாறு கூறத் தொடங்கினாள்: ''சீதே! உமது துயரத்தை அகற்றுங்கள். இன்றுமுதல் உமது எல்லாவகைத்துக்கங்களும் நீங்கின; நற்காலம் தங்களை நாடிவந்துவிட்டது; பாக்கியலட்சுமி உங்களை நிச்சயமாக அடைந்துவிட்டாள். நான் சொல்லப்போகின்ற இனியதான சமாசாரமொன்றைக் கேளுங்கள்; வானரசேனையுடன் இராமர் சமுத்திரத்தைத்தாண்டி சமுத்திரத்தின் தென்கரையில்வந்து இறங்கிவிட்டார். அவ்விடத்திலுள்ள சேனைகளாற் பாதுகாக்கப்பட்டவராய் தமது மனோரதம் நிறைவேறிய இராமர் இலக்ஷ்மணருடன் வீற்றிருப்பதை நான் பார்த்தேன்.'' என்றாள்.

இவ்விதமாக அவ்வரக்கி சீதையினிடஞ்சொல்லிக் கொண்டிருந்தபொழுதே சைனியங்கள் செய்யும் போரைப்பற்றிய பூர்ணமான முயற்சியால் வெகு பயங்கர மாகச் செய்த சத்தம் கேட்கலாயிற்று. குறுந்தடியால் எரியப்படும் முரசத்தினது பேரொலி கேட்டது. அது கேட்டு, வெகுமதுரமாகப்பேசும் ஸரமை சீதாதேவியைப் பார்த்து மேலும் சொல்லலானாள் :—“ தங்கள் தங்கள் கைகளில் ஆயுதங்களை ஏந்தி மன்னவனைத் தொடர்ந்து செல்கின்றவர்களான அரக்கர்களின் சன்னாஹம் மயிர்ச் சிலிர்ப்படையும்படி இங்கு நெருக்கமாக இருக்கின்றது. தங்களது சோகத்தைப் போக்குஞ் சம்பத்து வந்து விட்டது; அரக்கர்களுக்கு அச்சமுண்டாய்விட்டது. தாமரையிதழுக்கு ஒப்பான கண்களையுடையராய் கோபத்தை வென்றுள்ளவராய் எண்ணுதற்கு ஒண்ணாத பராக்கிரமமுள்ளவராய் தங்கள்கணவரான இராமர் அசுரர்களை இந்திரன்வென்றதுபோல அரக்கர்களை யெல்லாம்வென்று யுத்தத்தில் இராவணனைமாய்த்து உம்மை அழைக்க வருவர். சத்துரு கொல்லப்பட்டவுடன் இராமர் உம்மைத்தேடிவர பதிவிரதையாகிய தாங்கள் அவர்மடியில் உட்கார்ந்திருப்பதை நான் என்கண்களாரக் காணப் போகின்றேன்” என்று சொல்லி இராவணன் சொன்ன சொற்களால் தாபங் கொண்டு மோகமடைந்திருந்த சீதா தேவியை, ஸரமை, பூமியை மழையானது நீராற் குளிரச் செய்வதுபோல தனது வார்த்தைகளாற் சந்தோஷப்படுத்தினாள்.

பின்னும் ஸரமை புன்னகையுடன் பேசலானாள் :— “ கறுத்த கண்ணையுடையவரே! நான் இங்குநின்றும் போய் இராமரிடம் நீர் வினவுவதாக அவர் க்ஷேமத்தை விசாரித்து ஒருவர் கண்ணிலும் படாமல் திரும்பிவர எனக்கு வல்லமையுண்டு. பிடிப்பற்ற ஆகாயத்தில் நான் செல்லும்பொழுது வாயுபகவானும் கருடனுங் கூட

என்னைத் தொடரவல்லவரல்லர்" என்முள். இவ்வாறு ஸரமை சொன்னதும் சீதை சிறிது சோகத்துடன் கூடினதாயும் அழகானதாயுமுள்ள வார்த்தையினுல் இனிதாக மீண்டுஞ் சொல்லலுற்முள் :—"எனக்கு ஏதாவது இஷ்டமான காரியம் செய்யவேண்டுமென்று உங்கள் மனத்தில் தோன்றியிருந்தால் அங்குப் போய் இராவணன் இப்பொழுது என்ன செய்துகொண்டிருக்கின்முனென்று அறிந்துவருமாறு நான் விரும்புகின்றேன்" என்முள்.

இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையிலேயே, பேரிகை சங்கம் முதலியவைகள் ஒலிக்க உண்டாகும் பேரொலி இவ்வுலகத்தை நடுங்கச்செய்துகொண்டு வானரசேனையி லிருந்து கிளம்பலாயிற்று. பிறகு, இராவணன் தனது மந்திரிகளுடன்சேர்ந்து செய்யவேண்டிய விஷயங்களைப் பற்றி நன்முக ஆலோசித்து இலங்கையை நன்முகப்பாது காக்கும் ஏற்பாடுகளைச் செய்யலானுன். அவன் கிழக்கு வாயிலில் பிரஹஸ்தனென்ற அரக்கனையும், தெற்குவாயி லில் மகாவீரர்களான மகாபார்சுவ மகோதரர்களையும், பிறகு மேற்குவாயிலில் அதிக மாயாவியும் தனது குமாரனுமான வலிய பல அரக்கர்களாற் சூழப்பெற்ற இந்திரஜித்தையும் காத்திருக்குமாறு கட்டளையிட்டான்; வடக்கு வாயிலில் சுகஸாரணர்களையேவி, தனது மந்திரிகளை நோக்கி "நானும் இங்கு இருப்பேன்" என்று கூறினுன். அதிகவீர்யமும் பராக்கிரமும் பொருந்திய விருபாக்ஷனென்ற அரக்கனை பல அரக்கர்களுடைய சகாயத்தோடும் அணிவகுத்த சேனையின்நடுவி லிருக்கவைத்தான். இவ்வாறு இராவணன் இலங்கையைப் பாதுகாக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு யமனது கட்டளைக்கு உட்பட்டவனுகி தன்னுல் எல்லாக்காரியங்களும் சரிவரச் செய்து முடிக்கப்பட்டதாகக் கருதினுன்.

43. இராமர் போருக்குச் செய்த ஏற்பாடுகள்

விபீஷணர் கிராமியவழக்கச் சொற்க ளில்லாமல் வெகுநாகரிகமாகப் பொருள்நிரம்பிய சொற்களாற் சொல்லலானார் :—“அனலன் சரபன் சம்பாதி பிரகஸன் என்ற எனது மந்திரிமார் இப்பொழுதுதான் இலங்கைக்குச் சென்று திரும்பிவந்தார்கள். இவர்களெல்லாரும் பறவைகளுருவங் கொண்டு நமதுபகைவர்கள் சேனைகளிற் புகுந்தார்கள்; அங்குள்ள ஏற்பாட்டைப் பார்த்து திரும்பிவந்திருக்கின்றார்கள். இராமரே! துராத்துமாவாகிய இராவணன் செய்திருக்கின்ற ஏற்பாடுகளை அவர்கள் என்னிடம் சொன்னார்கள். அவைகளை யெல்லாம் நான் உள்ளபடி சொல்லுகிறேன் கேளுங்கள்.” என்றார்.

இவ்வாறு இராவணனது தம்பியாகிய விபீஷணர் சொல்லிமுடித்ததும் இராமர் தமது பகைவர்களை வெற்றி கொள்ளுதற் பொருட்டு பின்வருமாறு கட்டளையிடலானார் :—“நீலனென்ற வானரசேனாதிபதி, பல வானரர்களாற் சூழப்பட்டவனாய், இலங்கையின்கீழைவாயிலில் நின்றுகொண்டு, பிரஹஸ்தனுடன் போர்புரியச் சித்தமாக இருக்கட்டும். வாலியினது குமாரனாகிய அங்கதன், மிகப்பெருஞ்சேனையுடனே தெற்குவாயிலில் மகாபார்சுவ மகோதரரை எதிர்த்து நிற்கட்டும். ஒருவராலும் அறியவொண்ணாத தன்மையமைந்த வாயுபகவானது மைந்தனான அநுமான், பல வானரர்களுடன் கூடி, மேலைவாயிலைத் தாக்கி நுழையட்டும். தேவர்களின் கூட்டத்துக்கும் மகாத்துமாக்களான முனிவர்களுக்கும் கெடுதிசெய்வதில் ஆசையுள்ளவனும், அற்பனும், வரங்களினால் வல்லமை பெற்றவனும், எல்லா உலகங்களிலும் உள்ள பிராணிகளைத்தவிக்கச் செய்துகொண்டு திரிகின்றவனும், ராக்ஷசராஜனுமாகிய இராவணனை வதைக்குமாறு உறுதிகொண்டு நானே நேராக இலக்ஷ்மணனுடன் அவ்வி

ராவணன் நிற்கின்ற நகரத்து வடக்குவாயிலைத் தாக்கிப் புகுகின்றேன்; அங்கு சேனைகளுடன் பலசாலியாக சுக்கிரீவரும், வீரியவானான ருக்ஷராஜனும், அரக்க மன்னவன் தம்பியாகிய விபீஷணரும், பலவான்களான இராவண இந்திரஜித்துக்களுடன் போர்புரிகின்றவர்கட்கு நடுவிலே மத்திமசேனையாக இருக்கட்டும். போர்நடக்கும் பொழுது வானரர்கள் மானிடவடிவங் கொள்ளவேண்டாம். இந்தப்போரில் வானரசைனியத்தில் இவ்வாறு சங்கேதமிருக்கட்டும். வானரர்கள் அவ்வுருவத்துடனேயிருப்பதுதான் அவர்களை எளிதிலறிந்துகொள்ள ஸாதனமாகவிருக்கும். நாங்கள் ஏழுபேர் மனித வடிவத்துடன் போர்புரிகின்றவர்கள்; அவராவார்—அதிகபலமமைந்த தம்பியான இலட்சுமணனுடன் கூடிய நானும் மந்திரிமார்களுடன் கூடி ஐந்தாமவராக இருக்கின்ற எனது நண்பரான விபீஷணரும்'' என்றார்.

பின்னர் இராமர், இலக்ஷ்மணரால் பின்தொடரப் பட்டவராய் சுக்கிரீவனையும், விபீஷணரையும் பார்த்து "பலவகைத் தாதுப்பொருள்கள் நிரம்பிவிளங்கும் அழகான இச்சுவேலமலையில் நாம் எல்லோரும் ஏறி இன்றிரவைக் கழிப்போம்; அவ்வரக்கன் வாழுமிடமாகிய இலங்கையையும் பார்ப்போம். எக்கொடியவன் தனது நாசத்துக்கென்றே எனது மனைவியைக் கவர்ந்தானோ அவ்வரக்கப்பதரின் பேரை யெடுத்தாலும் எனக்குக் கோபம் பொங்குகின்றது. அவ்வரக்கனொருவன் செய்த குற்றத்துக்காக எல்லா அரக்கர்களும் மாளப்போகின்றார்கள். காலபாசத்திற்சிக்கிக்கொண்ட ஒருவன் தீங்கு செய்தால் அவ்வற்பன்செய்த குற்றத்தால் அவன்குலமே நாசமாகின்றது'' என்று இழிகுணமுடைய இவ்விராவணனை பற்றி வெகு கோபத்துடன் சொல்லிக்கொண்டே அழகானதாழ்வரையமைந்த சுவேலமலையில் வசிக்கும் பொருட்டு ஏறலானார். அவர்கள் சடிதியில் அம்மலையின்

மேலேறி ஆகாயத்திற் கட்டப்பட்டதுபோல திரிகூட மலையினுச்சியில் விளங்கும் இலங்கையைப் பார்த்தார்கள்.

அன்றிரவு சுவேலமலையில் தங்கி வானர வீரர்கள் இலங்கையிலிருந்த வனங்களையும் தோட்டங்களையும் கண்டார்கள். அவர்கள் ஒன்றைப்போலவே மற்றொன்று அழகாகவும், நேர்த்தியாகவும், விசாலமாகவும், பார்ப்பதற்கு இனிமையாகவும் இருக்கக் கண்டு, அவர்கள் ஆச்சரியமடைந்தார்கள். இராமர், சுக்கிரீவனுடன் வானர சேனைத்தலைவர் சூழ, உச்சியில் இரண்டு யோசனை விசாலமாக இருந்த சுவேல மலையின் மேல் ஒரு முகூர்த்த காலம் நின்று, பத்துத் திசைகளையும் நோக்கின சமயத்தில் அழகான திரிகூடமலைச் சிகரத்தின்மேல் நல்லமைப்புடனும் பல சிங்கார வனங்களுடனும் விசுவகர்மாவால் நிருமிக்கப்பட்ட இலங்கைமாநகரம் விளங்குவதைக் கண்ணுற்றார். கோபுர நிலையிலே தனது இரு பக்கத்திலும் வெண்சாமரங்கள் வீச தனது தலையின் மீது வெண்கொற்றக்குடை பிடிக்க, இரத்தினாபரணங்களை யணிந்து சாயங்கால வெயிலின் காந்தியால் ஆகாயத்தில் மேகங்கள் விளங்குவதுபோல விளங்கி எவராலும் அணுக முடியாத அரக்க மன்னவனை இராமர் கண்டார்.

இராவணனைக் கண்டதும் சுக்கிரீவன் வெகு கோபங்கொண்டவனாய் இராமரும் மற்ற வானர வீரர்களும் தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே தனது தேக பலத்தினாலும் மனோ பலத்தாலும் ஆகாயத்தில் திடீரென்று தானிருந்த மலையினுச்சியை விட்டுக் கிளம்பி கோபுரத் தலத்தை நோக்கிப் பாய்ந்தான். அங்குக் கொஞ்ச நேரம் நின்று சிறிதும் பயமே யில்லாமல் உற்றுப் பார்த்து அவ்விராவணனை ஒரு துரும்பாக் வெண்ணி அவனை நோக்கி பின் வருமாறு சொல்லலானான் :—
"அரக்கா! நான் உலகங்கட்கெல்லாந் தலைவராகவிருக்கும்

இராமபிரானுடைய நண்பனும் அடிமையுமாவேன். அம்மகானுடைய ஒளியால் நான் உன்னை உயிருடன் விடேன்'' என்று சொல்லி விட்டு சுக்கிரீவன், அவ்விராவணனது தலையின்மேல் வந்து இறங்கி, அவனுடைய அழகான கிரீடத்தைத் தள்ளி, தானும் பூமியிற் குதித்தான். அவ்வாறு விரைவாகச் செல்லுகின்ற சுக்கிரீவனை நோக்கி "நீ என் கண்ணெதிரிலில்லாவிட்டால் சுக்கிரீவன் [அழகிய கழுத்துடையவன்] தான்; என் கண் முன்பாகவே கழுத்து அற்றவனுவாய்'' என்று இராவணன் சொல்லி, சடிதியில் எழுந்து, அவனைத் தனது கைகளினுல் இழுத்துப் பூமியில் தள்ளினுன்; அடிக்கடி பூமியிலிருந்து எழுந்து நின்று ஒருவரையொருவர் தூக்கி யெறிந்து பொரலானுர்கள். அவ்விருவரும் தேகப்பயிற்சியில் தேர்ந்தவர்களும் தேக வலிமையிற் சிறந்தவர்களுமாக இருந்தமையால் இளைப்பென்பதை விரைவாக அடையவில்லை. இவ்வண்ணம் இவ்விருவரும் சண்டையிடுகையில் இராவணன் பல இராவணர் இருப்பதுபோலத் தனது மாயையின் பலத்தாற் காட்டலானுன். சிறிதும் சிரமமின்றி வெற்றியடைந்திருந்த சுக்கிரீவன் அதைக் கண்டதும் ஆகாயத்திற் கிளம்பி வானர சேனையின் நடுவில் இராமர் பக்கத்தில் வந்து சேர்ந்தான்.

பிறகு இராமர் சுக்கிரீவனைத் தழுவிக் கொண்டு சொல்லலானுர் :—"என்னைக் கேட்காமலே நீர் இவ்வாறு செய்தது சாஹசமான காரியம்; இவ்வாறு சாகசமான காரியத்தை அரசர்கள் செய்யவே கூடாது. சாகசச் செயல் புரிவதில் ஆசையுள்ளவரே! என்னையும் இந்தச் சேனையையும் விபீஷணரையும் சந்தேகத்தில் விட்டு கஷ்டமான இந்த சாஹசச் செயலை தாங்கள் செய்தீர்கள். இனிமேல் வீரரே! தாங்கள் இவ்வண்ணம் எதிர்பாராத தொழிலைச் செய்யக்கூடாது; ஏனெனில் தங்களுக்கு ஏதாவது சங்கடம் வந்து விட்டால் எனக்குச் சீதையால்

என்ன பயன்" என்றார். இப்படிச் சொன்ன இராமரைப் பார்த்துச் சுக்கிரீவன் "இராகவரே! தங்கள் தேவியைக் கவர்ந்து சென்ற இராவணனைக் கண்ட பிறகு வீரரே! என் தேகத்தின் பலத்தை நான் அறிந்திருக்கையில் எவ்வாறு சகித்து நிற்பேன்" என்று மறுமொழி கூறினான்.

இப்படி சுக்கிரீவன் சொன்னதைக் கேட்டு இராமர் வெகு சந்தோஷமடைந்து இராம கைங்கரிய லட்சுமியைப் பெற்றிருக்கின்ற இலக்ஷ்மணரைப் பார்த்து பின்வருமாறு சொல்லலானார் :—"இலக்ஷ்மணா! குளிர்ந்த நீர்வளமுள்ளதும் கனிகள் நிரம்பிய காடுகளுள்ளதுமான ஓரிடத்தில் நமது படைகளைச் சேனாபதிகளின் வசத்தில் வைத்து அணிவகுத்து யுத்தத்துக்குத் தகுந்த முயற்சியுடன் இருப்போம். உலகத்தையே நாசம் பண்ணிவிடக்கூடிய கொடிய பல தீ நிமித்தங்களைக் காண்கின்றேன். சூரிய மண்டலத்தின் நடுவில் நீலவருணமான களங்கமொன்று காணப்படுகின்றது. நட்சத்திரங்கள் எப்பொழுதும்போலக் காணப்படவில்லை. ஆராய்ந்து பார்த்தால் இவைகளெல்லாம் இவ்வுலகத்தின் முடிவு காலத்தைக் குறிப்பனபோல விளங்குகின்றன. ஆகையால் நாம் இன்றையதினமே சடிதியில் இது வரையில் ஒருவராலும் தகையப்படாததாயும் இராவணனால் பாதுகாக்கப்பட்டதாயும் விளங்குகின்ற இலங்கையை வானர சைனியங்களால் சூழப்பட்டவர்களாய்க் கொண்டு எதிர்த்துச் செல்வோம்" என்றார்.

இவ்வண்ணம் இராமர் இலக்ஷ்மணனை நோக்கிச் சொல்லிக் கொண்டே அம்மலையினுச்சியிலிருந்து சடிதியிற் கீழிறங்கினார். வெகு நேரஞ் சென்ற பிறகு பகைவரை நாசஞ்செய்ய வல்ல இராம லக்ஷ்மணர்களாகிய இருவரும் இலங்கையை யடைந்தார்கள். இராமருடைய கட்டளைப் படி விபீஷணரும் இலக்ஷமணரும் இடைவெளிகளிலெல்லாம் ஒவ்வொரு கோடி வானர சேனையை நிறுத்தினார்கள்.

அவ்வானர வீரர்கள் அவ்விடம் நிரம்பி நின்ற காட்சியானது வெகு ஆச்சரியமாயும் அழகாயும் விட்டிற்கூட்டங்கள் கிளம்பியதுபோலவும் காணப்பட்டது. மேகங்கள் போன்ற உடம்புகளுடனும் இந்திரனுக்கு ஒப்பான பராக்கிரமத்துடனுங் கூடிய வானரர்கள் இலங்கையைச் சூழ்ந்து கொண்டதைக் கண்டு அரக்கர்கள் ஆச்சரியமடைந்தார்கள். கரை கடந்து பொங்குஞ் சமுத்திரத்திலிருந்து சத்தம் உண்டாவதுபோல அங்கே முற்றுகை செய்கிற வானர சேனையிலிருந்து பேரொலி யெழுந்தது.

சாம பேத தான தண்டங்களென்னுஞ் சதுர் வித உபாயங்களின் பயனை யுணர்ந்த இராமர் அரக்கர்களை வதை செய்யும் பொருட்டு அவ்வாறு தமது சேனையை அணி வகுத்து இறக்கிய பின்பு தாம் அரச நீதியைத் தவறு திருக்குமாறு நினைத்து செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றித் தமது மந்திரிமார்களுடன் கலந்து பல தடவை நன்றாக ஆலோசித்து நிச்சயித்து தாம் இனி நடத்த வேண்டிய காரியங்களை நடத்த விரும்பி விபீஷணருடைய அநுமதியின்மேல் வாலியின் குமாரனாகிய அங்கதனை தம்மிடங் கூப்பிட்டு இவ்வாறு சொல்லத் தொடங்கினார்:– "நண்ப! வானரா! நீ இராவணனிடஞ் சென்று நான் சொன்னதாகச் சொல்லி வரவேண்டும். 'அரக்கா! முனிவர் தேவர் கந்தர்வர் அப்ஸரஸ்ஸுக்கள் நாகர் யக்ஷர் மநுஷ்யர் இவர்களவ்வளவு பெயர்களுக்கும் இறுமாப்பால் இது வரையில் தீமை செய்து வந்தாயன்றோ! அச்செருக்கு இன்றோடே தொலைந்தது; எவ்வித பலத்தின்மேல் நம்பிக்கைவைத்து நாமில்லாத வேளைபார்த்துச் சீதையைக் கவர்ந்து சென்றாயோ அப்பலத்தை நம் முன் நின்று இப்பொழுது கொஞ்சம் காட்டிவிடு. சீதையைத் திருப்பிக் கொண்டு வந்து கொடுத்து நமது பாதங்களிற் சரணமென்று நீ வந்து விழாத பட்சத்தில், நமது கூரான அம்புகளால் இவ்வுலகத்தில் அரக்கப்பூண்டேயில்லாதவண்ணம்

நாம் செய்து விடுகின்றோம். அரக்கருள் உத்தமரான தருமாத்துமாவாகிய விபீஷணர் நம்மிடம் வந்து சேர்ந்திருக்கிறார்: சீமானாகிய இவர் ஒருவித இடையூறுமின்றி, இனி இவ்விலங்கையை யாளும் பாக்கியத்தை அடையப் போகின்றார். நீ தைரியத்தைக் கைப்பற்றி உனது வல்லமையைக்கொண்டு நம் முன்னே போர் புரி; நமது பாணத்தாற் போரில் மாண்டவனாய் பிறகு பரிசுத்தனாகிவிடுவாய்" என்றார்.

இவ்விதமாக ஸ்ரீராமர் அங்கதனிடஞ் சொன்னதும் அவ்வானர வீரன் உருவமெடுத்துச் செல்லுகின்ற அக்கினி பகவான்போல ஆகாயத்திலெழுந்து சென்றான். ஒரு நொடியில் இராவணன் மாளிகை சேர்ந்து அவ்விராக்ஷச ராஜன் தனது மந்திரிமார்களின் நடுவில் ஒரு கவலையுமின்றி உட்கார்ந்திருந்ததைக் கண்டான். அவனுக்குச் சமீபத்தில் தோள் வளைகளை யணிந்து கொழுந்து விட்டெரியுந் தீப்போன்ற அங்கதனென்னும் அவ்வானர வீரன் இறங்கி தான் இன்னானென்று தெரிவித்து அவ்வரக்கனிடம் இராமபிரான் சொன்ன சமாசாரத்தை ஒன்றும் விடாமல் ஒன்றும் அதிகமில்லாமற் சொன்னான்.

இவ்வாறு இராமர் சொன்னதாக அங்கதன் கடுமையாகச் சொல்லியபொழுது அது கேட்ட இராவணன் கோபத்திற்கு அதீனனாய், கோபத்தாற் கண்கள் சிவக்க, மந்திரிமார்களை நோக்கி, "புத்தியற்ற இவனைப் பற்றிக் கொள்ளுங்கள்; உடனே இவனை வதை செய்யுங்கள்" என்று கட்டளையிட்டான். பற்றி யெரியுந் தீப்போல விளங்கிய அவ்விராவணனுடைய கட்டளையைக் கேட்டதும், பயங்கரமான தோற்றமுள்ள நான்கு அரக்கர்கள் அவனைப் பிடித்துக் கொண்டார்கள். அப்படியே அவர்கள் தனது இரு கைகளைப் பற்றிக் கொண்டதும் அவர்களை யிடுக்கிக் கொண்டு, அங்கதன் பருவதம்போலோங்கி நின்ற இராவணன் மாளிகையின்மேல் பறவைபோலக்

கிளம்பினான். அவ்வாறு கிளம்பி ஆகாயத்திலிருந்தபடியே அங்கதன் அவ்வரக்கர்களை உதறிக் கீழே தள்ளியதனால் அவர்கள் எல்லாரும் இராவணன் கண்கள் முன்பாகவே பூமியில் விரைவாகப் பொத்தென்று விழுந்தார்கள். அதன் பிறகு அங்கதன் மிகவும் உயரமான இராவணனது மாளிகைச் சிகரத்தைப் பார்த்தான். அவன் ஓர் உதை உதைக்கவே முன்பு இமயமலையின் சிகரம் இந்திரனாற் பிளக்கப்பட்டு விழுந்ததுபோல இராவணனது மாளிகைச் சிகரம் இடிந்து விழுந்தது. அவ்வாறு அம்மாளிகையின் சிகரத்தை இடித்து தனது பெயரைக் கூறி அட்டகாசஞ் செய்து வானர சேனையின் நடுவில் இராமருடைய சமீபத்தில் வந்து சேர்ந்தான்.

தனது மாளிகைச் சிகரம் அவ்வாறு அங்கதனால் இடிக்கப்பட்டதைக் கண்டு இராவணன் அதிக கோபங் கொண்டான்; அன்றியும் தனக்கு நாச காலம் நெருங்கி விட்டதென்பதாகவும் நினைத்துப் பெருமூச்செறிந்தான். இராமரோ சந்தோஷத்தால் அட்டகாசம் பண்ணும் பல வானர வீரர்களாற் சூழப்பட்டவராய் தமது சத்துருவை வதைக்கத் தீர்மானித்து போர் புரிய மிக்க ஆவலுடன் எதிர் பார்த்து நின்றார்.

44. நாகபாசத்தால் இராம லட்சுமணர்களைக் கட்டுதல்

அதன்பிறகு கோட்டை வாயில்காப்பாளரா யிருந்த அரக்கர்கள் இராவணனுடைய மாளிகைக்குச் சென்று வானரர்களுடன் இராமர் இலங்கைமாநகரை முற்றுகை செய்ததாக தெரிவித்தார்கள். நகரம் தகையப்பட்டதைக் கேட்டு அவ்வரக்கன் கோபங்கொண்டு நகரத்தைக் காப்பாற்றுமாறு முன்னமே செய்திருந்த ஏற்பாடுகளை இரட்டிப்பாகச்செய்து தனது மாளிகையின்மேலேறினான். அவன் தனது நகரமானது எல்லாப் பக்கங்களிலும் போர் புரிய உற்சாகத்துடனிருக்கின்ற எண்ணிக்கையிலடங்

காத வானரர்களாற் சூழப்பட்டிருப்பதைக் கண்டான். பூமியின்பாகம் ஒரு சாண்கூட வெற்றிடமாகக் காணப் படாமல் வானரர்கள் நின்றதை இராவணன் உற்றுப் பார்த்து எவ்விதமாய் இவர்களை நாம் ஜயிக்கப்போகின் ரேம் என்று ஏக்கங்கொண்டான்.

இராமரோ மகிழ்ச்சிகொண்டு தமது சேனைகளுடன் இலங்கையின் பிராகாரத்தைச் சார்ந்து இலங்காபுரியா னது அரக்கர்களால் நன்ருகப் பாதுகாக்கப் பெறுவதை யுங் கண்டார். வானரர்களை நோக்கி பகைவர்களை விரை வில் வதைக்குமாறு கட்டளையிட்டார். தாமிரவருணமான முகங்களும் தங்கநிறமான மேனியும் அமைந்த அவ்வான ரர்கள் இராமபிரான் நிமித்தம் தங்களுயிரையுங் கொடுக்க உறுதிகொண்டவர்களாய் இலங்கையை நோக்கிச் செல்ல லானூர்கள். "வெகுபலம் பொருந்திய இராமபிரான் வெற்றிபெறுக; மகாபலம் படைத்த இலக்ஷ்மணரும் வெற்றிபெறுக; இராமராற் பாதுகாக்கப்படும் மகாராஜ ராகிய சுக்கிரீவரும் வெற்றிபெறுக" என்று கோஷித்துக் கொண்டும் கர்ஜ்ஜித்துக்கொண்டும் இலங்கையின் மதில் களை நோக்கி ஓடலானூர்கள்.

இப்படி இவர்கள் இங்கிருந்த காலத்தில் கோபத் தாற் கலவரப்பட்ட அரக்கர்மன்னனை இராவணன் தனது எல்லாச் சேனைகளையும் சடிதியிற் புறப்படுமாறு கட்டளையிட்டான். அவன் கட்டளைப்படியே அவ்வரக்க சேனைகள் உற்சாகத்துடன் சந்திரோதயகாலத்திற் சமுத் திர ஜலம் பொங்குவதுபோலப் புறப்பட்டன. தேவர் களுக்கும் அசுரர்களுக்கும் முற்காலத்திற் சண்டையுண் டானதுபோல இச்சமயத்தில் அரக்கர்களுக்கும் வானரர் களுக்கும் வெகு பயங்கரமான சண்டை தொடங்கலா யிற்று. அவ்வரக்கர்கள் மின்னுகின்ற கதாயுதங்களா லும் சக்திகளாலும் சூலங்களாலும் கோடரிகளாலும் வானரர்களைப் புடைத்தார்கள். வானரர்கள் அவ்வரக்கர் களை எதிர்த்துப் புடைத்தார்கள்.

அவ்வாறு வானரர்களும் அரக்கர்களும் போர்புரிந்து கொண்டிருக்கையில் சூரியன் அஸ்தமித்தான். அவ்விரவில் "நீ அரக்கன்" என்று சொல்லிக்கொண்டு வானரர்களும் "நீ வானரன்" என்று சொல்லிக்கொண்டு அரக்கர்களும் போரிலே ஒருவரை யொருவர் புடைக்கலானார்கள். மயிர்க்கூச்செறியும்படி பயங்கரமான அப்பெரும் போர் நடந்தபொழுது, அப்போர்க்களத்தில் செந்நீரானது பார்ப்பதற்குப் பயமுண்டாகும்படி ஆறாக ஓடலாயிற்று. அங்கதனோ, போரில் சத்துருவைக் கொல்லும்படி கிட்டியவனாய் இந்திரஜித்தை அறைந்து தேர்ப்பாகனையும் குதிரைகளையுங் கொன்றான். உடனே பெருஞ் சரீரமுடைய இந்திரஜித்து இரதத்தை விட்டு அவ்விடத்திலேயே மறைந்துவிட்டான்.

பாவியாகிய இந்திரஜித்து மறைந்து நின்றபடியே இடிகளை விடுவதுபோலக் கூர்மையான பாணங்களைப் பிரயோகிக்கலானான். அவ்வரக்கன் போரில் வெகு உக்கிரகங் கொண்டவனாய் பயங்கரமான நாகாஸ்திரங்களைக் கொண்டு இராமரையும் இலக்ஷ்மணரையும் தேகங்கள் முழுதும் பிளந்து தனது நாகபாசங்களால் மோகமடையும்படி கட்டினான். உடம்பெங்கும் அம்புகள் நிறைந்து நொந்து எளிமையடைந்த அவ்விரு வீரரும் உடம்பெங்கும் குருதிசொரிய வீரர்படுக்கையில் படுத்துக்கொண்டார்கள். அவ்விருவருடைய தேகங்களிலும் ஒரு விரற்கிடையளவாவது பாணத்தால் அடிக்கப்படாது காணப்படவில்லை. அவ்விருவர் தேகங்களிலிருந்தும் பிரஸ்ரவண மலையினின்று நீரருவி பெருகுவதுபோல இரத்தம் பெருகலாயிற்று.

நாகபாசத்தாற் கட்டப்பட்டவர்களாய் இராமலக்ஷ்மணர் விழுந்திருப்பதைக் கண்டு வானரர்களெல்லாரும் விபீஷணருடன் கூட வருத்தமடைந்தார்கள். இந்திர

ஜித்து தான் புரிந்த செயலையும் அவ்விருவரும் விழுந்திருப்பதையும் பார்த்து வெகு சந்தோஷமடைந்து எல்லா அரக்கர்களையும் களிக்கச்செய்து சொல்லலானான்:—"முன்னே கரனையும் தூஷணனையும் கொன்ற மகாபலசாலிகளான இராம லக்ஷ்மணர்களென்ற சகோதரர்கள் இப்போது எனது பாணங்களால் ஒழிக்கப்பட்டார்கள். எல்லாத் தேவர்களும் அசுரர்களுடனும் முனிவர் கூட்டங்களுடனும் ஒருங்கு கூடினாலும் என் பாணக்கட்டிலிருந்து இவ்விருவரையும் விடுவிக்கமுடியாது. நாம் வேருடன் கெடுமாறு நமக்கெல்லாம் அநர்த்தத்தை விளைக்கக்கூடியவரென்று நினைத்திருந்த அவ்விராமரை நான் ஒழித்துவிட்டேன்" என்றான்.

இவ்வாறு தன்னைச் சூற்றியிருந்த அரக்கர்களை நோக்கி இந்திரஜித்து சொல்லிவிட்டு இராமருடைய சேனாபதிகளையெல்லாம் புடைக்கலானான். அவ்வானரர்களை அம்புகளின் கூட்டங்களினால் பீடித்து பயமுறுத்தி எல்லாவரக்கர்களையும் களிக்கச் செய்துகொண்டு இலங்கைமா நகர்க்குட் புகுந்தான்.

இராம லக்ஷ்மணர்களுடைய தேகங்களும் அவற்றின் உறுப்புக்களும் பாணங்களால் நிரம்பியதைப் பார்த்ததும் சுக்கிரீவனுக்கும் பயமுண்டாயிற்று. அவ்வாறு பயத்தால் நடுங்கி கண்ணுங் கண்ணீருமாய் வெகு பரிதாபமான தோற்றத்துடன் குழம்பிநின்ற வானர ராஜனாகிய சுக்கிரீவனை நோக்கி விபீஷணர் கூறலுற்றார்:-"சுக்கிரீவரே! பயப்படவேண்டாம். கண்ணீர்ப் பெருக்கை அடக்கிக்கொள்ளுங்கள். யுத்த மென்பது இவ்விதமாகத்தானிருக்கும்; வெற்றியென்பது நிச்சயமாக ஒருவர் பங்கன்று; வீரரே! நமக்குப் பாக்கியம் இன்னும் கொஞ்சம் மிகுந்திருக்குமானால், மகாபலமுள்ள இவர்களை விட்டு இந்தமோகம் சடிதியில் நீங்கிவிடும். வானர வீரரே! தங்களைத் தேற்

றிக் கொள்ளுங்கள்; அநாதனுயிருக்கும் என்னையும் தேற்றிவையுங்கள். சத்தியம் தருமம் இவைகளில் அன்பு பாராட்டுகின்றவர்களுக்கு அகால மரணத்தினுற் பயம் உண்டாகாது. ஆகையால் எல்லாக்காரியங்களையும் நாசம் பண்ணிவைக்கும் ஏக்கத்தை விட்டிடுங்கள். இதுவரை யில் இராமர் நடத்திவந்த சைனியங்களுக்கு அநுகூல மானதை ஆலோசித்துப் பாருங்கள். இராமர் மூர்ச்சை தெளிகின்றவரையிலும் இந்தச் சைனியங்களை பரிபால னம் பண்ணவேண்டும். அவ்விருவர்க்கும் நல்ல நினைவு வந்தவுடன் நமது துயரத்தை அவர்களே அகற்றிவிடுவார் கள். இந்த அஸ்திரக்கட்டு இராமரை ஒன்றுஞ்செய் யாது; இராமர் மாண்டுபோக மாட்டார். ஆயுள் ஒழிந்து போனவனை விட்டுப்பிரிகின்ற முகக்களை சிறிதும் இவரை விட்டுப் பிரியவில்லையே. ஆகையால் நான் எதுவரையில் செய்யவேண்டிய தொழில்களை யெல்லாஞ் செய்கின் றேனே அதுவரையில் நீங்கள் உங்களை தேற்றிக்கொண்டு பிறகு உங்களுடைய சேனைகளையும் தேற்றியிருங்கள்'' என்று சொல்லி விபீஷணர் சுக்கிரீவனையும் வானர சேனை களையும் தேற்றினர்.

பெருமையாயுள்ள இந்திரஜித்தோ தனது தந்தை யிருக்குமிடத்தை நாடிவந்தான். அவரை வணங்கி அஞ் சலிசெய்து நின்றுகொண்டு 'இராம லக்ஷ்மணர்கள் மடிந் தார்கள்' என்று தனது தந்தைக்கு வெகு சந்தோஷகர மான சமாசாரத்தை தெரிவித்தான். அதைக் கேட்டதும் இராவணன் சரேலென்று எழுந்திருந்து தனது குமாரனை தழுவிக்கொண்டான். அவனை உச்சிமோந்து வெகு அன் பாக எல்லாச் சமாசாரங்களையும் விசாரிக்கலானன். இந் திரஜித்தும் எல்லாச் சங்கதிகளையும் நடந்தவண்ணம் தெரிவித்தான். தன்னுடைய நாகாஸ்திரக் கட்டினுல் இராம லக்ஷ்மணரிருவரும் அசைவற்று ஒளியற்றவர் களாய் விழுந்துகிடப்பதை தெரிவித்தான்.

இப்படி யிருந்தபொழுது வீரராகிய இராமர் தாம் சரங்களாற் கட்டப்பட்டவரா யிருந்தபோதிலும் தமது அதிக பலத்தாலும் தைரியத்தாலும் மூர்ச்சைதெளிந்தார். பிறகு தனது தேகமெல்லாம் உதிரமொழுக பாணங்களால் நன்றாகக் கட்டப்பட்டு நொந்து வெகு பரிதாபமான முகத்துடன் தமது தம்பி விழுந்துகிடப்பதைப் பார்த்து துக்கம் மேலிட்டவராய் இராமர் புலம்பலானார்:-"போரில் வெல்லப்பட்டவனாய் இப்பொழுது என் தம்பி படுத்திருப்பதைப் பாக்கிறேனே! இனி எனக்கு சீதையால் என்ன பயன்? அல்லது என் பிராணனால்தான் யாதுபயன்? இம் மானிடவுலகத்தில் நன்றாகத் தேடிப்பார்த்தால் சீதையைப் போன்ற ஒரு பெண்ணை யான் காணலாம். உதவி செய்கின்றவனாயும் போரில் வீரனாயுமுள்ள இந்த இலக்ஷ்மணனுக்குச் சமமான தம்பி எங்கும் கிடைக்கமாட்டானே! சுமித்திரைக்கு மகிழ்ச்சி யூட்டுபவனான இலக்ஷ்மணன் இறந்திருப்பானேயாயின் நான் வானரர்கள் முன்னிலையில்தானே என் பிராணனை விட்டிடுகின்றேன். பேரொளிபொருந்திய இவ்வுத்தமன் நான் காட்டுக்குப் புறப்பட்டபொழுது எவ்வண்ணமாக என்னைத் தொடர்ந்து நின்றானோ அதுபோலவே நானும் இப்பொழுது இவனைத் தொடர்ந்து யமனுடைய மாளிகைக்குச் செல்வேன். சுக்கிரீவரே! தாங்கள் என்னிடம் வைத்த நட்பிற்கும் தங்கள் பருவத்திற்கும் தக்கபடி எவ்விதமாக நடந்துகொள்ளவேண்டுமோ அவ்விதமாகத் தர்மத்துக்கு அஞ்சி தாங்கள் நடந்தீர்கள். வானரவீரர்களே! நீவிரெல்லீரும் உங்கள் நண்பனுக்குச் செய்யவேண்டிய காரியத்தை செய்துவிட்டீர்கள். இனி நான் உங்கட்கு விடைகொடுத்து விட்டேன். உங்களுக்கு இஷ்டமான இடங்களுக்குச் செல்லலாம்" என்றார். வானரர்களெல்லாரும் இராமர் அவ்வாறு புலம்பியதைக் கேட்டு தங்கள் கண்கள் சிவந்தவர்களாய் கண்ணீரை பெருக்கலானார்கள்.

45. நாகபாசத்தை நீக்குதல்

பிறகு ஒரு முகூர்த்த காலத்திற்குள் எரியும் தீப்போல விளங்குகின்ற விநதையின் புதல்வனுகிய மகாபலமுள்ள கருடபகவானை எல்லா வானரவீரர்களும் கண்டார்கள். அக்கருடபகவானது வரவைக்கண்டதும் மகா பலவான்களான இராம லக்ஷ்மணர்களைச் சர வடிவமாகக் கட்டியிருந்த நாகங்கள் பயந்தோடிவிட்டன, பிறகு கருடபகவானும் காகுத்தர்களைக் கண்டு சந்தோஷித்து சந்திரன்போல் விளங்கிய அவர்களது முகங்களை தனது கைகளால் தடவிக்கொடுத்தான். கருடபகவான் கைபட்டதும் இராம லக்ஷ்மணருடைய விரணங்களெல்லாம் ஆறின; அவ்விருவருடைய திருமேனிகளும் தங்கம்போன்ற நிறமமைந்து வழுவழுப்படைந்தன. அன்றியும் அவ்விருவரது ஒளி வீரியம் பலம் தேககாந்தி உற்சாகம் நுண்ணறிவு விவேகம் ஞாபகசக்தி இவைகளெல்லாம் முன்னிருந்ததைவிட இரட்டிப்பாக விளங்கின. இந்திரனுக்கு ஒப்பாய் மகா வீரரான அவ்விருவரையும் கருடபகவான் எழுப்பி அவர்கள் சந்தோஷமாக எழுந்து நின்றவுடன் அவர்களைத் தழுவிக்கொண்டான்.

அப்பொழுது இராமர் கருடனைநோக்கி சொல்லலானுர்:—"தங்கள் கருணையால் இந்திரஜித்தினுலுண்டான பெரிய ஆபத்திலிருந்து நாங்களிருவரும் இப்போது விடுவிக்கப்பட்டோம்; அன்றியும் முன்போலவே பலமுள்ளவர்களாகவும் செய்யப்பட்டோம். இவ்வாறு நல்ல உருவத்துடன் தேவலோகத்து மலர் மாலையையும் கலவைச் சந்தனத்தையும் அணிந்து மாசற்ற ஆடையுடுத்து திவ்வியமான ஆபரணங்களை தரித்துக்கொண்டு வந்திருக்கும் தாங்கள் யாவர்?" என்ருர். விநதையின் குமாரனும் பட்சிராஜனுமாகிய மகா பலம்பொருந்திய கருடபகவான் வெகு சந்தோஷத்துடன் கண்களில் ஆனந்த பாஷ்பம் ததும்ப

இராமரைநோக்கி மறுமொழி சொல்லலானான்:—காகுத்தரே! நான் தங்களுடைய தோழன்; வெளியிற் சஞ்சரிக்கின்ற தங்களுடைய பிராணன்? எனது பெயர் கருத்மான்; உங்களுக்கு உதவிசெய்தற்பொருட்டு இவ்விடம் வந்தேன். கத்துருவின் வம்சத்தைச் சேர்ந்தனவும் பற்களுள்ளனவுமான இந்த நாகங்கள் அவ்வரக்கனுடைய மாயையின் வலிமையால் சர வடிவங்கொண்டு தங்களைக் கட்டின. இவ்விருத்தாந்தத்தை நான் கேள்விப்பட்டு நண்புரிமையைக் காக்குமாறு உங்களிடத்துள்ள அன்பினால் இங்கு விரைந்துவந்தேன். இக்கொடிய பாணக்கட்டினின்று நான் உங்களிருவரையும் விடுவித்துவிட்டேன். இனி நீங்களிருவரும் எப்போதும் வெகுஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நண்பரே! ராகவரே! தருமத்தை யறிந்தவரே! பகைவர்களும் விரும்புங் குணமுள்ளவரே! தங்களை விடையளிக்குமாறு வேண்டுகின்றேன். வந்தவழியே திரும்பிச் செல்லுகின்றேன். இவ்விலங்கையை பாணங்களின் தொகுதிகளால் குழந்தைகளும் கிழவர்களும் மிச்சமாகுமாறு செய்து ராவணனென்ற சத்துருவைக்கொன்று சீதையைத் தாங்கள் அடைவீர்கள்'' என்றான். இவ்வாறு சொல்லிவிட்டு கருடபகவான் இராமரை வலம்வந்து மீண்டும் ஒருமுறை தழுவி ஆகாயத்திலெழுந்து வாயுவேகமாகச் சென்றான். பிறகு வானரசேனைத் தலைவர்கள் இராமலக்ஷ்மணர் தமக்கு வந்த ஆபத்தினின்று நீங்கியதைக் கண்டதும் சிங்கநாதஞ்செய்து தங்கள் வால்களை உதறலானார்கள்.

பலமுள்ள அந்த வானரர்கள் அவ்வாறு பெருஞ் சத்தமிட்டதை அரக்கர்களுடனிருந்த இராவணன் கேட்டான். அழகாயும் கம்பீரமாயு மெழுந்த அப்பெருஞ் சத்தத்தை ராக்ஷசராஜன் கேட்டதும் மந்திரிமார்களின் நடுவிலிருந்தவாறே இராவணன் பின் வருமாறு சொல்லலானான் :—"பல வானரவீரர்கள் வெகு ஆனந்தத்தில்

மூழ்கிச் செய்கின்ற இப்பெருஞ் சத்தமானது கர்ச்சிக்கின்ற மேகங்களிலிருந்து உண்டாகுஞ் சத்தம்போல கேட்கப்படுகின்றது ; ஏதோ பெருங்களிப்புக்குக்காரணம் அவர்களுக்கு உண்டாயிருக்க வேண்டு மென்பதற்குச் சந்தேகமில்லை ; ஏனெனில் அவர்கள் செய்யும் பெருஞ் சத்தத்திறைற் சமுத்திரமே கலங்கிவிடுகின்றதே. உடன் பிறந்தவர்களான அந்த இராமலக்ஷ்மணர்கள் கொடிய நாகபாசங்களாற் கட்டுண்டிருக்கவும், இப்பெருஞ் சத்த முண்டானது எனக்குப் பெருஞ் சந்தேகத்தை யுண்டாக்குகின்றது. இந்த வானரர்களெல்லாரும் இப்பொழுது துக்கப்பட வேண்டிய காலமாக இருக்க இவர்கள் சந்தோஷப்படுமாறு என்ன காரண முண்டாயிற்றென்று சீக்கிரம் அறிந்து வாருங்கள்" என்று கட்டளையிட்டான்.

அப்படியாகத் தமது வேந்தன் சொன்னதும் வெகு வேகமாக அவ்வரக்கர்கள் கலக்கத்தோடு மதில்களின் மேல் ஏறி மகாத்துமாவாகிய சுக்கிரீவன் பாதுகாக்கின்ற வானர சேனையைப் பார்த்தார்கள். அந்த ராகவரிருவரும் மிகக்கொடிய நாகபாசத்தைவிட்டு நீங்கி யெழுந்து வெகு காந்தியோடு விளங்கிக்கொண்டிருப்பதை கண்டு துக்கமடைந்தார்கள். அவர்களெல்லாரும் மனம் நடுங்கியவர்களாய் கீழே யிறங்கி துக்கத்தால் வாடிய முகங்களுடன் இராவணனுக்கருகில் வந்து அந்த அநிஷ்ட சங்கதி முழுவதையும் உண்மையாகத் தெரிவித்தார்கள். மகாபலம் பொருந்திய ராக்ஷசராஜன் அவர்கள் சொன்னதைக் கேட்டு தூம்ராக்ஷனென்ற அரக்கனைப் பார்த்து "பயங்கரமான பராக்கிரமமுள்ள வீரனே! நீ பெருஞ் சேனையை உடன்கொண்டு சடிதியில் வானர சேனையுடன் இராமனையும் போரில் வதைசெய்யுமாறு செல்லுக" என்ருன். இவ்விதமாக இராவணன் சொன்னதும் தூம்ராக்ஷன் அப்படியே பெருஞ்சேனையை வெகு விரைவிற்

செலுத்தினான். மகாவீரியம் பொருந்திய தூம்ராக்ஷன் சிரித்துக்கொண்டே அனுமானென்னுஞ் சேனைபதி யிருந்த மேலைக் கோட்டைவாயிலை நோக்கிப் புறப்பட்டான்.

யாவரும் அஞ்சத்தக்க பராக்கிரமம் பொருந்திய தூம்ராக்ஷன் வெளிப்புறப்பட்டு வருவதை வானரர்களெல்லாரும்பார்த்து சண்டையை எதிர்பார்த்திருந்தவர்களாகையால் வெகுசந்தோஷங்கொண்டு ஆரவாரஞ் செய்தார்கள். அப்போது வானரர்களுக்கும் அரக்கர்களுக்கும் பயங்கரமான யுத்தம் நடக்கலாயிற்று. தூம்ராக்ஷனும் கையில் விற்பிடித்தவனாய்ச் சிரித்துக்கொண்டே அப்போர்க்களத்தில் வானரர்களையெல்லாம் சரமாரி பொழிந்து பல திசைகளில் துரத்தியடிக்கலானான். வானர சேனை தூம்ராக்ஷனால் அவ்வாறு இம்சிக்கப்பட்டுக் கலங்கினதை, அனுமான் பார்த்து வெகு கோபங்கொண்டு தனது கையில் பெருமலையொன்றை யெடுத்துக்கொண்டு ஓடிவந்தான். தன் து தந்தைக்கு ஒப்பான பராக்கிரமமுள்ள மாருதி கோபத்தால் தனது கண்கள் இரட்டிப்பாகச் சிவக்க அந்தத் தூம்ராக்ஷனது தேரைநோக்கி மலையை எறிந்தான். அம்மலையும் சக்கரம் ஏர்க்கால் குதிரை கொடி என்ற இவற்றுடனே அவனது இரதத்தை முறித்துப் பூமியில் விழுந்தது. வாயு குமாரனான அனுமான் அத்தேரை நாசம்பண்ணிப் பின்னும் மலையின் சிகரமொன்றைக் கையிலெடுத்துக்கொண்டு தூம்ராக்ஷனை நோக்கி யோடினான். அவ்வாறு தன்னை நோக்கி விரைந்து வருகின்ற அனுமானைப்பார்த்து தூம்ராக்ஷன் தனது கதையை ஓங்கியவனாகி கர்ச்சித்துக்கொண்டே அவனுக்கு எதிர்முகமாகச் செல்லலானான். பிறகு தூம்ராக்ஷன் பல முட்களையுடைய கதாயுதத்தை அனுமானது தலையில் விழும்படி வெகு வேகமாக எறிந்தான். பயங்கரமான அக்கதையால் அனுமான் அடிபட்டான். அனுமான் அவ்வடியை லட்சியஞ்செய்யாமலே தூம்ராக்ஷனுடைய நடுத்தலையில் விழும்படி

மலைச்சிகரமொன்றை யெறிந்தான். உடனே அவ்வரக்கனும் அச்சிகரத்தால் மோதப்பட்டு எல்லாவுறுப்புக்களும் சிதற சிதறுண்ட பருவதம்போல புவியில் விழுந்தான். தூம்ராக்ஷன் மடிந்ததைக் கண்டதும் எஞ்சியிருந்த அரக்கர்கள் பயந்து இலங்கைக்குட் புகுந்துகொண்டார்கள்.

அவ்வரக்கர்கள் இலங்கைக்குள் புகுந்தபிறகு மகாபலம் பொருந்திய எல்லா வானரர்களும் ஒருங்குசேர்ந்து அனுமானைக் கொண்டாடினர்கள். சத்வகுணம் பெற்றவனை அனுமானும் பெருமகிழ்ச்சியடைந்து அவரவர்கட்குத் தக்கவாறு எல்லா வானரர்கட்கும் உசிதமான மறுமொழி கூறிக்களித்தான்.

இராவணன் தன் சேனுபதிகள் போரில் வதைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டு வெகுகோபங்கொண்டு கொஞ்சம் பரிதாபமான முகத்துடன் தன்னருகிலிருந்த மந்திரிமார்களைப் பார்த்தான். பிறகு அவர்களுடன் கலந்து ஆலோசனை செய்துவிட்டு அன்றைக் காலையில் தனது சேனை அணிவகுக்கப்பட்டு நிற்பதைக் காணுமாறு இலங்கையைச் சுற்றிவந்தான். அந்நகரம் பகைவரால் முற்றுகை செய்யப்பட்டிருப்பதைக் கண்டு யுத்தத்திற் சமர்த்தனை பிரஹஸ்தனைப் பார்த்துச் சொல்லலானுன் :— "போரில் வல்லவனே! நாற்புறங்களிலும் பகைவரால் முற்றுகையிடப்பட்டும் எதிர்பாராமலே உபத்திரவிக்கப்பட்டுமுள்ள இந்நகரத்துக்கு யுத்தத்தைத்தவிர வேறு தப்பும் வழியைக் காணேம். நான் அல்லது கும்பகர்ணன் அல்லது நமது சேனுபதியாகிய நீ அல்லது இந்திரஜித்து அல்லது நிகும்பன் இவர்களில் ஒருவர் தான் இந்நகரத்தை சத்துரு பயத்திலிருந்து நீக்கிப் பாதுகாக்கும் பாரத்தை வகிக்கத்தக்கவர்கள். ஆகையால் விரைவாக நீ இச்சைனியம் எல்லாவற்றையும் உடன் அழைத்துக்கொண்டு வெற்றி பெறுதற்பொருட்டு, அவ்வானர சேனையை நோக்கிச் செல்லுவாய்." என்றுன்.

இராவணன் இவ்விதமாகக் கூறினதும் சேனாபதியான பிரகஸ்தன் உசநஸ் என்பவர் அசுரேந்திரனை நோக்கிப் பேசுவதுபோல இராவணனை நோக்கி மறுமொழி சொல்லலானான் :—"வேந்தரே! வெகு சமர்த்தர்களான மந்திரிமார்களுடன் நாம் இதற்கு முன்னமே ஆலோசனை செய்திருக்கின்றோம். அக்காலத்தில் நாம் பலவிதமாக ஆலோசித்துப் பார்த்ததில் நமக்குள் ஒருவர்க்கொருவர்க்கு விவாதமும் உண்டாயிற்று. சீதாதேவியை திருப்பிக் கொடுப்பது நமக்கு க்ஷேமமென்றும் கொடுக்காவிட்டால் யாவரும் ஒழிதற்குக் காரணமான யுத்தம் நேருமென்றும் நாங்கள் தங்கட்குத் தெரிவித்தோம். அவ்வாறே இப்போது நேர்ந்தது. தாங்களோ பொருள் கொடுத்தும் பல வகை மரியாதைகள் செய்தும் நல்வார்த்தை சொல்லியும் என்னை எப்போதும் பெருமையாக வைத்திருக்கிறீர்கள்; ஆகையால் தங்களுடைய ஆபத்துக்காலத்தில் தங்களுக்கு இஷ்டமான எதைத்தான் நான் செய்யமாட்டேன்? என் பிராணனையாவது எனது குமாரர்கள் பெண்டுகள் பொருள்களையாவது எனக்குப் பாதுகாக்கவேண்டுமென்ற எண்ணமில்லை; தங்கள் பொருட்டுப் போர்க்களத்தில் என் உயிரை நான் இழப்பதைத் தாங்கள் பார்க்கலாம்" என்றான். இவ்வாறு தனது தலைவனாகிய இராவணனிடஞ் சொல்லிவிட்டு. பெரிய ராக்ஷச சேனையால் சூழ்ப்பட்டவனாய் சடிதியில் இலங்கையைவிட்டுப் புறப்பட்டான்.

பெயர் பெற்ற வல்லமையும் பராக்கிரமும் அமைந்த பிரஹஸ்தன் புறப்பட்டு வந்தபொழுது போர்க்களத்தில் வானர சேனையும் பலவகை ஆயுதங்களை எடுத்துக் கொண்டு எதிர் வந்து நின்றது. போரிலே அரக்கர்கள் வானரர்களைக் கொன்றார்கள்; வானரர்கள் அரக்கர்களைக் கொன்றார்கள். வானரர்களின் சரீரங்களாலும் அரக்கர்களின் தேகங்களாலும் நிரம்பியிருந்த அப்போர்க்களம்

சரிந்துவிழுந்த மலைகளால் நிரம்பியதுபோலவும் இரத்த வெள்ளத்தால் மூடப்பட்டு வசந்த காலத்தில் செந்நிறமான மல்ர்களையுடைய பலாச மரங்களால், நிரம்பிய இடம்போலவும் தென்பட்டது.

பிரஹஸ்தன் நீலன்மேற் பாணங்களைப் பிரயோகித்தான்; நீலன் வெகு கூராய் நெருப்பை நிகர்ப்பனவான அந்தப் பாணங்களால் அடியுண்டு பிரஹஸ்தனை பெரிய விருட்ச மொன்றைப் பிடுங்கி அடித்தான். பின்னும் மகாபலம் பொருந்திய அவ்வானர வீரன் பிரஹஸ்தனது வில்லைப் பிடுங்கி தனது பலத்தால் அதனை முறித்து பல முறை அட்டகாசஞ் செய்தான். பிரஹஸ்தனென்ற சேனாதிபதி தனது வில் முறிந்தவுடன், பயங்கரமான உலக்கையொன்றைக் கைப்பற்றி, தனது இரதத்தைவிட்டுக் கீழே குதித்தான். தனது வலிமை முழுமையையும் சேர்த்து உலக்கையால் ஓங்கி நீலனுடைய நெற்றியில் ஓர் அடி அடித்தான். தனது மேனி முழுதும் இரத்தம் வழியப்பெற்ற நீலன் பெரும்பாறை யொன்றைத் தனது கையில் எடுத்து பிரஹஸ்தனுடைய தலையின்மேல் விரைந்து வீசியெறிந்தான். நீலனால் எறியப்பட்ட அப்பெரும்பாறை அப்போது பிரஹஸ்தனுடைய தலையைப் பலதுண்டமாகப் பிளந்திட்டது. வேருடன் வெட்டுண்ட மரம்போல அவ்வரக்கன் தனது உயிர் ஒழிந்து புகழ் நீங்கி வலிமைகுன்றி ஐம்புலன்களும் தடுமாறி திடீரென்று பூமியில் விழுந்தான். நீலன் பிரஹஸ்தனைக் கொன்றதும் எவராலும் அசைக்க முடியாது விளங்கிய இராட்க்ஷசசேனை சந்தோஷமிழந்து இலங்கையை நாடி யோடிற்று.

46. இராம இராவண யுத்தம்

போரில் பிரஹஸ்தன் கொல்லப்பட்டா னென்பதை இராவணன் கேட்டு கோபத்தால் மெய்மறந்தவனாய் போர் வீரர்களான தேவர்களை நோக்கி தேவேந்திரன்

சொல்லுவதுபோல் ராக்ஷஸ வீரர்களைப்பார்த்து பின்வரு வாறு சொல்லலானான் :—"நமது பகைவனை இராமனை அலட்சியமாக எண்ணியிருக்கக்கூடாது; தேவேந்திரனிடம் போர்புரிந்து வெற்றிகொண்ட எனது சேனாநாயகனை பிரஹஸ்தன் போர்வீரர்களுடனும் மதயானைகளுடனும் எவர்களால் வதைக்கப்பட்டானோ அந்த வானரர்களை நாம் அலட்சியமாக எண்ணியிருக்கக் கூடாது; எனது சத்துருக்களை நாசம் பண்ணும் பொருட்டும் நாம் வெற்றி யடையும் பொருட்டும் இப்பொழுது ஆச்சரியமான அப் போர்க்களத்துக்கு சிறிதும் ஆலோசியாமல் நானே போகின்றேன். காட்டை கொழுந்து விட்டெரியுந்தீயாற் கொளுத்துவதுபோல நான் இப்பொழுது அவ்வானர சேனைகளையும் இராமலக்ஷ்மணரையும் என்னுடைய அம் புகளால் எரிப்பேன்" என்றான். இராவணன் இவ்வாறு சொல்லி அக்கினிபோலப் பிரகாசிக்கின்றதும் உத்தம மான குதிரைகள் பூட்டப்பட்டதும் வடிவத்தினால் மிக்க காந்தியுடன் விளங்குவதுமான தன்து தேரின்மேல் ஏறி னான். மலைகளுக்கும் மேகங்களுக்கும் ஒப்பான சரீரங்கள் பொருந்தியவர்களும் மாம்சங்களைப் புசிப்பவர்களும் நெருப்புப்போல் எரியுங் கண்களுள்ளவர்களுமான அரக் கர்களாற் சூழப்பட்டு இராவணன் பூதகணங்களாற் சூழப்பட்ட அமரர் தலைவனை ருத்திர மூர்த்திபோல விளங்கினான்.

ஸர்ப்பராஜனைப்போன்ற கைகளையுடையவரும் மிக்க காந்தியுடன் விளங்குபவரும் காப்புச்சேனையாற் சூழப் பெற்றவருமான இராமர் மிகவுங்கொடுமைகொண்ட அவ் வரக்க சேனையைப் பார்த்து ஆயுதப் பயிற்சியில் மிகத் தேர்ந்தவரான விபீஷணரை நோக்கி பின்வருமாறு வினவ லானார் :—" பல பெருங் கொடிகளும் சிறு கொடிகளும் விளங்கவும், ஈட்டி கத்தி சூலம் வில் முதலிய பல ஆயுதங் கள் மின்னவும், ஐராவதம் போன்ற பல யானைகள்

நிரம்பி அச்சமற்ற அரக்கவீரர்களை யுடையதாய் அதோ ஒரு சேனை வருகின்றதே, கலக்குதற்கு அரிய அது யாருடைய சேனை ?'' என்று வினவினர்.

அவ்விதமாக இராமர் கேட்டதும் இந்திரனுக்கு ஒப்பான வல்லமையுள்ள விபீஷணர் வெகு தைரியசாலிகளான அரக்கர்களுடைய சிறந்த அச்சேனையைப் பற்றி சொல்லத் தொடங்கினர் :—''புலி ஒட்டகம் மதயானை மான் குதிரை இவற்றின் முகம்போன்ற முகம்பெற்று கண்கள் சுழல பயங்கரமான தோற்றமுடையனவான பூதகணங்களால் தொடரப்பட்டு அதோ வருகின்றாரே, அவர்தாம் தேவர்களுடைய செருக்கை அடக்கியவர்; எங்கே நெருங்கிய கம்பிகளையுடையதாய் பூர்ணசந்திரன் போல விளங்கும் வெண்கொற்றக் குடையொன்று காண்கின்றதோ, அங்குதான் பூதகணங்களாற் சூழப்பட்டு சிவபெருமான் விளங்குவதுபோல மிகுந்த பெருமை தங்கிய அரக்க வேந்தர் விளங்குகின்றார். இந்த ராக்ஷசாதிபதியானவர் கிரீட மணிந்து முகத்திற் குண்டலங்களாட இமயமலைபோலவும் விந்தியமலை போலவும் பயங்கரமான தேகத்தால் விளங்குகின்றார். இவர் மஹேந்திரன் சூரியன் இவர்களுடைய செருக்கைக் குறைத்தவர்; இவர்தாம் அரக்கர்களின் மன்னவர்; இவர் தமது ஒளியால் சூரியன் போல விளங்குகின்றார்'' என்று தெரிவித்தார்.

விபீஷணரை நோக்கி ஸ்ரீராமர் மறுமொழி சொல்லலானார் :—''என்ன ஒளி! என்ன காந்தி! ராக்ஷச ராஜனாகிய இராவணன் தனது மேலான காந்தியாற் சூரிய பகவான்போல நேராக் கண்கொண்டு பார்க்க முடியாதவனாக காணப்படுகின்றான். இவனுடைய ஒளி நிறைந்த உருவத்தை என்னால் நன்றாக காணமுடியவில்லை. இவ்வரக்க மன்னவனுடம்பு பிரகாசிப்பதுபோல தேவாசுரவீரர்களின் உடம்பும் விளங்குவதில்லை. இக்கொடும்பாவி இன்று தெய்வாதீனமாய் என் கண்களுக்குப் புலனானான்:

இவன் சீதையைக் கவர்ந்து சென்றதனால் எனக்குத் தோன்றியுள்ள கோபத்தை நான் இன்று போக்கிக் கொள்வேன்" என்றார். வீரரான இராமர் இலக்ஷ்மணர் தம்மைத்தொடர்ந்து நிற்க இவ்வாறு சொல்லிவிட்டு பிறகு தமது வில்லை எடுத்து உயர்ந்த அம்பொன்றைத் தொடுத்தவராக நின்றார்.

அப்போது அஞ்சலிபந்தஞ் செய்துகொண்டு இலக்ஷ்மணர் "பெரியோரே' தாங்கள் துராத்துமாவாகிய இவனைக் கொல்லுதற்கு அதிகவல்லமையுள்ளவர்; என்றாலும் இவன் நீசன்; இவனை நான் வதைப்பேன்; பிரபுவே! தாங்கள் எனக்கு அநுமதி தரவேண்டும்" என்று வெகு அர்த்தத்துடன் கூடிய சொற்களைச் சொல்லினார். உடனே வெகு பராக்கிரமம் பொருந்தியவரும் உண்மையை உறுதியாகக் கொண்டவருமான இராமர் இலக்ஷ்மணரை நோக்கி "இலக்ஷ்மணா! நீயே போய் வா; போரில் வெகு ஜாக்கிரதையாக இரு" என்றார். பிறகு இராமர் சொன்னதைக் கேட்டு இலக்ஷ்மணரும் அவரைக் கட்டித் தழுவி நமஸ்காரஞ் செய்துவிட்டு போரிடுமாறு சென்றார்.

இலக்ஷ்மணர் வருவதை அனுமான் பார்த்து 'பணியாளனாகிய யான் இருக்கையில் இவர் ஏன் போர் செய்ய வேணும்?" என்று எண்ணியவனாய் இராவணனது சரமாரியைத் தடுத்துக்கொண்டு இராவணனை நோக்கி யோடினான். இராவணனது இரதத்தினிடம் வந்து தன் வலக்கையை ஓங்கி இராவணனைப் பயமுறுத்திக் கொண்டே அனுமான் பின்வருமாறு சொல்லலானான்:—"தேவர் அசுரர் கந்தர்வர் யக்ஷர் அரக்கர் இவர்களால் தான் கொல்லப்படாமலிருக்குமாறு நீ வரம்பெற்றுள்ளாய்; ஆனால் வானரர்களிடமிருந்து உனக்கு இப்போது பயம் வந்தது. ஐந்து விரல்களமைந்த எனது வலக்கையை இதோ ஓங்கிவிட்டேன்; இது உனது உடலிற் குடிகொண்டிருக்கும் ஆத்துமாவை அவ்வுடலினின்று வெளியிற் கிளப்பும்" என்

ருன். பயங்கரமான பராக்கிரமமுள்ள இராவணன் அனுமானது வார்த்தையைக் கேட்டு தனது கண்கள் சிவக்க கோபங்கொண்டு தனது கையால் அனுமானது மார்பில் ஓறறை அறைந்தான். அவ்வறை விழுந்ததும் அனுமான் மெய்பதறி ஒன்றுஞ்செய்யத் தெரியாமல் சிறிதுநேரம் நின்றுன்.

அப்போது இலக்ஷ்மணர் அளவிடமுடியாத மகிமை வாய்ந்த வில்லை டங்காரஞ் செய்துகொண்டுநின்ற இராவணனைப்பார்த்து, "அரக்கர் மன்னவனே! என்னிடமே போர் புரியுமாறு வருவாய்; வானரர்களுடன் போர்புரிதல் உனக்குத் தகுதியன்று" என்றுர். கம்பீரமான குரலுடன் இலக்ஷ்மணர் சொன்னதையும் அவருடைய பயங்கரமான வில் நாணிஒலியையும். அரக்கர்மன்னவன் கேட்டு தனக்காக எதிர்பார்த்திருந்த அவரை நோக்கி வெகு கோபத்துடன் "ராகவ! விநாசமடைய விரும்பி விபரீதபுத்தியுள்ள நீ தற்செயலாய் என் பார்வையில் அகப்பட்டுக்கொண்டாய்; இந்நொடியில் நீ என் பாணக் கூட்டங்களால் அடியுண்டு யமனுடைய விடுதியை அடையப்போகிருய்" என்று சொல்லி இராவணன் கூரான முனைகளுள்ள ஏழுபாணங்களை அவர்மேல் விடுத்தான்; இலக்ஷ்மணரும் அப்பாணங்களை பொன்மயமாய் அழகிய கூரான முனைகளுள்ள பாணங்களால் அறுத்தொழித்தார். உடல் அறுபட்டு விழுந்த பாம்புகள்போல அப்பாணங்கள் அறுபட்டு விழுந்ததை இராவணன் கண்டு வெகு கோபங்கொண்டு பின்னும் கூரான வேறு பாணங்களை விடுத்தான். இராவணன்விட்ட அந்தப் பாணங்களால் இலக்ஷ்மணர் வருந்தி தேவர்களின் சத்துருவாகிய அவ்வரக்கனது வில்லை வெட்டியெறிந்தார்.

தனது வில்லும் முறிபட்டு தானும் பாணங்களால் அடியுண்டு இரத்தத்திலும் மேதசிலும் நனைந்த உடம்பையுடையவனுய் இராவணன் தனக்கு பிரம்மதேவன் கொடுத்

திருந்த சக்தி என்ற ஆயுதத்தைக் கைப்பற்றி இலக்ஷ்மணர்மீது விரைவாக விடுத்தான். இலக்ஷ்மணர் தம்மை நோக்கிவந்த அந்தச் சக்தியை அக்கினிக்கு ஒப்பான பல கொடிய பாணங்களால் எய்துபார்த்தும் தடைப்பட்டு நிற்காமல் அந்தச் சக்தியானது இலக்ஷ்மணருடைய விசாலமான மார்பில் விரைவாகத் தைத்தது. லக்ஷ்மணரும் அந்தச் சக்தியை பொறுக்கமுடியாமல் மயங்கி விழுந்தார். அவ்வாறு மயங்கிவிழுந்த இலக்ஷ்மணரைக் கிட்டி, ராக்ஷசராஜனுகிய இராவணனும் தனது கைகளால் எடுத்து தூக்கிக்கொண்டுபோக முயன்று பார்த்தான். இமயமலை மந்தரகிரி மேருமலை தேவர்களுடன்கூடிய இம்மூவுலகம் என்ற இவைகளையெல்லாம் தனது கைகளால் அசைத்தெடுக்க வேணுமென்ருலும் அவ்விராவணன் அசைத்தெடுக்கலாம்; போர்க்களத்தில் இலக்ஷ்மணரை தூக்கி கொண்டுபோய்விடவேணுமென்று நினைத்தலோ முடியாது. பிரமதேவனுடைய சக்தியினுல் இலக்ஷ்மணர் தமது மார்பில் அடியுண்டாரென்ருலும் அப்போது அவர் இவ்வாறுள்ளதென்றும் இவ்வளவுள்ளதென்றும் கருதவும் முடியாததான விஷ்ணுவின் அம்சமாகிய தமது ஸ்வரூபத்தை ஸ்மரித்துக்கொண்டிருந்தார். அந்த ஸ்வரூபம் இயற்கையாகவே பெரும்பாரமுடையதாதலால் தேவர்களுக்கு முட்போன்ற அவ்விராணன் அசுரர்களின் செருக்கையடக்குவதற்காக மானுடவடிவங்கொண்டுவந்த விஷ்ணுவின் அம்சமாகிய இவ்விலக்ஷ்மணரை தனது கைகளால் அசைத்தற்கும் வல்லமை யற்றவனுயினுன்.

பிறகு, அநுமான் வெகு கோபத்துடன் இராவணனிடம் ஓடிவந்து வச்சிராயுதத்திற்கு ஒப்பான முஷ்டியினுல் அவன் மார்பில் ஒரு குத்து குத்தினுன். அக்குத்து விழுந்ததும் இராவணன் முழந்தாளை மடித்துக்கொண்டு விழுந்து மூர்ச்சையடைந்தவனுனுன். இராவணன் மெய்ம்மறந்ததைக்கண்டு முனிவர்களும் வானரர்களும் இந்திரன்

முதலிய தேவர்களும் களிப்பினுல் ஆரவாரஞ்செய்தார்கள். வெகு பராக்கிரமசாலியாகிய அநுமான் இராவணனுல் ஹிம்ஸிக்கப்பட்ட இலக்ஷ்மணரை தனது கைகளால் தூக்கி இராமரிடம் கொண்டுபோய்ச் சேர்ந்தான். தமது சத்துருவினுல் அசைக்கமுடியாதவராயிருந்த இலக்ஷ்மணர் நல்லெண்ணமுடைமையாலும் சிறந்த பக்தியாலும் அநுமானுக்கு எளிதில் தூக்கிக்கொண்டுபோம்படியாயிஞர். இராவணன் எறிந்த சக்தியே போரில் வெல்ல முடியாத இலக்ஷ்மணரை விட்டிட்டு மறுபடியும் இராவணனுடைய இரதத்தை யடைந்து தானிருக்கவேண்டிய இடத்தில் இருந்தது. பகைவரை யழிக்கவல்ல இலக்ஷ்மணர் நினைப்பதற்கு அரிய, விஷ்ணுவின் அமிசமாகிய தமது ஸ்ரூபத்தை ஸ்மரித்ததன்றி வேருென்றுஞ் செய்யவில்லை. அப்போதே மூர்ச்சை தெளிந்து புண்ணுறியவராஞர்.

மகாபராக்கிரமசாலியாகிய இராவணனும் அப்பெரும்போரில் பிரஜ்ஞை வரப்பெற்று பெரியதொரு வில்லை யெடுத்து கூரானபாணங்களைத் தொடுக்கலானுன். போர்க்களத்தில் அப்போது பலவானர வீரர் கீழ்விழுந்து கிடப்பதையும் வானரசேனை நிலைகலங்கி யோடுவதையுங் கண்டு இராமர் இராவணனை எதிர்த்து வேகமாகச் சென்ருர். அப்பொழுது அநுமான் இராமரிடம் வந்து, "தாங்கள் என் பிடரியில் ஏறிக்கொண்டு அரக்கனை அடக்குதல் தக்கது" என்ருன். அவ்வண்ணம் அநுமான் சொன்னதைக் கேட்டு இராமர் விஷ்ணுவானவர் எவ்வாறு பலசாலியான கருடபகவான்மீது ஏறினரோ அதுபோலவே அநுமானது பிடரியின்மேல் ஏறினர். இரதத்தின் மேலேறியிருந்த இராவணனை அவ்விராமர் பார்த்து வெகு கம்பீரமான வாக்கால் பின்வருமாறு சொல்லலாஞர் :—
"நில், நில்; எனக்கு இவ்விதமான அப்பிரியத்தைச் செய்து அரக்கரேறே! நீ எங்கு சென்று உயிருடன் தப்புவாய்? இந்திரன யமன் சூரியன் பிரமதேவன் அக்கினி

சங்கரன் என்ற இவர்களிடமே நீ ஓடினபோதிலும் பத்துத் திசைகளிலேயும் ஓடிப்பதுங்கிய போதிலும் இன்று நான் உன்னை உயிருடன் தப்பவிடமாட்டேன்.''

இராமர் அவ்வாறு சொன்னதைக் கேட்டு இராவணன் கோபங் கொண்டு அநுமானை பிரளய காலத்து அனலுக்கு ஒப்பான கூரான பாணங்களால் அடித்தான். பிறகு வெகு பராக்கிரமசாலியாகிய இராமர் வானர சிங்கமாகிய அநுமான் இராவணனால் புண்பட்டதைப் பார்த்து கோபத்திற்குப் பரவசமாய் இராவணனுடைய அழகான மார்பில் வச்சிராயுதத்தையும் இடியையும் போன்ற பாணத்தால் அடித்தார். இராமருடைய பாணத்தால் அடிபட்டவனாகி, இராவணன் மிகவும் வருந்தி நடுநடுங்கி தனது வில்லையும் நழுவ விட்டான். அவன் அவ்வாறு தடுமாறியதை தயாளுவான இராமர் பார்த்து ஜ்வலிக்கின்ற அர்த்த சந்திர பாணத்தைத் தொடுத்து அவ்வரக்க வேந்தனது சூரியன்போல விளங்கும் கிரீடத்தை விரைவாக வீழ்த்தினார். விஷமில்லாப் பாம்புபோலவும் கிரணங்களொடுங்கி ஒளியற்றிருக்குஞ் சூரியன் போலவும் கிரீடங்கள் தள்ளப்பட்டுக் காந்தியற்று நின்ற இராவணனை பார்த்து, இராமர் பின் வருமாறு சொல்லலானார்:—''அரக்க வீரா! நீ இன்று கொடிய பெரும்போர் புரிந்து எனது வீரர்களையும் வலியடக்கினாய்; ஆகையால் நீ அதிகம் சிரமப்பட்டிருக்கின்றாயென்று நிச்சயித்து நான் எனது பாணங்களால் உன்னை யமனுடைய வசத்தில் ஒப்பிக்கவில்லை. அரக்கர்கட்கு அரசனே! நீ இப்போது போரிற் சிரமப்பட்டிருக்கின்றபடியால் திரும்பிப் போக நான் விடை கொடுக்கின்றேன். நீ இலங்கைக்குச் சென்று உனது களைப்பை ஆற்றிக் கொண்டு நாளை இரதமேறி வில் முதலிய ஆயுதங்களை எடுத்துக் கொண்டு திரும்பி வருவாய். அப்பொழுது இரதத்திலிருந்தபடியே நீ என் வல்லமையைப் பார்க்

கலாம்'' என்று இராமர் சொன்னதும் தனது செருக்கும் சந்தோஷமும் ஒழிந்து வில் அறுக்கப்பட்டும் தேர்ப் பாகனும் குதிரையும் கொல்லப்பட்டும், பாணங்களாற் பீடிக்கப்பட்டும், தனது கிரீடங்கள் உடைக்கப்பட்டும் வெகு பரிதாபமான நிலைமையிலிருந்த அவ்வரக்க வேந்தன் சடிதியில் இலங்கைக்குள் நுழைந்தான்.

இராவணன் இலங்கையினுட்புகுந்து ஸ்ரீராமருடைய பாணத்தை நினைந்து அஞ்சினவனாய் தனது செருக்குக் குலைந்து மனங்குழம்பியவனானான். பிறகு இராவணன் திவ்வியமான பொன்னாசனத்தின் மீது வீற்றிருந்து அரக்கர்களைப் பார்த்துப் பின் வருமாறு சொல்லலானான் :— "நான் இதுவரையில் செய்திருந்த தவங்கள் யாவும் வீணாயின; மகேந்திரனுக்கு ஒப்பான என்னை மானிடனொருவன் வென்றானே! பிரமதேவர் 'மானிடரிடமிருந்து உனக்குப் பயமுண்டாகுமென்று அறிவாய்' என்று கடுமையாகச் சொன்ன வாக்கியம் இப்போது பலித்துவிட்டது; அவரது வாக்குத் தவறாதன்றோ! நான் தேவர் அசுரர் கந்தர்வர் யக்ஷர் ராக்ஷசர் பன்னகர் என்ற இவர்களொருவராலும் என்னைக் கொல்ல முடியாதென்று வரம் பெற்றேனே யன்றி மானிடராற் கொல்லப்படாமலிருக்கும்படி வரம்பெறவில்லையே. இக்ஷ்வாகு குலத்தவனான அநரணியனென்பவன் "அரக்கப்பதரே! தாழ்ந்த குலத்தானே! துர்ப்புத்தியே! உன்னை உமது குமாரர் மந்திரிமார் சேனைகள் குதிரைப்பாகர்கள் என்ற இவர்களுடன் போரில் வதைசெய்யப்போகின்ற புருஷன் என் குலத்திற் பிறக்கப்போகின்றான்; இது திண்ணம்'' என்று முற்காலத்தில் சபித்தானே; அவ்வாறே அக்குலத்திற் பிறந்த தசரத குமாரனாகிய இராமன் மானுடனாகப் பிறந்தானென்று எனக்குத் தோன்றுகின்றது. நான் முன்னொரு காலத்தில் வேதவதி யென்பவளை பலாத்கரித்தபொழுது அவள் என்னைச் சபித்தாள்; அவ்வுத்தமிதான் இப்

பொழுது சீதையென்ற பெயருடன் ஜனகனுடைய வமிசத்தில் வந்திருக்கின்றுளென்றும் எண்ணுகிறேன். ஆகையால் இவைகளையெல்லாம் அறிந்து சத்துருவை ஜயிக்க வேண்டிய தொழிலில் அவதானமாக இருங்கள்.

"அரக்கர்கள் இப்பொழுது கோபுரங்களின் மேலும். கோபுரங்களின் பக்கங்களிலே போர்வீரர்கள் உலாவுவதற்காக ஏற்பட்டுள்ள இடங்களிலும் இருந்துகொண்டு இந்நகரத்தைப் பாதுகாக்க வேண்டும். ஒப்பற்ற கம்பீரமுள்ளவனும் தேவதானவர்களின் செருக்கை யடக்குகின்றவனும் பிரமதேவருடைய சாபத்தால் தூங்குகின்றவனுன கும்பகர்ணனை எழுப்புங்கள். இவனோ காலத்தின் கொடுமையால் மெய்மறந்து இனிதாகத் தூங்குகின்றுன். அறிவின்மையால் நாட்டுச் சுகத்தில் விருப்பங்கொண்டு எப்பொழுதும் தூங்குகின்றுன். கும்பகர்ணன் எழுந்தானுயின் இக்கொடிய போரில் இராமனுல் நான் தோல்வியடைந்த துக்கம் நீங்கிவிடும்" என்றுன்.

அரக்கர்களும் இராவணன் சொன்னதைக் கேட்டு, 'காலமல்லாத காலத்தில் எப்படி எழுப்புகின்றது' என்று மிகவும் மனங்குழம்பியவர்களாய் கும்பகர்ணனுடைய இருப்பிடத்துக்கு சென்றுர்கள். கும்பகர்ணன் தூங்குகின்ற பொன்மயமான அழகிய இனிய குகைக்குள் அவர்கள் நுழைந்ததும் சந்திரன்போல் வெண்ணிரமாக விளங்கும் சங்கங்களை யூதினுர்கள்; ஒருங்கு சேர்ந்து கத்தினுர்கள். எப்போது தங்களால் கும்பகர்ணனை எழுப்ப முடியவில்லையோ, ஆயிரம்பேரிகளை ஆணிப்பொன்னுற்செய்த குணில்களைக் கொண்டு ஏககாலத்தில் நாற்புறத்திலுமாக அடித்தார்கள். தூக்கத்தால் மலராமலும் கலங்கியுமிருந்த கண்களுடன் காணப்பட்ட அவ்வரக்கன் தன்னைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் அரக்கர்களைக் கண்டு தான் எழுப்பப்பட்டதில் ஆச்சரியமடைந்தவனுய் அவர்களைப் பார்த்து பின்வருமாறு வினவலானுன் :—"ஏன் என்னை

நீங்கள் இவ்வளவு விரும்பி எழுப்பினீர்கள்? அரக்கமன்னவர் சௌக்கியமாக இருக்கின்றாரா? அவருக்கு ஒரு வகைப் பயமும் இல்லையா? இப்பொழுது நீங்கள் விரைந்து எழுப்பினதனால் பிறரிடத்திலிருந்து அவருக்குப் பயம் திண்ணமாக உண்டாய்த்தான் இருக்கவேண்டும். என்னை எழுப்பிய காரணத்தை உண்மையாகச் சொல்லுங்கள்," என்றான்.

இவ்விதமாகக் கோபத்துடன் மகாபலவானாகிய கும்பகர்ணன் கேட்டதும் இராவணனுடைய மந்திரியாகிய யூபாக்ஷன் அஞ்சலி பண்ணிக்கொண்டு மறுமொழிசொல்லலுற்றான் :—"நமக்கு ஒருகாலும் தேவர்களிடமிருந்து ஒருவித பயமும் வாராது. இப்பொழுது மனிதர்களிடமிருந்து பெரும்பயம் நம்மை அணுகிவருத்துகின்றது. மலைபோன்ற உடம்புகளுடன் விளங்கும் வானரர்கள் இவ்விலங்கையைச் சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள். சீதையைத் தூக்கிவந்த காரணத்தால் மனம் பதைத்து நம்மை எதிர்த்து வந்திருக்கும் இராமனிடமிருந்துதான் நமக்கு பயம் இப்பொழுது வந்திருக்கின்றது ; ஒரு வானரன் முன்பு இந்நகரத்தைத் தீயிட்டுக் கொளுத்திவிட்டான். தேவர்களுக்கெல்லாம் கண்டகரான இராவணரும் சூரியன் போன்ற பராக்கிரமமுள்ள இராமனால் போரில் உயிர்துறந்தவர்போல செய்யப்பட்டு விடப்பட்டார்" என்றான். யூபாக்ஷன் அவ்வண்ணம் தனது உடன்பிறந்தவனது தோல்வியைச் சொல்ல கும்பகர்ணன் கேட்டு தனது முகத்தைக் கழுவிக்கொண்டு சந்தோஷத்துடன் ஸ்நானஞ்செய்து உயர்ந்த வஸ்திராபரணங்களால் அலங்கரித்துக் கொண்டான்.

47. கும்பகர்ணன் வதை

ஒருவராலும் வெல்லமுடியாத மஹாபராக்கிரமசாலியாகிய கும்பகர்ணன் தூக்கம் தனது கண்ணைச் சுழற்ற பல்வகைச் சம்பத்துக்கள் நிரம்பியிருக்கும் அந்நக

ரத்து வீதிகளின் வழியாகச் சென்றான். பல அரக்கக் கூட்டங்களையுடைய தனது உடன்பிறந்தவனது அரண்மனையைச் சேர்ந்து புஷ்பக விமானத்தின்மேல் வெகு விசனத்துடன்வீற்றிருந்த தமையனைக் கண்டான்.

இராவணனும் தனக்குச் சமீபத்தில் கும்பகர்ணன் வந்ததைப் பார்த்து வெகுசந்தோஷமடைந்து சரேலென்று எழுந்து அவனைத் தனக்கருகில் அழைத்துக்கொண்டான். கும்பகர்ணனும் கட்டிலிலுட்கார்ந்த தனது தமையனுடைய பாதங்களை வணங்கி "என்ன சமாசாரம்? வேந்தரே! என்ன காரணத்திற்காக என்னை எழுப்பினீர்கள்? யாரிடமிருந்து தங்களுக்கு பயம் உண்டாயிருக்கின்றது? யார் இன்றையதினமே மடிய வேண்டும்? சொல்லுங்கள்" என்றான். இராவணனும் கோபமடைந்திருந்த தனது தம்பியை கோபத்தாற் சுழன்றுகொண்டிருந்த கண்களாற் பார்த்து பின் வருமாறு சொல்லலுற்றான் :—

"மஹாபலசாலியே! சுகத்திலே மூழ்கியிருக்கும் நீ எனக்கு இராமனிடமிருந்து வந்திருக்கும் பயத்தை கொஞ்சமேனும் உணரமாட்டாய். தசரத குமாரனாகிய இராமன் சுக்கிரீவனுடனும் அவனது சேனையுடன் சமுத்திரத்தைத் தாண்டிவந்து நம்மை வேருடன் அழிக்கின்றான். அந்தோ! இலங்கையின் தோட்டங்களும் தோப்புக்களும் இராமனால் சேதுவின் வழியாகச் சுகமாக வந்த வானர சமுத்திரங்களால் நிரப்பப்பட்டிருக்கின்றன. காண். அரக்கர்களில் முக்கியமாக இருந்தவர்களை வானரர்கள் போரில் வதைத்திட்டார்கள்; போரில் வானரர்கள் மடிந்ததை நான் ஒருகாலும் பார்க்கவில்லை. சிறு குழந்தைகளும் கிழவர்களும் மாத்திரம் உயிருடன் மிகுந்திருக்கப்பெற்ற இந்நகரத்தைக் காப்பாற்றுக. மகாபாகுவே! தமையனார் பொருட்டாக ஒருவராலும் செய்யமுடியாத காரியத்தை செய்க" என்றான்.

இராவணன் புலம்பியதைக் கேட்டு கும்பகர்ணன் சிரித்துப் பின் வருமாறு சொல்லலுற்ருன் :—" முன்பு நாம் மந்திராலோசனை செய்த காலத்தில் 'சத்துருக்களால் உமக்கு ஆபத்து விளைந்தே தீரும்,' என்று யாங்கள் நிச்சயித்திருந்தபடியே நன்மையை நாடுபவர்களின் சொல்லைக் கேளாத தங்களுக்கு அவ்வாபத்து இப்பொழுது நேரிட்டது. கொடிய பாதகங்களைச் செய்தவனுக்கு நரகத்தில் வீழ்தல் எவ்வாறு நிச்சயமோ அவ்வாறே சீதையைக் கவர்ந்ததாகிய பாவச்செயலின் பயன் தங்களைச் சடுதியில் நிச்சயமாக அணுகிற்று ; மகாராஜரே ! தங்களுடைய வல்லமையின் செருக்கொன்றை மாத்திரங்கொண்டு முன்னமே இத்தொழிலைப் பற்றி நீர் கொஞ்சமேனும் ஆலோசிக்கவில்லை ; இதனுல் விளையுந் தோஷங்களைப்பற்றியும் ஆலோசிக்கவில்லை. எவனொருவன் ஐசுவரியத்தின் செருக்கால் ஒரு காரியம் ஆரம்பிக்குமுன் செய்யவேண்டிய மந்திராலோசனை முதலியவற்றைப் பின்பு செய்கின்ருனோ, தான் பின்னுல் செய்ய வேண்டிய காரியங்களை முன்பு செய்கின்ருனோ, அவன் நியாயம் அநியாயம் என்ற இவைகளை அறியாதவனுவான். எவ்வரசன் உரிய மந்திரிகளுடன் ஆராய்ந்து காலத்துக்குத் தக்கபடி அறம்பொருள் இன்பங்களை அனுபவித்து விடுகின்ருனோ அவ்வரசன் இவ்வுலகத்தில் ஒருபொழுதும் விசனமென்பதை அடையவே மாட்டான். இதற்கு முன் உங்களது தம்பியாகிய விபீஷணன் சொன்னபடி செய்வதுதான் நமக்கு நன்மையான காரியமென்று நமக்குத் தோன்றுகின்றது. அப்புறம் தங்களுக்கு எப்படி இஷ்டமோ அப்படிச் செய்யுங்கள்" என்ருன்.

இவ்விதமாகக் கும்பகர்ணன் சொன்னதைக் கேட்டு, இராவணன் புருவங்களை நெரித்துக்கொண்டு வெகு கோபத்துடன் அவனை நோக்கி சொல்லலானுன் :—"அடா கும்பகர்ணு ! கௌரவிக்கத் தகுந்தவனும் ஆசாரத்தை

நடப்பிப்பவனுமான குருவைப்போல நீ எனக்கு கட்டளை யிடுகிருய். இது உனக்குத் தகுதியோ? உனது வாய் நோக நீ இவ்வளவு சொன்னதில் என்ன லாபம்? இக்காலத் திற்கு ஏற்றதைச் சொல்வாய்; புத்தி மயக்கத்தாலோ ஞானமில்லாமையாலோ பலம் வல்லமை என்னும் இவை களிறுலுண்டான செருக்கிறுலோ செய்யத்தகாத காரி யத்தை நான் செய்துவிட்டேனென்ருல் அதைத் திருப் பித்திருப்பி சொல்வது வீணேயாம். ஆகையால் இக் காலத்தில் எதைச்செய்தால் தகுதியோ அதை விதிப்பாய். கடந்துபோன விஷய்த்தைப்பற்றி அறிஞர் துக்கப்பட மாட்டார்கள்; ஏனெனில் போனது போனதேயன்ருே! நீ என்னிடத்து அன்பு வைத்திருப்பது உண்மையாறுல் உனது வல்லமையை நீ அறிகிருயாறுல் எனது அநியாயத் தால் நேர்ந்த தீமையை நீ உனது வல்லமையால் சீர் திருத்துவாயாக" என்ருன்.

இவ்விதமாய்க் கொடுமையாகவும். கம்பீரமாகவும் இராவணன் சொன்னதைக் கேட்டு, கும்பகர்ணன் "இவன் கோபங்கொண்டுவிட்டான்" என்று தெரிந்துக் கொண்டு மெதுவாகச் சமாதானஞ் சொல்லலாறுன்: "அரக்கவேந்தரே! தாங்கள் துயரப்பட வேண்டாம். தங்களுடைய கோபத்தைவிட்டிட்டு ஸ்வஸ்தராக இருங் கள். நான் உயிருடனிருக்கின்றவரையில் கீழ் நடந்ததைப் பற்றித் தாங்கள் மனதிற் கவலைகொள்ள வேண்டாம். எவரைப் பற்றித் தாங்கள் வருந்துகின்றீர்களோ அவரை நானே நாசஞ்செய்துவிடுகின்றேன். இராமனிட மிருந்து பயப்படுவதை விட்டிடுங்கள். இராமன் இலக்ஷ் மணன் மகாபலம்பொருந்திய சுக்கிரீவன் முன்பு இலங்கை யைக் கொளுத்தி அரக்கர்களைக் கொன்ற அனுமான் என்ற இவர்களெல்லாரையும் நான் ஒருவனே இப்போதே அழிக்கின்றேன்; இன்னும் நம்முடன் போரிட வரும் வானரர்களையெல்லாம் நான் வதைக்கின்றேன்; மற்றை

யோர்க்கு இல்லாத பெரும்புகழை தங்களுக்கு விளைவிக்கக் கருதியிருக்கின்றேன். வெகு நாளாகத் தூங்கின கும்பகர்ணனுடைய வல்லமையை நாற்புறத்திலும் என்னால் உண்ணப்படுகின்ற பிராணிகளெல்லாம் பார்க்கட்டும்."

இவ்வாறு புத்திமானான கும்பகர்ணன் சொன்னதை இராவணன் கேட்டு சந்தோஷத்தோடு மறுமொழி சொல்லலானான். "என்னிடம் நட்பிலும் வல்லமையிலும் உன்னைப்போன்றவன் ஒருவனுமில்லை. கும்பகர்ணனே! சத்துருக்களை வதைத்துப் போரில் வெற்றிகொள்ளப் புறப்படுவாய். எனது பயத்தைப் போக்கும்பொருட்டு நான் உன்னை அகாலத்தில் எழுப்பினேன். நண்பர்களான அரக்கர்கள் நட்பை எனக்குக் காண்பிக்க இதுதான் தக்க காலம்" என்றான். மகாபலம் பொருந்திய கும்பகர்ணனை பார்த்து இராவணன் இவ்வாறு சொல்லிவிட்டு, தான் மறுபடியும் பிறந்ததாக எண்ணிக்கொண்டான்.

இவ்வளவு தூரம் தனது தமையன், கூறவே கும்பகர்ணன் உத்சாகங்கொண்டு இராவணனை நோக்கி "நான் ஒருவனாகவே செல்லுகின்றேன். எனது சைனியம் இவ்விடத்திலே இருக்கட்டும். கோபங்கொண்டிருக்கும் நான் என்னைக்கண்டு பயந்தோடும் அந்த வானரர்களை இன்றையதினமே புசித்துவிடுகின்றேன்" என்றான். கும்பகர்ணன் சொன்னதைக் கேட்டு இராவணன் ரத்நஹார மொன்றைக் கும்பகர்ணனுடைய கழுத்தில் அணிந்தான். தனது உடம்பு முழுவதிலும் பலவகை யணிகளணிந்து கையிற் சூலத்தைப் பிடித்த அவ்வரக்கன் தனது தமையனை வலம்வந்து நமஸ்காரம் பண்ணி போர்புரியப் புறப்பட்டான். பேரொலி செய்பவர்களும் பெருவலி படைத்தவர்களும் பயங்கரமான கண்களுள்ளவர்களும் ஆயுதங்களைக் கையிலேந்தியவர்களுமான பல அரக்கக் காலாள் வீரர்கள் அவனுடன் சென்றார்கள். கும்பகர்ணன் விரைந்து புறப்பட்டபொழுது வெகு பயங்கரமான அப

சகுனங்கள் எல்லாத் திசைகளிலும் காணப்பட்டன. அவ்வாறு மயிர்க்கூச்செறியும்படி தோன்றிய பெரிய அபசகுனங்களைக் கொஞ்சமேனும் மனத்தில் எண்ணுமலே கும்பகர்ணன் காலத்தால் ஏவப்பட்டவனாய் போருக்குப் புறப்பட்டான். அவன் நகரத்தினின்று வெளியில் வந்து இடியையுண்டாக்குபவன்போலவும் மலைகளை யெரிப்பவன் போலவும் சமுத்திரமும் பிரதி தொனி செய்யுமாறு பெரு முழக்கம் செய்தான். இந்திரன் வருணன் யமன் இவர்களாலும் கொல்லமுடியாதவனும், கொடுங்கண்ணனுமான அவ்வரக்கன் வருவதைப் பார்த்து வானரர்கள் பயந்தோடினார்கள்.

இராமர் இதைக் கண்டு மலைபோன்ற பெருந் தோற்றமுடைய அவ்வரக்கன் கும்பகர்ணன் வருவதைப் பார்த்து ஆச்சரியமடைந்து விபீஷணரை பின் வருமாறு வினவலானார் :—" கிரீடமணிந்து மலைக்கு ஒப்பான வடிவம் படைத்த அந்தப் பூனைக்கண்ணன் யார்? இவனைக் கண்டு பயந்து வானரர்கள் எல்லோரும் அங்கும் இங்கும் நிலை கெட்டு ஓடுகின்றார்களே " என்றார். இராமர் இவ்வண்ணம் கேட்டதும், மகா புத்திமானன விபீஷணர் அவரைப் பார்த்து " எவனொருவன் சூரியபகவானுடைய குமாரனாகிய யமனையும் இந்திரனையும் போரில் வென்றானே அப்படிப்பட்ட பிரதாபமுள்ள இவன் விசிரவசின் குமாரனாகிய கும்பகர்ணன் என்பவன். இவனுடைய ஆக்ருதிக்கு ஒப்பான அரக்கன் மற்றொருவனுமில்லை; இராகவரே! இவன், யுத்தத்தில் பலமுறை தேவர் தானவர் யக்ஷர் புஜங்கர் அரக்கர் கந்தர்வர் வித்தியாதரர் கின்னரர் என்ற இவர்களைத் தோற்கடித்திருக்கின்றான்" என்றார்.

அப்போது வாலியின் புதல்வனான அங்கதன், நளன், நீலன் கவாக்ஷன் மகாபலம் பொருந்திய குமுதன் முதலியோரைப் பார்த்து " வானரர்களே, சாதாரண வானரர்கள் போல அச்சத்தால் மனம் நடுங்கி எங்கு ஓடுகின்றீர்

கள்? நீங்கள் வீரத்தன்மையின்றி அஞ்சி இவ்வாறு ஓடினால் நீசர்களாவீர்களே! பெரியோர்கள் நடக்கும் வழியில் நடவுங்கள்; பயத்தை விட்டிடுங்கள். நாம் உயிர்மாய்ந்து போர்க்களத்தில் விழுவோமேயானால் பெறுதற்கு அரிய பிரமலோகம் போய்ச் சேர்வோம்; அல்லது நமது சத்துருவைப் போரில் வதைத்துக் கீர்த்திபெறுவோம். எரிந்துகொண்டிருக்கும் நெருப்பை யணுகி விட்டிற்பூச்சிகள் எவ்வண்ணம் திரும்பமாட்டாவோ அதுபோலவே கும்பகர்ணனும் நமது இராமர் முன்னிலையில் வந்து உயிருடன் திரும்பிப்போகமாட்டான்" என்றான்.

வானரர்களெல்லாரும் அங்கதன் சொன்ன சொற்களைக்கேட்டு தங்கள் பராக்கிரமத்தைச் சொல்லியவண்ணம் தங்கள் வல்லமையை உறுதி செய்துகொண்டு தமது உயிரில் விருப்பமொழிந்து மிகவும் நெருக்கமாகப் போர் புரியலானார்கள். பிறகு அவ்வானரர்கள் பெருமரங்களையும் மிகப்பெரிய மலைச்சிகரங்களையும் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு, கும்பகர்ணனை நோக்கி விரைந்து ஓடினார்கள். அப்பொழுது வீரியமுள்ள மஹாகாயனான அந்தக் கும்பகர்ணன் வெகு கோபங்கொண்டு தனது கதையினால் ஓங்கிப் புடைத்துத் தன் பகைவர்களை நாற்புறத்திலும் வீழ்த்தினான். மலைக்கு ஒப்பான அவ்வரக்க வீரன் வெகு கோபங்கொண்டு வானரர்களெல்லாரையும் புசித்துக்கொண்டு காலாக்கினிபோல சேனையின் நடுவிற் சஞ்சரிக்கலானான். பலவிதமாக அவ்வரக்க வீரனால் வதைக்கப்பட்டவர்களான அவ்வானரவீரர்கள் துயரத்தால் மனம் வருந்தி இராமரை சரணமடைந்தார்கள்.

அப்போது, சத்துருக்களின் சேனையை யடக்கி பகைவரது பட்டணத்தை வெல்பவரும் சுமித்திரையின் குமாரருமான இலக்ஷ்மணர் கோபங்கொண்டு போர்புரியலானார். இலக்ஷ்மணர் ஏழு பாணங்களை எடுத்து கும்பகர்ணன்மேற் பிரயோகித்து தைக்கச் செய்தார்; மஹாபலவானான கும்ப

கர்ணனே இலக்ஷ்மணரிடமிருந்து தப்பிக்கொண்டு பூமியையே பிளந்துவிடுகின்றவன் போல் இராமரிருந்த இடத்தை நோக்கி வேகமாக ஓடினான். கொழுந்துவிட்டெரியும் நெருப்புபோன்ற தேஜஸையுடைய அவ்வரக்க வீரனை இராமர் பார்த்து தமது வில்லைத் . தட்டினார். “ அரக்க வேந்தனே ! வருக : வியசனமடையவேண்டாம். நான் கையில் வில்லேந்தி வந்திருக்கின்றேன். இந்திரசத்துருவே ! என்னை இராமனென்று அறிவாய். உனது பிராணனை ஒரு முகூர்த்தத்துக்குள் வாங்கிவிடுகின்றேன்” என்றார்.

கும்பகர்ணனும் தன்னைப் பார்த்துப் பேசினவரை இராமரென்று தெரிந்துகொண்டு பெருங்குரலால் நகைத்து வானரர்கள் யாவரையும் பயமுறுத்திக்கொண்டு அப்போர்களத்தில் வெகு கோபத்துடன் எல்லா வானரர்களுடைய இருதயங்களையும் தள்ளிவிடுபவன் போன்று சஞ்சரிக்கலானான். அப்போது இராமர் சிறந்த வாயவ்யாஸ்திரத்தை யெடுத்து அவ்வரக்கன்மேல் விடுத்து முத்கரத்தைப் பற்றியிருந்த அவன் கையை வெட்டினார். தனது கை வெட்டுண்டதும் அவ்வரக்கன் பெருங்குரலோடு கதறலானான். அஸ்திரத்தினலறுப்புண்ட ஒற்றைக்கையனான கும்பகர்ணன் தனது ஒரு சிகரத்தை யிழந்த பெரிய இமயமலைபோல் விளங்கிக்கொண்டு மற்றொரு கையால் ஒரு பெரிய மரத்தைப் பிடுங்கி யெடுத்து அப்போர்க்களத்தில் இராமரை நோக்கி ஓடிவந்தான். ஆச்சாமரத்தை ஓங்கிக்கொண்டிருந்த பாம்பின் உடல்போன்றுள்ள மற்றொரு கையின் மேலும் இராமர் ஸ்வர்ணமயமான மற்றொரு பாணத்தில் ஐந்திராஸ்திரத்தை அபிமந்திரித்து விடுத்தார். மலைபோலிருந்த அந்தப் புஜமும் அதனால் வெட்டப்பட்டுப் பூமியில் விழுந்தது. அது புரண்டபொழுது மரங்களையும் மலைகளையும் பாறைகளையும் அவ்வாறே வானரர்களையும் அரக்கர்களையும் அழித்தது. கும்பகர்ணன் தனது

இரு கைகளும் வெட்டுண்டும் மிக்க பயங்கரமாக கத்திக் கொண்டு தம்மை நோக்கி ஓடிவருவதைக்கண்டு இராமர் உடனே கூரான இரண்டு அர்த்தசந்திர பாணங்களை விடுத்து அவ்வரக்கனது கால்களை வெட்டியெறிந்தார்.

கைகளும் கால்களும் அற்றுப்போன கும்பகர்ணன் உடனே வடவையின் முகக்கனல்போல தனது வாயைப் பிளந்து கர்ச்சித்துக்கொண்டு ஆகாயத்தில் இராகுவென்ற கிரகம் சந்திரபகவானை நோக்கி விரைந்து செல்வதுபோல் இராமரை நோக்கி விரைந்துசென்றான். இராமரும் முனையிற் பொற்கட்டமைந்த கூரான பாணங்களால் அவ் வரக்கனது வாயை நிரப்பினார்; அவ்வாறு தனது வாய் நிரம்பியதும் அவன் பேசமுடியாமல் வருத்தத்தோடு மிக வும் கூக்குரலிட்டு மூர்ச்சையடைந்தான்.

அப்பால் இராமர் சூரிய கிரணங்களைப்போல விளங்குவதும் பிரமதண்டத்தையும் பிரளயகால யமனை யும் போன்றதும் சத்துருக்கட்கு கேட்டை விளைப்பதும் கூரானதும் உறுதியான முனையையுடையதும் வாயுபக வான் போல் வேகமாகச் செல்வதுமான ஐந்திராஸ் திரத்தை விடுத்தார். அப்பாணமானது பத்துத் திசை களையும் தனது ஒளியால் விளக்கி புகையற்ற தழல்போல் வெகு பிரகாசமாகப் புலப்பட்டுக்கொண்டே இடிபோல் மிக்க வேகமாகவும் பலமாகவும் பாயலாயிற்று. முற் காலத்தில் இந்திரபகவான் விருத்திராசுரனுடைய தலையை யறுத்ததுபோல இப்பொழுது அந்த அஸ்திரமானது கோரப்பற்கள் வெளிவிளங்க இரு குண்டலங்களசைய விளங்கி பெரு மலைச்சிகரம்போலப் புலப்படுவதான அவ் வரக்கனது தலையை அறுத்தெறிந்தது. கொடிய பலம் பெற்று கிட்டுதற்கரியவனை தங்கள் சத்துரு ஒழிந்ததும் வானரர்கள் பலரும் மிக்க சந்தோஷ மடைந்தவர்களாய் இராமரைக் கொண்டாடினார்கள்.

மகாபலம் பொருந்திய கும்பகர்ணன் யுத்தத்தில் வதைக்கப்பட்டதைக் கேட்டு இராவணன் சோகத்தால் வருந்தி மூர்ச்சையடைந்து கீழே விழுந்தான். பிறகு அரக்கர் தலைவன் அரிதினில் தேறி கும்பகர்ணன் வதையை நினைந்து நினைந்து எளிமையுடன் புலம்பலானான்:-"மஹா வீரனே! மாற்றாரது செருக்கை யழிக்கின்றவனே! கும்பகர்ணனே! மகாபலம் பொருந்தியவனே! நீ காலத்தின் கொடுமையால் என்னைவிட்டு யமனது மாளிகைக்குச் சென்றுவிட்டாயே! நீ வச்சிராயுதத்தின் மோதுதலையும் லக்ஷ்யஞ்செய்ய மாட்டாயே! அப்படிப்பட்ட நீ எவ்வாறு இராமபாணத்தால் அடிபட்டு பூமியில் இறந்து கிடக்கின்றாய்? வானரர்கள் மிகவும் மகிழ்ந்து இதுதான் சமயமென்று நாற்புறத்திலும் இலங்கையின் வாயில்களிலும் துர்க்கங்களிலும் இப்போதே ஏறிவிடுவார்களே; இது திண்ணம். இனிமேல் எனக்கு நாடே வேண்டாம் சீதையால்தான் எனக்கு என்ன பயன்? கும்பகர்ணன் இறந்துபோன பிறகு பிழைத்திருப்பதிலும் எனக்கு ஆசையில்லை. என் தம்பியைக் கொன்ற இராகவனை நான் போரிற் கொல்லாவிட்டால் மரணமே எனக்கு மேன்மையைக் கொடுக்கும்; வீணான இந்தப் பிராணனால் நன்மையுண்டாகாது. என்னைப்பார்த்து விபீஷணன் சொன்ன நற்போதனைகள் இப்பொழுது உண்மையாக முடிந்தன. ஐயோ! அந்த மகாத்துமா சொன்ன சொற்களை புத்தியின்மையால் அப்போது உண்மையென்று கொள்ளாது விட்டேனே! கும்பகர்ண பிரஹஸ்தர்கட்கு கொடுமையான கேடு விளைந்தபிறகு விபீஷணன் சொன்ன சொல் என்னை வருத்துகின்றது" என்று கும்பகர்ணன் மாண்டதை நினைத்து பலவாறு புலம்பி இராவணன் பூமியில் விழுந்தான்.

பின்னர் அரக்க மன்னவன், மிகவும் ஏக்கமடைந்து இவ்வாறு சொல்லலுற்றான். "என் கட்டளைப்படி வெகு

சூரர்களான எந்த அரக்கவீரர்கள் போர்க்களத்திற்குச் சென்றார்களோ அவர்களெல்லாரும் அதிகபலம் பொருந்திய வானர வீரர்களால் வதைக்கப்பட்டார்களே! இப்பொழுது இராமன் இலக்ஷ்மணன் சேனையுடன்கூடிய சுக்கிரீவன் விபீஷணன் என்ற இவர்களைப் போரில் வெல்ல வல்லவன் ஒருவனையுங் காணோமே! ஆச்சரியம்! இராமன் பலசாலியே; அவனுக்கு அஸ்திரபலமும் வெகு அதிகம். அவன் வல்லமைக்கு முன்னே நிற்க முடியாமலன்றோ பல அரக்கர்கள் நாசமானார்கள்? இவ்வண்ணம் மஹாவீரனை அவ்விராகவனை ஒரு பொழுதும் அழியாத நாராயணனென்றே நினைக்கின்றேன். இனிமேல், இவ்விலங்கைக்கு வெளி வருதலும் உட்புகுதலும் நமக்குத் தெரிந்தே எப்பொழுதும் நடக்கவேண்டும். அங்கங்கு நீங்கள் உங்களுடைய சேனைகளுடன் இருக்கவேண்டும். அரக்கர்களே! எந்த வேளையிலும் வானரர்களின் கருத்தை வெகு கவனத்துடன் அறியவேண்டும்'' என்றான். அரக்க மன்னன் இராவணன் அவ்விதமாக அவர்கள் யாவர்க்கும் திட்டஞ் செய்துவிட்டு கோபத்தாலும் துக்கத்தாலும் வெகுவாக வருந்தியவனாய் தனது மாளிகைக்குச் சென்றான்.

48. இந்திரஜித்தின் யுத்தம்

அவ்வாறு அரக்கவேந்தன் வெகு பரிதாபமாக சோகக் கடலில் மூழ்கியதைக் கண்டு அவ் வேந்தன் மகனாகிய ரதிகரிற் சிறந்தவனான இந்திரஜித்து தனது தந்தையை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானான்:—"தந்தையே! அரக்கர்கட்கரசே! இந்திரஜித்து என்னும் நான் உயிருடனிருக்கும் வரையில் தாங்கள் இவ்விதமான துக்கத்தை யடைதல் சிறிதும் தகுதியன்று. இன்றையதினமே இராமனையும் இலக்ஷ்மணனையும் பாணங்களால் நிரப்பி ஒழித்துவிடுகின்றேன்;'' என்று சொல்லி எளிமையில்லாத வலிமை தங்கிய இந்திரஜித்து இராவணனிடம் விடைபெற்றுக்

கொண்டு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு காற்றுக்கொப் பான வேகம் பொருந்தியதும் நல்லசாதி கோவேறு கழுதை கள் பூட்டியதுமான இரதத்தில் ஏறினன். அவ்வரக்க வீரன் போர்க்களம் சேர்ந்ததும் அரக்கர்களை தனது இர தத்தைச் சுற்றிலும் நிறுத்தினன். அதன் பிறகு அரக்க ரிற் சிறந்தவனும் அக்கினிக்கொப்பான இந்திரஜித்து சாஸ் திரப் பிரகாரம் சில மந்திரங்களால் அக்கினிபகவானைக் குறித்து ஓமம் பண்ணலானன். அங்கு ஆயுதங்கள் தர்ப்பைகளாகவும் தான்றிமரச் சுள்ளிகள் சமித்துக ளாகவும் அவனது ஆடை செந்நிறவாடையாகவும் ஸ்ருவம் இரும்பு மயமாகவும் இருந்தன. அவ்விந்திரஜித்து நாண விலையுடன் தோமரங்களைப் பரிஸ்தரணமாகப் பரப்பி கறுப்புவர்ணமாயிருந்த உயிரோடுகூடிய ஆடு ஒன்றின் கழுத்தை அறுத்துப் பலிகொடுத்தான். அவ்வாறு ஒரு தரத்திலேயே ஜ்வலிக்கச்செய்து ஹோமம் பண்ணுகை யில் புகையற்றுப் பெருத்த ஜ்வாலையுடன் விளங்கிய அந்த அக்கினியானது வெற்றிக் குறிகளைக் காட்டிற்று. தனது ஜ்வாலை வலமாகச் சுழன்றுகொண்டெரிய ஆபர ணங்களைப்பூண்ட புருஷரூபத்துடன் அக்கினிபகவான் நேராகவே தோன்றி இந்திரஜித்து கொடுத்த அவிசைப் பெற்றுக்கொண்டான். இந்திர சத்துரு அப்போது பிர மாஸ்திரத்தை யழைத்தான்; தனது வில் இரதம் முதலிய எல்லாவற்றையும் அங்கு அபிமந்திரித்தான்.

அவ்விதமாக அக்கினியில் ஹோமஞ்செய்த பின்பு தனது வில் அம்பு வாள் இரதம் தேர்ப்பாகன் என்ற இவைகளுடன் ஆகாயத்தில் மறைந்தான். அதன் பிறகு குதிரைகள் இரதங்கள் இவைகள் நிரம்பி பெருங்கொடி களும் சிறு கொடிகளும் விளங்க போர்புரிய வேணுமென் னும் விருப்பத்தினல் அட்டகாசம் பண்ணிக்கொண்டு அவ்வரக்கசேனை புறப்பட்டது. அவ்வரக்க வீரர்கள் கூரானவையும் வேகமாகச் செல்லுகின்றவையும் அலங்

கரிக்க பட்டவையுமான அழகிய பல அம்புகளாலும் தோமரங்கள் அங்குசங்கள் இவைகளாலும் வானரர்களை அப்போரிற் புடைத்தார்கள். பின்னும், வரபல புஜபலங்களையுடைய இந்திரஜித்து பல பாணங்களையும் மற்றும் பல ஆயுதங்களையும் விடுத்து, அவ்வானர சேனையை விரைவாகக் குமைத்தான். வானர சேனாபதிகள் யாவரையும் அவன் மந்திரத்துடன் கூடிய ஈட்டி, சூலம், கூரான பாணங்கள் என்ற இவைகளினால் புடைத்தான்.

வானர வீரர்களை அவ்வாறு அடித்த பின்பு இந்திரஜித்து சூரியனுக்கொப்பான உயர்ந்த பாணங்களைக் கொண்டு இராமரையும் இலக்ஷ்மணரையும் நோக்கி சரமாரி பொழியலானான். மிகவும் ஆச்சரியமான தைரியத்தையுடைய இராமர் தமது ஸ்வபாவத்தைப்பற்றி அந்தப் பிரமாஸ்திரத்திற்கு மாறுசெய்யக்கருதிய இலக்ஷ்மணரைக் குறிப்பாகப்பார்த்து பின்வருமாறு சொல்லலுற்றார் :— "இலக்ஷ்மணா! இந்திரசத்துருவாகிய இவ்வரக்கன் பிரமாஸ்திரத்தைக் கைப்பற்றி அதன் வல்லமையால் எல்லா வானர வீரர்களையும் கீழ்விழுத்தி இப்பொழுது நம்மையும் இம்சிக்க ஆரம்பித்திருக்கின்றான். இவ்வரக்கனை நாம் இன்று எவ்வாறு வதைக்க முடியும்? ஆகையால், புத்திமானே! நீ இன்று இங்கு ஒருவகைக் கலக்கமும் மனதிற் கொள்ளாமல் வீழ்கின்ற இவ்வஸ்திரத்தை என்னுடன் தாங்கிக்கொள். கோபமும் சந்தோஷமும் நீங்கினவர்களாய் போர்செய்தலைத் தவிர்த்து அறிவொழிந்து மூர்ச்சையடைந்து பூமியில் விழுந்த நம்மைப் பார்த்து இந்திரஜித்து போர்முகத்தில் வெற்றி தனக்குண்டாய்விட்டதாக எண்ணிக்கொண்டு தனது நகரத்துக்குச் சந்தோஷத்துடன் திரும்பிவிடுவான்; இது திண்ணம்" என்றார்.

பிறகு, அவ்வாறே அவ்விருவரும் இந்திரஜித்தின் அஸ்திரக் கூட்டங்களால் ஹிம்ஸிக்கப்பட்டவர்கள் போலானார்கள்; இந்திரஜித்து அவர்கள் அவ்வண்ணம்

விழுந்ததைக் கண்டு வெகுசந்தோஷத்துடன் முனை முகத்தில் அட்டகாசம்பண்ணினுன். அவன் இவ்வாறு வானர சேனை முழுமையையும் இராமர் இலக்ஷ்மணர் என்ற இவர்களுடன் போர்க்களத்தில் வருத்திவிட்டு இராவணுற் பாதுகாக்கப்பட்ட இலங்கைமாநகருக்குள் விரைவாகப் புகுந்தான்.

புத்திமானும் வாயுபுத்திரனுமான அநுமான், பிரம்மாஸ்திரத்துக்குக்கட்டுப்பட்டிருந்து அதை கௌரவித்து பிறகு விபீஷணருடன் ஜாம்பவனைத் தேடலானுன். அநுமான் ஜாம்பவானிடஞ் சென்று முறைப்படி அவனது பாதங்களில் விழுந்து வணங்கினின்முன். அநுமானது குரலைக் கேட்டதும் ஜாம்பவன் இப்பொழுது எவ்வளவோ சங்கடமடைந்து இந்திரியங்கள் குழம்பியிருந்த போதிலும் தான் மறுபடியும் உயிர்பிழைத் தெழுந்து விட்டதாகவே கருதினுன். அப்பால் ஜாம்பவன் அநுமானைப் பார்த்து பின்வருமாறு சொல்லத் தொடங்கினுன்:-

'வானரப்புலியே! இங்கு வருக. நீ எல்லா வானரர்களையும் காப்பாற்றவேண்டும். ஏனெனில் பூர்ணமான பராக்கிரமமுடையவர் உன்னைத்தவிர வேறொருவரும் இல்லை. அன்றியும் நீ இவர்களுக்குச் சிறந்த நண்பன். சமுத்திரத்துக்கு மேலே வெகுதூரம் நீ சென்று பர்வதங்கட்குட் சிறந்த இமயமலையைச் சேர வேண்டும். பகைவரையழிப்பவனே! அவ்விடத்தில் பொன்மயமாய் மிகச் சிறந்த ரிஷபமென்ற பெரிய மலைச் சிகரத்தையும் கைலாஸமென்ற மலைச்சிகரத்தையும் நீ காண்பாய். வீரனே! அவ்விரு சிகரங்களுக்கும் நடுவில் ஒப்பற்ற காந்தியால் வெகு அதிகமாக மின்னிக்கொண்டு எல்லாவகை யோஷதிகளாலும் நிரம்பியதாய் ஓஷதிமலை யிருப்பதை நீ பார்ப்பாய். அம்மலையினுச்சியில் நான்கு மூலிகைகள் தோன்றியுள்ளன; அவைகள் தமது காந்தியால் பத்துத்திசைகளையும் விளங்கச்செய்துகொண்டிருப்பதை நீ பார்க்க

லாம். அம்மூலிகைகளின் பெயராவன :—ம்ருதஸஞ்ஜீவநீ [இறந்தவர்களைப் பிழைப்பிப்பது], விசல்யகரணீ [அம்பினால் தோன்றிய புண்ணை யாற்றுவது], ஸாவர்ண்யகரணீ [பட்டபுண்வாயிலைத் தெரியவொட்டாது ஒரே நிறமாக்குவது], ஸந்தாநகரணீ [அறுபட்ட உறுப்பை ஒட்டச்செய்வது] என்பன. வாயுகுமாரனே! அவைகள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு இங்கு நீ வெகு சடிதியில் வந்து சேரவேண்டும்.''

ஜாம்பவன் சொன்னதைக்கேட்டதும் அநுமான் இராமரின் பொருட்டு நமஸ்காரம் செய்துவிட்டு எல்லாத் திசைகளையும் தனது அட்டகாசத்தால் நிரப்பிக்கொண்டு செல்லலானான். பல நீரருவிகளாலும் அநேக குகைகளாலும் பலவகை விருக்ஷங்களினாலும் சோபித்துக்கொண்டிருந்த அவ்விமயமலைக்கு வந்து சேர்ந்தான். அம்மூலிகைகள் இவைகளென்று தெரியாதவனாய் மனம்குழம்பி "நாம் மலையின் சிகரத்தையே இப்பொழுது எடுத்துக்கொண்டு போவோம்'' என்று நிச்சயித்து அநுமான் அம்மலையின் சிகரத்தை அதிலிருந்த குன்றுகள் யானைகள், பாம்புகள், பொன், பலவகைத்தாதுப்பொருள்கள் என்ற இவைகளுடன் தாழ்வரை சிதறவும் நெருப்புப்பொறி கிளம்பவும் உறுதியாகப் பிடித்து வேர்ப்பிடுங்கலாகப் பெயர்க்கலானான். அவன் அவ்வாறு அம்மலையைப் பெயர்த்து தேவ அசுர இந்திரர்களுடன் இவ்வுலகத்தையே பயமுறுத்திக்கொண்டு திரிகூடமலையில் வானரசேனையின் மத்தியில் இறங்கினான். அதன் பிறகு உத்தமர்களான வானரவீரர்களுக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டு அநுமான் விபீஷணரைக் கட்டித்தழுவினான். இராஜ் குமாரரும் வீரர்களுமான அந்த இராம இலக்ஷ்மணர் அம்மலையி லிருந்த உயர்ந்த மூலிகைகளின் மணத்தை மோந்ததும் சல்லியமற்றவரானார்கள். மற்ற வானரவீரர்களும் அவ்வண்ணமே எழுந்திருந்தார்கள். உயிரற்றும் விரணப்

பட்டு மிருந்த எல்லாவானரவீரர்களும் ஒரு நொடியில் உயர்ந்த மூலிகைகளின் மணத்தால் தங்கள் விரணங் களாறி நோயற்றவர்களாய் விடியற்காலத்தில் துயில் நீங்கி எழுந்திருக்கின்றவர்கள் போல சுகமாக விழித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தார்கள்.

அதன் பிறகு வெகுவல்லமை பொருந்திய வானரராஜ னை சுக்கிரீவன் சிறந்த பொருளுடன் கூடிய சொல்லை இராமரிடத்து விண்ணப்பஞ்செய்து பின்பு அநுமானை நோக்கி இவ்வாறு சொல்லலானான் :—"கும்பகர்ணன் வதைக்கப்பட்டபடியாலும் அதிகாயன் முதலான தனது குமாரர்கள் கொல்லப்பட்டபடியாலும் இராவணன் இப் பொழுது எதிர்த்துவந்து போர்புரியமாட்டான். ஆகை யால் வெகு சுருசுருப்பாகச் சஞ்சரிக்கும் மஹாபலவான்க ளான வானரவீரர்களெல்லாரும் இப்பொழுதே தங்கள் கைகளிற் கொள்ளிக்கட்டைகளை எடுத்துக்கொண்டு மதிலைத்தாவிக் கடந்து இலங்கையிற் புகுந்து தீயிட வேண்டும்" என்றான்.

அதன்பிறகு இருள்செறிந்த அந்த இராத்திரியின் முதல்யாமத்தின் முடிவில் அவ்வானரவீரர்கள் கைகளிற் கொள்ளிக்கட்டைகளை யெடுத்துக்கொண்டு அவ்விலங்கை மாநகரினுள்ளே நுழைந்தார்கள். கோபுரங்கள் கொத் தளங்கள் வீதிகள் பலவகை நாற்சந்திகள் மாளிகைகள் என்ற இவைகளிலெல்லாம் அவ்வானரவீரர்கள் மகிழ்ச்சி யுடன் தீயை மூட்டினார்கள். அப்பொழுது அரக்கர்களின் ஆயிரக்கணக்கான வீடுகளைத் தீ யெரிக்கலாயிற்று. நெருப் பெரிந்து கொண்டிருந்தபொழுது இடிந்து விழுந்த மாளிகைகள் இந்திரனது வச்சிராயுதத்தால் அடியுண்டு விழும் பெருமலைச்சிகரங்கள்போலக் காணப்பட்டன. நெருப்புப்பற்றியெறிந்த மேன்மாளிகைகளினால் அவ் விலங்கா நகரமானது அன்றை இரவு நன்றாகப் பூத்து விளங்கும் முண்முருங்கைமரம்போலப் புலப்பட்டது.

சல்லியமற்றவர்களாய் மகாத்துமாக்களாகிய இராம லக்ஷ்மணர்கள் கொஞ்சமேனும் மனங்கலங்காதவர் களாய் சிறந்த விற்களை கைப்பற்றி நின்றார்கள். அப் பொழுது இராமர் தமது உயர்ந்த வில்லின் நாணியைத் தட்டவே அந்நாணியின் சத்தமானது அரக்கர்களுக்கு பயத்தை உண்டாக்கிக்கொண்டு பேரொலியாகத் தோன் றிற்று. இராமர் வில்லினின்று எய்த பாணங்களால் கைலாசமலையின் சிகரம்போலிருந்த அந்நகரத்தின் கோபுரமானது சிதறுண்டு பூமியில் விழுந்தது. அதன் பிறகு இராமருடைய பாணங்கள் மாளிகைகளிலும் வீடு களிலும் விழுவதைக் கண்டு அரக்கவீரர்கள் தாங்கள் போரிடுமாறு மிக்க முயற்சியுடையவர்களானார்கள். அவ் வாறு முயற்சிசெய்துகொண்டு அட்டகாசம் பண்ணின அரக்கவீரர்களுக்கு அவ்விரவு காள ராத்திரியாக விருந்தது. இவ்வாறு அப்பொழுது அரக்கர்களுக்கும் வானரர்களுக்கும் வெகுபயங்கரமான யுத்தம் நடக்க லாயிற்று.

இராவணன், 'இனி என்ன செய்யலாம்?' என்று சற்று ஆலோசித்து பிறகு மிகுந்த கோபத்துடனே தனது சிறந்த குமாரனாகிய இந்திரஜித்தை போர்க்களத்துக்குச் செல்லுமாறு கட்டளையிடலானான் :—"வீரனே! வெகு பலசாலிகளான இராமலக்ஷ்மணர் இருவரையும் அவர் கள் கண்முன்பாக நின்றாவது மறைந்து நின்றாவது கொன்றுவிட்டு வா. எல்லாவிதத்திலும் நீ பலத்தில் மேலானவன். ஒப்பற்ற பராக்கிரமமுள்ள இந்திரனையே நீ போரில் வென்றிருக்கின்றாய். அப்படியிருக்க அற்ப மனிதர்களைப் பார்த்த மாத்திரல் நீ போரில் ஏன் வதைக்க மாட்டாய்?" என்றான்.

தனது தந்தை இராவணன் அவ்வாறு சொன்ன வுடனே இந்திரஜித்து அப்படியே செய்தற்கு உடன்பட்டு ஆகாயத்திற் சஞ்சரித்தலையுடையவனாய் கண்களுக்குப்

புலப்படாமல் நின்று இராமலக்ஷ்மணர்களை கூரான பாணங்களால் வருத்தலானான். இராமலக்ஷ்மணாிருவரும், அவனுடைய பாணவேகத்தாற் சூழப்பெற்றவர்களாய் தங்கள் விற்களை நாணேற்றி திவ்வியாஸ்திரங்களை விடுக்கலானார்கள். மகாபலம் பொருந்திய அவ்விருவரும் தங்கள் பாணங்களால் ஆகாயத்தை மறைத்தனரேயன்றி சூரியனுக்கு ஒப்பான தங்கள் பாணங்களைக்கொண்டு அவ்வரக்கனை மட்டும் தொட முடியவேயில்லை. சீமானான அவ்வரக்கவீரன் புகையால் இருண்ட ஆகாயத்தை மறைத்ததுமன்றி பனியிருளால் மூடப்பட்டிருந்த எல்லாத் திசைகளையும் மறைத்தான், அவ்விரு புருஷப் புலிகளும் நாராசங்களாலடியுண்டவர்களாய் அவன் மீது பொன்மயமாக அடிப்புறம் வாய்ந்த கூரிய அம்புகளைப் பிரயோகித்தார்கள். பறவைகளின் இறகுகள் கட்டப்பட்டிருந்த அவ்வம்புகள் பறவைகள்போன்ற வேகங்கொண்டு ஆகாயத்திற்சென்று இந்திரஜித்தையறுத்து இரத்தத்துடன் கூடியவையாய் பூமியில் விழுந்தன. இராமலக்ஷ்மணர்கள் இந்திரஜித்தினது பாணக்கூட்டங்களால் அதிகமாகப் பீடிக்கப்பட்டவர்களாய் தங்கள் மேல் விழுந்த அம்புகளைப் பலவான பல்லங்களால் அறுத்துத்தள்ளினார்கள். அந்தத் தாசரதிகள் கூரிய பாணங்கள் எத்திசையினின்று வந்தனவோ அத்திசையைக் குறித்து உயர்ந்த அஸ்திரங்களை விடுத்தார்கள். அதிரதனாகிய இந்திரஜித்து தனது இரதத்தைப் பலதிசைகளிலும் ஓட்டி அப்பாணங்களுக்குத் தப்பித்துக்கொண்டு எளிதிற் பிரயோகிக்கக்கூடிய அஸ்திரமுடையவனாய் கூரான பாணங்களால் தசரத குமாரர்களிருவரையும் அடிக்கலானான்.

மேகத்தில் மறைந்த சூரியனை எவ்வாறு காணமுடியாதோ அதுபோல இந்திரஜித்தின் போக்கையாவது அவனுடைய உருவத்தையாவது வில்லையாவது அம்புகளையாவது அவனைச் சேர்ந்த மற்றும் எதையாவது ஒருவரா

லும் அறியமுடியவில்லை. அவனால் அடிக்கப்பட்ட வான ரர்களும் நூற்றுக்கணக்காக கொலையுண்டு உயிரிழந்து பூமியில் விழுந்தார்கள். அப்பொழுது இலக்ஷ்மணர் வெகு கோபங்கொண்டு தமது தமையனாரை நோக்கி, " அரக்கர் யாவரையும் வதைப்பதற்காக இதோ நான் பிரமாஸ்திரத் தைப் பிரயோகிக்கின்றேன் " என்றார். அப்பொழுது இராமர் நல்ல குறிகளமைந்த அந்த லக்ஷ்மணரை நோக்கி இவ்வாறு சொல்லலானார் :—" ஒரு அரக்கனுடைய குற் றத்திற்காக இவ்வுலகத்திலுள்ள எல்லா அரக்கர்களையும் வதைப்பது நியாயமன்று. போர் செய்யாதவனையும், மறைந்திருக்கிறவனையும், கைகளைக் கூப்பிக்கொண்டு சரணமென்று வருகின்றவனையும், போரில் நிற்கமாட்டா மல் புறங்கொடுத்து ஓடுகின்றவனையும், பைத்தியம் பிடித் தவனையும், ஒரு பொழுதும் கொல்லக்கூடாது. மஹாபலம் பொருந்தியவனே! இவனொருவனையே கொல்லவகை தேடுவோம்." என்றார்.

அப்பொழுது இந்திரஜித்து மகாத்துமாவான இரா மரது எண்ணத்தைத் தெரிந்துகொண்டு அப்போர்க்களத் தைவிட்டுத் திரும்பி இலங்கை நகரினுட் புகுந்தான். அவன் தனக்கு வெற்றியைத் தரவல்ல ஓமத்தைச் செய்து முடிக்க எண்ணங்கொண்டவனாய் சைத்தியத்தோட்டத்தி லிருந்த நிகும்பிலையென்ற ஆலயத்துக்குச் சென்றான். நிகும்பிலையைச் சேர்ந்ததும், இந்திரஜித்து அக்கினியை வளர்த்து ஓமம் பண்ணலானான். யாகசாலையில் முறைப் படி ஓமஞ்செய்யப்பட்ட தீயும் மாமிசங்களையும் இரத்தத் தையும் உண்டு அப்போது அதிகமாக ஓங்கி யெரியலா யிற்று. அப்பொழுது செய்யவேண்டிய முறைமையை யுணர்ந்த அவ்விந்திரஜித்து அரக்கர்களுடைய க்ஷேமத் தின் பொருட்டு சாஸ்திரப் பிரகாரம் ஹவ்யத்தை ஹோமம் பண்ணினான்.

49. இந்திரஜித்தின் வதை

விபீஷணர் எல்லாச் சேனைகளையும் அவ்வவ்வற்றிற்கு உரிய இடங்களில் நிறுத்திவிட்டு நான்கு மந்திரிமார்கள் புடைசூழ மகாத்மாவான இராமரை அணுகி இந்திரஜித்து எல்லா வானரர்களையும் மாயையால் வஞ்சித்து இப்போது நிகும்பிலை யென்னும் கோயிலுக்குச் சென்றிருக்கின்றான். அங்குதான் அவன் ஓமம் பண்ணுவான். அவன் ஓமத்தை சரிவர முடித்து மட்டும் போர்க்களம் புகுவானேயானால் தேவர்கள் யாவருடனுங் கூடிய இந்திரபகவானாலும் அவனைப் போரில் வெல்ல முடியாது. வீரனான இந்திரஜித்தோ கொடுந்தவங்கள் புரிந்து பிரமதேவரிடமிருந்து பிரம்சிரமென்ற அஸ்திரத்தையும் கருதியபடி செல்லும் புரவிகளுடன் கூடிய இரதத்தையும் வரம் பெற்றுள்ளான். மஹாபாகுவே! 'ஆனால் எவனாயினும் ஒரு பகைவன் நீ ஹோமத்தை முடித்துவிட்டு நிகும்பிலை யென்னும் ஆலமரத்தடியைச் சேருவதற்கு முன்னமே படைக்கலமேந்திய உன்னை கொல்ல முயல்வானேயானால் அவன்தான் இந்திர சத்துருவாகிய உன்னைக்கொல்லத் தக்கவன்' என்று பிரமதேவர் முன்னொருகாலத்தில் அவனை நோக்கி வாக்களித்திருக்கின்றார். வேந்தரே! ஆகவே அவ்விந்திரஜித்தினுடைய வதத்தின்பொருட்டு இலக்ஷ்மணரை ஏவுங்கள். அவன் அவ்வோமத்தை முடிக்கு முன்னமே நாம் சேனைகளுடன் அவ்விடம் செல்லவேண்டும். இலக்ஷ்மணரை சேனாபதிகளுடன் என்னோடு அனுப்புங்கள்; இவர் தமது கூரான அம்புகளால் அவன் செய்கின்ற ஓமத்தை அழிப்பார். ஓமம் அழிந்த மாத்திரத்தில் இந்திரஜித்து எளிதில் வதைக்கத் தக்கவனாவான்" என்றார்.

விபீஷணர் சொன்னதைக் கேட்டதும் இராமர் இலக்ஷ்மணரை நோக்கிச் சொல்லலானார் :—" லக்ஷ்மணா!

வானரராஜருக்கு எவ்வளவு சேனைகளுண்டோ அவ்வளவையும் உன்னுடன் அழைத்துக்கொண்டு அநுமான் முதலான சேனுபதிகளுடனுங் கூடியவனும் சேனைகளுடன் கூடிவரும் ரிக்ஷராஜனுன ஜாம்பவனையும் அழைத்துக் கொண்டு சென்று மாயாபலத்தில் தேர்ந்திருக்கும் இந்திரஜித்தை வதைசெய்வாய். இந்திரஜித்து இப்பொழுது சென்றிருக்கும். இடத்தை நன்ருகத்தெரிந்த மகாத்துமாவாகிய இவ்வரக்கவீரர் மந்திரிமாருடன் உன்னைப் பின் தொடர்ந்து வருவார்" என்ருர். இராமர் அவ்வண்ணங் கட்டளையிட்டதைக் கேட்டதும் இலக்ஷ்மணர் அவரை வலம்வந்து இந்திரஜித்து பாதுகாத்து வந்த நிகும்பிலையை நோக்கி விபீஷணருடன் கூட வெகுவேகமாகப் போனுர்.

அப்பொழுது இலங்கையில் எல்லாப்பக்கங்களிலும் எதிரொலி யுண்டாகுமாறு பேரொலியுடன் அரக்கர்களுக்கும் வானரர்களுக்கும் வெகு பயங்கரமான யுத்தம் நடக்கலாயிற்று. பகைவர்களால் வெல்லுதற்கு அரிய இந்திரஜித்து தனது சேனை மிக்க சங்கடத்திலிருப்பதையும் அதனைச் சத்துருக்களழிப்பதையும் கேள்விப்பட்டு தான் தொடங்கிய ஓமம் முடியு முன்னமே அவ்வோமத்தை விட்டுப் போருக்கு எழுந்தான். தான் உட்கார்ந்திருந்த செறிந்த மரக்கூட்டத்தினிடையிலிருந்து வெளிக்கிளம்பி தனக்காக முன்னமே குதிரை கட்டி சித்தமாகவிருந்த அழகான இரதத்தின்மேல் ஏறினுன். இந்திரஜித்து கவசம் அணிந்து வில்லையேந்தி கொடிவிளங்குகின்ற அக்னி நிறமான தனது தேரின்மீது தோன்றினுன். போரில் எவராலும் வெல்லப்படாத புலஸ்திய வம்சத்தவனுன அவ்வரக்கனை நோக்கி மஹா பராக்கிரமசாலியான இலக்ஷ்மணர் "உன்னை நான் போரிடக் கூப்பிடுகின்றேன். ஆகையால் உன்னுற் கூடியமட்டும் நீ முயன்று என்னுடன் போர் செய்வாய்" என்ருர்.

வெகுபலமும் திடசித்தமுமுள்ள இந்திரஜித்து இவ்வண்ணம் சொல்லப்பட்டு அங்கு விபீஷணரைக்கண்டு கடுமையாக சொல்லலானுன் :— "இவ்விலங்கையில் நீர் பிறந்து வளர்ந்தவர் ; எனது தந்தைக்கு நேர் தம்பி. அரக்கரே ! இவ்வாறிருக்க, எனக்குச் சிற்றப்பனுரான நீர் புத்திரனுன எனக்குத் துரோகம்பண்ணலாமா? நீர் உமது ஜனங்களை விட்டு மாற்றானிடம் அடிமையாகப் புகுந்து விட்டதனுல் உம்மைக்குறித்து விசனப்பட வேண்டியதாக விருக்கின்றது. அன்னியன் நற்குணங்கள் நிறைந்தவனுக இருந்தாலும் நம்மைச் சேர்ந்தவன் குணங்களற்றவனுக இருந்தாலும் குணமற்ற நமது பந்துக்களுடன் சேர்ந்திருப்பதுதான் நன்மை ; அன்னியனென்பவன் அன்னியனேயன்றே ! எவன் ஸ்வபக்ஷத்தைவிட்டு பரபக்ஷத்தையடைகின்றனே அவன் ஸ்வபக்ஷம் நாசமானபிறகு அந்த மாற்றாராலேயே நாசமுறுகின்றுன். அரக்கரே ! இராவணனுர்க்குத் தம்பியே ! உமது தயையின்மை எவ்வளவு பயங்கரமாக விருக்கின்றதோ அவ்வளவுகொடுமையான தயையின்மையால் மாற்றானுக்கு ஸ்வஜனத்தைக்காட்டிக் கொடுத்தலாகிய செய்கை உம்மையன்றி வேறு யாரால் தான் செய்ய முடியும் ?" என்றுன்.

இவ்விதமாக இந்திரஜித்து சொன்னதும் விபீஷணர் பதில் சொல்லலானுர் :— "அரக்கா ! இதற்கு முன்னே எனது நடக்கையைத் தெரியாதவன் போல் ஏன் நீ பிதற்றுகின்றுய் ? ராக்ஷச ராஜகுமாரா ! துஷ்டா ! நான் உனது சிற்றப்பனென்ற கௌரவத்தாலாவது இவ்வண்ணம்பேசுவதை விட்டிடு. கொடுஞ்செயல்கள் செய்யும் அரக்கக்குலத்தில் நான் பிறந்தவனென்றுலும் எனது நடத்தை அரக்கர்களுடைய நடத்தையல்லவே ; என்னிடத்திலுள்ள இக்குணந்தான் ஸத்புருஷர்கள் முதன்மையாகக் கொண்டாடும் குணம். கொடுந்தொழிலினுலே நான் ஒருபொழுதும் சந்தோஷப்படேன். தர்மத்

துக்கு விரோதமான செயலினுலும் நான் சந்தோஷங் கொள்ளேன். மேலும் மாறுபாடான நடக்கையுடைய எனது தமையனுர் உடன்பிறந்தவனுன என்னை ஏன் துரத்திவிட்டனர்? தருமத்தினின்று வழுவியவனுய்ப் பாவத்தொழில்களையே புரிகின்றவனை தனது கையில் விழுந்த பாம்பை உதறுவதுபோல உதறிவிட்டு எவன் விலகிவருகின்ருனே அவன்தான் சுகமடைவான். மஹரிஷி களின் சித்திரவதையும் தேவர்கள் யாவருடனுஞ் சண் டையும் கர்வமும் கோபமும் பகைமையும் பிரதிகூலனுக விருத்தலும் என்னும் இவ்வகைத் துர்க்குணங்கள் எனது தமையனுருடைய ஆயுளையும் ஸம்பத்தையும் நாசஞ்செய்ய தோன்றி அவரிடமுள்ள நற்குணங்களை மேகங்கள் மலையை மூடுவதுபோல மறைத்துவிட்டன. இவ்வகைத் தோஷங்களுக்காகத்தான் நான் எனது உடன்பிறந்தவ ரான் உனது தந்தையை கைவிட்டேன். இனிமேல் இவ் விலங்கை விரைவில் அழிவடையப்போகின்றது; நீயும் உயிருடன் பிழைத்திருக்கப் போகின்றதில்லை; உனது தந்தையும் பிழைத்திருக்கப் போகின்றதில்லை. அடா அரக்கா! நீ வெகு கர்வங்கொண்ட சிறுபிள்ளை: வணக்க மற்றவன். காலபாசம் உன்னை இறுக்குகின்றபடியால் நீ உன்மனத்தில் தோன்றிய படியெல்லாம் என்னைப் பேசு கின்ருய். நீ தெய்வப்பிறப்பையுடைய மனிதரான இலக்ஷ் மணருடன் போர்புரிவாயாக. அவரால் வதைக்கப்பட்ட பிறகு நீ யமலோகத்திற்சென்று தேவகாரியமாகிய யாகத்தை முடித்துக்கொள்ளலாம்" என்ருர்.

இவ்வாறு விபீஷணர் சொன்னதைக் கேட்டு இந்திர ஜித்து வெகு கோபங்கொண்டு இலக்ஷ்மணர் விபீஷணர் வானவீரர்கள் எல்லாரையும் பார்த்து வெகு கோபத் துடன் பின் வருமாறு சொல்லலானுன் :— "நீங்களெல் லாரும் இன்று எனது வல்லமையைப் பாருங்கள். இன்று என்னுடைய வில்லினின்று புறப்படும் பாணங்கள் ஒரு

வராலும் அணுகமுடியாதவண்ணம் ஆகாயத்தினின்று மழை பொழிவதுபோல போரில் விழுவதை நீங்கள் தடை செய்யுங்கள். நான் கூரான பாணங்களாலும் சூலங்கள் சக்திகள் குண்டாந்தடிகள் தோமரங்கள் என்ற ஆயுதங்களாலும் உங்கள் தேகங்களைப்பிளந்து உங்களெல்லோரையும் யமனுடைய மாளிகைக்கு அனுப்புகின்றேன்" என்றான்.

இந்திரஜித்து அவ்வளவு கர்வத்துடன் சொன்னதைக் கேட்டு இலக்ஷ்மணர் கொஞ்சமேனும்பயமில்லாமல் வெகு கோபத்துடன் அவ்விராவணகுமாரனை நோக்கி மறுமொழி சொல்லலானார் :—" அரக்கா! நீ அசாத்தியமான காரியங்களை வாயினால்மாத்திரஞ் சொல்லுகின்றாய்; எவனொருவன் செயலினால் தன் காரியத்தை முடிக்கின்றானோ அவனல்லவோ நல்ல புத்திமான். கெடுமதியுடையாய்! பகைவனை வெல்லமாட்டாத நீ ஒருத்தனாலும் செய்து முடிக்கக்கூடாத காரியத்தை வாயினால்மட்டுஞ் சொல்லி அம்மட்டிலேயே தொழிலைச் செய்து முடித்தவன் போல க்ளிக்கின்றாயே! இன்று நான் உனது பாணங்கள் விழும் வழியில் நிற்கின்றேன்; உனது வல்லமையை நீ இப்பொழுது காட்டு. நீ வீணாகக் கர்வப்படவேண்டாம்" என்றார். இப்படி இவர் சொல்லவே இந்திரஜித்து தனது பயங்கரமான வில்லிலே கூரான அம்புகளைத் தொடுத்து இலக்ஷ்மணர்மேல் விடுத்தான். சீறின சர்ப்பங்கள்போல் வெகுவேகமாக வந்த அந்த அம்புகள் இலக்ஷ்மணர்மீது பட்டுப் புவியில் விழுந்தன. ஒருவரையொருவர் வெல்ல விரும்பிய அவ்வரக்க வீரனும் அம்மனித வீரரும் போர் புரிந்தபோது அந்த யுத்தம் வெகு பயங்கரமாக இருந்தது. அவ்விருவரும் மிகுதியாகப் பலமைமந்தவர்கள்; அவ்விருவரும் வெகுபராக்கிரம முள்ளவர்கள்; அவ்விருவரும் மிக்க வல்லமையுள்ளவர்கள்; ஆயுதங்களெல்லாவற்றிலும் வல்லவர்கள். அவ்விருவரும் ஒப்பற்ற பலமும் காந்

தியும் அமைந்து ஒருவராலும் வெல்லமுடியாதவர்கள். அவ்விருவரும் அச்சமயத்தில் ஆகாயத்தில் இரண்டு கிரகங்கள் போரிடுவதுபோல போரிடலானார்கள்.

சத்துருக்களை வதைக்கும் வல்லமை தங்கிய இலக்ஷ்மணர் வெகுகோபங்கொண்டு சர்ப்பம்போல் சீறி அவ்வரக்க வீரன்மேற் பாணமொன்றைத் தொடுத்து விடுத்தார். அவ்விராவணகுமாரன் இலக்ஷ்மணருடைய வில் நாணியின் சத்தத்தைக் கேட்டதும் முகவொளி குன்றியவனாய் இலக்ஷ்மணரை ஒரு பார்வை பார்த்தான். அவ்வாறு இந்திரஜித்தின் முகவொளி மாறியதை விபீஷணர் கண்டு போர்புரிய முயன்று நின்ற இலக்ஷ்மணரை நோக்கி பின்வருமாறு சொல்லலானார்:—"நான் இப்போது இராவணகுமாரனாகிய இவ்விந்திரஜித்தின் முகத்திற் சிலகுறிகளைக்காண்கின்றேன்: புஜபராக்கிரமமமைந்தவரே! அதனால் இவன் இப்போது தோற்றுனென்பதற்கு ஐயமேயில்லை: ஆகையால் இவனை வதை செய்ய விரைவு கொள்க" என்றார். அதன்பிறகு இலக்ஷ்மணர் தழல்போல ஜ்வலித்துக்கொண்டும் அதிக விஷமமைந்த சர்ப்பங்கள்போல விளங்கிக்கொண்டுமிருந்த தமது கூரான பல பாணங்களை வில்லில் தொடுத்து இந்திரஜித்தின்மேல் விடுத்தார். இந்திரஜித்து உடம்பு முழுமையும் அம்புகள் தைத்து விரணடைந்தபொழுது அப்போர்க்களத்தில் மரமடர்ந்த மலைபோலக் காணப்பட்டான். அதன்பிறகு அவன் வெகுகோபங்கொண்டவனாய் ஆயிரக்கணக்காகப் பாணங்களைவிடுத்து மகாவீரராகிய இலக்ஷ்மணரைப் பிளக்கலானான். அப்போர்க்களத்தில் இலக்ஷ்மணர் இந்திரஜித்தையும் இந்திரஜித்து இலக்ஷ்மணரையுமாக ஒருவரையொருவர் பலமுறை அடித்துக்கொண்டபோதிலும் அவ்விருவரும் சிரமத்தையடையவில்லை.

அவ்விருவரும் பொருகையில் ஹஸ்தலாகவத்தால் அவர்கள் பாணங்களை அம்பறாத்தூணியிலிருந்து எடுப்ப

தும், நாணியில் தொடுப்பதும், வில்லை வலக்கையிலும் இடக்கையிலும் பிடிப்பதும், பாணங்களை விடுப்பதும், நாணியை யிழுப்பதும், பலவகைநிலையில் தங்குவதும், வில்லின் நாணியிற் கைப்பிடியை வைத்திருத்தலும், இலக்கைக் குறித்தலும் என்னும் இவற்றில் ஒன்ருவது ஒருவருக்கும் அங்கு புலப்படவில்லை. நூற்றுக் கணக்காக பாணங்களை அவ்விருவரும் எய்த பொழுது பெருந் திக்குக்களும் மூலைத் திக்குக்களும் பாணங்களால் நிரம்பின. சூரியன் அஸ்தமிக்கும்பொழுது தோன்றுங் கார்இருள் போல எங்கும் பேரிருள் தோன்றி எல்லாரையும் நடுங்கச் செய்தது. இந்திரஜித்தினது தேரில் பூட்டப்பட்டிருந்த கருங்குதிரைகள் நான்கையும்இலக்ஷ்மணர் நான்கு பாணங்களை விடுத்துப் பிளந்தார். அதன்பிறகு பல்லமென்னும் பாண விசேஷத்தால் தேர்ப்பாகன் தலையைத் தேகத்தினின்று பிரித்தெறிந்தார்.

மஹாபராக்கிரமசாலியான இந்திரஜித்து தனது இரதத்தின் குதிரைகள் வதைக்கப்பட்டதும் அரக்கர்கள் யாவரையும் உற்சாகப்படுத்துபவனுய் இவ்வாறு சொல்லலானுன் :—''இப்பொழுது எல்லாத் திசைகளும் பேரிருளால் மூடப்பட்டிருக்கின்றன ; ராக்ஷசோத்தமர்களே ! இதில் நமது கட்சிக்காரன் இவன், நமது சத்துரு இவன் என்பதுகூட விளங்கவில்லை. நீங்களெல்லோரும் வானரர்களை ஏமாற்றும்பொருட்டு வெகு தைரியமாக யுத்தஞ் செய்யுங்கள். நான் இலங்கையிற் புகுந்து தேரிலேறி ஒரு நிமிஷத்தில் வருகின்றேன்'' என்று சொல்லி விட்டு வானரர்கள் யாவர்க்கும் தான் போவது தெரியாதபடி மோசஞ் செய்து இரதமேறித் திரும்பி வருமாறு இலங்கைக்குட் புகுந்தான். போரில் வெல்பவனும் மஹாபராக்கிரமசாலியுமான அவ்விராவணி அழகியதாய் பொன்னுபரணங்கள் அலங்கரிக்கப் பெற்ற வேறு இரதமொன்றில் ஏறி நகரத்தைவிட்டு வெளிக்கிளம்பி ஒரு நொடியில் வெகு வேக

மாகச் செல்லும் புரவிகளை நடத்திக்கொண்டு விபீஷண ருடன் இலக்ஷ்மணரிருந்த இடம் திரும்பிவந்து சேர்ந்தான். இந்திரன் மழையை இடைவிடாமற் பொழிவதுபோல இலக்ஷ்மணர்மீது வெகு சாமர்த்தியமாக சரமாரி பொழிய லானான். ஒருவராலும் சகிக்கமுடியாத இந்திரஜித்து விடுத்த அவ்வளவு அம்புகளை இலக்ஷ்மணர் கொஞ்ச மேனும் கலங்காமல் தடுக்கலானார். அவ்விரண்டு வீரர்க் கும் நடந்த பெரும் போரானது வெகு ஆச்சரியமாக இருந் தது. அப்பொழுது ஒருவராலும் வெல்லப்படாத ஐந்தி ராஸ்திரமாகிய சிறந்த அம்பை இலக்ஷ்மணர் வில்லில் தொடுக்கலானார். அப்பாணத்தை தமது வில்லில் தொடுத்து, நாணியை யிழுத்து விடுபவராய், அந்த அஸ்தி ரத்தை நோக்கி பின்வருமாறு சொல்லலானார் :—“தசரத ருடைய புதல்வரான இராமர் தருமாத்துமாவென்பதும், உண்மையையே நோன்பாகக் கொண்டவரென்பதும் உண்மையானால், போர்புரிவதில் அவருக்கு ஒப்பானவர் ஒருவருமில்லையானால், பாணமே! நீ இந்த இந்திரஜித்தை வதைப்பாயாக” என்று சொல்லி அப்போர்க்களத்தில் வீரரான இல்க்ஷ்மணர் அந்தப் பாணத்தை ஐந்திராஸ்திர மந்திரத்தால் அபிமந்திரித்து காதுவரையில் நன்றாக இழுத்து இந்திரஜித்தின் மேற் பிரயோகித்தார். அவ்வைந் திராஸ்திரம் அழகான குண்டலங்களணிந்து தலைப்பாகை யுடன் விளங்கிய இந்திரஜித்தின் தலையை அறுத்து கீழே தள்ளிற்று.

அவன் மாண்டதும் விருத்திராசுரன் மாண்டவுடனே சந்தோஷத்தால் தேவர்கள் சத்தமிட்டதுபோல எல்லா வானரர்களும் விபீஷணருடன் களித்துச் சத்தமிடலானார் கள். இந்திரஜித்து மாண்டதை யறிந்துகொண்ட ராக்ஷச சேனை தமது உணர்வு அழிய இலங்கையை நோக்கி ஓட்ட மெடுத்தது. அப்போது ஒப்பற்ற வல்லமையமைந்த அவ் வரக்க வீரன் அவ்வாறு போரில் வதைக்கப்பட்டதைக்

கண்டு விபீஷணர் அனுமான் ரிக்ஷமன்னவனுகிய ஜாம்ப வன் என்னும் இவர்கள், இலக்ஷ்மணருடைய வெற்றிக் காக பேரானந்தமடைந்தவர்களாய் இலக்ஷ்மணரைப் புகழ்ந்தார்கள்.

உத்தமவிலக்கணமமைந்த இலக்ஷ்மணர் இரத்தத் தாற் பூசப்பட்ட தேகத்தையுடையவராய் இந்திரனை வென்றவனுன இந்திரஜித்தைக் கொன்று சந்தோஷ மடைந்தார். அதன் பிறகு இலக்ஷ்மணர் ஜாம்பவனுட னும் அனுமானுடனும் மற்ற வானரர்களுடனும் ஒன்று கூடி விபீஷணரைப் பற்றிக்கொண்டு சுக்கிரீவனுடன் இராமரிருந்த விடத்துக்கு விரைவாக வந்தார். பிறகு சுமித்திராகுமாரர் இராமரை வலம் வந்து நமஸ்காரம் பண்ணி இந்திர பகவானிடம் பிருகஸ்பதிபோல தமது தமையனுரருகிலிருந்தார். அப்பொழுது வெகு சந்தோஷத் துடன் விளங்கிய விபீஷணர் இளைய பெருமாள் இந்திர ஜித்தினுடைய தலையை யறுத்ததை இராமரிடம் விவர மாகத் தெரிவித்தார். அம்மகாவீரரும் இந்திரஜித்து இலக்ஷ்மணரால் வதைக்கப்பட்ட பெருஞ்சந்தோஷ சமா சாரத்தைக் கேட்டு வெகுமகிழ்ச்சி யடைந்து பின்வருமாறு சொல்லலானுர் :—இலக்ஷ்மணு! நன்று; நான் உனது வீரச் செயலாற் களிக்கின்றேன். சிறந்த நற்காரியஞ் செய்தாய்; எப்பொழுது இந்திரஜித்து மடிந்தானே அப்பொழுதே நாம் இராவணனை வெற்றி கொண்டோமென்று கருதுக" என்று சொன்னுர்.

பிறகு இராமர், இலக்ஷ்மணரை உச்சி மோந்து கட்டித் தழுவி வெகு சந்தோஷத்துடன் ஸுஷேணனை நோக்கிப் பின்வருமாறு சொல்லலுற்றுர் :—"பேரறிவுடை யவனே! நண்பரிடத்தில் அன்பு காட்டுகின்ற இலக்ஷ் மணன் இப்போது அம்புகளால் விரணப்பட்டிருப்பதனுல் அவ்வருத்தத்தை நீக்குதற்கு உரிய சிகித்ஸைகளை உடனே செய்ய வேண்டும். இலக்ஷ்மணன் விபீஷணர் என்னும்

இவ்விருவர்மேலும் தைத்திருக்கின்ற அம்புகளை வாங்கி விரணங்களை உடனே ஆற்றுவாயாக. 'அவ்வாறே மரங்களைக்கொண்டு போர்புரிபவர்களான ரிக்ஷவானர வீரர்களில் இப்போரில் எவர்கள் அம்புமுனைகளால் விரணப்பட்டிருக்கின்றார்களோ அவர்களெல்லாரையும் தக்க முயற்சி செய்து சௌக்கியப்படுத்துக'' என்றார். இவ்வாறு இராமர் மகாத்துமாவாகிய அவ்வானர சேனாபதியைப் பார்த்துச் சொன்னதும், அவன் இலக்ஷ்மணருடைய மூக்கிற் சிறந்த ஓஷதியொன்றை வைத்தான். இலக்ஷ்மணர் அதன் வாசனையை மோந்தவுடனே சல்லியமற்றவரும் வேதனையற்றவரும் விரணப்பட்ட இடங்கள் கூடப்பெற்றவருமாயினார். அவ்வானர சேனாபதி விபீஷணர் முதலான நண்பர்களுக்கும் வானர வீரர்கள் யாவர்க்கும் வைத்தியஞ் செய்தான். இலக்ஷ்மணர் தமது திருமேனியில் தைத்த சல்லியங்களும் வேதனையும் கொதிப்பும் நீங்கி முன்புபோல் ஒரு நொடியில் சௌக்கியமாகி மகிழ்ந்திருந்தார்.

50. இராம இராவண யுத்தம்

அதன் பிறகு இராவணனுடைய மந்திரிமார் இந்திரஜித்தின் வதையைக் கேள்விப்பட்டு அச்செய்தியை இராவணனிடம் வெகு துக்கத்துடன் "மஹாராஜரே! இலக்ஷ்மணன் இந்திரஜித்தை வதைத்து விட்டான். தங்களது புதல்வன் இலக்ஷ்மணனைப் போரில் எதிர்த்து அவனை வேண்டிய மட்டும் தனது பாணங்களால் வருத்தி விட்டு வெகு உயர்ந்ததான வீர சுவர்க்கஞ் சேர்ந்தான்'' என்றார்கள். இராவணன், தனது புத்திரனை இந்திரஜித்து போர்க்களத்தில் மடிந்த வெகு கொடிய சமாசாரத்தைக் கேட்டு, சோகம் தாங்கமாட்டாமல் மூர்ச்சையடைந்தான். அவ்வரக்க மன்னவன் வெகு நாழிகைக்கு அப்பால் மூர்ச்சை தெளிந்து புத்திர சோகத்தால் அறிவு தடுமாறி

வெகுவாக வருந்தியவனாய் மிகவும் பரிதாபமாய் புலம்ப லானான் :—"உனது இளவரசு ப்பட்டத்தையும் இலங்கையையும் அரக்கர்களையும் தாயையும் என்னையும் மனைவியையும் விட்டு, அடர் குழந்தாய்! நீ எங்குப் போயினாய்? வீரனே! நான் யமலோகத்துக்குச் சென்றால் நீ எனது உத்தரகிரியைகளைச் செய்ய வேண்டியவன்; இதற்கு மாறாகவல்லவோ இப்பொழுது எல்லாக் காரியங்களும் முடிந்தன" என்று புலம்பினான்.

இவ்வாறு பலவிதமாக இராவணன் புலம்பிக் கொண்டிருந்தபொழுது புத்திரனை யிழந்த சோகமானது அவனுக்குப் பெருங்கோபத்தை மூட்டிற்று. அப்பொழுது அவன் சீதையை வதைக்கலாமென்று எண்ணங்கொண்டான். வெகு கோபத்துடன் கத்தியை கையிலெடுத்துக் கொண்டு தனது மனைவிமார்களும் மந்திரிமார்களும் தன்னை சூழ்ந்துவர, சீதையிருந்த இடத்தை நோக்கி வெகுவேகமாகக் கிளம்பினான். அப்போது இராவணனுடைய மந்திரிகளில் வெகு புத்திமானும் நல்லொழுக்கமுள்ளவனுமான சுபார்சுவனென்ற அரக்கன் "தசக்கிரீவரே! தாங்கள் வைசிரவணருடைய நேரான தம்பியாயிருந்து தர்மமென்பதைக் கோபத்தால் மறந்து விட்டு சீதையைக்கொல்ல எவ்வாறு கருதுகின்றீர்? இப்பொழுது தங்களுக்கு உண்டாயிருக்குங் கோபத்தை எங்களுடைய உதவியுடன் இராமனிடம் திருப்புங்கள். கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி திதியாகையால் இன்றைய தினமே யுத்தத்துக்கு ஏற்பாடு செய்யுங்கள்; நாளை அமாவாசை வெற்றியை யடையும் பொருட்டுப் புறப்படுங்கள். வெகு சூரரும் புத்திமானும் அதிரதவீரரும் கத்தியை யேந்தியவருமான தாங்கள் சிறந்த தேரிலேறிச் சென்று இராமனை வதை செய்து விட்டுச் சீதையை யடைவீர்கள்" என்றான்.

இறந்தவர்கள் போக எஞ்சி நின்ற அரக்கர்கள் கண்ணாற் பார்த்தும் காதாற் கேட்டும் பயத்தால் மனங்

குழம்பி விட்டார்கள். தங்கள் கணவர்களை யிழந்து கைம் பெண்களாய் விட்ட அரக்க மடந்தையர்கள் அங்கு வந்து எளிமை யடைந்து கவலையாற் கலங்கியவரானார்கள். கணவனை யிழந்தவர்களும் பிள்ளைகளைப் பறிகொடுத்தவர் களும் மற்றும் பந்துக்களை யிழந்தவர்களுமான ராக்ஷஸிகள் ஒன்று சேர்ந்து துக்கத்தாற் பரிதவித்துக் கொண்டு கதறு பவர்களாய் பின்வருமாறு புலம்பலானார்கள்:—"இராவண னார் தமது நாசத்துக்கென்றே சீதாதேவியைத் தூக்கி வந்தார்; இந்தத் தசக்கிரீவர் ஜனக மகாராஜாவின் குமாரி யான சீதையை ஒரு நாளும் அடையப் போகின்றதில்லை. சீதையின்மேல் ஆசைகொண்ட விராதனென்ற அரக்கனை இராமர் ஒருவராகக்கொன்றாரே; அதுவொன்றே இராம ருடைய வல்லமைக்குப் போதுமான திருஷ்டாந்தமாம். கொடிய செய்ல்கள் புரிந்து வந்த பதினாலாயிரம் அரக் கர்களை ஜனஸ்தானத்தில் தழலுக்கொப்பான தமது பாணங்களால் இராமர் ஒருவரே வதைத்தாரே, கரன் தூஷணன் திரிசிரஸ் என்ற இவ்வரக்க வீரர்களைச் சூரிய னுக்கொப்பான அம்புகளால் இராமர் வதைத்தாரே, அவைகளே இராமரது வல்லமைக்குப் பூர்ணமான திருஷ் டாந்தங்கள். ஒரு யோசனை நீளமான கைகளமைந்தவ னாய் இரத்தத்தைக் குடித்துக்கொண்டு கோபத்தாற் கர்ச் சிப்பவனாயிருந்த கபந்தனையும் இராமர் வதைத்தாரே, அதுவே இராமருடைய வல்லமையைத் தெரிவிக்கப் போதுமான திருஷ்டாந்தம். வெகு பலவானாய் இந்திர னுடைய குமாரனாய் மேருவுக்கு ஒப்பானவனாயிருந்த வாலியை இராமர் கொன்றாரே அதுவே அவருடைய வல்லமையை யறிந்து கொள்ளப் போதுமான ஒரு திருஷ் டாந்தம். ரிசியமூக மலையில் வசித்துக் கொண்டு தனது மனோரதங்கள் ஒன்றும் கைகூடாமல் வெகு பரிதாபமாக விருந்த சுக்கிரீவனை இராமர் வானரவேந்தனாக முடிசூட்டி வைத்தாரே. அவர் மகிமை இப்படிப்பட்டதென்பதைத்

தெரிந்து கொள்ள அதுவே போதுமான ஒரு திருஷ்டாந்தம். தர்மத்துடனும் அர்த்தத்துடனும் கூடியதும் எல்லா அரக்கர்களுடைய க்ஷேமத்தையும் நாடியதும் நியாயமானதுமான விபீஷணருடைய நற்போதனை அவ்விராவணனுர்க்கு மோஹத்தால் மனத்திற்குப் பிடிக்கவில்லை. விபீஷணர் சொல்லியபடி இராவணனுர் செய்திருந்தால் இவ்விலங்கை துயரத்தால் வருத்தப்பட்டு சுடுகாடாகப் போகாமலிருக்குமே! என் குமாரன் மாண்டானே. என் உடன் பிறந்தோன் மாண்டானே என் கணவன் போரில் மடிந்தானே!" என்று வெகு கடோரமாகப் புலம்பினுர்கள்.

வீடுகள் தோறும் எழும்பிய அவ்வழுகையொலி அவன்காதில் விழுந்ததும் இராவணன் பெருமூச்சுவிட்டு கொஞ்சநேரம் ஒன்றுந் தோன்றுமல் ஆலோசிக்கலானுன்; அதன்பிறகு வெகு கோபங்கொண்டவனுய் சமீபத்திலிருந்த அரக்கர்களை நோக்கி "சீக்கிரம் போரிடப் புறப்படும்படி நான் கட்டளையிட்டதாகச் சேனுதிபதிகட்குத் தெரியப்படுத்துங்கள்" என்றுன். அவ்வரக்கர்களும் அவன் அவ்வாறு சொன்ன சொல்லைக் கேட்டு அச்சத்தால் நடுநடுங்கியவர்களாய் அஜாக்ரதையாக இருந்த அரக்கர்களை நோக்கி அரக்கமன்னவனுடைய கட்டளைப்படியே ஏவினுர்கள். பயங்கரமான தோற்றமுள்ள அவ்வரக்கர்கள் யாவரும் அப்படியேயென்று உடன்பட்டு தங்களுக்கு க்ஷேமமுண்டாக ஸ்வஸ்தியயனஞ் செய்துகொண்டு யுத்தஞ்செய்யுமாறு புறப்பட்டார்கள். அவ்வரக்கர்கள் யாவரும் இராவணனிடம் வந்து அவனுக்கு முறைப்படி மரியாதைகளைச்செய்து தமது தலைவனுடைய வெற்றியை விரும்பினவர்களாய் கைகளை அஞ்சலிபண்ணிய வண்ணம் நின்றுர்கள்.

அப்பொழுது கோபம் மிகுந்தவனுய் இராவணன் பரிகாசமாகச் சிறிது சிரித்து மகோதரன், மகாபார்சுவன் விரூபாக்ஷன் என்ற இவர்களைப் பார்த்து பின்வருமாறு

சொல்லலானன் :—“நான் இன்று என்னுடைய வில்லினின்று பிரயோகிக்கப் போகின்றனவாய்ப் பிரளயகாலத்தில் தோன்றுஞ் சூரியன் போன்ற பாணங்களால் இராமன் இலட்சுமணன் என்ற இவ்விருவரையும் யமனுடைய மாளிகைக்கு அனுப்புகின்றேன். இன்று நான் எனது மாற்ருரை வதைப்பதனல் கரன் கும்பகர்ணன் பிரஹஸ்தன் இந்திரஜித்து என்ற இவர்களைக் கொன்ற பழியைத் தீர்த்துக் கொள்ளுகிறேன். எவர்கள் ‘கணவன் மாண்டான்,’ ‘உடன்பிறந்தவன் மாண்டான்,’ ‘குமாரர்கள் மாண்டார்கள்’ என்று புலம்புகிருர்களோ அவ்வரக்கிகளுடைய கண்ணீரை நான் இன்று, சத்துருவைக்கொல்வதனல் துடைக்கின்றேன். எனது இரதத்தை சீக்கிரங் கொண்டு வந்து நிறுத்துங்கள்; எனது வில்லைச் சடிதியிற் கொண்டுவந்து வையுங்கள். இன்னும் எஞ்சிநிற்கின்ற அரக்கர்களெல்லாரும் என்னைத் தொடர்ந்து வரட்டும்” என்ருன்.

உடனே ஒரு முகூர்த்தத்துக்குள் பயங்கரமான தோற்றமும் மிகவுங்கொடுமையான முகங்களுமுள்ள அரக்கர்கள் யாவரும் பலவகை ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு கர்ஜ்ஜிப்பவர்களாய் புறப்படலானுர்கள். தனது இரதத்தின்மேல் மிகவும் பயங்கரமான தோற்றமுள்ள இராவணன் ஏறினன். பிறகு பல அரக்கர்களாற் சூழப்பட்டு இராவணன் தனது பலத்தாலும் காம்பீரியத்தாலும் பூமியையே பிளந்து விடுகின்றவன்போன்று போர்க்களம்நோக்கிப் புறப்பட்டான். இராமலக்ஷ்மணர் எங்கு இருக்கின்ருர்களோ அவ்வாயில் வழியாக வெளிப் புறப்பட்டான். அப்பொழுது, சூரியபகவான் ஒளியையிழந்தான்; திசைகள் இருளால் மூடப்பட்டன; பறவைகள் பயங்கரமாகக் கூச்சலிட்டன. பூமி அசையலாயிற்று. இராவணனுடைய இடக்கையும் இடக்கண்ணும் துடித்தன; அவனுடைய முகமும் வெளுத்தது; குரலும் கம்

மிற்று. இவ்வாறு பயங்கரமாகத் தோன்றிய அபசகுனங்களில் ஒன்றையும் தனது புத்திமாருட்டத்தினுற் சிறிதுங் கவனிக்காமல் தனது விதியால் ஏவப்பட்டனவாய் தனது சத்துருக்களை நாசம் பண்ணுதற்பொருட்டுப் போரிடப் புறப்பட்டான்.

அதிரதனுகிய இராவணன் தனது இரதத்தின் சத்தத்தால் எல்லாத் திசைகளிலும் எதிரொலி யுண்டாக்கிக் கொண்டு வெகுவேகமாக இராமரிருந்த இடத்தை நாடி அடைந்தான்.

வெகுபராக்கிரமசாலியும் பலசாலியுமான இராமர் இலக்ஷ்மணருடன் கூட நின்று இராவணன் தம்மைக் குறித்து விரைந்து வருவதைப் பார்த்து வெகுசந்தோஷங் கொண்டு தமது வில்லை நடுவிற் பிடித்தார். பிறகு இராமர் நாணியையிழுத்து வில்லிலேற்றினுர். இராமர் நாணேற்றிய சத்தத்தால் அங்கிருந்த அரக்கர்களெல்லாரும் நடுநடுங்கி நூற்றுக்கணக்காய் கீழே விழலானுர்கள். சக்கரவர்த்தித் திருமகர்களான அவ்விருவருடைய பாணங்களின் முன்னிலையில் வந்துசேர்ந்த இராவணன் சந்திரசூரியருடைய சமீபத்திலிருக்கும் இராகுபோல காணப்பட்டான். அவன் இராமரிடம் வந்துசேர்ந்து கோபத்தாற் கண்கள் சிவந்தனவாய் அவர்மீது சரமாரி பொழியலானுன். இராமர் இராவணனையும் இராவணன் இராமரையுமாக ஒருவரையொருவர் வெகு கூரான பல வகைப்பாணங்களால் விரைவாக அடித்துக்கொள்ளலானுர்கள். ஒருவரையொருவர் வதைக்க முயன்ற அவ்விரு வீரருக்குள்ளும் அப்பொழுது நடந்த போரானது தேவேந்திரனுக்கும் விருத்திராசுரனுக்கும் நடந்த பெரும்போர் போல வேறொருவராற் செய்யமுடியாததாகவும் மனத்தினுலும் இன்னபடியென்று நினைக்கமுடியாததாகவு மிருந்தது.

இச்சமயத்தில் பகைவரை வெல்லுந்தன்மையுள்ள வெகு பலசாலியான இராமருடைய தம்பியாகிய இலக்ஷ்மணர் வெகு கோபங்கொண்டவராய் ஏழு பாணங்களை யெடுத்து வெகு வேகமாகச் செல்லும் அப்பாணங்களைக் கொண்டு மானுடத்தலை யுருவமெழுதிய இராவணனது தேர்கொடியைப் பல துண்டமாக அறுத்தெறிந்தார். அன்றியும் இலக்ஷ்மணர் ஒரு பாணத்தைவிடுத்து அழகான குண்டலங்க ளணிந்திருந்த அரக்கமன்னவனது தேர்பாகனுடைய தலையை நறுக்கித் தள்ளினார்; மேலும் ஐந்து கூரான பாணங்களை விடுத்து யானையின் துதிக்கைபோல் விளங்கிய இராவணனது வில்லையும் வெட்டியெறிந்தார். நீலமேகங்கள் போலக் கறுத்து மலைகள்போல் வெகு உன்னதமாக விளங்கிய அவ்விராவணனது சிறந்த குதிரைகளை விபீஷணர் தாம் தாவிப் பாய்ந்து கதாயுதத்தினால் அடித்துக் கொன்றார். இராவணன் புரவிகள் மாண்ட இரதத்திலிருந்து வெகுவேகமாகக் கீழிறங்கி தனது தம்பியின்மேற் கொடுங்கோபங்கொண்டான். பிறகு பல உபசாரங்களால் நன்றாக பூஜிக்கப்பட்டதாய் யமனாலும் அணுகமுடியாததாய் தனது ஒளியால் மிகுதியாக மின்னிக்கொண்டிருந்ததான பெரியதொரு சக்தியெனும் ஆயுதத்தைக் கையிற்பிடித்தான். இராவணன் அப்பெருஞ் சக்தியை கையாற் சுழற்றிய பொழுது அது வெகு பயங்கரமாக மின்னிற்று. அச்சமயத்தில் அச்சக்தியால் விபீஷணருடைய உயிருக்கு அபாயமுண்டாகுமென்று சந்தேகித்து இலக்ஷ்மணர் விபீஷணரை மறைத்துக்கொண்டு அவருக்கு முன்பாக நின்று விபீஷணரை விடுவிக்கக் கருதி சக்தியைக் கையிற்கொண்டிருந்த இராவணன்மேல் தமது வில்லை வளைத்துப் பாணங்களை வருஷிக்கலானார். இலக்ஷ்மணர் விடுத்த பாணங்கள் வந்து துளைத்தலால் இராவணன் தனது பராக்கிரமங் குன்றி தனது தம்பியின்மேல் அச்சக்தியை விடவேண்டுமென்ற எண்ணத்தை மாற்றினான்.

இலக்ஷ்மணர் அவ்வாறு தன் தம்பியைப் பாதுகாத்ததற்காக அச்சக்தியை வெகு கோபங்கொண்டு இலக்ஷ்மணர் மேல் விடுத்து அட்டகாசம் பண்ணினான். அச்சக்தியால் இலக்ஷ்மணர் மார்புபிளப்புண்டு புவியில் விழுந்தார். அவ்விதமான அவஸ்தையை யடைந்த இலக்ஷ்மணரை அவருக்குச் சமீபத்திலிருந்த இராமர் பார்த்து வெகு தைரியசாலியாக விருந்தும் தம்பியின்மேல் வைத்திருந்த அன்பினால் மிக்க வருத்தமடைந்தார். அந்த துக்கத்தாற் கண்ணீர் வடிகின்ற கண்களுடன் அம்மகாத்துமா கொஞ்ச நேரம் ஆலோசித்து உடனே வெகுகோபங்கொண்டவராய் பிரளயகாலத்தீப்போலக் கொதிக்கலானார்; 'இதுவன்று துக்கப்படவேண்டிய சமயம்' என்று நினைத்து இராவணனை வதைக்கக் கருதியவராய் வெகுபயங்கரமான யுத்தத்திலிறங்கினார்.

அநுமான் சுக்கிரீவன் இவ்விருவரையும் பார்த்துப் பின்வருமாறு சொல்லலானார்:—" வானரோத்தமர்களே! நீங்கள் இலக்ஷ்மணரைச் சூழ்ந்துகொண்டு இவ்விட மிருங்கள். நான் வெகுநாளாக எதிர்பார்த்திருந்ததாகிய என் வல்லமையை வெளிக்காட்டுஞ் சமயம் இப்பொழுதுதான் நேர்ந்திருக்கின்றது. எப்பொழுதும் பாவச்செயல்களையே புரியும் இப்பாவியை வதைக்கவேண்டும். கோடை நீங்கினதும் சாதகப்பறவை மேகத்தை ஆவலுடன் எதிர்பார்ப்பதுபோல நான் இந்த சமயத்தைத்தான் இதுவரையில் எதிர்பார்த்திருந்தேன். வானரர்களே! வெகுசடிதியில் இதே முகூர்த்தத்தில் இவ்வுலகத்தைவிட்டு ஒன்று இராவணனாவது ஒழியவேண்டும்; இராமனென்ற நானாவது ஒழியவேண்டும். இவ்வண்ணம் நான் சத்தியமாகப் பிரதிஜ்ஞை செய்கின்றேன். என் பார்வையிலகப்பட்ட பிறகு இவன் ஒருபொழுதும் உயிர்தப்பமாட்டான்" என்றார். இராமர் இவ்வாறு சொல்லி மனந்தேறி பொன்னாபரணங்களையணிந்த கூரான பாணங்களை இராவணன்

மேல் விட்டார். இராமரும் இராவணனும் அவ்வாறு ஒருவர்மேல் ஒருவர் பாணங்களை விடுத்துக்கொண்ட பொழுது அவ்விருவருடைய பாணங்களின் ஒலியும் நெருக்கமாகக் கேட்கலாயிற்று.

இராவணனது சக்தி யென்கின்ற ஆயுதத்தால் இலக்ஷ்மணர் வருத்தப்பட்டு இரத்தம் பெருக விழுந்ததைப் பார்த்த பிறகு, இராமர் கொடிய அவ்வரக்க வேந்தனுடன் வெகு பயங்கரமான யுத்தம் புண்ணி அவன்மேற் சரமாரி பொழிந்த வண்ணமே சுஷேணனைப்பார்த்து பின் வருமாறு சொல்லலானூர் :—"இராவணனுடைய வல்லமையால் இலக்ஷ்மணன் பூமியில் விழுந்துகிடக்கின்றான்; எனது துக்கத்தைப் 'பெருகப் பண்ணிக்கொண்டு இவ் வீரன் சர்ப்பம்போலப் புரள்கின்றான். எனது உயிரை விட எனக்குச் சிறந்த இவ்வீரன் தனது உடம்பு முழுமையும் இரத்தத்தால் நனைந்திருப்பதைப் பார்த்த பிறகு மனங்குழம்பிவிட்ட எனக்கு இனிமேல் யுத்தஞ்செய்ய என்ன வல்லமை யிருக்கின்றது? போரில் வல்லவனும் என் தம்பியாய் உத்தமவிலக்ஷணங்கள் பொருந்தியவனு யிருக்கும் இலக்ஷ்மணன் தனது பிராணனை யிழந்தானென்றால் அதன் பிறகு என்னுயிராலும் மற்றைச் சுகங்களாலும் எனக்கு என்ன பிரயோஜனம்? இனிமேல் எனக்கு யுத்தத்தால் ஒருவித பிரயோஜனமுமில்லை; எனது உயிராலுமில்லை; சீதையாலுமில்லை. எனக்கு ராச்சியத்தினால் ஆகவேண்டுவது என்ன? எனது தம்பி மடிந்து விழுந்தான்; இனி போர்செய்வதிலும் யாதொருகாரியமுமில்லை. வேண்டுமானால் தேசந்தோறும் ஒவ்வொரு மனைவியை விவாகஞ்செய்து கொள்ளலாம்; வேண்டுமானால் தேசந்தோறும் பந்துக்களை சம்பாதிக்கலாம்; ஆனால் எந்தத் தேசத்தில் எனது உடன்பிறந்த தம்பி எனக்குக் கிடைப்பானோ அப்படிப்பட்ட தேசம் மாத்திரம் எனக்குப் புலப்படவில்லை" என்றார்.

இவ்வாறு இராமர் புலம்புகையில் சுஷேணன் அவருக்குப் பின் வருமாறு தேறுதல் சொல்லலானான் :—"புஜ பராக்கிரம முள்ளவரே? எல்லாவகைச் சம்பத்துக்களும் நிரம்பிய இலக்ஷ்மணர் இறந்துபோகவில்லை ; அவரது முகம் நிறம் மாறியதாகவேனும் காந்தி குறைவுபட்டதாக வேனும் ஆகவில்லை ; ஒரு வகை விகாரத்தையும் அடைய வில்லை." பிறகு அவ்வானரன் அநுமானை நோக்கி பின் வருமாறு வெகு விரைவுபடுத்திச் சொல்லலானான் :—"அடக்கமுடையோனே! இவ்விடம்விட்டுச் சடுதியிற் கிளம்பி ஜாம்பவன் முந்தி சொல்லியிருக்கும் ஓஷதி பர்வதமென்னும் மூலிகைமலைக்குப் போய் விசல்யகரணீ யென்னும் பச்சிலையையும் ஸாவர்ண்யகரணீ என்னும்மூலிகையையும், ஸஞ்சீவி யென்ற ஓஷதியையும், ஸந்தாநகரணீ யென்ற பச்சிலையையும் மகாத்துமாவாகிய இலக்ஷ்மணரைப் பிழைப்பிக்கும் பொருட்டு இம்மூலிகைகளை சடிதியில் இவ்விடம் கொண்டுவர வேண்டும்" என்றான்.

இப்படி அவன் சொன்னதும் சீமானான அநுமான் அச்சிகரத்தினிடம் சடிதியில்வந்து அச்சிகரத்தை மூன்று தரம் அசைத்துத் தனது கையிலேந்தி ஆகாய மார்க்கமாக திரும்பினான். வெகு வேகமாய் வந்துசேர்ந்து அம்மலை சிகரத்தை சேனையின் நடுவிற் கீழே வைத்துக் கொஞ்சம் இளைப்பாறிக்கொண்டு பிறகு அநுமான் சுஷேணனைப் பார்த்து பின் வருமாறு சொல்லலானான் :—"வானர வீரனே! நீ குறித்த பச்சிலைகள் எனக்குத் தெரியவில்லை ; ஆகையால் அம்மலைச் சிகரத்தையே இங்குக் கொண்டுவந்தேன்" என்றான். இப்படிச் சொன்ன அநுமானை சுஷேணன் புகழ்ந்து தனக்கு வேண்டிய மூலிகையைப் பிடுங்கியெடுத்துக்கொண்டான். பிறகு சுஷேணன் அந்தப் பச்சிலையை நன்றாகக் கசக்கி மஹா தேஜஸ்வியாகிய இலக்ஷ்மணருடைய மூக்கினால் மோக்கும்படி செய்தான்.

சக்தியாற் பிளப்புண்டு அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்த பகைவீரரை யழிக்க வல்லவரான இலக்ஷ்மணர் அதை மோந்த மாத்திரத்தில் வேதனைகள் அவ்வளவும் நீங்கி விரணமாறி பூமியிலிருந்து எழுந்தார். அவ்விதமாக அவர் பூமியிலிருந்து எழுந்ததை எல்லா வானர வீரர்களும் பார்த்துக் களித்து 'நன்று, நன்று' என்று சொல்லி சுஷேணனைக் கொண்டாடினார்கள்.

அப்போது பகைவரையழிக்கவல்ல இராமர் இலக்ஷ்மணரைப் பார்த்து "வருக, வருக" என்று சொல்லி கண்களில் நீர் ததும்ப அவரை அன்பினால் இறுகத் தழுவிக் கொண்டார். அவ்வாறு அவரைக்கட்டிக்கொண்ட பிறகு இராகவர் அவரை நோக்கி "வீரனே! என்னுடைய பாக்கியத்தால் மாண்ட நீ மீண்டும் பிழைத்திருக்கக் காண்கின்றேன். நீ மட்டும் மாண்டிருந்தால் என்னுயிரால் எனக்கு என்ன இலாபம்? சீதையால்தான் என்ன லாபம்? எனது வெற்றியால்தான் என்ன பயன்?" என்றார். இவ்வாறு இராமர் சொன்னபொழுது வீரத் தன்மையைவிட்டு நழுவிக் கோழை மனத்துடன் இராமர் பேசியதற்காக இலக்ஷ்மணர் வெகு விசனமடைந்தவராய் மறுமொழி சொல்லலானார் :—"உண்மையையும் வல்லமையையும் உடையவரே! * அவ்வாறு தாங்கள் வாக்குக் கொடுத்து இவ்வாறு பேசுவது நியாயமா? மாசற்ற வீரரே! சாதுக்கள் வீணாக வாக்குதத்தம் செய்யார்கள். பிரதிக்ஞையை நிறைவேற்றுவதல்லவோ பெருந்தன்மைக்கு உரிய அடையாளம். குற்றமற்றவரே! எனக்காகத் தாங்கள் எல்லாவற்றிலும் ஆசையை யொழித்து விடுவது நீதியல்ல; இன்றைக்குத் தாங்கள் இராவணனை வதைத்து செய்த பிரதிக்ஞையை நிறைவேற்றுக."

---

* "இராவணனைக் கொன்று விபீஷணருக்கு பட்டாபிஷேகம் செய்கின்றேன்" என்பது, இராமர் செய்த பிரதிக்ஞை.

பகைவர்களின் செருக்கை யடக்கும் வீரரான இராமர் இலக்ஷ்மணரது சொல்லைக் கேட்டு வில்லை வளைத்து நாணேற்றி பயங்கரமான அம்புகளைத்தொடுத்து சேனாமுகத்தில் இராவணன்மேல் விடுத்தார். பூமியில் நின்றுகொண்டிருக்கும் இராமருக்கும் இரதத்திலிருந்து கொண்டு போர் புரிகின்ற இராவணனுக்கும் இப்போது நேர்ந்துள்ள போர் சரியானதன்றென்று தேவ கந்தர்வ கின்னரர்கள் சொல்லலானார்கள். அப்பொழுது தேவேந்திரன்தனது சாரதியான மாதலியைப் பார்த்துக் கட்டளை யிடவே தங்கத்தினால் அழகாகச் செய்யப்பட்டதும், நூறு சிறுமணிகளா லலங்கரிக்கப்பட்டதும், இளஞ் சூரியனுக்கு ஒப்பானதும், வைடூரிய இரத்தினங்களாற் செய்யப்புட்ட பாருள்ளதும், பொன்னாபரணங்களா லலங்கரிக்கப் பட்டுச் சூரியனுக்கொப்பாகி வெண்சரமரங்களுடன் கூடிய பச்சை நிறமுள்ள நற்குதிரைகள் பூட்டப்பட்டதும், பொன் மூங்கிலின்மேற் பறக்கின்ற கொடிச்சீலையை யுடைய்தும், செல்வச் சிறப்பைத் தெரிவிக்கின்றதுமான தேவேந்திரனது ரதத்திலே ஏறிவந்து மாதலி ஆகாயத்தி லிருந்து இறங்கி இராமர் முன்பாக அதை நிறுத்தி அஞ்சலி பண்ணிக்கொண்டு தனது கையிற் சாட்டையைப் பிடித்தவண்ணமே இராமரைப் பார்த்து, "காகுத்தரே! இப்பொழுது தாங்கள் வெற்றியடையும் பொருட்டு தேவேந்திரர் இந்த ரதத்தைத் தங்களுக்கு அனுப்பியிருக் கிறார். சீமானே! பெருவலிபடைத்தவரே! சத்துருக் களின் செருக்கைப் போக்கவந்தவரே! இந்திரபகவான் தம்முடைய இப்பெருவில்லையும் அக்கினிக்கு ஒப்பான இக் கவசத்தையும் சூரியனுக்கு ஒப்பான இந்த அம்புகளையும் வெகு கூரான முனையுடன் கூடிப் பிரகாசிக்கும் இந்தச் சக்தியையும் தங்களுக்காக அனுப்பியிருக்கின்றார். வீரரே! இந்த இரதத்தின்மேலேறி நான் சாரத்தியம் பண்ண தேவேந்திரர் தானவர்களை யழித்ததுபோல் தாங்கள் இராவணனை வதையுங்கள்" என்று கூறினான்.

இப்படி மாதலி சொன்னதும் இராமர் அந்த இரத்தை வலம் வந்து நமஸ்காரம் செய்து உலகத்தைத் தமது காந்தியால் விளக்கிக்கொண்டு அவ்விரதத்திலேறினர். அப்போது மஹா வீரராகிய இராமருக்கும் அரக்கனை இராவணனுக்கும் பார்த்தவர்கள் மயிர்க்கூச்செறியும்படி அற்புதமாய் நெருக்கமான பெரும்போர்தொடங்கிற்று. இராவணன் எளிதாகத் தொழில் செய்ய வல்ல இராமரை தனது ஆயிரக் கணக்கான பாணக் கூட்டங்களாற் புடைத்துவிட்டு தனது பாணக்கூட்டங்களால் மாதலியை இம்சிக்கலானன். ஒரு பாணத்தை இராவணன் தங்கக் கொடியின்மேல் விடுத்து வெட்டி அதை இரதமத்தியில் வீழ்த்தினன். ஆகாயத்திலிருந்து மேகமானது மழையைப் பொழிந்து தடாகத்தை நிரப்புவது போல, இராவணன் சரமாரியால் இராமரை நிரப்பினன்.

அதன்மேல் வெகு கோபங்கொண்ட இராமர் இராவணன்மீது பாணங்களைத் தூவினர். சத்துருவின் நாசத்தை மனத்தாற் கருதிய இராமருக்கு வீரியமும் பலமும் உற்சாகமும் அஸ்திர பலமும் அப்போது முன்னிலும் இருமடங்காயின. தம்மிடம் அவ்விதமான நற்குறிகளையறிந்து இராவணனை மீண்டும் இம்சிக்கலானர்; வானரவீரர்கள் ஒரு பக்கம் தன்னைப் பாறைகளாற் புடைக்க, இராமர் ஒரு பக்கம் தன்மீது சரமாரி பொழிய, இராவணன் மனங்குழம்பி ஒன்றுந் தோன்ருது திகைத்து நின்றிட்டான். அதன்பிறகு போரைப் பார்க்க தேவர்களுடன் சேர்ந்துவந்த அகஸ்திய பகவான் இராமரையடைந்து சொல்லலானர் :—"இராமராம! மகாபாகுவே! குழந்தாய்! எதனல் எல்லாப் பகைவர்களையும் போரில் வெல்வாயோ அநாதியான இரகசியத்தைக் கேட்பாயாக. ஆதித்யஹ்ருதயமென்ற பெயரையுடையதும் புண்ணியமானதும் சத்துருக்களெல்லாரையும் வெல்லவல்லதும் வெற்றியையே கொடுப்பதும் குறையாத பயனை யளிப்

பதும் பரமபாவனமானதும் மங்களங்களுக்கும் மங்கள மானதும் எல்லாப்பாவங்களையும் நாசம் பண்ணுவதும் கவலையையும் நோயையும் ஆற்றுவதும் வாழ்நாட்களைப் பெருக்குவதும் ஜபிக்கக்கூடிய மந்திரங்களுக்குள் உத்தமமுமான இது ஜபிக்கக்கடவது தேவாசுரர்களால் நமஸ்காரஞ் செய்யப்படுகின்றவரும், ஆயிரங்கிரணங்களுடன் நன்ருக உதயமாகி யிருக்கின்றவரும், தமது ஒளியால் மற்றையொளிகளை மறைப்பவரும், ஒளியைக் கொடுக்கின்றவரும், உலகங்களுக்கெல்லாம் ஈசுவரருமான சூரிய பகவானை பூஜைசெய்க. தேஜஸ்வியாகிய இவர் எல்லாத் தேவதைகளுக்கும் ஆத்துமாவாக விளங்குகின்ருரன்ருே! இவர் தேவர்கூட்டங்களின் வடிவாயு மிருக்கின்ற ஜனங்கள் எல்லாரையும் தமது கிரணங்களிளுல் ரக்ஷிக்கின்ருர். இவர்தாம் பிரமா; விஷ்ணு; சிவபெருமான்; ஸ்கந்தன்; நவப்ரஜாபதிகள்; மஹேந்திரன்; குபேரன்; காலன்; யமன்; சோமன்; வருணன்; பிதிருக்கள்; வசுக்கள்; சாத்தியர்கள்; அசுவினீதேவதைகள்; மருத்துக்கள்; மனுக்கள்; வாயு; அக்கினி; ஜந்துக்களின் உயிர்; பருவங்களை யுண்டாக்குகின்ற ப்ரபாகரர்."

"நீர்—ஆதித்யர் [அதிதியின் புதல்வர் அல்லது ஸமஸ்தபூமிக்குந் தலைவர்]; ஸவிதா [ஜகத்தை யுண்டாக்குபவர்]; ஸூர்யர் [ஜனங்களைக் தொழில் செய்யுமாறு ஏவுபவர்]; ககர் [உலகத்தின் நன்மைக்காக ஆகாயத்திற் சஞ்சரிப்பவர்]; பூஷா [ஜகத்தை மழையாற் போஷிப்பவர்]; கபஸ்திமான் [கிரணங்களையுடையவர்]; ஸ்வர்ணஸத்ருஸர் [பொன்னின்நிறமானவர்]; பாநு [பிரகாசிப்பவர்]; ஹிரண்யரேதஸ் [பொன்மயமான பிரமாண்டத்தைச் செய்தவர்]; திவாகரர் [பகலைச் செய்பவர்]; ஹரிதஸ்வர் [பச்சைநிறக் குதிரைகளையுடையவர்]; ஸஹஸ்ரார்ச்சிஸ் [ஆயிரங்கிரணங்களையுடையவர்]; ஸப்தஸப்தி [ஸப்தமென்ற குதிரைகளையுடையவர்]

மரீசிமான் [பிரகாசத்தை யுடையவர்.] திமிரோந்மதநர்; [இருளைப்பிளக்குங் கிரணங்களமைந்தவர்]; சம்பு [சுகத்தையுண்டாக்குபவர்]; த்வஷ்டா [ஸர்வஸம்ஹார கர்த்தா]; மார்த்தாண்டர் [ஸர்வஸம்ஹாரத்தில் அழிந்தவற்றைப் படைக்குமாறு மீண்டுந் தோன்றியவர்]; அம்சுமான் [பிரகாசிப்பவர்]; ஹிரண்யகர்ப்பர் [இந்தப் பிரமாண்டத்தின் நடுவில் விளங்குபவர்]; சிசிரர் [தம்மை வணங்குபவர்களி னுள்ளத்தைக் குளிரச் செய்பவர்]; தபநர் [வெயிலால் விளங்குவர்]; பாஸ்கரர் [ஒளியையுண்டாக்குபவர்]; ரவி [எல்லாராலும் ஸ்தோத்ரம் பண்ணப்பட்டவர்]; அக்நிகர்ப்பர் [பகலில் அக்கினியைத் தம்மிடம் வைத்துக்கொண்டிருப்பவர்]; அதிதிபுத்ரர் [அதிதியின் புதல்வர்]: சங்கர் [சாயங்காலத்தில் சுயமாகவே தணிவையடைபவர்]; சிசிரநாசனர் [பனியை நாசம்பண்ணுபவர்]; வ்யோமநாதர் [ஆகாயத்துக்குமன்னவர்]; தமோபேதீ [ராஹுவைப்பிளப்பவர்]; ருக்யஜுஸ் ஸாமபாரகர் [ருக் யஜுஸ் ஸாமம் என்னும்வேதங்களின் கரையைக் கண்டவர்]; கனவ்ருஷ்டி [பெருமழையையுண்டாக்குபவர்]; அபாம்மித்ரர் [தண்ணீர்க்கு நண்பர்]; விந்த்யவீதி [விந்தியமலையைத் தக்ஷிணாயநத்திற் செல்லும்வழியாகக்கொள்பவர்]; ப்லவங்கமர் [புணை போல் ஆகாயமாகிய சமுத்திரத்திற்செல்பவர்]: ஆதபீ [வெயிலையுடையவர்]; மண்டலீ [வட்டவடிவமானவர்]; ம்ருத்யு [அடைந்தவரது பகைவர்களை நாசம்பண்ணுபவர்]; பிங்களர் [உதய காலத்திற் பொன்னிறமானவர்]; ஸர்வதாபநர் [மத்தியான்னத்தில் எல்லாரையும் எரிக்கின்றவர்]; கவி [எல்லாச் சாஸ்திரங்களையும் நடைபெறச் செய்பவர்]; விஸ்வர் [இவ்வுலகத்தை நிர்வஹிக்கின்றவர்]; மஹாதேஜஸ் [பெருங்காந்தி பொருந்தியவர்]; ரக்தர் [எல்லாரிடமும் அன்பு பாராட்டுபவர்]; ஸர்வபவோத்பவர் [எல்லாரது ஸம்ஸாரத்துக்கும் உத்

பத்திகாரணர்]; நக்ஷத்ர க்ரஹதாராதிபர் [நட்சத்திரங்கள் கிரகங்கள் தாரைகள் இவைகளுக்குத் தலைவர்]; விஸ்வபாவனர் [எல்லாவற்றையும் நிலைநிறுத்துபவர்]; தேஜஸாம் தேஜஸ்வீ [ஒளிபொருந்திய அக்கினி முதலியவற்றிற்குள் மிக்க ஒளிபொருந்தியவர்]. த்வாதஸாத்மாவே! [இந்திரன் - தாதா - பகன் - பூஷா - மித்திரன் - வருணன் - அர்யமன் - அர்ச்சிஸ் - விவஸ்வான் - த்வஷ்டா - ஸவிதா -விஷ்ணு என்ற பன்னிரண்டு மூர்த்திகளாக இருப்பவர்!] உமக்கு நம்ஸ்காரம்; கிழக்கு மலையை (உதிக்குமிடமாக) உடையவர்க்கு நமஸ்காரம். மேற்குமலையை (அஸ்தமிக்குமிடமாக) உடையவர்க்கு நமஸ்காரம். ஜ்யோதிஸ்ஸுக்களின் கூட்டங்களுக்கு மன்னவரான பகற்காலத்தின் அதிபதிக்கு நமஸ்காரம். ஜயரும் [உபாஸகர்க்கு வெற்றிகொடுப்பவரும்] ஜயபத்ரருமான வெற்றி க்ஷேமம் அளிப்பவருமான ஹர்யஸ்வர்க்கு [பச்சைவருணமுள்ள குதிரைகளை யுடையவர்க்கு] நமோநம: ஸஹஸ்ராம்ஸோ [ஆயிரங் கிரணங்களையுடைவரே]! நமோநம:. ஆதித்யர்க்கு நமோநம:. உக்ரரான [உபாஸியாதவர்களிடம் கொடுமையைக்காட்டுகின்ற] வீரர்க்கு [ஜனங்களைப் பல தொழிலில் மூட்டுகின்றவர்க்கு] நமஸ்காரம் ஸாரங்கர்க்கு [வெகு வேகமாக ஆகாயத்திற் சஞ்சரிப்பவர்க்கு] நமோநம:. பத்மப்ரபோதருக்கு [தாமரை மலர்களை எழுப்புகின்றவர்க்கு] நமஸ்காரம்; மார்த்தாண்டர்க்கு நமோநம:. ப்ரஹ்மேஸாநாச்யுதேஸரும் [பிரமாவையும் சிவபெருமானையும் எல்லாவாபத்துக்களிலும் பாலனம் பண்ணுகின்றவரும்], ஸூர்யருமான ஆதித்யவர்ச்சஸ்ஸும் [ஆதித்யரூபமான காந்தியையுடையவரும்], பாஸ்வாநும் [காந்தியையுடையவரும்], ஸர்வபக்ஷருமான [எல்லாவற்றையும் அழிப்பவருமான] ரௌத்ரவபுஸ்ஸுக்கு [எல்லாவற்றையும் அழிக்கையில்

கடுமையான வடிவத்தை யுடையவர்க்கு], நமஸ்காரம். தமோக்நரும் [இருளைப்போக்குகின்றவரும்], ஹிமக்நரும் [பனியைப்போக்குகின்றவரும்], சத்ருக்நரும் [தம்மை யடைந்தவரது பகைவரை யழிப்பவரும்], அமிதாத்மாவும் [அளவிடக்கூடாத ஸ்வரூபத்தையுடையவரும்], க்ருதக் நக்நரும் [நன்றியற்றவர்களை நாசஞ்செய்கின்றவரும்], தேவருமான [விளங்குபவருமான] ஜ்யோதிஷாம்பதிக்கு நமஸ்காரம். தப்தசாமீகராபரும் [உருக்கிவிட்ட தங்கத் தின் நிறமாக விளங்குபவரும்], வஹ்நியும் [அக்நிரூப மாக நின்று ஹவிஸை வஹிப்பவரும்], விஸ்வகர்மாவும் [எல்லா ஜகத்துக்கும் கர்த்தாவும்], தமோபிநிக்நரும் [அஜ்ஞாநவிருளைப் பிளப்பவரும்], ருசியுமான [ஒளி வடிவமானவருமான] லோகஸாக்ஷிக்கு [அந்தர்யாமியா யிருத்தலால் ஜநங்களின் புண்ய பாவங்களுக்குச் சாக்ஷி யானவர்க்கு] நமஸ்காரம்.''

"இக்கடவுள் பிரளய காலத்தில் ஜகத்தை யழிக்கின் றார்; அதையே மறுபடியும் உண்டாக்குகின்றார்; இவர் ரக்ஷகர். இவர்தாம் எல்லாவற்றையும் வற்ற அடிக்கின் றார்; எரித்துவிடுகின்றார்; தமதுகிரணங்களால் மழையைப் பொழிகின்றார். இவர்தாம் எல்லாப் பிராணிகளும் உறங் கும்பொழுது அந்தர்யாமியாகவிருந்து விழித்திருக்கின் றார். இவர்தாம் அக்கினிஹோத்ரம்; அக்கினிஹோத்ரஞ் செய்கின்றவர்களுக்குப் பயனும் இவரே. வேதங்களும், யாகங்களும், யாகங்களின் பயனும், இன்னும் இவ்வுலகத் தில் நடக்கின்ற செயல்களும் எல்லாமும் இந்தச் சூரிய பகவானே.''

"இராகவரே! எவன் ஒருவன் தான் ஆபத்திலிருக்கும் பொழுதும் கஷ்டப்படும்பொழுதும் கடத்தற்கு அரிய வழி யில் அகப்பட்டுக்கொண்டு விழிக்கும்பொழுதும் மனத்திற் குப் பயமுண்டாகுஞ் சமயங்களிலும் இந்த ஆதித்ய ஹ்ருதய மந்தரத்தை ஓதுகிறானோ அவன் ஒருபொழுதும்

வருத்தமடைய மாட்டான். ஒரே மனத்துடனிருந்து கொண்டு தேவர்களுக்குந்தேவராகவிருக்கின்ற இந்த ஜகத்பதியான சூரியபகவானை பூசைசெய்க; ஆதித்யஹ்ருதயமென்ற இம்மந்திரத்தை மூன்றுதரம் ஜபஞ்செய்க; போரில் வெற்றிபெறுவீர். மகாபாகுவே! இந்தக்ஷணமே இராவணனை வெல்வாய்" என்று சொல்லிவிட்டு அகத்தியமகாமுனிவர் தாம் வந்தவழியே திரும்பிப்போனர்.

வெகு பராக்கிரமசாலியாகிய இராமர் இதைக்கேட்டு துயரமற்றவரானர். சூரிய தேவரைப் பார்த்து ஜபம் பண்ணி மூன்றுதரம் ஆசமனஞ் செய்துவிட்டு ஆனந்தமடைந்தவராய் வில்லைக் கையிலேந்தி மனோதைரியங் கொண்டு நின்றார். பிறகு இராமர் இராவணனைக் கண்ணுற்று வெகு உற்சாகங்கொண்ட உள்ளத்துடன் போரிடுமாறு வந்தார். அதிக சத்தத்தோடு ஓடிவந்த இராவணனுடைய இரதத்தை பார்த்தார். இராமர் பாலசந்திரன் வடிவமாக வளைத்துள்ள தமது கோதண்டத்தை டங்காரஞ் செய்து இந்திரபகவானுடைய சாரதியாகிய மாதலியைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லானர் :— "மாதலியே! சத்துருவினிரதம் வேகமாக வருகின்றது காண். நீ இப்பொழுது கொஞ்சமேனும் குழப்பமில்லாமல் சத்துருவினிரதத்தை எதிர்கொள்க. மிகுதியாகக் கிளம்பியிருக்கும் மேகத்தை வாயுவானது கலைப்பதுபோல நான் இராவணனை நாசம்பண்ண விரும்புகின்றேன். நீ எளிமையில்லாமலும் மனங்குழம்பாமலும் உள்ளத்தையும் பார்வையையும் ஒரே நிதானமாக வைத்துக் கொண்டும் கடிவாளத்தைச் சரிவரக் கைப்பற்றியும் வெகு வேகமாக இந்த இரதத்தை ஓட்டுக. தேவேந்திரனுடைய இரதத்தையோட்டுகின்ற உனக்கு நான் ஓட்டும் வகையை உபதேசிக்கவேண்டுவதில்லை. ஆயினும் போரிடுவதற்கு மனங்கொண்டிருக்கும் நான் உனக்கு இரதத்தைச் செலுத்தும் வகையை நினைவூட்டுகின்றேனேயல்லது

உனக்குக் கற்றுக்கொடுக்க இவ்வாறு சொல்லவில்லை" என்றார். தேவேந்திரனுக்குச் சாரத்தியம் பண்ணித் தேர்ச்சியடைந்த மாதலியும் இராமர் சொன்னதைக் கேட்டுச் சந்தோஷமடைந்து அவ்விரதத்தை யோட்டினான். அவன் இராவணனுடைய இரதத்தை தன்னிரதத்திற்கு இடப்பக்கத்திற் செல்லச் செய்து தனது இரதத்தின் சக்கரத்தினா லுண்டாகுந் தூளியால் இராவணனை மறைத்தான்.

அப்பொழுது வெகு கோபங்கொண்ட இராவணன் சிவந்து மலர்ந்த கண்களை யுடையவனாகி தனக்கெதிரில் வந்த இராமரை பாணங்களினாற் பிளக்கலானான். தம்மை இராவணன் எதிர்த்ததைக் கண்டு வெகு ரோஷங்கொண்ட இராமர் வெகு வேகத்துடன் கூடிய தேவேந்திரனது வில்லையும் சூரியனுடைய கிரணங்களுக்கு ஒப்பான காந்தி பொருந்திய பாணங்களையும் கைப்பற்றினார். அப்போது பரஸ்பரம் விரோதங்கொண்டு சண்டை செய்கின்ற கொழுத்த சிங்கங்களிரண்டிற்கு நேர்ந்த சண்டைபோல ஒருவரையொருவர் வதைக்கக் கருதிப் போர்புரிந்த அவ்விருவர்க்கும் பெரும்போர் உண்டாயிற்று. அச்சமயத்தில் மயிர்க்கூச்செறியும்படி பயங்கரமான அபசகுனங்கள் பல இராவணனுடைய நாசத்தையும் இராமரது வெற்றியையும் வெளிக்காட்டிக்கொண்டு தோன்றலாயின.

இராமருக்கும் இராவணனுக்கும் உலகங்களெல்லாவற்றுக்கும் அச்சத்தை யுண்டாக்குவதும் அவர்களது இரண்டு இரதங்களினாற் செய்யப்பட்டதுமான வெகு கொடிய பெரும்போர் தொடங்கிற்று. இராக்ஷச சேனை மலர்ந்த கண்களால் இராவணனைப் பார்த்துக்கொண்டும், வானர சேனை மலர்ந்த கண்களால் இராமரைப் பார்த்துக்கொண்டும் திகைத்தனவாய் சித்திரத்தில் எழுதிய சைனியம்போல அசைவற்று நின்றன. அப்பொழுது இராமரும் இராவணனும் அப்போர்க்களத்தில் தோன்

றிய பல நிமித்தங்களைப் பார்த்து நிலைநின்ற கோபத்துடனும் மிக்க உறுதியுடனும் யுத்தஞ்செய்யலானார்கள். இராமர் தாம் அவசியம் வெற்றியடைய வேண்டுமென்றும் இராவணன் தான் மடிந்துபோவது நிச்சயமென்றும் உறுதிகொண்டவர்களாய் தங்கள் முழுவல்லமையையும் யுத்தத்திற் காட்டலானார்கள்.

தசக்கிரீவன் உத்ஸாஹங்குறையாமல் ஆயிரக்கணக்கான பாணங்களை கலங்காத மனத்துடன் இடைவிடாது பொழியலானான்; அதனால் ஆகாயமும் இடைவெளியற்றதாயிற்று. பிறகு அவ்வண்ணம் போரில் ஊக்கத்துடன் முயல்கின்ற இராவணனைக்கண்டு இராமர் புன்னகை செய்பவர்போல ஆயாசமின்றிக் கூரான பாணங்களைத் தமது வில்லில் தொடுத்து நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் விடுக்கலானார். இராமரது குதிரைகளை இராவணனும் இராவணனது குதிரைகளை இராமரும் ஹிம்ஸிக்கலானார்கள். அவ்விருவரும் வெகுகோபத்துடன் இவ்வாறு ஆச்சரியமாகப் போர் புரிந்தனர்.

அப்போது இராமரும் இராவணனும் போர்புரிகின்றதைப் பார்த்து எல்லாப் பிராணிகளும் ஆச்சரியமடைந்த மனத்துடன் பார்த்தன. பாணங்களை விடுத்துக்கொண்டு போர்புரிந்த அவ்விரண்டு வீரர்களின் உத்தமமான ரதங்களும் அப்போர்க்களத்தில் மழை பொழிகின்ற மேகங்களிரண்டுபோலச் சஞ்சரித்தன. அப்போர்க்களத்தில் அவர்களிருவரும் அவ்வாறு பலவகையான போக்கைக் காட்டி மீண்டும் ஒருவருக்கொருவர் எதிர்முகமாக நிற்கலானார்கள். அப்பொழுது இராமர் கூர்மையாய் எரிகின்ற நான்கு பாணங்களை விடுத்து இராவணனுடைய நான்கு குதிரைகளைப் பின்னடையச் செய்தார். அவ்வரக்கன் இராமர் தன் குதிரைகளைப் பின்னே போகச்செய்ததைப் பார்த்து பெருஞ்சினமடைந்து கூரான பாணங்களை இராகவர்மேற் பொழியலானான். வெகு பலசாலியாகிய இரா

வணுல் அவ்வாறு அடிக்கப்பட்டபோதிலும் இராமர் கொஞ்சமேனும் வருத்தமடையவில்லை; அவைகளை ஒரு பொருட்டாகவும் எண்ணவில்லை.

அப்பொழுது தேவர்கள், கந்தர்வர்கள், சித்தர்கள், மஹரிஷிகள், கின்னரர்கள், மஹோரகர்கள் என்ற யாவரும் கவலை யடைந்தார்கள். "பசுக்களுக்கும் அந்தணர்களுக்கும் க்ஷேமம் உண்டாகுக; உலகங்கள் அழிவின்றி நிலைநிற்பனவாகுக. இப்போரில் அரக்க மன்னவனுகிய இராவணனை இராமர் வெல்லட்டும்" என்று ஜபித்துக் கொண்டு தேவர்கள் முனிவர்களின் கூட்டங்களுடன் பயங்கரமாய் மயிர்க்கூச்செறியும்படி இராமருக்கும் இராவணனுக்கும் நடந்த பெரும்போரைப் பார்த்தார்கள். கந்தர்வர்களின் கூட்டமும் அப்ஸரஸுக்களின் கூட்டமும் நிகரற்ற அப்போரைப் பார்த்து "ஆகாயம் ஆகாயத்தின் வடிவையே யுடையது; சமுத்திரம் சமுத்திரத்தையே உபமானமாகக்கொண்டது; அதுபோலவே இராமருக்கும் இராவணனுக்கும் நடக்கும் போரானது இராமருக்கும் இராவணனுக்கும் நடக்கும் போரையே போலும்" என்று பேசிக்கொண்டு இராம இராவணர்கள் செய்யும் போரைப் பார்க்கலானுர்கள்.

அப்பொழுது மகாபாகுவும் இரகுவம்சத்தின் கீர்த்தியை வளர்க்க வந்தவருமான இராமர் வெகு கோபங் கொண்டவராய் சர்ப்பத்துக்கு ஒப்பான கத்திமுனையம்பை கோதண்டத்தில் தொடுத்து அதைவிடுத்து வெகு அழகாய்க் குண்டலமணிந்து விளங்கி நின்ற இராவணனுடைய தலையை வெட்டினுர். அத்தலையும் இம்மூவுலகத்தாரும் பார்த்துக் கொண்டிருந்த பொழுதே பூமியில் விழுந்தது; ஆனுல் அத்தலைபோல மற்ருெரு தலை இராவணனுக்கு உடனே உண்டாயிற்று. ஆயுதப் பயிற்சியில் வெகு சுருசுருப்புள்ள இராமர் அத்தலையைச் சடிதியிற் கூரான பாணங்களை விடுத்து வெட்டியெறிந்தார்; அவ்

விரண்டாவது தலை வெட்டுண்ட மறுநிமிஷத்தில் மற்றொரு தலை தோன்றிற்று. அதையும் இடிக்கு ஒப்பான பாணத்தால் இராமர் வெட்டினார்; இவ்வாறு ஓரே மாதிரியாக விளங்கிய நூறு தலைகளை இராமர் அவ்வப்போது வெட்டித்தள்ளியும் இராவணனுடைய அந்திமகாலத்திற்கு ஓர் எல்லையும் ஏற்படவில்லை.

அப்பொழுது இராமர் "எவ்வம்புகளால் மாரீசன் மாய்ந்தானோ, எவ்வம்புகளால் கரன் தூஷணன் என்னும் இவர்கள் மடிந்தார்களோ, எவ்வம்புகளால் க்ரௌஞ்சாவனத்தில் விராதனும், தண்டகாரணியத்தில் கபந்தனும் உயிரிழந்தார்களோ, அவ்வாறு எனக்குப் பலமுறையாக போரில் நம்புதலை யுண்டாக்கிய அந்த அம்புகள் இப்பொழுது இராவணனைக் கொல்லாமல் ஒளிமழுங்கியிருப்பதற்குக் காரணம் என்ன?" என்று சிந்தையில் மூழ்கி போரில் ஜாக்கிரதையுள்ளவராக விருந்தார். அப்பொழுது மாதலியானவன் இராமருக்கு நினைப்பு மூட்டலானான்:—"வீரரே! தாங்கள் பிரமாஸ்திரத்தை யுணராதவர்போல இவ்விராவணன் ஓரஸ்திரத்தைப் பிரயோகிக்க அதற்குமாறான அஸ்திரத்தை மாத்திரம் ஏன் பிரயோகிக்கின்றீர்கள்? பிரபுவே! இவ்விராவணனை வதைக்கும்பொருட்டு பிரமாஸ்திரத்தைப் பிரயோகியுங்கள். தேவர்கள் கூறிய விநாசகாலம் இப்பொழுது இவனுக்கு வந்துவிட்டது" என்றான்.

முக்காலங்களையறிந்த அகஸ்திய மஹரிஷி தமக்கு முன்பு கொடுத்ததும் ஒப்பற்ற காந்தியுடன் விளங்குகின்ற பிரமாஸ்திரத்தை இராமர் மாதலியால் நினைப்பூட்டப் பெற்று கையிலெடுத்துக்கொண்டார்; அப்பெரும் பாணத்தை அபிமந்திரித்து, வேதத்திற்சொல்லிய முறைப்படி வில்லில் தொடுத்தார்; அந்த அஸ்திரத்தை இராவணன் மேல் விடுத்தார். வெகுவேகமாகப் பிரயோகிக்கப்பட்ட அந்த அம்பானது துராத்துமாவான இராவணனுடைய

சரீரத்தை யொழிப்பதாய் மார்பைப் பிளந்தது. மஹாபராக்கிரமசாலியான அவ்வரக்கர் தலைவன் உயிரை யிழந்தவனாய் வச்சிராயுதத்தாற் கொல்லப்பட்ட விருத்திராசுரன்போல இரதத்திலிருந்து பூமியில் விழுந்தான்.

அவன் அவ்விதமாகப் பூமியில் விழுந்ததை அங்கு மிருந்திருந்த அரக்கர்கள் பார்த்து தங்கள் யஜமானனை வதைக்கப்பட்டபடியால் மிகவும் பயந்தவர்களாய் நான்கு பக்கங்களிலுஞ் சிதறியோடினார்கள். வானரர்கள் இராவணன் வதைக்கப்பட்டதையும் இராமர் வெற்றியடைந்ததையும் பார்த்து அட்டகாசம் பண்ணிக்கொண்டும் மரங்களை யோங்கிக்கொண்டும் ஓடினவர்களை துரத்தினார்கள். ஆகாயத்தில் வெகு அழகாக தேவதுந்துபி முழங்கிற்று; திவ்யமான வாசனையுடன் மந்தமாருதம் இனிதாக வீசிற்று; பிறரால் அடையமுடியாததும் மனமகிழச் செய்வதுமான மலர்மாரியும் ஆகாயத்திலிருந்து பூமியில் இராமருடைய இரதத்தின்மேற் பொழிந்தது. இராமரது புகழுடன் கூடியதும் "வெகு நன்றாகச் செய்யப்பட்டது, வெகு நன்றாகச் செய்யப்பட்டது" என்று சொல்லி இராமரைக் கொண்டாடியதுமாகிய மகாத்துமாக்களான தேவர்களின் வாக்கு வானத்திற் கேட்டது. அப்பொழுது சுக்கிரீவன் விபீஷணர் முதலான நண்பர்கள் இலக்ஷ்மணருடன் கூட ஒன்றுசேர்ந்து இராமரது வெற்றிக்காகச் சந்தோஷமடைந்து அப்போர்க்களத்தில் இராமரிடம் வந்து நின்று அவரை முறைப்படி கொண்டாடலானார்கள்.

51. விபீஷணர் பட்டாபிஷேகம்

விபீஷணர் தமது தமையன் இராமரால் வெல்லப்பட்டு உயிர் மாண்டு போர்க்களத்திற் கிடப்பதைப் பார்த்து சோகம்கொண்டு "வீரரே! வல்லமையிற் புகழ் பெற்றவரே! வித்தைகளை நன்றாகக் கற்றறிந்தவரே! ராஜநீதிகளைச் செவ்வையாக ஆராய்ந்தறிந்தவரே! விலை

யுயர்ந்த சயனங்களிலே எப்பொழுதும் படுத்துறங்குபவரே! இப்பொழுது தாங்கள் கொல்லப்பட்டு செய்கையற்று தோள்வளைகளணிந்து நீண்டுள்ள கைகளைப் பரப்பிக்கொண்டு சூரியனைப்போன்ற ஒளியுடன் கிரீடம் சிறிது சாய வெறுந்தரையில் ஏன் படுத்திருக்கிறீர்கள்? வீரரே! நான் முன்னமே சொன்னது தங்கள் மனதிற் சிறிதும் ஏறவில்லையே" என்று நற்பொருள் நிரம்பிய பல சொற்களைச் சொல்லி துயரத்தில் மூழ்கி புலம்பினார்.

இராமர், அதனைப் பார்த்து பின்வருமாறு சொல்லலானார் :—"இவர் ஒரு தொழிலுஞ் செய்யாமற் போரில் மடியவில்லை; மிகக்கொடிய வல்லமையையும் மிகவுயர்ந்த பேருற்சாகத்தையுங் கொண்டு விளங்கி, போரில் இவர் சத்துருவுக்கு அஞ்சாமலே விழுந்தார். இவ்விதமாக க்ஷத்திரிய தருமத்திலுறுதியாக நின்று போர்புரிந்து மடிந்தவர்களைப்பற்றித் துக்கப்படலாகாது; ஏனெனில் இவர்கள் மறுமையிலும் தங்கள் நன்மையை நாடியே போர்க்களத்திற் பின்வாங்காமல் நின்று மடிவார்கள். எந்த தீரர் இந்திரனையும் இம்மூவுலகங்களையும் போரில் நடுநடுங்கச் செய்தாரோ அவர், தமது காலத்தின் முடிவால் மாண்டால் அவரைப்பற்றித் துயரப்படவேண்டிய சமயமன்று இது. அன்றியும் யுத்தத்தில் வெற்றியென்பது எப்போதும் ஒருவன்பங்காக முன்பு எப்போதும் உண்டாகவில்லை. வீரன் சத்துருக்களைக் கொல்வதுமுண்டு; அவனே ஒரு சமயத்திற் சத்துருக்களாற் கொல்லப்படுவதுமுண்டு. போரிற் கொல்லப்பட்ட சூரனைப்பற்றித் துயரமடையலாகாதென்பது உறுதியாக ஏற்பட்டுள்ள விஷயம். நீங்கள் இவ்வாறான உறுதியை அறிந்து மனத்தை தைரியப்படுத்திக் கொண்டு இனி செய்யவேண்டிய காரியங்களைப்பற்றி ஆலோசியுங்கள்" என்றார்.

மகாத்துமாவாகிய இராமரால் இராவணன் கொல்லப்பட்ட சமாசாரத்தைக் கேட்டதும் அந்தப்புரத்தி

லுள்ள அரக்கியர்கள், சோகத்தால் வாடியவர்களாய், பலபெயர்கள் பலவிதமாகத் தடுத்துங் கேளாமல் மண்ணில் விழுந்து புரண்டுக்கொண்டும், கூந்தலை விரித்துக் கொண்டும், கன்றுகளை இழந்த பசுக்கள் கதறுவது போலக் கதறிக்கொண்டும், அந்தப்புரத்தைவிட்டு வெளிப் புறப்பட்டார்கள். பூமியில் மாண்டு விழுந்து கிடந்த தங்கள் கணவனுன இராவணனைப்பார்த்து, அவ்வரக்கியர் வெகு துக்கப்பட்டுக்கொண்டு கண்ணீரை வடித்துக் கொண்டு அன்றிற்பேடுகள்போல வீரிட்டுக் கதறிப் புலம்பினுர்கள்.

அவ்வாறு அரக்கியர் புலம்பிக்கொண்டிருந்தபொழுது இராவணனுடைய பட்டமஹிஷியாகிய மண்டோதரி வெகு பரிதாபமான தோற்றத்துடன் அவ்விடம்வந்து ஒப்பற்ற வல்லமை படைத்த இராமராற் பத்துத்தலைகளைப் பெற்ற தனது கணவன் கொல்லப்பட்டது கண்டு வெகு துக்கத்துடன் புலம்பலானுள் :— "பெரும் பாக்கியம் பெற்றவரே! குபேரனுடைய சகோதரரே! தாங்கள் கோபங்கொண்டால் தங்களுக்கு முன்பாக நிற்கவும் தேவேந்திரனும் நடுங்குவானே; மஹரிஷிகளும் அந்தணர்களும் கந்தர்வர்களும் பயப்படுவார்களே! தங்களிடத்தில் அச்சத்தினுலே சாரணர்களும் திசையெல்லையை யடைந்தார்களே! அப்படிப்பட்ட தாங்கள் மனிதராகிய இராமராற் போரில் வெல்லப்பட்டீர்கள். ஜனஸ்தானத்திலே பல அரக்கர்களுடன் கூடியிருந்த தங்கள் தம்பியாகிய கரனை எப்பொழுது ஸ்ரீராமர் கொன்ருரோ அப்பொழுதே அவரை சாதாரண மனிதரல்லரென்று நான் எண்ணிவிட்டேன். எப்போது தேவர்களாலும் நுழைய முடியாத இலங்கைக்குள் அநுமான் தனது பலத்தின் மகிமையாற் புகுந்தானே அப்பொழுதே நமக்கு நாசம் விளைந்ததென்று நான் அஞ்சினேன். எப்பொழுது பெருங்கடலில் பயங்கரமான வானரர்கள் அணையைக் கட்டினுர்களோ அப்பொழுதே நான் இராமரை அமாநுஷராக எண்ணினேன்.

"மகாயோகியும் எப்பொழுதும் அழியாமலிருப்பவரும் ஆதியும் நடுவும் அந்தமும் அற்றவரும் இந்திரன் முதலான தேவதைகளினும் மேம்பட்ட பிரமன் முதலிய தேவர்களைப்பார்க்கிலும் சிறந்தவரும், வைகுண்ட வாசியும், சங்கம் சக்கரம் கதை இவைகளைத் தரித்தவரும், போஷகரும், அழகைத் தருகின்ற வத்ஸமென்னும் மச்சத்தை இடதிருமார்பி லுடையவரும், எப்போதும் விட்டுப்பிரியாத திருமகளை வலத்திருமார்பி லுடையவரும், ஒருபொழுதும் வெல்லக்கூடாதவரும், விகாரமற்றவரும், உறுதியாய் நிற்பவரும், எல்லாவுலகங்கட்குந் தலைவரும், சத்தியமான பராக்கிரமத்தையுடையவருமாகிய ஸாக்ஷாத் விஷ்ணுபரமாத்மா எல்லா உலகங்களுக்கும் நன்மை செய்யும்பொருட்டு மானுட உருவங்கொண்டு வானர வடிவங்கொண்ட தேவர்களாற் சூழப்பட்டு இவ்விடம் வந்து எல்லா வரக்கக்கூட்டங்களுடனும் தங்களைக் கொன்றார். இராகவருடன் நமக்குப் பகை வேண்டாமென்று நான் என்ன சொல்லியும் கேளாததன் பயன் இப்பொழுது வந்து விளைந்தது. அரக்கர் தலைவரே! தங்களுடைய சம்பத்தும் தேகமும் பந்துக்களும் நாசமடையுமாறு தாங்கள் திடீரென்று சீதாதேவியின்மேற் காதல் கொண்டீர்கள். அந்தப் பதிவிரதையின் தவத்தினால் தாங்கள் எரிந்து போனீர்கள். பாவகாரியங்களைச் செய்பவன் அவற்றின் பயனை அவசியம் அனுபவிப்பான். நன்மை செய்தவன் நன்மையை யடைவான். சீதாதேவி துயரம் நீங்கி இராமருடன் சுகமாக வாழப்போகின்றாள். சொற்ப புண்ணியமுள்ளவளான நானோ கொடிய சோகசாகரத்தில் விழுந்திட்டேன். வெகு நயமாக விபீஷணர் சொன்ன சொற்கள் ஒன்றும் தங்கள் காதில் ஏறவில்லை. மாரீசன் கும்பகர்ணன் என் தந்தை என்ற இவர்கள் சொன்ன நற்போதனைகளையும் வல்லமைச்செருக்கால் தாங்கள் கேட்கவில்லை. அவ்வாறு நற்புத்திகளைத் தள்ளியதன் பயன், இப்பொ

பூது விளைந்திட்டது. எல்லாராலும் எளிதில் நடக்க முடியாத பெருவழியில் தாங்கள் சென்றுவிட்டீர்கள்; துக்கப்பட்டுக் கொண்டிருக்கும் என்னையும் அவ்விடம் அழைத்துச் செல்லுங்கள். தாங்கள் இறந்துவிட்ட சோகத்தினால் ஆயிரந்துண்டுகளாக இன்னுஞ் சிதறுமல் என் இதயம் இருக்கின்றதே! நான் கெட்டேன்!!" என்று மண்டோதரி அழுதுகொண்டு தனது கண்களில் நீர் தாரை தாரையாய் வடிய தனது கணவன்மீது தான் கொண்டிருந்த மிக்க நட்பினால் மோகம் மேலிட்டவளாய் விழுந்தாள்.

இப்படியிருக்கையில் இராமர் விபீஷணரைப் பார்த்து "தங்களுடைய தமையனரது உத்திரகிரியைச் செய்யுங்கள்; இந்தப் பெண்டுகளையும் அப்புறம் செல்லுமாறு கட்டளையிடுங்கள்" என்று சொன்னார். விபீஷணர் இதைக்கேட்டு இராவணனுக்குத் தக்கபடி உத்திரகிரியை செய்யலானார்; சாஸ்திரப்பிரகாரம் நெருப்பிட்டார். தர்ப்பணஞ்செய்து சிதையை நோக்கித் தலையால் வணங்கி இராமரிடம்வந்து, வெகு வணக்கமாக அவர் பக்கத்தில் நின்றார்: இராமரும் தமது வானரசேனையுடனும் சுக்கிரீவர் இலக்ஷ்மணர் இவர்களுடனும் வெகு சந்தோஷமடைந்து தேவேந்திரன் தனது சத்துருவாகிய விருத்திராசுரனைக் கொன்ற பிறகு ஆனந்தமடைந்தது போல விளங்கினார். பிறகு இலக்ஷ்மணரை நோக்கி இராமர் "என் அன்பனே! நம்மிடம் அன்பும் அபிமானமும் வைத்து நமக்கு உபகாரஞ்செய்த விபீஷணரை இலங்கைக்கு மன்னவராகப் பட்டாபிஷேகஞ் செய்வாயாக." என்றார். இலக்ஷ்மணர் அவ்வாறே பரிசுத்தமான மனமுடைய விபீஷணருக்கு இலங்கா ராஜ்யத்திற் பட்டாபிஷேகம் பண்ணினார்.

அதன்பிறகு, தமக்கருகில் வந்து நின்ற அநுமானைப் பார்த்து இராமர் பின்வருமாறு சொல்லலானார்:-ஸௌம்

யனே! மகாராஜாவாகிய விபீஷணரிடம் விடைபெற்று, இலங்கைக்குட் சென்று, விபீஷணருடைய அநுமதியினுல் இராவணனது மாளிகையிற் புகுந்து, நமக்கு வெற்றியுண்டான சந்தோஷ சமாசாரத்தைத் தெரிவித்து சீதையை மகிழ்வித்து, நான் சுக்கிரீவருடனும் இலக்ஷ்மணனுடனும் க்ஷேமமாக விருப்பதையும், இராவணன் என்னுல் வதைக்கப்பட்டதையும் சொல்லுக. வானரவீரனே! அவள் தெரிவிக்கும் பதில் சமாசாரத்தை என்னிடம் வந்து சொல்லுக" என்ருர்.

அவ்வாறு கட்டளையானதும் அநுமான் இலங்கைமாநகரிற் புகுந்து இராவணனுடைய மாளிகையில் நுழைந்து, அவ்விடத்தில் தேகம் மாசுபடிந்து ஒரு மரத்தினடியில் சீதாதேவி அரக்கியராற் சூழப்பட்டு மகிழ்ச்சியின்றியிருப்பதைக் கண்டு, அவளை வணங்கி தாழ்ச்சியோடும் விநயத்தோடும் நிச்சலமாய் நின்ருன். அநுமான் தன்னை நாடிவந்ததைக் கண்டு அவனை இன்னுனென்று நினைந்து வெகு மகிழ்ச்சி யடைந்தவளாய் சீதாதேவி ஒன்றும் பேச நாவெழாமலிருந்தாள். முகம் சந்தோஷக் குறியுடன் விளங்குவதைப் பார்த்து அநுமான் இராமர் தன்னிடஞ் சொல்லியிருந்த சமாசாரங்களைச் சொல்லலானுன் :—"வைதேஹி! இராமர் இலக்ஷ்மணருடனும் சுக்கிரீவருடனும் விபீஷணருடனும் வானரசேனைகளுடனும் க்ஷேமமாகவிருக்கின்ருர். இரகுவின் வம்சம் சந்தோஷிக்குமாறு அவதரித்த இராமர் தமது காரியத்தை செய்துமுடித்து தங்களது க்ஷேமத்தை இவ்வாறு விசாரிக்கச் சொன்னுர்: "தேவி! நான் இச்சந்தோஷ சமாசாரத்தைத் தெரிவித்து, மிகுதியாக உன்னைக் களிக்கும்படி செய்கின்றேன். தருமத்தை யுணர்ந்தவளே! இதுவரையில் தெய்வாதீனமாக வாழ்வுபெற்றிருக்கின்ருய். எனது பராக்கிரமத்தினுல் நமக்கு வெற்றியுண்டாய்விட்டபடியால் இனி, நீ விசாரமில்லாமலும் துக்கப்படாமலு

மிருக்கலாம். இலங்கையின் சம்பத்து முழுமையும் விபீஷணரைச் சேர்ந்ததாகச் செய்யப்பட்டதன்றோ! ஆகையால் சீதே! உனது துயரத்தை ஆற்றிக்கொள்வாய்" என்றார்.

இவ்வாறு அநுமான் சொன்னதும், சீதை, அதிக சந்தோஷமடைந்தவளாய் எழுந்து ஆனந்தத்தால் தழுதழுத்த வாக்குடன் பின்வருமாறு சொல்லலுற்றாள் :— "எனது கணவர் வெற்றி யடைந்தாரென்ற சந்தோஷ சமாசாரத்தைக் கேள்வியுற்று மிக்கமகிழ்ச்சி யடைந்து கொஞ்சநேரம் ஒன்றுஞ்சொல்ல நாவெழாதவளாக இருந்தேன். வானரரே! இந்தச் சந்தோஷ சமாசாரத்தைச் சொன்ன உமக்கு என்ன சொல்லலாமென்று ஆலோசித்துப் பார்த்தும் சரியான மறுமொழியொன்றுந் தோன்றவில்லையே! ஸௌம்யரே! இந்த சமாசாரத்தைச் சொன்ன உமக்கு தக்க வெகுமானங் கொடுக்க இம்மூவுலகத்தில் ஒரு வஸ்துவையும் காணேனே! பொன்னும் வெள்ளியும் பலவகை இரத்தினங்களும் இம்மூவுலகவாட்சியும் இவைகளில் ஒன்றும் தாங்கள் சொன்ன சந்தோஷ சமாசாரத்துக்கு ஈடான வெகுமானமாக எடுத்துச் சொல்லவுந் தகா" என்றாள்.

இவ்விதமாகச் சீதாதேவி சொன்னதும் அநுமான் அஞ்சலிபண்ணியபடியே சீதாதேவியின் முன்னிலையில் நின்றுகொண்டு பின்வருமாறு சொல்லலானான் :— "கணவரின் இனிய நன்மையிலேயே கருத்தூன்றியிருக்கும் உத்தமியே! கணவருடைய வெற்றியையே விரும்பியிருக்கும் பதிவிரதையே! தங்களையன்றி வேறொரு பெண்பிள்ளை இவ்வண்ணமான சொல்களைச் சொல்லவல்லரோ? முன்பு தங்களைப் பலவாறு வெருட்டிய இவ் வரக்கிய ரெல்லாரையும் நான் இப்போது கொல்ல விரும்புகின்றேன். இவ்வரத்தை எனக்குத் தாருங்கள்" என்றான்.

அநுமான் சொன்னதைக் கேட்டு சீதாதேவி மறுமொழி சொல்லலானாள்:—"வானரர்களுக்குள் உத்தமரே! இவ்வரக்கியர் தமது அரசருக்குப் பரவசர்கள்; பிறனது ஏவலின்படி தொழில்புரிபவர்கள்; அவ்வாறு தொழில் செய்யாவிடில் தண்டனைக்கு உரியவர்கள், அடியவர்கள்: இவர்களிடம் யார்தான் கோபிப்பார்கள்? இராவணனது கட்டளையால் இவர்கள் என்னை வெருட்டினார்கள்; எனது பாக்கியத்தின் குறைவினாலும் முற்பவத்திற் செய்த தீவினையினாலும் நான் இவ்வாறெல்லாம் அநுபவித்தேன்; எல்லாரும் தத்தம் வினைகளின்பயனை அநுபவித்தே தீர வேண்டுமன்றோ"! என்றாள். அவ்வாறு சீதை சொன்னதும், அநுமான் சீதையை நோக்கி "தாங்கள் இராமருக்கு ஏற்ற மனைவியாவீர். தேவீ! எனக்குச் சொல்ல வேண்டிய சமாசாரத்தைச் சொல்லி யனுப்புங்கள். நான் இராமரிடம் போய்வருகின்றேன்" என்றான். இப்படி அநுமான் சொல்லவே சீதாதேவி "வானரோத்தமரே! எனது கணவரை நான் பார்க்க விரும்புகின்றேன்" என்றாள். இதைக்கேட்டு அநுமான் அவளைச் சந்தோஷப் படுத்த பின்வருமாறு மறுமொழி சொல்லலானான்: "இந்திராணி தேவேந்திரனைப் பார்ப்பதுபோல சத்துருக்களை வதைத்த இராமரை விசுவாசமுள்ள நண்பர்களுடன் இலக்ஷ்மணருடனும் தாங்கள் சடிதியிற் பார்ப்பீர்கள்" என்று சொல்லிவிட்டு அப்பிராட்டியினிடம் விடைபெற்று வெகுவேகமாக அநுமான் இராமரிடம் திரும்பிவந்தான்.

52. சீதாதேவியை ஸ்ரீராமரிடம் விபீஷணர் அழைத்து வருதல்

அதன் பிறகு அநுமான் இராமரை யடைந்து பின் வருமாறு பேசலானான் :—"யாவர் பொருட்டு இவ்வளவு காரியங்கள் செய்தோமோ வெற்றியும் நமக்குக் கைகூடிற்றே அந்தத் தேவியைத் தாங்கள் இப்பொழுது

பார்க்கவேண்டும். இதுவரையில் துக்கத்தால் ஏங்கி கண்ணுங்கண்ணீருமாகத் தவித்த அவ்வுத்தமி தங்களுடைய ஜயத்தைக் கேட்டு வெகு சந்தோஷமடைந்திருக்கின்றாள். முன்னமே அவ்வம்மணிக்கு என்னிடமுண்டாயிருக்கும் விசுவாசத்தினால் அவ்வுத்தமி என்னிடம் எனது கணவரைப்பார்க்க விரும்புகின்றேனென்றாள்" என்றான்.

இராமர் அனுமான் அவ்வாறு சொன்னதைக் கேட்டதும் கண்களில் நீர் ததும்பத் திடீரென்று சிறிது நாழிகை மனத்திற்குள்ளேயே சிந்தித்து பெருமூச்செறிந்து பூமியைப் பார்த்துக்கொண்டு, தமக்கருகிலே நின்ற விபீஷணரை நோக்கி பின் வருமாறு சொல்லலானார் :—"தலைக்கு ஸ்நானஞ் செய்வித்தும், திவ்வியமான கலவைச் சாந்தைப் பூசியும் திவ்வியமான ஆபரணங்களை யணிந்தும், சீதையை இவ்விடம் சீக்கிரமாக வருமாறு செய்க; விளம்பம் வேண்டாம்" என்றார். உடனே விபீஷணர் அந்தப்புரத்துக்குட் புகுந்து தம்மைச் சேர்ந்த மடந்தையரைக் கொண்டு சீதாதேவிக்குத் தெரியப்படுத்தினார். அதன் பிறகு ஸ்நானஞ் செய்து, மடந்தையரால் அலங்கரிக்கப் பெற்று, விலையுயர்ந்த ஆபரணங்களை யணிந்து பட்டாடை யுடுத்திருந்த சீதா தேவியை உயர்ந்த பட்டாடையால் மூடப்பட்டு விளங்குவதொரு பல்லக்கிலேற்றி பல அரக்கியர்கள் பாதுகாத்துவர அதை இராமரிடம் விபீஷணர் கொண்டுவரச் செய்தார்.

விபீஷணர் இராமரை நெருங்கி தமது வரவை யறிந்தும் ஆலோசனையிலிருந்த அவரை வணங்கி சீதாதேவியை அழைத்துவந்த சங்கதியை வெகு சந்தோஷமாகத் தெரிவித்தார். சீதாதேவி வந்ததைக் கேட்டதும் இராமரது மனத்திலே சந்தோஷமும் எளிமையும் கோபமும் ஒருங்கே உதித்தன. பிறகு, விபீஷணரைப் பார்த்து "விபீஷணரே! சடிதியில் அவளை இவ்விடம் அழைத்து வாருங்கள். என்னை எனது நண்பர்கள் நான்கு பக்கங்களிலுஞ் சூழ்ந்

திருக்க அவள் காணட்டும்" என்று கூறினார். இராமர் அவ்வாறு சொல்லவே விபீஷணர் சிறிது ஆலோசனை கொண்டவராய் வெகு வணக்கத்துடன் சீதாதேவியை இராமர் முன்பாகக் கொண்டுவந்து சேர்த்தார்.

வெட்கத்தால் தேகத்தினுட் பதுங்கியவளாய் சீதா தேவி விபீஷணரைத் தொடர்ந்து நடந்து கணவரருகில் வந்து சேர்ந்தாள். அந்தக் கூட்டத்தில் இராமரை யடைந்ததும் சீதாதேவி, "பெரியோர் மகரே!" என்று சொல்லி நாணத்தினால் ஆடையைக்கொண்டு தன் முகத்தை மறைத்தவண்ணம் அழலானாள். அன்றியும் அவ்வுத்தமி தனது கணவரையே தமக்குத் தெய்வமாகக் கொண்டவ ளாகையால் வியப்போடும் சந்தோஷத்தோடும் நட்போ டும் அவரது இனிய முகத்தைப் பார்க்கலானாள்.

வெகு வணக்கத்தோடு தமது பக்கத்திலிருந்த சீதையை பார்த்து இராமர் உள்ளத்திலிருந்து எழுந் தோங்கிய சினத்தாற் பின்வருமாறு சொல்லத் தொடங்கி னார்:—"மங்களகரமானவளே! போரில் எனது சத்துருவை வென்று உன்னை மீட்டேன்; எனது வல்லமையாற் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்து முடித்தேன். கோபத்தின் முடிவை நான் அடைந்தேன்; பகைவன் என்னை வலியவந்து ஹிம்ஸித்ததையும் நான் சாந்தப்படுத் தினேன்; எனக்கு நேரிட்ட அவமானத்தையும் என் சத்து ருவையும் நான் ஏககாலத்திற் போக்கி விட்டேன். இன்று என் வல்லமையை எல்லாரும் அறிந்தார்கள். இன்றுதான் என் முயற்சியும் பயன் பெற்றது. உன்னைத் தனியாகப் பிரித்துச் சபலசித்தனான இராவணன் தூக்கிப் போகும் படி நேர்ந்த தெய்வக்குற்றமானது மனிதனாகிய என்னால் ஒருவாறு அகற்றப்பட்டது. தனக்கு நேரிடும் அவமானத் தை எவனொருவன் தனது வல்லமையால் விலக்கிக் கொள் ளாமலிருக்கின்றானோ அவனுக்கு எந்தப் புருஷார்த்தந் தான் கைகூடும்? சமுத்திரத்தைத் தாண்டியதும் இலங்

கையை யழித்ததுமாகிய அநுமான் செய்த காரியங்கள் இன்றுதான் பயனுள்ளனவாயின. சுக்கிரீவன் தன் சேனையுடன் போரிற் காட்டிய பராக்கிரமமும் எனக்குச் சொல்லிய நல்ல ஆலோசனையும் இன்றுதான் பயன்பெற்றனவாயின. நற்குணமற்ற தமது தமையனாகிய இராவணனைத் தாமாகவே வெறுத்துவிட்டு என்னிடம் வந்து சேர்ந்து என்னிடத்து அன்பைக் காட்டிய விபீஷணர் பட்ட சிரமம் இன்றுதான் பயன்பெற்றது.

"சீதே! ஒரு மனிதன் சத்துருவினிடமிருந்து தனக்கு நேரிட்ட அவமானத்தை யகற்றுதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அவ்வளவு முயற்சிகளும் என்னாற் செய்யப்பட்டன. எனது நண்பர்களுடைய பலத்தால் நான் இப்போரில் நேர்ந்த பரிசிரமத்தைக் கடந்தது உனக்காகவன்றென்பதை நீ தெளிவாயாக. சத்துருவின் மனையில் வசித்ததனால் நல்லொழுக்கமுடைமையிற் சந்தேகப்படுமாறு உள்ள நீ என் கண்ணெதிரில் நிற்பதானது கண்ணோய் வந்தவனது கண்ணுக்குத் தீபம் எவ்வளவு நோயை யுண்டாக்குமோ அவ்வளவு வருத்தத்தை உண்டாக்குகின்றது. இராவணனாற் கவரப்பட்டும் அவனுடைய கொடுங் கண்களாற் பார்க்கப்பட்டும் சீலத்தை யிழந்த உன்னை பெரிய குலத்திற் பிறந்த நான் மறுபடியும் எவ்வாறு அங்கீகரிப்பேன்? உன்னிடத்தில் ஆசையில்லை. ஆகையால் நீ இவ்விடம் விட்டு உன்னிஷ்டமான இடத்துக்குப் போகலாம்" என்றார்.

53. சீதாதேவி அக்கினியிற் பிரவேசித்தல்

இராமர் இப்படி சொல்ல அவ்வுத்தமி மிகவும் நொந்தவளானாள். தான் அதுவரையில் ஒருபொழுதும் கேட்டிராத கொடுஞ் சொற்களைத் தனது கணவர் சொல்லக் கேட்டு சீதாதேவி அப்பெருஞ் சபையில் நாணத்தால் மிகவுந் தலை கவிழ்ந்தவளானாள்; வெட்கத்தினால் தனது

தேகத்திலேயே ஒடுங்கியவளாய் மிகவும் கண்ணீர் வடித்தாள். அதன் பிறகு தனது முகத்தைத் துடைத்துக்கொண்டு, தழுதழுத்த சொற்களாற் பின்வருமாறு தனது கணவரை நோக்கி மெல்லச் சொல்லலானாள் :—"வீரரே! அற்ப புருஷன் அற்ப குணமுள்ள ஒரு ஸ்திரீயைப் பார்த்துப் பேசுவது போல தாங்கள் என்னைப் பார்த்து கேட்பதற்கும் அச்சத்தையுண்டாக்குகின்ற தகாதகொடியவார்த்தைகளை ஏன் சொல்லுகின்றீர்கள்? மகாபாகுவே! தாங்கள் எண்ணுகின்றபடி நான் இல்லை; இதை எனது ஸுக்ருதத்தின்மேல் ஆணையிட்டுச் சொல்லுகின்றேன். தாங்கள் என்னை நம்புக. வேறொருவன் பரவசையான என்னைத் தொட்டானென்று என்மீது குற்றஞ்சொல்வீர்களேயானால் அக்குற்றம் நான் வேண்டுமென்று செய்ததல்ல; என் மனப்பூர்வமாக நடவாத அவ்விஷயத்தில் தெய்வத்தின்மீதுதான் குறைகூற வேண்டும். எனது வசத்திலுள்ள எனது உள்ளம் எப்பொழுதும் தங்களிடமே குடிகொண்டிருக்கின்றது; வல்லமையற்ற நான் எனது உடம்பின் விஷயத்தில் என்னசெய்யமுடியும்? மகாவீரரே! என்னைப் பார்த்துவரும்படி அநுமானை இலங்கைக்கு அனுப்பினீர்களே, என்னை அப்போதே ஏன் விட்டிருக்கக்கூடாது? அநுமான் என்னிடம் இவ்வாறு தங்களுடைய அபிப்பிராயமென்ற சமாசாரத்தை அப்பொழுதே சொல்லியிருந்தால் தாங்கள் என்னைக் கைவிட்ட பின்பு இப்பிழைப்பால் எனக்கு என்ன பயனென்று எண்ணி என் பிராணனை அப்பொழுதே அவன் முன்பே விட்டிருப்பேனே! எனது விசுவாசமும் எனது நடத்தையும் இவைகளெல்லாவற்றையும் மறந்தீர்களே!" என்று வருத்தத்தோடு சொல்லி அழுதுக்கொண்டே கண்களில் நீர் ததும்ப சீதாதேவி தனக்கு முன்பாக வெகு பரிதாபமான நிலையிற் சிந்தை கொண்டிருந்த இலக்ஷ்மணரைப் பார்த்துச் சொல்லலானாள் :—"இலக்ஷ்மணரே! எனக்காகச் சிதை

யொன்று அடுக்கி அதில் நெருப்பு மூட்டுங்கள்; எனக்கு இப்பொழுது உண்டாயிருக்கின்ற வருத்தத்திற்கு இது தான் ஏற்ற மருந்து. பொய்யான அபவாதத்தால் வருத்த மடைந்த நான் இனிப் பிழைத்திருக்கப் போறேன்" என்றாள்."

சீதை அவ்வாறு சொன்னதும், இலக்ஷ்மணர் இராம ரது முகத்தைப் பார்த்தார்; அவருடைய முகக்குறியால் அவரது கருத்தை யுணர்ந்து அவரது இஷ்டப்படியே சிதையை அடுக்கினார். சீதாதேவி தமது தலையை வணக் கிக்கொண்டு குனிந்திருந்த இராமரை மெதுவாக வலம் வந்து, கொழுந்துவிட்டெரிகின்ற அக்கினியைக் கிட்டி, தெய்வங்களுக்கும் அந்தணர்களுக்கும் நமஸ்காரம்பண்ணி, அஞ்சலியுடன் அவ்வக்கினியின் சமீபத்தில் நின்று கொண்டு பின்வருமாறு சொல்லலுற்றாள் :—" எனது உள் ளம் என்றென்றைக்கும் இராமரைவிட்டு வழுவாமலிருந்த தென்பது உண்மையானால், இவ்வுலகத்துக்கே சாட்சியாக இருக்கும் அக்கினிபகவான் என்னைப் பாதுகாக்கட்டும். இராகவர் நன்னடத்தையுடைய என்னைத் துஷ்டை யென்று நினைப்பதனால், இவ்வுலகத்துக்குச் சாட்சியாக விளங்கும் அக்கினிபகவான் என்னை இரட்சிக்கட்டும். செய்கையினாலும் மனத்தினாலும் வாக்கினாலும் நான் எல் லாத் தருமங்களையும் அறிந்த இராகவரைவிட்டு விலகா தவளென்பது உண்மையானால், இவ்வக்கினிபகவான் என் னைக் காப்பாற்றட்டும்." என்று சபதஞ்செய்து அக் கினியை வலம்வந்து கொஞ்சமேனும் மனக்குழப்ப மில்லா மல் அதனுட்குதித்தாள். அவள் தீயிற் குதித்தபொழுது அரக்கக் கூட்டங்களிலிருந்தும் வானரக்கூட்டங்களிலிருந் தும் 'ஹா! ஹா!' என்று பெருஞ்சத்தம் யாவரும் வியப் படையுமாறு உண்டாயிற்று. இராமர் அவ்வண்ணம் அரக் கர்களும் வானரர்களும் கதறிக்கொண்டு சொன்னதைக் கேட்டு மனக்குழப்பமடைந்தவராய் தமது கண்களில் நீர்

ததும்பி நிற்க கொஞ்சநேரம் தமக்குள்ளேயே 'ஏன் இவ்வளவு கொடிய செயலை செய்தோம்?' என்று ஆலோசிக்கலானார்.

அப்பொழுது, குபேரனும், யமதருமராஜனும், மகேந்திரனும், வருணனும், மகாதேவரும், பிரமதேவரும், சூரியனுக்கொப்பான விமானங்களில் ஏறிவந்து சேர்ந்தார்கள். தமது முன்பாக அஞ்சலியுடன் நின்ற இராமரைப்பார்த்து பின்வருமாறு சொல்லலானார்கள் :—"இவ்வுலகங்களெல்லாம் உண்டாக்கினவரே! ஞானிகளுக்குள் உத்தமரே! தேவதேவராகிய தாங்கள் சீதை அக்கினியிற் குதிக்கையில் உபேட்சை செய்யலாமா? ஒன்றுந் தெரியாத மனிதன் போல சீதாதேவியை இவ்வண்ணம் அவமதிக்கலாமா?" என்றார்கள்.

அவர்களெல்லாரும் அவ்விதமாகச் சொன்னதும் இராமர் அத்தேவதைகளை நோக்கி பின்வருமாறு சொல்லலானார் :—"என்னை நான் தசரத மகாராஜருடைய குமாரனாகிய இராமனென்னும் மானிடனென்றே கருதியிருக்கின்றேன். ஆனால் எனது ஸ்வரூபம் என்ன? யாருடன் சம்பந்தமுடையேன்? எதற்காகப் பிறந்தவன்? இவைகளைப்பற்றி விவரமாகத் தாங்கள் சொல்லவேண்டும்" என்றார்.

காகுத்ததர் அவ்விதமாகச் சொன்னதை, பிரமதேவர் கேட்டு பின்வருமாறு சொல்லலானார் :—"இராமரே! நான் உண்மை கூறுகின்றேன்; கேளுங்கள் : தாங்கள் தான் இலட்சுமியை யுடையவரும், சக்கரத்தைப் படைக்கலமாக வுடையவரும், எங்கும் பரந்துறைகின்றவருமான நாராயணன்; தாமாகவே தோன்றி இம் மூவுலகங்களையும் முதன் முதலிற் படைத்தீர்கள்; உலக முண்டாவதற்கு முன்னமே தோன்றி சித்தர்கள் சாத்தியர்கள் என்ற இவர்களுக்கெல்லாம் அடைக்கலமாக விருக்கின்றீர்

கள். யஜ்ஞமும் தாங்கள் ; அந்தயஜ்ஞத்தின் வஷட்கார மந்திரமும் தாங்கள் ; ஓங்கார மந்திரமும் தாங்கள் ; பெரிய தவசிகளால் வணங்கப்பட்டவர்கள் தாங்கள். தங்களுக்கு உற்பத்தியென்பதும் நாசமென்பதும் கிடையாது. தாங்கள் இன்னபடியுள்ளவரென்பதை எவர்கள்தாம் கண்டறிந்திருக்கின்றார்கள் ? இராமரே ! நான் பரப்பிரமமாகிய தங்களுடைய இருதயம் ; ஸரஸ்வதீ தேவி தங்களுடைய நாக்கு ; மற்றைத் தேவதைகள் தேகத்திலுண்டான உரோமங்கள். சீதாதேவி யென்பவள் இலக்ஷ்மி தாங்களோ விஷ்ணுவின் அவதாரம் ; கிருஷ்ணனென்பவரும் தாங்களே ; பிரமதேவரும் தாங்களே ; இராவணனை வதைக்கவேண்டு மென்றே தாங்கள் மனிதரூபங்கொண்டு அவதரித்தீர்கள். இராவண வதமாகிய எங்கள் காரியத்தை தாங்கள் செய்துமுடித்தீர்கள். இராமரே ! தங்களால் இராவணன் கொல்லப்பட்டான். இனித் தாங்கள் சந்தோஷமாக தேவலோகத்துக்குத் திரும்பலாம். தங்களிடம் பக்திபண்ணும் மனிதர்களுடைய மனோரதங்களும் ஒருபொழுதும் வீண்போகமாட்டா. இம்மையிலும் மறுமையிலும் தங்களுக்கு வேண்டிய எல்லா வகைச் சுகங்களையும் அடைகின்றார்கள் ” என்றார்.

அவ்வாறு பிரமதேவர் சொன்ன இனிய சொல்லைக் கேட்டு அக்கினிபகவான் சிதையை உதறிவிட்டு புருஷரூபத்துடன் சீதையை எடுத்துக்கொண்டு வெளிக்கிளம்பினார். இளஞ் சூரியன்போன்ற நிறமுள்ளவளும், பத்தரைமாற்றுத் தங்கத்தாற்செய்த ஆபரணங்களை யணிந்தவளும், நெறிந்த கருங்குழலுடன் விளங்குபவளும், மலர்களும் அணிகளும் உருக்குலையாதிருக்கப் பெற்றவளும், தீக்குதித்த சமயத்தில் தானிருந்த உருவத்துடன் அப்படியே சோபிக்கின்றவளும், சிறுமியுமான சீதாதேவியை, அக்கினிபகவான், மடியில் வைத்துக்கொண்டு வெளியில் வந்து இராமரிடங் கொடுத்தார்.

பிறகு அக்கடவுள் பின்வருமாறு சொல்லலானுர் :— "இராமரே! இவள்தான் சீதாதேவி; இவளிடம் ஒரு வகைப் பாவமுமில்லை. இவ்வுத்தமி வாக்கிலைாவது மனத்திலைாவது ஸங்கல்பத்திலைாவது பார்வையிலைாவது தங்களையன்றி வேருெருவனைக் கருதியவளல்லள்; பரிசுத்தமான மனமுள்ளவளும் பாபமற்றவளுமான இத்தேவியை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்ருர். அதைக்கேட்டு இராமர் சந்தோஷமடைந்து, அக்கினிபகவானை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானுர் :—"சீதையினிடம் பாவமில்லையென்பது இம்மூவுலகங்களிலும் திண்ணம். ஆனுலும் அவள் இராவணனுடைய அந்தப் புரத்தில் வெகு நாள் வசித்திருந்தாள். நான் சீதையை இவ்விதமாகப் பரிசோதியாமல் ஒத்துக்கொள்வேனேயானுல் அப்போது பெரியவர்களெல்லாரும் 'தசரதகுமாரனை ராமன் காமப்ரவசனை மூடன்போலும்' என்று என்னைப்பற்றி பழித்துச் சொல்வார்கள். 'சீதை என்னையன்றி வேருெருவனைத் தனது மனத்தாலும் கருதாதவள்' என்றும், 'என்னிடம் மிக்க அன்புள்ளவள்' என்றும், 'என்னுடைய உள்ளத்தைத் தொடர்ந்துநடப்பவள்' என்றும் எனக்கும் நன்ருகத்தெரியும்; ஆனல் நான் இம்மூவுலகங்களும் நம்பும்பொருட்டு சீதை அக்கினி பிரவேசம் செய்யும்போது உபேட்சித்திருந்தேன். நண்பர்களும் உலகத்திற் கௌரவம் பெற்றவர்களுமான நீங்களெல்லீரும் எனது நன்மையை நாடி இவ்வண்ணஞ் சொல்லும்போது நான் அதைத் தட்டுதலும் தகாதென்ருேம்" என்ருர்.

இராமர், அவ்வளவு அழகாகச் சொன்ன சொல்லைக் கேட்டு மகேசுவரர் அதனினும் அழகாக பின்வருமாறு சொல்லலுற்ருர் :—"இராமரே! இவ்வுலகத்தை முற்றிலும் மூடியிருந்த இராவண பயமென்னும் பேரிருளை தாங்கள் தெய்வாதீனமாகப் போரில் அகற்றினீர்கள். இனிமேல் தாங்கள் வெகு பரிதாபகரமான நிலையிலிருக்கும்

பரதருக்கும் கௌசல்யைக்கும் தேற்றறிவு கூறி, கைகேயி யையும் சுமித்திரையையும் கண்டு, அயோத்தியில் அரசாட்சியைக் கைக்கொண்டு, அந்நகரத்திலுள்ள நண்பர்களைக் களிப்பித்து, இக்ஷ்வாகு வமிசத்தை நிலைநிறுத்தி, அசுவமேத யாகஞ் செய்துமுடித்து, ஒருவராலும் அடையக் கூடாத பெரும்புகழைப் பெற்று, அந்தணர்களுக்குப் பலவகைப் பொருள்களைத் தானஞ்செய்து, அதன்பிறகு திவ்வியலோகத்துக்குப் போகவேண்டும். தங்கள் தந்தை தசரத மகாராஜர் விமானத்திலேறி இதோ வந்திருக்கின்றார்; இலட்சுமணருடன் அவரை நமஸ்கரியுங்கள்".

மகாதேவர் சொன்னதைக் கேட்டு இராமரும் இலக்ஷ்மணருடன் தமது தந்தைக்கு நமஸ்காரஞ் செய்தார். தசரத ராஜரும் தமது உயிருக்கும் மேலாகத் தாம் மதித்து அன்புவைத்த தமது குமாரரைக் கண்டு, வெகு சந்தோஷமடைந்து அவரைத் தமது மடியின்மே லுட்காரவைத்து, தமது கைகளினால் தழுவிக்கொண்டு, அவரை நோக்கிப் பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்:—"ராம! தேவரிஷிகளின் சம்மானமாவது, சுவர்க்கலோகத்திலிருப்பாவது, உன்னை விட்டுப்பிரிந்த பிறகு, எனக்கு விருப்பமானதன்று. இன்று இலக்ஷ்மணனுடன் நீ க்ஷேமமாகவிருப்பதைக்கண்டு உன்னை ஆலிங்கனஞ் செய்த பின்புதான் நான் துக்கத்திலிருந்து நீங்கினேன். இராவணனது வதைக்காகவே உனது பட்டாபிஷேகத்துக்கு தடையுண்டானதென்பதை இப்பொழுதுதான் அறிந்துகொண்டேன். நற்காரியஞ்செய்து உயர்ந்த புகழையும் அடைந்தாய்; நீ உனது தம்பிகளுடன் இராச்சிய பரிபாலனம் பண்ணி நீடூழி வாழ்வாயாக" என்றார்.

இவ்விதமாகத் தசரதர் சொன்னதும் இராமர் அஞ்சலி பண்ணிக்கொண்டு பின்வருமாறு சொல்லலுற்றார்:—"தருமங்களை யாராய்ந்தறிந்த எனது தந்தையே! கைகேயியினிடமும் பரதனிடமும் மனமிரங்குக. அக்

காலத்தில் கைகேயியைப் பார்த்து 'உனது குமாரனுடன் உன்னை நான் கைவிட்டேன்' என்ற சாபம் கைகேயியையும் அவள் குமாரனையும் அணுகாதிருக்கவெண்டும்" என்று விண்ணப்பஞ்செய்தார். தசரதமன்னவரும், "அப்படியே யாகுக' என்று மறுமொழி யளித்து, அஞ்சலி பண்ணிக்கொண்டு தமக்கருகிலே நின்ற இலக்ஷ்மணரைக் கட்டித் தழுவி, சீதாதேவியை நோக்கி பின்வருமாறு சொல்லலானார் :—"வைதேகி! இராமன் உன்னை முதலில் ஒத்துக்கொள்ளாமலிருந்தானென்று நீ அவனிடத்திற் சிறிதும் வருத்தமடைய வேண்டாம். இராமன் உனது நன்மையைக் கருதியே உன்னைப் பரிசுத்தமுள்ளவளென்று இவ்வாறு காட்டினான். நீ உனது புருஷனுக்குப் பணிவிடை செய்ய வேண்டுமென்பது நான் உனக்குச் சொல்ல வேண்டுமா? எனது கடமையென்று நான் சொல்லுகின்றேன். இவன் தான் உனக்குச் சிறந்த தெய்வம்" என்றார். இவ்விதம் தசரத் ராஜர் தாம் சொல்லவேண்டியவைகளைச் சொல்லிவிட்டு இந்திரலோகத்திற்கு மீண்டுஞ் சென்றார்.

தசரதர் புறப்பட்டுப்போனதும் மஹேந்திர பகவான் அஞ்சலி செய்துகொண்டு, இராமரைப்பார்த்து மிக்க அன்புடனே பின்வருமாறு சொல்லலானார்:—"இராமரே! தங்களுடைய தரிசனமானது இராவணனுடைய வதையால் எங்கள் விஷயத்திற் பயனுள்ளதாக முடிந்தது; அதனால் நாங்கள் மகிழ்ச்சிகொண்டுள்ளோம். தாங்கள் எதை விரும்புகின்றீர்களோ அதை வெளியிடுங்கள்" என்றார். மகேந்திரன் இப்படிச் சொன்னதும் இராமர் இலட்சுமணருடனும் சீதாதேவியுடனும் அஞ்சலி பண்ணிக்கொண்டு பின்வருமாறு சொல்லலானார் :—தேவர்களின் மன்னவரே! என்னிடம் அவ்வளவு அன்பு இருக்கும்பட்சத்தில் நான் கேட்டுக்கொள்ளுகின்றபடி செய்யவேண்டும். எந்த வானரர்கள் என்னிமித்தமாகப் போர்செய்து

யமன் மாளிகைக்குச் சென்றார்களோ அவர்களெல்லோரும் மறுபடியும் உயிர்பெற்று எழுந்திருக்கட்டும். என் பொருட்டு எந்த வானரர்கள் தங்கள் மனைவிகளை, குழந்தைகளை விட்டுப் பிரிந்துவந்து எனது விருப்பத்தின் பொருட்டுத் தம்முயிரையும் ஒரு பொருட்டாகக் கருதாமலிருந்தார்களோ அவ்வானரர்கள் மறுபடியும் தங்கள் மனைவி மக்களுடன் சேருமாறு கருணைகூரவேண்டும்; இதுதான் நான் கேட்கும் வரம். என்னைச் சேர்ந்த கொண்டைமுசுக்களையும் ரிக்ஷர்களையும் ஒருவிதநோயுமில்லாமலும் ஒருவித விரணமுமில்லாமலும் வல்லமையும் பலமும் குன்றாமலும் பார்க்க நான் வேண்டுகின்றேன். அன்றியும் இவ்வானரர்கள் எவ்விடத்திற் சஞ்சரித்தபோதிலும் அவ்விடத்தில் அகாலத்திலும் பழங்களும் கிழங்குகளும் உண்டாகவேண்டும்: அவ்விடத்தில் நதிகளும் தெளிந்த நீருடன் பெருகவேண்டும்''.

இராமர் அவ்வாறு சொன்னதை மகேந்திர பகவான் கேட்டு பின்வருமாறு சொல்லலுற்றார் :''இரகு நந்தனரே ! தாங்கள் இப்பொழுது கேட்டது பெருவரம். நான் ஒரு பொழுதும் இரண்டுவகை சொன்னவனல்லனாகையால் தாங்கள் கேட்டுக் கொண்டவை அப்படியே உண்டாகட்டும்'' என்றார்.

அப்பால் வானரவீரர்கள் யாவரும் தூங்கி விழிக்கின்றவர்போல எழுந்திருந்தார்கள். அப்போது இறவாது பிழைத்திருந்தவர்கள் அதனைக்கண்டு இதென்னவென்று ஆச்சரியமடைந்தார்கள். உடனே பிழைத்தெழுந்த அவர்களெல்லாரும் இராமருக்கு நமஸ்காரஞ்செய்தார்கள். தேவர்களெல்லாரும் தங்கள் தங்கள் விமானங்களிலேறி தேவலோகஞ் சென்றார்கள்.

இராமர் அன்றிரவு சுகமாகத் தூங்கி யெழுந்ததும், விபீஷணர் அஞ்சலி பண்ணிக்கொண்டு வெற்றிவினவி பின்வருமாறு சொல்லலானார். ''அறிஞரே ! தாங்கள்

இலக்ஷ்மணருடனும் சீதாதேவியுடனும் இங்கு வசித்து நான் செய்யும் உபசாரங்களைப் பெற்றுக்கொண்டு பிறகு புறப்படலாம். இராகவரே! அன்பினாலும் அபிமானத்தினாலும் நட்பினாலும் பக்தியினாலும் நான் தங்களை வேண்டிக் கொள்ளுகின்றேனே யன்றி தங்களுக்குக் கட்டளை யிடுவதாகக் கருதக்கூடாது" என்றார்.

இவ்வண்ணம் விபீஷணர் சொன்னதும், எல்லா வரக்கர்களும் வானரர்களும் கேட்குமாறு இராமர் அவ்வரக்கவேந்தரை நோக்கி பின்வருமாறு சொல்லலானார்:—"நண்பரே! தாங்கள் செய்த மந்திராலோசனைகளாலும், ஆண்மைத் தொழில்களாலும், சிறந்த நட்பினாலும், எல்லாவிதமும் நான் முன்னமே தங்களால் வெகுமானம் பண்ணப்பட்டிருக்கின்றேன். தங்களுடைய வசனத்தைக் கேட்கக்கூடாதென்ற எண்ணம் எனக்குச் சிறிதுமில்லை; ஆனால் எனது மனம் எனது தம்பி பரதனைப் பார்க்கஆவல் கொண்டிருக்கின்றது; கௌசல்யையையும், சுமித்திரையையும், கைகேயியையும், என்னுடைய குருமார்களையும், நண்பர்களையும், தேசத்துக்குடிகளையும் பார்க்க வெகு ஆவலுட னிருக்கின்றேன். தாங்கள் எனக்குச் செய்ய வேண்டிய வெகுமானங்களெல்லாம் செய்தாயின; நான் திரும்பிப் போக விடை தருக." என்றார். இராமர் சொன்னதை விபீஷணர் கேட்டு தன் விமானத்தைச் சடிதியிற் கொண்டுவந்தார்; அது வந்ததாக தெரிவித்து அவர் கட்டளையை நோக்கிக்கொண்டு நின்றார்.

இராமர் விமானத்தின்மீது ஏறி, சிறிது வெட்கப் பட்டுக்கொண்டிருந்த சீதாதேவியைத் தமது மடியின் மேல் வைத்துக்கொண்டார். இலக்ஷ்மணரும் விற்பிடித்து அவர் பின்னே விமானத்தில் ஏறினார். அதன் பிறகு இராமர் விமானத்தி லிருந்தபடியே சுக்கிரீவனுக்கும் விபீஷணருக்கும் மற்றை வானரவீரர்களுக்கும் மரியாதை செய்து அவர்களெல்லாரையும் நோக்கிப் பின்வருமாறு

சொல்லலானுர் :—"வானரவீரர்களே! நீங்களெல்லாரும் எனக்குச் செய்யவேண்டிய உபகாரத்தைச் செய்து விட்டீர்கள்; இனிமேல் நீங்களெல்லாரும் உங்கள் மனம் போனபடி சஞ்சரிக்க நான் விடைகொடுக்கின்றேன். சுக்கிரீவரே! தாங்கள் என்னிடம் வைத்த அன்புக்கும் நட்புக்கும் தக்கபடி வெகு அழகாக நடந்துகொண்டீர்கள். தாங்கள் கிஷ்கிந்தை போய்ச் சேரலாம். விபீஷணரே! தாங்கள் இவ்விலங்கையிலேயே சுகமாக வாசஞ் செய்யுங்கள். நான் அயோத்திக்குப் போகின்றேன். நீங்களெல்லாரும் எனக்கு விடைகொடுக்க வேண்டும்".

இவ்விதமாக, இராமர் சொன்னதும் வானரவீரர்களும் அரக்கர்களும் விபீஷணரும் அஞ்சலிசெய்துகொண்டு பின்வருமாறு சொல்லலானுர்கள் :— "நாங்களெல்லோரும் அயோத்திக்குத் தங்களுடன் போவதற்கு ஆசைகொண்டிருக்கின்ருேம். ஆதலால் எங்களையும் தாங்கள் உடனழைத்துப் போகவேண்டும். தங்களுடைய பட்டாபிஷேக மகோத்ஸவத்தைச் சேவித்துவிட்டு கௌசல்யையை வந்தனஞ் செய்து விடைபெற்றுக்கொண்டு திரும்பிவிடுவோம்" என்ருர்கள். இதைகேட்டு இராமர் அவர்களை நோக்கி "உங்களைப்போன்றவர்களாற் சூழப்பட்டு நான் எனது நகரத்துக்குச் செல்வனேயாஞல் எனக்கு மிகுமகிழ்ச்சி யுண்டாகும். சுக்கிரீவரே! எல்லா வானரர்களுடனும் சடிதியிற் புஷ்பகவிமானத்திலேறுங்கள். விபீஷணரே! தாங்களும் தங்கள் மந்திரிமார்களுடன் ஏறுங்கள்" என்ருர். அதன்பிறகு சுக்கிரீவனும் விபீஷணர் தமது மந்திரிகளுடனும் விமானத்திலேறினுர்கள். அதே விமானத்தில் வானரர்கள் யாவரும் அரக்கர்களும் வெகு சுகமாக நெருக்கமின்றி உட்கார்ந்தார்கள்.

விமானமானது இராமராற் கட்டளையிடப்பட்டு காற்ருற் செலுத்தப்படும் பெருமேகம்போல் ஆகாயத்தில்

ஓடலாயிற்று. இராமர் தம்மைச்சுற்றி நன்ருகப் பார்த்து சீதாதேவியை நோக்கி பின்வருமாறு சொல்லலானுர் :— "வைதேகி! அதோ பார்! கைலாச மலையின் சிகரம் போல் விளங்கும் திரிகூடமலையினது சிகரத்தில் இலங்கை விளங்குகின்றது. இதோ காண்கிறதே சமுத்திரத்தின் துறைமுகம்; இங்குத்தான் சமுத்திரத்தைத் தாண்டி அன்றிரவு கழித்தோம். இதோ இச்சமுத்திரத்தினிடத்தில் விளங்குகின்றதே, விசாலாக்ஷி! இச்சேதுவை உனது நிமித்தம் நான் நளனுடைய சகாயத்தினுற் கட்டினேன். இதோ அழகான காடுகளமைந்ததாகக் காண்கின்றதே இதுதான் கிஷ்கிந்தை; இதுதான் சுக்கிரீவனுடைய பட்டணம். இவ்விடத்தில்தான் நான் வாலியைக்கொன்றேன்".

கிஷ்கிந்தையைக் கண்டதும் சீதாதேவி வெகு அன்புடனும் அச்சத்துடனும் இராமரைப் பார்த்து "வேந்தரே! தாரைமுதலான சுக்கிரீவருடைய மனைவிமார்களோடும் இன்னும் மற்றை வானரவீரர்களுடைய மனைவிகளோடும் கூட நான் அயோத்திக்குப் போக விரும்புகின்றேன்" என்று வணக்கமாகக் கூறினுள். இராமரும், "அப்படியே ஆகட்டும்" என்று சொல்லி தமது விமானத்தைக் கிஷ்கிந்தையில் நிறுத்தி சுக்கிரீவனைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லலானுர் :—"வானர சிங்கமே! வானரவீரர்கள் யாவரும் தமது மனைவிமார்கள் சீதையுடன்வர அயோத்திக்கு வரவேண்டுமென்று சொல்லுங்கள்; அப்படியே தாங்களும் தங்களுடைய மனைவிமார்களைச் சடிதியில் அழைத்து வாருங்கள். எல்லாருடனும் நாம் அயோத்திக்கு ஏகுவோம்".

இராமர் இவ்வாறு சொன்னதும் வானரராஜன் அந்தப்புரத்துக்குச் சென்று தாரையைப் பார்த்துச் சொல்லலானுன் :— "சீதாதேவியை மனங்களிப்பிக்க இராமர், காதலி! நீ மற்றை வானரவீரர்களின் மனைவி

யருடன் அயோத்திக்கு வருமாறு கட்டளையிடுகின்றார்: ஆகையால் நீ வானரமகளிர் யாவரையும் விரைவாக அழைத்து வருக: அயோத்தியையும் தசரத மன்னவரது மனைவிமாரையும் பார்த்துவருவோம்" என்றான். இவ் வண்ணம் சுக்கிரீவன் சொன்னதைக் கேட்டதும் ஸர் வாங்க சுந்தரியான தாரை வானரமடைந்தைமா ரெல்லா ரையும் கூப்பிட்டுப் பின்வருமாறு சொல்லலானாள்: "இப் பொழுது நீங்கள் யாவரும் எல்லா வானரர்களுடனுங் கூட அயோத்திக்கு வருமாறு சுக்கிரீவர் கட்டளை இட் டிருக்கின்றார். அயோத்தியையும் இராமர் அந்நகரத்திற் பிரவேசிக்குங் காட்சியையும் தசரத மன்னவருடைய மனைவிமாரின் பாக்கியத்தையும் கண்டுகளிக்க வேண்டு மென்று எனக்கும் எண்ணமிருக்கின்றது". தாரை சொன்னதைக் கேட்டதும் எல்லா ஸ்திரீகளும் தங்களைச் சிங்காரித்துக்கொண்டு வெளிவந்து, விமானத்தை வலஞ் செய்து, சீதாதேவியைக் காணவேண்டுமென்ற ஆவலு டன் விமானத்தின்மீது ஏறினார்கள்.

54. ஸ்ரீராமர் பட்டாபிஷேகம்

ஸ்ரீராமர் விமானத்திலிருந்தபடி அயோத்திமாநகரத் தைப் பற்றிச் சிந்தித்து அநுமானைப் பார்த்துச் சொல்ல லானார்:—"நீ அயோத்தி சென்று, 'அரண்மனையில் எல் லாரும் சௌக்கியமா?' என்பதை அறிந்து கொள்க. பரதனிடம் க்ஷேமசமாசாரத்தை நான் சொன்னதாகச் சொல்லுக. நான் என் காரியத்தைச் சரியாக முடித்துக் கொண்டு இலக்ஷ்மணனுடனும் சீதையுடனும் திரும்பி வந்ததும் ஆகிய எல்லாவற்றையும் பரதனிடம் தெரிவி. அரக்கவேந்தராகிய விபீஷணருடனும் எல்லா வானரவீரர் களுடனும் வந்திருக்கின்றோ மென்பதையும் சொல்லுக. இச்செய்தியைக் கேட்டுப் பரதன் என்னிடம் என்ன கருத்துடனிருக்கின்றா னென்பதை நீ அவனது முகக்குறி

களா லறிந்துகொள்ள வேண்டும். அவனுடைய முகத்தில் தோன்றுங் குறிகளாலும், பார்வையாலும், பேச்சாலும், அவன் கருத்து முழுவதையும் தெரிந்து கொள்ளலாம். எல்லாவகை யின்பங்களும் நிரம்பிய யானை குதிரை தேர் இவைகளடங்கிய சேனையுள்ளதாய் வம்ச பரம்பரையாக வந்திருக்கும் இராச்சியத்தில் யாருக்குத்தான் ஆசையிருக்காது? பரதனுக்கு இராச்சியத்தில் ஆசையிருக்கும் பட்சத்தில் அவனே ஆளட்டும். ஆகையால் வானர வீரனே! அவனது எண்ணத்தை அறிந்து, அவனது ஏற்பாடுகளையும் தெரிந்துகொண்டு யாங்கள் அயோத்திக்குச் சமீபத்தில் வருவதற்கு முன்னமே நீ என்னிடம் வந்து தெரிவிக்க வேண்டும்".

இவ்விதமாக இராமர் கட்டளையிட்டதும் அநுமான் மனிதரூபங்கொண்டு வெகு வேகமாக அயோத்தியிலிருந்து ஒரு குரோச தூரத்திலிருந்த நந்திக்கிராமத்துக்கருகில் பல மரங்களடர்ந்து விளங்குந் தோட்டமொன்றைச் சார்ந்தான். அங்கு மரவுரியும் மான்தோலும் தரித்தவராய், வெகு பரிதாபமான தோற்றமுள்ளவராய், தமது மயிர் முடியை ஜடையாகத் தரித்தவராய், மேனி முழுதும் மாசு படிந்தவராய், தமையனரை விட்டுப்பிரிந்த துக்கத்தினல் மெலிந்தவராய், கனிகளையும் கிழங்குகளையுமே உணவாகக் கொண்டவராய், ஐம்புலன்களையும் வென்றவராய், ராமர் தமக்கு அளித்த மரவடியிரண்டையும் தமது முன்பாக வைத்துக்கொண்டு உலகம் முழுவதையும் அரசாள்பவராய், விளங்கிய பரதரை, அநுமான், பார்த்து அஞ்சலி செய்துகொண்டு பின்வருமாறு சொல்லலானன்:—

"தண்டகாரணியத்தில் மரவுரியணிந்து ஜடைமுடியுடன் வசித்துக் கொண்டிருக்கின்றாரே யென்று எவரொருவரை நினைத்துத் தாங்கள் இவ்வளவு துயரப்படுகின்றீர்களோ அவ்விராமர் தங்களுக்கு க்ஷேமத்தைத் தெரிவிக்கச் சொன்னார். வேந்தரே! தங்களுக்கு இந்தச் சந்தோஷசமாசாரம்

சொல்லவந்தேன். இனி துக்கத்தை அகற்றுங்கள். இராமர் இராவணனை வதைத்துச் சீதாதேவியை அடைந்து, தமது காரியங்களை முற்றிலும் நிறைவேற்றி, தமது நண்பர்களுடனும் பெருஞ்சேனையுடனும் இவ்விடத்துக்கு வந்து கொண்டிருக்கின்றார். இலட்சுமணரும் சீதாதேவியும் வருகின்றார்."

இவ்வாறு அநுமான் சொன்னதும், பரதர், சந்தோஷ மிகுதியால் திடீரென்று பூமியில் விழுந்து மோகமடைந்தார். சிறிது நேரத்துக்குள் மூர்ச்சை தெளிந்து எழுந்து தமக்கு அவ்வாறு அன்பான செய்தி சொன்ன அநுமானை கட்டிக்கொண்டு பின்வருமாறு சொல்லலானார் :—"இவ்வளவு கருணையை என்னிடம் காட்டிக்கொண்டு இவ்விடம் வந்த தாங்கள், தேவரா? அல்லது மனிதரா? இச்சந்தோஷ சமாசாரத்தைத் தாங்கள் சொன்னதற்காக, நண்பரே! நூறாயிரம் பசுக்களையும் உத்தமமான நூறு கிராமங்களையும் தங்களுக்குக் கொடுக்கின்றேன். எனது தமையனார் பெருவனத்துக்குச் சென்று பல வருஷங்கள் ஆயினவே! அவரைப்பற்றிய சமாசாரம் என் காதில் இப்பொழுதல்லவா விழுந்து என் அன்பைப் பெருகச் செய்கின்றது. ஒரு மனிதன் உயிருடன் மட்டுமிருப்பானேயானால் நூறு வருஷத்துக்குப் பிறகாவது அவனுக்குச் சந்தோஷமுண்டாகுமென்ற உலகச்சொல் உண்மையென்றே எனக்குத் தோன்றுகின்றது. அநுமானே! இராமருக்கும் வானர வீரர்களுக்கும் சேர்த்தி எவ்விடத்தில், என்ன காரணத்திற்காக உண்டாயிற்றென்பதை எனக்குச் சொல்ல வேண்டும்." பரதர் இவ்வாறு கேட்க அநுமான் இராமரது வனவாச சரித்திரத்தைச் சுருக்கமாகச் சொல்லினான். பரதர் இச்சமாசாரத்தைக் கேட்டு தம்மைப்போலவே சந்தோஷத்தில் மூழ்கியிருந்த சத்துருக்கினரை நோக்கி கட்டளையிடலானார் :—"வாசனை பொருந்திய பலவகை மலர்களாலும் வாத்திய கோஷங்களாலும், எல்லாக்

கோயில்களிலும், நாற்சந்திகளிலிருக்கும் மண்டபங்களிலும், தக்க மானிடர்கள் வெகு ஆசாரத்துடன் பூஜை செய்யீட்டும். எல்லாவகைத் தோத்திரங்களையும் புராணங்களையும் அறிந்த ஸ்துதி பாடகர்களும், வைதாளிகர்களும், வாத்தியங்களிற் சமர்த்தர்களான வாத்தியக்காரர்களும், கணிகையர்களும், கூட்டங்கூட்டமாக இராமருடைய முகத்தைப் பார்க்கும் பொருட்டுப் புறப்படட்டும்" என்றார்.

அப்பால் தசரத மன்னவருடைய மனைவிமார்கள், கௌசல்யையையும் சுமித்திரையையும் முன்னிட்டுக் கொண்டு, பலவித வாகனங்களிலேறி வெளிப்புறப்பட்டார்கள். எல்லாரும் நந்திக்கிராமத்தைச் சேர்ந்தார்கள். அயோத்திமாநகரம் முழுவதுமே அப்போது அங்கு வந்து சேர்ந்தது. பரதரை, அந்தணர்கள், கைத்தொழிற்காரர்கள், வியாபாரிகள், மலர்களையும் மோதகங்களையும் கைகளிற் சித்தமாக வைத்துக்கொண்டிருந்த மந்திரிகள் இவர்களெல்லாரும் சூழ்ந்து நின்றார்கள். சங்கம் பேரிகை இவைகளி னொலிகளாலும், வந்தியராலும், பரதர் வணங்கப்பெற்று. இராமருடைய பாதுகைகளை முடியின்மேலணிந்தவராய், வெண்மலர் மாலையால் விளங்கும் வெண்குடையையும் ராஜசின்னமான தங்கப்பிடியுள்ள இரண்டு வெண்சாமரங்களையும் எடுத்துக்கொண்டு, தமது மந்திரிமார்களெல்லாரும் தம்மைச் சூழ்ந்துவர இராமரை எதிர்கொண்டு சென்றார்.

இராமரை பார்த்த உடனே பரதர் அஞ்சலி செய்தபடியே வெகு சந்தோஷமாக இராமரெதிரில் நின்றுகொண்டு மனப்பூர்வமாக நல்வரவு விசாரித்தார்; நமஸ்காரஞ்செய்தார். அதன்பிறகு விமானம் இராமருடைய கட்டளைப்படி பூமியிலிறங்கி நின்றது. பரதரை இராமர் தமது கைகொடுத்து அவ்விமானத்திலேற்றிவிட்டார். வெகுநாளாய்த் தாம் காணாத தம்பி பரதரை இராமர்

தம்து மடியின்மேல்வைத்து சந்தோஷத்தாற் கட்டித்தழுவினார். அதன்பிறகு பரதர் இலக்ஷ்மணரைப் பார்த்துவிட்டு சீதாதேவியை நமஸ்காரஞ்செய்தார். அப்பால் பரதர், சுக்கிரீவன் ஜாம்பவன் அங்கதன் மைந்ததுவிவிதர் நீலன் விருஷபன் ஸுஷேணன் முதலான எல்லா வானர வீரர்களையும் சந்தோஷத்தாற் கட்டிக்கொண்டார். இஷ்டமான உருவங்கொள்ளும் அவ்வானர வீரர்களும் மானிடவுருவத்துடன் வெகு சந்தோஷமாக பரதரை க்ஷேமம் விசாரித்தார்கள்.

பரதர் சுக்கிரீவனைக் கட்டிக்கொண்டு "சுக்கிரீவரே! சகோதரர்களாகின்ற எங்கள் நான்கு பெயர்களுக்கும் பின்பிறந்த ஐந்தாவது சகோதரர் தாங்கள்; உபகாரஞ் செய்வதுதான் நண்பர்களென்று சொல்லுவதற்குக் காரணம்; அபகாரமானது சத்துருக்களென்பதற்கு அடையாளம்" என்றார். அதன்பிறகு பரதர் விபீஷணரை நோக்கி:—"தெய்வாதீனமாக தங்களது உதவியாலல்லவா ஒருவராலுஞ் செய்யமுடியாத காரியத்தை எனது தமையனார் செய்துமுடித்தார்?" என்றார். சத்துருக்கினர், இராமரையும் இலக்ஷ்மணரையும் நமஸ்காரஞ்செய்து சீதாதேவியினிடம் வந்து அடிபணிந்து நின்றார்.

சோகத்தில் மூழ்கி இளைத்திருந்த தமது தாய் நின்றவிடத்துக்கு இராமர் வந்து அவ்வுத்தமியின் பாதங்களில் நமஸ்காரஞ்செய்து அவளது மனத்தைக் குளிரச்செய்தார். பிறகு சுமித்திரையையும் கைகேயியையும் மற்றுமுள்ள தாய்மாரையும் இராமர் நமஸ்காரம்பண்ணி, தமது குருவிருந்த இடத்தை நோக்கிச் சென்றார். அப்போது "கௌசல்யையின் ஆனந்தத்தைப் பெருகப் பண்ணுகின்ற இராமரே! தங்களுடைய வரவு நல்வரவா?" என்று வினவி, எல்லாக்குடிகளும் அஞ்சலி பண்ணிக்கொண்டு இராமரைப் பார்த்து முகமன் கூறினார்கள்.

பரதர் அப்பொழுது இராமர் தமக்கு கொடுத்திருந்த அவ்விரண்டு பாதுகைகளையும் எடுத்துவந்து அவருடைய திருவடிகளிற் பூட்டினார். பின்னர் அவர் அஞ்சலிபண்ணிக்கொண்டு இராமரை நோக்கி சொல்லலானார் :— "அரசரே! தங்களது நாட்டை நான் இதுவரையிற் பாது காத்தேன். இப்போது தங்களிடம் ஒப்பித்துவிட்டேன். இன்று தாங்கள் மறுபடியும் அயோத்திக்கு மன்னவராகத் திரும்பி வந்ததை எனது கண்களாற் பார்த்தபிறகு, நான் பிறந்த பிறப்பின் பயனைபெற்றேன்" என்றார். இராமரும் பரதரைத் தமது மடியிலுட்கார வைத்துக்கொண்டு விமானத்திலேறி யிருந்தபடியே தமது சேனையுடன் பரதருடைய ஆச்சிரமத்துக்குச் சென்றார். அவ்வாச்சிரமம் சேர்ந்ததும் இராமர் தமது சேனையுடன் அவ்விமானத்தை விட்டு இறங்கி விமானத்தை நோக்கி "விமான தேவதையே! நீ திரும்பிப்போக நான் விடையளிக்கின்றேன்" என்றார்.

அதன் பிறகு பரதர் தமது தலையின்மேல் கரங்களைக் கூப்பிக்கொண்டு இராமரை நோக்கிச் சொல்லலானார் :— "இந்த நாட்டை எனக்கு அளித்துக் காட்டுக்குப்போய் எனது தாயை தாங்கள் கௌரவித்தீர்கள். பிறகு சித்ர கூடத்தில் இந்த ராஜ்யத்தை என்னிடத்தில் அடைக்கலப் பொருளாகவைத்தீர்கள்; அந்த ராஜ்யத்தை நான் இப்பொழுது தங்களிடம் திருப்பிக்கொடுக்கின்றேன். இவ்விராஜ்யத்திற் பட்டாபிஷேகஞ் செய்யப்பெற்ற தங்களை இவ்வுலகம் கண்ணெடுத்துப் பார்க்கட்டும்." என்றார். இராமர் பரதர் சொன்னதைக்கேட்டு, "அப்படியே ஆகட்டும்" என்று ஒப்புக்கொண்டு அழகான ஓர் ஆசனத்திலுட்கார்ந்தார்.

பிறகு சத்துருக்கினருடைய கட்டளைப்படி சுமந்திரர் இரதத்தைக் கொண்டுவந்து நிறுத்தினார். இராமர் அந்த இரதத்திலேறினார். பரதர் குதிரைகளின் கடிவாளத்தைப்

பிடித்துத் தேரைச் செலுத்தினர். சத்துருக்கினர் ஒற்றை வெண்கொற்றக்குடை பிடித்தார்; இலக்ஷ்மணர் இராமருடைய தலைக்கு மேலாக வெண்சாமரம் வீசினர். விபீஷணர் மற்றொரு வெண்சாமரத்தை எடுத்துக்கொண்டு இராமருக்கு முன்பாக நின்று வீசினர். ஆகாயத்தில் ரிஷிகளும் தேவர்களும் மருத்துக்களும் இராமரைப் புகழ்ந்த இன்னொலி கேட்கலாயிற்று. மந்திரிமார்களாலும் அந்தணர்களாலும் குடிகளாலும் சூழப்பட்டு விளங்கிய இராமர் தம்முடைய வரவைக் கண்டு சந்தோஷத்தாற் பூரித்திருந்த ஜனங்கள் நிரம்பிய அயோத்திநகரிற் புகுந்தார்; தமது தந்தையின் அழகிய அரண்மனைக்குட் பிரவேசித்தார்.

அவ்விடஞ் சென்றதும், பரதர் சுக்கிரீவனைப் பார்த்து, "பிரபுவே! இராமருடைய பட்டாபிஷேகத்துக்குத் தீர்த்தங்கள் கொண்டுவர தங்களுடைய தூதர்களுக்குக் கட்டளையிட வேண்டுகின்றேன்" என்ருர். அவ்வாறே தீர்த்தங்கள் வந்து சேர்ந்ததை சத்துருக்கினரும் மந்திரிமாரும் கண்டு தங்கள் புரோகிதருக்கும் நண்பர்களுக்கும் தெரிவித்தார்கள். அதன்பிறகு இராம பட்டாபிஷேகத்துக்கு வெகு முயற்சியுடனிருந்த வசிஷ்டமாமுனிவர், அந்தணர் பலருடன்கூட எழுந்துநின்று, இராமரைச் சீதாதேவியுடன் இரத்தின சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்க வைத்தார். வசிஷ்டர், வாமதேவர், ஜாபாலி, காசியபர், காத்யாயனர், ஸுயஜ்ஞர், கௌதமர், விஜயர் இவர்கள் கூடி, அஷ்டவசுக்கள் ஆயிரங் கண்ணனை தேவேந்திரனுக்கு அபிஷேகஞ் செய்வதுபோல, நல்ல வாசனையுடையதாய்த் தெளிந்த நீரினல் இராமருக்குப் பட்டாபிஷேகஞ் செய்தார்கள்.

வசிஷ்டர் முதலியோரது கட்டளையினல் மந்திர விதிப் பிரகாரம் முதலில் ருத்விக்குகளும் அந்தணர்களும் இராமருக்கு அபிஷேகம் செய்தார்கள். ஆகாயத்தில் நான்கு

லோகபாலர்களும் எல்லாத் தேவதைகளும் வந்து நின்று கொண்டு திவ்வியங்களான எல்லா மூலிகைகளுடைய இரசங்களினாலும் இராமருக்கு அபிஷேகஞ் செய்தார்கள். பலவகையிரத்தினா பரணங்களை யணிந்த மஹாஜனங்கள் கூடிய பொன்மயமான சபையில் பொற்பீடத்தின்மேல் இராமரை உட்காரவைத்து, முன்பு பிரம்மதேவனால் நிருமிக்கப்பட்டு இரத்தினங்களினால் விளங்கி, மனுவினால் அணியப்பெற்றுக் குலமுறையாக வந்த இரத்தின கிரீடத்தை, வசிஷ்டர் இராமருக்குச் சூட்டினார். சத்துருக்கினர் வெகு அழகான வெண்குடை ஒன்றை இராமருக்குப் பிடித்தார். வானர வேந்தனாகிய சுக்கிரீவன் வெண் சாமரம் வீசினான். மற்றொரு வெண்சாமரத்தை விபீஷணர் வீசினார். இந்திரபகவானுடைய கட்டளைப்படி வாயு பகவான் எல்லாவித ரத்தினங்களும் கலந்திழைக்கப் பெற்று நாயகமணியாற் சோபித்துக்கொண்டிருந்த முத்து மாலை யொன்றை இராமருக்குக் கொடுத்தார். இராம ருடைய பட்டாஷேகத்தில் தேவர்களும், கந்தர்வர்களும் கானம் பண்ணலானார்கள். அப்ஸரஸுக்களின் கணங்கள் கூத்தாடின.

இராமருடைய பட்டாபிஷேக மகோத்ஸவம் நடந்தவுடன், பூமி தானியங்கள் நிரம்பியதாகவும், விருக்ஷங்கள் கனிகள் நிரம்பியனவாகவும், மலர்கள் வாசனை நிரம்பியனவாகவும் விளங்கின.

அதன் பிறகு, இராமர் நூறாயிரங் குதிரைகள். நூறாயிரம் பசுக்கள், நூறாயிரந் தேனுக்கள், நூறு காளைமாடுகள் இவைகளை ஹிரண்யதானத்துக்கு முன்பு அந்தணர்கட்குத் தானம்பண்ணினார். முப்பதுகோடி பொன்னையும் பலவகை யாபரணங்களையும், விலையுயர்ந்த வஸ்திரங்களையும் பிராமணர்களுக்குத் தானஞ் செய்தார். பின்னர் சூரியனுடைய கிரணங்கள்போல மின்னிக் கொண்டு, தங்கமும் இரத்தினமுமிழைக்கப்பட்டு வெகு

அழகாய் விளங்கிய மாலை யொன்றைச் சுக்கிரீவனுக்குக் கொடுத்தார். வைடூரியகற்கள் அழகாக இழைக்கப்பட்டு நடுவில் வைரமும் இரத்தினமும் பதிக்கப்பெற்ற இரண்டு தோள்வளையல்களை அங்கதனுக்கு கொடுத்தார். சிறந்த மணிகளிழைக்கப்பட்டுச் சோபித்துக் கொண்டிருந்த முத்தாஹாரமொன்றை சீதாதேவிக்குக் கொடுத்தார். சீதா தேவி தனது கழுத்தினின்றும் அந்த ஹாரத்தை கழற்றி கொண்டு எல்லா வானரவீரர்களையும் பார்த்து விட்டு தனது கணவனுருடைய திருமுகத்தையும் பார்த்தாள். முகக்குறியால் இராமர் அவ்வுத்தமியின் இங்கிதத்தை அறிந்துகொண்டு, அவளைப் பார்த்துப் சொல்லலானூர் :— “இனிய அழகுடையவளே! எவனொருவனிடம் வல்லமை பலம் புத்தி இவைகளெல்லாம் அதிகமாக விருக்கின்றன வென்று சந்தோஷமடைந்திருக்கிருயோ, அவனுக்கு இந்த ஹாரத்தை நீ வெகுமதியாகக் கொடுக்கலாம்” என்றூர். உடனே அவ்வுத்தமி அந்த ஹாரத்தை அநுமானுக்குக் கொடுத்தாள். அநுமானும் அந்த ஹாரத்தை அணிந்து கொண்டு சோபிக்கலானுன். எல்லா வானர விருத்தர்களும் வஸ்திரங்களாலும் ஆபரணங்களாலும் அவரவர்களுக்குத் தக்கபடி மரியாதை செய்யப்பெற்றூர்கள்.

விபீஷணர் சுக்கிரீவர் அநுமான் ஜாம்பவன் மற்றுமுள்ள வானர சேனுதிபதிகள் எல்லாரும் இராமரால் அவரவர்களுடைய பதவிக்குத் தக்கவாறு இஷ்டப்படி இரத்தினங்களாலும் மற்றைவித மரியாதைகளாலும் பூஜிக்கப்பட்டார்கள். எல்லாரும் மிகவும் ஆனந்தமடைந்து தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பலானூர்கள்.

தமது சத்துருக்களை நாசம்பண்ணி இராமர் வெகு கம்பீரமாய் வெகு சந்தோஷத்துடன் அந்நாடு முழுமையும் பரிபாலனம் பண்ணலானூர். அம்மன்னவர் பௌண்டரீகம் வாஜபேயம் அசுவமேதம் முதலான பல யாகங்

களைப் பலதரஞ் செய்து முடித்தார். இராமர் இராச்சிய பரிபாலனம் பண்ணிவந்த காலத்தில், கைம்பெண்கள் புலம்பினார்க ளென்பதே கிடையாது; துஷ்டமிருகங் களாற் பயமுண்டாயிற்றென்ற சொல்லே இல்லை. வியாதி யினாற் பயமுண்டாயிற்றென்பதும் இல்லாமலிருந்தது. உலகத்தில் திருடனென்ற குற்றவாளியே இல்லை. ஒருவித சங்கடமும் உலகத்துக்கு உண்டாகவேயில்லை. பெரியவர் கள் சிறிய குழந்தைகளுக்கு உத்திரகிரியை செய்தார்க ளென்பதே இல்லாமலிருந்தது. எல்லாரும் சந்தோஷ மாகவே யிருந்தார்கள். எல்லாரும் தருமகாரியத்திற் பிர வேசித்தவர்களாகவே விளங்கினார்கள். குடிகளுக்குள் எங்கு பார்த்தாலும் 'ராமர், ராமர், ராமர்' என்ற கதையாகவே இருந்தது, ஜகத்துமுழுதும் இராம மய மாகவே தோன்றிற்று. அந்தந்தக் காலங்களில் மேகங்கள் மழை பொழிந்தன. எப்பொழுதும் இளங்காற்று வீசிற்று. அந்தணர்கள் க்ஷத்திரியர்கள் வைசியர்கள் சூத்திரர்கள் எல்லோரும் உலோப குணமின்றி தங்கள் தொழிலைச் செவ்வையாக நடத்தி சந்தோஷமடைந்தவர்களாக இருந் தார்கள். எல்லாரும் சகல லட்சணங்களும் பொருந்தியவர் களாயும் எல்லாரும் தருமத்தைச் செய்கின்றவர்களாயும் இருந்தார்கள். இவ்வாறு இராமர் பதினாயிரத்து நூற்றுப் பத்து வருஷகாலம் தமது தம்பிமார்களுடன் ஒருவகைக் குறையுமின்றி இராச்சியபரிபாலனஞ் செய்துவந்தார்.

(62. இராமாயண பலன் பக்கம் 450-காண்க).

55. இராவணுதியரின் ஜனனம்

இராக்ஷசர்களை வதம்செய்து இராமர் இராஜ்யத்தை அடைந்தபிறகு அவரை ஆசீர்வதிக்க எல்லா முனிவர் வர்களும் வந்தார்கள். முனிசிரேஷ்டரான அகத்தியர் "நாங்கள் ரிஷிகள் வந்திருக்கிறோம் என்று தாசரதிக்குத் தெரியப்படுத்தவும்" என்று காவலாளருக்குச் சொன்னார். இளஞ்சூரியனுக்குச் சமமான பிரகாசமுள்ள முனிகள் வந்தார்களென்று கேள்விப்பட்டு இராமர் அவர்களை வரச்சொல்லென்று பதில் உரைத்தார். அம்முனிவர் வந்ததும் அவர் எழுந்திருந்து, கைகூப்பிக்கொண்டு பாத்யார்க் காதிகளால் மரியாதை செய்த பின்னர் வணக்கத்துடன் அபிவாதனஞ் செய்து முனிகளை ஆசனங்களில் உட்காரச் சொன்னார். அந்த ரிஷிசிரேஷ்டர்கள் இராமரால் குசலம் விசாரிக்கப்பட்ட பின்னர் சொல்லலுற்றார்கள். "மஹா பாஹுவே, ரகுநந்தனரே! நாங்கள் எல்லோரும் க்ஷேம மாய் இருக்கின்றோம். சத்துருக்களைக் கொன்ற தாங்கள் சௌக்கியமாய் இருப்பதைப் பார்க்கின்றோம். தெய்வா தீனத்தினால் இராவணன் கொல்லப்பட்டான். தெய்வா தீனத்தினால் சீதையுடனும், தங்களிடம் ஹிதமுள்ள தம்பி இலக்ஷ்மணரோடும், மாதாக்களுடனும், ப்ராதாக் களுடனும் ஜயம்பெற்ற தங்களைப் பார்க்கின்றோம். இராக்ஷசேந்திரனோடு த்வந்துவயுத்தம் செய்து தாங்கள் ஜயம்பெற்றிருக்கின்றீர்கள். ஆனால் இராவணனுடைய தோல்வியைப் பெரிதாக எண்ணவில்லை; த்வந்துவ யுத்தம் செய்யப்பட்டு இராவணி கொல்லப்பட்டானே! பகைவர் களையடக்குபவனே! வீரனே! எங்களுக்கு மங்களகர மான அப்யம் கொடுத்துத் தாங்கள் ஜயத்துடன் வளர் கின்றீர்கள்." பிரம்மம் அறிந்த அந்த ரிஷிகளுடைய

பேச்சைக் கேட்டு, ஆச்சரியம்கொண்டு இராமர் கூப்பின கையராய்ச் சொல்லலுற்றார். "தேவரீர்கள் மஹா வீரர்களான கும்பகர்ணனையும், இராவணனையும் விட்டு இராவணியை ஏன் புகழ்கின்றீர்கள். அவன் பிரபாவம், பலம், பராக்கிரமம், எப்படி? யாதுகாரணத்தினால் இராவணனுக்கு அவன் மேலானவன்? இது விஷயம் இரகசியம் இல்லாவிடின் நான் அறிய விரும்புகிறேன். சொல்லுங்கள்."

இராகவருடைய சொல்லைக்கேட்டு அதிதேஜஸை யுடைய அகத்தியர் இராமருக்குச் சொல்லலானார், "இராமா! எந்தத் தேஜோ பலத்தினால் பகைவர்களைக் கொன்றானோ, எதனால் அவன் பகைவர்களால் கொல்லப் படமுடியாதவனாக யிருந்தானோ, அதையும் இராவணனுடைய குலத்தையும், பிறப்பையும், வரங்கள் பெற்றதையும் சொல்லுகின்றேன். கேளுங்கள். பூர்வம் கிரதயுகத்தில் பிரம்மாவின் புத்திரர் பிரம்மரிஷி பிரம்மாவுக்குச் சமானமானவர், புலஸ்தியர் எனப்பட்டவர் ஒருவர் இருந்தார். அவர் தர்மத்தை அனுசரித்து மகாகிரியான மேருவின் பக்கத்திலுள்ள திருணபிந்தாசிரமத்தை யடைந்து இந்திரயங்களையடக்கி தபசுசெய்தார். அப்பொழுது தபசினால் பிரகாசித்துக் கொண்டிருந்த திருணபிந்து என்ற ராஜரிஷி தன் பெண்ணை அழைத்துக் கொண்டு சென்று புலஸ்தியரிடம் சொன்னார். "பகவானே! சர்வ குணங்களால் பூஷிக்கப்பட்ட என் குமாரியை பிக்ஷையாக அங்கீகரித்துக் கொள்ளுங்கள். தபசு செய்வதில் முனைந்திருக்கும் உங்களுக்குச் சிரமுப்பட்டிருக்கும்போது இடைவிடாமல் சுசுரூஷை செய்வாள் என்பதில் சந்தேகமில்லை." இதைக்கேட்டு கன்னியை அங்கீகரிக்க ஆசைகொண்டவராய் "நல்லது" என்று அந்தப் பிராமணர் ராஜரிஷிக்குப் பதிலுரைத்தார். பெண்ணை விதிப்பிரகாரம் கொடுத்துவிட்டுத் தமது ஆசிரமபதம் சென்றார் ராஜரிஷி; அவளும் புருஷனைத் தன் குணங்களால் சந்தோஷித்துக்கொண்டு

வசித்தாள். சுவல்ப காலத்தில் ஒரு மகனைப் பெற்றாள்; அவன் விஸ்ரவசு என்னும் பெயருடன் தகப்பனாரைப் போல் தபசில் முனைந்திருந்தான்.

இந்த விருத்தாந்தத்தை அறிந்த பரத்வாஜ மகாமுனி தன் பெண் தேவவர்ணினியை அவருக்குப் பார்யையாக்கக் கொடுத்தார். அவள், வீர்யமுள்ளவனும், அதிக அற்புத மானவும், எல்லா பிரம்ம குணங்களுள்ளவனுமான புத்திரனைப்பெற்றாள். இதனால் பிதாமஹர் பேரானந்தம் அடைந்தார். குழந்தையின் சிரேயஸ்கரமான புத்தியைப் பார்த்து அவன் தனாத்தியக்ஷன் ஆவான் என்று எண்ணி விச்ரவஸின் புத்திரனாதலாலும், அவருக்குச் சமமாய் இருப்பதாலும் வைச்ரவணனென்று விளங்கட்டுமென்று தேவரிஷிகளின் மத்தியில் பெயரிட்டார். வைசிரவணர் தபோவனமடைந்து மகாதேஜசுடையவராய் ஆஹுதி செய்யப்பட்ட அனல்போல் வளர்ந்தார். அப்படி ஆசிரம பதத்தில் இருக்கும்பொழுது, 'தர்மமே பரம்பொருள்; அதை அனுஷ்டிக்க வேண்டும்' என்று புத்தி உண்டாகி, அநேக வருஷங்கள் தபசு செய்தார். அதனால் பிரீதியடைந் தவராய் பிரம்மா இந்திராதி தேவ கணங்களுடன் அவ ருடைய ஆசிரமமடைந்து 'குழந்தாய், ஸுவிரதனே! உன் தபசினால் ஆனந்தமடைந்தேன். உனக்கு மங்களம் உண் டாகுக. வரம்கேள்; நீ வரங்களுக்கு உரியவன்' என்றார். வைசிரவணர்—"பகவானே! செல்வத்தைக் காக்கின்ற தாகிய லோகபாலர் பதவியை விரும்புகின்றேன்" என்று பதிலுரைத்தார். பிறகு பிரம்மா சந்தோஷமடைந்த மனத்துடன் வைசிரவணருக்குச் சொல்லலானார்:—"நான் லோக பாலர்களில் நான்காவது சிருஷ்டிக்கக் கருதியிருந் தேன்; நீ விரும்பியது யமன், இந்திரன், வர்ணனுக்குச் சமானமான பதவி. செல், தமர்க்கியனே! நீ திசன் பதவியை எடுத்துக்கொள். அங்குமிங்கும் செல்ல சூர்யகாந்தியுடைய இந்தப் புஷ்பகமென்ற விமானத்தைப் பெற்றுக்கொள்.

தேவர்களுடன் சமத்வம் அடை. உனக்கு மங்களமாகுக. நாங்கள் செல்லுகின்றோம்.''

பிரமாதிதேவர்கள் ஆகாயம் சென்ற பிறகு தனேசன் அஞ்சலி செய்துகொண்டு தகப்பனுருக்குச் சொல்லலானன் :—''பிரஜாபதி எனக்கு இருப்பிடம் ஒன்றும் கொடுக்கவில்லை. அவரிடமிருந்து வேண்டிய வரங்கள் பெற்றுக் கொண்டிருக்கிறேன். பிராணிகளிட மிருந்து எவ்விடத்தில் யாதொரு பீடையும் இருக்காதோ அப்படிப்பட்ட கிருஹம் காண்பியுங்கள்'' என்றான். இதைக் கேட்டு முனிசிரேஷ்டரான விச்ரவஸர்— ''தக்ஷிண சமுத்திரத்தின் கரையில் திரிகூடமெனப்பட்ட மலை இருக்கிறது. அதன் சிகரத்தில் மஹேந்திரனுடைய அமராவதியைப்போன்ற இலங்கை என்ற அழகியபுரம், இராக்ஷசர்களுடைய வாசத்திற்காகக் கட்டப்பட்டது. நீ அவ்விடம் வசி; உனக்கு மங்களம்; யாது சந்தேகமும் இல்லை. அது விஷ்ணுவின் பயத்தின்மேல் இராக்ஷசர்களால்விட்டுவிடப் பட்டது'' என்றார். தகப்பனுருடைய இந்த தர்மயுக்தமான பேச்சைக் கேட்டு மலைச்சிகரத்திலிருந்த இலங்கையில் தனேசன் வசித்துவந்தான்.

சிலகாலம் கழிந்த பின்னர், நீலமான மின்னலைப் போன்ற பிரகாசமுள்ளவனும் எரிகின்ற தங்கம்போன்ற குண்டலங்களைப் பூண்டவனுன சுமாலியெனப்பட்ட இராக்ஷசன் அழகற்ற பத்மத்தைப்போன்ற பெண்ணை அழைத்துக் கொண்டு கீழ்லோகத்தை விட்டு மனுஷ்ய லோகத்தில் திரியலானன்; அவள் பெயர் கைகசீ. சுமாலி அவளுக்குச் சொல்லலானன் :—''பெண்ணே! கன்யா தானம் செய்யவேண்டிய யௌவனகாலம் தாண்டிக் கொண்டிருக்கிறது. அருமையான மகளே! லக்ஷ்மியைப் போல எல்லா குணங்களும் பொருந்திய நீ, விச்ரவஸரை நாடி அவரை வரித்துக்கொள்'' என்றான். தகப்பனுரின் பேச்சை மதித்து அவள் விச்ரவசு தபசு செய்துக்

கொண்டிருந்த இடத்திற்குச்சென்று அவர்முன் நின்று, தன் கால்களைக் குனிந்து பார்த்துக்கொண்டும் பூமியைக் கால் விரலால் சுரண்டிக்கொண்டும் நின்ருள். அவர் அந்த பூரண சந்திரன் முகமுடையாளைப் பார்த்து தன் தேஜஸால் ஜ்வலித்துக்கொண்டு அதிக ஆதரவோடுசொன்ஞர்:- "மங்களகரமானவளே! நீ யாருடைய பெண்? எவ்விடத்திலிருந்து என்ன காரியமாக இவ்விடம் வந்தாய். உண்மையைச் சொல்.'' அவள் கைக் கூப்பிக்கொண்டு—'' முனிவரே! தாங்கள் தங்கள் பிரபாவத்திஞலேயே என் எண்ணத்தை அறியக்கூடியவர். என் பிதாவின் கட்டளையின் மேல் வந்திருக்கின்றேன், என்று அறிந்துக்கொள்ளுங்கள். என் பெயர் கைகசீ. மற்றவை உங்களுக்குத் தெரியும்.'' என்று பதிலுரைத்தாள். அவர் சிறிது தியானித்துச் சொன்ஞர், '' பத்ரே! உன் மனதிலுள்ள காரணம் எனக்குத் தெரிந்துவிட்டது; என்னிடம் புத்திரலாபம் என்பதே. இந்தக் கடுமையான சமயத்தில் வந்த காரணத்திஞல் எப்படிப்பட்ட பிள்ளைகளைப் பெறுவாய் என்று அறிந்துக்கொள். கடுமையானவர்களும், பயங்கரமான உருவமுள்ளவர்களும், துஷ்டர்களை சிநேகிக்கிறவர்களுமான குரூரமான செய்கையுடைய புத்திரர்களை நீ பெறுவாய்.'' இதைக்கேட்டு அவள் நமஸ்கரித்து—"பகவானே! தங்களிடமிருந்து இப்பேர்ப்பட்ட பிள்ளைகளை நான் விரும்பவில்லை. என்மேல் தயவு செய்யுங்கள்'' என்ருள். இதைக்கேட்டு விச்ரவசு '' மங்களகரமான முகமுடையவளே! எவன் உனக்கு ஐந்தாவதாகப் பிறக்கிருனே அவன் என் வம்சத்துக்குத் தகுந்தபடி தர்மாத்மாவாக இருப்பான்'' என்று பதில் உரைத்தார்.

காலக்கிரமத்தில் அவள் பயங்கரமானவும், இராக்ஷசரூபமுடையவனும், கடுமையானவனும், பத்துத்தலையுடையவனும், பெரும் பல்லானும், மின்னலைப்போன்றவனும் இருபது தோள்களும், பெரிய முகமும், எரிவதுபோன்ற

மயிரை யுடையவனுமான மகனைப்பெற்ருள். அவனு டைய தகப்பனுர் அவனுக்கு தசக்கிரீவன் என்று பெய ரிட்டார். அதன் பிறகு, அளவிடமுடியாத பலம் பொருந் திய கும்பகர்ணன் பிறந்தான். விகாரமுகமுள்ள சூர்ப் பணைகை அதற்கப்புறம் பிறந்தாள். ஐந்தாவதாக தர்மாத் மாவான விபீஷணன் கைகசிக்குப் பிறந்தான். அவர்களில் குரூரமான தசக்கிரீவன் லோகத்தை ஹிம்சித்துக்கொண்டு வந்தான். மதம்பிடித்த கும்பகர்ணன் தர்மப்பிரியர் களான மகரிஷிகளை தின்றுக்கொண்டு மூன்று லோகங் களிலும் சஞ்சரித்தான். விபீஷணனோ எப்பொழுதும் தர்மத்தில் நின்றவனுய் வேதமோதுவதிலேயே கருத்துள் ளவனுய் இந்திரியங்களை அடக்கிக்கொண்டு வந்தான். தசக்கிரீவன் தபசில் மனம் செலுத்தினவனுய் தம்பியுடன் "வேண்டிய வரங்களை தபசினுல் சம்பாதிப்பேன்" என்று நிச்சயித்துக்கொண்டு சுபமான கோகர்ணுசிரமத்தை அடைந்தான். அங்கு தபசு செய்துகொண்டு ஆயிரம் வரு ஷங்கள் ஆனதும் தன் தலையை அக்னியில் ஆஹுதி செய் தான். இவ்விதமே ஒன்பதாயிரம் வருஷங்கள் கடந்தன; அவனுடைய தலைகள் ஒன்பது அக்னியில் ஆஹுதி செய் யப்பட்டன. மற்ருேராயிரம் வருஷங்கள் முடிந்து பத் தாவது தலையை நறுக்க தசக்கிரீவன் உத்தேசித்துக்கொண் டிருந்தபோது, பிரம்மன் அவ்விடம் வந்தார். "தசக்கிரீவ! சந்தோஷமடைந்தேன். உனக்கு வேண்டிய வரங்களை சீக்கிரம் கேட்டுக்கொள். உன் விருப்பத்தைப் பூர்த்தி செய்கின்றேன். உன் பரிசிரமம் வீணுகாது" என்ருர்.

தசக்கிரீவன் ஆனந்தமடைந்து தேவரை நமஸ்கரித்து தழு - தழுத்த குரலுடன்—"பகவானே! ஜீவஜந்துக் களுக்கு மரணத்தை ஒழிய வேறுபயமில்லை. யமனுக்குச் சமானமான சத்ரு இல்லை. சாவின்மையை வேண்டுகின் றேன்" என்ருன். இதைக்கேட்டு பிரம்மா, "அமரத் வம் கிட்டாது. வேறு வரம் கேள்" என்று பகன்ருர்.

ராம! இவ்விதம் லோக கர்த்தாவான பிரம்மன் சொல்ல, தசக்கிரீவன் அஞ்சலி செய்துகொண்டு ஸுபர்னர், நாகர், யக்ஷர், தைத்தியர், தானவர், ராக்ஷசர்கள், இவர்களினின் றும், தேவர்களினின்றும் நான் கொல்லப்படாமல் இருக்க வேண்டுகின்றேன். தேவர்களால் பூஜிக்கப்பட்டவனே! மற்றப் பிராணிகளிடத்தில் எனக்கு சிந்தையில்லை. மனு ஷன் முதலான பிராணிகளை நான் திருணமாக எண்ணு கிறேன்" என்முன். பிதாமகர் "இராக்ஷச சிரேஷ்டனே! நீ சொன்னபடியே ஆகுக" என்று சொல்லி, "மற்றுமொரு வரம் கொடுக்கிறேன் கேள். உன்னால் முன்னர் ஆஹுதி செய்யப்பட்ட தலைகள் மீளவும் உண்டாகின்றன. மேலும் நினைத்த மாத்திரத்தில் உன் உருவம் உன் இஷ்டப்படி ஆகக்கடவது" என்றார்.

பிரம்மன் இப்படிச் சொல்லவும் முன்னம் ஆஹுதி செய்யப்பட்ட சிரசுகள் மீளவும் முளைத்தன. இப்படி தசக்கிரீவனிடம் பேசிவிட்டுப் பிதாமகர் விபீஷணனைப் பார்த்து "விபீஷண! குழந்தாய்! உன்னுடைய தர்மத் தில் நிலைநிறுத்திய புத்தியினால் நான் சந்தோஷமடைந் தேன். நல்விரதம் கொண்டவனே! வரம் கேட்டுக் கொள்" என்றார். விபீஷணன் கைகூப்பிக் கொண்டு "பகவானே! செய்யவேண்டியதைச் செய்தவனானேன். தாங்கள் பிரீதி அடைந்தவராய் வரம்கொடுக்க வேண்டு மானால் என் வரத்தைக் கேளுங்கள். அதாவது, பெருங் கஷ்டத்திலும் என் மனம் தர்மத்திலேயே நிற்கவேண்டும், பிரம்மாஸ்திரம் எனக்குத் தெரியட்டும்; என் மனப் போக்கெல்லாம் தர்மத்தை ஒத்ததாய் இருக்கட்டும்; எந்த ஆசிரமத்திலும் அதனைச்சார்ந்த தர்மத்தை அனுஷ் டிப்பேனாக." என்முன். பிரஜாபதி பதில் உரைத்தார்:- "நீ எப்படி தர்மிஷ்டனோ அப்படியாகட்டும். சத்துருக்களை நாசம் செய்பவனே! இராக்ஷசிக்கு பிறந்தபோதிலும், உன் மனது அதர்மத்தில் செல்லாது. உனக்குச் சாவின்மை

கொடுக்கிறேன்" இப்படி சொல்லிவிட்டு கும்பகர்ண னுக்கு வரம் அளிக்க சென்று கொண்டிருந்தவரை தேவர் கள் அஞ்சலி செய்துக்கொண்டு சொன்னார்கள்: "அப் பேர்ப்பட்ட வரன் கும்பகர்ணனுக்குக் கொடுக்கலாகாது. இந்த கெட்டபுத்தி லோகத்தை பயமுறுத்துகிறான் என்று தங்களுக்குத் தெரிந்ததே. அளவற்ற பிரகாசமுடைய வரே? வரம் கொடுப்பதுபோல அவனை ஏமாற்றிவிடுங் கள்." இதைக்கேட்டு பிரம்மா யோசனை செய்தார்; நினைக்கப்பட்ட ஸரஸ்வதிதேவீ பக்கத்தில் வந்தாள். பிரஜாபதி அவளுக்கு—"வாணி, இந்த இராக்ஷச சிரேஷ் டனுடைய முகத்தில் வேண்டிய தேவதையாகி இரு" என்றார். அவளும் அப்படியே செய்தாள். பிறகு பிரம்மா, "கும்பகர்ண! மகாபாஹுவே! வேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள்" என்றார். இதைக்கேட்டு கும்பகர்ணன் "தேவர்களுக்கு தேவரே! அநேக வருஷங்கள் தூங்க நான் விரும்புகிறேன்" என்றான். "அப்படியே ஆகட் டும்" என்று சொல்லிவிட்டு பிரம்மா தேவதைகளுடன் புறப்பட்டார்: ஸரஸ்வதி தேவியும் இராக்ஷசனை விட்டு அகன்றாள். பிறகு துஷ்ட கும்பகர்ணன்—"ஏன் எனது வாயிலிருந்து இப்படிப்பட்ட பேச்சு வெளி வந்தது. வந் திருந்த தேவர்களால் ஏய்க்கப்பட்டேன்" என்று வருந்த லானான். இவ்விதமாக சகோதரர்கள் யாவரும் வரங்கள் பெற்றுக்கொண்டு சிலேஷ்மாதக வனம் சென்று சுகமாக வசித்துக்கொண்டிருந்தார்கள்.

இவ்விராக்ஷசர்கள் வரங்கள் சம்பாதித்துக்கொண் டார்கள் என்று அறிந்துக்கொண்டு சுமாலி பயம்நீங்கி பரி வாரத்துடன் ரஸாதலத்திலிருந்து வெளியேறினான். தசக் கிரீவனைத் தழுவிக்கொண்டு "பிரியனே! தெய்வானுக்கிர கத்தால், உத்தமமான வரத்தை நீ மூன்று லோகங்களுக் கும் சிரேஷ்டரிடமிருந்து பெற்றுக்கொண்டு விட்டாய். விஷ்ணுவிடமிருந்து எந்த பெரும்பயம் எங்களுக்கு இருந்த

தோ, எதனுல் இலங்கையைவிட்டு ரஸாதலம் சென்ருே மோ, அது அகன்று விட்டது. இராக்ஷசர்களுக்குத் தகுதி யான இந்த இலங்கை நகரம் நம்முடையது; உனது தமையனுல் வசிக்கப்பட்டு வருகிறது. ஸாமத்தாலாவது, தானத்தாலாவது, பலாத்காரத்தினுலாவது இது மீட்கப் பட்டால் நீ இலங்கேச்வரனுக இருப்பாய் என்பதில் சந்தேகமில்லை. அமிழ்ந்திருக்கும் இராக்ஷச வம்சம் உன்னுல் கைதூக்கி விடப்பட்டதாகும்" என்ருன்.

தசக்கிரீவன் இதைக் கேட்டு களிப்புற்று பேச்சில் திறமையுள்ள பிரஹஸ்தனை தூதாக அனுப்பினுன். "பிரஹஸ்த! நீ விரைவாகச் செல். நைருத சிரேஷ்டனை குபேரனுக்கு என்னிடமிருந்து சாமம் முன்னிட்ட செய்தியாக "இராக்ஷசர்களுக்குடையதான இந்த இலங்காபுரி உன்னுல் கவரப்பட்டது. இது யுக்தமானதல்ல. பெரும் பலமுடையவனே! இன்று இதைக் கொடாவிடின், நான் என் இஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்வேன். தர்மமும் நாட்டப்படும், என்று சொல்" என்ருன். அவனும் இலங்கையை அடைந்து இராவணன் ஏவியபடி சொன்னுன். இது கேட்டு குபேரன் தனது தகப்பனுரிடம் சென்று நமஸ்காரம் செய்து இராவணனுடைய விருப்பத்தைத் தெரியப்படுத்தினுன். "அப்பா! தசக்கிரீவன் எனக்கு தூதனை அனுப்பி இருக்கிருன். முன்னம் இராக்ஷஸர்களால் வசிக்கப்பட்ட இலங்காபுரியைக் கொடுத்துவிடு என்கிருன். விரதம் பூண்டவரே! நான் என்ன செய்யட்டும்" என்ருன். பிரம்மரிஷி விச்ரவசு கைகூப்பி நிற்கும் குபேரனுக்கு "மகனே! என் பேச்சைக்கேள். இந்த இராக்ஷஸனேடு பகை உனக்குப் பொருந்தாது. இவனுல் விசேஷமான வரம் பெறப்பட்டது என்று நீ அறிவாய். ஆகையால் பரிவாரத்துடன் இலங்கையை விட்டு வசிப்பதற்காக கைலாஸ மலையைச் சேர்" என்ருர். தகப்பனுரைக் கௌரவித்து அவர் பேச்சுக்கிணங்க குடும்பத்தோடும்,

மந்திரிகளோடும், வாகனங்கள் செல்வம் என்பனவோடும் குபேரன் வெளியேறினன். அதன் பின் பிரஹஸ்தன் தசக்கிரீவனிடம் சென்று உரைத்தான்—"இலங்கை சூன்யமாய் இருக்கிறது. அதைவிட்டு தனதன் சென்றுவிட்டான். எங்களுடன் அந்த நகரத்தைப் புகுந்து 'உங்கள் தர்மத்தை நடத்துங்கள்" என்றான். அப்படியே மகா பலம் பொருந்திய தசக்கிரீவன், பிரஹஸ்தன், தம்பிகள், சைன்யபரிவாரங்களுடன் இலங்கையை அடைந்தான்.

இராக்ஷசேந்திரன் அபிஷேகம் செய்யப்பட்ட பிறகு தம்பிமார்களுடன், தங்கள் தங்கையின் விவாகத்தைப் பற்றி சிந்திக்கலானன். தங்கை சூர்ப்பணகையை வித்யுத்ஜிஹ்வன் என்ற காலகேயனை தானவேந்திரனுக்கு மணம் செய்து கொடுத்தான். பிறகு வேட்டையாடிக்கொண்டு திரியலானன். ராம! ஒரு நாள் திதியினுடைய குமாரனை மயனைப் பார்த்தான். அந்தத் தானவன் தன் பெண்ணை இராக்ஷசேந்திரனுக்குக் கொடுக்க ஆசை கொண்டு அவனது கையால் அவள் கையைப் பிடிக்கச் செய்து சிரித்த வண்ணம்—"அப்ஸரஸ் ஹேமையிடம் எனக்குப் பிறந்த பெண் மண்டோதரியை பார்யையாக அங்கீகரித்துக்கொள்ளுங்கள்" என்றான். "நல்லது" என்று சொல்லி தசக்கிரீவன் அக்னி மூட்டி விவாஹம் செய்துகொண்டான். வைரோசனனுடைய தௌஹித்திரி வஜ்ரஜ்வாலா என்பவளை கும்பகர்ணனுடைய பார்யையாக செய்வித்தான். விபீஷணர் கந்தர்வராஜன் சைலூஷனுடைய பெண்ணும் 'தர்மமறிந்தவளுமான சரமா என்பவளை பத்தினியாக அடைந்தார். இவ்விதம் பார்யைகள் அடைந்து இந்த இராக்ஷஸர்கள் சந்தோஷித்திருந்தார்கள். மண்டோதரிக்கு ஒரு புத்திரன் பிறந்தான். அவன் அழுகையில் மேகம்போல் சப்தம் செய்தான். அவனுடைய சத்தத்தால் இலங்கை முழுவதும் அசைவற்று நின்றது. அதனல் அவன் தகப்பனர் அவனுக்கு மேகநாதன் என்று பெயரிட்டான்! ராம!

56. இராவணனுடைய வெற்றிகள்

இராவணன், மகாபலம் பொருந்திய ஆறு மந்திரிகளுடனும் மஹோதர பிரஹஸ்தர்களுடனும், மாரீச. சுக ஸாரணர்களுடனும், வீரரான தூம்ராக்ஷன் இவர்களால் சூழப்பட்டவனாய் போரிடுவதில் ஆசை கொண்டுத் திரிந்தான். பின்னர் பட்டணங்களையும், நதிகளையும், மலைகளையும், வனங்களையும், உபவனங்களையும் கடந்து சீக்கிரமாக கைலாசகிரியை அடைந்தான். அவன் வந்ததும் யக்ஷர்கள் அவன் தங்கள் அரசனுடைய தம்பி என்று அறிந்து அவனிடம் சென்றார்கள் ; அவன் உத்தரவுப்படி போரிடலானார்கள். யக்ஷர்களுக்கும் இராக்ஷசர்களுக்கும் இடையே பெரும்போர் நடந்தது. அப்போது சுக்ரப்ரோஷ்டபதர்களாலும், சங்கபத்மங்களாலும் சூழப்பட்ட கதையை கையில் வைத்திருந்த தனாத்யக்ஷன் தூரத்திலிருந்து மரியாதையற்ற தம்பியைப் பார்த்துப் பிதாமஹருடைய குலத்துக்குத் தகுதியாகச் சொல்லலானான். "துன்மதியே! என்னால் தடுக்கப்பட்டும் அறியாமையினால், நரகம் சென்று இந்த பாபகாரியத்தின் பலனை உணர்வாய். எவன் தாயையும், தகப்பனையும். ஆசார்யரையும் அவமதிக்கிறானோ அவன் யமன் கையில் அகப்பட்டு அதன் பலனை அனுபவிக்கிறான். இந்த நிலையற்ற தேகத்தோடு எவன் தபசு செய்யவில்லையோ அந்த மூடன் செத்தபின் துஷ்டாத்மாவின் கதியை அடைந்து வருந்துகிறான். தர்மமாசரிப்பதால் ராஜ்யமும், தனமும், சௌக்கியமும்; அதர்மத்தால் துக்கமுமே. ஆதலால் சுகத்துக்காக தர்மம்செய்யவேண்டும் ; பாபம் ஒழிக்கவேண்டும். புண்ணிய கர்மங்களால் மனிதர்கள் உலோகத்தில் புத்தியும், அழகும், பலமும், புத்திரர்களும், செல்வமும், தைரியமும் அடைகிறார்கள். இப்படிப்பட்ட புத்தியுடையவனை நீ நரகம் செல்வாய். நான் உன்னுடன் பேசேன். துர்நடத்தையோருக்கு இதுவே தகும்."

பிறகு இராவணனுடைய மந்திரிகளும், மாரீச முதலானவர்களும் தோற்கப்பட்டு புறங்காட்டி ஓடலானார்கள். தசக்கிரீவனும் தலையின்மேல் யக்ஷேந்திரன் தனது கதையால் அடிக்க அசையவில்லை. ராம! தசமுகன் அப்பொழுது ஒரு பெரிய அஸ்திரத்தை எடுத்து அவன் கதையை முறித்துத் தள்ளி தனதனைத் தலையின்மேல் அடித்தான். தனதனும் இரத்தம் பெருக அடி வெட்டப்பட்ட அசோகம் போல் விழுந்தான். இவ்விதமாக இராக்ஷசேந்திரன் தனதனை ஜயித்து சந்தோஷமடைந்து அவனுடைய மனதைப்போல வேகமுடையதும், இஷ்டப்படி செல்லுவதும் வேண்டிய ரூபத்தை எடுத்துக்கொள்ளக் கூடியதுமான புஷ்பக விமானத்தைக் கைப்பற்றினான். இவ்விதம் வெற்றியால் கிடைத்த விமானத்தில் ஏறி அந்த துர்புத்தி, செருக்கின் பெருக்கால் மூன்று உலகங்களும் ஜயிக்கப்பட்டதாய் எண்ணினான்.

ராம! இவ்விதம் தமையனை ஜயித்துவிட்டு இராக்ஷசாபதியன் மகத்தான சரவணத்தை அடைந்தான். மலையின்மேல் சென்று ஒரு அழகான வனத்தைக் கண்ணுற்றான். அவ்விடம் புஷ்பகம் நின்றுவிட்டதை நோக்கி மந்திரிகளால் சூழப்பட்டவனாய் யோசிக்கலானான் :-“ ஏன் என் இஷ்டப்படி இந்தப் புஷ்பகம் செல்லவில்லை. மலையின் மேலிருப்பவன் ஒருவனுடைய காரியமாக இருக்க வேண்டும்.” இப்படி சிந்தித்துக்கொண்டிருக்கையில் பயங்கரமானவும், குள்ளமான பழுப்புவர்ணமான, அழகற்ற, வழுக்கத்தலையனை, சரிந்த தோள்களுடைய சங்கருடைய சேவகனை நந்தி கிட்ட வந்து, “ தசக்கிரீவனே! திரும்பிச்செல். சங்கரர் மலையின்மேல் கேளித்துக்கொண்டிருக்கிறார். ஸுபர்ண, நாக. யக்ஷர்கள், தேவகந்தர்வ ராக்ஷசர்களும் மற்ற ஜீவராசிகளும் பர்வதத்தின் மேல் செல்லலாகாது. துஷ்டபுத்தியே! நாசம் அடைய வேண்டாமாயின் திரும்பிச் செல்” என்றான். இதைக் கேட்டுக்

கோபித்து அவன் "சங்கரன் என்பது யாவன்" என்று சொல்லிக்கொண்டு மலையடியைச் சென்றடைந்தான். அங்கு மகாதேவருக்கருகில் சூலம் பிடித்துக்கொண்டு மற்றொரு சங்கரன்போல் ஜ்வலித்துக்கொண்டிருக்கும் நந்தியைக் கண்டான். அந்த இராக்ஷசன் வானர முகமுடைய அவனைப் பார்த்து மேகம் போலச் சிரித்தான். சிவனுடைய மற்றுமொரு வடிவம்போன்ற நந்திபகவான் கோபம் கொண்டு தசானனுக்கு— "என்னைப் பார்த்து அவமதித்து இடிபோல் சிரித்தாய்; ஆகையால் என்னைப் போன்றவர்களும், எனக்குச் சமானமான தேசஸுமுள்ள குரங்குகள் உனது விநாசத்துக்காக உண்டாவார்கள்" என்றார்.

அதன்மேல் நந்தியின் பேச்சை யோசியாமல் தசானனன் மலையைச் சேர்ந்து "நான் ஏறிச்சென்றுக் கொண்டிருந்த புஷ்பகத்தின் வழி மறிக்கப்பட்டதற்காக, கோபதியே! இந்த மலையை வேருடன் பிடுங்கி விடுகிறேன்" என்று சொல்லி மலையில் தனது தோள்களைக் கொடுத்துக் கிளப்பினான். மலை அசைந்தது; தேவருடைய கணங்கள் பயந்தன. பார்வதிதேவியும் மஹேசுவரரைக் கட்டிக்கொண்டாள். தேவசிரேஷ்டரான மஹாதேவர் அப்போது எளிதாக மலையைக் கால் சுண்டு விரலால் அழுத்தினார்; தசக்கிரீவனுடைய புஜங்கள் மலையின் கீழிருந்து வருத்தமுற்றன. வலியால் அந்த இராக்ஷசன் கதறினான்; மூன்று உலகங்களும் பயந்தன. "தசானனனே! உமாபதியான, மஹாதேவரைச் சந்தோஷப் படுத்துங்கள். இங்கு வேறு கதியில்லை" என்றார்கள் அவனுடைய மந்திரிகள். அதன்மேல் தசானனன் விருஷபக்கொடியோனுக்கு நமஸ்காரம் செய்து வெவ்வேறான சாமங்களினால் தோத்திரம் செய்தான்; இவ்விதம் ஓராயிரம் வருஷங்கள் கடந்தன. மஹாதேவர் திருப்தியடைந்து, ராம! அவனுடைய தோள்களை விடுவித்து

"உனது வீரத்தாலும், தைர்யத்தாலும் சந்தோஷமடைந்தேன். ராஜனே! நீ பயங்கரமான ராவம் (சத்தம்) செய்ததனால் இராவணன் என்று அழைக்கப்படுவாய்" என்றார். இதைக்கேட்டு "மஹாதேவரே! அப்படி உங்களைத் திருப்தி செய்தேன் என்றால் பிரம்மதேவரிடமிருந்து நான் தீர்க்காயுசு சம்பாதித்திருக்கிறேன். குறைந்துள்ள ஆயுசையும் சஸ்திரமும் கொடுங்கள்" என்றான். அதன்மேல் சங்கரர் இராவணனுக்கு சந்திரஹாஸம் எனப்பட்ட கட்கத்தையும் சேஷமான ஆயுசையும் கொடுத்து "இதை நீ அவமதிக்கலாகாது; அவமதித்தால் அது என்னிடம் திரும்பி வந்துவிடும்" என்றார். இவ்விதமாக இராவணன் என்னும் பெயரை அடைந்து, மஹாதேவரை வணங்கி புஷ்பகம் ஏறி மகாவீர்யமுள்ள க்ஷத்திரியர்களை ஹிம்ஸித்துக் கொண்டு திரியலானான்.

இப்படி அலைந்து வருகையில் இராவணன் இமயமலைச் சாரலை அடைந்தான். அவ்விடம் கிருஷ்ணாஜினமும், ஜடையும் தரித்துத் தேவதையைப்போல் பிரகாசித்துக் கொண்டிருந்த ஒரு கன்னியைக் கண்டான். அவளை பார்த்து காமங்கொண்டு சிரித்த வண்ணமாய்—"பத்ரே! உன் யௌவனத்துக்கு எதிராக ஏன் இப்படி இருக்கிறாய்? உன்னழகுக்கு தபசு ஏற்றதன்று. உன் கணவன் யார்? உன்னையடைந்தவன் பாக்கியசாலியே. இந்தப் பரிசிரமம் எதற்காக? சொல்" என்றான். அவனுக்கு மரியாதை செய்து அவள் சொல்லலுற்றாள்—"பிரம்மரிஷி குசத்வஜர் என் பிதா. அவர் பிரஹஸ்பதியின் குமாரர்: புத்தியில் அவருக்கு சமமானவர். என் பெயர் தேவவதி. சுரேசுவரரான விஷ்ணுவையே என் தகப்பனார் மாப்பிள்ளையாக உத்தேசித்திருக்கிறார். அந்த மனோரதத்தை சத்தியமாக்கும்பொருட்டு நான் அவரையே மனப்பூர்வமாக விவாஹம் செய்துக் கொள்வேன். எல்லாம் தெரிவித்தாயிற்று. இராஜனே! போகலாம். எனது தபசினால் உலோகத்தில்

நடப்பதெல்லாம் எனக்குத் தெரியும்'' என்றுள். இராவணன் மன்மத பாணங்களால் நோவுண்டு விமானத்தினின்று இறங்கி சொல்லலானுன்:—''அழகி! இந்த எண்ணமுடையவள் கர்வம் வாய்ந்தவளே. எல்லா குணங்களும் உடையவள் இப்படி பேசத்தகாது. யௌவனம் கடந்து விடும். நான் இலங்காதிபதி; தசக்கிரீவன் என்னும் பெயரன். எனது பார்யையாய் எல்லா சுகங்களையும் அனுபவி. விஷ்ணு என்கிருயே அவன் யாவன்? எவனை இச்சிக்கிருயோ அவன் வீரியத்திலாவது, தபசிலாவது, சம்பத்திலாவது எனக்குச் சமன் அல்லன்.'' இதைக் கேட்டு தேவவதி:—''அப்படிச் சொல்லாதே. உன்னைத் தவிர வேறு எந்த புத்திமான் தான் ஸர்வலோகங்களால் நமஸ்கரிக்கப்பட்ட விஷ்ணுவை இவ்விதம் அவமதிப்பான்'' என்று பதிலுரைத்தாள். அப்போது அந்த நிசாசரன் அவளைத் தலைமயிரால் பற்றினுன். தேவவதி அப்போது அக்னிமேல் மனம் செலுத்திச் சாக உத்தேசித்து ''அநார்யனே! உன்னால் அவமதிக்கப்பட்டதனுல் எனக்கு இனி ஜீவித்திருக்க இஷ்டமில்லை. உன் கண் முன்னரே நெருப்பில் புகுகிறேன். நான் நல்வினை, தானம், முதலியன செய்திருப்பேனுயின் ஓர் தர்மிஷ்டனுடைய சத்குணமுள்ள அயோனிஜையாகப் பிறப்பேனுக.'' என்று சொல்லி அக்கினியில் பிரவேசித்தாள். பிரபோ! இவள் தான் ஜனகராஜனுடைய குமாரி; தாங்கள் தான் விஷ்ணு.

பிறகு இராவணன் அனரண்யனுல் நன்றுகக் காப்பாற்றப்பட்ட அயோத்தியை யடைந்து அந்த புரந்தரனுக்குச் சமானமான அரசனிடம் ''என்னுடன் யுத்தம் செய்; அல்லது தோற்றேன் என்று சொல்; இது தான் என். உத்தரவு'' என்றுன். அனரண்யன் கோபம் கொண்டு ''சண்டை செய்வோம்'' என்றுன். அனரண்யனுக்கும் இராக்ஷசேந்திரனுக்கும் அற்புதமான யுத்தம்

நடந்தது. தீயில் இட்ட ஹவ்யம்போல அரசனுடைய பலம் நசித்தது. காறுறுகள் சமுத்திரத்தை யடைந்து மறைவதுபோல தனது பலம் நசித்ததைக்கண்டு அந்த அரசன் கோபம் கொண்டான். இந்திர தனுஸைக் கைப் பற்றி இராவணனிடம் வந்தான். அவனுடைய பாணங் கள் இராக்ஷசனுக்கு யாதொரு கேடும் செய்யவில்லை. இராக்ஷசராஜன் கோபங்கொண்டு அரசனது தலையின் மேல் அடித்தான்; அரசனும் இரதத்தினின்று விழுந் தான். அப்பொழுது அந்த இராக்ஷசன் புன்னகையுடன்- "என்னுடன் யுத்தம் செய்து பலனை அடைந்தாயா? அர சனே! மூன்று உலகங்களிலும் என்னுடன் போர் புரிய வல்லவன் எவனுமில்லை. நீ போகங்களில் ஆழ்ந்திருந்து என் பலத்தைப்பற்றி கேட்கவில்லை என்று சந்தேகிக் கிறேன்." என்றான். அதைக்கேட்டுக் குன்றிய பிராண னுடைய அவ்வரசன் "நான் என்ன செய்யமுடியும். காலம் வலியது. இராக்ஷசா! இக்ஷ்வாகு வம்சம் அவ மதிக்கப்பட்டமையால் சொல்லுகிறேன் கேள். நான் நல்வினை தானயாகாதிகள் செய்திருந்தால், எனதுபிரஜை களை நன்றாய் காப்பாற்றியிருப்பேனாகில் என் சொல் சத் தியமாகுக. இராமனென்ற பெயருடைய தாசரதி இக்ஷ் வாகு குலத்தில் உதிப்பான்; அவன் உன் பிராணனை அகற்றுவான்" என்றான். பிறகு அந்த அரசன் சுவர்க்க லோகம் சென்றான்; இராக்ஷசனும் அகன்றான்.

துஷ்ட இராவணன் திரும்பி வருகையில் அரச, ரிஷி, தேவ, தந்தர்வ கன்னிகைகளைக் கைப்பற்றலானான். கன் னியோ அல்லது ஸ்திரீயோ அழகுள்ளவளைக்கண்டதும், அவளுடைய பந்து ஜனங்களைக் கொன்று விமானத்தில் ஏற்றிவிடுவான். அவ்விதமே பன்னக, இராக்ஷச, அசுர, மானுஷ, யக்ஷ, தானவ கன்னிகைகளையும் விமானத்தில் ஏற்றினான். அவர்கள் எல்லோரும் ஒருங்கே சோகமும், பயமும் மிகுந்து கண்ணீர் வடித்தார்கள். "அன்னிய

ருடைய பார்யையைத் தொடுதல் உனக்குத் தகுந்த செய்கையே. இராக்ஷசாதமனே! நீ அவர்களுடன் சந்தோஷமடைகிற காரணத்தால் ஸ்திரீயினுலேயே உனக்கு மரணம்" என்று அவர்களுடைய புலம்பலைக் கேட்டுக் கொண்டு நிசாசரர்களால் சூழப்பட்டு இராவணன் இலங்கையுட் புகுந்தான்.

பின்னர் இராக்ஷசேந்திரன் பரிவாரங்களுடன் நிகும்பிலை எனப்பட்ட இலங்கையிலுள்ள உபவனத்தை அடைந்தான். அங்கு நூறு யூபங்கள் கொண்ட சைத்தியத்தில் ஓர் யக்கியம் நடப்பதையும், தனது மகன் மேகநாதன் கிருஷ்ணுஜினம் உடுத்து இருப்பதையும் கண்டான். இலங்கேசன் அவனை அணுகிக் கைகளால் தழுவி "என்ன நடக்கிறது? உண்மையைச் சொல்" என்றுன். பிராமணச்சிரேஷ்டரான உசனஸ் பதிலுறைத்தார்:— "நான் எல்லாம் சொல்லுகிறேன்; கேளுங்கள். உமது புத்திரன் அக்னிஷ்டோமம், அசுவமேதம், பகுசுவர்ணகம், ராஜஸூயம், கோமேதம், வைஷ்ணவம், மாஹேச்வரம் என ஏழு யாகங்களை விஸ்தாரமாய்ச் செய்தான். மஹேச்வரம் முடிந்ததும் சாக்ஷாத் பசுபதியிடமிருந்து மனிதர்களுக்குக் கிட்டாத வரங்களைப் பெற்றிருக்கிறுன். திவ்யமான ஆகாசத்தில் உலாவும் விமானமும், எதனுல் தமஸ் உண்டாகின்றதோ, எது உபயோகிக்கப்பட்டால் அவனுடைய போக்கு சுரர்களுக்காவது, அசுரர்களுக்காவது புலப்படாதோ, அத்தகைய மாயையும், வற்றாத அம்பராத்தூணிகளும், பாணங்களும், சண்டையில் சத்ருவை நாசம் செய்யும் அஸ்திரமும், இந்த வரங்களை எல்லாம் பெற்றுக் கொண்டு யக்கியங்கள் முடிந்தவுடன் உங்களைக் காண ஆவலுள்ளவனாக இருக்கிறுன்". தசக்கிரீவன்-"சௌம்யனே, சத்ருக்களான இந்திராதிகள் பூஜிக்கப்பட்டார்களே; இது தகுந்ததல்ல. எப்படியும் நீ செய்தது நல்ல காரியம்தான்; வா. வீடு செல்வோம்" என்று சொல்லி

பிள்ளையோடும், விபீஷணனோடும் வீடுசென்று, தூக்கித் துக்கொண்டு வந்திருந்த எல்லா ஸ்திரீகளையும் விமானத்தினின்று இறக்கினன்.

ஓர் இரவு சந்திரன் கிளம்பியதும் புஷ்பதூளியைக் கொண்டதும், புஷ்பமணமுள்ளதுமான, சுகமான காற்று அந்த மலையை வாசனையுள்ளதாகச் செய்து வீசி இராவணனுடைய காமத்தைப் பெருக்கிற்று. பெருமூச்சு விட்டுக்கொண்டு அவன் சந்திரனைப் பார்க்கலானன். அப்போது திவ்யமான ஆபரணங்களாலும் புஷ்பங்களாலும் அலங்கரித்துக்கொண்டு அப்சரஸ் சிரேஷ்டையான இரம்பை அவ்விடம் வந்தாள். தனது சேனையின் மத்தியாகப் போய்க்கொண்டிருந்தவளைக் தசக்கிரீவன் காமம் மேற்கொண்டவனாய் எழுந்திருந்து கையைப்பற்றி அவள் வெட்கிக்கொண்டிருக்க, புன்சிரிப்புடன் “அழகியே, எங்கு செல்லுகின்றாய்? என்ன உத்தேசம்? என்னைத் தவிர உலோகத்தில் வேறொரு பிரபுவும் இல்லை. நான் தசானனன். உன்னை யாசிக்கின்றேன். என்னைக் கணவனாகக் கொள்” என்றான். இதைக் கேட்டு நடுங்கிக் கொண்டும் கைகூப்பிக்கொண்டும் இரம்பை சொன்னாள்—“நீ எனது குரு. தயவு செய். நீ இப்படிப் பேசலாகாது. தர்மப்படி நான் உனது மருமகள். அன்னியரால் அவமதிக்கப்பட்டால் நீ என்னைக் காக்க வேண்டியவன்.” இராக்ஷசன் “எனது மருமகள் என்று சொன்னையே, அது ஒரு பத்தினியுடையவர்களினது கிரமம். ஆனல் தேவலோகத்தில் ஏகபத்னித்துவமாவது, அப்ஸரஸுகளுக்குக் கணவன் என்பதாவது வழக்கமல்ல” என்று சொல்லி அவளை மானபங்கம் செய்தான். . பிறகு, இரம்பை நகைகளும், புஷ்பங்களும் கலைந்தவளாய் நலகூபரனிடம் சென்று அவன் காலில் விழுந்தாள். “என்ன சமாசாரம்” என்று அவன் வினவ இரம்பை பெருமூச்சுவிட்டுக்கொண்டும், கைகூப்பிக்கொண்டும் எல்லா விஷயங்களையும் நடந்தபடி

தெரிவித்தாள். இதைக்கேட்டு வெகுகோபங்கொண்டு நலகூபரன் இராக்ஷசேந்திரனைக் குறித்து "எப்பொழுது நீ மனம் ஒவ்வாதவளைக் காமுற்று அவமதிக்கின்றாயோ உன் தலை அக்கணமே ஏழுதுண்டங்களாகக் கடவது" என்று கடும் சாபம் இட்டான். இந்த சாபத்தைக் கேள்வியுற்று அவனால் எடுத்துக்கொண்டு போகப்பட்ட பதிவிரதைகள் சந்தோஷித்தார்கள்.

ஒரு சமயம் இராவணன் கைலாசத்தைத்தாண்டி இந்திரலோகத்தை அடைந்தான். உடனே ருத்ரர்களும், ஆதித்தியர்களும், வஸுக்களும், மருத்துகளும், அசுவினிகளும், சன்னத்தர்களாய் இராக்ஷசர்களை நோக்கி வந்தார்கள். அப்பொழுது தேவர்களுக்கும், இராக்ஷசர்களுக்குமிடையே பெரும் சண்டை நடந்தது. தசக்கிரீவன் கோபங்கொண்டு தேவர்களைக் கொன்றுக்கொண்டு இந்திரனை அடைந்தான். இந்திரன் மகாநாதம்கொண்ட பெரிய தனுஸை நாணேற்றி அக்னி சூர்யர்களுக்கொப்பான தேஜஸை உடைய அம்புகளை இராவணன் மேல் எய்தான். தசக்கிரீவனும் அவ்வண்ணமே இந்திரனைப் பாணவர்ஷத்தால் நிரப்பினான். இருளடைந்ததும் தேவர்களும் இராக்ஷசர்களும் சண்டையிட்டுக்கொண்டு யார் யாரென்று அறியாமல் இருந்தனர். இந்த அந்தகாரத்தில் இந்திரன், இராவணன், இராவணி இம்மூவருமே மோஹமடையாதிருந்தனர். அப்போது இராவணி மிக்க கோபங் கொண்டவனாய் மஹேந்திரனைப் பாண வர்ஷத்தினால் மறுபடியும் தாக்கினான்; இந்திரன் தனது தேரையும் தேர்ப்பாகனையும் விட்டு ஐராவதத்தின்மேல் ஏறி இராவணியைத் தேடலானான். ஆனால் மாயை பலமுள்ள இராவணி மாயையால் இந்திரனைக் கட்டித் தனது சேனையின் சமீபம் கொண்டு சேர்த்துப் போர் முனையில் நின்ற தகப்பனைப் பார்த்து "அப்பா! போவோம். சண்டையை நிறுத்துங்கள். ஜயித்துவிட்டோமென்று அறியுங்கள். கவலை

வேண்டாம். ஸுரசைன்யத்துக்கும் மூன்று உலோகத்துக்கும் குருவானவன் பிடிக்கப்பட்டான். தேவர்களும் கர்வபங்கம் அடைந்தார்கள். இனி மூன்று உலோகங்களையும் பெறுமையுடன் அனுபவியுங்கள்." என்று சொன்னான். இராவணியின் பேச்சைக்கேட்டு இராவணன் மனச் சமாதானம் அடைந்தான்.

மஹேந்திரன் தோல்வியடைந்ததும் பிரம்மாவை முன்னிட்டுக்கொண்டு தேவர்களெல்லாரும் இலங்கையை அடைந்தார்கள். புத்திரனாலும், சகோதரர்களாலும் சூழப்பட்டிருந்த இராவணனிடம் சென்று பிரம்மா ஆகாயத்தில் இருந்தவண்ணம் சாந்தமாகச் சொல்லலானார்—"வத்ஸ! நான் சந்தோஷமடைந்தேன். என்ன ஆச்சரியம், உன் புத்திரனுடைய தைரியமும், மஹிமையும் உன்னுடையதுக்குச் சமமல்லாது மேல்பட்டும் இருக்கிறதே. உன் தேஜஸினாலே நீ மூன்று உலோகங்களையும் வென்றாய்; உன் பிரதக்ஞையை நிறைவேற்றினாய். உன் பிள்ளையினிடம் எனக்கு சந்தோஷம். உன் புத்திரன் அதிக பலமுடையவன்; புவியில் இனி இந்திரஜித்து என்று அழைக்கப்படுவான். மஹேந்திரன் விடுதலை பெறட்டும். இதற்கு மாறாக தேவர்கள் என்ன கொடுக்க வேண்டும்" என்றார். அதன் மேல் இந்திரஜித்து-"இவர் விடப்படவேண்டுமானால் நான் சாவாமை பிரார்த்திக்கிறேன்." என பதிலுரைத்தான். ' "புவியில் எந்த ஜீவனுக்கும் அமரத்வம் இல்லை" என்று பிரம்மா கூற மேகநாதன் சொல்லலுற்றான். "நான் சண்டையில் இறங்கி சத்ருவை ஜயிக்க ஆவல் கொண்டு அக்கினியை வளர்த்து ஹவ்யமந்திராதிகளால் பூஜிப்பேனால், அதிலிருந்து குதிரைகள் பூண்ட இரதம் வெளிகிளம்பட்டும்; அதில் நிற்க எனக்கு அமரத்துவம் கிட்டட்டும்; இது தான் நான் கேட்கும் வரன். அப்படி ஹோமத்தைப் பூர்த்தி செய்யாமல் போருக்குக் கிளம்புவேனாகில் அப்

போது நான் நாசமடைக." "அப்படியே ஆகட்டும்" என்று பிதாமகர் செப்பினார்; இந்திரன் விடுதலை அடைந்தான. தேவர்களும் தேவலோகம் சென்றார்கள். ராம! உலோக கண்டகனான இராவணன் வரலாறு இதுதான்" என்றார்.

"ஒரு காலத்தில் இராவணன் கிஷ்கிந்தையை அடைந்து தங்கமாலையணிந்த வாலியைப் போருக்கு அழைத்தான். அப்பொழுது தாரையின் பிதாவும், மந்திரியுமான தாரன்—"இராக்ஷசேந்திர! உனக்கு நிகரான வாலி வெளியேறி இருக்கிறான். நான்கு சமுத்திரங்களிலும் சந்தியைச் செய்துவிட்டு இதோ திரும்பி வருவான். சிறிது பொருத்திரு. அல்லது மரணமடைய தீவிரப்பாயாகில் தெற்கு சமுத்திரம் செல்" என்றான். இராவணன் தாரனை பயமுறுத்திவிட்டு தக்ஷிண சமுத்திரம் சென்றான். அங்கு பொன் மலையையும், இளஞ்சூரியனையும் போன்ற வாலியை ஸந்தியோபாஸனையில் இருக்கக்கண்டு விமானத்திலிருந்து இறங்கி அவனை பிடிக்குமாறு நிச்சப்தமாய்ச் சென்றான். இப்படி வந்த இராவணனை அகஸ்மாத்தாய் நோக்கி, வாலி கலவரம் கொள்ளவில்லை; இராவணனைப் பிடித்துக் கக்ஷத்தில் இடுக்கிக்கொண்டு நான்கு சமுத்திரங்களிலும் ஸந்தியை உபாஸித்துவிட்டு, சிறிதும் களைப்பின்றி, கிஷ்கிந்தையில் இறங்கினான். கக்ஷத்திலிருந்து இராவணனை விடுவித்தான்; சிரித்துக்கொண்டு-"எவ்விடம் உனக்கு?" என்று மெள்ளக் கேட்டான். இராவணன் ஆச்சரிய முற்று சிரமத்தால் வருந்திய கண்களுடன் செப்பினான்—"உன் பலம் என்ன! வீரியம் என்ன! காம்பீரியம் என்ன! பசுவைப்போல என்னைப் பிடித்து நான்கு சமுத்திரங்களும் சுற்றினையே! வானர சிரேஷ்டனே! உன் பலம் அறிந்தேன். உன்னுடன் அக்னி சாக்ஷியாக நட்பை விரும்புகிறேன்." உடனே தீ மூட்டி வானரனும் இராக்ஷசனும் சஹோதரத்வம் மேற்கொண்டு ஒருவரையொருவர் தழுவிக் கொண்டார்கள்."

57. அநுமான் ஜனனம்

பிறகு அகத்தியரைக் கைகூப்பிக்கொண்டு, இராமர் கேட்கலானார். "வாலியினுடையவும், இராவணனுடையவும் பலம் அளவிடக் கூடாததே; ஆனால் இவை அநுமானுடைய பலத்துக்குச் சமானமானவை அல்ல என்பது என் மதம். சூரத்தன்மை, தயை, பலம், தைரியம், பாண்டித்தியம், நீதி, விக்ரமம், பிரபாவம், இவை யாவும் அநுமானிடத்தில் குடிக்கொண்டிருக்கின்றன என்று தோன்றுகிறது. தன் பிராணனுக்குப் பிரியமான வானரத்தலைவன் துக்கித்துக்கொண்டிருந்ததனால், தனது பலத்தை அநுமான் அறியவில்லையென்று எண்ணுகிறேன். விஸ்தாரமாக யாவற்றையும் சொல்லுங்கள்" என்றார். இதைக் கேட்டு அநுமானுக்கு முன்னிலையில் அகத்தியர் சொல்லலானார் :—" அநுமானைக் குறித்து தாங்கள் சொல்லுவது உண்மையே. சூரியவரன் கிடைத்தவும், தங்கமானதுமான, மலை ஸுமேரு எனப்பட்டது. அவ்விடம் இவனுடைய பிதா கேசரி என்பவன் அரசாண்டு வந்தான். அவனது பார்யை அஞ்சனை என்பவள். அவளிடம் வாயுபகவான் இந்த உத்தமமான மகவைப் பெற்றான். ஒரு நாள் காய்கனிகள் கொண்டுவரக் கருதி காட்டில் சஞ்சரிக்கலானாள். அப்பொழுது இக்குழந்தை தாயாரைக் காணாததாலும், பசியினாலும் சரவணத்தில் ஷண்முகன் அழுததுபோல் மிகவும் அழுதான்; உதித்துக் கொண்டிருக்கும் சூரியனைப் பார்த்து அது ஒரு பழம் என்ற ஆசையால் அதைக் குறித்துக் கிளம்பினான். இப்படிப் பறந்துக்கொண்டு சென்ற புத்திரன் சூரியனால் எறிக்கப்படக்கூடும் என்ற பயத்தினால் அவனை பனியினால் குளிர்ந்து வாயுபகவான் பின் தொடர்ந்தான். ஆகாசம் சென்று அநேக ஆயிர யோசனைகள் கடந்து தகப்பன் பலத்தினாலும் தனது இளமையினாலும் சூரியனை நெருங்கினான். இவன் குழந்தை என்றும், தவறு அறியா

தவனென்றும் இவனால் பெரும் காரியம் கைகூடவேண்டு மென்றும் நினைத்து அவனை சூரியன் எரிக்கவில்லை. எந்த தினம் இவ்வண்ணம் சென்றானோ, அதுவே இராகு சூரியனைக் கிரஹிக்கவேண்டியதினம். இராகு, சூரிய னுடைய ரதத்தின்மேல் அநுமானால் தாக்கப்பட்டு பயந்து இந்திரலோகம் சென்று இந்திரனைப் பார்த்து கோபத்துடன் சொல்லலானான்—" விருத்திரனைக் கொன்றவனே! சந்திர சூரியர்களை எனது ஆஹாரமாகக் கொடுத்துவிட்டு எப்படி மற்றொருவனுக்குக் கொடுத்தாய். இன்று ஏற்பட்ட காலத்தில் பிடிக்குமாறு சூரியனண்டை செல்ல, மற்றொரு இராகு அவனைப் பிடித்துக்கொண் டிருந்தான்." இராகுவின் பேச்சைக்கேட்டு மனங்கலங்கின வனாய் வாஸவன் சூரியனிருந்த இடம் சென்றான். மாருதி ஐராவதத்தைக்கண்டு அதுபெரிதாகயிருந்தும் ஒரு பழம் என்று நினைத்து அதன் மேல் பாய்ந்தான். இந்திரன் சிறிது கோபம்கொண்டு தனது குலசத்தை எறிந்து அநு மானை அடித்தான்; அவன் மலையின்மேல் வீழ அவனு டைய வலது கதுப்பு அடியுண்டது. தனது குமாரன் அடிபட்டு விழுந்ததைக் கண்டு வாயு பகவான் கோபம் கொண்டு ஜீவஜந்துக்களுக்கு அஹிதம் செய்பவனாய் அவர் களுள்ளிருந்து விலகிக்கொண்டு தனது சிசுவை எடுத்துக் கொண்டு தன் இருப்பிடம் அடைந்தான். அப்போது பிரஜைகள், கந்தர்வர், தேவர், அசுரர், மானுஷர் எல் லோரும் கூடி சிரமமடைந்து பிரஜாபதியிடம் ஓடினார் கள்; செப்பலானார்கள்—" தாங்கள் எங்களுக்கு ஆயுசின் பதியாக வாயுவைக் கொடுத்தீர்கள். எங்கள் பிராண னுக்கு நாதனாக இருந்து இன்று ஏன் நின்றுவிட்டு, அந்தப் புரத்தில் இருக்கும் ஸ்திரீகளைப்போல எங்களுக்கு துக்கம் விளைத்திருக்கிறான்? தங்களைச் சரணம் அடைந்தோம். இந்த துக்கத்தை விலக்குங்கள்." அதன்மேல் எல்லாருட னும் பிரஜாபதி மாருதி இருப்பிடம் சென்றார்.

பிரஜாதிபதியைக் கண்ணுற்றதும் குழந்தையை எடுத்துக்கொண்டு வாயு பகவான் எழுந்து நின்றான். அவரை மூன்று தரம் வணங்கினான். பிரம்மா தனது கையால் சிசுவைத் தடவிக் கொடுத்தமாத்திரம் அவன் நீர் கிடைத்த பயிரைப்போல் மறுபடியும் ஜீவிதனானன். இதைக்கண்டு வாயு பகவான் தடையை விலக்கினான்; பிராணன் எல்லா ஜீவராசிகளிடத்திலும் சஞ்சரிக்கலாயிற்று. அப்போது பிரம்மா மாருதிக்குப் பிரியமானதைச் செய்ய எண்ணி "ஓ, மஹேந்திர ஈச, வருண, பிரஜேச்வர, தனேச்வரர்களே! நான் சொல்வதைக் கேளுங்கள். இந்த சிசுவால் செய்ய வேண்டிய காரியம் இருக்கின்றது. மாருதனுக்குத் திருப்தி அளிக்குமாறு எல்லோரும் வரம் கொடுங்கள் என்றார். அப்பொழுது இந்திரன் நீர்க்குவளைகொண்ட ஒரு மாலையைத் தந்து "எனது வஜ்ரத்தால் இவன் அநு(கதுப்பு) அடிபட்டபடியால், இனி அநுமான் என்று விளங்குவான். இனிமேல் என் வஜ்ராயுதத்தால் இவனுக்கு யாதுகேடும் நேரிடாது" என்றான். மார்த்தாண்டன் "எனது தேஜஸில் சதாம்சம் இவனுக்குக் கொடுக்கிறேன். இவன் அத்தியயனம் ஆரம்பித்ததும் இவனுக்குச் சாஸ்திரங்களை அளிக்கின்றேன். அதனால் இவன் வாக்குடையவன் ஆவான்" என்றான். "என்னுளும் என் பாசத்தாலாவது, நீரினாலாவது, இவனுக்கு மிருத்யு அண்டாது" என்றான் வருணன். "என் தண்டத்தால் கொல்லப்படாமையும், நித்திய ஆரோக்கியமும், போரில் துக்கமின்மையும், கொடுக்கிறேன்" என்றான் யமன். தனதன் தன் கதையால் சாவில்லை' என்றான். சங்கரன் "எனது ஆயுதங்களால் கொல்லப்படமாட்டாய்" என்று வரன் அளித்தான். பிரம்மா "தீர்க்காயுசாயும், மஹாத்மாவாயும் இருப்பாய்" என்றார். விசுவகர்மா "என்னால் செய்யப்பட்ட சஸ்திரங்களால் நீ மரணம் அடையாய். சிரஞ்சீவியாய் இருப்

பாய்'' என்று வரமளித்தான். இவ்விதம் தேவர்களின் வரங்களால் இந்த சிசு அலங்கரிக்கப்பட, ஜகத்குருவான பிரம்மா சொல்லலானுர்- '' மாருதனே! உன் புத்திரன் பகைவருக்கு பயங்கரனுகவும், மித்திரர்களுக்கு அபயங் கரனுகவும், தோல்வி அடையாதவனுகவும், இஷ்டப் படி ரூபம் கொள்ளக்கூடியவனுகவும் இஷ்டப்படி செல் லக்கூடியவனும், கீர்த்திமானுகவும், தடுக்கக்கூடாதவ னும் இருப்பான். சண்டையில் இராவணனுக்கு இடைஞ் சலேயும் இராமருக்கு பிரியமான மயிர்க்கூச்செறியும் காரி காரியங்களையும் இவன் செய்யப்போகின்ருன்''. இப்படிச் சொல்லிவிட்டு பிதாமஹரும், மற்றவரும் வந்த வழி திரும் பிச் சென்ருர்கள்.

'' ராம! இவ்விதம் வரங்களைப்பெற்று இந்த வான ரச் சிரேஷ்டன் சமுத்திரம் போல் வளர்ந்தான். பய மின்றி மகரிஷிகளின் ஆசிரமங்களில் துன்பம் செய்ய லானுன். அப்பொழுது பிருகு, அங்கிரஸ வம்சத்தவர் களான மகரிஷிகள் தங்கள் கோபத்தையடக்கிக் கொண்டு "வானரனே! உன் பலச்செருக்கால், எங்களே வருத்துகிருயன்ருே. எங்கள் சாபத்தால் நீ உனது பலத்தை நெடுநாள் மறந்திருப்பாயாக. எப்பொழுது நினைவு மூட்டப்படுகின்ருயோ அப்பொழுது உன் பலம் வளரும்'' என்ருர்கள். இந்த சாபத்தால் தான் வாலி சுக்கிரீவருள் பகை மூண்டபோது தன் பலத்தை அநு மான் அறியவில்லை'' இவ்விதம் அகத்தியர் செப்பியதைக் கேட்டு இராமரும், சௌமித்திரியும், வானரர்களும், இராக்ஷசர்களும் ஆச்சரியமடைந்தார்கள். மேலும் அகத் தியர் இராமருக்குச் சொன்னுர் "எல்லாம் தாங்கள் கேட்டுவிட்டீர்கள். நாங்கள் தங்களைப் பார்த்தாயிற்று; பேசியும் முடித்தோம். ராம! நாங்கள் போய் வரு கிருேம்.'' அப்பொழுது இராமர் மஹரிஷியை நமஸ்கரித்து கைகூப்பிக்கொண்டு சொல்லலுற்ருர்:—'' தங்களது தரிச

னத்தால் இன்று தேவதைகளும், பித்ருக்களும், பிரபிதாமஹர்களும், சந்தோஷமடைந்தார்கள். எனது பந்துக்களும் திருப்தி அடைந்தார்கள். ஜனங்களை நிலைநிறுத்திவிட்டு, எனது காரியங்களில் முனைந்தவனாய் தங்களது பிரபாவத்தால் கிரதுக்கள் செய்ய விரும்புகிறேன். தாங்கள் பிரதி தினமும் அந்த யக்கியங்களில் இருந்துகொண்டு என்னை அனுக்கிரஹிக்க வேண்டும். தபோநிதிகளான தங்களை அண்டி நான் திருப்தி அடைவேன்'' "அப்படியே" என்று பகன்று அகத்தியர் முதலான ரிஷிகள் தங்கள் இருப்பிடம் சென்றார்கள்.

விதிப்பிரகாரம் பட்டாபிஷேகம் முடிய, புரவாஸிகள் இரவை சந்தோஷத்துடன் கழித்தார்கள். காலையில் வந்தினர்கள் இராஜகிரஹம் வந்து அரசனை சந்தோஷப்படுத்துமாறு தோத்திரம் செய்தார்கள். இதைக் கேட்டு இராமர் எழுந்திருந்து ஸ்நானம் செய்துவிட்டு, பரிசுத்தராய் காலத்தில் ஆஹுதிகள் செய்து முடித்து இக்ஷ்வாகு வமிசத்தவரால் சேவிக்கப்பட்ட ஆலயத்தை அடைந்து தேவர்களையும், பித்ருக்களையும், பிராமணர்களையும் பூஜித்துவிட்டு ஜனங்கள் சூழ வெளிக்கட்டுக்கு வந்தார். அப்பொழுது மந்திரிகளும், வசிஷ்டர் முதலான புரோகிதர்களும் அவரை நெருங்கினார்கள். க்ஷத்திரியர்களும், மற்ற அரசர்களும் வந்தார்கள். வேலையாட்களும் கைகூப்பி நின்றார்கள். இருபது மஹாவீரர்களான வானரர்களும் சுக்கிரீவனுடன் வந்தடைந்தார்கள். நான்கு இராக்ஷசர்களுடன் விபீஷணரும் வந்து சேர்ந்தார். வேதங்களறிந்த குலீனர்களும் தலை குனிந்து வணங்கிக் கொண்டு நின்றார்கள். இவ்வண்ணம் எல்லாராலும் சூழப்பட்டு தேவேந்திரனைவிட அதிகமாக விளங்கினார் இரகுநந்தனர். எல்லாரும் இப்படி இருக்க பௌராணிகர்கள் மதுரமான கதைகளை செப்பினார்கள்.

இவ்விதம் இராகவர் அரசாண்டு வந்தார். இராஜாக்கள் இராமரால் மரியாதை செய்யப்பட்டு தத்தம் தேசம் திரும்பிச் சென்றார்கள். பெருங்காரியம் செய்து முடித்த சுக்கிரீவனுக்கும், விபீஷணருக்கும் தன்னைச் சுற்றியிருந்து ஜயம் கொணர்ந்த இராக்ஷசர்களுக்கும், வானரர்களுக்கும், இராகவர் விதம்விதமான இரத்தினங்களைக் கொடுத்தார். அவர்களும் அந்த இரத்தினங்களைத் தங்கள் தலைமேலும் கைகளிலும் அணிந்துகொண்டார்கள். பிறகு இராமர் அநுமானையும், அங்கதனையும் மடியில் ஏற்றிக் கொண்டு சுக்கிரீவனைப் பார்த்து—"அங்கதன் உன் சத்புத்திரன்; அநுமான் உன் மந்திரி. இவர்கள் எனக்கு ஹிதம் செய்வதில் ஊக்கமுள்ளவர்கள். உன்னிடமும் பலவித மரியாதை பெறத்தகுந்தவர்கள்" என்று சொல்லி தன் மேலிருந்த ஆபரணங்களைக் கழட்டி அங்கதனையும் அநுமானையும் அலங்கரித்தார். பின்னர் நீலன், நளன், குமுதன், கந்தமாதனன், சுஷேணன், பனசன், மைந்தன், த்விவிதன், ஜாம்பவன், கவாக்ஷன், விநதன், தூம்ரனு மான சேனைத் தலைவர்களைப் பார்த்து—"நீங்கள் எல்லோரும் என் சிநேகிதர்கள்; எனது உடல்: என் பிராதாக்கள். உங்களால் நான் என் விசனத்தினின்று தவிர்க்கப்பட்டேன். உங்களைக் கொண்ட சுக்கிரீவன் அதிர்ஷ்டசாலியே" என்று மதுரமாகச் சொல்லிவிட்டு அவரவர்களுக்குத் தகுந்தபடி ஆபரணங்களைத் தந்தார்; ஆலிங்கனம் செய்தார். இவ்விதம் இக்ஷ்வாகு நகரத்திலே வானரர்களும், இராக்ஷசர்களும், சந்தோஷித்துக்கொண்டிருக்க குளிர் காலத்திரண்டாவது மாதம் கழிந்தது. இராமருடைய பிரீதியுள்ள செய்கைகளால் காலம் சுகமாகச் சென்றது.

பின்னர் இராமர் சுக்கிரீவனைப்பார்த்து—"ஸௌம்ய!
18 கிஷ்கிந்தை போகலாம். சத்துருக்களின்றி இராஜ்யத்தைப் பரிபாலி. அங்கதனையும், அநுமானையும் மற்ற

மஹா வீரர்களையும் பிரீதியுடன் நடத்திவா; அவர்களுக்கு அபிரியம் செய்யாதே" என்று சொல்லிவிட்டு அவனை ஆலிங்கனம் செய்துக்கொண்டார். பின்னர் விபீஷணனை நோக்கி "ராஜனே! இலங்கை செல்லுக. நீர் தர்மமறிந்தவர். அதர்மத்தில் மனத்தைச் செலுத்தாதீர். புத்தியுள்ள அரசர்கள் இராஜ்யத்தை நிச்சயம் அனுபவிக்கிறார்கள். நீரும், சுக்கிரீவனும் என்னை மறத்தலாகாது" என்றார். இதைக் கேட்டு ரிக்ஷர்களும், வானரர்களும், இராக்ஷசர்களும், "நன்று, நன்று" என்று இராமரைப் புகழ்ந்தார்கள். அநுமான் வணங்கி—"ராஜனே! என் சிநேகமும், பக்தியும் தங்களிடம் எப்பொழுதும் இருக்கட்டும். வேறு எங்கும் செல்ல வேண்டாம்." என்றான். அநுமானுடைய பேச்சைக் கேட்டு இராமர் தமது ஆசனத்திலிருந்து எழுந்து அநுமானைக் கட்டிக்கொண்டு சொன்னார்.—"கபி சிரேஷ்டனே! அப்படியே இருக்கும். சந்தேகமில்லை. என் கதை உலோகத்தில் இருக்கும் வரையில் அதுவரை உன் கீர்த்தியும் இருக்கும்; உன் உடலில் பிராணனும் இருக்கும். உலோகங்கள் இருக்கும் வரையில் என் கதை நிலைநிற்கும். நீ செய்த ஒவ்வொரு உபகாரத்துக்கும் என் பிராணனைக் கொடுக்கின்றேன்; மிகுதிக்கு நான் உனக்கு கடன் பட்டிருக்கிறேன்" என்றார். இதைக் கேட்டு யாவரும் கண்ணீர் விட்டுக்கொண்டு பிராணன் தேகத்தை விடுவது போலத் தங்கள் இருப்பிடம் சென்றார்கள். பிறகு இராமர் புஷ்பகத்துக்கு விடை கொடுத்தனுப்பினார்.

58. சீதாவிவாசம்

வெகு காலம் இராமரும் சீதையும் சந்தோஷத்துடன் கூடியிருக்க சிசிர் காலம் வந்தது. காலையில் தரும காரியங்களை முடித்துக்கொண்டு இராமர் எஞ்சிய பகலை அந்தப்புரத்தில் கழிப்பார். சீதையும் காலை வேலைகளையும், தேவ காரியங்களையும் செய்துவிட்டு மாமியார்களெல்

லாருக்கும் சுசுரூஷை செய்து பின்னர் நன்ருய் அலங் கரித்துக்கொண்டு இராமரிடம் வருவாள். ஒரு நாள் தேவ கன்னியைப்போன்ற சீதையைப் பார்த்து—"வைதேகி! பிரசவகாலம் கிட்டிவிட்டது. என்ன விரும்புகிருய்? என்ன செய்ய வேண்டும்" என்ருர் இராமர். வைதேகி புன்னகையுடன் "இராகவரே! புண்ணியமான தபோ வனங்களைப் பார்க்க விரும்புகிறேன். அங்கு ஒரு இரவா வது கழிப்பேன்" என்ருள். "அப்படியே ஆகட்டும். கவலைப்படாதே. காலையில் போவாய்" என்று இராமர் பதிலுரைத்தார்.

அதன் பின்னர் இராமர் சிநேகிதர்களின் மத்தியில் இருக்க "பத்ர! நகரத்திலும், நாட்டிலும் ஜனங்கள் என்னைக் குறித்து என்ன சொல்லுகிருர்கள். நல்லதோ, கெட்டதோ உள்ளபடி சொல்" என்ருர். இதைக்கேட்டு கை கூப்பிக்கொண்டு வெகு வணக்கத்துடன் பத்ரன் பதில் உரைத்தான்.—"பட்டண வாசிகள் யாது செப்பு கிருர்களோ கேளுங்கள். தேவர்களாலாவது, தானவர்க ளாலாவது செய்யமுடியாததும், நம்முன்னோரால் கேட்கப் படாததுமான சேது அணையை இராமர் கட்டினூர்; வெல்ல முடியாத இராவணனையும் கொன்ருர். வானரர்களும், ரிக்ஷர்களும், இராக்ஷசர்களும் வசப்படுத்தப்பட்டார் கள். இராவணனை போரில் ஜயித்து, பொறுமையுடன் இராகவர் சீதையை அழைத்துக்கொண்டு வந்திருக் கிருர். முன்னம் பலாத்காரமாய் இராவணனுல் கொண்டு போகப்பட்டவளை அடைந்து அவருக்கு எவ்வித சுகம்? இராக்ஷசனது வசம் இருந்தவளை அவர் ஏன் வெறுக்க வில்லை. நாமும் நமது பத்தினிகளிடம் அப்படியே பொறுக்க வேண்டுமே! அரசன் செய்வதை பிரஜைகள் அனுஷ்டிப்பார்களன்ருே? இவ்விதம் பலவாறு நகரவாசி கள் சொல்லிக் கொள்ளுகிருர்கள்" என்ருன். இராமர் இதைக்கேட்டு மிகவும் மனம் நொந்து "இது எப்படி"

என்று சிநேகிதர்களைக் கேட்டார். அவர்களும் தலை வணங்கி "அவ்வண்ணமேதான்" என்றார்கள்.

இராகவர் சிநேகிதர்களுக்குப் போகும்படி உத்திரவு அளித்துவிட்டு, மனதைத் திடப்படுத்திக்கொண்டு காவலாளனைப் பார்த்து "ஸௌமித்திரியையும், பரதனையும், சத்ருக்னனையும் சீக்கிரம் அழைத்து வா" என்றார். உடனே அவர்கள் நால்வரும் கைகூப்பிக்கொண்டு தலை குனிந்து அவர் முன்னிலையில் வந்து, கண்களில் நீர் ததும்ப ஒளியற்ற அவரது முகத்தை நோக்கிக் கவனத்துடன் நின்றார்கள். இராமர் கண்ணீரை அடக்கிக்கொண்டு அவர்களைத் தழுவி, எழுந்திருக்கச்செய்து ஆசனங்களில் உட்காருவித்து சொல்லலானார். "நீங்கள்தான் எனக்கு யாவும்; நீங்கள்தான் என் பிராணன். உங்களுடன் தான் நான் அரசாளுகின்றேன். நீங்கள் எல்லா சாஸ்திரங்களும் அறிந்தவர்கள்; திடபுத்தி யுள்ளவர்கள். இந்த விஷயம் விசாரிக்க வேண்டியது; இதைக் கவனித்துக் கேளுங்கள். எனது சீதையைக் குறித்து புரவாசிகள் எப்படி பேசிக்கொள்ளுகிறார்கள். அவர்களுடைய அபவாதம் பெரிது. இதைக் குறித்து வெறுப்பு என் மனதை அறுக்கிறது. நானோ மஹாத்மாக்களான இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்தவன்; சீதையும் மஹாத்மாக்களாகிய ஜனக குலத்தில் பிறந்தவள். அவள் ஜன சஞ்சாரமற்ற தண்டகாரண்யத்தில் இராவணனால் எப்படி தூக்கிக்கொண்டு போகப்பட்டாள் என்றும், அவன் எப்படி கொல்லப்பட்டான் என்றும் அறிவீர்கள். இராவணனது கிரஹத்தில் வசித்திருந்த சீதையை எவ்விதம் இராஜதானிக்கு அழைத்து வருவது என்று சிந்திக்கையில் எனக்கு நம்பிக்கை ஊட்ட சீதை அக்னியினுள் புகுந்தாள். அப்பொழுது தேவர்கள் முன்னிலையில் அக்கினிபகவான் 'சீதை பாபமற்றவள்' என்றான். அவ்விதமே சுரர்களுக்கும், ரிஷிகளுக்கும் நடுவே வாயுவும், சந்திராதித்யரும்,

'ஜானகி பாபமற்றவள்' என்றார்கள். இவ்விதம் கேட்ட பிறகு இந்திரனால் சீதை என்னிடம் கொடுக்கப்பட்டாள். என் மனமும் அவள் சுத்தமானவளே என்கிறது. அதனால் தான் நான் சீதையை அயோத்தியைக்கு அழைத்து வந்தேன். இப்பெரிய அபவாதம் என்னை வருத்துகிறது. எவனைப்பற்றி ஜனங்கள் அபகீர்த்தி சொல்லுகிறார்களோ அவன் தாழ்ந்த உலகத்தை அடைகிறான். அபகீர்த்தி' தேவர்களால் நிந்திக்கப்படுகிறது. கீர்த்தி உலகத்தால் புகழப்படுகிறது. எல்லா செயல்களும் கீர்த்திக்காகவே. அபவாதத்துக்கு பயந்து பிராணனையும் விடுவேன்; உங்களையும் விடுவேன். சீதைமாத்திரம் என்ன? நான் சோக சாகரத்தில் கிடக்கின்றேன்; ஸௌமித்திரியே, சீதையை தேரில் அழைத்துச் சென்று நமது நாட்டுக்கு வெளியே விட்டுவா. கங்கைக்கு அக்கரையில் தமஸைக்கு அருகில் வால்மீகியினுடைய திவ்யமான ஆசிரமம் இருக்கிறது. அந்த ஜனங்களற்ற தேசத்தில் அவளை விட்டு சீக்கிரம் வருக. நான் சொல்வதைக்கேள். உனக்கு மங்களம் உண்டாகுக. கங்கா தீரத்து ஆசிரமங்களைப் பார்க்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறாள் சீதை. அவள் ஆசை பூர்த்தியாகட்டும்" இவ்விதம் உத்திரவு இட்டுவிட்டு கண்ணீர் வடிய இராமர் உள் சென்றார்.

இரவு கழிந்தவுடன் இலக்ஷ்மணர் உலர்ந்த முகத்துடன் ஸுமந்திரரை நோக்கி-"இரதத்தில் குதிரைகளைப் பூட்டுங்கள்; சீதைக்காக நல்ல ஆசனம் விரியுங்கள். அரசரின் உத்திரவின்மேல் நான் மகரிஷிகளின் ஆசிரமத்துக்கு சீதையை அழைத்துப்போகவேண்டும்" என்றார். சுகமான படுக்கையும், அழகான விரிப்பும் போடப்பட்ட இரதத்தை ஸுமந்திரர் கொண்டுவர இலக்ஷ்மணர் இராஜகிரஹத்துள் சென்று சீதையை அடைந்து-" நீங்கள் அரசரிடம் வரம் கேட்டீர்கள்; அவரும் வாக்களித்தார். ஆகையால் கங்காதீரத்திலுள்ள முனிகளுக்குப் பிரியமான ஆசி

ரமங்களில் உங்களைச் சேர்க்க வேண்டியவன்'' என்றான். இதைக்கேட்டு வைதேகி சந்தோஷமடைந்தாள்; ரிஷிபத்தினிகளுக்குக் கொடுப்பேன் என்று வஸ்திரங்களையும், விலையுயர்ந்த ஆபரணங்களையும் எடுத்துக் கொண்டு கிளம்புவாளாயினாள். ''அப்படியேசெய்க'' என்றுசொல்லி ஸௌமித்திரி இரதத்தில் மைதிலியை ஏற்றிக்கொண்டு இராமருடைய ஆக்ஞையை நினைத்து வேகமாகச் சென்றான். அப்பொழுது அவரை பார்த்து சீதை ''ரகுநந்தனரே! அநேக அபசகுனங்களைக் காண்கிறேனே. என் கண் துடிக்கிறது. உடல் நடுங்குகிறது. மனதும் சுவஸ்தமாய் இல்லையே'' என்றாள். இவ்விதம் ஸௌமித்திரியுடனும் ஸுமந்திரருடனும் சீதை கங்கையை அடைந்தாள்.

பாகீரதியின் கரையை யடைந்து கண்ணீர் ததும்ப இலக்ஷ்மணன் கைகூப்பிக்கொண்டு, ''வைதேகி! ஆரியரால் இடப்பட்ட கட்டளை என்னை வருத்துகிறது. இதனால் நான் லோகாபவாதத்துக்கும் பாத்திரன் ஆகிறேன்: எனக்கு மரணம் மேலானதே. என்மேல் தயை புரிக'' என்று சொல்லி பூமியில் விழுந்தான். ''எனக்குத் தெரியவில்லையே; உள்ளதைச்சொல்'' என்றாள் மைதிலி. இப்படி தூண்டப்பட்டு இலக்ஷ்மணன் மனம் வருந்தி கீழ் நோக்கிக்கொண்டு சொன்னான்—'' உங்களைக் குறித்து சபையிலும் ஊரிலும் கோரமான அபவாதம் கேள்வியுற்று இராமர் வருத்தத்துடன் உங்களை இந்த ஆசிரமங்களில் விட்டுவிடவேண்டுமென்று என்னை ஆஞ்ஞாபித்திருக்கிறார். இதுதான் பிரம்மரிஷிகளின் தபோவனம். வருந்தாதீர்கள். வால்மீகி எங்கள் பிதா தசரதரின் பிரியமான சிநேகிதர். அவரை அண்டி உபவாசம் செய்துக்கொண்டு சௌக்கியமாய் இருப்பீர்'' என்றான். இந்த கடுமையான செய்தியைக் கேட்டு வைதேகி பூமியில் விழுந்தாள். பிறகு மூர்ச்சை தெளிந்து இலக்ஷ்மணரிடம் சொல்லலுற்றாள்—'' என் சரீரம் துக்கத்துக்காகவே

ஏற்பட்டதாகக் காண்கிறது. ஸதியாயிருக்க, இப்படி விடப்படும்படி என்ன பாவம் செய்தேனோ? முன்னர் எந்தப் பெண்களைப் பிரித்து வைத்தேனோ? ஆசிரமத்தில் இருந்துக் கொண்டு எனது துக்கத்தை யாருக்குச் சொல்லுவேன். ஜாஹ்னவி ஜலத்தில் இப்போதே என் பிராணனை விட்டுவிடுவேன்; ஆனால் எனது பர்த்தாவின் வம்சம் பரிகாசத்திற்கு இடமாகுமே! உன் கட்டளையை நிறைவேற்று. என் பேச்சைக் கேள். எல்லோருக்கும் என் அபிவாதத்தைச் சொல். "இராகவரே! நான் சுத்தமானவள் என்றும் எப்போதும் உங்களிடம் பக்திகொண்டவள் என்றும் அறிவீர். நீங்கள் தான் எனக்கு மேலான கதி. கீர்த்தி மிகவும் மேலானது, ஆகையால் என்னைப்பற்றி வருந்தவேண்டாம். பதிதான் ஸ்திரீகளுக்கு தெய்வம், பந்து, குரு. ஆகையால் பர்த்தாவின் காரியம் பிராணனைவிடப் பிரியமானது" இவ்விதம் சுருக்கமாக இராமரிடம் சொல்லவும்" என்றாள். இலக்ஷ்மணர் இதைக்கேட்டு சீதையைப் பிரதக்ஷிணம் செய்து திரும்பலானார். அநாதைப்போல் நின்ற சீதையை திரும்பி பார்த்துக்கொண்டு சென்றார். அழுதவண்ணம் நதியின் அக்கரையை அடைந்து புத்தி கலங்கினவராய்த் தேரில் ஏறினார். சீதையும் இரதம் காணப்பட்ட வரையில் இலக்ஷ்மணரைப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

வால்மீகியின் புதல்வர்கள் சீதை அழுதுக்கொண்டிருந்ததை நோக்கி அம்முனியிடம் தெரிவித்தார்கள். இதைக்கேட்டு அவர் தபசின் மகிமையால் எல்லாமறிந்து மைதிலி இருக்கும் இடம் சென்று மதுரமாகச் செப்பினார்—" நீ தசரதரின் மருமகள். இராமருடைய பிரியமான இராணி. ஜனகருடைய குமாரி. நல்வரவு. பதிவிரதையே! உன் வரவை அறிவேன். காரணமும் தெரியும். ஆசிரமத்து அருகில் தாபஸிகள் இருக்கிறார்கள். அங்கு இரு; அவர்கள் உன்னை கவனித்துக் கொள்ளுவார்

கள். அர்க்கியம் பெற்றுக்குள். சொந்த கிருஹத்தில் இருப்பதுபோல் இரு; வருந்தாதே.'' சீதை ரிஷியினுடைய இந்த அற்புதமான சொற்களைக் கேட்டு வணங்கி "அப்படியே ஆகட்டும்'' என்றாள். முனிவர் சீதையுடன் வருவதைப்பார்த்து முனி பத்தினிகள் நெருங்கி—''வெகு காலம் கழித்து வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு நமஸ்காரம். நாங்கள் என்ன செய்யவேண்டும்'' என்றார்கள். வால்மீகி பதிலுரைத்தார்—''புத்திமானான இராமரின் மனைவி வந்திருக்கிறாள். குற்றமற்றவள். கணவனால் விடப்பட்டிருக்கிறாள். நான் இவளைக் காப்பாற்றவேண்டும். இவளைப் பரம சிநேகத்தோடு கவனிக்கவேண்டும்.'' தாபஸிகள் மெள்ள மெள்ள தங்கள் ஆசிரமத்திற்கு சீதையை அழைத்துச் சென்றார்கள்.

அன்றிரவே, சீதாதேவி இரண்டு புத்திரர்களைப் பெற்றாள். இந்த சுப சமாசாரத்தை முனி குமாரர்கள் வால்மீகிக்குத் தெரிவித்தார்கள். வால்மீகி சந்தோஷம் கொண்டார்; சந்திரனைப் போன்றவும், மஹாதேஜஸ்ஸுடையவுமான அக் குழந்தைகளைக் காணச் சென்றார். முதல் பிறந்தவனுக்கு குசன் என்றும், மற்றவனுக்கு லவன் என்றும் பெயரிட்டார்.

59. ராஜசூய யக்கியம்

அயோத்தியைக்கு திரும்பி வருகையில் ஸூதர் இலக்ஷ்மணருக்குச் சொல்லலானார்—''முன்னர் துர்வாஸர் வசிஷ்டருடைய ஆசிரமத்தில் மழைக்காலம் கழிக்கலானார். அப்பொழுது உனது தகப்பனார் அவரைக் காண வந்தார். சாயங்கால வேளையில் ரிஷிகளுக்கிடையே பேச்சு நடந்தது. அதன் மத்தியில் அரசர் வணக்கத்துடன் கேட்டார்— "பகவானே! என் வம்சம் எப்படி வளரும்? எனது இராமனின் ஆயுள் என்ன? மற்ற புத்திரர்களின் வயதுப் பிரமாணம் யாது? இராமனுடைய புத்திரர்களுடையது எவ்

விதம்? இவ்வம்சப் போக்கைத் தெரிவியுங்கள்" என்றார். துர்வாஸர் பதிலுரைத்தார்—"முன்னர் தைத்தியர்கள் ஸுரர்களால் ஹிம்சிக்கப்பட்டு பிருகுபத்தினியை அடைந்தார்கள். அவளிடம் அபயம் பெற்று இருந்தார் கள். அதைக்கண்டு விஷ்ணுபகவான் பிருகு பத்தினியின் சிரசை சக்ராயுதத்தால் வெட்டினார். அப்பொழுது பிருகு கோபம் கொண்டு "என் மனைவியைக் கொன்ற காரணத் தால் நீ பூலோகத்தில் பிறப்பாய். அநேக வருஷ காலம் பத்தினி வியோகம் அடைவாய்" என்று சபித்தார். இப் படிச் சபிக்கப்பட்டவர்தான் உங்களது குமாரன். சீதை யிடம் இராமருக்கு இரண்டு பிள்ளைகள் அயோத்தியை அன்றி வேறு இடத்தில் பிறப்பார்கள். இவர்களுக்கு இராகவர் அபிஷேகம் செய்து வைப்பார்." என்றார். ஆகையால் சீதையைக் குறித்தாவது, இராமரைக் குறித் தாவது வருந்தாதீர்." இதைக்கேட்டு இலக்ஷ்மணர் திருப்தி அடைந்தார்.

இலக்ஷ்மணர் கோமதியில் இரவைக் கழித்து பின்னர் அயோத்தியை அடைந்து மனம் சோர்ந்திருந்த இராம மரைக் கண்டார். அவர் கால்களில் வணங்கி—"உங் களது கட்டளை பூர்த்தி செய்தேன். உங்களைச் சேவிக்கத் திரும்பி வந்துள்ளேன். காலம் இப்படிப்பட்டதே; வருந் தாதீர்கள். மரணம் வரையில் பிரிவும் சேர்க்கையும் சக ஜமே. பிரிவு நிச்சயமாதலால் புத்திரர்கள், பாரியை, சிநேகிதர், தனம், இவைகளில் அதிகப்பற்று கூடாது" என்றார். இப்படி இலக்ஷ்மணரால் தேற்றப்பட்டு "இலக்ஷ்மணா! நீ சொல்லுவது சரியே. என் வேலையில் சந்தோஷம் அடைவேன். உனது பேச்சினால் சுகம் கிட் டியது" என்றார்.

ஒரு நாள் தமக்குப் பிரியமான பரத, இலக்ஷ்மணர் களைப் பார்த்து இராமர் சொல்லலானார். "எனது ஆத் மாவைப்போன்ற உங்களுடன் கூடி சர்வபாபநாசினியான

இராஜஸூய யக்ஞியம் செய்ய விரும்புகிறேன். அதிலே சாசுவதமான தர்மம். எது சிரேயஸ்கரம் என்று யோசியுங்கள்" என்றார். இலக்ஷ்மணர், "அசுவமேதம் மகத்தானது. எல்லா பாவங்களையும் அகற்றுவது. இரகுநந்தனரே! இதுதான் உங்களுக்கு அடுத்தது. பூர்வம், இந்திரன் பிரம்மஹத்தி பாவத்தால் சூழப்பட்டிருந்தபோது, அசுவமேதத்தால் புனிதனானான், என்று கேட்டிருக்கிறோம்" என்றார். காகுத்தர் இதைக்கேட்டு இலக்ஷ்மணரைப் பார்த்து—"இலக்ஷ்மணா! வசிஷ்டராதி பிராமண சிரேஷ்டர்களை வரவழைத்து அவர்களுடன் யாகத்தைக் குறித்து மந்திராலோசனை செய்து உத்தமமான எல்லா இலக்ஷணங்களும் கொண்ட குதிரையைச் செலுத்துவேன்." என்று தர்மயுக்தமாய் மேலும் செப்பினார். இதைக்கேட்டு இலக்ஷ்மணர் விரைவாக எல்லா பிராமணர்களையும் வரவழைத்து இராகவர் முன் சேர்ப்பித்தார். அவர்கள் தங்களுக்கு அபிவாதனம் செய்த திவ்ய காந்தியுடைய இராகவரைப்பார்த்து ஆசீர்வதித்தார்கள். இராமர் அசுவமேதத்தைக் குறித்துள்ள தமது எண்ணத்தைத் தெரிவித்தார்.; அவர்கள் இதைக்கேட்டு சிவபெருமானுக்கு நமஸ்கரித்து, அசுவமேதத்தை சிலாகித்தார்கள். அதன்மேல் இராமர் இலக்ஷ்மணருக்குச் செப்பினார். "சீக்கிரம் மஹாத்மாவாகிய சுக்கிரீவனுக்குத் தூதனை அனுப்பு. அநேக பெரும் வானரர்களுடன் வந்து இந்த மஹோத்ஸவத்தை அனுபவிக்கட்டும். நிகரற்ற விபீஷணரும் அநேக இராக்ஷசர்களால் சூழப்பட்டு இந்த யாகத்துக்காக வரட்டும். எனக்கு பிரியம் செய்ய விருப்பமுள்ள அரசர்களும் பரிவாரங்களுடன் வரட்டும். தபோதனர்களான ரிஷிகளையும் வெளிநாடு சென்ற பிராமணர்களைத் தங்கள் பத்தினிமார்களுடன் அழை. கோமதியின் அருகில் நைமிசாரண்யத்தில் பரிசுத்தமான இடம் ஏற்படட்டும். எல்லா சாந்திகர்மங்களும் செய்விப்பாயாக.

எனது தாயார்களையும், அந்தப்புரத்து மற்றும் எல்லா ஸ்திரீகளையும், தங்கத்தால் செய்யப்பட்ட சீதை விக்ரஹத்தையும், தீக்ஷாவிதிகளைத் தெரிந்தவர்களை முன்னிட்டுக்கொண்டு பரதன் செல்லட்டும்" என்றார்.

இவ்விதம் எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு இராமர் சர்வலக்ஷணங்களும் பொருந்திய ஒரு கருப்பு குதிரையை விடுத்தார். அதைக் காக்க இலக்ஷ்மணரை நியமித்து, அவர் சைனியத்துடன் நைமிசாரண்யம் சென்றார்; அங்கு யக்கியபூமியை நோக்கி ஆனந்தமடைந்து "நன்றாயிருக்கிறது" என்றார். அப்படி இருக்கையில் எல்லா அரசர்களும் தங்களது ஈகைகளைக் கொணர்ந்தார்கள். இராமரும் அவர்களுக்குத் தக்கவாறு மரியாதை செய்து அவர்களுக்கும், அவருடன் வந்தவர்களுக்கும் தகுந்த ஏற்பாடுகள் செய்தார். சத்ருக்னர் கூட இருக்க, பரதர் எல்லாருக்கும் அன்னபானாதிகளை உபசரித்தார். வானரர்கள் சுக்ரீவருடன் இருந்துகொண்டு எல்லா பிராமணர்களையும் உபசரித்தார்கள். விபீஷணரும் இராக்ஷசர்களின் சகாயம் கொண்டவராய் ரிஷிகளுக்கு மரியாதைகள் செய்தார். இவ்விதமாக அசுவமேதம் நடந்தது; இலக்ஷ்மணரால் காக்கப்பட்டு குதிரை சென்றது. அவ்விடமிருந்த வயோதிக முனிவர்கள் "அவ்விதமான யாகத்தைக் கண்டதில்லை" என்றார்கள். அதற்கு முன்னர் அத்தகையது நடந்ததுமில்லை. இவ்விதமாக சர்வகுணங்களும் கொண்ட இந்த யாகம் ஒரு வருஷத்துக்கு மேல் செவ்வனே நடந்தது.

60. குசலவர் இராமாயணகானம்

இவ்விதமாக அத்யத்புதமாக யாகம் நடந்துகொண்டிருக்கையில், முனி சிரேஷ்டரான வால்மீகி தமது சிஷ்யர்களுடன் அவ்விடம் சேர்ந்தார்; ரிஷிகளுக்காக நியமிக்கப்பட்ட இடத்தில் தனக்காக குடிசைகளை நியமித்துக்

கொண்டார். பின்னர் அவர் சந்தோஷத்துடன், இரு சிஷ்யர்களுக்கும் சொல்லுவாராயினுர்—" நீங்கள் அதிக ஆனந்தத்துடன் இராமாயண காவியம் முழுவதையும் பரிசுத்தமான ரிஷிகளிருப்பிடங்களிலும், பிராமண வாசஸ் தலங்களிலும், இராஜ்மார்க்கங்களிலும், மன்னவர்களின் மாளிகைகளிலும் பாடவேண்டும். விசேஷமாக யக்ஞம் நடக்கும் இராமரது பவனத்தண்டையும் ருத்விஜர் களுடைய முன்னிலையிலும் பாடவேண்டும். மலைமேல் உண்டாகும் பலவகையான ருசிகரமான பழங்கள் கிடைக்கும். அக்கனிகளையும் மூலங்களையும் உண்டு நீங்கள் களைப்படையீர்கள். மதுர இராகத்தினின்றும் தவருதீர்கள். மஹீபாலரான இராமர் ரிஷிகளின் மத்தியில் இருந்துக்கொண்டு கேட்கவிரும்பினுல், பாடுங்கள். இனிய குரலுடன் நான் கற்பித்தபடி தினம் இருபது சர்கங்கள் பாடுங்கள். நீங்கள் எவருடைய புதல்வர்கள் என்று இராமர் கேட்டால், வால்மீகியுடைய சிஷ்யர்கள் என்று சொல்லுங்கள்".

காலையில் அவ்விருவரும் ஸ்நானுதிகளை முடித்துக் கொண்டு ரிஷி நியமித்தபடி பாடலானுர்கள். இந்த அபூர்வமான அழகுள்ள தந்திநாதத்தோடு கூடிய காவியத்தைக்கேட்டு இராகவர் குதூகலமடைந்தார். காலைக் காரியம் முடிந்ததும் மகாமுனிகளையும், அரசர்களையும், பண்டிதர்களையும், வேதியர்களையும், பௌராணிகர்களையும், வயது முதிர்ந்த பிராமணர்களையும், ஸ்வரஞானமுள்ளவர்களையும், இவர்கள் எல்லாரையும் கூட்டி பின்னர் பாடகர்கள் இருவரையும் வரவழைத்தார். இவர்களையும், அரசரையும் பார்த்ததும் சபையோர் ஒருவர்க் கொருவர்—" இச்சிறுவர்கள் இராமருக்குச் சமான மானவர்களாயும், அவரது பிரதிபிம்பம்போல் காண்கிருர்கள். இவர்கள் ஜடையும், மரஉரியும் அணிந்திராவிடில் யாதொரு வித்தியாசமும் கண்டிரோம்" என்று

சொல்லலானார்கள். இவர்கள் பேசிக்கொண்டிருக்க முனி குமாரர்கள் பாடலானார்கள். இந்த மதுரமானதும் அதி மானுஷமாய் கந்தர்வர்களது போன்றதுமான பாட்டைக் கேட்க அவர்களின் திருப்திக்கு அளவில்லை. இருபது சர்க்கங்களைக் கேட்ட பின்னர் இராமர் "இந்தப் பெருங் காவியத்தின் கர்த்தா எந்த முனி சிரேஷ்டர்" என்று வினவினார். அவர்கள்—"இதை ஆக்கியவர் பகவான் வால்மீகி; அவர் இவ்விடம் வந்திருக்கிறார். அவரால் தங்களுடைய சரித்திரம் முற்றிலும் காண்பிக்கப்பட்டிருக்கிறது. இதைகேட்க விருப்பம் இருப்பின், காரியம் முடிந்ததும் சகோதரர்களுடன் சுகமாய் அமர்ந்து கேளுங்கள்" என்று பதிலுரைத்தார்கள். இராமர் அங்கீகரிக்க அவரிடம் உத்திரவு பெற்று சந்தோஷமடைந்தவராய் வால்மீகி மகரிஷியிடம் சென்றார்கள்.

இவ்விதம் இராமர் சபையிலிருந்து இக்கதையைக் கேட்கலானார். கதையின் மத்தியில் இச்சிறுவர்கள் சீதையின் புத்திரர்களென்று அறிந்து இராமர் நன்னடத்தையுள்ள தூதரைக் கூப்பிட்டு "பகவான் வால்மீகியிடம் செல்லுங்கள். தான் சுத்த நடத்தையுடையவள்; கல்மஷமற்றவள் என்று உறுதி சொல்ல சீதை இஷ்டப்படுகிறாளா என்று சீதையினுடையவும் முனிவருடையவும் அபிப்பிராயத்தை அறிந்து கொண்டு எனக்கு சீக்கிரம் தெரிவியுங்கள்" என்றார். இந்த ஆச்சரியமான பேச்சைக்கேட்டு தூதர்கள் முனிபுங்கவரிடம் சென்றார்கள். அவருக்கு நமஸ்கரித்து இராமருடைய உத்திரவைத் தெரிவித்தார்கள். "அப்படியே ஆகட்டும். உங்களுக்கு மங்களம். இராகவர் எப்படி செப்புகிறாரோ, அப்படியே சீதை செய்வாள். ஸ்திரீகளுக்கு பதி தெய்வமல்லவோ" என்றார் மகரிஷி. தூதர்கள் விரைந்து வந்து முனியினது வாக்கியத்தை அறிவித்தார்கள்.

மறுநாள் காலை யக்கியபூமியையடைந்து இராகவர் எல்லாரையும் வரவழைத்தார். வசிஷ்டரும், வாமதேவரும், விசுவாமித்திரரும், அகத்தியரும், மற்ற தபோநிதிகளும், இராக்ஷசர்களும், வானரர்களும், பிராம்மணுதி ஏனையரும் குதூகலத்துடன் வந்து சேர்ந்தார்கள். எல்லாரும் வந்து அசைவற்று இருப்பதைக்கேள்வியுற்று வால்மீகி முனிவர் வந்தார். சீதை தலைகுனிந்தும், கைகூப்பிக்கொண்டும், இராமரை மனதில் தியானித்துக்கொண்டும், பிரம்மாவுக்குப்பின் சுருதி செல்லுவதுபோல, ரிஷியைத் தொடர்ந்து வந்தாள். சோகமடைந்திருந்த எல்லாரிடமிருந்தும் கலகலவென்று சப்தம் கிளம்பியது. "இராமர் செய்தது சரி" என்ருர் சிலர். "சீதை செய்தது சரி" என்ருர் சிலர். "இருவர் செய்ததும் சரியே" என்ருர் மற்றும் சிலர். அப்போது வால்மீகி சொல்லுவாராயினுர். "தாசரதே! இந்த சீதை நல்ல விரதம் பூண்டவள்; தர்மமனுஷ்டிப்பவள். லோகாபவாதத்துக்குப்பயந்து உங்களால் எனது ஆசிரமத்துக்கருகில் விடப்பட்டாள். சீதையின் இந்த இரண்டு புதல்வர்களும் உங்களுடையவர்களே. நான் சொல்வது உண்மை. நான் அவள் சுத்தமானவள் என்று தான் காப்பாற்றினேன். மைதிலி துஷ்டையாகில் நான் செய்துள்ள எல்லா தபசின் பலனை அடையாதிருப்பேனுக. பதியையே தெய்வமாகக் கொண்ட அவள் இதை நிரூபிக்க வந்திருக்கிறுள்."

வால்மீகியின் பேச்சைக்கேட்டு இராமர் எல்லாருக்கும்மத்தியில் சொல்லலுற்ருர்—" தாங்கள் சொல்லுவது வாஸ்தவமே. தாங்கள் சொன்னது போதும். முன்னர் தேவர்களின் சந்நிதியில் இவ்விதம் நடந்தபின் தான் நான் அவளை வீட்டுக்கு அழைத்து வந்தேன். லோகாபவாதம் பலமானது. அதனுல்தான் சீதையை விலக்கினேன். தாங்கள் என்னை மன்னிக்கக்கேட்டுக்கொள்ளுகிறேன். மீளவும் இந்த சபையில் அவள் சுத்தமானவள்

என்று நிரூபிக்கப்பட்டால் திருப்தியடைவேன். இந்த லவகுசலர்கள் என் குமாரர்களென்று அறிவேன்" இராமருடைய அபிப்பிராயத்தை அறிந்து பிதாமகர் முன் செல்ல இந்திராதி தேவர்கள் எல்லாரும் வந்து சேர்ந்தார்கள். எல்லோரும் வந்ததை நோக்கி சீதை காஷாய வஸ்திரம் உடுத்தி தலைகுனிந்து, "எப்படி நான் இராமரைத் தவிர வேறொருவரையும் மனதில் நினைத்த தில்லையோ, அப்படியே பூமிதேவி எனக்கு புகலிடம் கொடுப்பாயாக. எப்படி நான் இராமரை மனதா லும் செய்கைகளாலும், வாக்கினாலும் அர்ச்சித்தேனோ அப்படியே எனக்கு புகலிடம் கொடுப்பாயாக. எப் படி இராமரைத் தவிர வேறு யாரையும் அறியேன் என்பது மெய்யோ அப்படியே எனக்கு புகலிடம் கொடுப்பாயாக" என்றாள். இவ்வாறு சீதாதேவி சத்தி யம் செய்ய, பூமியிலிருந்து ஒரு திவ்யமான சிங்காசனம் வெளிவந்தது. அதில் பூதேவி மைதிலியின் கைப்பற்றி நல்வரவு சொல்லி உட்காருவித்தாள். சிங்காதனத்தில் உட்கார்ந்து அந்த பாபமற்றவள் பூமிக்குள் செல்ல திவ்ய மான புஷ்பமாறி பொழிந்தது. யக்கியபூமியிலிருந்த எல் லோரும் ஆச்சரியமடைந்தார்கள். அப்போது லோகமும் பிரமித்ததுபோல நின்றது.

வைதேகி ரஸாதலம் சென்றதும், இராமர் முன்னிலை யில் "நல்லது, நல்லது", என்று எல்லோரும் ஆரவாரித் தார்கள். இராமர் வெகு துக்கமடைந்து தலை குனிந்த வராய் இருந்தார். பின்னர் குரோத சோக பரவசராய் "என் கண் எதிரே சீதை போய் விட்டாளே! பூதேவி! சீதையை எனக்குத் திருப்பிக்கொடுத்துவிடு. இல்லையேல் எல்லா மலைகளையும் உடைத்து எவ்விடமும் நீரால் நிறப்பி விடுவேன்." என்றார். இராமர் இப்படிச் சொல்ல சுர கணங்களோடு கூடியிருந்த பிரம்மா சொல்லலானார்—" ராம! இப்படி வருந்தாதீர். பூர்வத் தன்மையை நினைவூட்

டிக்கொள்ளுங்கள் ; நாங்கள் சொல்ல வேண்டியதில்லை. தாங்கள் விஷ்ணுவின் அவதாரம் என்று மறக்காதிர். சீதை பூர்வத்தை அனுசரித்து நாகலோகம் சென்றுள். சுவர்க்கத்தில் மீளவும் சேருவீர்கள் சந்தேகமில்லை. நான் இந்த சபையில் சொல்லுவதைக் கேளுங்கள். தாங்கள் கேள்வியுற்ற இந்த காவியம் சிரேஷ்டமானது. ராம! அது உங்களது பிறப்புமுதல் சுகதுக்கங்களையும், நடக்கப் போவதையும், மற்றெல்லாவற்றையும் விஸ்தாரமாய் தெரிவிக்கிறது. வால்மீகியினுல் செய்யப்பட்ட இந்த முதல் காவியம் தங்களை நாடியது. காகுத்தரே, எதிர் காலத்து விஷயத்தைத் தெரிவிக்கும் 'உத்தரம்' எனப் பட்ட காவியத்தின் மிகுதியைக் கேளுங்கள்" இவ்வாறு தேவர்களுக்கு தேவரால் சொல்லப்பட்டதை இராமர் கேட்டு வால்மீகியை நோக்கி "பகவானே! ரிஷிகளும், பிராம்மணர்களும், மற்றெல்லோரும் எனது எதிர்காலத்திய உத்தர காண்டத்தைக்கேட்க வந்திருக்கிருர்கள். நாளை ஆரம்பிக்கலாம்" என்றுர். பொழுது விடிந்ததும் முனிவர்களை அழைத்த பின்னர் புத்திரர்களை சாவதானமாய் பாடலாம் என்றுர் ; அவர்களும் அப்படியே பாடலானுர்கள்.

இராமர், யக்கியம் முடிவுபெற எல்லா அரசர்களுக்கும், ரிக்ஷ, வானர, இராக்ஷசர்களுக்கும் செலவு அளித்து விட்டு, பிராமண சிரேஷ்டர்களுக்கு செல்வமும் கொடுத்து புத்திரர்களுடன் சீதையை மனதில் கொண்டவராய் அயோத்தியைக்குத் திரும்பினுர். வேறு பார்யை கொள்ள வில்லை. பத்தினி ஸ்தானத்தில் சீதையின் பொன்விக்கிரகம் தான் நின்றது. வெகு காலம் செல்ல, இராமரின் தாயார் கௌசல்யை, புத்திர பௌத்திரர்கள் இடையில் மாண்டாள். அதன் பின்னர் சுமித்திரையும் கைகேயியும் அநேக தர்ம காரியங்களைச் செய்து முடித்து தெய்வலோகம் சென்றுர்கள். இராமர் செய்தற்கரிய பித்ருக்கள், தேவதை

கள் சம்பந்தமான யக்ஞியங்களை முடித்து அவர்களைத் திருப்தி செய்தார். இவ்விதம் சுகமாக அநேக ஆயிரம் வருஷங்கள் கழிந்தன.

சிறிது காலம் செல்ல, மாமாவான யுதாஜித்தின் வேண்டுகோளின் மேல் சிந்துவின் இருபக்கங்களிலும் உள்ள கந்தர்வ நாட்டை ஜயிக்குமாறு இராமர் பரதரை ஏவினார். பரதர் தனது தக்ஷன், புஷ்கலன் எனப்பட்ட இரண்டு குமாரர்களுடன் செல்ல, ஏழு நாள் கோரமான சண்டை நடந்தது. யுத்தம் முடிய தக்ஷனை தக்ஷசிலையிலும், புஷ்கலனை புஷ்கலாவதியிலும் அந்த செழிப்பான காந்தர்வ தேசத்தில் இராஜ்யம் புரிய நிலைநிறுத்தி ஐந்து வருஷங்கள் தங்கி பரதர் இராமரிடம் வந்து சேர்ந்தார். இராமர் விஷயங்களை அறிந்து சந்தோஷமடைந்தார். பின்னர் இலக்ஷ்மணருடைய குமாரர்கள், அங்கதனையும் சந்திரகேதுவையும் அழகானவும், நோயற்றவுமான காருபதம் எனப்பட்ட மேற்கு தேசத்தில் ஒரு பட்டணத்திலும், மல்லருடைய வடக்கு தேசத்திலும் சந்திரகாந்தை எனப்பட்ட பட்டணத்திலும் அரசாள நியமித்தார்கள்.

61. இராம மஹாபிரஸ்தானம்

இராமர் இவ்விதம் தர்மம் செலுத்திக்கொண்டு வெகு காலம் கழிய, காலன் தபசி வேஷத்துடன் இராஜ வாயிலையடைந்து—"நான் ஒரு காரியமாக வந்திருக்கிறேன் என்று இராமருக்குச் சொல்" என்றான். இலக்ஷ்மணர் அவ்வாறே அறிவிக்கலானார். இராமர், முனிவரை வரச் சொல் என, அவர் உள் சென்றார். இராமர் அவருக்குப் பூஜைசெய்து அர்க்கியம் கொடுத்த பின்னர் குசலம் விசாரித்தார். அப்போது அந்த தபசி—"தாங்கள் நன்மையை நாடுவீர்களாயின், நம்மிருவருக்குள் தான் பேச்சு நடக்க வேண்டும். எவன் ஒருவன் நமது பேச்சைக் கேட்கிறானோ,

அல்லது நம்மைப் பார்க்கிருனே அவன் சாகவேண்டிய வன்" என்ருர். அப்படியே என்று சொல்லி இராமர் "இலக்ஷ்மணு! சேவகனை அனுப்பிவிட்டு நீ வாயிலைக் காறு. நாங்கள் பேசுவதை எவன் கேட்கிருனே அல்லது எங்களைப் பார்க்கிருனே அவன் கொல்லப்படுவான்" என்ருர். அதன்மேல் முனிவர் சொல்லலானுர்—"இராஜனே! நான் வந்த காரியத்தைக் கேளுங்கள். பிதாமகர் என்னை, இவ்விதம் தெரிவிக்க அனுப்பியிருக்கிருர். 'பூர்வத்தில் நான் உங்களது புத்திரன். உலோகங்களை இரக்ஷிப்பதாக உங்களுடன் உடன்பாடு. அதற்கேற்ப ஜகத்தில் பிரஜைகள் இராவணனுல் பாதிக்கப்படுவதை உத்தேசித்து தாங்கள் மானுஷ ரூபம் எடுக்க மனம் கொண்டீர்கள். முன்னம் பத்து ஆயிரம், பத்து நூறு வருஷம் புவியில் இருப்பேனென்று நிர்ணயித்தீர்கள். அந்த காலத்தின் முடிவு நெருங்குகிறது. ஆனல் பிரஜைகளை மேலும் சேவிக்க வேண்டுமென்று ஆசை இருப்பின் அப்படியே இருங்கள். உங்களுக்கு மங்களம். இல்லையேல் தேவர்கள் தங்களையடைந்து கவலையற்று இருக்கட்டும்.'" இப்பேச்சைக் கேட்டு இராகவர் சிரித்துக்கொண்டு—"தாங்கள் வந்து செப்பிய பிதாமகருடைய அதி அற்புதமான பேச்சைக்கேட்டு எனக்கு வெகு சந்தோஷம். மூன்று லோகத்தின் இரக்ஷணைக்காகப் பிறந்தேன். திரும்பிப்போகத் சித்தமாக இருக்கிறேன்" என்ருர்.

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் இராமரைப் பார்க்கும்பொருட்டு துர்வாஸ பகவான் வந்தார். இலக்ஷ்மணரிடம்—"காலதாமதம் ஆகலாகாது. இராமரிடம் அழைத்துச்செல். நீ அவருக்கு இந்த க்ஷணமே தெரிவிக்காவிடில் தேசத்தையும், உன்னையும், புரத்தையும், இராகவரையும், பரதனையும், உங்களது சந்ததியையும் சபித்துவிடுவேன்" என்ருர். இந்த கோரமான பேச்சைக் கேட்டு—"எல்லோருடைய நாசம் வேண்டாம்.

எனது ஒருவனது மரணமே போதும்" என்று நிச்சயித்து இராமருக்கு ரிஷியின் வரவைத் தெரிவித்தார். இலக்ஷ்மணரின் பேச்சைக்கேட்டு காலனுக்கு விடைகொடுத்தனுப்பி வேகமாய் வெளிவந்து துர்வாஸரை நமஸ்கரித்து "என்ன செய்யக்கடவேன்" என்று விசாரித்தார். "தர்மவச்சலனே! கேள். இன்று ஒரு ஆயிர வருஷத்திய தபசு முடிந்தது. எனக்கு போஜனம் இடுக" என்றார். இராமர் அப்படியே சாப்பாடு செய்விக்க முனி சிரேஷ்டர் அமிருதத்துக்கொப்பான அன்னத்தை உண்டு சந்தோஷமடைந்து தமதாசிரமம் சென்றார்.

முனிவர் சென்றதும் காலனுடைய பேச்சை நினைத்து இராமர் வருந்தினார். இராகுகிருஸ்த சந்திரன்போல் தீனமான இராமரின் முகத்தை நோக்கி இலக்ஷ்மணர் சொல்லலானார்:—"மஹாபாஹுவே! எனக்காக வருந்தாதீர். காலத்தின் போக்கு இவ்வாறே. என்னை விலக்கி பிரதிக்கியை நிறைவேற்றுக. பிரதிக்கியை நடத்தாதவர்கள் நரகம் செல்லுகிறார்கள். என்னிடம் பிரியம் இருப்பின், என்னைக்கொன்று தர்மத்தைப் பாலனம் செய்யுங்கள்." இலக்ஷ்மணர் பேச்சைக்கேட்டு இராமர் மந்திரிகளையும், புரோகிதர்களையும், கூப்பிட்டு நடந்ததைத் தெரிவித்தார். அப்பொழுது வசிஷ்டர் சொன்னார்—"இந்த மயிர் கூச்செறியும் படியான விஷயமும், இலக்ஷ்மணனின்று தங்களது பிரிவும் நான் முன்னமே அறிவேன். இவனை அகற்றுங்கள். காலனுடன் பிரதிக்கியை வீணாக்காதீர்; இல்லையேல் 'தர்மமே நசித்துப்போம்'" இந்த தர்மயுக்தமான பேச்சைக்கேட்டு சபையின் மத்தியில் இலக்ஷ்மணரைப் பார்த்து—"தர்மம் கெடவேண்டாம். உன்னை விடுகிறேன்; சாதுக்களின் மனதில் மரணமும் தியாகமும் ஒன்றுதான்" என்றார். இராமரது பேச்சைக்கேட்டு இலக்ஷ்மனர் தனது கிரஹம் செல்லாமல் கூப்பின கையும், கண்ணீருமாய் ஸரயு தீரத்தைத் துரிதமாய்

அடைந்து சுவாசபந்தம் செய்து நின்ருர். அப்பொழுது ரிஷிகணங்கள் கூடி தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். இந்திரன் அவனை கைகொண்டழைத்து தேவலோகம் சென்ருர். விஷ்ணுவின் ஒரு அம்சம் வந்ததைக் கண்டு தேவர்கள் சந்தோஷமடைந்தார்கள்.

இராமர் இலக்ஷ்மணருக்கு விடை கொடுத்தனுப்பி விட்டு துக்கம் மேலிட்டவராய் புரோகிதர்களையும், மந்திரிகளையும் வேத வித்துகளையும் சபை கூட்டி "தர்மிஷ்டரான பரதனை இன்று அயோத்தியைக்கு அதிபதியாக அபிஷேகம் செய்துவிட்டு நான் வனம் செல்லுகின்றேன்" என்ருர். இதைக்கேட்டு பரதர்—"இரகுநந்தனரே! தாங்கள் இன்றி சுவர்க்கலோகமாவது, இராஜ்யமாவது நான் விரும்பேன். இந்த குமாரர்கள் குசலவர்களை தக்ஷிண கோசலத்திலும், உத்தரகோசலத்திலுமாகப் பட்டாபிஷேகம் செய்யுங்கள். நாம் சுவர்க்கம் செல்லுவதைக்குறித்து தூதர்கள் சென்று சத்ருக்னனுக்குத் தெரிவிக்கட்டும்" என்ருர். "அப்போது ஜனங்கள் சொல்லலாஞர்கள்—"இராமர் போகும் வழி நாங்களும் செல்லுவோம். காகுத்தரே! எங்களிடம் தங்களுக்குப் பிரீதியும், சிநேகமும் உண்டேல் தாங்கள் செல்லும் நல் வழியில் எங்களையும் வரவிடுங்கள். இதில்தான் எங்களுக்கு அதிக ஆசை. எங்களைக் கைவிடாதீர்கள்." ஜனங்களின் இந்த திடபக்தியை அறிந்து இராமர் 'அப்படியே' என்ருர். குசனை தக்ஷிண கோசலத்திற்கும், லவனை உத்திர கோசலத்திற்கும் அரசராக்கி அவர்களைக் கட்டித்தழுவி உச்சி மோந்து அவர்களைத் தம் ஊருக்கு அனுப்பினுர்.

பிறகு சத்ருக்னனுக்காக தூதர்களை அனுப்பினுர். அவர்கள் சத்துருக்னனுக்கு எல்லாவற்றையும் தெரிவித்துத் 'துரிதப்படுத்துங்கள்' என்ருர்கள். இவ்விமான குலநாசனமான செய்தியைக் கேட்டு சத்துருக்னன்

மதுரையில் தனது குமாரன் சுபாகுவையும், வைதிசத்தில் சத்ரு காதி என்ற மற்றவனையும் அபிஷேகம் செய்துவிட்டு தான் ஒரு இரதத்துடன் புறப்பட்டான். இதற்குள் இராமரும், பரதரும் எல்லா பிரஜைகளுடன், அயோத்தியை நிர்ஜனமாக, சுவர்க்கம் செல்ல நிச்சயித்தார்கள். சத்ருக்னன் விரைந்துவந்து இராமர் மெல்லிய பட்டாடை உடுத்து முனிவர்களுடன் ஜ்வலித்துக் கொண்டிருப்பதைக் கண்டு அவருக்கு நமஸ்கரித்து " எனது புத்திரர்களுக்கு அபிஷேகம் செய்துவிட்டு தங்களைப் பின்செல்ல வந்துவிட்டேன் " என்றான். " நல்லது " என்றார் இராமர். இப்பேச்சு முடியும் சமயம் வானரர்களும், ரிக்ஷர்களும். இராக்ஷசர்களும், தேவபுத்திரர்களும், ரிஷிபுத்திரர்களும், கந்தர்வ புத்திரர்களும் இராமருடைய நிர்யாணத்தை அறிந்துவந்து சேர்ந்தார்கள். " இராஜனே! தங்களைப் பின் செல்லவந்திருக்கிறோம் " என்றார்கள். சுக்கிரீவனும், " அங்கதனுக்கு முடி சூட்டிவிட்டுத் தங்களைப் பின்தொடர வந்திருக்கிறேன்" என்றான். சுக்கிரீவனை நோக்கி "சுக்கிரீவரே! கேளும். நீர் இன்றி நான் தேவலோகமும் செல்லேன்; பரமபதத்தையும் அடையேன் "என்றார் இராமர். பின்னர் விபீஷணரை நோக்கி " விபீஷணரே! தங்கள் பிரஜைகள் இருக்கும் அளவும் இலங்கையை ஆளுங்கள் " என்றார். விபீஷணர் அப்படியே என்று அங்கீகரித்தார். காகுத்தர் அநுமானைப் பார்த்து " என் கதை லோகத்தில் சஞ்சரிக்குமளவும் நீ சந்தோஷித்திரு " என்றார். பின்னர் ஜாம்பவனுக்கும், மைந்தனுக்கும் த்விவிதனுக்கும், கலி வரும் வரையில் ஜீவித்திருக்குமாறு ஆசீர்வதித்தார். இங்ஙனம் சொல்லி'உங்கள் பிரியப்படி என்னுடன் செல்லுங்கள்' என்றார்.

பொழுது விடிந்ததும் இராமரின் சொற்பிரகாரம் வசிஷ்டர் மஹாபிரஸ்தானத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். இராமர் சூக்ஷ்ம பட்டு உடுத்தி கையில் குசப்புல் பிடித்துக்கொண்டு சூரியனைப்போல பிரகாசித்

கொண்டு வீட்டிலிருந்து வெளிக்கிளம்பினர். அவரது தக்ஷிண பக்கம் ஸ்ரீதேவியும், வலது பக்கம் ஹ்ரீதேவியும் நின்றனர்கள். நானுவிதமான சரங்களும், தனுசும், மற்ற ஆயுதங்களும் மானிட உருவம் கொண்டு பின் தொடர்ந்தன. வேதங்களும், காயத்ரியும், ஓங்காரமும், வஷட்காரமும் பிராம்மண வேஷம் பூண்டு பின் சென்றன. ரிஷிகளும், பிராம்மணர்களும், அந்தப்புரத்து ஸ்திரீகளும், வேலைக்காரர்களும், கிங்கரர்களும், பரதசத்ருக்னரும் தங்களது அந்தப்புரத்தவர்களுடன் அக்னிஹோத்திரங்களுடன், மந்திரிகளும் தங்கள் குடும்பத்தவர்களுடனும் சேவகர்களுடனும் இராமருக்குப் பின்னுல் சென்றனர்கள். வானரர்கள் ஸ்நானம் செய்து ஆனந்தத்துடன் கிலகில சப்தம் செய்துகொண்டு பின் தொடர்ந்தார்கள். ரிக்ஷர்களும், இராக்ஷசர்களும் அப்படியே சென்றனர்கள்.

அரையோசனை வழிநடந்து ரகுநந்தனர் ஸரயுவை அடைந்தார். உடனே பிதாமகர் எல்லா தேவர்களாலும் ரிஷிகளாலும் சூழப்பட்டு அவ்விடம் வந்து சேர்ந்து ஆகாயத்திலிருந்து "விஷ்ணுவே! வாருங்கள். உங்களுக்கு மங்களம். தங்களது தம்பிகளுடன் நிஜ தேகத்தை அடையுங்கள். தாங்கள் தான் லோக சரண்யர்; தங்கள் மனைவியாகிய மாயையைத் தவிர ஒருவரும் தங்களை அறியார்" என்றனர். அதன்மேல் தனது சரீரத்துடனும், தம்பிமார்களுடனும். விஷ்ணுவின் தேசஸை அடைந்தார் இராமர். பின்னர் பிரம்மாவைப் பார்த்து செப்பினர்— "இவர்களுக்கு இந்த லோகத்தில் இடம் கொடுக்க வேண்டும்; இவர்கள் என் சிநேகிதர்கள்; பக்தர்கள், பூஜிக்கத் தகுந்தவர்கள். என் பொருட்டு எல்லாம் துறந்தவர்கள்" விஷ்ணுவின் பேச்சைக்கேட்டு லோககுரு "ஸாந்தானிகம் எனப்பட்ட லோகத்தை அடையட்டும்" என்றனர். பிரம்மா இப்படிச் சொல்ல எல்லோரும் ஸரயுவில் மானிட உருவை ஒழித்து மேலுலகம் சென்றனர்கள்.

62. இராமாயண பலன்

தன்னைப் படிப்பவர்களுக்குப் பொருளையும் புகழையும் ஆயுளையும் அளிப்பதும், அரசர்களுக்கு வெற்றியைக் கொடுப்பதும், வேதத்துக்குச் சமமானதும், முதற் காவியமும், வால்மீகி மகாமுனிவரால் முன்னர் இயற்றப்பட்டதுமான இவ்விராமாயணத்தை எவனொருவன் படிக்கின்றானோ, அல்லது எவனொருவன் கேட்கின்றானோ, அவன் எல்லாவகைத் தீவினைகளிலிருந்தும் விடுபட்டவனாவான். இதைக் கேட்டவன், புத்திரபாக்கியத்தை யடைய விரும்பியவனாக விருந்தால் அப் பாக்கியத்தை யடைவான்; பொருளையடைய விரும்பியவனாக இருந்தால் பொருளை யடைவான். அரசனாக விருப்பானேயானால், அவன் இவ்வுலகம் முழுவதையும் வெற்றிகொண்டு தனது சத்துருவை நாசஞ் செய்வான். கேட்பவர் பெண்பாலாகவிருந்தால், கௌசல்யை இராமரைப்புத்திரனாக அடைந்ததுபோலவும் சுமித்திரை இலக்ஷ்மணரைப் புதல்வனாக பெற்றதுபோலவும் கைகேயி பரதரை மகனாக அடைந்ததுபோலவும் ஜீவத்புத்திரனைப் பெற்றுச் சுகமடைவர். இராமாயணத்தைக் கேட்பவர் நீண்ட ஆயுளை யடைவார்கள். ஊரைவிட்டு ஊர் வெகுநாள் போயிருந்தால் அத்துக்கம் நீங்க பந்துக்களின் சேர்க்கையும் உடனே உண்டாகும். அவர்கள் விரும்பிய எல்லா வரங்களையும் அடைவார்கள். பிரயாகாதி தீர்த்தங்களையும், கங்கை முதலான புண்ணிய நதிகளையும், நைமிசாதி அரண்யங்களையும், குருக்ஷேத்திராதிகளையும் சென்றவராவார்கள்; விஷ்ணு பதத்தையும் அடைவார்கள்.

இராமாயணத்தைக் கேட்பவர்களிடம் எல்லாத் தேவதைகளும் சந்தோஷமடைகின்றனர். அவர்களுக்கு இடையூறாகவிருந்த கிரகங்கள் யாவும் சாந்தமடைந்து அவர்களுக்கு நன்மையையே விளைக்கும். இராமபிரானுடைய சரித்திரமாகிய இக் கிரந்தத்தை முழுவதும்

படிப்பவரிடமும், கேட்பவரிடமும், இராமர் எப்பொழுதும் அருளுள்ளவராயிருக்கின்றார். அவர்தாம் எல்லாவித வல்லமையுமமைந்த நாராயணர். இக்காவியத்தைக் கேட்ட மாத்திரத்தில் அவ்வாறு கேட்டவன் குடும்பத்தின் விருத்தியையும் தனதானியங்களின் விருத்தியையும் உயர்ந்த குணமுள்ள மடந்தைகளையும், சுகத்தையும், ஜன்மமெடுத்த பயனையும் மற்றும் பலவற்றையும் அடைவான்; ஆயுளை அளிப்பதும், ஆரோக்கியத்தைக் கொடுப்பதும், புகழைத் தருவதும், நல்ல சகோதரர்களின் நட்பை எடுத்துக்காட்டுவதும், நற்புத்தியைக் கொடுப்பதும் காந்தியை யளிப்பதுமான இக்கிரந்தத்தை, நல்லவர்கள் பாக்கியத்தை அடைய விரும்பினால் வெகு ஆசாரத்துடன் கேட்க வேண்டும்.

இக்காவியம் இவ்வண்ணமானது; உங்களுக்கெல்லாம் இது க்ஷேமத்தை யுண்டாக்கட்டும். ஸ்ரீவிஷ்ணுபகவானுடைய பலத்தை எடுத்துச் சொல்லும் இந்தக்கிரந்தம் எங்கும் பரவட்டும். இவ்விராமாயணத்தை கேட்பவர்களிடமும் இவ்விராமாயணத்தைக் கேட்டவர்களிடமிருந்து விஷயங்களைக் கிரகிப்பவர்களிடமும், எல்லாத் தேவதைகளும் பித்ருக்களும் சந்தோஷமடைகின்றார்கள். மஹரிஷிசெய்த இந்தக் கிரந்தத்தை பக்தியுடனே எவனொருவன் எழுதுகின்றானோ அவனுக்கு இருப்பிடம் சுவர்க்கலோகமேயாம்.

சுபமஸ்து